222.455

T. N. L. A. Debates
18.5.2000
V.108 no.1

D
V211,31L P00
P00.108-1
222.455

வெளியீடு 6-8-2001 Issued 6-8-2001

283
2002
933/02

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 18, 2000 – தொகுதி 108 – எண் 1

**Thursday the 18th May, 2000 – Volume 108 – No. 1**

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ive Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D
211,31 P00
P00.108.1
282455

822455

18-5-2000

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | xi-xiv |
| Personnel of the Government of Tamil Nadu | xv-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xxi-xxii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xxiii-xxxiii |
| **1.** வினாக்கள்–விடைகள்— | |
| (அ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 28) | 1-41 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் (பேரவைமுன் வைக்கப்பெற்றவை) (பட்டியல்கள் 21 முதல் 27 வரை) | 42-860 |
| **2.** கவன ஈர்ப்பு— | |
| விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 39 வரை) | 861-918 |
| **3.** அரசினர் தீர்மானம்— | |
| (அ) விதி 33-ஐத் தளர்த்தல் | 919 |
| (ஆ) விதி 30(3)-ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் | 920 |
| (இ) விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் | 1072 |
| (ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் | 1111-1112 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. தகவல் கோரல்— | |
| (அ) உறுப்பினர் கொடுத்த முன்னறிவிப்பு | 921 |
| (ஆ) மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளி காணாமல் போனது பற்றி விசாரணை | 1078 |
| (இ) விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் | 1111 |
| 5. நிர்வாகம் பற்றிய அவசரப்பொருள் குறித்த ஒரு மணி நேரத்திற்கும் மேற்படாத குறுகிய கால விவாதம்—கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் | 921-972 |
| திரு. ச. அழகிரி | 922-928 |
| திரு. கே. சுப்பராயன் | 928-931 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 931-935 |
| திரு. ஐ. கணேசன் | 935-938 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 939-945 |
| திரு. லா. சந்தானம் | 945-947 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 947,948 |
| திரு. ஏ.வி.ஏ. நாசர் | 948,949 |
| திரு. சி. வேலாயுதன் | 949,950 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 950,951 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 951-971 |
| 6. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 972 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 972,973 |
| (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 973 |





| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 | 973,974 |
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000 | 974-976 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 974,975 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு. 2000 | 976,977 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 976,977 |
| (இ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 978-981 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 978,979-980,981 |
| திரு. சி. ஞானசேகரன் | 978-979 |
| (ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 | 981-986 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 982,983-984, 985,986 |
| திரு. சி. ஞானசேகரன் | 982,984-985 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 982-983 |
| (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 986-988 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 987,988 |

பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

| | |
|---|---|
| (ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 988-991 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 989,990,991 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 989 |
| (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 991-993 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 991-993 |
| (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 993-998 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 993,996-997,998 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 994 |
| திரு. நா. பெரியசாமி | 994-995 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 995-996 |
| (ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 998-1003 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 998,1000-1001,1003 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 999 |
| திரு. நா. பெரியசாமி | 999-1000 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 1000 |
| திரு. ஜி. பழனிசாமி | 1000 |
| (ஒ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 1003-1005 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 1003,1004 |





பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

| | |
|---|---|
| (ஓ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 1005-1014 |
| மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 1005,1010-1014 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 1005-1006, 1011-1012 |
| திரு. நா. பெரியசாமி | 1006-1007, 1012 |
| திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 1007-1008, 1011 |
| திரு. ஜி. பழனிசாமி | 1008 |
| திரு. சி. ஞானசேகரன் | 1008-1009 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 1009 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 1010 |
| (ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 1014-1025 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 1015,1017,1018, 1020,1022,1023-1024,1025 |
| திரு. சி. ஞானசேகரன் | 1015-1018, 1022-1023 |
| மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி | 1018 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 1019 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 1019-1020 |
| திரு. டி. மணி | 1020-1021 |
| திரு. சி. வேலாயுதன் | 1021-1022 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 1022 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 1023 |

பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அஅ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1025-1027

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 1025-1026,1027

(ஆஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1027-1029

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 1027,1028

(இஇ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1029-1031

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 1029,1030

(ஈஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1031-1033

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 1031,1032

(உஉ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999 — 1033-1048

மாண்புமிகு திரு. துரைமுருகன — 1033,1035-1048

திரு. நா. பெரியசாமி — 1034

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் — 1034

(ஊஊ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1048-1052

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 1049,1050-1052

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 1049-1050





பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(எஎ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1052-1058

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 1052,1055-1057

திரு. வி.கே. லட்சுமணன் — 1053

திரு. ம. அப்துல் லத்தீப் — 1053-1054

திரு. அ.லெ. சுப்பிரமணியன் — 1054-1055

(ஏஏ) பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1058-1065

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 1058,1061-1064

திரு. சி. ஞானசேகரன் — 1058-1059

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 1059

திரு. ஜி. நிஜாமுதீன் — 1060

திரு. ஜி. பழனிசாமி — 1060-1063

(ஐஐ) தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1065-1071

*மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் — 1065, 1068-1071

திரு. சி. ஞானசேகரன் — 1065-1066

திரு. டி. மணி — 1066-1067

திரு. ஜி. பழனிசாமி — 1067,1069

(ஒஒ) தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 1072-1077, 1110

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு — 1073,1077, 1110

திரு. சி. ஞானசேகரன் — 1073

திரு. நா. பெரியசாமி — 1074-1075

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 1075-1076

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 1076

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 1077

பக்கங்கள்

**9. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ. இ.) — 1014

(ஆ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999 (ஆ. இ.) — 1033

(இ) திரு. சி. வேலாயுதன் 10-5-2000 அன்று ஆதாரமில்லாமல் கூறியவை நீக்கம் - தீர்ப்பு — 1079

(ஈ) பொதுப் பணித் துறை அமைச்சர்மீது எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டுகள் குறித்து தீர்ப்பு — 1079-1081

(உ) முன்பிருந்த கணக்காய்வுத் தலைவர் ஆய்வறிக்கை அடிப்படையில் அரசுமீது டாக்டர் அ. செல்லக்குமார் குற்றச்சாட்டு —தீர்ப்பு — 1084

(ஊ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு மற்றும் நியமனம் — 1085-1096

1. மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்வு — 1085-1086
2. பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்வு — 1086-1087
3. பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்வு — 1087-1088
4. உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்வு — 1088-1089
5. பேரவை அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1089-1090
6. சட்டவிதிகள் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1091
7. அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1091-1092



பக்கங்கள்

**9. அறிவிப்புகள்—தொடர்ச்சி**

8. பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1092-1093
9. அவைக் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1093-1094
10. மனுக்கள் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1094-1095
11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1095
12. பேரவை நூலகக் குழு—உறுப்பினர்கள் நியமனம் — 1096

**10. அரசினர் தனித் தீர்மானம்—**

மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ரூ. 7500 கோடி இருக்கலாமென முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு குறித்து — 1077-1078

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 1077

**11. உரிமைப் பிரச்சினை—**

சேலம் பேருந்து நிலையம் அருகே நிலம் கையகப்படுத்துதல் பிரச்சினைபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர்மீது திரு. பி.ஆர். சுந்தரம் குற்றச்சாட்டு - தீர்ப்பு — 1082-1084

**12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்—** — 1096-1109

**13. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து—** — 1110-1111

**14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 1112-1117

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | : மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள் |
| 2. | கல்வி அமைச்சர் | : மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும முன்னாள் இராணுவத்தினர். |
| 3. | மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. | வருவாய்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. கோ.சி. மணி: நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

| | |
|---|---|
| 6. வேளாண்மைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |
| 7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா. |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள். |
| 10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை. |
| 11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 12. பால்வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |



| | |
|---|---|
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்). |
| 14. சட்டத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல். |
| 15. கைத்தறித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** கைத்தறி, துணித் தொழில். |
| 16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்பாடு. |
| 18. வீட்டு வசதித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி. |

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: கால்நடை பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்: மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister | .. The Hon. Kalaignar M. Karunanidhi: Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. Minister for Education | .. The Hon. Prof. K. Anbazhagan: Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. Minister for Health and Electricity | .. The Hon. Thiru Arcot N. Veerasamy: Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. Minister for Revenue | .. The Hon. Thiru Nanjil K. Manoharan: Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. Minister for Rural Development and Local Administration | .. The Hon. Thiru Ko. Si. Mani: Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
2. திரு. சி.டி. தண்டபாணி
3. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
4. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
5. திரு. நா. பெரியசாமி

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - | தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - | தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 32 | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி எம்.ஏ., பி.ஜி.எல்., | - | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம் எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | - | சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும், தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - | வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - | அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | - | கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - | மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | - | தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | - | சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - | கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | - | அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - | பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | - | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | - | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் எனகிற தீரன், திரு. ஆ - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடானை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ் - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. - மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்
63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. வா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ, திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்



88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்

| | | |
|---|---|---|
| 110. | சைதை கா. கிட்டு, திரு. | - சைதாப்பேட்டை |
| 111. | சொக்கர், திரு. ஆர். | - சிவகாசி |
| 112. | ஞானசேகரன், டாக்டர் ஆ. | - மேல்மலையனூர் |
| 113. | ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 114. | டேவிட் செல்வின், திரு. எஸ். | - ஸ்ரீவைகுண்டம் |
| 115. | தங்கமணி, திரு. கே. | - மானாமதுரை (செ.வ.) |
| 116. | தங்கம் தென்னரசு, திரு. | - அருப்புக்கோட்டை |
| 117. | தங்கவேலன், திரு. சுப. | - கடலாடி |
| 118. | தங்கவேல், திரு. அ.ல. | - சேலம் 2 |
| 119. | தண்டபாணி, திரு. சி.டி. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 120. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | - இளையான்குடி |
| 121. | தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | - அரக்கோணம் (செ.வ.) |
| 122. | தமிழ்மணி, திரு. வீ. | - செங்கல்பட்டு |
| 123. | தளபதி, திரு. கோ. | - சேடப்பட்டி |
| 124. | தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | - சேலம்-1 |
| 125. | தனபால், திரு. வி.ஜி. | - குடியாத்தம் |
| 126. | தாமரைக்கனி, திரு. இரா. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. | திசைவீரன், திரு. உ. | - பரமக்குடி (செ.வ.) |
| 128. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 129. | திருவேங்கடம், திரு. பெ.சு. | - கலசப்பாக்கம் |
| 130. | துரைசாமி, திரு. பா. | - வரகூர் (செ.வ.) |
| 131. | துரை, திரு. கே. | - திருவெறும்பூர் |
| 132. | துரைமுருகன், திரு. | - காட்பாடி |



| | | |
|---|---|---|
| 133. | தெய்வநாயகம், திரு. எ. | - மதுரை மத்தி |
| 134. | தேவராஜன், டாக்டர் மு. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 135. | நடராசன், திரு. ஆ. | - பேரூர் |
| 136. | நடராஜன், திரு. த. | - செஞ்சி |
| 137. | நயினா முகமது, திரு. கோ. | - கடையநல்லூர் |
| 138. | நன்னன், திரு. கொ.வீ. | - செங்கம் (செ.வ.) |
| 139. | நாகரத்தினம், திரு. ச. | - கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 140. | நாசர், திரு. ஏ.வி.ஏ. | - புவனகிரி |
| 141. | நாஞ்சில் கி. மனோகரன், திரு. | - திருவல்லிக்கேணி |
| 142. | நிஜாமுதீன், திரு. ஜி. | - நாகப்பட்டினம் |
| 143. | நேரு, திரு. கா.நா. | - லால்குடி |
| 144. | பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | - சிவகங்கை |
| 145. | பத்மா, டாக்டர் | - நன்னிலம் (செ.வ.) |
| 146 | பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி-1 |
| 147. | பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 148. | பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 149. | பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | - மதுரை மேற்கு |
| 150. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 151. | பன்னீர்செல்வம், திரு. மு. | - சீர்காழி (செ.வ.) |
| 152. | பாண்டுரங்கன், திரு. ந. | - பெரணமல்லூர் |
| 153. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - முதுகுளத்தூர் |
| 154. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | - பவானி |
| 155. | பாலசுப்பிரமணியன், திரு. ப. | - பட்டுக்கோட்டை |

156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆவா.)
165. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
177 மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு



179 மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189 முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
198. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
199. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
200. ரவி அருணன், திரு. கே. - தென்காசி

| | | |
|---|---|---|
| 201. ரவிசங்கர், திரு. கு. | - | விளாத்திகுளம் |
| 202. ராசேந்திரன், திரு. ஏ. | - | போளூர் |
| 203. ராணி, செல்வி க. | - | தலைவாசல் (செ.வ.) |
| 204. ராமசாமி, திரு. ஏ.எம். | - | ஆத்தூர் |
| 205. ராமச்சந்திரன், திரு. செ. | - | திருப்பரங்குன்றம் |
| 206. ராஜு, திரு. எஸ். | - | பொள்ளாச்சி |
| 207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - | சத்தியமங்கலம் |
| 208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - | காங்கேயம் |
| 209. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 210. வல்லரசு, திரு. பி.என். | - | உசிலம்பட்டி |
| 211. வாசுகி முருகேசன, திருமதி | - | கரூர் |
| 212. விஜயகுமார், திரு. கே.எம். | - | சாத்தூர் |
| 213. விஜயன், திரு. டி.சி. | - | திருவொற்றியூர் |
| 214. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு கே.கே. | - | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | - | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | - | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | - | கோபிச்செட்டிப் பாளையம் |



| | | |
|---|---|---|
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - | அரூர் (செ.வ.) |
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | - | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | - | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | - | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | - | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | - | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | - | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 234. ஆன் டி' மான்டி, திருமதி | - | நியமனம் |
| 235 வெற்றிடம் | - | திருப்போரூர் (செ.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி -- அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வைகாசி 5, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

### 2000 மே 18, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்."

மகிழ்ச்சிப் பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும்போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

***(அ) உடுக்குறியிடாத வினாக்கள்**
**(பட்டியல் 28)**

1—

**புறக்காவல் நிலையம்**

**வினா எண் 32401—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் மேலத்திருப்பந்துருத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இனி எங்கும் புதிதாகப் புறக்காவல் நிலையம் அமைப்பதில்லை எனவும், தற்போதுள்ள புறக்காவல்

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2000 மே 18

நிலையங்களனைத்தையும் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவது எனவும் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, 1996-97 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டத்திற்குட்பட்ட மேலத்திருப்பந்துருத்தில் புறக்காவல் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

2—

### நடுநிலைப் பள்ளி

**வினா எண் 30114—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி, கச்சேரி காம்பவுண்ட், அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி, கச்சேரி காம்பவுண்ட் அரசு தொடக்கப்பள்ளி, அரசாணை எண் 182,. பள்ளிக் கல்வித் துறை நாள் 17-6-99-ன்படி 1999-2000-ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி, அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

3—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 32542—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது அடிப்படை வசதி வேண்டி தேர்தலைப் புறக்கணித்த கிராமங்கள் எத்தனை?

(ஆ) அந்த கிராமங்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது அடிப்படை வசதி வேண்டி தேர்தலைப் புறக்கணித்த கிராமங்கள் மற்றும் இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு:—

| மாவட்டத்தின் பெயர் (1) | வாக்குச்சாவடி என் மற்றும் இடத்தின் பெயர் (2) | சட்டப்பேரவை தொகுதியின் பெயர் (3) | தேர்தலைப் புறக்கணித்ததற்கான காரணம் (4) | அரசு எடுத்த நடவடிக்கை (5) |
|---|---|---|---|---|
| திருவள்ளூர் | 44ஜி,45 எம்/ஒ.ஜப் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி, சூரப்பட்டு | திருவொற்றியூர் | வாக்குச்சாவடியின் இடமாற்றம் குறித்து | கருத்துருவினமீது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டது. ஆனால், ஆணையம் ஒப்புதல் அளிக்கவில்லை |
| விழுப்புரம் | 20எம். 21எப். கருங்காலிப்பட்டு | விழுப்புரம் | சாலை வசதி மற்றும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கோரி. | விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டி சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது |
| கரூர் | 23 எப் வீரராக்கியம் (பாலராஜபுரம்) | கிருஷ்ணராயபுரம் (தனித்தொகுதி) | கரூர் பிரதான சாலையிலிருந்து திருச்சிக்குப் பேருந்து வசதி கோரி வீரராக்கியம் கிராம மக்கள்/சாலை வசதி கோரி வடுகப்பட்டி கிராம மக்கள் கோரியது | 1/2 கி.மீ.க்குள் வீரராக்கியம் கிராமத்திலிருந்து கரூர் மற்றும் திருச்சிக்கான பிரதான சாலை உள்ளதால் பேருந்து வசதி செய்யப் படவில்லை. சாலை வசதியானது வடுகப்பட்டிக்கு வாக்குப் பதிவு நடைபெறும் நாளுக்கு முன்னாள் செய்யப்பட்டுள்ளது. |
| சிவகங்கை | 42, 43, 44 திருப்பாலைக்குடி கிராமம் | இளையான்குடி | குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யக்கோரி. | திருபாலைக்குடி கிராமத்திற்கு தனியார் லாரிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் வழங்குதல் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய ஆழ் குழாய் கிணறுகள் அனைத்து கிராமங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |
| திருநெல்வேலி | 131ஆ 131பெ மாங்குடி | வாசுதேவநல்லூர் (தனித்தொகுதி) | அடிப்படை வசதிகளைச் செய்து தரக்கோரி. | போதுமான அடிப்படை வசதிகள் ஏற்கெனவே உள்ளன. குடிநீர் வசதி, மின்வசதி மற்றும் போக்குவரத்து வசதிகள் உள்ளன. |

| மாவட்டத்தின் பெயர் (1) | வாக்குச்சாவடி எண் மற்றும் இடத்தின் பெயர் (2) | சட்டப்பேரவை தொகுதியின் பெயர் (3) | தேர்தலைப் புறக்கணித்ததற்கான காரணம் (4) | அரசு எடுத்த நடவடிக்கை (5) |
|---|---|---|---|---|
| திருநெல்வேலி | 131 பொது மடத்துப்பட்டி | சங்கரன்கோவில் (தனித்தொகுதி) | குடிநீர் வசதி செய்து தரக்கோரி | மடத்துப்பட்டி கிராமத்தில் உள்ள வாக்காளர்கள் கேட்டுக்கொண்டபடி அடிபம்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. |
| திண்டுக்கல் | 21ஜி-அப்பிபாளையம்<br>22ஜி-அப்பனூர்த்<br>25ஜி-வாகறை<br>26ஜி-பூசாரி கவுண்டன்<br>27ஜி-வேளன்பட்டி<br>28ஜி-வேலூர் | ஒட்டன்சத்திரம் வளக | குடிஉரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1989ன்படி 1-9-99 அன்று 3 நபர்கள் கைது செய்யப்பட்டனர். வாக்காளர்கள் பெரும் பாலும் கொங்கு வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள், குடிஉரிமை பாதுகாப்புச் சட்டத்தை கூடாயப்படுத்தியதைக் கண்டித்து வாக்காளர்கள் தோதலைப் புறக்கணித்தனர் | ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட தாராபுரம் காவல் நிலையத்தில் கொங்கு வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக குடி உரிமை பாதுகாப்புச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளதாக திண்டுக்கல் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்து கொங்கு வெள்ளாளர் இனத்தவர் தேர்தல் புறக்கணிப்பு செய்துள்ளனர். |
| | 15எம். 15ஏ. ஜப். கீரிபட்டி | உசிலம்பட்டி | ஆதிதிராவிடர் இனத்திற்கு கீரிபட்டி பஞ்சாயத்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மறுப்பு தெரிவித்து தேர்தலைப் புறக்கணித்தனர். | 04-12-1995 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறை ஆணை எண் 140 ன்படி ஒதுக்கப்பட்டுள்ளது. |
| | 20ஜி. கொம்பைபட்டி | நிலக்கோட்டை | கொம்பைபட்டி என கிராமத்தின் பெயரை வாக்காளர் பட்டியலில் குறிப்பிடுவதற்குப் பதிலாக கிலகோயில்பட்டியென தவறுதலாகக் குறிப்பிட்டது. | வாக்காளர் பட்டியலில் சுருக்கமுறைத் திருத்தம் 2000-ல் 20ஜி-கொம்பை பட்டி என சரி செய்யப் பட்டுள்ளது. |
| | 15ஏஜப். பூதிபுரம் | திண்டுக்கல் | கொடகனார் ஆற்றின் நடுவில் பாலம் கட்டுவதை கடந்த 10 ஆண்டு காலம் செயல் படுத்தாதது குறித்து | பூதிபுரம் கிராமத்தில் உள்ள கொடகனார் ஆற்றில் பாலம் கட்டுவது பழனி நீர்த்தேக்க திட்ட செயற்பொறியாளரால் செயல்படுத்தப்பட்டு உள்ளதால் தற்பொழுது எந்தவித இடர்பாடும் இந்த கிராமத்தில் இல்லை. |
| காஞ்சிபுரம் | 80-ஜி | காஞ்சிபுரம் | தற்பொழுதுள்ள நாட்ராம்பாக்கம் பஞ்சாயத்து தலைவருக்கும், அதற்கு முன்னால் இருந்த தலைவருக்கும் இடையே ஏற்பட்ட சொந்த விரோதத்தின் காரணமாக தேர்தலைப் புறக்கணித்தனர். | |





4—

### மின் கம்பிகள்

**வினா எண் 10610—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உயர் அழுத்த மின்சாரக் கம்பிகள் (H.T.L.) பள்ளி மைதானத்தில் மிகத் தாழ்வாக உள்ளதால் இதனை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

எடப்பாடி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வழியாகச் சென்று கொண்டிருந்த உயரழுத்தமுள்ள மின்கம்பிகள் மற்றும் மின் கம்பங்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 22-2-2000 அன்று பணி முடிக்கப்பட்டுவிட்டது.

5—

### மின் திருட்டு

**வினா எண் 19476—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பல தொழிற்சாலைகளில் மின்சாரம் திருடப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தொலைபேசி மற்றும் கடிதம் மூலமாகவும் பெறும் விவரங்கள், மற்றும் மீட்டர்

சோதனை பிரிவு மற்றும் மின் திருட்டு தடுப்புக் குழுக்களின் மின் நிறுவனங்களில் நடத்தும் சோதனையின் போதும், தொழிற்சாலைகளில் மின்சாரம் திருடப்பட்டு வருவதை அரசு அறியும்.

(ஆ) மேற்படி மின் திருட்டுக்களைத் தடுக்க மின் வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தற்போது காவல் துறையைச் சேர்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி அவர்களின் தலைமையின்கீழ் 25 பேர் மின் திருட்டு தடுப்புக் குழுக்கள் தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும், மின் நிறுவனங்களில் இரவு பகலாக திடீர் சோதனைகள் மேற்கொண்டு வருகின்றன. மின் திருட்டு மற்றும் வாரிய விதிகளின் மீறல்கள் பற்றிய தகவல்கள் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்டு உடனடியாக திடீர் சோதனைகள் செய்யப்பட்டு வாரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி சோதனைகளில் பெரும்பாலும் மின் திருட்டுகளும், விதி மீறல்களும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு (1999) மட்டும் 439 மின் திருட்டுகள் தமிழகத்தில் மேற்படி குழுக்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் மட்டும் வாரிய விதிகளின்படி இழப்பீடுத் தொகையின் மதிப்பீடு ரூ. 21.68 கோடியாகும்.

மின்சாரத்தை மையமாகக் கொண்டு இயங்கும் மின் நிறுவனங்களான இரும்பு உருக்காலைகள், இரும்புக் கம்பி ரசாயனம், பிளாஸ்டிக், பனிக்கட்டி, மாவு, அரிசி ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் நூற்பு ஆலைகளில் அடிக்கடி மின் திருட்டுகள் நடந்து வருவதால், அந்த வகையைச் சார்ந்த தொழிற்சாலைகளில் மீண்டும் மீண்டும் திடீர் சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. மின் திருட்டுகள் நடவா வண்ணம் மின் அளவிகள் (மீட்டர்கள்) பத்திரமான முறையில் பல்வேறு முத்திரைகளால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பெரிய அளவு தொழிற்சாலைகளில் மோசடி செய்ய முடியாத மின்னணு மின் அளவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவையன்றி பல்வேறு மின்திருட்டு தடுப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.



6—

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 28541—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் பராமரிக்க தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

1998-99ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை "இந்தியா சிமின்ட்" நிறுவனத்தார் பராமரிக்க முன் வந்துள்ளனர்:—

(1) ஆரம்ப சுகாதார நிலையம், சின்னக்கவுண்டனூர், சேலம் மாவட்டம்.

(2) ஆரம்ப சுகாதார நிலையம், கிடையூர், சேலம் மாவட்டம்

(3) ஆரம்ப சுகாதார நிலையம், தேவூர், சேலம் மாவட்டம்

(4) ஆரம்ப சுகாதார நிலையம், வடுகப்பட்டி, சேலம் மாவட்டம்.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தலா ரூ. 2 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்புச் செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

7—

## பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 28770—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டிவிடுதி தாய்-சேய் நலவிடுதிக்கு மருத்துவர், செவிலியர், ஏனைய பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டிவிடுதி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் கிராம சுகாதார செவிலியர் பணியிடமாகும். இங்கு ஒரு கிராம சுகாதார செவிலியர் பணிபுரிந்து வருகின்றார். ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் ஒருவர் துணை சுகாதார நிலையத்திற்கு முறைப்படி சென்று அப்பகுதி மக்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்துவருகிறார். எனவே மருத்துவ அலுவலர் மற்றும் ஏனைய பணியாளர்களை நியமனம் செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

## கட்டட வசதி

**வினா எண் 33589—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

போச்சம்பள்ளி, இயக்கலும், பராமரிப்பும் கோட்ட அலுவலகம் 04-06-1997 ஆம் தேதியிலிருந்து வாடகைக் கட்டடத்தில் கீழ்க்கண்ட உட் கோட்டங்களைக் கொண்டு இயங்கி வருகிறது:—



2000 மே 18]

| | |
|---|---|
| 1. போச்சம்பள்ளி | 'இ' மற்றும் 'ப' உட்கோட்டம் |
| 2. மத்தூர் | 'இ' மற்றும் 'ப' உட்கோட்டம் |
| 3. பர்கூர் | 'இ' மற்றும் 'ப' உட்கோட்டம் |

வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் எதுவும் போச்சம்பள்ளியில் இல்லை. தற்போது போச்சம்பள்ளியில் கோட்ட அலுவலகம் கட்டும் திட்டம் வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

9—

## லைசென்ஸ் வழங்குதல்

**வினா எண் 33618—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

'எச்' லைசென்ஸ் பெற்ற மின் கம்பி உதவியாளர்களுக்கு 10 ஆண்டுகள் அனுபவத்தைக் கணக்கில் கொண்டு கல்வித் தகுதியைத் தளர்த்தி 'பி' லைசென்ஸ் உடனடியாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

5 ஆண்டுகள் அனுபவத்தை "எச்" சான்றிதழ் பெற்ற நாளிலிருந்து கணக்கில் கொண்டு வாய்மொழித் தேர்வின்மூலம் அவர்களது தகுதியைக் கண்டறிந்த பின்னர், அவர்களுக்கு "பி" சான்றிதழ் வழங்குவதற்கு, விதி திருத்தம் செய்து அரசு ஆணை (நிலை) எண் 27, எரிசக்தித் துறை, நாள்: 8-3-2000-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

10—

## சலுகை விலையில் மின்சாரம்

**வினா எண் 33628—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தமிழ்நாட்டிலுள்ள சிறிய தொழிற்சாலைகளுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சிறிய தொழில்களுக்கு தற்போது சலுகை விலையில்தான் மின்சாரம் குறைந்த அழுத்த வீதப்படி 3-ஏ-இன்கீழ் வழங்கப்படுகிறது.

வீதப்படி விவரம் கீழ்வருமாறு—

250 யூனிட்கள் வரை - 1 மாதத்திற்கு 140 பைசா/யூனிட்

251 முதல் 750 யூனிட்கள் வரை - 1 மாதத்திற்கு 225 பைசா/யூனிட்

751 யூனிட்களும், அதற்கு மேலும் - 1 மாதத்திற்கு 250 பைசா/யூனிட்

தற்போதைய சூழ்நிலையில் சிறிய தொழிற்சாலைகளுக்கு இன்னும் அதிக சலுகை வழங்க அரசிடம் எந்தக் கருத்துருவும் இல்லை.

**11—**

### காற்றாலைகள்

**வினா எண் 33670—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நீர் இறைக்கும் காற்றாலைகள் 1998-99 வரை நிறுவப்பட்டவைகள் எத்தனை?

(ஆ) அவைகள் எந்தெந்த மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நீர் இறைக்கும் காற்றாலைகள் 1998-99 வரை நிறுவப்பட்டவை 841.



2000 மே 18]

(ஆ) அவை கீழ்க்காணும் 19 மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவையாவன:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 317 | 11 | தஞ்சாவூர் | 17 |
| 2 | மதுரை | 43 | 12 | தர்மபுரி | 5 |
| 3 | இராமநாதபுரம் | 71 | 13 | சிவகங்கை | 6 |
| 4 | கோயம்புத்தூர் | 201 | 14 | விருதுநகர் | 12 |
| 5 | வேலூர் | 12 | 15 | ஈரோடு | 15 |
| 6 | சேலம் | 7 | 16 | திண்டுக்கல் | 13 |
| 7 | கன்னியாகுமரி | 11 | 17 | புதுக்கோட்டை | 8 |
| 8 | திருநெல்வேலி | 22 | 18 | திருவண்ணாமலை | 3 |
| 9 | தூத்துக்குடி | 19 | 19 | திருச்சி | 38 |
| 10 | கடலூர் | 21 | | | |
| | | | | மொத்தம் | 841 |

**12—**

### மின் உற்பத்தி

**வினா எண் 34280—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கட்டுபடியாகும் விலைக்கு வாங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் மின் உற்பத்தி அதிகரிக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**13—**

**தரைப் பாலத்தை உயர்த்துதல்**

**வினா எண் 23614—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அரும்பாக்கம் அருகே பூந்தமல்லி நெடுஞ்சாலையையும், அண்ணா நகர் சாந்தி காலனியையும் இணைக்கும் தரைப்பாலத்தை உயர்த்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (இருபதாண்டு) எண் 4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29-1-1999-இல் கூவம் ஆற்றின் குறுக்கே அண்ணா நகரையும், அரும்பாக்கம் அருகேயுள்ள ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையையும் இணைத்து நடுவக்கரையில் தற்போதுள்ள தரை மட்டப் பாலத்தை இடித்துவிட்டு உயர்மட்டப் பாலம் அமைக்க அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட இடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு இதுவரை 50 ஆழ்துளைக் கடைக்கால்களில் 24 முடிவடைந்துள்ளன. இப்பணி ஜூன் 2001-இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**14—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்**

**வினா எண் 28480—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வயலூர் மதுரா மோட்டூர் மற்றும் சந்திரப்பாடி கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சியைச் சேர்ந்த மோட்டூர் கிராமக் குடியிருப்புக்கு அடுத்த 2000-2001 நிதியாண்டில் வாரிய முன்னுரிமை அடிப்படையின்படி திட்டம் மேற்கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30895—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சி மாசிலாமணிபுரம், வரதராஜபுரம், ஆசிரியர் காலனி மற்றும் ஓடையூர் பகுதி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தொகுதியைச் சார்ந்த பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சியிலுள்ள மாசிலாமணிபுரம் ஆசிரியர் காலனி மற்றும் ஓடையூர் ஆகிய குடியிருப்புக்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மேற்காணும் திட்டத்தில் பணிகளை விரைவில் முடித்து பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரதராஜபுரம் குடியிருப்பிற்குக் குடிநீர்த் திட்டம் இந்த (2000-2001) நிதியாண்டில் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**16—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 30697—திரு. இரா. மணிமாறன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் தொகுதி, அகரம் பேரூராட்சி, சுக்காம்பட்டி கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், குடிநீர் கிடைத்திட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திண்டுக்கல் தொகுதி, அகரம் பேரூராட்சி, சுக்காம்பட்டி கிராமத்திற்குத் தற்போது நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் வகையில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். 2000-2001 நிதியாண்டில் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.*



2000 மே 18]

**17—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 30902—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியாம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட ஆர்.பி. பில்லமநாயக்கன்பட்டி புதூருக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி குஜிலியம்பாறை ஒன்றியத்திலுள்ள பில்லமநாயக்கன்பட்டி புதூர் குடியிருப்பு, பில்லமநாயக்கன்பட்டி குடியிருப்பை ஒட்டியுள்ளதால் ஒரே குடியிருப்பாகக் கருதப்படுகிறது. பில்லமநாயக்கன்பட்டி குடியிருப்புக்கு 1998-99ஆம் ஆண்டு ஒரு குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது திட்டம் முடிவடைந்து பயனில் உள்ளது. தற்போது நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பில்லமநாயக்கன்பட்டி புதூருக்கும் இத்திட்டத்திலிருந்து இதே அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பில்லமநாயக்கன்பட்டி புதூருக்குத் தனியாக குடிநீர்த் திட்டம் எதுவும் தற்போது தேவையில்லை.*

**18—**

**குத்தகை**

**வினா எண் 31097—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி தங்காயூர் கிராமம், மணல்மேடு என்ற பகுதியில் சூரியமலை ஓடையில் மணல் எடுக்க ஏல குத்தகை வசூல் செய்யப்படுகிறதா என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, தங்காயூர் கிராமம், மணல்மேடு என்ற பகுதியில் சூரியமலை ஓடையில் மணல் எடுக்க குத்தகை எதுவும் இது வரை வழங்கப்படவில்லை. குத்தகை வசூல் எதுவும் செய்யப்படுவதில்லை.

**19—**

**நிழற்குடை அமைத்தல்**

**வினா எண் 31750—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில், வடமதுரை ஒன்றியம், காணப்பாடி ஊராட்சியில் மாலப்பட்டி பொதுமக்கள் நின்று பேருந்து ஏறுவதற்கு நிழற்குடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 33071—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





புவனகிரி தொகுதி, சாமியார்பேட்டை மேல்நிலை குடிநீர்த் தேக்கத்தொட்டி எப்போது செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதி, சாமியார்பேட்டை குடிநீர்த் திட்டத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டு, தற்போது இக்குடிநீர்த் திட்டம் சோதனை ஓட்டத்தில் உள்ளது. இத்திட்டம் விரைவில் ஊராட்சியிடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட உள்ளது.

**21—**

**சிறப்பு நிதி**

**வினா எண் 33376—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 1,2,3,4 ஆகிய வார்டுகள் கிராமப் பகுதியாக உள்ளதால் அவற்றின் சாலை மேம்பாட்டுக்காக சிறப்பு நிதி ஒதுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சியின், 1,2,3,4 ஆகிய நான்கு வார்டுகளின் சாலை மேம்பாட்டுக்காக ரூ.15.30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் மொத்தம் 14 சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

22—

## உணவு விடுதிகள்

**வினா எண் 34433—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தில் எத்தனை உணவு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றின் பரப்பளவு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மூன்று

(ஆ) **சைவ உணவு விடுதிகள்**

தரைத்தளம்-2517 சதுர அடி

முதல் தளம்-3952 சதுர அடி

**அசைவ உணவு விடுதி**

தரைத்தளம்-2404 சதுர அடி

23—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 34343—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொகுப்பு வீடுகள் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு பேரூராட்சியில் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் பேரூராட்சிகளில் பின்தங்கிய வகுப்பினர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

24—

## கரும்பு வெட்டும் இயந்திரங்கள்

**வினா எண் 33106—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரம், நடவு இயந்திரம், கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்கி குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக இரண்டு கதிர் அறுவடை இயந்திரங்கள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில், மணிக்கு ரூ.1050-என்ற வாடகை விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

2. நடவு இயந்திரம், கரும்பு வெட்டும் இயந்திரம் போன்ற கருவிகளின் விலை மிகவும் அதிகம் என்பதால் அதனை துறை மூலம் இதுவரை வாங்கப்படவில்லை. மேலும், தஞ்சாவூர் போன்ற காவேரி படுகை மாவட்டங்கள் வருடம் முழுவதும் இந்த இயந்திரங்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்த வாய்ப்பில்லை. எனவே, மேற்கண்ட இயந்திரங்களை அரசு வாங்கி குறைந்த வாடகைக்கு வழங்குவது இயலாது.

25—

## பொறியியல் மாதிரிப் பண்ணை

**வினா எண் 33868—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் மாதிரிப்பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

26—

## வனத் துறை நிலங்கள்

**வினா எண் 32614—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான இடம் எவ்வளவு உள்ளது?

(ஆ) அதில் எந்தெந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது?

(இ) ஆக்கிரமிப்பின் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமாக 5208.40 ஹெக்டேர் நிலம் உள்ளது.



(ஆ) அதில் 2.06 ஹெக்டேர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

(இ) 46 நபர்கள் 0.06 ஹெக்டேரில் குடிசைபோட்டு ஆக்கிரமித்துள்ளனர். அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்தபிறகு ஆக்கிரமிப்பு அகற்றப்பட உள்ளது. 94 கற்குவாரி தொழிலாளர்கள் 2.00 ஹெக்டேரில் ஆக்கிரமிப்பு செய்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளனர். அது நிலுவையில் உள்ளது.

27—

## பேருந்து வழித்தட உரிமங்கள்

**வினா எண் 22038—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்து வழித்தட உரிமங்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தனியார் பேருந்து வழித்தட உரிமங்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

## பேருந்து வசதி

வினா எண் 32692—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச பஸ் பாஸ் பெற்றுள்ள பள்ளி மாணவ, மாணவிகள் பஸ்ஸில் இடம் பிடிக்க முடியாமல் நடந்து செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நெருக்கடியைத் தீர்க்க அரசின் மாற்று ஏற்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி தொடங்கும் நேரத்தை அனுசரித்து போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நெரிசல் நேரங்களில் புறநகர்ப் பேருந்துகளில் பயணம் செய்ய மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். வேறு பேருந்துகளில் மாறிச் செல்ல ஏதுவாக, இலவச பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. பேருந்துகளில் நெரிசலைச் சமாளிக்க பள்ளிகள் தொடங்கும் நேரத்தை மாற்றியமைக்கலாமா என அரசு பரிசீலித்து வருகிறது.

**29—**

**நிதி வழங்குதல்**

**வினா எண் 13885—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டுத் தொகுதியில் அரடாப்பட்டு கிராமத்திலுள்ள அ/மி. ஈஸ்வரன் கோயிலின் திருப்பணிகள் செலவிற்கு நிதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், தண்டராம்பட்டு தொகுதி, அரடாப்பட்டு கிராமம், அ/மி. ஈஸ்வரன் திருக்கோவில், பட்டியலைச் சாராத உதவி ஆணையரின் ஆளுகையின்கீழ் சிறிய ஆலயங்களில் உள்ள திருக்கோவில். மேற்படி திருக்கோவில் கேசவன் என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் கோரி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான 1.50 ஏக்கர் புன்செய் நிலம் மட்டும் உள்ளது. இதிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.1,000 மட்டும் வருமானம் கிடைக்கிறது.



ஆண்டொன்றுக்கு ரூ.5,000-க்கும் குறைவாக வருவாய் வருவதால் உதவித்தொகை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஒரு காலப் பூஜை திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு ஒரு காலப் பூஜை நடைபெற்று வருகிறது. ஆலயத்தில் போதிய நிதி வசதி இன்மையால் தற்போது ஆலயத்திற்குத் திருப்பணி செய்யவோ, திருப்பணிக்கு நிதி வழங்குவது குறித்தோ சாத்தியக் கூறுகள் இல்லை.

**30—**

**பகுதி நேர நியாயவிலைக் கடை**

**வினா எண் 32244—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி, கடபோகாத்தி கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த கடபோகாத்தி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 3-3-2000 முதல் செயல்பட்டு வருகின்றது.

**31—**

**நியாய விலை கிளைக் கடை**

**வினா எண் 32735—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தாமரைக்குளம், கல்மாணிக்கபுரம், தளவாய்புரம், சித்தூர் ஆகிய

[2000 மே 18

கிராமங்களைக் இணைத்து நியாயவிலைக் கிளைக் கடை அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த த்ாமரைக்குளம் கிராமத்தில் 38 குடும்ப அட்டைகளும், கல்மாணிக்கபுரத்தில் 45 குடும்ப அட்டைகளும், தளவாய்புரத்தில் 15 குடும்ப அட்டைகளும், சித்தூரில் 20 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் 118 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேற்படி கிராமங்களின் குடும்ப அட்டைகள் கண்ணநல்லூர் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. கண்ணநல்லூர் நியாயவிலைக் கடை மேற்கண்ட கிராமங்களிலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தாலும், கன்னநலலூர் தாய்நியாயவிலைக் கடையின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை வில்வனம்புதூரில் இயங்கி வருவதாலும், பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்குப் போதுமான குடும்ப அட்டைகள் இல்லாததாலும், மேற்படி கிராமங்களை இணைத்து புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கச் சாத்தியமில்லை.

**32—**

### நியாயவிலைக் கடை

**வினா எண் 32736—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெட்டைகுளம் ஊராட்சியைச் சார்ந்த ரம்மதபுரம் நடுவூர், கரைகுடியிருப்பு, அணைக்கரை ஊராட்சியைச் சார்ந்த ரம்மதபுரம் ஆகிய ஊர்களை இணைத்து நியாயவிலைக் கிளைக் கடை அமைத்துக் கொடுக்கப்படுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சியைச் சேர்ந்த ரம்மதபுரத்தில் 55 குடும்ப அட்டைகளும், பெட்டைக்குளம் ஊராட்சியைச் சேர்ந்த ரம்மதபுரத்தில் (நடுவூர்) 30 குடும்ப அட்டைகளும், கரைகுடியிருப்பு கிராமத்தில் 12 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் 97 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**33—**

### நியாயவிலைக் கிளைக் கடை

**வினா எண் 32737—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட சண்முகபுரம், முருகேசபுரம் ஆகிய கிராமங்களில் நியாயவிலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட சண்முகபுரம் கிராமத்தின் குடும்ப அட்டைதாரர்கள் திசையன்விளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் கீரைக்காரன்தட்டு நியாயவிலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றார்கள். நியாயவிலைக் கடைக்கும் சண்முகபுரம் கிராமத்திற்குமிடையே 1 கிலோமீட்டர் தூரமே இருப்பதாலும், அக்கிராமத்தில் 70 குடும்ப அட்டைகளே இருக்கின்ற

[2000 மே 18

காரணத்தாலும், அக்கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட முருகேசபுரம் கிராமத்தின் குடும்ப அட்டைகள் திசையன்விளை அமுதம் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. முருகேசபுரம் கிராமத்தில் 60 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், நியாயவிலைக் கடைக்கும் முருகேசபுரம் கிராமத்திற்கும் இடையே 1 கிலோமீட்டர் தூரமே இருப்பதாலும் அக்கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**34—**

**கட்டட வசதி**

**வினா எண் 35128—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் எத்தனை நியாயவிலைக் கடைகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதியில் 51 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 12 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

(ஆ) ஓமலூர் தொகுதியில் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 51 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கும் கட்டடம் கட்ட, இடவசதி தெரிவு செய்யப்பட்ட இனங்களுக்கு முன்னுரிமை அளித்து, சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் நிதி ஒதுக்கீடு பெற்று படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



2000 மே 18]

**35—**

**கருவிகள்**

**வினா எண் 33498—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழில் கருவிகள் வாங்க கட்டடத் தொழிலாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டுமானத் தொழிலாளர்கள் இது குறித்து கோரிக்கைகள் அனுப்பினால் வாரியத்தின் கூட்டத்தில் விவாதப்பொருள் வைத்து அக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

**நல வாரிய அலுவலகம்**

**வினா எண் 33499—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்களுக்கு மாவட்டந்தோறும் நல வாரிய அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது வாரியத்தின் செலவில் திருச்சி, மதுரை, திருநெல்வேலி சேலம் மற்றும் கோவை ஆகிய மண்டலங்களில் வாரிய அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாரியத்தின் வேலைப்பளு மற்றும் நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தேவைக்கேற்ப படிப்படியாக மாவட்டந்தோறும் நல வாரிய அலுவலகம் திறப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 மே 18

37—

## நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 33500—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கட்டடத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கவும், மழைக்காலங்களில் நிவாரணம் வழங்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கட்டடத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் இவ்வாரியத்தின் செயல்பாட்டிற்கு உட்பட்டதல்ல. இருப்பினும், இப்பொருள் குறித்து எதிர்வரும் வாரியக் கூட்டத்தில் விவாதித்து அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கப்படுவது குறித்து அரசு விரிவாகப் பரிசீலித்ததில் கட்டுமானத் தொழிலாளர்கள் மழைக்காலங்களிலும் பணி செய்ய வாய்ப்புள்ளதாலும், கட்டுமானத் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் தற்போதுள்ள நிதிச் சூழலில் மானியம் வழங்க இயலாததாலும், இதன் மீது மேல் நடவடிக்கைகளை அரசு கைவிட்டுள்ளது.

38—

## உதவித் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 33502—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கட்டடத் தொழிலாளர்களின் இறுதிச் சடங்கிற்கான உதவித் தொகையை ரூ.5000-ஆக உயர்த்த அரசு கருதி உள்ளதா?*



2000 மே 18]

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவு பெற்ற கட்டடத் தொழிலாளர்களின் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை 1-3-1999 முதல் ரூ.2000-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இவ்வுதவித் தொகையினை மேலும் உயர்த்தத் தற்போது முடியாது.

39—

## திருமண உதவித் தொகை

**வினா எண் 33503—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கட்டடத் தொழிலாளர்களின் திருமண உதவித் தொகையை பதினைந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கட்டடத் தொழிலாளர்களின் திருமண உதவித் தொகையை பதினைந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

## குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 33505—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

(அ) வேலைக்குச் செல்கிற கட்டடப் பெண் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்—**

(அ) ஆம்.

(ஆ) பதிவுபெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்கக் குழந்தைகள் காப்பகம் அமைப்பது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெண் கட்டுமானத் தொழிலாளர்கள் அதிகம் பணியாற்றும்/வசிக்கும் இடங்களில் குழந்தைகள் காப்பகம் நடத்துவதற்கு வாடகைக் கட்டடம் கிடைத்தவுடன் குழந்தைகள் காப்பகம் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**41—**

**கூடுதல் கிளை அலுவலகங்கள்**

**வினா எண் 33506—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமானப் பணி கட்டடத் தொழிலாளர்களுக்குரிய நலத்திட்டங்களைச் செயல்படுத்த தற்போதுள்ள அலுவலகங்கள் போதுமானதாக இல்லை என்பதால், கூடுதல் கிளை அலுவலகங்கள் வட்டத் தலைநகரில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2000 மே 18]

(ஆ) திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் வாரியத்தின் கிளை அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாரியத்தின் வேலைப்பளு மற்றும் நிதிநிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு படிப்படியாக இதர இடங்களில் கிளை அலுவலகங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**42—**

**வழக்குகள் விவரம்**

**வினா எண் 33554—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை? எத்தனை ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன?

(ஆ) அவற்றை விரைவாக முடிக்க எடப்பாடியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் 31-12-1999 அன்று நிலவரப்படி நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| (1) | அசல் வழக்குகள் | - | 934 |
| (2) | மேல் முறையீடு வழக்குகள் | - | 312 |
| (3) | உரிமையியல் பல்பொருள் மேல்முறையீடுகள் | - | 81 |
| (4) | அசல் மனுக்கள் | - | 39 |
| (5) | இந்து திருமண அசல் மனுக்கள் | - | 58 |
| (6) | நில ஆர்ஜித அசல் மனுக்கள் | - | 58 |

[2000 மே 18

(7) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனுக்கள் - 1,354

(8) நிறைவேற்று மனுக்கள் - 270

(9) நொடிப்பு மனுக்கள் - 165

(10) அமர்வு வழக்குகள் - 30

ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள வழக்குகள் :

அசல் வழக்குகள் - 283

(ஆ) எடப்பாடியில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் உயர்நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை.

43—

**விளையாட்டு சாதனங்கள்**

**வினா எண் 30421—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் சுண்ணக் கட்டிகள், விளையாட்டு சாதனங்கள் நடப்பாண்டில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 'கற்றல் கற்பித்தல்' பணிக்காக ரூ.500 வழங்கப்படுகிறது. இதில் பள்ளிகளுக்குத் தேவையான சுண்ணக் கட்டிகளை பள்ளி தலைமையாசிரியர் பெற்று ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



2000 மே 18]

பெண்ணாகரம் ஒன்றியத்தில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு இதுகாறும் வழங்கப்பட்டுள்ள விளையாட்டுக் கருவிகள் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | வழங்கப்பட்ட விளையாட்டுக் கருவிகள் | தொடக்கப் பள்ளிகட்கு வழங்கப்பட்ட எண்ணிக்கை | நடுநிலைப் பள்ளி களுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தாண்டு கயிறு | 315 | 90 |
| 2 | கைப்பந்து | - | 36 |
| 3 | கால்பந்து | - | 36 |
| 4 | பேரல்லடுபார் | 12 செட் | - |
| 5 | கைப்பந்து கம்பம் | - | 8 செட் |
| 6 | பலகை | 19 | - |
| 7 | கைப்பந்து வலை | - | 14 |
| 8 | ஊஞ்சல் செட் | 7 | - |
| 9 | டெனிகாட் வளையம் | - | 30 |

44—

**சத்துணவு மையம்**

**வினா எண் 23621—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, நடுத்தெருவில் சத்துணவு மையம் புதிதாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சியில் நடுத்தெருவில் உள்ள குழந்தைகளுக்கு வல்லம் தெற்குப் பகுதியில் உள்ள பிரதான மையத்தில் இருந்து இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

**45—**

**தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா எண் 30733—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட திருநாவலூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*அ மற்றும் ஆ இல்லை.*

**46—**

**விருந்தினர் விடுதி**

**வினா எண் 26174—திரு. பி. இராசமாணிக்கம்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாட்டிலுள்ள கால்நடைத் துறைக்குச் சொந்தமான விருந்தினர் விடுதியில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க அனுமதி மறுப்பது அரசுக்குத் தெரியுமா?*





*(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம், தெரியும்.*

*(ஆ) மாண்புமிகு அமைச்சர்கள், உலக வங்கி உயர் அதிகாரிகள், திடீர் வருகை விவரம் இவ்வலுவலகத்திற்கு மட்டுமே தெரிவதால், மற்ற அலுவலர்கள் தங்கிட இவ்வலுவலக முன் அனுமதியுடன் அனுமதி வழங்கப்படுகிறது.*

**47—**

**கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள்**

**வினா எண் 29196—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள் தமிழ்நாட்டில் எத்தனை இருக்கின்றன?*

*(ஆ) அவை முழுவதும் இலாபகரமாக இயங்குகிறதா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் ஓசூர் மற்றும் காட்டுப்பாக்கம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள பண்ணைகளில் குஞ்சு பொரிப்பகங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தமட்டும் நான்கு கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள் முறையே மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும், கோவை மாவட்டத்தில் அரசூரிலும், விருதுநகர் மாவட்டத்தில் அனுப்பங்குளத்திலும், திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு, திருச்சியிலும் இயங்கி வந்தன. அவற்றில் திருச்சி மற்றும் அனுப்பங்குளம் கோழிக்குஞ்சு பொரிப்பகங்கள் அக்டோபர் 1997-லும், மற்ற இரண்டு*

[2000 மே 18

குஞ்சுப் பொரிப்பகங்கள் முறையே அரசூர் மற்றும் கப்பலூர் ஆகியவை ஜனவரி 1999 முதல் டாப்கோவின் நிதிநிலைமை பற்றாக்குறைகளால் இயங்காமல் உள்ளன.

(ஆ) கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள கோழிக்குஞ்சு பொரிப்பகங்களில் உற்பத்தியாகும் குஞ்சுகள், துறையில் உள்ள கோழி விரிவாக்க நிலையங்களுக்குத் தேவையான குஞ்சுகளை வழங்க மட்டுமே பயன்படுவதால் இலாபநோக்கம் கருத்தில்கொள்வதில்லை. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழக குஞ்சு பொரிப்பகங்கள் முதலில் இலாபகரமாக இயங்கிவந்தன. பின்னர் தாய்க் கோழிகள் வாங்க டாப்கோவில் நிதிநிலைமை சரியில்லாததால், உற்பத்தியைத் தொடர்ந்து செய்ய இயலாமல் இக்கோழிக் குஞ்சு பொரிப்பகங்கள் நட்டத்தில் இயங்கிவந்தன. தற்பொழுது இயங்காமல் உள்ளன.

**48—**

**கால்நடை கிளை மருந்தகம்**

**வினா எண் 29276—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அரியாபுரம் கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கீழப்பாவூர் ஒன்றியத்தில் போதுமான கால்நடை நிலையங்கள் உள்ளதாலும், அரியாபுரம் கிராமத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் அவுடையானூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் உள்ளதால் இக்கால்நடை கிளை நிலையத்தினைக் கொண்டு அரியாபுரம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், தற்போது அரியாபுரம் கிராமத்தில் புதியதாக கால்நடை கிளை நிலையம் தொடங்க சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) எழாது.



2000 மே 18]

**49—**

**கால்நடை மருந்தகங்கள்**

**வினா எண் 29457—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் அரசு மூலம் கால்நடை மருந்தகங்கள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நடைமுறை விதிகளின்படி தகுதியிருப்பின் நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**50—**

**கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 30610—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், மல்லப்புரம் கிராமம், பல்லாநத்தத்திலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**51—**

**கட்டட வசதி**

**வினா எண் 30623—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சிக்குட்பட்ட கால்நடை மருத்துவமனைக்கு நவீன வசதியுடன் கூடிய புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**52—**

**கட்டட வசதி**

**வினா எண் 31015—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். பில்லமநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**53—**

**உயர்நிலைப் பள்ளிக்கு விடுதி**

**வினா எண் 19324—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், ஏலகிரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விடுதி அமைத்துத்தர அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஏலகிரி அரசு உயர்நிலைப் பள்ளியில் 35 ஆதிதிராவிட மாணவ/மாணவியர் மட்டுமே பயின்று வருவதாலும், ஏலகிரியை சுற்றியுள்ள பகுதிகளில் ஆதிதிராவிட மாணவ/மாணவியர்கள் எவருமில்லை என்பதாலும், ஆதிதிராவிடர் நல விடுதி அமைப்பதற்கு போதிய மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை இன்மையாலும், தற்போது ஏலகிரி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ/மாணவியர்களுக்கென ஏலகிரியில் புதிய ஆதிதிராவிடர் நல விடுதி தோற்றுவிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மே 18

**54—**

## குற்றாலத்தின் பெயரைச் சேர்த்தல்

**வினா எண் 33843—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தின் பெயரை வெளிநாட்டவர் மற்றும் வெளிமாநிலத்தவர்கள் அறியும் வகையில், வரைபடங்களிலும் கையேடுகளிலும் இடம்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தின் பெயர் வெளிநாட்டவர் மற்றும் வெளிமாநிலத்தவர்கள் அறியும் வகையில் வரைபடங்களிலும் கையேடுகளிலும் சுவரொட்டிகளிலும் மற்றும் ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகள் (Calender of events) போன்ற வெளியீடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) 1. திருநெல்வேலி கையேடு மார்ச் 1998-ல் வெளியிடப்பட்டது.

2. திருநெல்வேலி சுவரொட்டி மார்ச் 1998-ல் வெளியிடப்பட்டது.

3. ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகள் கையேடு, ஜனவரி 1998-ல் வெளியிடப்பட்டது.

4. ஆங்கில வரைபடம் - மார்ச் 1999-ல் வெளியிடப்பட்டது.

5. தமிழ் வரைபடம் - ஜனவரி 2000-ல் வெளியிடப்பட்டது.



2000 மே 18]

**55—**

## இலவச வீடுகள்

**வினா எண் 29213—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ம. சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கடல் மீனவர்களுக்கு மட்டும்தான் அரசால் இலவசமாக வீடுகள் கட்டி வழங்கப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் வசிக்கும் மீனவர்கள் உள்நாட்டு மீனவர்கள் என்பதால் மேற்கண்ட திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி வழங்க வாய்ப்பில்லை.

2. இருப்பினும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட உள்நாட்டு மீனவர்களுக்கு கண்டியூரில் 10 வீடுகளும், காவேரிபுரத்தில் 10 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1999-2000ஆம் ஆண்டில் கண்டியூருக்கு ஒதுக்கப்பட்ட 10 வீடுகளின் கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட உள்ளன. 2000-2001ஆம் ஆண்டில் உள்நாட்டு மீனவர்களுக்காக 1000 வீடுகள் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது.

[2000 மே 18

**(ஆ) *உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் (பேரவைமுன் வைக்கப்பெற்றவை) (பட்டியல்கள் 21 முதல் 27 வரை)**

## இருபத்தொன்றாம் பட்டியல்

**1—**

### பதவி உயர்வு

**வினா எண் 4527—திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகக் காவல் துறையில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் காவல் துறை ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்க அரசு ஏதேனும் வழிவகை செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் ஆய்வாளர்களாக சுமார் 15 அல்லது 16 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்குத் துணை கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்புகள் தற்போது உள்ளன. எனவே, இதுபற்றி அரசு வேறு நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2000 மே 18]

**2—**

### பெரம்பலூர் சர்க்கரை ஆலை

**வினா எண் 7640—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்த புகார்கள் அரசிற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பது குறித்து.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை முறைகேடுகள் சம்பந்தமாக திரு. பரமசிவம், விவசாயி எண் 9910 என்பவர் கொடுத்த புகார் சர்க்கரைத் துறை இயக்குநருக்கு கிடைத்தது. இப்புகார் கடிதத்தில் 1994-95 அரவைப் பருவத்தில் கரும்பு வெட்டு ஆணை வழங்க திரு. இரகுநாதன் என்கிற கரும்பு அபிவிருத்தி உதவியாளர் விவசாயிகளிடம் லஞ்சம் பெறுவதாக புகார் செய்துள்ளார். இப்புகார் ஆலை மட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. 1994-95ஆம் ஆண்டு அரவைப் பருவத்தின் கரும்பு சாகுபடி மிக அதிகமாக இருந்ததால் அரவை 30-9-1995 வரை நீட்டிக்கப்பட்டது.

2. கரும்பு வெட்டு உத்தரவு வழங்க தேதிப்படி முன்னுரிமை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தாலும், வறட்சிக்கு இலக்கான நேரம், சாலை பழுதுபட்டுள்ள நேரம், இணைப்பு வெட்டு உத்தரவு கொடுக்கவேண்டிய கட்டாயம் நேரும்போதும் மற்றும் கரும்பு காய்ச்சல், வறட்சி, மழை காரணமாக ஆலை அரவைக்கு கரும்பு சப்ளையில் ஏற்பட்ட குறைபாடு, வெட்டான் நோய் பிரச்சினை, கோட்ட அளவிலான

சப்ளை ஒதுக்கீட்டை சீர் செய்ய டயர் வண்டி வெட்டு அதிகரிப்பு போன்ற காரணங்களால் நிர்ணயம் செய்யப்பட்ட முன்னுரிமையில் மாற்றம் ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. இதை முறைகேடு என்று கூற முடியாது. ஆகவே கரும்பு அபிவிருத்தி உதவியாளர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியினால் மேற்படி புகார் எழுப்பப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. 1994-95-ல் முறைகேடு நடந்ததாக 1996-97-ல் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. தக்க ஆதாரம் இல்லாததால் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

3. 17-2-1997 அன்று சென்னையில் நடைபெற்ற பங்குதாரர்களின் சிறப்பு பேரவைக்கூட்டத்தில் சில பங்குதாரர்கள் பொதுவான குற்றச்சாட்டுகள் அடங்கிய ஆண்டறிக்கையை விநியோகம் செய்து பேசும்போது கடந்த காலங்களில் ஆலையில் நடைபெற்ற முறைகேடுகளினால்தான் ஆலையின் நட்டம் அதிகம் ஆனது என்றும், இதற்குக் காரணமான சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மேலும் இதுபோன்ற முறைகேடுகள் இனி நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுவான தங்கள் கருத்துக்களை கூறினார்கள். அதற்கு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் இனி வருங்காலங்களில் முறைகேடுகள் எதுவும் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும், மேலும் எந்த தனி நபர் மீதும் ஆதாரத்துடன் எழுத்து மூலம் புகார் கொடுத்தால் அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்கள்.

4. தற்போது ஆலையின் செயல் திறன் பற்றியும் மற்றவை பற்றியும் எந்தவித புகாரும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3—

### வேலை வாய்ப்பு

**வினா எண் 7645—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைக்கு நிலம் அளித்த மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் உருக்காலைக்கு நிலம் அளித்த குடும்பத்தினரில் ஒருவருக்கு அவரது தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இன்றைய தேதியில் 212 பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பணியிடம் வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த பணியாளர்களில் 16 சதவிகிதமாகும். இவர்களைத் தவிர இரும்பாலைத் திட்டத்திற்கு நிலம் கொடுத்த பல நபர்களுக்கு ஒப்பந்தம் முறையில் உள்ள காண்டிராக்டர்கள் மூலம் பல்வேறு நிலையில் பணிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றும், பணியிடங்கள் மேற்படி பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினருக்கு முன்னுரிமையும் அளிக்கப்பட்டு வருகிறது என்றும் இரும்பாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

4—

### கூடுதல் அறைகள்

**வினா எண் 8463—திரு. ஜே.எம். ஆருண் ரஷீத் மற்றும் திரு ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் இடநெருக்கடியை போக்க கூடுதலாக அறைகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு இல்லத்தில் கூடுதலாக அறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லையென்றாலும், புதுதில்லியிலுள்ள சாணக்கியபுரியில் கூடுதல் விருந்தினர் மாளிகை ஒன்று புதிதாக கட்டப்படவுள்ளது. தமிழ்நாடு இல்லத்திற்காக புதிதாக கட்டப்படவுள்ள

[2000 மே 18

விருந்தினர் மாளிகை 7956.62 சதுர மீட்டர் மனையில் 10,251 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் 4 மாடி கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைபடம் புதுதில்லி மாநகராட்சியிடம் ஒப்புதல்பெற அனுப்பிவைக்கப்படவுள்ளது.

5—

## சாலைகளைச் சீரமைத்தல்

**வினா எண் 9976—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெருமளவில் கிடைக்கும் எண்ணெய் எரிவாயு மூலம் கிடைக்கும் ராயல்டி தொகை மூலம் இம்மாவட்ட சாலைகள் சீரமைக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள இயற்கை வாயு பெட்ரோலிய ராயல்டியிலிருந்து முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியோ, அப்பகுதியிலுள்ள சாலைகளை செப்பனிட நிதி ஒதுக்குவதற்கு நடப்பில் உள்ள சட்ட விதிமுறைகளின்படி சாத்தியமில்லை. மேலும் அப்பகுதிகளிலுள்ள சாலைகளை செப்பனிடுவதற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்ய பஞ்சாயத்து சட்டங்களிலும் வழிவகை இல்லை.

6—

## மொழி பெயர்ப்பாளர்கள்

**வினா எண் 12800—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி தேர்வுகளில் நேர்காணலில் நன்கு பயிற்சி பெற்ற தமிழ் மொழி பெயர்ப்பாளர்களைத் தமிழக அரசு நியமிக்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மையத் தேர்வாணையம் நடத்தும் குடிமைப் பணித் தேர்வுகளில் (இதில் அகில இந்தியப் பணிகளான இ.ஆ.ப. இ.கா.ப.-யும் அடங்கும்) நேர்காணல் ஆங்கிலத்திலும் மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் கண்டுள்ள அனைத்து இந்திய மொழிகளிலும் நடத்தப்படுகிறது. மேலும் விண்ணப்பதாரர்கள் கட்டுரை, பொது அறிவு மற்றும் விருப்பப் பாடங்களை எழுதுவதற்கு ஆங்கில மொழியை தெரிவு செய்திருந்தால் அவர்களுக்கு ஆங்கிலத்திலேயே நேர்காணல் நடத்தப்படுகிறது. இருப்பினும் விண்ணப்பதாரர்கள் கட்டுரை, பொது அறிவு மற்றும் விருப்பப் பாடங்களை எழுதுவதற்கு இந்திய மொழிகளை தெரிவு செய்திருந்தால் அவர்களுக்கு நேர்காணல் அவர்கள் விரும்பியபடி ஆங்கிலத்திலோ அல்லது அவர்கள் தெரிவு செய்த இந்திய மொழிகளிலோ நடத்தப்படுகிறது. இதனால் தன்னாட்சி நிறுவனமான மையத் தேர்வாணையம் நடத்தும் அகில இந்தியப் பணித் தேர்வுகளுக்கான நேர்காணலில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டிய தேவை எழவில்லை.

7—

## தமிழ்நாட்டில் வெடிகுண்டுகள்

**வினா எண் 13185—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுவதாகப் புலனாய்வுத் துறை கண்டறிந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

[2000 மே 18

(ஆ) வெடிமருந்துப் பொருட்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் காவல்துறையினரால் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

(1) கள்ளத்தனமாக வெடிபொருட்கள் வைத்திருப்பது அல்லது பயன்படுத்துவது சம்பந்தமாக தீவிரமாக சோதனைகள் நடத்தப்படுகின்றன.

(2) ஆங்காங்கே இத்தகைய பொருட்கள் கைப்பற்றப்பட்டு, குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(3) வெடிமருந்துக் கடைகளைச் சோதனையிடுவது சம்பந்தமாகவும் கள்ளத்தனமாக வெடிமருந்துகள் வைத்திருப்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகவும் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

8—

## புறக்காவல் நிலையங்கள்

**வினா எண் 14249—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி மையப்பகுதி, புதுக்கிராமம், ராஜீவ் நகர் ஆகிய பகுதிகளில் தனித்தனியே புறக்காவல் நிலையங்கள் அமைக்கவும், நகருக்கு காவல் கட்டுப்பாடு ஊர்தி (Police Control Van) இயக்கவும், அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.



2000 மே 18]

9—

## தொழில் வசதி

**வினா எண் 14939—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் பகுதியில் TACID தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரக்கோணம் பகுதியில், TACID தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

10—

## சுரங்கம்

**வினா எண் 15040—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பகுதியில நிலக்கரி இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளில் சுரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். மன்னார்குடி பகுதியில் பழுப்பு நிலக்கரி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) நெய்வேலி பழுப்புநிற நிலக்கரி நிறுவனமும் (N.L.C.) கனிம ஆய்வு நிறுவனமும் (M.E.C.L.) கூட்டாக சேர்ந்து துளைகள் இட்டு ஆய்வு நடத்தியதில் அடிப்படையில் மன்னார்குடி பகுதியில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது கண்டறியப்பட்டது. ஆய்வுப்பணிகள் இன்னும் முடியவில்லை. ஆய்வுப்பணிகள் முடிவடைந்து முழுமையான அறிக்கை பெறப்பட்ட பிறகுதான் இப்பகுதியில் சுரங்கம் அமைப்பது பற்றி பரிசீலனை செய்ய இயலும். எனவே, தற்போது இப்பகுதியில் பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**11—**

### இரசாயனத் தொழிற்சாலை

**வினா எண் 15041—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய உப்பைக் கொண்டு அங்கு இரசாயனத் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய உப்பைக் கொண்டு அங்கு இரசாயனத் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**12—**

### தொழில் வளாகம்

**வினா எண் 15120—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*a*) How many factories have been closed at Hosur Industrial Complex, Hosur for the last two years?

(*b*) The action taken by the Government to revive them?





விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் பதினைந்து.

(ஆ) இந்த மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் மூன்று மட்டும் சிப்காட் நிறுவனத்தின் உதவி பெற்றுள்ளன. அவை (1) ஜெனரல் உறவாக் (2) விக்னேஷ்வர் பேப்ரிகேட்டர்ஸ் (3) டாப்கோ. இந்த நிறுவனங்களைச் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ள 2 தொழிற்சாலைகள் ஏலத்தில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டாப்கோ நிறுவனம் பி.ஐ.எப்.ஆர். புனர் நிர்மானத்திற்கு வேண்டிய திட்டங்களை வகுக்கும்படி நிதி நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**13—**

### காவல் நிலையம் இணைப்பு

**வினா எண் 15776—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட செக்கானூரணி காவல் நிலையத்தை திருமங்கலம் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**14—**

### சிப்காட் வளாகம்

**வினா எண் 16808—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலம் கிராமத்தில் புதியதாக 'சிப்காட்' வளாகம் அமைவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலம் கிராமத்தில் புதியதாக 'சிப்காட்' வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. ஆனால், அப்பகுதியில் 'டாசிட்' மூலம் தோல் பதனிடும் பூங்கா அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்த அரசு அளித்த ஒப்புதலுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

(ஆ) அப்பகுதி மக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாகத் தோல் பதனிடும் பூங்காவை இப்பகுதியில் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டு நிலம் கையகப்படுத்துவதற்கு அறிவிக்கப்பட்ட அரசின் ஒப்புதல் ரத்து செய்யப்பட்டது.

**15—**

### உதவித் தொகை

**வினா எண் 17539—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஜெனரேட்டர் உதவித் தொகை வேண்டி மனுச் செய்த தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஜெனரேட்டர் உதவித் தொகை வேண்டி மனுச் செய்த தொழிற்சாலைகள் இரண்டு மட்டும்.



(ஆ) அவற்றிற்கு வழங்கப்பட்ட உதவித் தொகை (ஜெனரேட்டர் மானியமாக ) ரூ. 0.82 இலட்சம் ஆகும்.

**16—**

### முந்திரித் தொழிற்சாலை

**வினா எண் 18092—திரு. செ. மதிவாணன்** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பகுதியில் முந்திரி அதிகமாக விளைகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதியில் முந்திரிப் பருப்பு உடைக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். காஞ்சிபுரம், இடைக்கழிநாடு பகுதியை உள்ளடக்கிய செய்யூர் வட்டத்தில் 71 ஹெக்டேர் பரப்பில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 1996-97 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி 208 ஹெக்டேர் நிலம் முந்திரி சாகுபடியின் கீழ் உள்ளது.

(ஆ) அங்கு முந்திரிப் பருப்பு உடைக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் தற்சமயம் இல்லை.

**17—**

### காவல் நிலையம்

**வினா எண் 18037—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலையம் காக்காபாளையம் எனும் ஊரில் உள்ளதை மகுடஞ்சாவடியிலேயே கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**18—**

**காவல் நிலையத்திற்குக் கட்டடம்.**

**வினா எண் 18126—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மகளிர் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் தாராபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் உட்பட 25 காவல் நிலையக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தாராபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடம் கட்டும் பணி செய்து முடிக்கப்பட்டு இறுதிக் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

**19—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 18238—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திண்டிவனம் தொகுதி, எடையானம் கிராம எல்லையில் உள்ள அரசு நிலத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி, எடையானம் கிராம எல்லையில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

**20—**

**ஆங்கிலோ இந்தியர்கள்**

**வினா எண் 18455—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆங்கிலோ இந்தியர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு அரசு மூலமாக எத்தகைய உதவிகள் வழங்கப்படுகின்றன?

(இ) அந்த உதவிகள் ஏன் வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் ஆங்கிலோ இந்தியர்கள் 22,700 பேர் உள்ளனர்.

(ஆ) மத சிறுபான்மையினர்களுக்கு வழங்கும் அனைத்துச் சலுகைகளும் ஆங்கிலோ இந்தியர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

(இ) மத சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் வழங்கப்படுகின்றன.

21—

## தொழிற் கூடம்

**வினா எண் 19285—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரத்தில் விற்பனைச் சங்கத்தில் ஆண்டு ஒன்றுக்கு பல லட்சம் டன் பருத்தி வருவதால், சிப்காட் மூலம் பின்னலாடை தொழிற்கூடம் ஒன்று தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரத்தில் சிப்காட் மூலம் பின்னலாடை தொழிற்கூடம் அமைக்கும் உத்தேசம் தற்சமயம் சிப்காட் வசம் இல்லை.

22—

## தொழில் வளர்ச்சி மையம்

**வினா எண் 19293—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் தொழில் முதலீட்டாளர்கள் நிலம் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது.



## அறிக்கை

பெருந்துறை தொழில் வளாகத்தில் தொழில் முதலீட்டாளர்கள் நிலம் கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள்.

173 தொழில் முதலீட்டாளர்கள் ஏப்ரல் 1997-ல் 321.7 ஏக்கர் நிலம் கேட்டு விண்ணப்பித்திருந்தனர். இவற்றை டாசிட் நிறுவனம் ஆய்வு செய்து தகுதி வாய்ந்தவர்கள் 117 பேருக்கு 262 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்தது. இவர்கள் குறிப்பிட்ட காலத்தில் நிலத்திற்கான பணத்தினைச் செலுத்தாததால், மேற்படி ஒதுக்கீடுகள் காலாவதியாகிவிட்டன. ஈரோடு மாவட்ட ஆட்சியர் 25-9-1998 அன்று தொழில் முதலீட்டாளர்களுடன் கலந்தாலோசித்து, நிலம் கீழ்க்கண்டபடி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

1. தோல் தொழிற்சாலைகளுக்கான பகுதி - 2 நபர்கள் - 4 ஏக்கர்
2. துணி மற்றும் சாயத் தொழிற்சாலைகளுககான பகுதி - 2 நபர்கள் - 17 ஏக்கர்
3. பிற சுற்றுச்சூழல் மாசுபடச் செய்யும் தொழிற்சாலைகள் - ஏதுமில்லை
4. சுற்றுச்சூழல் மாசுபடச் செய்யாத தொழிற்சாலைகள்-1 நபர்-1 ஏக்கர்.

23—

## தொழிற்சாலைகள்

**வினா எண் 19384—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில் பெண்கள் பயனடையும் விதத்தில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தாராபுரம் தொகுதியில் பெண்கள் பயனடையும் விதத்தில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

[2000 மே 18

**24—**

**பாக்கித் தொகை**

**வினா எண் 19399—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் சப்ளை செய்த கரும்பிற்கு பட்டுவாடா செய்யாமல் உள்ள பாக்கித் தொகை எவ்வளவு என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதை விரைவாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98 ஆம் ஆண்டில் கரும்பு விவசாயிகள் அளித்த கரும்பிற்கு, சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ரூ.3.79 கோடி நிலுவை வைத்திருந்தது. அரசு உதவியுடன் அவ்வாலை விவசாயிகளுக்கு முழுத்தொகையும் அளித்துவிட்டது.

**25—**

**அந்நியச் செலாவணி**

**வினா எண் 19401—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு முந்திரி ஏற்றுமதி மூலம் கிடைத்துள்ள அந்நியச் செலாவணி எவ்வளவு?

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு எவ்வளவு டன் முந்திரி ஏற்றுமதி செய்ய அரசு உத்தேசித்துள்ளது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் 76,323 மெட்ரிக் டன் முந்திரி ஏற்றுமதி மூலம் கிடைத்துள்ள அந்நியச் செலாவணி ரூ.1,383.90 கோடியாகும். (372 மில்லியன் அமெரிக்கன் டாலர்)

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் 80,000 மெட்ரிக் டன் முந்திரி ஏற்றுமதியும், 6,875 மெட்ரிக் டன் முந்திரி எண்ணெயும் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**26—**

**தொழிற்சாலைகள்**

**வினா எண் 19420—திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை ஒட்டியுள்ள பகுதிகளில் மிகப் பெரிய முதலீட்டில் தொழிற்சாலைகள் அமைப்பது போல் மதுரை மாநகரத்திலும் அப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**27—**

**கண்ணாடித் தொழிற்சாலை**

**வினா எண் 19424—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணவாளக்குறிச்சியில் ஏற்றுமதி செய்யப்படாமல் உள்ள மணலிலிருந்து கண்ணாடித் தொழிற்சாலை உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**28—**

**பெண் ஊழியர்கள்**

**வினா எண் 19672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் பெண் ஊழியர்களைப் பணி நியமனம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**29—**

**மகளிர் காவல் நிலையம்**

**வினா எண் 19685—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பரிசீலனையில் இல்லை.

**30—**

**கட்டட வசதி**

**வினா எண் 19698—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சங்ககிரி வட்டத்திலுள்ள துணைக் கண்காணிப்பாளர் காவல் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி வட்டத் துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கவில்லை. அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**31—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 20519—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் கழகத்தின் (T.N.P.S.C.) 1993-94 ஆம் ஆண்டில் காப்புப் பட்டியலின்கீழ் தேர்வு செய்யப்பட்டு தொடர்ச்சியாக 2½ ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1993-94 ஆம் ஆண்டில் காப்புப் பட்டியலில் தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளில் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட நபர்களை அவர்கள் முதன் முதலில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து நிரந்தரப் பணியில் கொண்டு வரும் பொருட்டு தக்க ஆணைகள் அரசாணை (நிலை) எண் 77, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 26-4-1999-ல் வெளியிடப்பட்டுள்ளன.

[2000 மே 18

32—

## விருப்ப ஓய்வுச் சலுகை

**வினா எண் 20773—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், அரசு ஊழியர், 25 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெறுபவர்களுக்கு, அவரது முழுகாலப் பணிக்கான பணிக்கொடை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழகத்தில் அரசு ஊழியர். 25 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து. தன்விருப்ப ஓய்வு பெறுபவர்களுக்கு, அடிப்படை விதிகளின்படி, அவரது முழுகாலப் பணிக்கான பணிக்கொடை வழங்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

33—

## உலக வங்கிக் கடன்

**வினா எண் 21480—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு பல்வேறு திட்டச் செலவிற்காக உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் எவ்வளவு?

(ஆ) அதற்கான வட்டி விகிதம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உலக வங்கி எந்த ஒரு நிதியுதவியையும் மாநில அரசுக்கு நேரடியாக வழங்குவது இல்லை. உலக வங்கியிடமிருந்து கிடைக்கும் நிதி உதவியை மைய அரசு பெற்று, மாநில அரசுக்கு உலக வங்கித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகக் கடன் மற்றும் மானியமாக அளித்து வருகிறது. இன்றைய நிலவரப்படி மைய அரசு மேற்படி நிதியுதவியை 70 விழுக்காடு கடனாகவும், 30 விழுக்காடு மானியமாகவும் மாநில அரசுக்கு வழங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் உலக வங்கித் திட்டங்களுக்காக மைய அரசிடமிருந்து நாம் பெற்ற நிதியுதவி ரூ.880.62 கோடி ஆகும்.

(ஆ) தற்போது இதற்கான வட்டி விகிதம் 12.5 விழுக்காடாகும்.



2000 மே 18]

34—

## பியூட்டி பார்லர்கள்

**வினா எண் 21899—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "பியூட்டி பார்லர்"களை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

35—

## எர்பையனஅள்ளி ஊராட்சி

**வினா எண் 22274—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எர்பையனஅள்ளி ஊராட்சியை இண்டூர் காவல் நிலையத்திற்குட்பட்டதாக இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஏர்பையனஅள்ளி ஊராட்சியை இண்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டதாக இணைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**36—**

**போக்குவரத்துக் காவல் நிலையம்**

**வினா எண் 22282—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் பகுதியில், புதிய போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**37—**

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 22320—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையாலுமுடு பேரூராட்சிப் பகுதியில் களியலை மையப்படுத்தி தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**38—**

**கட்டட வசதி**

**வினா எண் 22321—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லங்கோடு தீயணைப்பு நிலையத்தை வாடகை இடத்திலிருந்து மாற்றி புதிய இடத்தில் கட்டடம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுது இல்லை.

**39—**

**வல்லம் காவல் நிலையத்திற்கு மாற்றம்**

**வினா எண் 22468—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், கல்விராயன்பேட்டை கிராம காவல் நிலையம் கள்ளப்பெரம்பூரில் அமைந்துள்ளதால் அதனை வல்லம் காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

[2000 மே 18

40—

### தொழிற்பேட்டை

**வினா எண் 22510—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் 'சிப்காட்' தொழிற்பேட்டையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதியில் 'சிப்காட்' தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

41—

### வருவாயைப் பெருக்குதல்

**வினா எண் 22630—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போலி பிராந்தி விற்பனையை ஒழித்து ஆயத் தீர்வை வருவாயைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போலி மது விற்பனையைத் தடுப்பதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை அரசு மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

42—

### கண்காணிப்புக் குழு

**வினா எண் 22633—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) தருமபுரி மாவட்டத்தில் போலி மதுபான பாட்டில்கள் விற்பனை செய்வதால் ஏற்படும் ஆயத் தீர்வை இழப்பைத் தவிர்க்க மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இரண்டாம் தரம் மற்றும் போலி மது முதலியவற்றின் விற்பனையைத் தடுப்பதற்காக, 1998 ஆம் ஆண்டு சூலை மாதத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை அரசு மீண்டும் ஏற்படுத்தியுள்ளதால் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழு ஏதும் அமைக்கத் தேவையில்லை.

43—

### விற்பனை வரி அதிகாரிகள்

**வினா எண் 22659—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு விடுதிகளில் விற்பனை வரி அதிகாரிகள் முறைகேடாக நடந்துகொள்வதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உணவு விடுதிகளில் விற்பனை வரி அதிகாரிகள் முறைகேடாக நடந்துகொள்வதாக எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2000 மே 18

44—

### கள்ளச் சாராயம்

**வினா எண் 22670—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கிராமப்புறப் பகுதிகளில் கள்ளச் சாராய வியாபாரம் நடைபெற்று வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் புறநகரில் உள்ள கிராமங்களில் அவ்வப்போது சட்டம்-ஒழுங்கு காவலர்கள் மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவு காவலர்களைக் கொண்டு சாராய வேட்டை நடத்தப்பட்டுள்ளது. மேலும் கடந்த 1998 ஆம் ஆண்டில் சாராய வேட்டை நடத்தி 815 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டில் 31-7-1999 வரை திருப்பூர் மற்றும் புறநகரில் உள்ள கிராமங்களில் சாராய வேட்டை நடத்தப்பட்டு 134 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் 3 நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த 134 வழக்குகளில் 134 நபர்கள் (ஆண் 70, பெண் 64) கைது செய்யப்பட்டு 654 லிட்டர் சாராயமும்; 2 டிவி.எஸ். 50 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. 40 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு ரூ.16,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 16 வழக்குகளில் இணக்கக் கட்டணம் (Compound fees) ரூ.16,000/- வசூலிக்கப்பட்டு கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. இவற்றின் காரணமாக திருப்பூர் கிராமப்புற பகுதிகளில் கள்ளச் சாராய வியாபாரம் தற்சமயம் பெரிதும் குறைந்துள்ளது.

45—

### காவல் நிலையம்

**வினா எண் 22781—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் கிராமத்தில் செயல்பட்டு வந்த காவல் நிலையத்தை மீண்டும் செயற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

46—

### புறக்காவல் நிலையம்

**வினா எண் 22782—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், முருகக் கடவுள் பிரசித்தி பெற்ற வல்லக்கோட்டை கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

47—

### நிழற்கூடம்

**வினா எண் 22919—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து மனு கொடுக்க வருகின்ற பொது மக்கள் நீண்ட நேரம் வெயிலில் காத்திருக்கின்றனர். அவர்கள் காத்திருக்க ஒரு நிழற்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போது தலைமைச் செயலகத்தில் நிலவி வரும் இட நெருக்கடி காரணமாகவும், காலி இடங்கள் இல்லாத காரணத்தினாலும் நிழற்கூடம் கட்ட இயலாது. சட்டமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும் சமயங்களில் பொதுமக்களின் வசதிக்கேற்ப தற்காலிக நிழற் பந்தல்கள் (Shamiana) அமைத்துத் தரப்படுகின்றன.

**48—**

## பொருளாதாரத் தடைகள்

**வினா எண் 23131—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணுகுண்டு வெடிப்பிற்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரத் தடைகளால் தமிழ்நாட்டின் திட்டங்கள் ஏதேனும் பாதிப்படைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அணுகுண்டு வெடிப்பிற்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரத் தடைகளால் தமிழ்நாட்டில் ஒரே ஒரு திட்டத்தைத் தவிர மற்ற திட்டங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின்மீது ஆராய்ச்சி நடத்த ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஹார்வர்ட் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் என்ற நிறுவனத்திற்கு ரூ.5 கோடி அனுமதிக்கப்பட்டது. இந்தியாவுக்கு நிதி உதவியை நிறுத்தும் அமெரிக்க அரசின் முடிவினால் இவ்வாராய்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவி (USAID) தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவில்லை.



2000 மே 18]

**49—**

## குற்ற நடவடிக்கை

**வினா எண் 23133—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குற்ற நடவடிக்கைப் பெருக்கம் நகரத்தில் அதிகமா? கிராமத்தில் அதிகமா?

(ஆ) அதன் சமூகக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) நகரத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

(ஆ) வேலையின்மையும், ஏழ்மை நிலையுமே காரணம்.

**50—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 23134—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தெற்குப் பகுதியில் தீயணைப்பு நிலையம் புதிய கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

[2000 மே 18

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**51—**

## தொழில் அதிபர்கள்

**வினா எண் 23151—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 97-ம் ஆண்டில் தொழில் அதிபர்களைக் கடத்திப் பணம் கேட்டு நிர்ப்பந்திக்கும் சம்பவம் எத்தனை நடைபெற்றன?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஐந்து சம்பவங்கள் நடைபெற்றன.

(ஆ) இவற்றில் நான்கு சம்பவங்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளன. ஒரு நிகழ்வில் நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு எதிரிகள் விடுதலை அடைந்துள்ளனர்.

**52—**

## விஷச் சாராய உயிரிழப்பு

**வினா எண் 23153—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஷச் சாராயத்தால் உயிரிழந்தவர்கள் 1997-98-இல் எத்தனை பேர்?

(ஆ) விஷச் சாராய விற்பனையைத் தடுக்க அரசு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கை என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1997ஆம் ஆண்டில் விஷச் சாராயத்தால் உயிரிழந்தவர்கள் 7 நபர்களும் மற்றும் 1998 ஆம் ஆண்டில் 69 நபர்களும் ஆவர்.

(ஆ) விஷச் சாராயத்தைத் தடுக்கும் நோக்கத்தோடு 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4, 5, 7 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவிலக்குக் குற்றங்களுக்காக 3 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ. 10,000-வரை அபராதமும் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இவை இணக்க முறையில் (Compounding) தீர்வு காண்பதிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளன.

கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதை அடியோடு ஒழிக்கவும், போலி மற்றும் இரண்டாம்தர மதுபான விற்பனையைத் தடுக்கவும் 86 மதுவிலக்கு அமலாக்க அலகுகளைக் கொண்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, இம்மாநிலத்தில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. அவை காவல் நிலையங்களாகவும் அறிவிக்கப்பட்டன. மதுவிலக்குச் சட்டம் அமல்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், மாநில அளவில் காவல் துறைத் தலைவர் ஒருவரும், இரண்டு காவல் கண்காணிப்பாளர்களும் இதர அலுவலகப் பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமல் பிரிவு அலகுகள் இயங்கி வருகின்றன. மதுவிலக்கு அமல் பிரிவில் 37 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 37 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 86 ஆய்வாளர்கள், 72 துணை ஆய்வாளர்கள், 172 தலைமைக் காவலர்கள் மற்றும் 1302 காவலர்கள் உள்ளனர். மேலும், மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காகவும், மதுவிலக்கு அமல் பிரிவினருக்கும், உள்ளூர் காவல் துறையினருக்கும் உதவும் வகையிலும், ஒரு காவல் கண்காணிப்பாளர், 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 6 ஆய்வாளர்கள் மற்றும் 8 உதவி ஆய்வாளர்கள் கொண்ட மத்திய புலனாய்வு அலகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளூர் காவல்துறை, மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் மத்திய புலனாய்வு அலகு ஆகியவற்றைக் கொண்டு மாநிலம் முழுவதும் மதுவிலக்குச் சோதனைகள் அடிக்கடி நடத்தப்பட்டு கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 மே 18

கள்ளச் சாராய இறப்புகள் அனைத்தும், மெத்தில் ஆல்கஹால் தொடர்புடையதாக உள்ளன. எனவே, மெத்தில் ஆல்கஹால் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களின் மீதான கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மெத்தில் ஆல்கஹால் மைய அரசுச் சட்டத்தின்கீழ் வருவதால், இது குடிப்பதற்கு இயலாததாக்கும் பொருட்டு, கசப்புத் தன்மையைச் சேர்த்து நிற மாற்றமும் செய்திட இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் குடித்து, மரணமடைவதைத் தடுக்க இரசாயனத் தொழில் பிரதிநிதிகளுடன் 5-3-1999 அன்று கலந்தாலோசனை செய்யப்பட்டது. இதுபோன்ற விளைவுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மெத்தனால் பயன்படுத்தும் இரசாயனத் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கூட்டி, கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை வழிகாட்டி ஒன்றினை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. சூளகிரி விஷச் சாராய சம்பவத்தை அடுத்து கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுவகைகள் பற்றிய தகவல்களை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநரின் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டு செய்தித்தாள்களின் மூலமாக 25-8-1998 அன்று அரசு விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து ஏராளமான தகவல்கள் வருகின்றன. 25-8-1998 முதல் 16-7-1999 வரை 1369 புகார்கள் பெறப்பட்டு காவல் துறை கூடுதல் இயக்குநர் (சிறபபு பணிகள் மற்றும் அமலாக்கம்) அவர்களுக்கு, தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்பப்பட்டன. பெறப்பட்ட 1369 புகார்களில், 528 புகார்கள் உண்மையானவை என்று அறியப்பட்டன. 938 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 717 புகார்கள் உண்மையானவை அல்ல என்று அறியப்பட்டது.

**53—**

### தொழில் துறையில் முயற்சிகள்

**வினா எண் 23181—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு தொழில் துறையில் முதலீடும் பெற அரசு எடுத்து வருகிற தொடர் முயற்சிகள் என்ன?*

*(ஆ) இதில் மத்திய அரசின் அணுகுமுறை எத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், குறிப்பாக மின் உற்பத்தியை அதிகரித்தல், தேவையான அனுமதிகளை விரைந்து வழங்கிடும் பொருட்டு விதிமுறைகளை எளிமைப்படுத்துதல், பல்வேறு தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் தேவையான நிலம், நிதி வசதிகள் ஆகியவற்றை விரைந்து அளித்தல், தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிக்கத் தேவையான கொள்கைகளை உருவாக்கிச் செயல்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

(ஆ) இதில் மத்திய அரசின் அணுகுமுறை பெரும்பாலும் நல்லமுறையில் உள்ளது. சிறு மற்றும் குறுந்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், அதன் முதலீட்டு வரம்பினை முறையே ரூ.3 கோடியாகவும், ரூ. 0.25 கோடியாகவும் மத்திய அரசு அதிகரித்துள்ளது. 1999 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களின் கணக்குப்படி மத்திய அரசு தமிழ்நாட்டில் ரூ.54,408 கோடி செலவில் 48 திட்டங்களை நிறைவேற்ற உள்ளது.

**54—**

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 23195—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ் நாட்டில் மாநில மனித உரிமை ஆணையம் இயங்குவதற்கான அடிப்படை வசதிகளை அரசு அளித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ் நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் இயங்குவதற்கான அடிப்படை வசதிகளை அரசு அளித்துள்ளது.

[2000 மே 18

(ஆ) மாநில மனித உரிமைகள் ஆணையம் இயங்கிட அடிப்படை வசதிகளான அலுவலகத்திற்கான இடவசதி, பணியாளர்கள், சீருந்து வசதி, தொலைபேசி வசதிகள், அலுவலகத்திற்குத் தேவையான மரத் தளவாடங்கள் மற்றும் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

**55—**

**புறக்காவல் நிலையம்**

**வினா எண் 23798—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி புதிய பேருந்து நிலையம் மற்றும் புதிய அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை அருகே புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இயலாது.

(ஆ) எழவில்லை.

**56—**

**புதிய காவல் நிலையம்**

**வினா எண் 24489—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி முத்தனேந்தலில் புதிய காவல் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

**57—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 26785—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகரிலுள்ள தீயணைப்புத் துறைக்கு புதியதாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**58—**

**தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 26930—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழியிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தக்க தருணத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2000 மே 18

59—

### மருத்துவமனை

**வினா எண் 28910—திரு. கோ. நயினா முகம்மது:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் காவல் துறை காவலர்களுக்கு தனியாக மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

60—

### தீயணைப்பு நிலையம்

**வினா எண் 29512—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, கண்ணமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



2000 மே 18]

61—

### நிரந்தரக் கட்டடம்

**வினா எண் 29534—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 1430, உள் துறை, நாள் 26-10-1999-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

62—

### அலுவலகப் பணியாளர்கள்

**வினா எண் 29586—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துறையில் களப்பணியாளர்கள் இருக்கும் அளவிற்கு, அலுவலகப் பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துறையில் களப்பணியாளர்கள் இருக்கும் அளவிற்கு, அலுவலகப் பணியாளர்கள் போதிய அளவில் உள்ளனர்.

[2000 மே 18

63—

## தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டட வசதி

**வினா எண் 29929—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 14312-ல் 1 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நில மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்தபின் தான் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்க இயலும்.

64—

## மனுக்கள் மீது துரித நடவடிக்கை

**வினா எண் 30415—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுமக்கள் அமைச்சர்களிடம், தலைமை அதிகாரிகளிடம் கொடுக்கின்ற கோரிக்கை மனுக்கள் மீது ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் தலைமை அதிகாரிகளிடம், பொதுமக்கள் கொடுக்கின்ற கோரிக்கை மனுக்கள் மீது பரிசீலனை செய்து ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்க அனைத்துத் துறைச் செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

65—

## தீயணைப்பு சாதனங்கள்

**வினா எண் 31185—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திரைப்பட திரையரங்குகளில் தீயணைப்பு சாதனங்கள் வைப்பதுபோல் பொருள்கள் வைக்கப் பயன்படும் பெரிய கிடங்குகளிலும் தீயணைப்பு சாதனங்கள் வைப்பதை கட்டாயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

66—

## குடியிருப்பு வசதி

**வினா எண் 31188—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) தமிழக தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

67—

## நிலுவைத் தொகை

**வினா எண் 32396—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சா கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய பன்னாட்டு விமான நிறுவனம், தேசிய விமான நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து காவல் துறைக்கு காவல் பணிக்காக வரவேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?

(ஆ) அவற்றை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 01-12-1999 அன்று இந்திய பன்னாட்டு விமான நிறுவனம், தேசிய விமான நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து காவல் துறைக்கு காவல் பணிக்காக வரவேண்டிய நிலுவைத் தொகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) இந்திய பன்னாட்டு விமான நிறுவனம் | - | ரூ.3,75,71,824 |
| (2) தேசிய விமான நிறுவனம் | - | ரூ.3,10,84,540 |



2000 மே 18]

| | | |
|---|---|---|
| (3) தமிழ்நாடு மின்சார வாரியம் | - | ரூ.4,21,80,794 |

இத் தொகையை வசூலிக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

68—

## புறக்காவல் நிலையம்

**வினா எண் 32418—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

69—

## சொந்தக் கட்டட வசதி

**வினா எண் 33291—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் வட்டத் தலைநகரில் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் வழங்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 14312-ல் 1 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை இந்து சமய அறநிலையத் துறையில் நிலுவையில் உள்ளது. நிலமாற்றம் செய்து பெறப்பட்ட பின்னர்தான் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்க இயலும்.

**70—**

## சீருடைகள்

**வினா எண் 389—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூரில் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கட்டாயச் சீருடை, காலணி, கழுத்துப்பட்டை, காலுறைகளை வாங்க வேண்டும் என்று மாணவ, மாணவியர்களுக்கு நிபந்தனை விதிப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூரிலுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கட்டாயச் சீருடை, காலணி, கழுத்துப்பட்டை, காலுறைகளை வாங்க வேண்டுமென்று மாணவ/மாணவியர்களுக்கு நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை. இதனை செயல்படுத்துமாறு சுற்றறிக்கையும் எந்த அலுவலரிடமிருந்தும் அனுப்பப்படவில்லை.





**71—**

## பட்டதாரி ஆசிரியர்கள்

**வினா எண் 2864—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991-ம் ஆண்டுக்கு முன்பிருந்ததுபோல், நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:

1979 ஆம் ஆண்டுக்கு பிறகு நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 1991-ம் ஆண்டுக்கு பின்னரும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் காலி ஏற்பட்டால் அவற்றில் பி.எட்., கல்வித் தகுதி பெற்ற மூத்த இடைநிலை ஆசிரியர்கள் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

**72—**

## கட்டடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 3667—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மிகவும் பழுதடைந்துள்ள கட்டடத்தை விரைவாகச் செப்பனிட்டுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டடத்தை செப்பனிட ரூ. 1,44,210/- தொகை செலவிடப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

73—

### விளையாட்டு மையம்

**வினா எண் 4897—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், ஊரக விளையாட்டு மையத்தை அமைக்கவும் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

74—

### குறை தீர்க்கும் ஆயம்

**வினா எண் 4902—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்பு போன்று கற்போரின் குறை தீர்க்கும் ஆயம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.



75—

### உருது முதுகலை ஆசிரியர் பணியிடம்

**வினா எண் 5186—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உருது முதுகலை ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உருது முதுகலை ஆசிரியர் பணியிடம் தற்பொழுது நிரப்பப்பட்டு விட்டது.

76—

### தமிழ் மொழி வாயிலாகப் பயிற்றுவித்தல்

**வினா எண் 6704—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வியை தமிழ் மொழி வாயிலாகப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல் திட்டங்கள் என்னென்ன என்பதை அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பொறியியற் கல்லூரிகளில் தமிழ்வழியில் பாடங்கள் போதிக்க அரசு உத்தேசித்துள்ளது.

[2000 மே 18

1. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை
2. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை
3. பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி, கோவை
4. தியாகராயர் பொறியியற் கல்லூரி, மதுரை
5. அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி

இது தொடர்பாக அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவின் இசைவு கிடைத்த பின்னரே வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கப்படுவர். இசைவு வேண்டி தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மருத்துவக் கல்வியைத் தமிழில் போதிப்பது குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பரிசீலனை செய்கிறது.

77—

**ஊக்க ஊதியம்**

**வினா எண் 7028—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களில் பி.எட்., பட்டம், பெற்றவர்களுக்கு ஜி.ஓ. (எம்.எஸ்) 42 நாள் 10-1-1969 மற்றும் ஜி.ஓ. (எம்.எஸ்) 659 நிதி நாள் 6-8-1986ன் படி வழங்கி வந்த ஊக்க ஊதியம் ஜி.ஓ. (எம். எஸ்.) 324 நாள் 25-4-1995-ன் படி ரத்து செய்ததை மீண்டும் வழங்க முன் வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் அரசாணை எண் 324, கல்வி நாள் 25-4-95-ன்படி, அவர்கள் உடற்கல்வியியல் உயர்தகுதி பெற்றிருந்தால் மட்டுமே ஊக்க ஊதிய உயர்வுபெற தகுதியுடையவர்களாகின்றனர்.



2000 மே 18]

78—

**மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 7098—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, காவிரிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1999-2000 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் காவிரிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

79—

**நூலகம்**

**வினா எண் 7951—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில், ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் நூலகம் தொடங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் 1955 ஆம் ஆண்டிலேயே கிளை நூலகமொன்று தொடங்கப்பட்டு அந்நூலகம் தற்போது வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான காலிமனை பெறுவதற்கு தக்க நடவடிக்கை அம்மாவட்ட நூலக அலுவலரால்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுநாள்வரை நிலம் ஏதும் பெறப்படாததால் நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்நூலகத்தைத் தவிர ஓமலூரில் வேறு நூலகம் ஏதுமில்லை.

**80—**

### நூலகத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 9846—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள பொது நூலகத்தை மேலும் மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவும் புத்தகங்களும் வைக்க ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) போதுமான இடவசதி மற்றும் பணியாளர்கள் இல்லாததால் தற்போது இது இயலாது.

**81—**

### மறைமலை அடிகளாரின் படைப்பு

**வினா எண் 10204—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தமிழறிஞர் மறைமலை அடிகளார் அவர்களின் படைப்புகள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நூலகங்களிலும் வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிறப்பிக்கப்பட்டுள்ளது?



(இ) எந்தெந்த நூல்கள் வைக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

(அ) பொது நூலகத் துறையில் பரிசீலனைக்காகப் பெறப்பட்ட 28 நூல்கள் பொது நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1974 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை பொது நூலக இயக்குநரால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வைக்கப்பட்ட நூல்களின் விவரம்

| | | | |
|---|---|---|---|
| (1) | மக்கள் நூற்றாண்டு உயிர் வாழ்க்கை | - | இரு தொகுதிகள் முதல் பதிப்பு |
| (2) | பொருந்தும் உணவும், பொருந்தா உணவும் | - | முதல் பதிப்பு |
| (3) | தொலைவில் உணர்தல் | - | முதல் பதிப்பு |
| (4) | மரணத்தின் பின் மனிதர் நிலை | - | முதல் பதிப்பு |
| (5) | சாகுந்தலை நாடகம் | - | முதல் பதிப்பு |
| (6) | சாகுந்தலை நாடக ஆராய்ச்சி | - | முதல் பதிப்பு |
| (7) | முற்காலப் பிற்காலத் தமிழ் புலவோர் | - | முதல் பதிப்பு |
| (8) | முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை | - | முதல் பதிப்பு |
| (9) | பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை | - | முதல் பதிப்பு |
| (10) | திருக்குறள் ஆராய்ச்சி | - | முதல் பதிப்பு |
| (11) | அம்பிகாபதி அமராவதி | - | முதல் பதிப்பு |
| (12) | கோகிலாம்பாள் கடிதங்கள் | - | முதல் பதிப்பு |

[2000 மே 18

(13) மறைமலையடிகளார் கடிதங்கள் - முதல் பதிப்பு
(14) அறிவுரைக் கொத்து - முதல் பதிப்பு
(15) அறிவுரைக் கோவை முதல் பதிப்பு
(16) உரைமணிக் கோவை - முதல் பதிப்பு
(17) கருத்தோவியம் - முதல் பதிப்பு
(18) சிந்தனைக் கட்டுரைகள் - முதல் பதிப்பு
(19) சிறுவர்க்கான செந்தமிழ் - முதல் பதிப்பு
(20) இளைஞர்களுக்கான இன்றமிழ்
(21) தமிழர் மதம்
(22) யோக நித்திரை
(23) வேளாளர் நாகரிகம்
(24) மக்கள் நூற்றாண்டு வாழ்க்கை
(25) மறைமலையடிகள் பாமணிக் கோவை
(26) மனிதவசியம் மனக்கவர்ச்சி
(27) சைவ சிந்தாந்த ஞானபோதம்
(28) மனித வசியம்

**82—**

**வகுப்பிற்கு ஓர் ஆசிரியர்**

**வினா எண் 11687/97—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வியில் "வகுப்பிற்கு ஓர் ஆசிரியர்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவர்கள் எண்ணிக்கை பல பள்ளிகளில் குறைவாக இருப்பதால் வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் நியமிப்பது சாத்தியமில்லை. பல பள்ளிகளில் 20 முதல் 40 மாணவர்கள் ஐந்து வகுப்புகளில் பயில்கின்றனர். இயன்றவரை முதல் மூன்று வகுப்பு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டு மீதமுள்ள மாணவர்கள் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்க முயற்சிகள் எடுக்கப்படும். 40 மாணவர்களுக்கு மேல் இருப்பின் 5 வகுப்புகளுக்கு இரு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப மூன்றும் அதற்கு மேல் கூடுதல் ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள்.

**83—**

**ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி**

**வினா எண் 111692—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்வி நிறுவனங்களில், ஏழை மாணவர்கள் பணம் கொடுத்து படிக்க இயலாத நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்துள்ள மாற்று ஏற்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அரசு அங்கிகரிக்கப்படும் தனியார் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அரசின் கொள்கைப்படி இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு அரசு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி அடிப்படையில் இயங்கும் தனியார் பள்ளிகளில் கற்பிப்புக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இப்பள்ளிகளில் அரசால் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் மட்டுமே மிகக் குறைந்த அளவில் வசூலிக்கப்படுகிறது. தனியார் கல்வி நிறுவனங்களுள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் போன்றவற்றில் மாணவர்களிடமிருந்து கற்பிப்புக்

[2000 மே 18

கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் சுயநிதி அமைப்பின்கீழ் இயங்கும் தனியார் நர்சரி தொடக்கப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் போன்றவற்றில் பெற்றோர்கள் தன்னிச்சையாக விருப்பப்பட்டு தங்கள் குழந்தைகளை கற்பிப்புக் கட்டணம் செலுத்தி கல்வி பயில வைக்கின்றனர். ஆனால், இதுபோன்ற பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதே. இந்நிலையில் ஏழை மாணவர்கள் கல்வி பயில அரசு பள்ளிகளும்—உதவிபெறும் அங்கிகரிக்கப்பட்ட பள்ளிகளும் பேரளவான எண்ணிக்கையில் உள்ளதால், அங்கெல்லாம் அவர்கள் பணம் கொடுத்துப் படிக்க வேண்டிய நிலை இல்லை என்றிருக்கும்போது அரசு உதவி பெறாத தனியார் பள்ளியில் கட்டணம் செலுத்திச் சேர முன்வருவோர்க்கு மாற்று ஏற்பாடு செய்யும் பிரச்சனை எழாது.

**84—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 13644—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்துகுளி ஊராட்சி ஒன்றியம்-வடுகபாளையம் ஊராட்சியில், தேனீஸ்வரம்பாளையம் தொடக்கப் பள்ளிக்கு குடிநீர் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனீஸ்வரம்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பள்ளிக்கு அருகில் சுமார் 50 அடி தூரத்தில் புதிய பொது குடிநீர்க் குழாய் போடப்பட்டுள்ளது. இதிலிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கும், சத்துணவு மையத்திற்கும் குடிநீர், எடுத்துக் கொள்ள இயலும். மேற்படி குடிநீர்த் திட்டம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டவுடன் தேனீஸ்வரன்பாளையம் தொடக்கப் பள்ளிக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும்.



2000 மே 18]

**85—**

### மின் கம்பங்கள்

**வினா எண் 13656—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஆபத்து விளைவிக்கக்கூடிய உயர் அழுத்த மின்சார கம்பிகளையும் கம்பங்களையும் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் குறுக்கே செல்லும் உயர் அழுத்த மின் கம்பிகள் மற்றும் மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசாணை நிலை எண் 279 பள்ளிக் கல்வி நாள் 17-9-99ல் ரூ. 1.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**86—**

### சேர்க்கைக் கட்டணம்

**வினா எண் 15367—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், குறிப்பாக சென்னை மாநகர எல்லைக்குள் உள்ள ஆங்கில வழி போதனா பள்ளிக் கூடங்களில் சேர்க்கைக் கட்டணம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தொகைகளை பெற்றோரிடமிருந்து பெறுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மிகக் கூடுதலாகப் பல வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக ஒரு சில பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்படுகின்றன. புகார் பெறப்பட்டுள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சார்ந்து மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வரால் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு இவ்வாறு தொகை வசூல் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என பள்ளி நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**87—**

**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 15512—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளி திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

**88—**

**உயர்நிலைப் பள்ளி**

**வினா எண் 15522—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சார்ந்த மதுராம்பட்டு தனியார் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மதுராம்பட்டு சிறுமலர் தனியார் நடுநிலைப் பள்ளி 1998ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**89—**

**தட்டச்சுத் தேர்வு மையம்**

**வினா எண் 16041—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் தட்டச்சு தேர்வு மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடியில் ஒரு புதிய தட்டச்சு தேர்வு மையம் ஜனவரி 1999 முதல் செயல்படுகிறது.

**90—**

**வயது உச்ச வரம்பு**

**வினா எண் 17338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முதுகலை பட்டதாரி, இடைநிலை ஆசிரியர் பயிற்சி தேர்வு பெற்றவர்களுக்கு அரசு வேலை பெறுவதற்கான வயது உச்ச வரம்பைத் தளர்த்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆசிரியர் நியமன வயது உச்ச வரம்பு குறித்து அரசு ஆராய்ந்து தற்போதுள்ள நடைமுறையே தொடரலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

91—

## புதிய கட்டடம்

**வினா எண் 17654—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசினர் மதராஸா-இ-ஆஸாம்உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சென்னை, அண்ணாசாலையிலுள்ள மதராஸா-இ-ஆஸாம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக 4 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டிக் கொடுக்க 1998-99 ஆம் ஆண்டில், அரசாணை நிலை எண் 356, பள்ளிக் கல்வி, நாள் 22-9-98-ல் அரசு ஆணையிட்டுள்ளது. கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

92—

## நூல் நிலையம்

**வினா எண் 19082—திரு. ம. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோவிலில் ஒரு நூல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி 5000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் கிளை நூலகமும் 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ஊர்ப்புற நூலகம்/பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது. மாரியம்மன் கோவில் கிராமத்தின் மக்கள் தொகை 5982. எனினும் அரசு நிதி நிலை காரணமாக இவ்வாறு மக்கள் தொகை உள்ள எல்லா இடங்களிலும் நூலகங்கள்





திறக்க இயலாத நிலை உள்ளது. எனினும் பொது மக்கள் ஒத்துழைப்புடன் முதல் கட்டமாக பகுதிநேர நூலகம்/ஊர்ப்புற நூலகம் திறக்க ஆவன செய்யப்படுகிறது. மாரியம்மன் கோயில் ஊர் மக்கள் உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் அங்கு ஒரு பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

93—

## மாணவர் மற்றும் ஆசிரியர் நலன்

**வினா எண் 20743—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அங்கு மாணவர் மற்றும் ஆசிரியர் நலன்களை அரசு எவ்வாறு கண்காணிக்கிறது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 820-ம், மெட்ரிகுலேசன் மேல் நிலைப்பள்ளிகள் 697-ம் தொடங்கப்பட்டுள்ளன.

(ஆ) மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளரால் அவ்வப்போது மெட்ரிகுலேசன் பள்ளிகள் பார்வையிடப்பட்டு, மாணவர் மற்றும் ஆசிரியர் நலன் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்படி அப்பள்ளிகளின் முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. தலைமையிடத்தில் இணை இயக்குநர் ஒருவரும் இப்பணிகளை கண்காணிக்கிறார்.

94—

## வேலைவாய்ப்புப் பாடங்கள்

**வினா எண் 20780—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு கல்லூரிகளில் வேலை வாய்ப்பு தரும் பாடங்களைத் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)-விற்கான விடைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**இணைப்பு**

கீழ்க்கண்ட வேலைவாய்ப்பு தரும் பாடங்கள் அவற்றிற்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கல்லூரிகளில், ஏற்கெனவே அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

| பாடப் பிரிவுகள் பெயர் | அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பி.பி.ஏ. | 6 |
| பி.ஏ. கூட்டுச் செயலாண்மை | 7 |
| பி.ஏ. கூட்டுறவு | 2 |
| பி.ஏ. பாதுகாப்பு அறிவியல் | 1 |
| பி.ஏ. சிறப்புப் பொருளாதாரம் | 1 |
| பி.ஏ. இசை | 1 |
| பி.எஸ்.சி. கணினி அறிவியல் | 38 |
| பி.எஸ்.சி. உயிர்வேதியல் | 4 |
| பி.எஸ்.சி. நுண்ணுயிரியல் | 1 |
| பி.எஸ்.சி. மின்னணு அறிவியல் | 3 |
| பி.எஸ்.சி. மனையியல் | 5 |
| பி.எஸ்.சி. ஊட்டச்சத்து மற்றும் உணவியல் | 3 |
| பி.எஸ்.சி. உடற்பயிற்சி கல்வி | 2 |
| பி.எஸ்.சி. சுற்றுப்புற அறிவியல் | 1 |



222455

ஒவ்வொரு கல்வியாண்டிலும் அரசால் ஒதுக்கப்படுகின்ற நிதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு தரும் புதிய பாட வகுப்புகளை அரசு கல்லூரிகளில் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 29 அரசு கல்லூரிகளில் பல்கலைக் கழக நல்கைக்குழுவின் நிதியுதவியுடனும் மற்றும் 3 அரசு கல்லூரிகளில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடனும் இதுவரையில் மொத்தம் 32 அரசு கல்லூரிகளில் பல்கலைக் கழக நல்கைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தொழில் சார்புடைய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

95—

**மறு கூட்டுதல்**

**வினா எண் 20956—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ப்ளஸ் டூ தேர்வில் பெற்ற மதிப்பெண்ணை மறு கூட்டுதல் செய்யக்கோரி எத்தனை மனுக்கள் வந்தன?

(ஆ) அவை மறு மதிப்பீடு செய்யப்பட்டனவா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) நடந்த மார்ச் 1998 ப்ளஸ் டூ தேர்வில் பெற்ற மதிப்பெண்ணை மறு கூட்டல் கோரி சுமார் 28,000 மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) தற்போது நடைமுறையில் இருந்துவரும் அரசாணையின்படி விடைத்தாட்கள் மறுகூட்டல் மட்டும் செய்யப்பட்டு வருகின்றன. மறு மதிப்பீடு செய்ய விதிகளில் இடமில்லை.

96—

**உரிமையை உத்திரவாதப்படுத்துதல்**

**வினா எண் 20957—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தேர்வுகளில் தாம் பெற்ற மதிப்பெண்களை கேள்வி வாரியாகத் தெரிந்து கொள்கிற உரிமையை உத்திரவாதப்படுத்தும் நடைமுறையை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தேர்வுகளில் தாம் பெற்ற மதிப்பெண்களை கேள்வி வாரியாகத் தெரிந்துகொள்கிற உரிமை தேர்வர்களுக்கு இல்லை.

**97—**

**வாழ்க்கை வரலாறு**

**வினா எண் 21109—திரு. ஜி.கே மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடமாக வைத்து தமிழை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளிகளில் பாடநூல்களில் தற்போது தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கல்லூரிகளில் முதன்மைப்பாடமான தமிழிலும், மொழி இலக்கியப்பாடமான தமிழிலும் பாடமாக வைப்பதற்கு தொடர்புடைய பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றக்குழு மற்றும் பாடத்திட்டக்குழு மட்டுமே (Academic Council and Board of Studies) பாடத் திட்டத்தை மாற்றியமைத்திட பரிசீலித்து உரிய முடிவு எடுக்கவேண்டும். மேலும் தமிழறிஞர்களின் வரலாற்றை கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் (Syllabi/curriculam) சேர்க்கக்கோரி இதுவரை முன் மொழிவு கருத்துரு எதுவும் கல்லூரிக் கல்வித் துறையின் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை.



2000 மே 18]

**98—**

**தமிழ்வழி பாட வகுப்புகள்**

**வினா எண் 21162—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒசூர், தள கெலமங்களம், தேன்கனிக்கோட்டை போன்ற வட்டார தொடக்கப்பள்ளிகளில் தமிழ்வழி பாட வகுப்புகளை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் அல்லது தாய்மொழி பயிற்றுமொழியாக உள்ளது. தெலுங்கு, கன்னடம், உருது மொழியை தாய்மொழியாக கொண்ட சிறுபான்மை மொழியோருக்கான ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தெலுங்கு, கன்னடம், மற்றும் உருதுமொழிக் கல்விக்கு தொடர்ச்சியாக தமிழ் மொழியில் கற்பிக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூடுதலாக தமிழ்மொழியை கற்க விரும்பினால் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**99—**

**உயர்நிலைப் பள்ளி**

**வினா எண் 21361—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, கக்கரைகோட்டையில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கக்கரைகோட்டையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1999-2000 கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

[2000 மே 18

100—

### பகுதி நேர நூலகம்

**வினா எண் 21781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி தாராபுரம் ஊராட்சியில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தாராபுரம் ஊராட்சியில் மக்கள் தொகை 4473. இதன்படி இவ்வூரில் பகுதிநேர நூலகமொன்று திறக்கலாம். எனினும், நிதிப் பற்றாக்குறை காரணமாக மக்கள் தொகை அடிப்படையில் எல்லா இடங்களிலும் பகுதிநேர நூலகம் திறக்க இயலவில்லை. பொதுமக்கள் ஒத்துழைப்புடன் தான் திறக்க இயலும். இவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க இவ்வூர் மக்களிடமிருந்து வேண்டுகோள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, ஊர் மக்கள் வேண்டுகோள் விடுத்து இதற்குரிய நிபந்தனைகளை நிறைவு செய்து தருவார்களேயானால், இவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்.

101—

### ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

**வினா எண் 21813—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் ஒரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போது புதிய கல்வியியல் கல்லூரிகள் தொடங்க தேவையில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ள நிலையில், எடப்பாடியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க வாய்ப்பில்லை.



2000 மே 18]

102—

### கிளை நூல் நிலையம்

**வினா எண் 21821—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சியில் கிளை நூல் நிலையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செட்டிமாங்குறிச்சியின் மக்கள் தொகை 7145. மக்கள் தொகை அடிப்படையில் நூலகம் திறக்க செட்டிமாங்குறிச்சி தகுதி பெற்றுள்ளது. எனினும் நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகள் எதுவும் செட்டிமாங்குறிச்சி கிராம மக்களால் நிறைவு செய்யப்படாததால் அங்கு தற்போது கிளை நூலகம் திறப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

103—

### புதிய பாடப் பிரிவுகள்

**வினா எண் 21938—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி தொடங்கியதிலிருந்து புதிய பாடப் பிரிவுகள் எதையும் அரசு தொடங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் தற்போது கற்பிக்கப்படும் பட்டப்படிப்பு வகுப்புகள் அக்கல்லூரி தொடங்கியது முதல் தொடங்கப்பட்டமையாகும். 1999-2000 பகுதி 2ஆம் திட்டத்தின் கீழ் அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்ய இயலாததால் புதிய பாட வகுப்பு ஏதும் அக்கல்லூரியில் தொடங்கப்படவில்லை.

[2000 மே 18

104—

## தேர்வு மையம்

**வினா எண் 22425—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் கே.ஏ. நாச்சியப்பா அரசு மேல்நிலைப் பள்ளியை +2 அரசு தேர்வுக்கு மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இப்பள்ளி மார்ச்/ஏப்ரல் 1999 முதல் தேர்வு மையமாக தெரிவு செய்யப்பட்டு செயல்பட தொடங்கியுள்ளது.

105—

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

**வினா எண் 22941—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் மேலும் ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

106—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 22942—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, கன்னக்கந்தல் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

107—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 22992—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை எண். 581, கல்வித் துறை, நாள் 14-7-94-இன்படி தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு பசுமை வேலி அமைப்பது சார்பாக வனத்துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பது அரசின் கொள்கையல்ல.

108—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 23100—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பாண்டியன் நகர் தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஒன்றியம், பாண்டியன் நகர் தொடக்கப் பள்ளி அரசாணை (நிலை) எண் 182, பள்ளிக் கல்வி, நாள் 17-6-1999-ல் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.*

**109—**

**நாட்டு நலப் பணித் திட்டம்**

**வினா எண் 23242—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பள்ளிகளில நாட்டு நலப் பணித் திட்டத்தை ஒரு பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்டம் என்பது பாடத் திட்டம் சாரா செயல்களுள் (Extra Curricular Activities) அடங்கும். எனவே, இதனைப் பாடமாக வைக்கும் கேள்வி எழாது.*

**110—**

**கல்லூரிகளில் நாட்டு நலப் பணித் திட்டம்**

**வினா எண் 23242அ—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கல்லூரிகளில் நாட்டு நலப் பணித் திட்டத்தை ஒரு பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*தற்போது தமிழ்நாட்டிலுள்ள ஐந்து பல்கலைக்கழகங்களின் கீழ் உள்ள கல்லூரிகளில் நாட்டு நலப் பணித் திட்டம் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.*



2000 மே 18]

**111—**

**தனித் தகுதி**

**வினா எண் 23246—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பாடம் போதிக்க ஆங்கிலப் பாடத்தில் தனித் தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பாடம் போதிக்க ஆங்கிலப் பாடத்தில் தனித் தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கும் வகையில் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் ஏற்படுத்தும் ஆணைகள் அரசுப் பள்ளிகளுக்கு அரசாணை நிலை எண் 275 பள்ளிக் கல்வி (எம்2) துறை, நாள் 23-7-98-லும், தனியார் பள்ளிகளுக்கு அரசாணை நிலை எண் 285, பள்ளிக் கல்வி (டி.1) துறை, நாள் 1-10-99-லும் வெளியிடப்பட்டுள்ளன.*

**112—**

**பள்ளிக் கட்டணங்கள்**

**வினா எண் 23250—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மிகக் கூடுதலாக பல வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், இத்தகைய கட்டணங்களை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?*

[2000 மே 18

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மிகக் கூடுதலாக பலவகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுவது சார்பாக ஒரு சில பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்படுகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் வசூல் செய்யப்படும் கட்டணங்களை முறைப்படுத்துவது குறித்து மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான குழுக் கூட்டத்தில் தீர்மானித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**113—**

**இந்திய ஆட்சிப்பணி அலுவலர்**

**வினா எண் 23254—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பள்ளிக் கல்வித் துறை, நிர்வாகத்தை மேம்படுத்த உதவியாக அத்துறையின் இயக்குநராக இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பள்ளிக் கல்வி இயக்குநர் பணியிடம் அத்துறையில் பதவி உயர்வு மூலம் கல்வியியலில் பட்டம் பெற்ற தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணியினைச் சார்ந்த அலுவலரைக் கொண்டு நிரப்பப்படவேண்டிய ஒரு சிறப்புப் பணியிடம் என்பதனால் இவ்வினா குறித்து பரிசீலிக்க அவசியம் இல்லை.*

**114—**

**ஆய்வாளர்கள்**

**வினா எண் 23399—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) இவற்றைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் எத்தனை ஆய்வாளர்கள் உள்ளனர்?*

*(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) 1998-99 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளிகள் 1335, மேல்நிலைப் பள்ளிகள் 852.*

*(ஆ) 3 ஆய்வாளர்கள் உள்ளனர்.*

*(இ) இயலாது. இருப்பினும் மேலும் மூன்று ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஆய்வில் உள்ளது.*

**115—**

**மானியம்**

**வினா எண் 23406—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கல்கத்தாவில் உள்ள இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை தமிழக நூலகத் துறைக்கு மானியம் வழங்கியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம். இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை தமிழ்நாடு நூலகத் துறைக்கு இணை மானியமும் இணையில்லா முழு மானியமும் வழங்கி வருகிறது.*

(ஆ) இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் புத்தகம் வாங்குதல், நூலடுக்குகள் வாங்குதல், புத்தறிவுப் பயிற்சி அளித்தல், நூலகக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய திட்டங்களுக்கு இணை மானியத்தின் மூலம் நிதியுதவி வழங்குகின்றது. இணை மானியம் அல்லாத இனமாக சிறுவர் பிரிவு மற்றும் சிறுவர் நூலகத்திற்கு நூல்கள் வாங்கவும் நூலகக் கருத்தரங்கு நடத்தவும் 100% மானியம் வழங்குகிறது.

**116—**

### இட ஒதுக்கீடு

**வினா எண் 23408—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற தொழிற்கல்வியில் என்.சி.சி. மாணவர்களுக்கு கூடுதல் இட ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏதுமில்லை.

**117—**

### மாணவர்கள் படகுப் பயிற்சி

**வினா எண் 23409—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் என்.சி.சி. (N.C.C.) மாணவர்கள் படகுப் பயிற்சி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) என்.சி.சி. மாணவர்கள் தற்போது படகுப் பயிற்சி செய்து வருகிறார்கள்.

**118—**

### விளையாட்டு அரங்கம்

**வினா எண் 23509—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு வேலை தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான பணி இவ்வாண்டு தொடங்க வாய்ப்புள்ளது. இதற்கான ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான கருத்துரு மைய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டால் 75% மானியம் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும்பட்சத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

**119—**

### பள்ளிக்குக் கட்டிடம்

**வினா எண் 23615—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தரும் செயல்பாடு அரசின் நடைமுறையில் இல்லை.

**120—**

### அறிவியல் மனப்பாங்கு

**வினா எண் 23682—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்களிடையே அறிவியல் மனப்பாங்கினை ஊக்குவிக்க ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றமானது, அறிவியல் தொழில் நுட்பங்களை மக்களிடையே பரப்பும் நோக்கத்துடன் அறிவியல் கண்காட்சிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரை, எழுத்து மற்றும் வினாடி வினா போட்டிகள், கணினிப் பயிற்சி, பொது விரிவுரைகள், பணியிடைப் பயிற்சி முகாம்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த, தன்னார்வ அமைப்புகளுக்கும் பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ள தொண்டு நிறுவனங்களுக்கும் கலைக் கல்லூரிகளுக்கும் பாலிடெக்னிக்குகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது. அறிவியல் ஏடுகள் தமிழாக்கம் செய்வதற்கும் உதவி அளிக்கப்படுகிறது. சென்னையில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள காட்சிக் கூடங்கள் மூலமும், இங்குள்ள அறிவியல் பூங்கா, போக்குவரத்துப் பூங்காக்கள் முதலியன மூலமாகவும் அறிவியல் தொழில் நுட்பங்கள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. இங்குள்ள கோளரங்கத்தில், கோள்கள்



மற்றும் விண்ணியல் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அறிவியல் காட்சிகள் கொண்ட நடமாடும் அறிவியல் கண்காட்சி ஊர்தி மூலம் கிராம மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**121—**

### தொழில்நுட்பக் கல்லூரி

**வினா எண் 24541—திரு. மா. இராமசந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்தில் ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**122—**

### கல்லூரிக் கட்டணம்

**வினா எண் 24558—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில், கல்லூரிக் கட்டணத்தை மாணவர்களிடம் இருந்து அரசே நேரடியாக வசூலித்து சுயநிதிக் கல்லூரி நிர்வாகங்களிடம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2000 மே 18

**123—**

### வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம்

**வினா எண் 24575—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

போளூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் கட்ட அரசாணை (நிலை) எண். 355, பள்ளிக் கல்வி, நாள் 22-9-98-ன்படி நிதி ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நிதி பெற ஏற்ற முயற்சி எடுக்கும்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**124—**

### பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 24778—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 மே 18]

**125—**

### தேர்ச்சி சதவிகிதம்

**வினா எண் 25082—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி சதவிகிதம் குறைவாக உள்ள மாவட்டம் எது?

(ஆ) தேர்ச்சியை அதிகரிக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மார்ச் 1998-ல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு தேர்வில் உதகை மாவட்டத்தில் குறைந்த விகிதத்தில் 44.48 சதவிகிதத்தினர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேல்நிலைத் தேர்வில் திருவண்ணாமலை மாவட்டத்தில் குறைந்த விகிதத்தில் 60.11 சதவிகிதத்தினர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

(ஆ) தேர்ச்சி விகிதம் அதிகரிக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. (1) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் தாழ்த்தப்பட்ட/பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக தமிழகமெங்கும் சுமார் 1000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி நாட்களில் பிரத்தியேகமாக மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. (2) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியருக்கு இலவச வகுப்பு நடத்துதல், வழிகாட்டி நூல் மற்றும் மாதிரி வினாத்தாட்கள் அச்சிட்டு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பெற்றோர் ஆசிரியர் கழகமும் மாணவர்களுக்கு உதவி வருகிறது.

**126—**

### புதிய தொடக்கப் பள்ளி

**வினா எண் 25560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் மொட்டாண்டி பாளையத்தில் தொடக்கப் பள்ளி இல்லாததால் அந்தப் பகுதி மாணவ மாணவிகள் அனைவரும் ரயில் பாதையை கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மொட்டாண்டிபாளையத்தில் ஒரு புதிய தொடக்கப்பள்ளியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 கல்வியாண்டில் சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் மொட்டாண்டிபாளையத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.

**127—**

### ஓட்டுநர் பயிற்சி

**வினா எண் 26664—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளியிலேயே ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) அதனால் பயிற்சி பெற்ற இளம் ஓட்டுநர்கள் கிடைக்க வாய்ப்புள்ளதை அரசு கவனத்தில் கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) குறைந்தது 18 வயது நிரம்பியவர்களுக்கே மோட்டார் ஊர்திகள் ஓட்டுவதற்கான உரிமம் வழங்கப்படுவதாலும், பொதுவாக பள்ளி மாணவர்கள் 17 வயதில் மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்சி முடித்து வெளியேறுவதாலும், பள்ளிகளில் ஓட்டுநர் பயிற்சி அளிப்பது போன்ற திட்டம் செயல்படுத்த இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 மே 18]

**128—**

### பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 24779—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் பெண்களுக்கு என தனியாக பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**129—**

### கலைக் கல்லூரி

**வினா எண் 25586—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அரசினர் கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலை காரணமாக தற்போது சேலம் மாவட்டம் எடப்பாடி என்னும் இடத்தில் புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

### பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 26603—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் இவ்வாண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியை உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தில் தற்போது ஒரு அரசு மானியம் பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகமும், எட்டு சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகங்களும் (மொத்தம் 9 பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்) இயங்கி வருகின்றன. புதிய பயிலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**131—**

## பொது நூலகம்

**வினா எண் 25664—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் ஒரு பொது நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் ஏற்கெனவே ஒரு கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 மே 18]

**132—**

## நோட்டுப் புத்தகங்கள்

**வினா எண் 25673—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாட நூல் கழகம் மூலம் வரும் கல்வி ஆண்டில் (1999-2000) பொதுச் சந்தையில் விற்பனை செய்வதற்காக நோட்டுப் புத்தகங்களைத் தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விற்பனைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 14-5-1999 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**133—**

## நாமக்கல் கவிஞரின் கவிதைகள்

**வினா எண் 26588—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் கவிஞரின் கவிதைகளைப் பள்ளிப் பாடமாக இடம் பெறச் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆம். நாமக்கல் கவிஞரின் கவிதைகள் பள்ளிப்பாடத்தில் ஏற்கெனவே இடம் பெற்றுள்ளன.

**134—**

## கூடுதல் கட்டடங்கள்

**வினா எண் 26600—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சேலம் அரசுக் கலைக் கல்லூரிக்குத் தேவையான கூடுதல் கட்டடங்களை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அரசினர் ஆண்கள் கல்லூரியில் ரூ. 61.35 லட்சம் செலவில் கூடுதல் வகுப்பறை கட்டடங்களும், அரசினர் மகளிர் கல்லூரியில் ரூ.205.00 லட்சம் செலவில் மகளிர் விடுதியும், ரூ. 42.00 லட்சம் செலவில் கூடுதல் வகுப்பறை கட்டடங்களும் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

**135—**

**மேல் படிப்புகள்**

**வினா எண் 26601—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக் கல்லூரியில் எம்.ஃபில்., பிஎச்.டி. போன்ற மேல் படிப்புகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-7, அரசு கலைக் கல்லூரியில் மட்டும் 2000-2001 ஆம் கல்வியாண்டில் எம்.ஃபில்., பி.எச்.டி. போன்ற மேல்படிப்புகள் தொடங்க கருத்துரு பெறப்படும்போது பரிசீலிக்கப்படும். சேலம்-8, அரசு மகளிர் கல்லூரி குறித்து கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**136—**

**நூலக இயக்கம்**

**வினா எண் 27513—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

நமது மாநிலத்தில் நூலக இயக்கம் தழைப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

'குறைந்த செலவில் நிறைவான கல்வி' என்ற குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் நூலக இயக்கம் தழைக்க இந்திய நாட்டுக்கே முன்னோடியாக இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சொந்த நூலகக் கட்டடங்கள் கட்டுதல், பெரிய நூலகங்களில் குடிமைப்பணி மையம் ஏற்படுத்துதல், ஒளிப்பட வசதி ஏற்படுத்துதல், தொலைக்காட்சி, விசிஆர். வசதி செய்தல், தரமான புதிய நூல்கள் வாங்குதல், நடமாடும் நூலக வசதி செய்தல் மற்றும் கன்னிமாரா பொது நூலகத்திலும், மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகத்திலும் 'ஜெஸ்னிக் வசதி' வழங்கல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் நூலகச் செயல்பாட்டை மிகவும் பரவலாக்க 625 ஊர்ப்புற நூலகங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுமார் ரூ.2½ கோடி அளவிற்கு நல்ல தரமான நூல்கள் வாங்கப்படுகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து நூலக வரியை வசூலிக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி நிலுவை நூலக வரியை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செலுத்தவும், செலுத்தப்படாத நூலக வரியை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத்திலிருந்து பிடித்தம் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் பெருமளவில் நூலக வரி வசூல் அதிகரித்து வருகிறது.

**137—**

**கிளை நூலகங்கள்**

**வினா எண் 27545—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பகுதிநேர நூலகம் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றை கிளை நூலகங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 35 பகுதி நேர நூலகங்கள் இயங்கி வருகின்றன. 52 கிளை நூலகங்களும் மாவட்ட மைய நூலகம் ஒன்றும் இயங்கி வருகின்றன.

(ஆ) ஒரு கிளை நூலகம் இயங்க வேண்டும் என்றால் ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் அரசு சம்பள விகிதப்படி அனுமதிக்கப்பட வேண்டும். மற்றும் கிளை நூலகத்திற்கென தளவாடங்கள், நூல்கள், நாளிதழ்கள், பருவ வெளியீடுகள் ஆகியவை வழங்கப்படவேண்டும். நிதிப் பற்றாக்குறை காரணமாக இவை அனைத்தும் நூலக ஆணைக் குழுவால் மேற்கொள்வது சிரமமாகும். எனவே, அனைத்து பகுதிநேர நூலகங்களையும் உடனடியாக கிளை நூலகங்களாக மாற்ற இயலாது. எனினும், அரசு மற்றும் நூலக ஆணைக் குழுவின் நிதிநிலை மேம்பாடடையும்போது அதனடிப்படையில் படிப்படியாக பகுதிநேர நூலகங்களை கிளை நூலகங்களாக தரம் உயர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**138—**

### கணினிப் பயிற்சி

**வினா எண் 28169—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளியில் இந்த நிதியாண்டில் கணினிப் பயிற்சி மையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கணினிகள் நிறுவப்பட்டு கணினி மையம் செயற்பட்டு வருகிறது.



**139—**

### கட்டடத்தைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 29406—திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள 'விவேகானந்தர் இல்லம்' கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசாணை என் 89, உயர் கல்வி (டி2) துறை, நாள் 24-2-1997-ல் விவேகானந்தர் இல்லம் ஸ்ரீ இராமகிருஷ்ணா மடத்திற்கு 3 ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டு அவர்களது செலவில் விவேகானந்தர் இல்லத்தை அழகுபடுத்தி அன்னாரின் பொன்மொழிகள், கருத்துரைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகம் அமைத்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) ஸ்ரீ இராமகிருஷ்ணா மடம் இவ்வில்லத்தை அழகுபடுத்தி அருங்காட்சியகம் அமைக்கவிருப்பதால், இல்லத்தின் அழகுபடுத்தும் பணியை அரசு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**140—**

### அஞ்சல் வழிக் கல்வி

**வினா எண் 30159—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பி.எட். பட்டப்படிப்பை அஞ்சல் வழிக் கல்வியாகத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வித் திட்டத்தில் பி.எட். பட்டப்படிப்பை தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.*

**141—**

**மேற்பார்வையாளர்கள்**

**வினா எண் 30160—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாநிலத்தில் பள்ளிசாராக் கல்வித் திட்டத்தில் பணியாற்றிய மேற்பார்வையாளர்கள் நிறுத்தப்பட்டுவிட்டனரா?*

*(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம். 6 பள்ளிசாராக் கல்வி திட்டப் பகுதிகளான சென்னை, கோவில்பட்டி, சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய திட்டப் பகுதிகளில் பணிபுரிந்த மேற்பார்வையாளர்கள் 31-5-1998 அன்றும், திருப்பத்தூர் திட்டப்பகுதி மேற்பார்வையாளர்கள் 31-12-1998 பிற்பகல் அன்றும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.*

*(ஆ) பள்ளிசாராக் கல்வித் திட்டம் 3 ஆண்டுகளுக்கு செயல்படும். 3 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் தற்காலிகமாகப் பணியாற்றிய மேற்பார்வையாளர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.*

**142—**

**பாடநூல்கள்**

**வினா எண் 30193—திரு. ஐ. கணேசன்,** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு ஆரம்பப் பள்ளிகளுக்கான பாடநூல்கள் எங்கு அச்சிடப்படுகின்றன?*



2000 மே 18]

*(ஆ) அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு ஆரம்பப் பள்ளிகளுக்கான நாட்டுடமையாக்கப்பட்ட பாடநூல்கள், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட இடங்களிலுள்ள அச்சகங்கள் மூலம் அச்சிடப்படுகின்றன:*

| | | |
|---|---|---|
| சிவகாசி | - | 40 அச்சகங்கள் |
| சென்னை | - | 42 அச்சகங்கள் |
| திருநெல்வேலி | | 1 அச்சகம் மட்டும் |
| மதுரை | | 3 அச்சகங்கள் |
| கோவில்பட்டி | - | 1 அச்சகம் மட்டும் |
| இராசபாளையம் | - | 1 அச்சகம் மட்டும் |
| குன்னங்குளம் (கேரள மாநிலம்) | — | 1 அச்சகம் மட்டும் |
| பெங்களூர் | — | 1 அச்சகம் மட்டும் |
| மொத்தம் | - | 90 அச்சகங்கள் |

*(ஆ) அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.*

*கீழ்க்கண்ட தலைப்புகளில் 1999-2000ஆம் கல்வியாண்டிற்கு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.*

| வகுப்பு | தலைப்பு | பிரதிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| I | 3 | 36,02,000 |
| II | 3 | 34,55,000 |
| III | 5 | 54,49,000 |
| IV | 5 | 55,44,000 |
| V | 5 | 63,96,000 |
| | 21 | 2,44,46,000 |

**143—**

### கல்வித் தரம்

**வினா எண் 30226—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வி பெற்றோர் வரிசையில் தமிழ்நாடு எந்த இடத்தில் இருக்கிறது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1991-ல் எடுக்கப்பட்ட மக்கட்தொகை கணக்குப்படி கல்வி பெற்றோர் இடத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

**144—**

### உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 30383—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், இராமானுஜம் புதூர் பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 186, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18-6-1999-ல் 1999-2000 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், இராமானுஜம் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.



**145—**

### கலைக் கல்லூரி

**வினா எண் 30385—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் வசம் இல்லை. எனினும் நிதியுதவி பெறாத தனியார் கல்லூரி தொடங்க விண்ணப்பம் பெறப்பட்டு ஆய்வில் உள்ளது.

**146—**

### மாவட்ட நூலகம்

**வினா எண் 30402—திரு. ஜி. நிஜாமுதீன்,** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் மாவட்ட நூலகம் அமைக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் என மூன்றாகப் பிரிக்கப்பட்டபின் நாகப்பட்டினத்தில் கிளை நூலகமாக செயல்பட்டு வந்த நூலகம் 14-10-1996 முதல் நாகப்பட்டினம் மாவட்ட மைய நூலகமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2000 மே 18

**147—**

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 30478—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வோர் ஊராட்சி தலைமையிடத்திலும் நூலகம் அமைக்கும் சிறப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**148—**

**கலையரங்கம்**

**வினா எண் 30658—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரியில் கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலையைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் ஆவன செய்யப்படும்.

**149—**

**உயர்நிலைப் பள்ளி**

**வினா எண் 31501—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் பெண்கள் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி செந்துறை இருபாலர் பயிலும் அரசினர் மேல்நிலைப் பள்ளி அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆக 1999-2000 கல்வியாண்டில் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**150—**

**வளர் கல்வித் திட்டம்**

**வினா எண் 31713—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் வளர் கல்வித் திட்டம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். ஈரோடு மாவட்டம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் வளர் கல்வித் திட்டம் தொடங்குவதற்கு கருத்துருக்கள் மாநில அரசு மூலம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் வளர் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**151—**

**பணிகள் சீராய்வு**

**வினா எண் 31714—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களின் பணிகள் சீராய்வு செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) பள்ளிக் கல்வி இயக்குநரால் ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்தின் முதன்மைக் கல்வி அலுவலர்களின் பணி விவரப் பட்டியல் சீராய்வு செய்யப்பட்டு அதன் அறிக்கை முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. குறைபாடுகள் சீராய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுவிட்டனவா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்படுகின்றது. மாவட்டக் கல்வி அலுவலர்களின் பணியும் இவ்வாறே முதன்மைக் கல்வி அலுவலர்களால் சீராய்வு செய்யப்படுகின்றது.

**152—**

### பள்ளியில் கணினி பாடம்

**வினா எண் 32486—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு எத்தனை அரசு மேல்நிலைப் பள்ளியில் கணினி பாடம் கற்பிக்கப்படுகிறது?

(ஆ) இன்னும் எவ்வளவு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடம் கற்பிக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடம் கற்பிக்கப்படுகிறது. 2000-2001-ம் கல்வி ஆண்டில் மீதமுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில்



2000 மே 18]

கணினி அறிவியல் பாடம் கற்பிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**153—**

### ஆட்சி மன்றக் குழு

**வினா எண் 32870—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் சுரங்கப் பொறியியல் பட்டப்படிப்பு தொடங்குவதற்கு பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு முன்மொழிவுகள் அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**154—**

### நூல் நிலையம்

**வினா எண் 32872—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் நகரில் நூல் நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் ஓமலூரில் கிளை நூலகம் ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே நூலகம் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மே 18

155—

### பொறுப்பாளர்கள் தேர்வு

**வினா எண் 34436—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பாளர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றனர்?*

*(ஆ) அவர்களின் நடவடிக்கைகளை முறைப்படுத்திக் கண்காணிக்கும் துறை எது?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர், துணைத் தலைவர், பொருளாளர், 2 இணைச் செயலாளர்கள் ஆகியோர் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். செயலர் பதவி மட்டும் அந்தந்த பள்ளியினுடைய தலைமையாசிரியரே செயலராக பதவி வழியில் செயல்படுகிறார்.*

*(ஆ) கண்காணிக்கும் பொறுப்பு கல்வித் துறையைச் சேர்ந்தது.*

156—

### பட்டா பாஸ் புத்தகங்கள்

**வினா எண் 6777—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் பட்டா பாஸ் புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முழுமையாக வழங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் பட்டா பாஸ் புத்தக திட்டப் பணி சம்பந்தமாக மொத்தம் 2,68,564 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு 2,68,564 பட்டா பாஸ்புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டு அவை அனைத்தும் சம்பந்தப்பட்ட பட்டாதார்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.*



2000 மே 18]

157—

### குடியிருப்புகளுக்குப் பட்டா

**வினா எண் 8150—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாநகரில் நெடுஞ்சாலை அலுவலகத்திற்கு அருகில் உள்ள 180 குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கு வட்டம், புலியங்குளம் கிராமம் நகர அளவை எண் 1326/1-ல் உள்ள ஆக்கிரமணதாரர்களுக்கு தகுதியின் அடிப்படையில் நிலக்கிரயம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்தமைக்காக ஒவ்வொருவரிடமிருந்தும் மனையின் அளவிற்கேற்ப அபராதத் தொகை வசூலித்து வீட்டுமனை ஒப்படை செய்ய ஆணைகள் இடப்பட்டன. அத்தொகையை செலுத்தாமையால் வீட்டுமனைகள் வழங்கப்படவில்லை.*

158—

### பாம்புக்கடி மருத்துவ சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 9738—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் மற்றும் எரியோடு அரசு மருத்துவமனைகளில் பாம்புக்கடிக்கான மருத்துவ சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் அரசு மருத்துவமனை மற்றும் எரியோடு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் பாம்புக்கடிக்கென 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவ சிகிச்சைப் பிரிவு இல்லை. இவற்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**159—**

### இறால் பண்ணைகள்

**வினா எண் 10093—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் இறால் பண்ணைகள் அரசின் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புறம்போக்கு இடத்திலிருந்து இறால் பண்ணையை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில் பட்டா நிலங்களில் நடுவில் உள்ள அரசின் புறம்போக்கு இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து தனியார்களால் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆக்ரமணங்களை அகற்ற சீர்காழி வட்டாட்சியர் முறைப்படி நடவடிக்கை எடுக்க முற்படுகையில் இறால் பண்ணை உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடையாணை பெற்றுள்ளார்கள். தடையாணையை நீக்கிட அரசுத் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளது. உயர்நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



2000 மே 18]

**160—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 11108—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த ஊட்டமலையில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் 30 ஆண்டு காலமாக விவசாயம் செய்து வரும் நிலத்திற்குப் பட்டா வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த ஊட்டமலையில் நிலக் குடியேற்ற கூட்டுறவுச் சங்கம் 1940 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. அச்சங்க உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ஊட்டமலை கிராமத்தில் 63.225 ஹெக்டேர் நிலங்கள் அச்சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது. நிலக்குடியேற்ற கூட்டுறவுச் சங்கம் 1996 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்டதால் அச்சங்கத்தின் துணைப் பதிவாளர் 29-12-1998-இல் வழங்கியுள்ள தடையில்லாச் சான்று அடிப்படையில், பெண்ணாகரம் வட்டாட்சியரால் 97 நபர்களுக்கு அடமானம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பட்டா வழங்கப்பட்டது.

**161—**

### பட்டா

**வினா எண் 12008—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் காலேஜ் ரோட்டிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு இன்னும பட்டா வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் புல எண்கள் 138/4 மற்றும் 347/5 இல் உள்ள ஆக்கிரமிப்புகளில் 1.5 சென்ட்டுக்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் முறைப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுவிட்டன. அதற்குமேல் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது பற்றி மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது. புல எண் 468/6 இல் வீட்டுமனைப் பட்டா வழங்குவது மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது.

**162—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 15955—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம், தொட்டிப்பாளையம் கிராமம், க.ச.138/4, 347/5, 368/6-ல் குடியிருக்கும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க காலதாமதம் ஏன்?

(ஆ) எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புல எண்கள் 138/4 மற்றும் 347/5 இல் உள்ள ஆக்கிரமிப்புகளில் 1.5 சென்ட்டுக்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் முறைப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுவிட்டன. அதற்குமேல் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது பற்றி மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது. புல எண் 368 என்பது முழுப்புலம் ஆகும். 368/6 என்ற உட்பிரிவு எதுவும் இல்லை. ஆயினும் புல எண் 468/6 இல் வீட்டுமனைப் பட்டா வழங்குவது மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது.



**163—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 17559—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை கிராமத்தில் 55 ஆதி திராவிடர்களுக்கு 1986 ஆம் ஆண்டு சர்வே எண் 268, 269, 272 இன் கீழ் 28 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு கிராம கணக்கு 'அ' பதிவேட்டில் பதிவு செய்யப்படாததால் பட்டா வழங்கப்படவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிலப் பட்டா வழங்க அரசு முனவருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை கிராமம், புல எண் 268, 269,272, 273 மற்றும் 276 இல் 14.18.5 ஹெக்டேர் நிலம் 56 ஆதிதிராவிடர்களுக்கு ஒப்படை வழங்கப்பட்டு கிராம கணக்கு 'அ' பதிவேட்டில் மாற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**164—**

### தீர்வை வசூல்

**வினா எண் 18534—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விவசாயம் செய்யப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சாகுபடியாளர்களிடமிருந்து அதற்குரிய தீர்வை வசூலிக்க சிற்றூராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலப்பரப்புகளில் ஆக்கிரமணம் செய்யப்பட்டு விவசாயம் செய்யப்படும் இடத்தில் வருவாய்த் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்குரிய தீர்வையினை சிற்றூராட்சிகள் வசூலிக்க சட்டத்தில் வழிவகைகள் இல்லை. வருவாய்த் துறை மூலம்தான் தீர்வை வசூலிக்கப்பட வேண்டும்.*

**165—**

## மனைப் பட்டா

**வினா எண் 19535—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களை நத்தம் புறம்போக்காக மாற்றி அங்கு குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் உள்ள கும்மூடிமூலை கிராமம், ரி.ச.எண். 1 புத்தேரி புறம்போக்கு நிலம் வெள்ளக் காலங்களில் கும்மூடிமூலை ஏரியின் கரைக்கு பலப்படுத்த மண் எடுக்க வாய்ப்புள்ளதால் நிலத்தின் வகைபாட்டினை மாற்ற தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை இசைவளிக்கவில்லை. ஆயினும் இது குறித்து அவர் மறு ஆய்வு செய்யுமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரால் கேட்டுக் கொள்ளப்பட்டார். தலைமைப் பொறியாளரின் கருத்திசைவு பெற்ற பின்னர் நத்தமாக வகைமாற்றம் செய்த பின்னர் மனைப் பட்டா வழங்கப்படும்.*



**166—**

## காலிப் பணியிடங்கள்

**வினா எண் 20108—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் காலியாகவுள்ள கிராம நிர்வாக அலுவலர் இடங்கள் எத்தனை?*

*(ஆ) இந்த நிதியாண்டில் காலி பணியிடங்களுக்கு நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் இன்றைய நிலையில் 274 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.*

*(ஆ) இந்த நிதியாண்டில் காலி பணியிடங்களில் கிராம நிர்வாக அலுவலர்களை நியமிக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

**167—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 22672—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, முருகம்பாளையம் சுடுகாட்டை சிலர் ஆக்கிரமித்து வருவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆக்கிரமிப்புகள் 17-2-1999 அன்று அகற்றப்பட்டன.*

[2000 மே 18

168—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 22673—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், தொட்டிப்பாளையம் ஊராட்சி, முத்தையா நகர் க.ச.295/எ-இல் குடியிருப்போருக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர், தொட்டிப்பாளையம் ஊராட்சி, முத்தையா நகர், க.ச.295/எ-இல் குடியிருப்போருக்கு, தகுதியுடையவர்க்கு வீட்டுமனை வழங்க ஏதுவாக வகைபாட்டினைப் பாதை கல்லாங்குத்து புறம்போக்கு என்பதை நத்தம் என மாற்ற நடவடிக்கை மாவட்ட அளவில் நடைபெற்று வருகிறது.

169—

**வீட்டுமனைப் பட்டாக்கள்**

**வினா எண் 22779—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டத்தில், ஏரிப்புறம்போக்கு இடங்களில் நீர்ப்பிடிப்பற்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பெரும்புதூர் வட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதிகளில் ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்கள் முறைப்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்த நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.



2000 மே 18]

இந்த ஆண்டு இவ்வட்டத்தில் 29 கிராமங்களில் மொத்தம் 1347 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

170—

**வீட்டுமனையிடம்**

**வினா எண் 23705—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காவுத்தம்பாளையம் ஊராட்சியில் 'வள்ளுவன்' சாதிப்பிரிவு மக்கள் வீட்டுமனையிடம் கேட்டு விண்ணப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காவுந்தம்பாளையம் கிராமம், கிழக்கு தச்சாம்பாளையம் கிராமம், வள்ளுவன் இனத்தைச் சேர்ந்த 12 நபர்கள் வீட்டுமனைகள் கேட்டு விண்ணப்பித்திருந்தனர். அவர்களுடைய கோரிக்கை மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வெள்ளிரவெளி கிராமத்தில் 27-1-99 அன்று நடத்தப்பட்ட மனுநீதி நாள் கூட்டத்தில் பெருந்துறை வட்டம், காவுத்தம்பாளையம் கிராமத்தில் கிராம நத்தம் புறம்போக்கு நிலத்தில் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

171—

**தனி வட்டம்**

**வினா எண் 24079—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் பெரிய வட்டமாக இருப்பதால் அதைப்பிரித்து முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**172—**

**கோயில்கள் கட்டுதல்**

**வினா எண் 24303—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நடைபாதைகளையும் புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்து கோயில்கள் கட்டும் போக்கு அதிகரித்து வருவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடைபாதைகளிலும், புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமித்து கோயில் கட்டுவது தற்போது பொதுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. பொது இடங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமணம் எவ்வகையில் இருந்தாலும், பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது ஆட்சேபணை உள்ள இடங்களில் இருந்தாலோ அவ்வப்போது ஆக்கிரமணம் அகற்றப்பட்டு வருகிறது.

**173—**

**பொட்டிப்புரம் ஊராட்சி**

**வினா எண் 24810—திரு. அ. சுடலைமுத்து:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) போடி தொகுதி, சங்கராபுரம் ஊராட்சி, பொட்டிப்புரம் ஊராட்சியை போடி தாலுகாவுடன் இணைக்க அரசு முன்வருமா?*



2000 மே 18]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**174—**

**வட்டத்துடன் இணைப்பு**

**வினா எண் 26042—திரு. லி. அய்யலுசாமி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், இளையரசனேந்தல் பிர்க்காவை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**175—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 26578—திரு. கே. மனோகரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி தொகுதிக்குட்பட்ட புழுதிக்கரை, சவுளூர் (புழுதிக்கரை ஊராட்சி), டி. துரிஞ்சிப்பட்டி (கொண்டம்பட்டி ஊராட்சி), சவுளுப்பட்டி (சோகத்தூர் ஊராட்சி), கிருஷ்ணாபுரம் (கிருஷ்ணாபுரம் ஊராட்சி), எம்.ஜி.ஆர். நகர், குமாரசாமிப்பேட்டை, நர்சய்யர்குளம் (தருமபுரி) ஆகிய இடங்களில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போர்க்கும், வீடற்றவர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதிக்குட்பட்ட புழுதிக்கரை, சவுளூர், டி. துரிஞ்சிப்பட்டி, சவுளுப்பட்டி, கிருஷ்ணாபுரம், எம்.ஜி.ஆர். நகர், குமாரசாமிப்பேட்டை, நர்சய்யர்குளம் ஆகிய இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டிக் குடியிருப்பவர்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து, நிலத்தின் வகைப்பாடு, ஆக்கிரமிப்புத் தன்மை, ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்பொருட்டு தணிக்கையும் விசாரணையும் மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களின் தகுதியின் அடிப்படையில் விதிமுறைகளை அனுசரித்து வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து மாவட்ட அளவில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**176—**

**வருவாய் வட்டம்**

**வினா எண் 27197—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நிர்வாக வசதிக்காக பெரிய வருவாய் வட்டமாகிய மயிலாடுதுறை அதிகார எல்லையில் உள்ள குத்தாலம் ஒன்றியத்தைச் சேர்ந்த 45 ஊராட்சிகளையும் தரங்கம்பாடி வட்ட அதிகார எல்லையில் உள்ள குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 7 ஊராட்சிகளையும், மயிலாடுதுறை ஒன்றிய அதிகார எல்லையில் உள்ள முருகமங்கலம் ஊராட்சியையும் இணைத்து குத்தாலத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய் வட்டம் (Revenue Taluk) அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.





**177—**

**தனி வருவாய் கிராமம்**

**வினா எண் 27213—திரு. பி. இராசமாணிக்கம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒரத்தநாடு தொகுதி, நல்லிக்கோட்டை கிராமத்தை (திருவாரூர் மாவட்டம்) தனி வருவாய் கிராமமாகப் பிரிக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**178—**

**புதிய வட்டம்**

**வினா எண் 27229—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து ராயக்கோட்டையைத் தலைமையிடமாக்கிப் புதிய வட்டம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**179—**

**வருவாய் கிராமத்தைப் பிரித்தல்**

**வினா எண் 27293—திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

(அ) ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வெள்ளக்கோவில் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**180—**

**தனி பிர்க்கா**

**வினா எண் 27294—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வெள்ளக்கோவில் வருவாய் பிர்க்காவை பிரித்து முத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தனி பிர்க்கா (உள்வட்டம்) உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**181—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 27319—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள காமராஜ் நகர் குடியிருப்புகளுக்கு இருபது ஆண்டுகளாகியும் வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி கிராமம், காமராஜ் நகரில் பல சமூகங்களைச் சேர்ந்த அரசுப் பணியில் இருப்போர் மற்றும் பண வசதி படைத்த பொதுமக்கள் புல எண் 36/1, 36/2 என்ற தரிசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கின்றனர். அப்புலங்கள் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளன. தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், வசதி படைத்தவர்கள் என்பதாலும் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**182—**

**தனி வட்டம்**

**வினா எண் 27400—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் நகரம் மற்றும் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை இணைத்து தனி வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2000 மே 18

183—

## உயர் மட்டக் குழு

**வினா எண் 27406—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ள நிவாரண பணிகள் ஊழலற்ற முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க 'உயர் மட்டக் குழு' அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதில் சர்வகட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

184—

## வறட்சி பாதித்த பகுதி

**வினா எண் 27693—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1998-99 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டு, அரசால் வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் எத்தனை?

(ஆ) அதன் விபரம் பற்றி அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் தமிழகத்தில் போதுமான மழை பெய்துள்ளதால் எந்தப் பகுதியினையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கும் அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2000 மே 18]

185—

## வட்டத்தின் எண்ணிக்கையை உயர்த்துதல்

**வினா எண் 27946—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாவட்டத்தில் உள்ள வட்டத்தின் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

186—

## தனி வட்டமாக்குதல்

**வினா எண் 27975—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியத்தில் உள்ள கொளக்காநத்தம் பிர்க்காவையும் செட்டிகுளம் பிர்க்காவையும் இணைத்து தனி வட்டமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

187—

### ஏழைகளுக்கு வீட்டுமனை

**வினா எண் 27988—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெட்டையன் கிணறு கிராமத்தில் 28 நிலமற்ற ஏழைகள் வீட்டுமனையிடம் கேட்டு அரசுக்கு விண்ணப்பித்துள்ளார்களா?*

*(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பெருந்துறை வட்டம், வெட்டையன்கிணறு கிராமத்தில் வீட்டுமனை வழங்க தகுந்த புறம்போக்கு நிலங்கள் இல்லை. வீட்டுமனைகள் வழங்க ஏதுவாக நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

188—

### வீட்டுமனை

**வினா எண் 27989—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை கிராமம், தாளக்கரைப்புதூர் பொதுமக்கள் வீட்டுமனையிடம் கேட்டு அரசுக்கு விண்ணப்பித்துள்ளார்களா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*



விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை கிராமம், தாளக்கரைப்புதூரைச் சேர்ந்த 47 பேர்கள் 1985-இல் வீட்டுமனை கோரி விண்ணப்பித்தனர். அவர்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுவிட்டன. கடந்த 15 ஆண்டுகளில் வீட்டுமனை கோரி விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை.*

189—

### புதிய பிர்க்கா

**வினா எண் 28059—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் புதிய பிர்க்கா அலுவலகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

190—

### இழப்பீடு

**வினா எண் 28494—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விபத்துக்களில் இறந்தவர்களுக்கும், பாம்புக்கடி போன்றவற்றால் இறப்பவர்களுக்கும் அளிக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டை இரு மடங்காக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

[2000 மே 18

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**191—**

### பொது மக்களுக்கு பட்டா

**வினா எண் 28595—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் பெரிச்சிபாளையம் காலனி எஸ்.எப்.நெ.736/1எ1 பட்டுக்கோட்டையார் நகர் பொது மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், நல்லூர் கிராமத்தில் பட்டுக்கோட்டையார் நகர் என அழைக்கப்படும் இடத்தில், நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட புல எண் 736/1எ1-இல் உள்ள 3.18 ஏக்கர் உபரி நிலங்களை பொது நோக்கு கருதி வருவாய்த் துறைக்கு ஒதுக்கீடு செய்து, மேலும், மேற்படி நிலங்களை மனைகளாகப் பிரித்து ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலக்கிரயம் வசூலித்தபின்னர் ஒப்படை செய்யலாமென அரசு ஆணை (நிலை) எண் 245, வருவாய், நாள் 18-5-1999-இல் உத்தரவிட்டுள்ளது. அதன்படி ஆக்கிரமிப்புதாரர்களிடம் நிலக்கிரயத்தை வசூலிக்கவும், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவும், கோவை மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2000 மே 18]

**192—**

### குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை

**வினா எண் 28600—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் 15 வேலம்பாளையம் பேரூராட்சி, ஜீவா நகரில் எஸ்.எப்.நெ.555, புறம்போக்கில் குடியிருப்பவர்கள் வீட்டுமனை கோரி மனு செய்துள்ளனரா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், வேலம்பாளையம் கிராமம், க.ச.555, மேய்ச்சல் புறம்போக்கு நடைபாதை என்று வகைபாடு கொண்டுள்ள நிலத்தில் 63 குடும்பங்கள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர். ஆக்ரமணதாரர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க ஏதுவாக புலத்தின் வகைபாட்டினை நத்தமாக மாற்றுவது பற்றி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரிடமிருந்து அறிக்கை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**193—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 28601—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அவினாசி சீனிவாசபுரம் க.ச. எண்கள் 80, 81-ல் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் கோரிக்கை அரசிற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி வட்டம், க.ச. 80 மற்றும் 81 சாளைகள் பனந்தோப்பு, நந்தவனம், வண்டிபாதை, புஞ்சைபூமி, பட்டா நிலம் ஆகிய வகைபாடுகளை கொண்டுள்ளன. இப்புலங்கள் நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்குத் தேவைப்படும் எனக் கருதி தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்புலங்கள் நீர்வழித் தடமாக உள்ளன. என்வே அங்கு குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**194—**

**வீட்டுமனைகள்**

**வினா எண் 28671—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், வட்டுவனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் நிலப் பட்டா, வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், வட்டுவனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட நாகனம்பட்டி, பவளத்தூர் கிராமங்களில் 3.74.0 ஹெக்டேர் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது. அவர்கள் விவசாயம் செய்யும் நிலங்களிலேயே குடியிருந்து வருவதால் தனியாக வீட்டுமனைப் பட்டா தேவையில்லை. மேலும் 20.94.5 ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்து வருபவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



**195—**

**ஆக்கிரமிப்பு**

**வினா எண் 29112—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் முருகம்பாளையம் ஊராட்சி, அண்ணாநகர் பேருந்து நிற்கும் இடத்தில் ஒரு சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அரசிற்கு புகார் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 25-8-1999 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன.*

**196—**

**குடியிருப்பு மனைப்பட்டா**

**வினா எண் 29123—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பல்லடம் வட்டம், இராயபாளையம் செங்குட்டைப் பகுதி க.ச. 499-லுள்ள குட்டைப் புறம்போக்கை நத்தமாக மாற்றி குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*பல்லடம் வட்டம், இராயபாளையம் செங்குட்டைப் பகுதி புல எண் 499 குட்டைப் புறம்போக்கு என்ற ஆட்சேபகரமான புறம்போக்கு. நீர்நிலைப் புறம்போக்கில் ஒப்படை வழங்க தடை உள்ளது. மேலும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் என்பதால் குடியிருக்க தகுதியற்ற இடம். இதை நத்தமாக மாற்றி குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

[2000 மே 18

197—

## தனி வருவாய் கிராமம்

**வினா எண் 29536—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்திலுள்ள நல்லூர் பெரிய பஞ்சாயத்திலிருந்து அதன் இணை ஊரான கொண்டையாங் குப்பத்தை தனி வருவாய் கிராமமாக செயல்படுத்தும் செயற்குறிப்பு நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

198—

## அதிகார வரம்பை உயர்த்துதல்

**வினா எண் 29564—திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மக்களுக்கு கிரயம் இல்லாமல் பட்டா வழங்கும் அதிகார வரம்பை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 60, வருவாய்த் துறை, நாள் 6-2-1999-இல் அரசு நிலங்கள் மற்றும் வீட்டுமனைகள் ஒப்படை செய்வதற்கு வருவாய் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பு தற்போது கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது:—



2000 மே 18]

| | | |
|---|---|---|
| வட்டாட்சியர் | - | ரூ. 10,000/- வரை |
| வருவாய் கோட்ட அலுவலர் | - | ரூ. 20,000/- வரை |
| மாவட்ட வருவாய் அலுவலர் | - | ரூ. 50,000/- வரை |
| மாவட்ட ஆட்சியர் | - | ரூ. 2,00,000/- வரை |
| சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் | - | ரூ. 2,50,000/- வரை |

மேற்சொன்ன அதிகார ஒப்படைப்பின்படி வருவாய் அலுவலர்களால் இலவசப் பட்டா வழங்கப்படும்.

199—

## தீர்ப்பாணை

**வினா எண் 29578—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு தகுதி பெற்றவர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் பணிக்கான தீர்ப்பாணை பெற்ற பின்னும் பணி வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு தகுதி பெற்றவர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் பணிக்கான தீர்ப்பினை பெற்ற பின்னரும் பணி வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியும்.

(ஆ) தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு தீர்ப்பாணை பெற்றவர்களைவிட, விதிமுறைகளின்படி கிராம நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு தகுதியுடைய முன்னாள் கிராம அலுவலர்கள் பலர் காத்துக் கொண்டிருப்பதால் முதுநிலை அடிப்படையில் வரிசைக் கிரமமாக கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகிறது. தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு

[2000 மே 18

அவர்களது பணி முதுநிலை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் வழங்க ஏற்கெனவே அரசால் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**200—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 29598—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகர் காமாட்சியம்மன்பேட்டை, ஆண்டியப்பன் தெருவில் வாழ்ந்துவரும் 20 குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் மற்றும் நகரம், காமாட்சியம்மன்பேட்டை, ஆண்டியப்பன் தெருவில் புல எண் 65-இல் "கசக்கால்வாய்" என்ற புறம்போக்கு நிலத்தில் 20 குடும்பங்கள் ஆக்கிரமிததுள்ளனர். நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்ய தடை உள்ளதால் இவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

## (இருபத்திரண்டாம் பட்டியல்)

**1—**

**மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 3841—திரு. ஆர்.ஆர். சேகரன் மற்றும் திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குப்பை முதலான கழிவுப் பொருள்களை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?



2000 மே 18]

(ஆ) சேலம் மாநகராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

(இ) ஆம் எனில், அதன் மூலம் எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வெவ்வேறு முறைகளின் அடிப்படையில் ஒரு மெகாவாட் மின்சாரம் தயாரிக்க ரூ. 4 கோடி முதல் ரூ. 6 கோடி வரைக்கும் ஆகும்.

(ஆ) ஆம்.

(இ) 2 முதல் 2½ மெகாவாட் மின்சாரம்.

**2—**

**மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா எண் 7247—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் வெளிநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க கட்டட வசதியும், ஆய்வுக்கூடம் மற்றும் மருந்துக் கிடங்கு ஆகியவை கட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டில் அதைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் வெளிநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க புறநோயாளிகள் பகுதி உள்ளது. ஆய்வுக்கூடம் மற்றும் மருந்துக் கிடங்கு கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2000 மே 18

3—

### வெறிநாய்க் கடிக்கு சிகிச்சை

**வினா எண் 7570—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெறிநாய் கடிக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் அதிகரித்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. வெறிநாய் கடியினால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கணிசமாகக் குறைந்து வருகிறது.

(ஆ) வெறிநாய் கடியினால் ஏற்படும் இறப்பினை கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் மக்கள் பலியாகாமல் தடுக்கும் நடவடிக்கையாக தெரு நாய்களை அழித்தல் உள்ளாட்சிகளின் சட்டபூர்வமான கடமையாகும். தடுப்பூசி வசதி அனைத்து மருத்துவமனையிலும் உள்ளது. நாய் மற்றும் விலங்குகளுடன் உள்ள பரிவர்த்தனம் குறித்த சுகாதார கல்வி அளிக்கப்பட்டு, வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டு, தெரு நாய்களுடன் பழகாமல் தடுத்து, நாய்களுக்கு நோய் வரும்போது, உடனுக்குடன் மருத்துவ கவனிப்பு மேற்கொள்ள மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

4—

### வெளி நோயாளிகள் பிரிவு

**வினா எண் 7907—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையில் “வெளி நோயாளிகள்” பிரிவு மீண்டும் ஏற்படுத்தப்படுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே, ஒரு புறநோயாளிகள் பிரிவு இயங்கி வருவதால், மற்றொரு புறநோயாளிகள் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

### துணை சுகாதார நிலையம்

**வினா எண் 8085—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியம், காட்டுசிவாரி கிராமத்தில் இயங்காமல் இருக்கின்ற துணை சுகாதார நிலையத்தை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியம், மன்னம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த காட்டுசிவாரி துணை சுகாதார நிலையம் 1-6-1996 முதல் பழுதுபட்டிருந்தது. மேற்படி காலத்தில் கிராம சுகாதார செவிலியர் மேற்படி சுகாதார நிலையத்திற்குட்பட்ட புதூர் கிராமத்தில் தங்கி பணிபுரிந்து வந்தார். தற்பொழுது காட்டுசிவாரி துணை சுகாதார நிலையத்தின் அனைத்து பழுதுகளும் பொதுப் பணித் துறையினரால் சரிசெய்யப்பட்டு கிராம சுகாதார செவிலியர் 1-2-1999 முதல் இத்துணை சுகாதார நிலையத்தில் தங்கி பணியாற்றி வருகிறார்.

[2000 மே 18

6—

### அத்தியாவசிய மருந்துகள்

**வினா எண் 8353—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் மற்றும் திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உயிர் காக்கும் மருந்துகள், மகப்பேற்றிற்குத் தேவையான அத்தியாவசியமான மருந்துகள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், எப்போதும் இருப்பில் வைத்திருக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசியமான 55 வகை உயிர் காக்கும் மருந்துகள் பட்டியலிடப்பட்டு எப்போதும் தேவையான அளவு இருப்பில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.*

7—

### சலுகை விலையில் மருந்துகள்

**வினா எண் 11137—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிறுநீரகம், இருதயம், நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவர்களுக்கு சலுகை விலையில் சைக்ளோஸ்போரின் மருந்தை வழங்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*சிறுநீரகம், இருதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவர்களுக்கு சலுகை விலையில் சைக்ளோஸ்போரின் மருந்து வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



2000 மே 18]

8—

### மருத்துவமனை விரிவாக்கம்

**வினா எண் 13100—திரு. இரா. மணிமாறன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை, மது அடிமை புனர்வாழ்வு சிகிச்சை, குழந்தைகள் அறுவை சிகிச்சை மற்றும் ஒட்டு அறுவை சிகிச்சை ஆகிய பிரிவுகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

9—

### மாவட்ட தலைமை மருத்துவமனை

**வினா எண் 13313—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட வட்ட மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்ட தலைமை மருத்துவமனையாக, உசிலம்பட்டி மருத்துவமனை செயல்பட்டு வருவதால், திருமங்கலம் அரசு மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் அவசியம் எழவில்லை.

**10—**

**ஸ்கேன் வசதி**

**வினா எண் 14268—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதியிலுள்ள மாவட்ட மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் (C.T.Scan) வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் தொகுதியிலுள்ள மாவட்ட மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்து தருவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**11—**

**மருத்துவமனை**

**வினா எண் 14375—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1932-ல் அமைக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் நகரில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, கண்ணதாசன் நகரில் அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**12—**

**அறுவை சிகிச்சை வசதி**

**வினா எண் 14521—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை, மாற்று சிறுநீரகம் பொருத்தும் வசதிகள் செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வேலூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை, மாற்று சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை வசதிகள் செய்து தரும் திட்டம் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**13—**

**அவசர ஊர்தி**

**வினா எண் 14872—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்) வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**14—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 14881—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

5 இலட்சம் மக்கள்தொகை உள்ள தாமஸ்மலை ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமே உள்ளதால் மேலும் அங்கு 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், புனித தாமஸ்மலை ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள், காவல் துறை, இராணுவம் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்படுகின்றன. இவ்வொன்றியப் பகுதி சென்னை மாநகரத்தின் புறநகர்ப் பகுதி என்பதால் பெரும்பாலான மக்கள் சென்னை மாநகரில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு உயர்தர சிகிச்சை பெறுவதற்கு செல்கின்றனர்.

தற்போது ஒன்று அல்லது இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் ஒன்றியங்களில் மட்டுமே முன்னுரிமையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டின் மொத்த கிராமிய மற்றும் மலைவாழ் பழங்குடியினரின் மக்கள்தொகைக்கேற்ப தேவையான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், புனித தாமஸ்மலை ஒன்றியத்தில் தற்போது கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.



**15—**

## மகப்பேறு மருத்துவமனை

**வினா எண் 14890—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் கிராமம் பாச்சாலியூரில் ஒரு மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் பாச்சாலியூர் கிராமம் உள்ளது. பாச்சாலியூர் கிராம மக்கள் தொகை 918 ஆகும். பாச்சாலியூர் கிராமம் கொரனாம்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய கிராமம் ஆகும். கொரனாம்பட்டி துணை சுகாதார நிலையத்தால், பாச்சாலியூர் கிராம மக்கள் உட்பட 5239 மக்கள் தடுப்பூசி, தாய்சேய் நலம் மற்றும் மருத்துவ வசதிகள் பெறுகின்றனர். ஆகவே, தனியாக பாச்சாலியூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**16—**

## மகப்பேறு மருத்துவமனை

**வினா எண் 14892—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மருடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், கரையானூரில் ஒரு மகப்பேறு மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் ஆரம்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்படுகிறது. கரையானூர் கிராம மக்கள்தொகை 295 ஆகும். கரையானூர் கிராமம் மற்றும் இதர 12 கிராம மக்கள்தொகைக்கும் (5261) வெள்ளையம்பாளையம் துணைச் சுகாதார நிலையத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர் தாய்சேய் நலம், தடுப்பூசி மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். 5000 மக்கள்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற மத்திய அரசின் வரையறையின்படி வெள்ளையம்பாளையம் துணைச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால், கரையானூர் கிராமத்திற்கெனத் தனியாக துணைச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**17—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16631—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடயாம்பட்டி வட்டம், காடயாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசாணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-5-1996-ல் வட்டார அளவிலான முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை 24 மணி நேரம் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணையிடப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக இதுவரையில் 250 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்கள் 24 மணி நேரம் செயல்படுகின்றன. இவற்றின் செயல்பாட்டினை ஆராய்ந்த பிறகே ஓமலூர் தொகுதி, காடயாம்பட்டி வட்டம், காடயாம்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட பிற முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மாற்றுவது பற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தற்போது மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.



2000 மே 18]

**18—**

### துணை சுகாதார நிலையம்

**வினா எண் 16656—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கே. நாட்டாப்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கே. நாட்டாப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் அரசு கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே மீண்டும் ஒரு துணை சுகாதார நிலையம் கே. நாட்டாபட்டியில் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

**19—**

### படுக்கை வசதி

**வினா எண் 16669—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி மகப்பேறு மருத்துவமனை மூடப்பட்டுவிட்டதால், எடப்பாடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் படுக்கை வசதி அதிகப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் தற்போது மகப்பேறு பிரிவில் 6 படுக்கைகள் உள்ளன. மேலும் 12 படுக்கைகள், பிரசவ அறை மற்றும் நியோநேட்டல் பகுதி கொண்ட மகப்பேறு பிரிவும் மற்றும் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவும், ஆக மொத்தம் 24 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**20—**

### மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 16687—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் அய்யம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.



2000 மே 18]

**21—**

### அவசர ஊர்தி

**வினா எண் 16688—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சுவாமிமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி ஒன்று வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சாத்தியமில்லை.

**22—**

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 16690—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுவாமிமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் நியமனம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஓர் ஆண் மற்றும் பெண் மருத்துவ அலுவலர்களை நியமனம் செய்ய முடியாத நிலை தற்போது உள்ளது. எனினும் சிறப்புத் தன்மை அடிப்படையில் இனி வருங்காலத்தில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு நியமனம் அனுப்பும்போது கூடுதலாக பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்ய கோரிக்கை அனுப்பப்படும். அவ்வாறு செய்யும்பொழுது சுவாமிமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 மே 18

**23—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16763—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே. நகர் என்ற பகுதியில் சுகாதார நிலையம் கட்ட ரூ.10,000 21-9-1998-ல் கட்டி, இன்னும் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98ஆம் ஆண்டு 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நிர்வாக ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது. இடங்கணசாலை பேரூராட்சி கே.கே. நகர் என்ற ஈக்காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும் இதில் ஒன்றாகும். இவ்வாரம்ப சுகாதார நிலைய கட்டடம் பொதுப்பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்டு 8-5-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**24—**

### கம்பியில்லாத் தந்தி வசதி

**வினா எண் 19461—திரு. கு. பனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழை, வெள்ளத்தின் போது அணைகளைப் பாதுகாக்க மின்வாரியத்தில் கம்பியில்லாத் தந்தி (Wireless) வசதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தொழில் நுட்ப ரீதியில் தகவல் தொடர்பு தற்பொழுது சாத்தியமான இடங்களில் (Line of sight) மின்சார வாரியத்தில் மிக அதிக அலைவரிசை கம்பியில்லா தகவல் தொடர்பு (VHF) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) விவரம் பின்வருமாறு:

(1) குந்தா: (1) மேல்பவானி (2) குந்தா மின் நிலையம்-5 (3) போர்த்திமண்டு, (4) மூக்குர்த்தி, (5) கிளென்மார்க் மற்றும் (6) மசினகுடி

(2) திருநெல்வேலி: பாபநாசம், காரியார், கோதையார் மின் நிலையம்-மேல் கோதையார், கருவியார் முதல் எரவாங்கலார் வரை சேர்வலார் முதல் பாபநாசம் மின் நிலையம் வரை, சேர்வலார் முதல் மதுரை எல்.டி. சென்டர் வரை (all through P.L.C.C.)

(3) மதுரை: (1) வைகை அணை முதல் ஆண்டிப்பட்டி வரை.

(2) சேர்வலார் அணை. முதல் மதுரை பொதுப்பணித் துறை அலுவலகம் வரை (P.W.D. Wireless).

(4) காடாம்பாறை: மின் பாறை, மேல் ஆளியார் அணை, காடாம்பாறை அணை, காடாம்பாறை புனல் மின் நிலையம்.

**25—**

### மின் உற்பத்தி

**வினா எண் 19505—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சாரத் தேவை மொத்தம் எவ்வளவு மெகாவாட்?

(ஆ) அனல் மின்சாரம், புனல் மின்சாரம் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது?

(இ) மற்ற வகையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறதா?

(ஈ) பற்றாக்குறை மின்சாரம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை கால நிலை மாறுபாடுகளுக்கு ஏற்றவாறு 4,700 மெகாவாட் என்ற அளவில் உள்ளது.

(ஆ) அனல் மின்சாரம் வழியாக 2,000 மெகாவாட்டும் புனல் மின்சாரம் வழியாக 1385 மெகாவாட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது.

(இ) எரிவாயு, மரபுசாரா மின் உற்பத்தியான காற்றாலை, சூரிய ஒளி, ரசாயனம் மற்றும் கரும்பு ஆலைகளிலிருந்தும் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

(ஈ) மின் பற்றாக்குறை 150 மெகாவாட் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**26—**

## மின் இணைப்புகள்

**வினா எண் 21294—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில் துறையில் ஏற்பட்டுள்ள நலிவு காரணமாக பெற்ற மின் இணைப்புகளைத் தாமாகவே முன்வந்து விலகிக் கொண்ட நிறுவனங்கள் எத்தனை?

(ஆ) இதன் காரணமாக எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சிறு தொழில் துறையில் ஏற்பட்டுள்ள நலிவு காரணமாக பெற்ற மின் இணைப்புகளைத் தாமாகவே முன்வந்து விலகிக் கொண்ட நிறுவனங்கள் 469.

(ஆ) இதன் காரணமாக பயன்படுத்தப்பட்ட மின்சாரம் (பளு) 8202.80 கிலோ வாட் ஆகும்.

**27—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 21307—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மின் பகிர்மான வட்டம், காஞ்சிக்கோவில் கிராமம், காந்தி நகரில் 110/22-11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி முடிவடைந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், துணை மின் நிலையக் கட்டுமானப் பணி எப்போது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மின் பகிர்மான வட்டம், காந்தி நகரில் ரூ.333.97 இலட்சம் செலவில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன் மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பெறும்.

[2000 மே 18

**28—**

**இலவச மின்சாரம்**

**வினா எண் 22066—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படுவதால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது?

(ஆ) இலவச மின்சாரத்தால் எத்தனை இலட்சம் விவசாயிகள் பயன் அடைகிறார்கள்?

(இ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு விவசாயிகள் பயன் அடைகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு ஆறு வருடங்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1993-94 | 940.23 | கோடி ரூபாய் |
| 1994-95 | 1115.82 | கோடி ரூபாய் |
| 1995-96 | 1358.75 | கோடி ரூபாய் |
| 1996-97 | 1321.84 | கோடி ரூபாய் |
| 1997-98 | 1582.02 | கோடி ரூபாய் |
| 1998-99 | 1949.45 | கோடி ரூபாய் |

(மதிப்பீடு செய்யப்பட்ட வருமான இழப்பு)

(ஆ) இலவச மின்சாரத்தில் 31-12-1998 வரை 15,93,103 விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்கள்.



2000 மே 18]

(இ) சேலம் மாவட்டத்தில் மட்டும் 31-12-1998 வரை 87,315 விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்கள்.

**29—**

**மின் பற்றாக்குறைவு**

**வினா எண் 22082—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இண்டூர் பகுதிகளில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மின் பற்றாக்குறையைப் போக்க பெண்ணாகரத்திலேயே ஒரு 110/33-11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் பணி பூர்த்தியாகி உள்ளது. ஆனால், தனி நபர் ஒருவருடைய தடையினால் ஒரு கோபுரத்திற்கான 110 கே.வி. மின் பாதை அமைக்கும் பணி மேற்கொள்ள இயலாமல் உள்ளது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அவ்வழக்கு முடிவுற்றதும் பெண்ணாகரம் 110/33-11 கே.வி. துணை மின் நிலையம் இயக்கம் பெற்றதும், இண்டூர் பகுதியில் நிலவிவரும் குறைந்த மின் அழுத்த நிலை நிவர்த்தியாகும்.

**30—**

**மின் மாற்றி**

**வினா எண் 22306—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சிவவிடுதி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சிவவிடுதி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணி 31-8-1999-க்குள் செய்து முடிக்கப்படும்.*

**31—**

**திருவேங்கட நகரில் மின்மாற்றி**

**வினா எண் 22309—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், நீலகிரி ஊராட்சி, அசோக் நகர், திருவேங்கடம் நகரில் மின்மாற்றி, அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*மேற்படி நகர் பகுதியில் ஒரு புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 26-8-1999 முதல் செயல்பாட்டில் உள்ளது.*

**32—**

**மின் அழுத்தக் குறைவு**

**வினா எண் 22310—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம் சக்கரைகோட்டை கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக வருவதால் புதிய மின்மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 30-8-1999 முதல் செயல்பட்டு வருகிறது.*

**33—**

**மருந்தாளுநர் பட்டயப் பயிற்சிக் கல்லூரி**

**வினா எண் 22314—திரு. ந. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் மருந்தாளுநர் பட்டயப் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**34—**

**செவிலியர் பயிற்சிக் கல்லூரி**

**வினா எண் 22315—திரு. ந. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் செவிலியர் (நர்ஸ்) பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் செவிலியர் (நர்ஸ்) பயிற்சிக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**35—**

**மின் அழுத்தக் குறைவை நீக்குதல்**

**வினா எண் 22324—திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இரணியல், காஞ்சிரவிளை பகுதியில் மின் அழுத்த குறைவைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இரணியல் விநியோகப் பிரிவில் காஞ்சிரவிளை பகுதியில் மின் பாதை நீளமானதாக இருப்பதால் தற்போதைய குறைந்த மின் அழுத்தத்தை சரிசெய்ய கூடுதல் மின்மாற்றி அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.



2000 மே 18]

**36—**

**மருந்துகள் இறக்குமதி**

**வினா எண் 22485—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organisation) நிதியுதவி மூலம் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organisation) நிதியுதவி மூலம் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சை அளிப்பது சம்பந்தமாக செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**37—**

**இன்டெர்நெட் வசதி**

**வினா எண் 22486—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை போன்ற பெருநகர அரசு பொது மருத்துவமனைகளில் இன்டர்நெட் வசதியை செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை போன்ற பெருநகர அரசு பொது மருத்துவமனைகளில் இன்டர்நெட் வசதியை செய்து தருவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**38—**

**மருத்துவமனையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 22497—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசினர் மருத்துவமனையைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**39—**

**மாநிலங்கள் பட்டியல்**

**வினா எண் 22646—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் பற்றாக்குறை மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1992-93 முதல் 1997-98 வரையிலான காலத்தில் மின் பயனீட்டு அளவு சராசரியாக 8% அதிகரித்துள்ளது. அதிகரிக்கின்ற மின் தேவையையும், மின் பயனீட்டு அளவையும் சமாளிக்க தமிழக மின் வாரியம் கிழக்கு பிராந்தியம், மராட்டிய மற்றும் பஞ்சாப் மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுவதோடு ஜி.எம்.ஆர். வாசவி போன்ற தனியார் மின் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து தனது மின் பற்றாக்குறையை சமாளிக்கிறது.

**40—**

**பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 22648—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் மின் அலுவலகத்தில் துணைப் பொறியாளர் பணியிடம் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் மங்கலம் மின் அலுவலகத்தில் 16-5-1997 முதல் காலியாக இருந்த துணைப் பொறியாளர் பணியிடம் 23-9-1998 அன்று நிரப்பப்பட்டுவிட்டது.

[2000 மே 18

41—

**ஈவுத் தொகை**

**வினா எண் 22649—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் கட்டட வாரியத்திற்குக் கட்டவேண்டிய ஈவுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதை செலுத்துவதற்கு மின்வாரியம் கால தாமதம் செய்வதேன்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு கட்டட வாரியத்திற்குக் கட்ட வேண்டிய ஈவுத்தொகை ஏதுமில்லை. எனவே, அதை செலுத்துவதற்கு மின் வாரியம் காலதாமதம் ஏதும் செய்யவில்லை.

42—

**மின் தேவை மதிப்பீடு**

**வினா எண் 22652—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போதைய மின் தேவையும், வளர்ந்து வரும் தேவையும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ் நாட்டில் தற்போதைய மின் தேவையும், வளர்ந்து வரும் தேவையும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



2000 மே 18]

(ஆ) தற்போதைய மின் தேவையையும் வளர்ந்து வரும் தேவையையும் கருத்தில் கொண்டு 1998-99-லேயே அரசு திட்டத்தின் கீழ் 37.5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும், தனியார் துறையின் கீழ் 196 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும், ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் (2001-2002) கூடுதலாக சுமார் 3,944.65 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும் நிறுவுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்திருக்கிறது.

43—

**நிபுணர் குழு**

**வினா எண் 22653—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் உற்பத்தியையும் விநியோகத்தையும் முறைப்படுத்த மின் வாரியத்திற்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின் வாரியத்திற்கு ஆலோசனை வழங்க 1-7-1999 அன்று ஏன்ஸ்ட் அண்டு யங் என்ற நிறுவனம் ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யப்பட்டது. அந்த நிறுவனம் மின் துறையை சீரமைப்பது முதலான 5 பகுதியில் ஆலோசனை வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது மின் உற்பத்தியையும் மின் விநியோகத்தையும் முறைப்படுத்தும் ஆலோசனையை தனது இறுதி அறிக்கையில் தெரிவிக்கும். இறுதி அறிக்கை ஜூன் 2000-க்குள் வழங்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

44—

## உற்பத்தி பிரிவுகள்

**வினா எண் 22654—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எண்ணூரில் 2130 மெகாவாட் திறன் கொண்ட மூன்று உற்பத்திப் பிரிவுகள் அமைக்கும் பணி எந்தக் கட்டத்தில் உள்ளது?*

*(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது முடிவுறும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எண்ணூரில் 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு உற்பத்திப் பிரிவுகள் அமைக்கும் பணி திட்ட நிலையில் உள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கைக்காக ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) மேற்கூறிய திட்டம் 2005-2006 ஆம் ஆண்டுகளில் செயலாக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

45—

## மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

**வினா எண் 22785—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பெரும்புதூர் வட்டம் அரசு பொது மருத்துவமனையில் புதியதாக இரத்த வங்கி, கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தவும், கூடுதலாக ஆம்புலன்ஸ் வண்டி இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பெரும்புதூர் வட்ட அரசு பொது மருத்துவமனையில் புதியதாக இரத்த வங்கிப் பிரிவு ஏற்படுத்துதல் மற்றும் கூடுதலாக ஆம்புலன்ஸ் வண்டி இயக்குதல் ஆகியன குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் இங்கு கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

46—

## கட்டடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 22789—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள டி.எம்.எஸ். அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காவல்துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை (கட்டட அமைப்பை) மாற்றாமல் புதுப்பித்ததுபோல் புதுப்பிக்கும்படி தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொதுப்பணித் துறை, சென்னை-5 அவர்களுக்குக் கடிதம் வரையப்பட்டு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

[2000 மே 18

**47—**

**மின் நிலையம்**

**வினா எண் 22795—திரு. பி.என். வல்லரசு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உசிலம்பட்டி தொகுதி, மொண்டிக்குண்டில், துணை மின் நிலையம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2001-2002 நடப்பு ஆண்டுக்குள்.*

**48—**

**இலவச மருத்துவ முகாம்கள்**

**வினா எண் 23204—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வருடத்தில் இரண்டு முறை தனியார் மருத்துவமனைகள் கிராமங்களில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்த அரசு உரிய ஏற்பாடு செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தனியார் மருத்துவமனைகள், இலவசமாக கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்த ஆணையிட அரசின் உத்தேசம் ஏதும் இல்லை.*



2000 மே 18]

**49—**

**சிகிச்சைக் கட்டணம்**

**வினா எண் 23206—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தனியார் மருத்துவமனைகளின் சிகிச்சைக் கட்டணத்தை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**50—**

**மருத்துவமனைப் பிரிவு**

**வினா எண் 23208—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் நகர வட்டபகுதியில் அரசினர் பொது மருத்துவமனைப் பிரிவு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர வடபகுதியில் தனியாக பொது மருத்துவமனைப் பிரிவு ஒன்று தொடங்குவதற்கான செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

51—

## அனல் மின் நிலையம்

**வினா எண் 23859—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறையைப் போக்க புதிய அனல் மின் நிலையம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இந்த நிதியாண்டில் அதை நிறுவ அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், மின் பற்றாக்குறையை போக்க புது எண்ணூரில் 2X500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையமும், தூத்துக்குடியில் 1X500 மெ.வா. திறன் கொண்ட அனல் மின் நிலையமும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்காக ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த நிதியாண்டில் (1999-2000) இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்த மின் நிலையங்கள் 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் இயக்கத்திற்கு வரும்.

52—

## முழுநேர மருத்துவமனை

**வினா எண் 23985—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி தொகுதி டி. துரிஞ்சிப்பட்டியில் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் இயங்கும் முழுநேர





மருத்துவமனையாக செயல்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசாணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-5-96-ன்படி 1996-97 மற்றும் 1997-98 ஆகிய நிதியாண்டுகளில் இரண்டு கட்டமாக மொத்தம் 250 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள்/சமுதாய நல மையங்கள் 24 மணி நேர மையங்களாக செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம்/ஊராட்சி ஒன்றியம், டி. துரிஞ்சிப்பட்டி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தை தற்போது 24 மணி நேரம் செயல்படும் வகையில் விரிவுபடுத்தும் திட்டம் ஏதுமில்லை.

53—

## புற்று நோய் சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 24017—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தற்போது புற்றுநோய் சிகிச்சைக்காக தனிப்பிரிவு இல்லை. எனவே, இதனை நவீனப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மே 18

54—

### நவீன வசதி

**வினா எண் 24018—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினை நவீனப்படுத்த அரசு ஆணை (நிலை) எண் 24, சுகாதாரம், நாள் 9-1-1998-ன்படி சுமார் ரூ. 1.25 கோடி செலவில் டெலி-கோபால்ட் தெரபி மெஷின் வாங்கி நிறுவப்பட்டு, 23-12-1998 முதல் இச்சாதனம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. மேலும், ரூ. 13.00 இலட்சம் செலவில் 'சிகிச்சைத் திட்ட வடிவமைப்பு' (Treatment Planning System) என்ற நவீன கருவிகள் பொருத்தப்பட்டு பொது மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இம்மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மிகவும் சிறப்பான முறையில் தற்போது செயல்பட்டுவருகிறது.

55—

### படுக்கை வசதி

**வினா எண் 24050—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் அரசினர் மருத்துவமனையின் பிரசவ வார்டில் இடப்பற்றாக்குறையால் பலர் தரையில் படுக்க வைக்கப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், படுக்கை வசதியை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அரசு மருத்துவமனையின் பிரசவ வார்டில் இடப்பற்றாக்குறை தற்போது இல்லை. பிரசவ வார்டில் தற்போது 40 படுக்கைகள் உள்ளன. கூடுதல் படுக்கைகளுக்கு அவசியம் ஏற்படும்போது பிற வார்டுகளின் படுக்கைகள் மூலம் சரி செய்யப்படுகிறது.

56—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24051—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி, வீரபாண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வீரபாண்டி கிராமம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. வீரபாண்டி கிராம மக்கள் தொகை 12,905 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 4 கி.மீ. தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவமனையும், 9 கி.மீ. தொலைவில் பல்லடம் அரசு மருத்துவமனையும் செயல்படுவதால் தற்போது வீரபாண்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2000 மே 18

57—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24052—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சியின் மக்கள்தொகை 50 ஆயிரத்தையும் தாண்டியுள்ள நிலையில், அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கிராம மக்கள் தொகை 14,468 ஆகும். நல்லூர் கிராமம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. நல்லூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 7 கி.மீ தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவமனை செயல்படுவதாலும் தமிழ்நாட்டின் கிராம மக்கள்தொகைக்கேற்ப 1409 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், மத்திய அரசின் வரையறையின்படி தற்போது நல்லூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

58—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24053—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முருகம்பாளையம் ஊராட்சியின் மக்கள் தொகை 2514 ஆகும். இக்கிராமத்திற்கு 6 கி.மீ. தொலைவில் இருவம்பாளையம் துணை சுகாதார நிலையமும் 8 கி.மீ. தொலைவில் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கி.மீ. தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார நிலையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கி.மீ. இருத்தல் வேண்டும். ஆனால் முருகம்பாளையம் கிராமத்திற்கு 8 கி.மீ. தொலைவில் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால், முருகம்பாளையம் கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

59—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24086—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி அல்லது அட்டவணைப்புதூர், முகாசிப்புதூர், பூனாச்சி ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி, அட்டவணைப்புதூர், முகாசிப்புதூர், பூனாச்சி கிராமங்கள் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தவை. இவ்வூராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப போதுமான அளவில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் குறிச்சி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், இக்கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவிலும், அட்டவணைப்புதூர் மற்றும் முகாசிப்புதூர் கிராமத்திற்கு 4 கி.மீ தொலைவிலும், ஓலக்கடம் ஆரம்ப சுகாதார நிலையமும், பூனாச்சி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 5 கி.மீ. தொலைவில் அம்மாப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி மேற்படி கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**60—**

### மின் கம்பங்கள்

**வினா எண் 24098—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில், தேவையான மின் மீட்டர்கள், 27 அடி மற்றும் 30 அடி கம்பங்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிவர்த்தி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் மீட்டர்கள் ஒரு மாத காலத்திற்குள் வழங்கப்பட்டுவிடும்.



**61—**

### மின் உற்பத்தி

**வினா எண் 24100—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்த மின் தேவை எவ்வளவு?

(ஆ) தற்போது எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகின்றது?

(இ) பற்றாக்குறையை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டின் மின்தேவை 5551 மெ.வா.

(ஆ) தமிழ்நாட்டில் மின் இருப்பு 5146 மெ.வா.

(இ) மின் பற்றாக்குறை 405 மெ.வா. தற்போதுள்ள பற்றாக்குறையையும் எதிர்காலத்தில் தேவைப்படும் கூடுதல் தேவையையும் கருத்தில் கொண்டு 1998-99 அரசு திட்டத்தின் கீழ் 37.5 மெ.வா திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் (2001-2002) சுமார் 3944.65 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும் நிறுவுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்திருக்கிறது.

**62—**

### படுக்கை வசதி

**வினா எண் 24103—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்ட அரசு மருத்துவமனையில், உள்நோயாளிகளுக்குக் கூடுதலாக ஐம்பது படுக்கைகள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்ட அரசு மருத்துவமனையில் 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் உள் நோயாளிகள் சிகிச்சை வசதிக்காக 24 படுக்கை வசதி கொண்ட கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**63—**

**அறுவை சிகிச்சை அரங்கு**

**வினா எண் 24110—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கு கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறை அரசு மருத்துவமனையில் ஏற்கனவே அறுவை சிகிச்சை அரங்கு உள்ளதால் இன்னொன்று கட்ட தற்சமயம் அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2000 மே 18]

**64—**

**மின் மாற்றி**

**வினா எண் 24112—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூர் ஊராட்சியில் கூடுதல் சக்தியுள்ள மின்மாற்றி வைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேலப்பனையூர் ஊராட்சியில் உள்ள 50 கே.வி.ஏ. மின்மாற்றி கூடுதல் சக்தியுள்ள 63 கே.வி.ஏ. மின்மாற்றியாக 22-2-1999 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

**65—**

**எரிவாயு மூலம் மின் உற்பத்தி**

**வினா எண் 24113—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, களப்பாள் கிராமத்தில் எரிவாயுவைக் கொண்டு தயாரிக்கப்படும் மின் உற்பத்தித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், மன்னார்குடி தொகுதி, கோவில்களப்பாள் கிராமத்தில் 107 மெகாவாட் திறன்

கொண்ட எரிவாயு சுழலி மின் திட்டம் அமைக்க முடிவு செய்துள்ளது. ஒப்பந்தப்படி 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அனைத்து வேலைகளையும் முடித்து மின் உற்பத்தி தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

66—

## 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 24114—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 400 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 29-8-96-ல் வெளியிடப்பட்ட அரசாணைப்படி திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரம் இயங்கும் மருத்துவமனையாக மாற்றப்பட்டு மருத்துவ அலுவலர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாற்றி வருவதால், கூடுதலாக இவ்வொன்றியத்தில் ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

67—

## 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 24115—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மன்னார்குடி தொகுதியிலுள்ள திருமக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 400 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-8-1996-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி மன்னார்குடி தொகுதியிலுள்ள காட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சித்தமல்லி ஆரம்ப சுகாதார நிலையம் 1997-98ஆம் நிதியாண்டில் 24 மணி நேரம் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு மருத்துவ அலுவலர்கள் சுழற்சி முறையில் பணிபுரிகின்றனர். எனவே, கூடுதலாக காட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருமக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர சேவையின் கீழ் கொண்டுவர சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

68—

## புனல் மின் நிலையங்கள்

**வினா எண் 24118—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒகேனக்கல், ராசிமணல் புனல் மின் நிலையங்கள் அமைக்கும் பணி எப்போது தொடங்கும்?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காவிரி ஆற்றில் அமைய உள்ள நான்கு புனல் மின் நிலையங்கள் முறையே சிவசமுத்திரம், மேகதாது, ராசிமணல் மற்றும் ஒகேனக்கல் ஆகிய திட்டங்களை தேசிய நீர்மின் குழுமம் செயல்படுத்துவதற்காக எரிசக்தி அமைச்சகம், இந்திய அரசுக்கும் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களுக்கிடையேயான வரைவு உடன்பாட்டுக் குறிப்பை அனுப்பி உள்ளது. தற்சமயம், தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழக அரசும் திருத்திய உடன்பாட்டுக் குறிப்பை ஆய்வதில் ஈடுபட்டுள்ளது.

**69—**

### ஆரம்ப சுகாதார நிலையமாக்குதல்

**வினா எண் 24124—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், எண்டியூர் கிராமத்தில் உள்ள தாய்சேய் நலவிடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி, எண்டியூர் கிராமம் சார்ந்த மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், எண்டியூர் கிராமத்திற்கு 7 கி.மீ. தொலைவில் ஓமந்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும், திண்டிவனம் வட்டார மருத்துவமனையும் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி எண்டியூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.



**70—**

### சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்துதல்

**வினா எண் 24280—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சித்த மருத்துவ சிகிச்சையை எல்லா மக்களுக்கும் வழங்கும்பொருட்டு, அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளிலும், 33 வட்டம்சாரா மருத்துவமனைகள் மற்றும் 293 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சித்த மருத்துவ முறையினை மேம்படுத்த, சித்த மருத்துவர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் முறைகளை வரன்முறைப்படுத்த தமிழ்நாடு சித்த மருத்துவ (முன்னேற்றம் மற்றும் மருத்துவர்கள் பதிவு) சட்டம் 1997 மாநில அரசால் இயற்றப்பட்டுள்ளது. சென்னையில், தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்க மைய அரசுக்கு 14.98 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழிலிருந்து சித்த மருத்துவ நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகங்களாக வெளியிடப்படுகின்றன.

**71—**

### நிர்வாகப் பயிற்சி

**வினா எண் 24283—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு நிர்வாகப் பயிற்சி கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் (Anna Institute of Management) வாயிலாகவும், பவானிசாகர் அரசு அலுவலகப் பயிற்சி நிலையம் மூலமாகவும் நிர்வாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**72—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24334—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம், பண்ணந்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம், ஊராட்சி ஒன்றியம் பண்ணந்தூர் கிராம மக்கள் தொகை 1298 ஆகும். பண்ணந்தூர் கிராமம் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், பண்ணந்தூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 4 கி.மீ. தொலைவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கு வழியில் பாரூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கி.மீ. தொலைவில் காரியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் பண்ணந்தூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.





(ஆ) இவ்வினா எழவில்லை.

**73—**

## 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 24338—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோனூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு கொள்கையளவில் எடுத்த முடிவின்படி, அரசாணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-5-1996-ல் அனைத்து வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை மட்டுமே 24 மணிநேரம் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணையின்படி சேலம் மாவட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமானதால் அதனை 24 மணி நேரம் இயங்கிடச் செய்ய சாத்தியக்கூறுகளில்லை.

**74—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24336—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, இராமகொண்டஅள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் இராமகொண்டஅள்ளி கிராமம் உள்ளது. இக்கிராமத்தின் மக்கள்தொகை 926 ஆகும். இங்கு துணை சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் எரியூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. இக்கிராமத்தைச் சார்ந்த பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 1 வட்டார மருத்துவமனையும் செயல்படுவதாலும் மத்திய அரசின் வரையறையின்படி தற்போது இராமகொண்டஅள்ளியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**75—**

**மின் வசதி**

**வினா எண் 24351—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி, குளிக்காடு கிராமத்திற்கு நடப்பாண்டில் மின்சார வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பத்ரஅள்ளி ஊராட்சியில் முழுவதும், தெரு விளக்குகள் பகுதியின் கீழ், குளிக்காடு கிராமத்திற்கு ஒரு தெரு விளக்கு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுகாறும் பத்ரஅள்ளி ஊராட்சித் தலைவரிடம் இருந்து விண்ணப்பம் பெறப்படவில்லை. விண்ணப்பம் கேட்டு ஏற்கெனவே தலைவருக்குக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் பெறப்பட்டபின் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**76—**

**மின் கம்பங்கள்**

**வினா எண் 24358—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி என். பெத்தனேந்தல் கிராமத்தில் உள்ள மின் கம்பங்கள் கீழே விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் கம்பங்களை மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த நிலையில் இருந்த அனைத்து மின் கம்பங்களும் தற்போது மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.

[2000 மே 18

77—

## மருத்துவமனை விரிவாக்கம்

**வினா எண் 24457—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, திசையன்விளை அரசு மருத்துவமனை (எக்ஸ்ரே) ஊடுகதிர் கருவி ஸ்கேன் மற்றும் இரத்த வங்கி, அதிக படுக்கைகள் வசதியுடன் விரிவாக்கம் செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, திசையன்விளையில் அரசு மருத்துவமனை எதுவும் செயல்படவில்லை. ஆனால், இங்கு 24 மணி நேரம் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு ஊடுகதிர் கருவி, ஸ்கேன், இரத்த வங்கி மற்றும் அதிக படுக்கை வசதியுடன் விரிவாக்கம் செய்வதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

78—

## மின் தடை

**வினா எண் 24463—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிப் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

79—

## தொலைபேசி வசதி

**வினா எண் 24485—திரு. கே. தங்கமணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், முத்தனேந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுவிட்டது. வெகுவிரைவில் தொலைபேசி இணைப்பு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

80—

### மின் மாற்றி

**வினா எண் 24752—திரு. அ. வெங்கடாசலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் துணை மின் நிலையத்திற்கு ஒரு எண்ணம் 5 மெகாவாட் திறன் கொண்ட மின் மாற்றி வழங்காதது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) விரைவில் வழங்கப்படும்.

81—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24758—திரு. அ. சுடலைமுத்து:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) போடி தொகுதியில் உள்ள கோடங்கிப்பட்டி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், கோடங்கிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. கோடங்கிப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் தேனி மற்றும் போடி அரசு மருத்துவமனைகளும், 10 கி.மீ. தொலைவில் வீரபாண்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் கோடங்கிப்பட்டி கிராமம் சார்ந்த போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் கோடங்கிப்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

82—

### மருத்துவமனைக் கட்டடம்

**வினா எண் 24760—திரு. அ. சுடலைமுத்து:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*போடிநாயக்கனூர் தற்போது தாலுகா அந்தஸ்து பெற்றுள்ளதால் 1967-ல் கட்டப்பட்ட அரசு மருத்துவமனை கட்டடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

83—

### 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 24768—திரு. அ. வெங்கடாசலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

(அ) ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி பேரூராட்சியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசின் கொள்கைப்படி வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்கள் மட்டுமே படிப்படியாக 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி ஆரம்ப சுகாதார நிலையமானது கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாதலால் அரசு முடிவின்படி 24 மணி நேரம் இயங்கும் வகையில் மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

84—

### துணை மின் நிலையம்

**வினா எண் 25277—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் ரெட்டியார்பாளையம் பகுதியில் ரெட்டியார்பாளையம், க.வாளவெட்டி மற்றும் தரடாப்பட்டு ஆகிய ஊர்களில் துணை மின் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.



2000 மே 18]

85—

### நீர் மின் நிலையம்

**வினா எண் 25279—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையில் உள்ள நீர் மின் நிலையத்தை மேலும் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சாத்தனூர் அணையில் உள்ள நீர் மின் நிலையத்தை மேலும் உயர்த்தும் திட்டம் தற்சமயம் அரசிடம் இல்லை.

86—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 25281—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஒன்றியம், நாரையூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், நாரையூர் கிராம மக்கள்தொகை 3170 ஆகும். இக்கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் ஆனாந்தல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், இக்கிராமம் சார்ந்த திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கும் கூடுதலாகவே மொத்தம் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

[2000 மே 18

செயல்படுவதாலும் நாரையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**87—**

**ஆரம்ப சுகாதார நிலையமாக்குதல்**

**வினா எண் 25283—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியம், தண்டரை கிராமம், தண்டராம்பட்டு தொகுதி, ராயண்டபுரம், பேராயம்பட்டு ஆகிய ஆரம்ப மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள மத்திய அரசின் வரையறையின்படி தண்டரை, ராயண்டபுரம் மற்றும் பேராயம்பட்டு கிராமங்களிலுள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவோ அக்கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவோ சாத்தியக்கூறுகளில்லை.

**88—**

**மருத்துவமனை**

**வினா எண் 25286—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஒன்றியம், காட்டாம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையில் அரசு தலைமை மருத்துவமனை இயங்கி வருவதால் திருவண்ணாமலை ஒன்றியத்தில் காட்டாம்பூண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் அவசியம் ஏற்படவில்லை.

**89—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 25288—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, காவேரியாம்பூண்டி துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், காவேரியாம்பூண்டி கிராம மக்கள்தொகை 583 ஆகும். காவேரியாம்பூண்டி கிராமத்திற்கு 6 கிலோமீட்டர் தொலைவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையும், 8 கிலோமீட்டர் தொலைவில் மேல்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. இக்கிராமம் சார்ந்த திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கு கூடுதலாகவே மொத்தம் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் தற்போது காவேரியாம்பூண்டி துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மே 18

90—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 25293—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரடாப்பட்டு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், தரடாப்பட்டு துணை சுகாதார நிலையம், சாத்தனூர் அணை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. தரடாப்பட்டு கிராம மக்கள் தொகை 3786 ஆகும். இக்கிராமத்திற்கு 6 கி.மீ. தொலைவில் சாத்தனூர் அணை ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் தண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் தரடாப்பட்டு கிராமம் சார்ந்த தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம் மக்கள் தொகை அடிப்படையில் கூடுதலான அளவில் மொத்தம் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் தரடாப்பட்டு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

## மருத்துவமனையைப் பாதுகாத்தல்

**வினா எண் 25310—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், குரோம்பேட்டையிலுள்ள தாம்பரம் வட்ட மருத்துவமனை கடந்த மழையில் வெள்ளத்தால் சூழப்பட்டதை அரசு அறியுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெள்ள நீர் வடிய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் வெள்ள நீரால் மருத்துவமனை பாதிக்காத வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

92—

## நவீன சாதனங்கள்

**வினா எண் 25337—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் கை சீரமைப்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை துறைக்கு நவீன சாதனங்கள் வாங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்துறையில் உள்ள புதிய தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு ரூ. 19.00 இலட்சம் செலவில் ஃபௌலர்கட்டில்கள், எலெக்ட்ரானிக் அனஸ்தீஸியா, வெண்டிலேட்டர்கள், இன்ஃப்யூஷன் பம்புகள், ஷேடோவெஸ் விளக்குகள், ஈ.சி.ஜி. மானிட்டர், நான்-இன்வேசிவ் பி.பி. மானிட்டர்கள் மற்றும் பைபோலார் கோயாகுலேட்டர்கள் ஆகிய 7 புதிய சாதனங்கள் வாங்கப்பட்டு இத்துறை சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

93—

## மின்சாரம் உற்பத்தி

**வினா எண் 25341—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஜெயங்கொண்டத்தில் நிலக்கரி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டப்பணி எந்த நிலையில் உள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி சுரங்கம் வெட்டியெடுத்தல் மற்றும் அனல் மின் திட்டத்தை ஜெயங்கொண்டத்தில் அமைப்பதற்கான அனுமதி ரிலையன்ஸ் தொழில் நிறுவனத்திற்கும் அதனுடைய கூட்டுச் சங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான இடத்தை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், திட்டத்தைச் செயல்படுத்த தேவையான முதலீடு (Equity) மற்றும் கடன் (debt) நிதி திரட்டும் முயற்சியில் இந்நிறுவனங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. திட்டப் பணிகள் விரைவில் துவங்கும்.*

94—

## அனல் மின் நிலையம்

**வினா எண் 25342—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் துவங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தூத்துக்குடியில் 500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம் துவங்குவதற்குச் செயலாக்க அறிக்கை மற்றும் விரிவான*



*திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு தேசிய அனல் மின் கழகத்திடம் 21-1-1999 அன்று ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. செயலாக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.*

95—

## இயற்கை எரிவாயு மின் திட்டம்

**வினா எண் 25344—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை அருகே எண்ணூரில் இயற்கை எரிவாயு மின் திட்டம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*சென்னை அருகே எண்ணூரில் இயற்கை எரிவாயு மின் திட்டம் அமைக்கும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.*

96—

## மருத்துவக் கல்லூரி

**வினா எண் 25345—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 495, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 2-9-1998-இல் தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

[2000 மே 18

97—

### ஸ்கேன் வசதி

**வினா எண் 25346—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் (முழு உடற்கூறு) இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் சாதனத்தில் பழுதுபட்ட பிக்சர் டியூபினை மாற்றுவதற்காக அயல்நாட்டிலிருந்து புதிய பிக்சர் டியூப் வாங்கப்பட்டு, அது முறைப்படி பொருத்தப்பட்டு, 26-6-1999 முதல் சி.டி. ஸ்கேன் நல்லமுறையில் இயங்கி வருகிறது.

98—

### எரிவாயு சுழலி மின் திட்டம்

**வினா எண் 25792—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி காப்பான் எரிவாயு மின் சுழலி திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதியில் கோவில்களப்பாலில் தமிழ்நாடு மின்சார வாரியம், 107 மெகா வாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் திட்டம் நிறுவ முடிவு செய்துள்ளது.

(ஆ) பாரத கனரக மின் நிறுவனம், புதுடெல்லி, கோவில் களப்பாலில் திட்டப் பணிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. ஒப்பந்தப்படி 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அனைத்து வேலைகளையும் முடித்து மின் உற்பத்தி தொடங்கப்படும்.

99—

### மின் அழுத்தக் குறைவு

**வினா எண் 25772—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி வெங்கடேஸ்வரா நகரில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க தனியாக மின்மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி வெங்கடேஸ்வரா நகரில் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க, வெங்கடேஸ்வரா நகரில் பச்சையம்மன் தெருவில் ஒரு 100 கே.வி.ஏ. மின் மாற்றி ரூ. 2,64,500 செலவில் அமைத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடந்து கொண்டிருக்கின்றது.

100—

### மருத்துவமனை

**வினா எண் 25784—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) மன்னார்குடி தொகுதி, அண்ணா மறுமலர்ச்சி கிராமமாக பரவாக்கோட்டையில் படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவமனை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதியில் பரவாக்கோட்டைக்கு அருகில் மன்னார்குடியில் ஒரு அரசு மருத்துவமனையும் உள்ளிக்கோட்டையில் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும் நல்ல முறையில் இயங்கி வருவதால் பரவாக்கோட்டையில் படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவமனை அவசியம் இல்லை எனவே இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**101—**

## மருத்துவமனை ஏற்படுத்துதல்

**வினா எண் 25788—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூரில் மருத்துவமனை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூரில் தற்சமயம் அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 மே 18]

**102—**

## மின் உற்பத்தி

**வினா எண் 25981—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதா?

(ஆ) தமிழகத்தில் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99ல் தமிழ்நாட்டில் காற்றாலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அளவு 928.835 மி.யூனிட்.

**103—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 26725—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்கலூர் தொகுதி, குண்டடத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மினாசாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001-2002ம் ஆண்டில்.

**104—**

**அவசர ஊர்தி**

**வினா எண் 26735—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலையத்திற்கு அவசர ஊர்தி ஒன்றை வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். அரசு கொள்கை அளவில் எடுத்த முடிவின்படி, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அவசர கால ஊர்திகள் வழங்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

**105—**

**படுக்கை வசதிகள்**

**வினா எண் 26750—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

சோழவந்தான் பேரூராட்சியில் உள்ள அரசு பொது மருத்துவமனையை செப்பனிட்டு படுக்கை வசதிகள் விரிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் நிதிநிலைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்பட்டு மருத்துவமனைகள் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கப்படுவது போல் சோழவந்தான் அரசு மருத்துவமனைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மருத்துவமனையை செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிதிநிலை மற்றும் தேவைக்கு ஏற்ப வரும் காலங்களில் படுக்கை வசதி விரிவுபடுத்துவது கருத்தில்கொள்ளப்படும்.

**106—**

**மின் மாற்றி**

**வினா எண் 26758—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தைச் சேர்ந்த பழையூர் பகுதிக்கு புதிய மின் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் பழையூர் பகுதியில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் மாற்றிகளின் திறன் 250/11 கே.வி. மற்றும் 100/11 கே.வி ஆகும். இந்த இரண்டு மின் மாற்றிகளும் தற்பொழுது உள்ள மின் சுமையை ஏற்க போதுமானது. எனவே புதிய மின் மாற்றி நிறுவ அவசியம் இல்லை.

[2000 மே 18

107—

### மருத்துவமனை

**வினா எண் 26781—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெங்கனிக்கோட்டை வட்டம், உரிகத்தில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், தெங்கனிக்கோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், உரிகம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

108—

### பல் மருத்துவக் கல்லூரி

**வினா எண் 26783—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.



2000 மே 18]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

109—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 26797—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் பேரூராட்சி வார்டு எண் 1-ல் ஒரு ஆரம்ப சுகாதார மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியம், செம்பாக்கம் கிராம மக்கள் தொகை 22,558 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையமும் 5 கி.மீ. தொலைவில் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கி.மீ. தொலைவில் பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையும் 3 கி.மீ. தொலைவில் தாம்பரத்தில் ஐந்தாவது மக்கள்தொகை திட்ட சுகாதார மையமும் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி செம்பாக்கத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

110—

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 26801—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சென்னை பெரும்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மருத்துவமனை வளாகத்தில் ஜயேந்திர சரஸ்வதி மருத்துவக்கல்லூரியைத் தொடங்குவதற்கு ஆட்சேபணை இல்லா சான்று வழங்க அரசு முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**111—**

**புதிய கருவி**

**வினா எண் 26806—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறியும் புதிய கருவி அரசு மருத்துவமனைகளில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த அரசு மருத்துவமனைகளில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறியும் புதிய கருவி அரசு மருத்துவமனைகளில் இல்லை.



2000 மே 18]

**112—**

**அனல் மின் நிலையம்**

**வினா எண் 26808—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தை அடுத்த செய்யூரில் புதிய அனல் மின் நிலையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து கடலோரக் கட்டுப்பாடு விதிகளுக்கு ஏற்ப இத்திட்ட அமைவிடம் உள்ளது என்ற ஏற்பளிப்பையும் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அமைவிடத்திற்கு கொள்கையளவில் ஏற்பளிப்பையும் பெறுவதற்கு தேசிய அனல் மின் கழகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**113—**

**24 மணி நேர மருத்துவமனை**

**வினா எண் 26819—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் ஒன்றியத்தை சேர்ந்த கோண்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் 5 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. அரசாணை நிலை

என் 400, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-8-1996-ல் உள்ள ஆணையின்படி கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள சிறுவந்தாடு முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் கண்டமங்கலம் சமுதாய நல மையம் 24 மணி நேர மையங்களாகச் செயல்படுவதால் அதே ஒன்றியத்திலுள்ள கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையமான கோண்டூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை 24 மணி நேர மையமாக்கிடச் சாத்தியக்கூறுகளில்லை.

**114—**

### ஆரம்பச் சுகாதார நிலையம்

**வினா எண் 26287—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், துலுக்கர்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள துலுக்கர்பட்டி கிராம மக்கள் தொகை 1,449 ஆகும். இக்கிராமத்திற்கு 10 கி.மீ. தொலைவில் திருவேங்கடநாதபுரம் ஆரம்பச் சுகாதார நிலையமும், 11 கி.மீ. தொலைவில் வள்ளியூர் வட்டம் சாரா மருத்துவமனையும் செயல்படுகின்றன. மேலும் துலுக்கர்பட்டி கிராமம் அடங்கிய வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு போதுமான அளவில் 3 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், ஒரு வட்டம் சாரா மருத்துவமனையும் செயல்படுவதால் துலுக்கர்பட்டி கிராமத்தில் தற்போது புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.





**115—**

### அனல் மின் நிலையம்

**வினா எண் 26835—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூரில் தேசிய அனல் மின் கழகம், அனல் மின் நிலையம் அமைக்கும் பணியை தொடங்க திட்டமிட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், [illegible] விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் சுமார் 2,888 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் மாவட்ட வருவாய்த் துறையினரால் ஒதுக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு தேவைப்படும் 2 மில்லியன் காலன் தண்ணீர் பாலாற்றுப் படுகையிலிருந்து வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மின் நிலையத்தின் பெரும்பான்மைத் தேவையான குளிரூட்டு நீர் (Cooling water) அருகிலுள்ள கடலிலிருந்து எடுக்கப்படும். நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகளைத் தேசிய அனல் மின் கழகம் தொடங்கியுள்ளது.

**116—**

### படுக்கை வசதி

**வினா எண் 26939—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் ஆண்கள் பகுதியில் படுக்கை வசதியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி அரசு மருத்துவமனையின் ஆண்கள் பகுதியில் படுக்கை வசதியை அவசியத்திற்கேற்ப அதிகரிக்க இனிவரும் காலத்தில் பகுதி II திட்டமாகப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**117—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 26940—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன்கோயில் துணை மின் நிலையத்தின் பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வைத்தீஸ்வரன்கோயில் 110/11 கே.வி. துணை மின் நிலையத்தின் பணிகள் டிசம்பர் 1999 வாக்கில் தொடங்கப் பெறும்.

**118—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 26943—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சி, மீனாட்சி நகர் புதிய வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், மீனாட்சி நகர் கிராமத்திற்கு 4 கி.மீ. தொலைவில் பாலரெங்காபுரம் மருத்துவமனையும், 6 கி.மீ. தொலைவில் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையும் 11 கி.மீ. தொலைவில் வளையங்குளம் ஆரம்பச் சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் மீனாட்சி நகரைச் சார்ந்த திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் தற்போது மீனாட்சிநகரில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**119—**

**கண் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 26949—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

[2000 மே 18

120—

**மகப்பேறு நிலையம்**

**வினா எண் 26959—திரு. வெ.அ. ஆண்டமுத்து :** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பவானிசாகர் தொகுதியில் வெட்டையம்பாளையம் கிராமத்தில் ஒரு மகப்பேறு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பவானிசாகர் தொகுதியில் உள்ள வெட்டையம்பாளையம் கிராம மக்கள் தொகை 427 ஆகும். வெட்டையம்பாளையம் உள்ளடக்கிய எலத்தூர் கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. வெட்டையம்பாளையம் மற்றும் இதர 6 கிராமங்களில் உள்ள மொத்த மக்கள் தொகை 5576-க்கும் எலத்தூர் துணை சுகாதார நிலையத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர் தாய்சேய்நலம், தடுப்பூசி மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். எனவே, மத்திய அரசின் வரையறையின்படி வெட்டையம்பாளையம் கிராமத்திற்கெனத் தனியாக துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.*

121—

**24 மணி நேர மருத்துவமனை**

**வினா எண் 26962—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புளியம்பட்டியில் இயங்கிவரும் ஆரம்பச் சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி 24 மணி நேர மருத்துவமனையாக இயங்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

*அரசாணை நிலை எண் 400, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-8-1996-ல் வட்டார அளவிலான முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை 24 மணி நேரம் இயங்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணையிடப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக இதுவரையில் 250 முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்கள் 24 மணி நேரம் செயல்படுகின்றன. ஈரோடு மாவட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புஞ்சை புளியம்பட்டி முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையத்தினை 24 மணி நேரம் செயல்படும் வகையில் தற்போது விரிவுபடுத்தும் திட்டமேதும் இல்லை.*

122—

**சித்த மருத்துவப் பிரிவு**

**வினா எண் 27081—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டில் எத்தனை அரசு ஆரம்பச் சுகாதார மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட உள்ளன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*வரும் நிதியாண்டில் ஆரம்பச் சுகாதார மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

123—

**கட்டட வசதி**

**வினா எண் 27090—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரில் இயங்கிவரும் அரசு ஆரம்பச் சுகாதார மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சித்தூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. தற்போதுள்ள கட்டட வசதிகளே போதுமானதாகும்.

**124—**

**மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்**

**வினா எண் 27091—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் இயங்கும் மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை நிலை எண் (டி) 745, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 27-5-1996-ல் அனைத்து வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்கள்/சமுதாய நலமையங்களை மட்டும் 24 மணி நேரம் இயங்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக செயல்படுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி 1996-97 மற்றும் 1997-98 ஆகிய நிதியாண்டுகளில் இரண்டு கட்டமாக மொத்தம் 250 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேர ஆரம்பச் சுகாதார நிலையங்களாக தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையத்தினை 24 மணி நேரம் செயல்படும் வகையில் தற்போது விரிவுபடுத்தும் திட்டமேதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2000 மே 18]

**125—**

**கண் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 27096—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள கண் சிகிச்சைப் பிரிவை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவானது போதுமான அளவு விரிவுபடுத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகிறது.

**126—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 27097—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில், ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், பூலாம்பட்டி கிராம மக்கள் தொகை 9263 ஆகும். பூலாம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 6 கி.மீ. தொலைவில் அம்மாப்பேட்டை

ஆரம்பச் சுகாதார நிலையமும், 12 கி.மீ. தொலைவில் சித்தூர் ஆரம்பச் சுகாதார நிலையமும், மேட்டூர் அரசு மருத்துவமனை மற்றும் அரசிராமணி ஆரம்பச் சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் பூலாம்பட்டி கிராமம் சார்ந்த எடப்பாடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 2 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி கூடுதலாக பூலாம்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**127—**

**கடன் பத்திரம்**

**வினா எண் 27100—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய ஒப்பந்தக்காரர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி டெபாசிட் வாங்குவதற்கு மாற்றாக வருடாந்திரக் கடன் பத்திரம் மூலம், மின் வாரியம் வழங்கும் பத்திரங்களை டெபாசிட் செய்தால் போதும் என அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், மின் வாரியத்திற்கு பல கோடி கடன் வசதி வரும் என்பதை அரசு ஏற்றுக் கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்த மதிப்பில் இரண்டு சதவிகிதம் பணமாகவும், எட்டு சதவிகிதம் வங்கி உறுதி சீட்டாகவும் ஆக மொத்தம் பத்து சதவிகிதம் காப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது. அண்மைக் காலங்களில் மின்சார வாரியம் பொது மக்களுக்கு வருடாந்திரக் கடன் பத்திரம் ஏதும் வெளியிட்டு நிதி ஆதாரம் திரட்டுவது இல்லை. எனவே காப்புத் தொகையை மேற்கண்ட முறைக்கு பதிலாக கடன் பத்திரம் மூலமாக வசூலிப்பது என்பது இயலாது.





(ஆ) கடன் பத்திரம் வெளியீடு மூலம் வாரியம் பொது மக்களிடமிருந்து கடன் வசூலிப்பது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.

**128—**

**காசநோய் பிரிவு**

**வினா எண் 27118—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி எடப்பாடி அரசு மருத்துவமனையில் காசநோய் தனி பிரிவு ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காசநோய் தடுப்புத் திட்டத்தின்கீழ், எடப்பாடி அரசு மருத்துவமனையில் காசநோயினைக் கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் வசதிகள் உள்ளதால், தனியாக காசநோய் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**129—**

**பொது மருத்துவமனை**

**வினா எண் 27123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 27127—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வேம்பநேரியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி/ஊராட்சி ஒன்றியம், வேம்பநேரி கிராம மக்கள் தொகை 2257 ஆகும். இக்கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையமும், 7 கி.மீ. தொலைவில் எடப்பாடி அரசு மருத்துவமனையும், 8 கி.மீ. தொலைவில் செட்டிமாங்குறிச்சி ஆரம்பச் சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் வேம்பநேரி கிராமம் சார்ந்த எடப்பாடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், மத்திய அரசின் வரையறையின்படி கூடுதலாக வேம்பநேரியில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**131—**

### துணை ஆரம்பச் சுகாதார நிலையம்

**வினா எண் 27130—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தொப்பவளவு, மாணிக்கம்பட்டி, விவாரிதெரு சமுத்திரம், முத்தையம்பட்டி, வெங்கட்ராமன்வளவு, திருமாலூர் கிராமங்களுக்கு மத்தியில் உள்ள வெங்கட்ராமன்வளவில் துணை ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்திலுள்ள சமுத்திரம், உப்புராபட்டி, தொப்பவளவு மாணிக்கம்பட்டி, திருமாலூர், சத்திரபாளையம் மற்றும் விவாரிதெரு ஆகிய 7 கிராமங்களின் மொத்த மக்கள் தொகை 4156 ஆகும். இப்பகுதிகளுக்காக சமுத்திரம் என்ற இடத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்த துணை சுகாதார நிலையத்தின் கிராம சுகாதார செவிலியர் மேற்படி கிராமங்களின் மக்களுக்கும் தடுப்பூசி, தாய்சேய்நலம் மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். மத்திய அரசின் வரையறையின்படி 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் சமுத்திரம் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்படுவதால் அதனை வெங்கட்ராமன்வளவிற்கு மாற்றவோ, கூடுதலாக வெங்கட்ராமன்வளவில் துணை சுகாதார நிலையம் அமைக்கவோ சாத்தியக்கூறுகளில்லை.

**132—**

### சித்தா மருத்துவப் பட்டப் படிப்பு

**வினா எண் 27164—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் சித்தா மருத்துவப் பட்டப் படிப்பு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் சித்தா மருத்துவப் பட்டப் படிப்பு தொடங்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**133—**

**அனல் மின் நிலையம்**

**வினா எண் 27205—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மின்னாக்கத் திறனை உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மின்னாக்கத் திறனை உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.*

**134—**

**மின் இணைப்பு**

**வினா எண் 27206—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சி துணை மின் இணைப்பு நிலையத்திலிருந்து புதிய மின் இணைப்பு (மின்லைன்) அமைத்து, பெரிய கிளாம்பாடி பகுதிக்கு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலாக்கப்படும்?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 11 கி.வோ. கல்லரபாடி மின் பாதையில் நயம்பாடி கிராமத்திலிருந்து 1 கி.மீ. அளவிற்கு கிளை மின் பாதை அமைத்து பெரிய கிளாம்பாடி பகுதி மின் மாற்றிகளை இணைக்க திட்டம் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் வரும் 30-9-1999-க்குள் முடிக்க இயலும்.*

**135—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 27207—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள வில்வாரணியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

*(அ) ஆம்.*

*(ஆ) துணை மின் நிலையம் அமைக்கத் தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.*

**136—**

**புதிய துணை மின் நிலையம்**

**வினா எண் 27208—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள ஜவ்வாது மலையில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**137—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 27215—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஆம்பலாப்பட்டு தெற்கு கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆம்பலாப்பட்டு தெற்கு கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 8½ கி.மீ. தொலைவில் பாப்பாநாடு ஆரம்பச் சுகாதார நிலையமும், 15 கி.மீ. தொலைவில் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. மேலும் ஆம்பலாப்பட்டு தெற்கு கிராமம் அடங்கிய ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 7 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி இக்கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.



**138—**

## சோதனைக் கருவிகள்

**வினா எண் 27220—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு 'எய்ட்ஸ்' வியாதியை கண்டுபிடிக்கும் சோதனைக் கருவிகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மூலம் எச்.ஐ.வி கிருமி/எய்ட்ஸ் நோயை கண்டுபிடிக்கும் பரிசோதனைக் கருவி எலிசா ரீயர், தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு 1998-ல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கருவிக்கு துணை கருவியாக "தானியங்கி கழுவி" (Automatic Washer) மற்றும் "தானியங்கி பதிப்பு கருவி" (Automatic Printer) தற்போது தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**139—**

## சித்த மருத்துவப் பிரிவு

**வினா எண் 27221—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனை வளாகத்தில் சித்த மருத்துவப் பிரிவு எப்போது தொடங்கப்பட உள்ளது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

*சென்னை தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனை வளாகத்திற்கு மிக அருகாமையில் உள்ள தாம்பரம் வட்ட மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்கெனவே இயங்கி வருகிறது. மேலும், தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனை வளாகத்தில் தற்போது நிறுவப்பட்டு வரும் தேசிய சித்த மருத்துவ நிலையம் வாயிலாக 200 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனை நிறுவப்பட உள்ளது. எனவே, இங்கு தனியாக சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.*

**140—**

**வட்ட மருத்துவமனை**

**வினா எண் 27288—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியம், மேடவாக்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேடவாக்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்தினை வட்ட மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**141—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 27298—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*பரமக்குடி தொகுதியில் மின் அழுத்த குறைபாட்டை நீக்க பார்த்திபனூர், சத்திரக்குடி, பி.கொடிக்குளம் ஆகிய பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**142—**

**மருத்துவமனை கிளை**

**வினா எண் 27306—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி எமனேஸ்வரத்தில் அரசு மருத்துவமனை கிளை தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*எமனேஸ்வரத்தில் அரசு மருத்துவமனை கிளை தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**143—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 27310—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குபட்டி கிராமம், நல்லூரில் அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 7 கி.மீ. தொலைவில் ஒண்டிவீரனூர் ஆரம்பச் சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் நல்லூர் கிராமம் சார்ந்த காடையம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி நல்லூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**144—**

**மின் அணு இதயமானி இயந்திரம்**

**வினா எண் 27311—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு மின் அணு இதயமானி (ஈ.சி.ஜி.) இயந்திரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு மின் அணு இதயமானி (ஈ.சி.ஜி.) செப்டம்பர் 1997-ல் வழங்கப்பட்டு நன்முறையில் இயங்கி வருகிறது.

**145—**

**மின் வசதி**

**வினா எண் 27312—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சி, ஏற்காடு மலை அடிவாரத்திலுள்ள குறுவம்பட்டி கிராமத்திற்கு மின்வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குறுவம்பட்டி கிராமத்தை மின்மயமாக்குவதற்கு வன இலாக்கா பகுதியில் இடம் தேவைப்படுவதால் அதற்கான இழப்பீட்டு தொகையாக ரூ. 1,38,000.00 மாவட்ட வன அலுவலர், சேலம்-7 அவர்களிடம் 13-11-1997 அன்று செலுத்தப்பட்டது. ஆனால், வன இலாக்காவிடமிருந்து குறுவம்பட்டி கிராமத்தை மின்மயமாக்குவதற்குத் தேவைப்படும் வனத் தடை நீக்கம் இதுவரையில் பெறப்படவில்லை. வன இலாக்காவிடமிருந்து வனத் தடை நீக்கம் வந்தவுடன் நீட்டிப்புப் பணிகள் செய்யப்படும்.

**146—**

**மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 27313—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் வெட்டப்படும் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடந்த ஆண்டு 1998-99 ஆம் ஆண்டில் ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3202.

[2000 மே 18

இவற்றில் 2000 இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு 2000 மின் இணைப்புகள் ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**147—**

**கட்டட வசதி**

**வினா எண் 27366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மின் வாரிய அலுவலகத்திற்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பிரிவு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்க வாரியத்தின் நிதிநிலைக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**148—**

**மின் கம்பங்கள்**

**வினா எண் 27369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் மின் நிலையத்தில் சிமெண்ட் மின் கம்பங்கள் தயாரிக்கும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் துணை மின் நிலையம் இல்லை. ஆனால், எடப்பாடியில் ஒரு துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. மேற்படி மின் நிலையத்தில் சிமெண்ட் மின் கம்பம் தயாரிக்கும் மையம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

**149—**

**மின் உற்பத்தி நிலையம்**

**வினா எண் 27379—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லி மலையில் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அந்தத் திட்டம் எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்தை மேற்கொள்ள தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம், சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் தொடங்கப் பெறும்.

**150—**

**மருந்துவமனை**

**வினா எண் 27663—திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கிணத்துக்கடவு ஆரம்ப சுகாதார நிலையத்தை அதே ஒன்றியத்தில் உள்ள வடசித்தூர் கிராமத்திற்கு மாற்றித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**151—**

## பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 27683—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாகவுள்ள பணியாளர்கள் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், அதை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள், சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர், மருந்தாளுநர் மற்றும் இதரப் பணியாளர்கள் சேர்த்து, மொத்தம் 31 பணியிடங்களில் 2 பணியிடங்கள், அதாவது உதவியாளர் மற்றும் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே தற்பொழுது காலியாகவுள்ளன. உதவியாளர் பணியிடம், இளநிலை உதவியாளர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வளித்து நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வக உதவியாளர் பதவிக்கும், தகுதி வாய்ந்த களப்பணியாளர்களின் பதவி உயர்வு பட்டியல் தயாரித்து விரைவில் நிரப்பப்படும்.





**152—**

## மின் திட்டம்

**வினா எண் 27699—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் பகுதியில் கதவு அணை மின் திட்டத்தின் பொருட்டான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் தற்போதைய வேலை முன்னேற்றத்தின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பள்ளிப்பாளையம் பகுதியில் அமையவிருக்கும் கதவு அணை நீர் மின் திட்டத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.90.62 கோடி ஆகும்.

(ஆ) கதவு அணையின் வலப்பகுதி ஈரோடு மாவட்டத்திலும், இடப்பகுதி நாமக்கல் மாவட்டத்திலும் அமையவுள்ளது. அணுகு சாலை, முகாம் மற்றும் மின் நிலையம் அமைக்கத் தேவைப்படும் நிலப்பரப்பில் 3.91.11 ஹெக்டேர் அளவிற்கு (90 விழுக்காடு) நிலமெடுப்பு நாமக்கல் மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ளது. அணுகு சாலை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஈரோடு மாவட்டத்தில், கட்டுமானப் பணிகளுக்கான அணுகு சாலை மற்றும் நீர்ப் பரப்புப் பகுதியில் வருகின்ற நிலத்தினைக் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கதவு அணை கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இதன் மீது இறுதி முடிவு

எடுக்கும் தருவாயில் உள்ளது. மின் இயந்திரங்களுக்கான பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, மே மாதம் திறக்கப்பட்டு மேற்கொண்டு பரிசீலனையில் உள்ளது.

**153—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 27809—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டுக்கோட்டை வட்டம், ஆலந்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினாவிற்கு இடமில்லை.*

**154—**

**பிறந்த குழந்தை இறப்பு விகிதம்**

**வினா எண் 27952—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் 'பிறந்த குழந்தை இறப்பு விகிதம்'* (Infant Mortality Rate) *தற்போது குறைந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். குறைந்துள்ளது.*

*(ஆ) இந்திய அரசால் மாதிரிப் பதிவு முறை* (Sample Registration System) *மூலம் எடுத்த கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் பிறந்த குழந்தைகள் இறப்பு விகிதம் 1996 ஆம் ஆண்டில் 54 ஆகவும், 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் 53 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது. (உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுக்குள் ஓர் ஆண்டிற்குள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை) 1998 ஆம் ஆண்டில் டானிடா நிதி உதவியுடன் தமிழக குடும்பநலத் துறையும், பொதுச் சுகாதாரத் துறையும் நடத்திய கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் பிறந்து இறந்த குழந்தைகள் விகிதம் 43.4/1000 ஆகும்.*

**155—**

**மின்சார வசதி**

**வினா எண் 27956—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் இதுவரை மின்சார வசதி பெறாத கிராமங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) அவை யாவை?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) எதுவுமில்லை.*

*(ஆ) வினாவிற்கு இடமில்லை.*

[2000 மே 18

156—

## மின் உற்பத்தி

**வினா எண் 27959—திரு. ஏ.வி.ர. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

(ஆ) இதன் மூலம் பெறப்படும் மொத்த மின்னளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ் நாட்டில் காற்று சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி தனியார் தொழில் முனைவோர், தமிழ் நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ் நாடு மின்சார வாரியம் அவர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை ஊக்குவிக்க தனியார் தொழில் முனைவோருக்கு பல்வேறு சலுகைகள் மத்திய/மாநில அரசுகளால் வழங்கப்படுகின்றன.

(ஆ) 31-3-1999 முடிய 3180.091 மில்லியன் யூனிட்.

157-

## துணை மின் நிலையம்

**வினா எண் 27992—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு பகுதியில் துணை மின் நிலையம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விரைவில் தொடங்கப்படும்.

158—

## துணை மின் நிலையம்

**வினா எண் 28044—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செந்துறை ஒன்றியம், ஆர்.எஸ். மாத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செந்துறை ஒன்றியம், ஆர்.எஸ். மாத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

159—

## 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 28045—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, கண்ணமங்கலம் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-5-1996-ன்படி அனைத்து வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்கள் மட்டுமே 24 மணி நேரம் இயங்கும் மையங்களாக மாற்றிட ஆணை பிறப்பித்துள்ளது. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சுகாதாரப் பகுதி மாவட்டம், ஆரணி மேற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்ணமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாதலால் மேற்படி ஆணையின்படி 24 மணி நேர மையமாக மாற்றுவதற்குச் சாத்தியமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**160—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 28047—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 76 ஊராட்சி ஒன்றிய முழுநேர மருந்தகங்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டதில் நிலை உயர்த்தப்பட்டவை எத்தனை? எஞ்சியுள்ளவை எப்போது மாற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப 76 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் 13 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 63 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைத்திட ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.



2000 மே 18]

2. மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் சீராக அமைக்கப்படவில்லை. எனவே, சீர்படுத்தும் முயற்சியாக மக்கள் தொகை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறைவாக அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள, ஒன்றிய மருந்தகத்தை, முன்னுரிமை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவது குறித்து பரிசீலனை செய்யப்படும். எனவே, தற்போது 63 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றிட சாத்தியக்கூறுகளில்லை.

**161—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 28050—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம்தொகுதி, வீராக்கன் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியம், வீராக்கன் கிராம மக்கள்தொகை 4,875 ஆகும். வீராக்கன் கிராமம் சார்ந்த செந்துறை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வட்டார அரசு மருத்துவமனை செயல்படுவதாலும், வீராக்கன் கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 6 கி.மீ. தொலைவில் இரும்புலிக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், மத்திய அரசின் வரையறையின்படி தற்போது வீராக்கன் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**162—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 28051—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் செந்துறை ஒன்றியம் அயன்தத்தனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அயன்தத்தனூர் கிராம மக்கள் தொகை 1,689 ஆகும். இக்கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையமும், 5 கி.மீ. தொலைவில் குழுமூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும், அயன்தத்தனூர் கிராமம் அடங்கிய செந்துறை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், மத்திய அரசின் வரையறையின்படி அயன்தத்தனூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகளில்லை.

**163—**

**முன்பதிவு**

**வினா எண் 28054—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் வாரியத்தில் காலி இடங்கள் நிரப்பப்படும்போது தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) பயின்ற மாணவர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வாரிய விதிகளின்படி அவ்வாறு செய்ய இயலாது. மின்வாரியத்தின் தொழில் பழகுநர் பயிற்சி பெற்றவர்கள் மற்ற விண்ணப்பதாரர்களுடன் தகுதி அடிப்படையில் சமமாக இருப்பின் அவர்களுக்குத் தேர்வில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**164—**

**மின் இணைப்பு**

**வினா எண் 28077—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கடையாலுமூடு பேரூராட்சி, வட்டப்பாறை பகுதியில் மின் இணைப்பு கொண்டு செல்ல துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) இந்த நிதியாண்டில் அமல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட வட்டப்பாறைப் பகுதிக்கு மருதம்பாறை வன இலாகா குடியிருப்பிலிருந்து 53 மின் கம்பங்கள் வனத் துறைக்கு சொந்தமான நிலத்தில் நட்டு மின் இணைப்பு தரப்பட வேண்டும். ஆதலால், மனுதாரர்கள் அதற்குரிய அனுமதி வன இலாகாவிடமிருந்து பெற்று, உரிய விண்ணப்பத்துடன் கிடைக்கப்பெற்றால், மின்சாரம் விஸ்தரிப்பிற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இந்த நிதியாண்டில் அமல்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

[2000 மே 18

165—

மருத்துவமனை

**வினா எண் 28080—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆயுர்வேத முறைப்படியான மருந்தகம், படுக்கை வசதியுடன் சிகிச்சை பெறக்கூடிய வகையில் மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த மாவட்டத்தில் எப்போது அமையும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஆயுர்வேத முறைப்படியான மருந்தகம் படுக்கை வசதியுடன் சிகிச்சை பெறக்கூடிய வகையில் மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

166—

மின் இணைப்பு

**வினா எண் 28087—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆறுகாணி சாலையின் ஓரத்தில் மருதம்பாறையில் குடியிருக்கும் பழங்குடியினருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மருதம்பாறை சந்திப்பில் ஏற்கெனவே மின் மாற்றி அமைத்து அங்குள்ள பழங்குடியினருக்கு மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



2000 மே 18]

167—

மின் உற்பத்தி

**வினா எண் 25340—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திரவ எரிபொருளில் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் திரவ எரிபொருளில் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) விரைவில் தொடங்கப்படும்.

168—

குழந்தை நலப் பிரிவு

**வினா எண் 28363—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தை நலப்பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாயிலாக நோய்த்தடுப்பு, உடல்நல மேம்பாடு, நோய் நீக்கம் மற்றும் சுகாதாரக் கல்வி, தாய்சேய் நலத் திட்டம் போன்ற சேவைகள் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. தனியாக குழந்தை நலப்பிரிவு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2000 மே 18

**169—**

**மகப்பேறு மருத்துவமனை**

**வினா எண் 28364—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் ஒன்றிய அளவில் மகப்பேறு மருத்துவமனைகள் தனியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஒன்றிய அளவில் மகப்பேறு மருத்துவமனைகள் தனியாக அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**170—**

**தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி**

**வினா எண் 28405—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த 1989-90 ஆம் ஆண்டில் தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி முடித்த 200 பேருக்கும் பணி வழங்கப்பட்டுவிட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 1989-91-ல் தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி முடித்த 200 நபர்களில் 128 நபர்கள் தொழுநோய்



2000 மே 18]

ஆய்வாளராகவும், 20 நபர்கள் ஆய்வக உதவியாளராகவும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய 52 நபர்களுக்கு பணி வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**171—**

**கட்டட வசதி**

**வினா எண் 28545—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி மருத்துவமனையை விரிவுபடுத்தி வட்ட மருத்துவமனையாக்கத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 26. தற்சமயம் இங்கு சராசரியாக 17 உள்நோயாளிகளே சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆகையால் இந்த மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**172—**

**கூடுதல் மருத்துவர்கள்**

**வினா எண் 28546—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் அதிகமாக வருவதால், மருத்துவர்களை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**173—**

## ரத்த சேமிப்பு நிலையம்

**வினா எண் 28547—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனை வட்ட அளவிலான மருத்துவமனையானதால் அங்கு இரத்த சேமிப்பு நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இரத்த சேமிப்பு நிலையம் தொடங்குவதற்கு விதிகளின்படி (Drugs and Cosmetic Act) 7 அறைகள் கொண்ட கட்டடம், காற்றுப் பதனி வசதியுடன் தேவை. எடப்பாடி அரசு மருத்துவமனையில் போதிய கட்டட வசதி இல்லை. எனவே, தற்சமயம் இரத்த வங்கி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எடப்பாடி அரசு மருத்துவமனையில் 26 படுக்கைகள் உள்ளன. மற்றும் அறுவை அரங்கு செயல்படுகின்றது. சராசரியாக 15 உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். எனவே, தற்போது இரத்த வங்கி தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு பதில் எழவில்லை



2000 மே 18]

**174—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 28625—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பாண்டியன் நகர்ப்பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

**175—**

## அத்தியாவசிய மருந்துகள்

**வினா எண் 28647—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக சுகாதார அமைப்பு பட்டியலிட்டுள்ள அத்தியாவசிய மருந்துகள் முழுவதும் அரசின் மருத்துவமனைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

உலக சுகாதார அமைப்பின் (World Health Organisation) அத்தியாவசிய மருந்துகளுக்கான மாதிரிப் பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு, அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் மருந்துகள் பட்டியல் தமிழ்நாடு மருத்துவ சேவைக்

[2000 மே 18

கழகத்தினால் தயாரிக்கப்பட்டு, அதில் கண்டுள்ள மருந்துகள் இக்கழகத்தினால் கொள்முதல் செய்யப்பட்டு அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

**176—**

**மின் இணைப்பு**

**வினா எண் 28661—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிலியனூர் ஊராட்சி, குண்டுகாரபள்ளத்திற்கு இதுவரை மின் இணைப்பு இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், மின் வசதி செய்து தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குண்டுகாரபள்ளம் என்ற கிராமம், பிலியனூர் ஊராட்சியைச் சார்ந்த சுமார் 18 வீடுகளைக் கொண்ட குக்கிராமமாகும். இக்கிராமத்தில் ஏற்கெனவே இரண்டு வீடுகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டியோ, தெரு விளக்கு மின்வசதி கேட்டோ விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லை. மேற்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டால் மின் வசதி செய்து கொடுக்கப்படும்.

**177—**

**மின் வசதி**

**வினா எண் 28662—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன ஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சின்னையன் கொட்டாய் கிராமத்திற்கு இதுவரை மின் வசதியில்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மின் இணைப்பு வழங்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 10 வீடுகள் கொண்ட அக்கிராமத்திற்கு தெரு விளக்கு போட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**178—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 28663—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன ஹள்ளி ஊராட்சி, மருக்கம்பட்டி கிராமத்தில் இதுவரை எவ்வித மருத்துவ வசதிகளும் இல்லாததால், நடப்பாண்டில் அங்கே ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன ஹள்ளி ஊராட்சி, மருக்கம்பட்டி கிராம மக்கள்தொகை 470 ஆகும். மருக்கம்பட்டி கிராமத்தை உள்ளடக்கிய காவக்காடு கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் உள்ளது. மருக்கம்பட்டி மற்றும் இதர 6 கிராமங்களின் மொத்த மக்கள்தொகை 3969-க்கும், காவக்காடு துணை

[2000 மே 18

சுகாதார நிலையத்தில் பணிபுரியும் கிராம சுகாதாரச் செவிலியர் தாய்சேய் நலம், தடுப்பூசி மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். எனவே மத்திய அரசின் வரையறையின்படி மருக்கம்பட்டி கிராமத்திற்கெனத் தனியாக துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**179—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 28772—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூரில் உள்ள ஒன்றிய மருந்துவமனையை முழுநேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மேலஉளூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகம் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப போதுமான அளவில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் சீராக அமைக்கப்படவில்லை. எனவே, சீர்படுத்தும் முயற்சியாக மக்கள்தொகை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறைவாக அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஒன்றிய மருந்தகத்தை முன்னுரிமை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவது குறித்து இயக்குநருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சூழ்நிலையில் மேலஉளூர் ஒன்றிய மருத்துவமனையை முழுநேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகளில்லை.



2000 மே 18]

**180—**

**புதிய மின்மாற்றி**

**வினா எண் 28779—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், மடிகை கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், மடிகை கிராமத்தில் தற்போது நிலவிவரும் குறைந்த மின் அழுத்தத்தினை சீர்செய்யும் பொருட்டு புதியதாக ஒரு மின் மாற்றி அவ்வூரில் அமைக்கப்பட உள்ளது. அம் மின் மாற்றியானது 31-3-2000-க்குள் அமைத்து இயக்கி வைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**181—**

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 28781—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் வல்லம் நகரில் மின் பற்றாக்குறையைப் போக்க வல்லம் துணை மின் நிலையத்தில் தனியாக ஒரு மின் மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், வல்லம் நகரில் மின் குறை, மின் அழுத்தத்தினைப் போக்க இரண்டு புதிய மின் மாற்றிகள் விரைவில் அமைக்கப்படும்.

[2000 மே 18

182—

## துணை மின் நிலையம்

**வினா எண் 28739—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கருங்குளம் ஒன்றியம் கருங்குளத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

183—

## இலவச மருத்துவ வசதி

**வினா எண் 28814—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து நபர்களுக்கும் உயிர்காக்கும் மருந்து அரசு மருத்துவமனைகளில் இலவசமாகத் தொடர்ந்து கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பொதுமக்களுக்கு மட்டும் முதலமைச்சரின் நிவாரண



2000 மே 18]

நிதி விதிமுறைகளுக்குட்பட்டு, உயிர்காக்கும் சைக்ளோஸ்போரின் மருந்து இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

184—

## மருத்துவமனை

**வினா எண் 28844—திரு. ரா. ஈஸ்வரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள சிவகிரி வட்டம் அரசு மருத்துவமனையை விரைவில் திறக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சிவகிரி அரசு வட்ட மருத்துவமனை ஏற்கெனவே சிறந்த முறையில் இயங்கி வருவதால் இதனைத் திறக்க வேண்டிய அவசியம் இல்லை.

185—

## மின் இணைப்பு

**வினா எண் 28868—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குனேரி தொகுதி மழை நம்பிக்கோவில் வரை செல்லும் சாலையிலும் அங்குள்ள கோயிலுக்கும் மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மின் இணைப்புக் கொடுக்க இயலாது.

[2000 மே 18

**186—**

**தாய் சேய் நலவிடுதி**

**வினா எண் 28928—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி ஊராட்சி, நல்லூரில் துணை சுகாதார நிலையம் அல்லது தாய்சேய் நலவிடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், நல்லூர் கிராமம், ஓமலூர் வட்டத்தில் இல்லை. தலைவாசல் பகுதியில் உள்ளது. நல்லூர் கிராம மக்கள் தொகை 600 ஆகும். இது திட்டச்சேரி துணை சுகாதார நிலையத்தை சார்ந்ததாகும். நல்லூர் மற்றும் இதர 3 கிராமங்களின் மொத்த மக்கள்தொகை 4933 மட்டுமே. இவை திட்டசேரி துணை சுகாதார நிலையத்தின் மூலம் பயன்பெறுகின்றன. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதியின்படி 5000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அளவில் திட்டசேரியில் அமைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் நல்லூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

**187—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 28930—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி கிராமத்தில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**188—**

**சித்த மருத்துவப் பட்டம்**

**வினா எண் 29125—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் பணி வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும், சென்னை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் சித்த மருத்துவப் பட்டம் (பி.ஐ.எம்/பி.எஸ்.எம்.எஸ்) பெற்றவர்கள் 1-1-1999 அன்று வரையில் 1991 பேர்கள் ஆகும்.

(ஆ) அனைவருக்கும் அரசுப் பணி வழங்கப்படவில்லை. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையில் சித்த மருத்துவத்திற்கென பதவி உயர்வு உள்ளிட்ட 723 பதவியிடங்கள் உருவாக்கப்பட்டு, 556 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியவற்றில் 5 பதவிகள் பதவி உயர்வு மூலமும், 162 பதவிகள் தேர்வாணையம் மூலமும் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 மே 18

189—

## குளிர்பதன வசதி

**வினா எண் 29134—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் நகரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் பிணவறையை குளிர்பதனத் தன்மை கொண்டதாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*இல்லை*

190—

## மருந்து கொள்முதல்

**வினா எண் 29158—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு மருத்துவமனைகளுக்கான மருந்து கொள்முதல் யாரால், எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*அரசு மருத்துவமனைகளுக்காக கொள்முதல் செய்யப்படும் மருந்துகளின் பட்டியல் மருந்துகள் நிபுணர் குழுவால் தீர்மானிக்கப்படுகிறது. தீர்மானிக்கப்பட்ட பட்டியலில் உள்ள மருந்துகள் ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்யப்படுகின்றன.*



2000 மே 18]

191—

## துணை மின் நிலையம்

**வினா எண் 29334—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குத்தாலம் தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், 49 கடலங்குடி 230 கே.வி.* Grid (Sub-Station) *துணை மின் நிலையம் எப்போது செயல்படத் தொடங்கும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஜூன் 2000-ல், கடலங்குடி 230 கே.வி. துணை மின் நிலையம் செயல்படத் தொடங்கும்.*

192—

## துணை மின் நிலையம்

**வினா எண் 29408—திரு. வெ. ஆண்டமுத்து:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியிலுள்ள காவிலிபாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

[2000 மே 18

(ஆ) நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. ஆர்ஜிதம் செய்யப்பட்டவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**193—**

**மின் கோளாறுகள்**

**வினா எண் 29546ஏ—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் 24 மணி நேரமும் மின் கோளாறுகள் (Fuse Off Call) சரி செய்யும் வசதி உள்ளது போல் மற்ற நகரங்களிலும் மேற்கண்ட வசதியை செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**194—**

**படுக்கை வசதி**

**வினா எண் 29581—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், குரோம்பேட்டையிலுள்ள வட்ட மருத்துவமனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனைப் படுக்கைகள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**195—**

**ஆரம்ப சுகாதார நிலையக் கிளை**

**வினா எண் 29589—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கூடக்கோவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளையை வீரபெருமாள்புரம் அல்லது சிவரக்கோட்டையில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வீரபெருமாள்புரம் மற்றும் சிவரக்கோட்டை கிராமங்களில் ஏற்கனவே துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இந்தத் துணை சுகாதார நிலையங்கள் கூடக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தினை சார்ந்தது. வீரபெருமாள்புரம் கிராமத்திற்கு 12 கி.மீ. தொலைவில் கள்ளிக்குடி ஆரம்ப சுகாதார நிலையமும், சிவரக்கோட்டை கிராமத்திற்கு 10 கி.மீ. தொலைவில் திருமங்கலம் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. மேலும் இக்கிராமங்கள் அடங்கிய கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்குப் போதுமான அளவில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் வீரபெருமாள்புரம் மற்றும் சிவரக்கோட்டை கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது கிளை அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

[2000 மே 18

196—

## ஆரம்ப சுகாதார நிலையக் கிளை

**வினா எண் 29590—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, செக்கானுரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளையை உச்சப்பட்டி பஞ்சாயத்து அல்லது கப்பலூரில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உச்சப்பட்டி மற்றும் கப்பலூர் கிராமங்கள் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தவை. உச்சப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 5 கி.மீ. மற்றும் 7.கி.மீ. தொலைவில் முறையே திருமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் செக்கானுரணி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றன. கப்பலூர் கிராமத்திற்கு 4 கி.மீ. மற்றும் 8 கி.மீ. தொலைவில் முறையே திருமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் திருப்பரங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றன. மேலும் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்குப் போதுமான அளவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி உச்சப்பட்டி மற்றும் கப்பலூர் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

197—

## துணை மின் நிலையம்

**வினா எண் 29599—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) குடியாத்தம் தொகுதி, கொட்டமிட்டா பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) குடியாத்தம் தொகுதியில் கொட்டமிட்டா பகுதியில் துணை மின் நிலையம் நிறுவுவதற்கான திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

198—

## 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 29620—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமத்துவபுரம் அமைந்துள்ள பாம்பூர் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர நிலையமாக தகுதி உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை(டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-6-1996-ல் வட்டார அளவில் இயங்கும் அனைத்து முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களை மட்டுமே 24 மணி நேர நிலையங்களாக மாற்ற உத்திரவிடப்பட்டது. பாம்பூர் கிராமம் பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேற்படி ஆணையின்படி 1996-97-ம் நிதியாண்டிலிருந்து பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பார்த்திபனூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் வசதிகளுடன் 24 மணி நேரம் செயல்பட்டு

வருகிறது. எனவே, பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமான பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகளில்லை.

**199—**

**பாம்புக்கடி சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 29621—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி தொகுதி, பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாம்புக்கடி சிகிச்சைப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாம்புக்கடி சிகிச்சைப் பிரிவு தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**200—**

**கணினி வசதி**

**வினா எண் 29626—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி வட்ட மருத்துவமனையில் கணினி வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பரமக்குடி வட்ட மருத்துவமனையில் கணினி வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



## இருபத்து மூன்றாம் பட்டியல்

**1—**

**இந்திய மருத்துவப் பிரிவுகள்**

**வினா எண் 29628—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவப் பிரிவுகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், ஆயுர்வேத மருத்துவப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.*

*(ஆ) ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தொடங்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.*

**2—**

**ஆயுர்வேத மருத்துவப் பிரிவு**

**வினா எண் 29629—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி வட்ட மருத்துவமனையில் ஆயுர்வேத மருத்துவப் பிரிவு இல்லாமல் மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மருத்துவப் பிரிவு தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பரமக்குடி வட்ட மருத்துவமனையில் ஆயுர்வேத மருத்துவப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**3—**

### மருந்து தொழிற்சாலை

**வினா எண் 29630—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய மருத்துவ மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய மருத்துவ மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.*

**4—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29632—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி தொகுதி, பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் இடியும் தருவாயில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், ஆரம்ப சுகாதார நிலையத்தை பாம்பூர் சமத்துவபுரத்தில் தொடங்க அரசு முன்வருமா?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) பரமக்குடி தொகுதி பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் பழுதுகள் சரிசெய்யப்பட்டு தற்பொழுது நல்ல நிலையில் செயல்படுகிறது.*

*(ஆ) பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் பாம்பூர் சமத்துவபுரத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திலேயே இருப்பதால் சமத்துவப்புரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க வாய்ப்பு இல்லை.*

**5—**

### சி.டி. ஸ்கேன் வசதி

**வினா எண் 29633—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி அரசு மருத்துவ மனையில் சி.டி. ஸ்கேன் இல்லாமையால் மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சி.டி. ஸ்கேன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை.—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் படிப்படியாக சி.டி. ஸ்கேன் கருவி நிறுவுவதற்குத் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்ட மருத்துவமனையான பரமக்குடி அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் கருவி வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**6—**

### ஓமியோபதி மருத்துவமனை

**வினா எண் 29653—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

(அ) வடசென்னை பகுதியில் ஓமியோபதி மருத்துவமனையே இல்லையென்ற குறையை போக்கும் வகையில், அப்பகுதியில் புதியதாக ஓமியோபதி மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வடசென்னைப் பகுதியில் ஓமியோபதி மருத்துவமனை புதியதாக தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**யுனானி முறை மருத்துவமனை**

**வினா எண் 29654—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் யுனானி முறை சிகிச்சைக்கென தனியாக அரசு மருத்துவமனை உள்ளதா?

(ஆ) சென்னை மாநகரில் இம்மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் யுனானி முறை சிகிச்சைக்கென தனியாக மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

(ஆ) சென்னை மாநகரில் யுனானி மருத்துவமனை தனியாகத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.



2000 மே 18]

8—

**தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவிகள்**

**வினா எண் 29656—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எத்தகைய உதவிகள் செய்யப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பாலியல் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கில் எய்ட்ஸுக்கு எளிதில் இலக்காகும் பாலியல் தொழிலாளர்கள், லாரி ஓட்டுனர்கள், ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவோர், குடிசைவாழ் மக்கள், சாலை ஓர சிறுவர்கள், ஆலைத் தொழிலாளர்கள், இடம் பெயர்ந்து வாழும் தொழிலாளர்கள், போதை மருந்து ஊசி போட்டுக்கொள்பவர்கள் போன்றவர்களை கண்டறிந்து, சிகிச்சை அளித்து, தடுப்புப் பணிகளில் ஈடுபடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

9—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 29662—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வளையமாதேவியில் துணை மின் நிலையம் அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வரப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வளையமாதேவியில் ஒரு 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**10—**

**மின் உற்பத்தியை அதிகரித்தல்**

**வினா எண் 29663—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிமணம் இயற்கை எரிவாயு மின் திட்டத்தின் மூலம் பெறப்படும் மின் உற்பத்தி அளவை அதிகரிக்கச் செய்ய அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எந்த அளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**11—**

**மின் உற்பத்தி நிலையம்**

**வினா எண் 29664—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரியில் கண்டுபிடித்துள்ள இயற்கை எரிவாயுவினைக் கொண்டு சிறிய அளவிலான மின்சாரம் உற்பத்திச் செய்யும் நிலையம் தொடங்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**12—**

**பிண பரிசோதனை**

**வினா எண் 29861—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி, நகரியத்திலுள்ள பழுப்பு நிலக்கரி நிறுவன பொது மருத்துவமனையில், பிண பரிசோதனை (போஸ்ட் மார்ட்டம்) செய்திடும் வாய்ப்பினை அரசு உருவாக்கித் தருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நெய்வேலி நகரியத்திலுள்ள பழுப்பு நிலக்கரி நிறுவன பொது மருத்துவமனை இந்திய அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பொது நிறுவன மருத்துவமனை. இங்கு பிணப் பரிசோதனை வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**13—**

**மருத்துவமனை**

**வினா எண் 29867—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை 24 மணி நேர மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்திடும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**14—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29868—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், கங்கைகொண்டான் பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், கங்கைகொண்டான் பேரூராட்சியில் இரண்டு துணை சுகாதார நிலையங்களும், 6 கி.மீ. தொலைவில் வடலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 12 கி.மீ. தொலைவில் கம்மாபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் கங்கைகொண்டான் கிராமம் சார்ந்த கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி தற்போது கங்கைகொண்டான் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2000 மே 18]

**15—**

### ஆரம்ப சுகாதார நிலையத்தை இடமாற்றம் செய்தல்

**வினா எண் 29894—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டதால் அங்கு இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அதே ஒன்றியத்தில் கேதையுறம்பிற்கு மாற்ற அரசிடம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் 'உள்ளது உள்ளபடியே' என்ற அடிப்படையில் வட்டார அரசு மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டதால் ஒட்டன்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை கேதையுறம்பிற்கு மாற்றவோ அல்லது கேதையுறம்பில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவோ சாத்தியக் கூறுகளில்லை.

**16—**

### 24 மணி நேர மருத்துவமனை

**வினா எண் 29921—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, மல்லாங்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்தை இருபத்திநான்கு மணிநேர மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனைத்து வட்டார அளவில் இயங்கிவரும் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள்/சமுதாய நல நிலையங்கள் மட்டுமே 24 மணி நேரம் இயங்க அரசால் ஆணையிடப்பட்டது. இவ்வாணையின்படி அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மல்லாங்கிணறு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர நிலையமாக மாற்ற சாத்தியக் கூறுகளில்லை

**17—**

### ஆயுர்வேதக் கல்லூரி

**வினா எண் 29925—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயுர்வேதக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயுர்வேதக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**18—**

### புதிய மின் மாற்றிகள்

**வினா எண் 30781—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், அரசம்பட்டு பகுதியில், எஸ்.எஸ்.-2 மின்மாற்றி அடிக்கடி பழுதாகி மின் தடங்கல் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதியதாக மின்மாற்றி பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய மின் மாற்றி 1-9-1999-ல் பொருத்தப்பட்டுள்ளது.

**19—**

### கிளை ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 30788—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், டி. புதுப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளையை, கிழவனேரியில் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிழவனேரி கிராம மக்கள்தொகை 1477 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 9 கி.மீ/10 கி.மீ. தொலைவில் முறையே திருமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றன. மேலும் கிழவனேரி

கிராமம் அடங்கிய திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்குப் போதுமான அளவில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி கிழவனேரியில் புதிய மற்றும் கிளை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

**20—**

**தானியங்கி மின் நிலையம்**

**வினா எண் 30935—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி ஞானியார் குடியிருப்பு அருகே 63 கே.வி. திறன் கொண்ட தானியங்கி மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**21—**

**காசநோய் பிரிவு**

**வினா எண் 30936—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் காசநோய் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் காசநோயினைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் பிரிவு ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

**22—**

**கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 30960—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போது திருநெல்வேலி தொகுதி, தச்சநல்லூரில் இயங்கிவரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மானூர் ஒன்றியம், கோடகநல்லூர் ஊராட்சிக்கு (கல்லூர்) மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி விரிவாக்கத்தில் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தச்சநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையப் பகுதிகள் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ளதால் தச்சநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியிலேயே மாற்றியமைப்பது ஏற்புடையதாகும். மேலும் மானூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தச்சநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மானூர் ஒன்றியம், கோடகநல்லூர் ஊராட்சிக்கு மாற்றம் செய்ய சாத்தியக்கூறுகளில்லை.

**23—**

**சித்த மருத்துவப் பிரிவு**

**வினா எண் 30961—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மறறும மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திலுள்ள அனைத்து வட்ட மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் உள்ள அனைத்து வட்ட மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.*

**24—**

**மதகு மின் உற்பத்தி நிலையங்கள்**

**வினா எண் 31107—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காவேரி ஆற்றின் குறுக்கே மதகு மின் உற்பத்தி நிலையங்கள் மேலும் சில அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) காவேரி ஆற்றின் குறுக்கே, மேலும் சில கதவணை புனல் மின் திட்டங்கள் அமைக்கும் பணியில் தமிழக அரசு ஏற்கெனவே ஈடுபட்டுள்ளது.*



**25—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 31113—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் வட்டாரத்தில் ஒரு துணை மின் நிலையம் தொடங்க அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**26—**

**அனல் மின் நிலையம்**

**வினா எண் 31553—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவுமில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

27—

**உயர் அழுத்த மின் கம்பிகள்**

**வினா எண் 31886—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் பகுதியில் கடந்த மே மாதம் உயர் அழுத்த மின் கம்பிகள் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு வெடித்துச் சிதறியதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அரண்மனை புதூர் மின் பாதையின் நடுவில் தென்னை மரக் கிளைகள் விழுந்ததன் காரணமாக மின் கம்பிகள் ஒன்றோடொன்று பின்னியதால் மின் கம்பிகள் அறுபட்டு இப்பழுது ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

**28—**

**குறைந்த மின் அழுத்தம்**

**வினா எண் 31888—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சிப் பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*



*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் 10-7-1999 அன்று மங்கலம் பிரிவு அலுவலகத்தில், மங்கலம் பகுதியில் மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை என தெரிவித்தார். அதைத் தொடர்ந்து மங்கலம் பகுதியில் உள்ள மின் பாதைகள் ஆய்வு செய்யப்பட்டு மின் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு மற்றும் மின் இணைப்புகளுக்கு செல்லும் மின் கம்பிகள் செப்பனிடப்பட்டு மின் அழுத்தம் ஒரே சீராக வருமாறு செய்யப்பட்டது. மேற்கண்ட பணிகள் முடிவுற்றவுடன் அப்பகுதியில் தாழ் மின் அழுத்தம் என்ற பிரச்சனை இல்லாமல் எல்லா விளக்குகளும் எரிகின்றன.*

**29—**

**புதிய மின் மாற்றி**

**வினா எண் 31922—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், இ. சித்தூர் ஊராட்சி நல்லமநாயக்கன்பட்டிக்கு புதிய மின் மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, இ. சித்தூர் ஊராட்சியில் நல்லமநாயக்கன்பட்டிக்கு புதிய மின் மாற்றி அமைப்பதற்கான அனுமதி பெறப்பட்டு அந்த 63 கே.வி.ஏ./22 கே.வி.ஏ. மின் மாற்றி சித்தூர் கிராமத்தில் 22-11-1999 அன்று இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டது.*

[2000 மே 18

30—

### உயர் அழுத்த மின் மாற்றி

**வினா எண் 31927—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், கோவிலூர் ஊராட்சி தோப்புபட்டிக்கு உயர் அழுத்த மின் மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் ஒன்றியம், கோவிலூர் ஊராட்சி தோப்புபட்டி கிராமம் முழுவதும் தற்போது இரண்டு மின் மாற்றிகள் (ஒன்று 100 கே.வி.ஏ. மற்றொன்று 63 கே.வி.ஏ.) மூலம் மின்னூட்டப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு மின் மாற்றிகளிலும் இணைக்கப்பட்டுள்ள மின் பளுவானது மின் மாற்றியின் நிர்ணயிக்கப்பட்ட மின் பளுவைவிட குறைவாகவே உள்ளது. எனவே தோப்புபட்டியில் புதிய மின மாற்றி அமைப்பது தற்போதைக்கு அவசியமில்லை.*

31—

### துணை மின் நிலையம்

**வினா எண் 31943—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சி, சத்திரப்பட்டியிலுள்ள 33 கி.வாட் துணை மின் நிலையத்தை 110 கி.வாட் ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

32—

### உப மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

**வினா எண் 31970—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், பாலப்பாடி ஊராட்சியில் அமைந்திருக்கும் உப மின் நிலையத்தை 110 கே.வி.யாக உயர்த்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

33—

### தனிக் கட்டடம்

**வினா எண் 32083—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) குரோம்பேட்டையிலுள்ள தாம்பரம் வட்ட மருத்துவமனைக்கு விபத்துப் பகுதிக்கு தனிக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[2000 மே 18

*(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**34—**

### படுக்கைகளை அதிகரித்தல்

**வினா எண் 32085—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குரோம்பேட்டையிலுள்ள தாம்பரம் வட்ட மருத்துவமனையில் அக நோயாளிகள் படுக்கைகளை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**35—**

### மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள்

**வினா எண் 32285—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குத்தாலம் தொகுதி, குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு வட்ட மருத்துவமனைக்குரிய வசதிகள் செய்து தரப்படுமா?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இதுபற்றிய திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**36—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 32295—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குத்தாலம் தொகுதி, குடவாசல் 110 K.V. துணை மின் நிலையம் 230 K.V. Grid மின் நிலையமாக அப்பகுதி மின் தேவையைக் கருதி மாற்றித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குத்தாலம் தொகுதி குடவாசலில், அப்பகுதி மின் தேவையை கருத்தில் கொண்டு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவப்பட்டு, 18-8-1999 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. அதை 230 கி.வோ. துணை மின் நிலையமாக உயர்த்துவதற்குரிய அவசியம் தற்போது எழவில்லை.*

**37—**

### நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 32306—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பவானி அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு தொடங்க ஆவன செய்யப்படுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பவானி அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**38—**

### இயந்திரத்தைச் சீர் செய்தல்

**வினா எண் 32325—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறு மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பிரிவில் உள்ள இயந்திரம் பழுதுபட்டு மின்னுற்பத்தித் தடைப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை சீர்செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது மின் உற்பத்தி நிலையமாதலால் பழுதினை நிவர்த்தி செய்யும் பணி உடனே போர்க்கால அடிப்படையில் ஆரம்பித்து, பணி முடித்து 9-9-1999 ஆம் நாள் முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியது.



**39—**

### நெஞ்சக நோய் மருத்துவமனை

**வினா எண் 32330—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி சானடோரியத்தில் உள்ள நெஞ்சக நோய் மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு உணவிற்கு ரூ. 20/- ஒரு நாளைக்கு தருவதை ரூ. 30/- ஆக உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**40—**

### குறைந்த மின் அழுத்தத்தைக் குறைத்தல்

**வினா எண் 32341—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறைந்த மின் அழுத்தப் பிரச்சினை அதிகரித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[2000 மே 18

(அ) தமிழ்நாட்டில் குறைந்த மின் அழுத்தப் பிரச்சினை அதிகரிக்கவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

41—

**சுகாதார மையம்**

**வினா எண் 32428—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் லெவிஞ்சுபுரம் ஊராட்சிக்குட்பட்ட கன்னங்குளம் கிராமத்தில் சுகாதார மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னங்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம இல்லை.

42—

**மின் கட்டணம் வசூல்**

**வினா எண் 32615—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதியில் மின்வாரியங்களில் 2 மாதங்களுக்கு ஒரு முறை மின் அளவு எடுத்தல் மற்றும் மின் கட்டணம் வசூல் செய்தல் ஆகிய பணிகளை தடையின்றி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

43—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 32617—திரு. மீ.அ. வைதியலிங்கம்.** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூரில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) சோழிங்கநல்லூரில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

44—

**மின் வாரிய அலுவலகம்**

**வினா எண் 32665—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தாம்பரம் தொகுதியில் பழைய பெருங்களத்தூர் முடிச்சூர் பொதுமக்கள் நலன் கருதி பழைய பெருங்களத்தூரில் மின் வாரிய அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**45—**

**மடிப்பாக்கத்தில் துணை மின் நிலையம்**

**வினா எண் 32666—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி மடிப்பாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி இவ்வாண்டு நிறைவு பெறுமா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துணை மின் நிலையம் அமைக்க தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்குள் இப்பணி முடிக்கப்படும்.

**46—**

**புதிய துணை மின் நிலையம்**

**வினா எண் 32668—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பாக்கம் பேரூராட்சி, கௌரிவாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியின் இன்றைய நிலை என்ன?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்க வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்யும் பணிகள் முடிவுற்றதும், துணை மின் நிலையப் பணிகள் தொடங்கப்படும்.

**47—**

**தமிழ்நாட்டில் மின் உற்பத்தி**

**வினா எண் 32672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கும், உபயோகத்திற்கும் இடையில் நிலவும் சதவிகிதம் எவ்வளவு?

(ஆ) அதைக் குறைக்க, சமப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் மார்ச் முடிய) தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கும், உபயோகத்திற்கும் இடையில் நிலவும் வித்தியாசம் 1.4 விழுக்காடாகும்.

(ஆ) இந்தப் பற்றாக்குறையை சமப்படுத்த அரசு கிழக்கு பிராந்தியத்திலிருந்து 150 மெகா வாட்டும், பஞ்சாப் மாநிலத்திலிருந்து 100 மெகா வாட்டும், மராட்டிய மாநிலத்திலிருந்து 100 மெகா வாட்டும், பாண்டிச்சேரி மின் கழகத்திலிருந்து 24 மெகா வாட்டும் பெற தமிழ்நாடு மின் வாரியம் ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது. மேலும் கேரள மாநிலத்திலிருந்து 100 மெகா வாட்டுகள் பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[2000 மே 18

48—

### காற்றாலை மின்சாரம்

**வினா எண் 32998—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு என்ன?

(ஆ) அதனை அதிகரிக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பொது ஆய்வு காற்றாலைகள் 19,355 மெகாவாட் திறன் கொண்ட 120 காற்றாலை இயந்திரங்களிலிருந்தும் தனியார் காற்றாலைகள் 775.285 மெகாவாட் திறன் கொண்ட 2593 காற்றாலை இயந்திரங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமாகிய 4150.734 மில்லியன் யூனிட்டுகள் 31-3-1999 முடிய தமிழ்நாடு மின்சார வாரிய கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளது.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து தனியார் தொழில் முனைவோருக்கு பல்வேறு சலுகைகள் மத்திய மாநில அரசுகளால் வழங்கப்படுவதன் மூலமும் பெறப்படும் அளவு அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

49—

### சேலம் மாவட்டத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம்

**வினா எண் 32999—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) சேலம் மாவட்டத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. சேலம் மாவட்டத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

### துணை மின் நிலையம்

**வினா எண் 33002—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் சேலத்தாம்பட்டியில் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்தாம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

### அஸ்தம்பட்டியில் துணை மின் நிலையம்

**வினா எண் 33003—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

*(அ) சேலம் நகரிலுள்ள அஸ்தம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அஸ்தம்பட்டி என்னுமிடத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.*

**52—**

**எடப்பாடியில் துணை மின் நிலையம்**

**வினா எண் 33007—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள துணை மின் நிலையம் தற்போது 110 கே.வி. ஆக இருப்பதை 230 கே.வி. ஆக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தொழில்நுட்ப ரீதியாக தற்போதுள்ள எடப்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்தை 230 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.*

**53—**

**விழிப்புணர்வு மாநாடு**

**வினா எண் 33565—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) தமிழ்நாட்டில் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களை முழுமையாகக் குணப்படுத்த முடியும் என்பதை பொதுமக்களுக்கு உணர்த்த அரசு எடுத்த தீவிர நடவடிக்கை என்னென்ன?*

*(ஆ) வலிப்பு நோய் விழிப்புணர்வு மாநாடு எந்தெந்த மாவட்டத்தில் நடத்தப்பட்டது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் முக்கிய வட்ட மருத்துவமனைகளில் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நோயாளிகள் தொடர்ந்து உரிய சிகிச்சை எடுத்துக்கொண்டால் முழுமையாகக் குணப்படுத்த முடியும் எனபதை மருத்துவர்கள் நோயாளிகளுக்கு அவ்வப்போது அறிவுறுத்தி வருகிறார்கள்.*

*(ஆ) வலிப்பு நோய் விழிப்புணர்வு மாநாடு எந்த மாவட்டத்திலும் அரசு அளவில் நடத்தப்படவில்லை.*

**54—**

**பொறியியல் கல்லூரி**

**வினா எண் 33632—திரு. ஆர்.ஆர் சேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மின்சார வாரியத்தின் சார்பாக பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது தொடங்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மின்சார வாரியத்தின் சார்பாக பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

55—

## மின்சாரத்தை அதிகரித்தல்

**வினா எண் 33633—திரு. ஆர்.ஆர் சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலைகள் மூலம் பெறப்படும் மின்சாரத்தை அதிகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) தற்போது எத்தனை மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து தனியார் தொழில்முனைவோருக்கு பல்வேறு சலுகைகள் மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படுவதன் மூலமும் பெறப்படும் அளவை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) பொது ஆய்வு காற்றாலைகள் 19.355 மெகாவாட் திறன் கொண்ட 120 காற்றாலை இயந்திரங்களிலிருந்தும் தனியார் காற்றாலைகள் 827.530 மெகாவாட் திறன் கொண்ட 2,736 காற்றாலை இயந்திரங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமாகிய 5568.114 மில்லியன் யூனிட்டுகள் 31-1-2000 முடிய தமிழ்நாடு மின்சார வாரிய கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளது.

56—

## காலதாமதத்தைத் தவிர்த்தல்

**வினா எண் 29684—திரு. ஏ.வி.ஏ. நாசர்**—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலம் கிரயம் செய்யும்போது பட்டா பெயர் மாற்றம் செய்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கிரையப் பத்திரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பட்டா வழங்கப்படுவதில்லை. அவரது நிலவியல் அனுபவத்தையும் அனுசரித்தே பட்டா வழங்கப்பட்டு வருகிறது. நீதிமன்றங்களில் தாக்கலாகி உள்ள வழக்குகளில் உட்பட்ட இனங்களுக்கு, நீதிமன்றத் தீர்ப்பாணை பெறப்பட்ட பின்னரே பட்டா வழங்க இயலும். ஏனைய விவரங்கள் முற்றிலும் அடங்கிய பத்திரங்கள்மீது தாமதமின்றி பட்டா மாறுதல் செய்யப்பட்டு வருகிறது.

57—

## புதிய வட்டம்

**வினா எண் 29873—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"ராயக்கோட்டையினை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தினை அரசு தொடங்க முன்வருமா?"

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

58—

## வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 29915—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரியாப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

காரியாப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**59—**

**சாதிச் சான்று**

**வினா எண் 30777—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆயிலவாடி கிராமத்தில் வசிக்கும் மலைக்குறவர் இனத்திற்கு சாதிச் சான்று வழங்க மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இச்சான்று வழங்க அரசு முயற்சிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆயிலவாடி கிராமத்தில் மலைக்குறவர் இனத்தைச் சேர்ந்த குடும்பங்கள் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**60—**

**வருவாய் கிராமங்களைப் பிரித்தல்**

**வினா எண் 31143—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய வருவாய் கிராமங்களை நிருவாக வசதியைக் கருதி இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**61—**

**தனி வட்டம்**

**வினா எண் 31917—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் வட்டத்திலிருந்து குஜிலியம்பாறையை தனியாகப் பிரித்து அதனை மையமாகக் கொண்டு தனி வட்டமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**62—**

**குஜிலியம்பாறை ஒன்றியத்தை வட்டமாக்குதல்**

**வினா எண் 31947—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**64—**

**பணியாளர்களை வேறு துறைக்கு மாற்றுதல்**

**வினா எண் 32081—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்புப் பணி முடிவடைந்துவிட்டதால் அந்தத்துறையைக் கலைத்துவிட்டு அதில் பணிபுரிபவர்களை வேறு துறைக்கு மாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நகர்ப்புற நிலவரிச் சட்டம் இரண்டும் ஒரே துறையில் கையாளப்படுகின்றன. உச்சவரம்புக்கென தனித்துறை இல்லை. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நீக்கப்பட்டதால் இரண்டு கட்டங்களில் 180 பணியிடங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. அப்பணியாளர்கள் முன்பு வருவாய்த் துறையில் பணியாற்றி வந்த மாவட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர்.

**64—**

**கிராம நிர்வாக அலுவலர்கள்**

**வினா எண் 3241—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம நிர்வாக அலுவலர்களை வாரத்திற்கு ஒரு நாள் ஊராட்சி அலுவலகத்திற்குக் கட்டாயம் வந்து செல்லும்படி அரசு உத்தரவு பிறப்பிக்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக கிராம நிர்வாக அலுவலர்கள் கிராமச் சாவடிகளில் தங்களது அன்றாட அலுவல்களை தினமும் வந்து கவனிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கிராம நிர்வாக அலுவலர்களுக்கென தனியே அலுவலகம் உள்ள நிலையில் அவர்களை வாரத்திற்கு ஒரு நாள் ஊராட்சி அலுவலகத்திற்கு வந்து செல்லும்படி உத்திரவு வெளியிட அவசியமேதுமில்லை.

**65—**

**விடுகள் கட்ட இடம்**

**வினா எண் 32989—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் நிலக்கோட்டை தொகுதியில் பாதிக்கப்பட்ட கிராமங்கள் எத்தனை?

(ஆ) அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு மாற்று இடம் எப்போது கொடுக்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 12 கிராமங்கள்.

(ஆ) 12 கிராமங்களில் சித்தர்கள் நத்தம் மற்றும் அதன் உட்கடை கிராமங்களான மல்லியம்பட்டி, பறையப்பட்டி, சக்கிலியப்பட்டி ஆகிய கிராமங்கள்தான் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டன. மேற்கண்ட கிராமங்களில் மிகவும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வீட்டுமனை வழங்க முசுவனூத்து கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு நிலம் பாகுபாடு மாற்றம் செய்யப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

66—

## வெள்ளத்தால் உயிர் இழந்தவர்கள்

**வினா எண் 33566—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நவம்பர்-டிசம்பர் 1999 வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்? வீடு இழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதற்கு அரசு அளித்த நிவாரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

| (அ) மாவட்டம் | உயிரிழந்தவர்கள் | வீடு இழந்தவர்கள் | |
|---|---|---|---|
| | | முழுமை | பகுதி |
| திருச்சிராப்பள்ளி | 7 | 3052 | 10384 |
| தஞ்சாவூர் | 5 | 1432 | 10689 |
| நாகப்பட்டினம் | 5 | 19 | 258 |

(ஆ) உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் இவ்வரசின் சார்பாக தலா ரூ. 15,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 1000/- வீதமும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 500/- வீதமும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

67—

## புதிய வட்டம்

**வினா எண் 34579—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சை வட்டத்தைப் பிரித்து பூதலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

68—

## வருவாய் கோட்டம்

**வினா எண் 34580—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம், பேரையூர், மதுரை தெற்கு ஆகிய வட்ட புறநகர் பகுதிகளை திருமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் கோட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

69—

## மயானம்

**வினா எண் 37716—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 19-வது வார்டில் உள்ள ஆதிதிராவிடர் மக்கள் பயன்படுத்தும் மயானத்தை அதிகாரபூர்வமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு விரைவில் ஒப்படைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 19-வது வார்டில் உள்ள ஆதிதிராவிட மக்கள் தற்போது சவுரிபாளையம் கிராமம், பாரதிபுரத்தில் உள்ள மயானத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மயானம் அமைந்துள்ள இடம் புறம்போக்கு நிலம் ஆகும். மேலும் இது கோவை மாநகராட்சியின் அனுமதிக்கப்படாத மயானம் ஆகும். இந்த புறம்போக்கு நிலத்தை கோவை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யக் கோரி நகராட்சிக்கு நிர்வாக ஆணையர் மூலம் கோவை வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**70—**

### சாலை வசதி

**வினா எண் 1855—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பெருமாநல்லூர் ரோடு, சுடுகாட்டின் வடபகுதியில் அடைக்கப்பட்டுள்ள சாலையை மீண்டும் திறந்துவிடக் கோரும் முறையீடு அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பெருமாநல்லூர் ரோடு சுடுகாட்டின் வடபகுதியில் உள்ள சாலை தற்போது திறந்துவிடப்பட்டு பொதுமக்களின் உபயோகத்தில் உள்ளது.



2000 மே 18]

**71—**

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 1917—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் ஒன்றியம் பாப்பைநாயக்கன்பட்டி அப்பைநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கூட்டுக்குடிநீர் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் ஒன்றியம், பாப்பைநாயக்கன்பட்டி, அப்பைநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தற்போது ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டு விட்டது.

**72—**

### மின்சார வசதி

**வினா எண் 2431—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், அஞ்சேஹள்ளி ஊராட்சி, காட்டு நாயக்கன் ஹள்ளி மற்றும் சுஞ்சல் நத்தம் ஊராட்சி, கொங்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2000 மே 18

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம் அஞ்சேஹள்ளி ஊராட்சி காட்டுநாயக்கன் ஹள்ளி மற்றும் சுஞ்சல் நத்தம் ஊராட்சி கொங்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு மின்விளக்கு வசதி செய்துதர மாவட்ட ஆட்சித் தலைவரால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**73—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 2464—திரு. எல் மூக்கையா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம் - மன்னவனூருக்கு பாப்பாற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடைக்கானல் ஒன்றியம் மன்னவனூருக்கு குடிநீர்த் திட்டம் 1998-1999 அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 3/2000-க்குள் முடிக்கப்பெற்று மக்களின் பயனுக்கு கொண்டு வரப்படும்.

**74—**

**மானாமதுரைக்கு குடிநீர் வசதி**

**வினா எண் 2734—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையில் மழைக்காலத்தில் தண்ணீர் வரும்போதெல்லாம் மானாமதுரைக்கு குடிநீர் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைப் போக்க மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கடந்த 11-12-1998-ல் வைகை ஆற்றில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் குடிநீர் குழாய்கள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதால் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது.

(ஆ) இதனை சீர் செய்து கடந்த 1-1-1999 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**75—**

**கடல் நீரை குடிநீர் ஆக்கும் திட்டம்**

**வினா எண் 2773—திரு. நா. பெரியசாமி (மற்றும்) திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்நீரை குடிநீர் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**76—**

**கட்டட வசதி**

**வினா எண் 2903—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) திருப்பூர் ஜெய்வாபாய் நகராட்சி பெண்கள் மேனிலைப்பள்ளிக் கட்டடத்திற்குள் தனியார் பள்ளி நடந்து வருவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர், ஜெய்வாபாய் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டடத்திற்குள் தனியார் பள்ளி நடைபெற்று வருவதற்கு ஆட்சேபணை தெரிவித்து, பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையிலுள்ளது. தீர்ப்பு அளிக்கப்பட்டபின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**77—**

**கூட்டுக் குடிநீர் திட்டம்**

**வினா எண் 3859—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, சண்முக நதியிலிருந்து தொப்பம்பட்டி, சரவணபட்டி, ஆலாவலசு, கந்தப்பகவுண்டன்வலசு, வாகரை, வேலம்பட்டி., மேட்டுப்பட்டி, பூசாளக்கவுண்டன்வலசு, போருளூர், கள்ளிமன்தையம் ஆகிய ஊர்களுக்கு "கூட்டுக் குடிநீர் திட்டம்" உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் சண்முக நதியிலிருந்து, தொப்பம்பட்டி, சரவணப்பட்டி, ஆலாவலசு



2000 மே 18]

கந்தப்பக்கவுண்டன்வலசு, தேவதானவலசு ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தர சரவணப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது உத்தேச மதிப்பீடு தயார் செய்து ரூ. 24.96 லட்சங்களுக்கு தலைமைப் பொறியாளர்/தென் மண்டலம்/மதுரை அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஜூலை 1999-ல் முடிக்கப்படும்.

**78—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 3869—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்குரிய பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1971-ஆம் வருடம் ஏப்ரல் 14ஆம் நாளில் தமிழக அரசால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோற்றுவிக்கப்பட்டு, மாநிலம் முழுமைக்கும் (சென்னை பெருநகர் நீங்கலாக) குடிநீர் வசதிகளை செய்து தரும் பணியினை கடந்த 28 வருடங்களாக இந்த வாரியம் தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது. அரசு ஆணை எண் 260/ஊவ (குவ) துறை, நாள் 9-12-1998-ன்படி தமிழகத்தின் ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்பு வழங்க உத்திரவிட்டுள்ளதின் பேரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஊரக குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும், நகர பகுதிகளுக்கு அண்மையில் உள்ள குடியிருப்புகளுக்கு 70 லிட்டர் வீதமும் வழங்க தீர்மானிக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்படுகின்றன.

[2000 மே 18

**79—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 3870—திரு. ரா. சேதுநாதன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டிவனம் நகர குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க புளிச்சம்பள்ளம் குடிநீர்த் திட்டத்தை திண்டிவனம் நகராட்சியிடமிருந்து மீண்டும் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.*

**80—**

**எழுத்தர் பணியிடங்கள்**

**வினா எண் 4503—திரு. கொ. வீ. நன்னன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, ஊராட்சி ஒன்றியங்களில் எழுத்தர் பதவிகள் குறைவாக உள்ளதால் அதன் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) தற்போதுள்ள எழுத்தர் பணியிடங்கள் போதுமானவையாக உள்ளது.*

*(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.*



2000 மே 18]

**81—**

**குடிநீர் மேம்பாடு**

**வினா எண் 4706—திரு. இரா. தாமரைக்கனி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சி குடிதண்ணீர் மேம்பாட்டிற்காக 25-11-1983 தேதிய அரசு ஆணை எண் 1746-ன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டு என்ன வேலை நடந்துள்ளது.*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.*

## இணைப்பு

**சட்டமன்றப் பேரவை வினா எண் 4706 (உடுக்குறியிட்டது)-க்குரிய விவர அறிக்கை**

*25-11-1983 தேதிய அரசு ஆணை எண் 1746-ன்படி திருவில்லிபுத்தூர் நகராட்சியில் ரூ.214.00 லட்சம் மதிப்பீட்டில் குடிதண்ணீர் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள அரசால் தற்காலிக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அப்பணிகளுக்காக இதுவரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ.56.11 இலட்சமும் அரசிடமிருந்து ரூ.42.32 இலட்சமும் மொத்தம் ரூ.98.43 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பெறப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:*

(1) நீர் ஏற்றும் நிலையம் அமைத்து நீர் ஏற்றும் குழாய் அபிவிருத்தி செய்யப்பட்டது.

(2) மேல்நிலை நீர்தேக்க தொட்டி (பத்து லட்சம் லிட்டர் கொள்ளளவு அமைக்கப்பட்டது).

(3) நகரின் பல பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள் 32 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன.

(4) வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் 3 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு இம்மூன்று ஆழ்துளைக் கிணறுகளில் நீர் ஏற்று இயந்திரங்கள் அமைத்து மின் இணைப்பு அறை கட்டி மூன்று ஆழ்துளைக் கிணறுகளிலிருந்தும் சேகரிப்பு கிணற்றிற்கு நீர் ஏற்றுக் குழாய்கள் அமைக்கப்பட்டன.

(5) தண்ணீர் தலைமை நிலையத்தில் இரண்டு திறந்த வெளிக்கிணறுகள் அமைத்து நீர் ஏற்று இயந்திரம் பொருத்தி குழாய்கள் பதிந்து சேகரிப்பு கிணற்றுடன் இணைக்கப்பட்டன.

(6) முதல் குடிநீர் திட்டத்தில் அமைக்கப்பட்ட நீர் ஏற்று குழாய்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. எனவே இக்குழாய்கள் புதிதாக அமைக்கப்பட்டன.

(7) பழைய மின்அறை புதுப்பித்து அமைக்கப்பட்டுள்ளது.

(8) பேயனார் ஆற்றின் குறுக்கே வெள்ளத்தால் உடைந்த தடுப்புச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.





(9) தலைமையிடத்தில் புதிதாக இரண்டு ஆழ்துளைக்கிணறுகள் அமைத்து மின் இணைப்பு அறை கட்டி இதற்கான நீர் ஏற்று குழாய்கள் அமைத்து முடிக்கப்பட்டன.

**82—**

### மாதிரி வடிகால் வசதி

**வினா எண் 5390—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லாறு என்ற ஆற்றை ஒட்டியுள்ள கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற சாக்கடைகள் நல்லாற்றை நோக்கிச் செல்கிற மாதிரி வடிகால் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடபகுதியான திருநீலகண்டபுரம், கண்ணகி நகர், காட்டன்மில் ரோடு, பிச்சம்பாளையம், சக்தி தியேட்டர் சாலை ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறும் மழைநீர் மற்றும் கழிவுநீர் இயற்கை அமைப்பின் காரணமாக பெருமாநல்லூர் சாலையின் வழியாக நகர எல்லைக்கு வெளியே நல்லாறு பகுதிக்குச் சென்று கச்சாவடிகாலில் தேங்கி மக்களுக்கு சுகாதார கேடு விளைவித்து வருகிறது. ஆதலால் பெருமாநல்லூர் சாலையின் கீழ்புறம் நகராட்சி எல்லைக்கு வெளியே உள்ளதால் தொட்டிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட காட்டன்மில் சாலையிலிருந்து நல்லாறு பாலம் வரை வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட அரசின் அனுமதி கோரப்பட்டது. நகராட்சி எல்லைக்கு அப்பால் ஊராட்சிப் பகுதியில் வடிகால் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி மற்றும் பங்குத்தொகை ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையினரை கலந்தாலோசித்து மேல்நடவடிக்கை தொடர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2000 மே 18

83—

## நகராட்சி நிலம்

**வினா எண் 5392—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சிக்குச் சொந்தமான நிலம் தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நகராட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட வீதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. வீதிகளைத் தவிர நகராட்சிக்குச் சொந்தமான 86 இடங்களுள், 11 இடங்களில் தற்சமயம் ஆக்கிரமிப்புகள் உள்ளன. பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கோயில்கள் மருதியினால் ஏற்பட்டுள்ள 6 ஆக்கிரமிப்புகள் மற்றும் வழக்குமன்றத்தில் உள்ள இரண்டு இனங்கள் தவிர, மீதம் மூன்று இனங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

84—

## பாலம் அமைத்தல்

**வினா எண் 6552—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர் ஓடாத்தூர் சாலைக்கிடையில் கிருதுமால் நதியில் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

85—

## சாலை வசதி

**வினா எண் 5663—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம் குறிச்சியில் இருந்து கல்பாலி வரை செல்லும சாலை செப்பனிடப்படவும், குறிச்சியில் இருந்து அக்கரையூருக்கு சாலைவசதி செய்து கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குறிச்சியிலிருந்து கல்பாலி வரையுள்ள 2.00 கி.மீ. தார்ச்சாலைப்பணி, 1997-98-ம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு, தார்ச்சாலை ரூ.4.62 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் குறிச்சியிலிருந்து அக்கரையூருக்கு 1997-98-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3.91 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கப்பட்டுவிட்டது.

86—

## குடிநீர் வசதி

**வினா எண் 5784—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஒன்றியத்தை சார்ந்த சமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட பேக்காடு, பொத்திக்காடு, கருமக்கவுண்டன் வளவு, உப்பாரப்பட்டி ஆகிய பகுதிகளில் குடியிருப்போருக்கு போதுமான குடிநீர் வசதி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி-பேக்காடு, பொத்திக்காடு, கருமக்கவுண்டன் வளவு மற்றும் உப்பாரப்பட்டி பகுதிகளில் தற்போது போதுமான குடிநீர் வசதி வழங்கப்பட சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**87—**

**வாகனங்கள் ஏலம்**

**வினா எண் 6091—திரு. மீ.அ. வைதியலிங்கம் (மற்றும்) திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றிய அலுவலகங்களில் பழுதடைந்த பல இலட்சம் மதிப்புள்ள வாகனங்கள் ஏலம் விடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பழுதடைந்த வாகனங்களை கழிவு செய்வதற்கான சான்றுகளை மோட்டார் வாகன பராமரிப்புத் துறையிடமிருந்து பெறப்படுகின்றன. பின்னர் சம்பந்தமான ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையினரால் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஏலம் விடுவதற்காக தக்க முன்மொழிவுகள் அனுப்பப்படுகின்றன. மோட்டார் வாகன பராமரிப்புத் துறையினரால் பழுதடைந்த வாகனங்கள் படிப்படியாக ஏலம் விடப்பட்டு வருகிறது.



2000 மே 18]

**88—**

**ஆய்வுப்பணி**

**வினா எண் 6604—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், குன்னத்தூர் பகுதியில் பொதுப் பணித் துறையின் மூலம் குடிநீர் ஆதாரம் குறித்த ஆய்வுப்பணி நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னத்தூர் பகுதியில் குடிநீர் ஆதாரம் குறித்த அமைப்புப் பணிகள் பொதுப் பணித் துறையின் மூலமோ அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமோ தற்போது நடைபெறவில்லை.

**89—**

**நெடுஞ்சாலையாக்குதல்**

**வினா எண் 8985—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) பெரியார் மாவட்டம், பவானி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பவானி நகரில் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பழனி ஆண்டவர் கோயில் வழியாக செல்லும் நகராட்சி சாலையை மாநில நெடுஞ்சாலைத் துறை சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், பவானி சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட பவானி நகரில், பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பழனி ஆண்டவர் கோயில் வழியாகச் செல்லும் நகராட்சி சாலையை மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க அரசு 13-8-1999 அன்று ஆணையிட்டுள்ளது.

**90—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 7302—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.



2000 மே 18]

**91—**

**குடிநீர்த் திட்டப் பணிகள்**

**வினா எண் 7361—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பாலமேடு, தச்சைகட்டி மற்றும் இரும்பாடி பகுதிகளில் நடைபெற்றுவரும் குடிநீர்த் திட்டப் பணிகள் எப்பொழுது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. புதிய திட்டப் பணிகள் ஏதும் இல்லை. கச்சைகட்டி பகுதியில் குடிநீர்த்திட்டப் பணிகள் முடிவுறும் நிலையிலுள்ளன. இரும்பாடி பகுதியில் குடிநீர் திட்டப்பணிகள் 2000-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

**92—**

**குடிநீர்த் திட்டங்கள்**

**வினா எண் 7432—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியத்தில் 1995-96 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அத்திட்டங்களின் இன்றைய நிலை என்ன?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதி, பரங்கிமலை ஒன்றியத்தில் 1995-96-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் 6 ஆகும்.

(ஆ) மேற்கொள்ளப்பட்ட 6 திட்டங்களில், 5 குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. நிலுவையிலிருந்த 1 சுவாமிநாத நகர் குடியிருப்புக்கு 1999-2000 ஆம் நிதி ஆண்டில் ரூ. 12.80 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

**93—**

**குடிநீர் திட்டத்தை விரிவாக்கம் செய்தல்**

**வினா எண் 7723—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் அணையிலிருந்து மதுரை நகர் வரை செயல்படும் குடிநீர்த் திட்டத்தை பரமக்குடி இராமநாதபுரம் வரை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**94—**

**கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 7966—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

பெரிய குளம் தொகுதி, கொடைக்கானல் ஒன்றியம், கும்பரையூர், பாச்சலூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியகுளம் தொகுதி, கொடைக்கானல் ஒன்றியம், கும்பரையூர் கிராமத்திற்கு குடிநீர் வழங்க தொழில் நுட்ப ஒப்புதல் ரூ.16.16 இலட்சங்களுக்கு அளிக்கப்பட்டு பணிகள் 3/2000-க்குள் முடிக்கப்படும். பாச்சலூர் கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் திட்டம் 11/98-ல் முடிக்கப்பட்டு உள்ளாட்சி நிர்வாகத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**95—**

**ஏரிகளை தூர் வாருதல்**

**வினா எண் 8059—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சோலையார்பேட்டை ஒன்றியம் கல்நார்சாம்பட்டி, பணியாண்டப்பள்ளி ஆகிய ஏரிகளைத் தூர் வாரி செப்பனிடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கல்நார்சாம்பட்டி ஏரி 1998-99-ம் நிதியாண்டில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியான்டப்பள்ளி ஏரி 1999-2000-ம் ஆண்டில் தூர் வாரும் பணிமேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

96—

### சுற்றுப்புறச் சுவர்

**வினா எண் 8304—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தின் மையப்பகுதியிலுள்ள ராஜாங்குளத்திற்கு சுற்றுப்புறச் சுவர் கட்டி காவலாளி நியமித்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திண்டிவனம் நகரின் இராஜாங்குளம் 20.82 ஏக்கர் பரப்பில் திறந்த வெளியாக இருப்பதால் மழைநீர் அதிகமாக நிரம்பியிருப்பதாலும் குளத்தைச் சுற்றிலும் சுவர் எழுப்பி குளத்துக்கு இரண்டு காவலாளிகளை நியமனம் செய்யும் வகையில் நகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதாலும் கண்காணிப்பு பணி மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது.

97—

### குடிநீர் வழங்கல்

**வினா எண் 8341—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பல்பாக்கி ஊராட்சி, மொரப்பம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, கீழ்காமாண்டபட்டி, அருந்ததியர் தெரு, குட்டகாடு ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.



98—

### கிராமங்களுக்கு குடிநீர் வசதி

**வினா எண் 8660—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கனாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி மற்றும் சமுத்திரம் ஊராட்சியில் சில கிராமங்களில் போடப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகள் பல மாதங்களாகப் பழுதடைந்திருப்பதால், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி மற்றும் சமுத்திரம் ஊராட்சியில் தற்போது குடிநீர் பிரச்சினை ஏதுமில்லை.

99—

### குறைந்த பட்ச கூலி

**வினா எண் 8679—திரு. நா. பெரியசாமி மற்றும் திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து வரும் விசைப்பம்பு இயக்குநர்கள் குறைந்தபட்சக் கூலி அமலாக்கக் கேட்டு முறையிட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**100—**

**கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம்**

**வினா எண் 8691—திரு. கே. தங்கமணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம், கீழராங்கியம் கூடத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிதண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கீழராங்கியம் அரிசனக் காலனி மற்றும் கூடத்துப்பட்டி ஆகிய இரு கிராமங்களுக்கும் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு 6/99 முதல் பயனில் உள்ளது. கீழராங்கியம் கிராமத்தில் உள்ள குடிநீர்த் திட்டத்தின் நீராதாரம் உவர் நீராக மாறிவிட்டபடியால் நடப்பு நிதியாண்டில் (1999-2000) கீழராங்கியம், மேல்ராங்கியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் நிறைவேற்றி முடிக்கப்படும்.*





**101—**

**மின் விளக்குகள்**

**வினா எண் 9365—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பாதை முழுவதும் மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**102—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 9385—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, துரும்பூர் ஊராட்சியில் மண்ணியாற்றின் குறுக்கே கிழமாஞ்சேரி ஆதிதிராவிடர் காலனியை இணைக்கும் பாலம் எப்போது கட்டப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*பாபநாசம் தொகுதி, துரும்பூர் ஊராட்சியில் மண்ணியாற்றின் குறுக்கே, கிழமாஞ்சேரி ஆதிதிராவிடர் காலனியை இணைக்கும் வகையில் பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

[2000 மே 18

**103—**

**கூட்டுக் குடிநீர் திட்டம்**

**வினா எண் 9424—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளியன்வலசு அருகே ஒரு சமுதாயக் கிணறு அமைத்து, கே.கீரனூர், மண்டவாடி, இ.வாடிப்பட்டி, அம்பிளிக்கை ஆகிய ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெள்ளியன்வலசில் சமுதாயக் கிணறு அமைத்து, கே.கீரனூர், மண்டவாடி, இ.வாடிப்பட்டி, அம்பிளிக்கை ஊராட்சியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணிகள் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. ஆனால், அம்பிளிக்கை தவிர இதர குடியிருப்புகளுக்கு தனித் திட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அம்பிளிக்கை குடியிருப்புக்கு போதுமான குடிநீர் வசதியுள்ளது.

**104—**

**ஊராட்சிகளுக்கு குடிநீர் வசதி**

**வினா எண் 9425—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், இராமபட்டினம் புதூர் அருகே உள்ள கோம்பையில் ஒரு சமுதாயக்



2000 மே 18]

கிணறு அமைத்து, மஞ்ச-நாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மஞ்சநாயக்கன்பட்டி மற்றும் போடு வார்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நீராதார பற்றாக்குறையினை போக்குவதற்கு ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு வாரியத்தின் மூலம் கோம்பையில் ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. களப்பணி சிக்கல்களால் அப்பணி தொடர இயலவில்லை. இதே ஆழ்துளைக் கிணற்று நீராதாரத்தை தொடர்ந்து அமைக்க மாற்று வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. தேவத்தூர் ஊராட்சி கோடாங்கிபட்டி குடிநீர் திட்டத்திற்கு நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவில் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் திட்டம் நிறைவு பெறும்.

**105—**

**கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா எண் 9426—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பாலப்பன்பட்டி புதூர் குளத்தருகே ஒரு சமுதாயக் கிணறு அமைத்து அப்பியபாளையம், பாலப்பன்பட்டி, பூசாரிப்பட்டி, அப்பியம்பட்டி, கூத்தம்பூண்டி ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**106—**

**ஒட்டன்சத்திரத்திற்கு குடிநீர் வசதி**

**வினா எண் 9451—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் நகருக்கு, காவிரியாற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒட்டன்சத்திரம் நகரப் பேரூராட்சி, பாளையம் நகரப் பேரூராட்சி, வேடசந்தூர் நகரப் பேரூராட்சி, தாடிக்கொம்பு, எரியோடு, அகரம் ஆகிய கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இதற்கான திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 6/1999-க்குள் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**107—**

**பாலம்**

**வினா எண் 9767—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு பேரூராட்சியிலுள்ள ஆத்துப்படி கிராமத்திற்கு அருகே குடகனாற்றில் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தாடிக்கொம்பு பேரூராட்சி, ஆத்துப்பட்டி கிராமத்திற்கு அருகே குடகனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**108—**

**இராதாபுரத்தில் பேருந்து நிலையம்**

**வினா எண் 10126—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரத்தில் பேருந்து நிலையம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பேருந்து நிலையம் எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், இராதாபுரம் கிராமத்தில் பேருந்து நிலையம் அமைக்கப் போதுமான அரசு

புறம்போக்கு நிலம் இல்லாததால் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தினைக் கிரையம் மூலமாகப் பெற்று அந்நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**109—**

**நாகப்பட்டினத்தில் அரங்கு**

**வினா எண் 10664—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் அரங்கு (Town Hall) கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.25 இலட்சத்தை உபயோகித்து நாகப்பட்டினத்தில் கலையரங்கு ஒன்றைக் கட்ட நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

**110—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 11155—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் கிராமத்தில் பாலம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் நிதி ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும்.

**111—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 12854—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி, ஜெ.ஜெ. நகரில் குடிநீர் வசதி உட்பட எந்தவித அடிப்படை வசதியும் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைக் களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி, ஜெ.ஜெ. நகரானது தனியாரால் 259 மனையிடங்களாகப் பிரித்து அனுமதி பெறாமல் விற்பனை செய்யப்பட்ட குடியிருப்புப் பகுதியாகும். பூமிதாரர்கள் சாலை வசதி மற்றும் பொது உபயோகத்திற்காகத் தேவைப்படும் இடங்களை ஒதுக்கி அரசிடம் ஒப்படைத்தால்தான் அடிப்படை வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

[2000 மே 18

112—

### கிருஷ்ணா நகரில் குடிநீர் வசதி

**வினா எண் 12856—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, சூரிய கிருஷ்ணா நகரில் குடிநீர் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, சூரிய கிருஷ்ணா நகர் என்பது அங்கீகரிக்கப்படாத ஒரு குடியிருப்புப் பகுதியாகும். இருந்தபோதிலும் இப்பகுதிக்கு ஒரு குடிநீர் பைப் அமைத்துக் கொடுக்கப்பட்டு இதன் மூலம் இங்கு தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

113—

### புதிய திருப்பூர் நகரம்

**வினா எண் 12974—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஈட்டிவீரன்பாளையம் பகுதியில் தொழில் வளாகத்தோடு கூடிய புதிய திருப்பூர் நகரம் உருவாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவுறும்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொங்கும்பாளையம் மற்றும் ஈட்டிவீரன்பாளையம் பகுதியில் ஒரு புதிய மாதிரி நகரியம் அமைத்தல் மற்றும் திட்டப்பகுதியில் குடிநீர் வசதி, புதைசாக்கடை அமைத்தல் ஆகிய பணிகளும் 2001 ஆம் ஆண்டு முடிவுக்குள் நிறைவேற்றப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

114—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 13446—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தைச் சுற்றியுள்ள மரக்காணம் ரோடு, இந்திரா நகர், மைலம் ரோடு, கல்பனா நகர், பொன்னி நகர் மற்றும் புதிய குடியிருப்புப் பகுதிகளில் குடியிருப்பவர்கள் வீட்டு வரி, மின் கட்டணம் கட்டியும் அப்பகுதி அங்கீகரிக்கப்பட்ட பகுதி இல்லை (அன் அப்ரூவ்டு லே-அவுட்ஸ்) என்பதால் சாலை, குடிதண்ணீர், தெரு விளக்கு வசதி மறுக்கப்படுவது அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இப்பகுதிகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓரிரு சாலை வசதி, குடிநீர், தெரு விளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

[2000 மே 18

**115—**

**பேரூராட்சி அமைத்தல்**

**வினா எண் 13519—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் — விளந்தை ஆகிய ஊராட்சி மன்றங்களை ஒன்றாக இணைத்து பேரூராட்சியாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**116—**

**ஏரிகளை மேம்படுத்துதல்**

**வினா எண் 2979—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வீராணம் ஏரியின் மேற்கு வடக்குப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.110.95 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் 1996-ல் வழங்கப்பட்டு, பணிகள் 3/98-ல் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் வீராணம் ஏரியில் புதியதாக எதிர்வாய்க்கரை (மேற்குப் பகுதியில்) அமைக்கப்பட்டு வருகிறது.



2000 மே 18]

கரை அமைக்கும் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. கரை அமைப்பதற்குத் தேவையான மண் வீராணம் ஏரியின் உள்ளேயிருந்து எடுக்கப்படுகின்றது. ஏரியில் படிந்துள்ள தூரை முழுமையாக அகற்றுவது பொருளாதார ரீதியில் சாத்தியமில்லாததால் ஏரியின் உச்ச நீர்மட்டத்தை 2 அடி உயர்த்தி ஏரியின் கொள்ளளவினை அதிகப்படுத்தத் திட்டமிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**117—**

**அணையைச் செயல்படுத்துதல்**

**வினா எண் 3127—திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்தில், செஞ்சி பகுதியில் ஓடுகின்ற வராகநதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை கட்டி முடிக்கப்பட்டும் அது இன்னும் சரியாகச் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பணி தலைமைப் பொறியாளரிடம் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப்பின், சாத்தியக்கூறுகள் இருப்பின், நிதி நிலையைப் பொறுத்து பணிகள் செயல்படுத்தப்படும்.

**118—**

**பாண்டியாறு - புன்னம்புழா அணைத் திட்டம்**

**வினா எண் 5766—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

பாண்டியாறு—புன்னம்புழா அணைத் திட்டம் குறித்த கேரளா-தமிழ்நாடு பேச்சுவார்த்தை எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பாண்டியாறு - புன்னம்புழா அணைத் திட்டம் குறித்து 28-11-1996 ஆம் நாளன்று கேரள அரசின் பாசனத் துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்புதல் இவ்வரசால் வழங்கப்பட்டு, இத்திட்டத்திற்கான சர்வே மற்றும் விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசின் இசைவு கேட்கப்பட்டுள்ளது. விரிவான ஆய்வுப் பணி முடிந்தவுடன் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து பெறப்பட்டவுடன், கேரள அரசின் அனுமதி பெற முயற்சி மேற்கொள்ளப்படும்.

**119—**

### ரெகுலேட்டர் அமைத்தல்

**வினா எண் 9676—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பவானி வாய்க்காலில் பவானி கிளை வாய்க்காலிலிருந்து வைரமங்கலம் கிளை வாய்க்கால் பிரியும் இடத்தில் ரெகுலேட்டர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வைரமங்கலம் கிளை வாய்க்கால் பிரியும் இடத்தில் ரெகுலேட்டர் அமைக்கும் வேலைக்கு ரூ.50,000/-க்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.



2000 மே 18]

**120—**

### புதிய படித்துறைகள்

**வினா எண் 17227—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டை, குடமுருட்டி ஆற்றின் பாலம் அருகே பழுதடைந்துள்ள படித்துறைகளுக்குப் பதிலாக புதிய படித்துறைகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குடமுருட்டி ஆற்றின் வலதுகரையில் உள்ள படித்துறை 6/98-ல் அய்யம்பேட்டை பேரூராட்சி முயற்சியால் ரூ.10,000 தொகையில் செய்து முடிக்கப்பட்டது.

**121—**

### பொதுப் பணி ஆய்வு மாளிகை

**வினா எண் 19561—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் புதிய பொதுப் பணி ஆய்வு மாளிகை (பயணியர் விடுதி) ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை (பயணியர் விடுதி) கட்டும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 மே 18

**122—**

**ஒய்வு விடுதிகள்**

**வினா எண் 19997—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஊட்டி மற்றும் கொடைக்கானலில் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஒய்வு விடுதிகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**123—**

**சமூக நலக் காடுகள்**

**வினா எண் 20903—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நிதிநிலை பெருக்கம் பெற, வேலையில்லாத் திண்டாட்டம், சுயவேலை வாய்ப்பு, சுற்றுப்புறச்சூழல், பழங்குடியினர் மறுவாழ்வு, இத்திட்டம் யாவும் வெற்றிபெற சாலையோரம் புறம்போக்கு இடங்கள், மலை, மலையோரச் சாலைகளில் சமூக நலக் காடு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*ஆம். 1981 முதல் 1996 வரை சமூக நலக் காடுகள் திட்டத்தின்கீழ் சமுதாயத் தரிசு நிலங்கள், புறம்போக்கு, ஏரிகள்/குளங்களின் படுகைகள்/கரைகளில் மரங்கள் நடப்பட்டதால் கிராம மக்களின் எரிபொருள்*



2000 மே 18]

*தேவைக்கும் ஊராட்சிகளுக்கு நிதிநிலைப் பெருக்கமும் கிடைத்து வருகிறது. சாலையோரம், மலை, மலையோரச் சாலைகளில் மாநில/மத்திய அரசுத் திட்டங்கள் மூலம் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.*

*1997 முதல் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சமுதாய, அரசு, தனியார் நிலங்களில், தரம் தாழ்ந்த காடுகளில் உள்ளூர் மக்களையும், பழங்குடியினரையும் கிராம வனக் குழுக்கள் மூலம் காடு வளர்க்கும் பணிகளில் ஈடுபடுத்துவதோடு அடிப்படை வசதிகள், சுயதொழில் செய்ய உதவி, வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பயன்பெற மூங்கில், பழவகை மரங்களும் நடப்பட்டு வருகின்றன.*

**124—**

**புலிகள் விவரம்**

**வினா எண் 21529—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் எவ்வளவு புலிகள் உள்ளதாக 1997-98ஆம் ஆண்டு அரசு கணக்கெடுப்பு செய்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் 1997-98 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 62 புலிகள் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.*

**125—**

**காடுகளில் யானைகள்**

**வினா எண் 21530—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி வனப் பகுதிகளில் (முதுமலை) மர்மமான முறையில் எவ்வளவு யானைகள் இறந்தன?*

(ஆ) அதைக் கண்டுபிடிக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி வனப் பகுதியில் (முதுமலை) மர்மமான முறையில் இதுவரை ஒன்பது யானைகள் கடந்த இரண்டாண்டுகளில் இறந்துள்ளன.

(ஆ) குற்றங்களில் சம்மந்தப்பட்டதாகக் கருதப்பட்ட 15 நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றவாளிகளைப் பிடிக்க சிறப்பு ரோந்துப் பணிகள் மற்றும் திடீர்த் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

**126—**

### முதுமலை சரணாலயத்தில் யானைகள்

**வினா எண் 21531—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள முதுமலை சரணாலயத்தில் எவ்வளவு யானைகள் உள்ளன?

(ஆ) அதைப் பராமரிக்க எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள முதுமலை வன உயிரின சரணாலய யானை முகாமில் தற்போது 29 யானைகள் உள்ளன. அவற்றைப் பராமரிப்பதற்காக மாவூத்தர், காவடி ஆகியோரின் சம்பளம் அவற்றிற்கான உணவு மற்றும் மருத்துவ செலவு ஆகியவற்றுக்காக வருடந்தோறும் சுமார் ரூ.30.00 இலட்சம் செலவிடப்படுகிறது. காவடி



மற்றும் மாவூத் சம்பள விபரம், உணவு மற்றும் மருந்திற்காகச் செலவு செய்யப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:

| | 1998-99 ரூ | 1999-2000 ரூ |
|---|---|---|
| உணவிற்கான செலவு | 13,38,864 | 11,83,825 |
| சம்பளத்திற்கான செலவு | 17,93,472 | 23,58,696 |
| மருந்திற்கான செலவு | 1,06,637 | 77,334 |

**127—**

### உயிரியல் பூங்காக்கள்

**வினா எண் 21533—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உயிரினப் பூங்காக்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது.?

(இ) அதில் எவ்வளவு செலவு செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் எட்டு உயிரினப் பூங்காக்கள் உள்ளன.

(ஆ) உயிரினப் பூங்காக்களிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.38,98,160 வருமானம் வருகிறது.

(இ) உயிரினப் பூங்காக்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2,38,22,850 செலவு செய்யப்படுகிறது.

**128—**

### சிறிய அணை கட்டுதல்

**வினா எண் 22260—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, கரிப்பள்ளம் என்ற இடத்தில் சிறிய அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில். எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி. கரிப்பள்ளம் என்ற இடத்தில் சிறிய அணை கட்டுதல் சாத்தியமில்லை.*

**129—**

**வாய்க்காலை மேம்படுத்துதல்**

**வினா எண் 22283—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சி, விளார் கிராமம், வல்லம்வாரி வாய்க்காலைத் தூர் எடுத்து அகலப்படுத்தி செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லம் கிராமம், வல்லம்வாரி வடிகால் கல்லணைக் கால்வாய்க்குக் கீழ்புறம் 26 கி.மீ. தூரம் 1997-98, 1998-99 ஆம் ஆண்டுகளில் தூர்வாரி முடிக்கப்பட்டது. கல்லணைக் கால்வாய்க்கு மேல்புறம் 5.00 கி.மீ. வரை தூர்வாரும் பணி (1999-2000) ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு முடிக்கப்பட்டுவிட்டது.*



2000 மே 18]

**130—**

**வாய்க்காலைச் செப்பனிடுதல்**

**வினா எண் 22463—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டுவிடுதி ஊராட்சி, காடுவெட்டுவிடுதியிலிருந்து ராங்கியன் விடுதி வரை கிளை வாய்க்காலைத் தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டுவிடுதியிலிருந்து ராங்கியன்விடுதி வரை கிளைக் கால்வாய் வரும் ஆண்டில் நிதி நிலைமைக்கேற்ப தூர் எடுத்துச் செப்பனிடப்படும்.*

**131—**

**வாய்காலைத் தூர் எடுத்தல்**

**வினா எண் 22473—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சில்லத்தூர் ஊராட்சி, சில்லத்தூர் கிராமம், வெட்டிக்காடு பெரிய பாசனத்தில் இருந்து பிரியும் 1ம் நம்பர் வாய்க்காலைத் தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சில்லத்தூர் ஊராட்சி, சில்லத்தூர் கிராமம், வெட்டிககாடு பெரிய பாசனத்தில் இருந்து பிரியும் 1 ஆம் நம்பர் வாய்க்கால் பகுதி*

[2000 மே 18

மணற்பாங்கான பகுதியாதலால் தற்போது மேடிட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் நிதி நிலைமைக்குட்பட்டு அத்தியாவசியப் பணிகளின் முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரப்படும்.

**132—**

**மான்களைப் பாதுகாத்தல்**

**வினா எண் 23027—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டாரம்பட்டு தொகுதி, ராதாபுரம் காட்டில் நிறைய மான்கள் இருபபது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தண்டாரம்பட்டு தொகுதி, ராதாபுரம் காப்புக் காட்டில் சுமார் 30 மான்கள் உள்ளன.

(ஆ) வன விலங்குகளையும் காப்புக் காட்டையும் பாதுகாக்க வனச் சட்டம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் வனப் பணியாளர்களால் அமலாக்கம் செய்யப்படுகிறது. மேலும் உரிய விளம்பரங்கள் மூலம் வன உயிர்ப் பாதுகாப்பு குறித்து மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. காப்புக் காட்டில் கட்டப்பட்டுள்ள சிறு தடுப்பணைகள் மூலம் வன விலங்குகளின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

**133—**

**சந்தன மரங்கள்**

**வினா எண் 23361— திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

திருவண்ணாமலை, ஸ்ரீஅண்ணாமலையார் மலையில் சந்தன மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையிலுள்ள ஸ்ரீஅண்ணாமலையார் மலையில் சந்தன மரங்கள் வளர்ப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை இல்லை என்ற காரணத்தினால் சந்தன மரம் வளர்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**134—**

**வெளிநாட்டுப் பறவைகள்**

**வினா எண் 23547—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு வெளிநாட்டிலிருந்து எத்தனை வகைப் பறவைகள் வருகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சமீபத்தில் பாம்பே நேச்சுரல் ஹிஸ்டரி சங்கம் (BNHS) எடுத்த கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து அடுத்த ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதம் வரை இந்தியாவிலுள்ள இமயமலைப் பகுதியிலிருந்தும், லடாக் பகுதியிலிருந்தும் மற்றும் ஜப்பான், ஈரான், பர்மா, ரஷ்யா, பங்களாதேஷ், ஆப்பிரிக்கக் கடற்கரை, பாகிஸ்தான் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் 115 இனவகைப் பறவைகள் கூட்டம் கூட்டமாக ஏறக்குறைய பத்தாயிரம் பறவைகள் கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு வந்து செல்கின்றன.

[2000 மே 18

135—

### மூலிகைப் பண்ணை

**வினா எண் 23575—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) பெங்களூரை மையமாகக் கொண்டுள்ள மரபுவழி உள்ளூர் மருத்துவ மூலிகை முறைகளுக்குப் புத்துயிரூட்டும் நிறுவனம் (Foundation for Revitalisation of Local Health Traditions-FRLHT) மூலம் "டானிடா" நிதியுதவியைப் பயன்படுத்தி குற்றாலம் வனச் சரகத்தில் உள்ள 200 எக்டேர் பாப்பரவில் மூலிகைச் செடிகள் பாதுகாப்புப் பகுதித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே மூலிகை/மருத்துவச் செடிகள் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

136—

### திருப்பூர் இல்லம்

**வினா எண் 24070—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் நகரிலுள்ள திருப்பூர் இல்லத்தை மேலும் அதிக அறைகள் கொண்டதாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரிலுள்ள திருப்பூர் இல்லத்தை மேலும் அதிக அறைகள் கொண்டதாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

137—

### மிருகங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 24628—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வருசநாடு மற்றும் மேகமலைப் பகுதிகளில் அரிய மிருகங்களான மான்கள் மற்றும் காட்டெருமைகள் வேட்டையாடப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வன ஊழியர்களின் தொடர் சிறப்புத் தணிக்கைகளாலும் மற்றும் மைய அரசின் யானை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வனவிலங்கு வேட்டைத் தடுப்பு முகாம்கள் நடத்துவதாலும் மிருகங்கள் வேட்டையாடப்படுவது அரசால் சிறப்பான முறையில் தடுக்கப்படுகிறது.

138—

### பறவைகள் சரணாலயம்

**வினா எண் 25151—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி அருகே புதியதாகப் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி அருகே சத்தங்குளம்-காடான் குளம் என்ற இடத்தில் 129.00 எக்டேர் பரப்பளவு கொண்ட பகுதியைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்து அரசு 1994-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.*

**139—**

**பறவைகளைப் பாதுகாத்தல்**

**வினா எண் 25181—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயம் எத்தனை உள்ளன?*

*(ஆ) அங்கு வரும் பறவைகளைப் பாதுகாக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?*

*(இ) வெளிநாட்டிலிருந்து எந்தெந்தப் பறவைகள் எந்த சீசனுக்கு தமிழகத்திற்கு வருகின்றன?*

விடை—

**மாண்புமிகு திரு துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் 13 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.*

*(ஆ) பறவைகள் சரணாலயங்களில் வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலாளிகள் பாதுகாப்புப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டு அங்கு வரும் அரிய பறவைகளை வேட்டையாடுவதிலிருந்து தடுக்கப்பட்டு வருகிறது. அவை இனப்பெருக்கத்திற்கும் தங்குவதற்கும் ஏற்ற மரங்களை நட்டு பாதுகாக்கப்படுகின்றன. இப்பறவைகளுக்கு முக்கிய உணவு மீன்கள் மற்றும் சிறுசிறு புழு பூச்சிகளாகும். மேல் நீர்நிலைகளை ஆழப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.*



*(இ) வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு கோணைமூக்கு நாரை, நீர்க்காகம், சிறு கொக்கு, நாராயணபட்சி, கரண்டி மூக்கன், வெள்ளை அரிவாள் மூக்கன், நீர்வாத்து, வண்ணநாரை, சிறிய நீர்க்காகம், பாம்பு தாரா, வக்கா போன்ற பறவைகள் நவம்பர் முதல் பிப்ரவரி வரையில் வந்து செல்கின்றன.*

**140—**

**அன்னப் பறவைகள்**

**வினா எண் 25202—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டிலுள்ள மிருகக்காட்சிசாலையில் எந்தெந்த மிருகக்காட்சிச்சாலையில் அன்னப் பறவைகள் உள்ளன?*

*(ஆ) அவற்றைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்க இலக்கியங்களில் அன்னம் என்ற பெயர் வாத்து போன்ற பறக்கும் பறவைகளுக்குப் பொதுப் பெயராக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சென்னைக்கருகே வண்டலூரில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மஸ்கவி வாத்து, மணிலா வாத்து மற்றும் கருப்பு அன்னம் முதலிய பறவைகள் தக்க முறையில் பாதுகாப்புடன் உள்ளன.*

**141—**

**புதிய சாலை**

**வினா எண் 25223—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டையிலிருந்து ஏற்காடு செல்வதற்கு வனத் துறையின் மூலம் புதிய சாலையமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், டேனிஷ் பேட்டையிலிருந்து ஏற்காடு செல்வதற்குப் புதிய சாலை அமைக்கும் கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை.

**142—**

**உயிரினப் பூங்காவை மேம்படுத்துதல்**

**வினா எண். 25224—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், குருவம்பட்டியிலுள்ள உயிரினப் பூங்காவை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், குருவம்பட்டியில் உள்ள சிறிய உயிரினப் பூங்காவின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை 1999-2000-ல் மேற்கொள்ள ரூ.4.36 இலட்சங்களை மாநில அரசு அனுமதித்துள்ளது.

**143—**

**பெருந்தலைவர் காமராஜர் சிலை அமைத்தல்**

**வினா எண் 25264—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?*

*சாத்தனூர் அணையின் முகப்பு வாயிலில் பெருந்தலைவர் காமராஜர் சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

இல்லை.



**144—**

**அணை அமைத்தல்**

**வினா எண் 25265—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு தொகுதி, மல்காபூர் அருகில் பாம்பன் ஆற்றில் அணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தண்டாரம்பட்டு தொகுதி, மல்காபூர் என்ற கிராமம் பாம்பன் ஆற்று மட்டத்தை விட சுமார் 3 மீ. முதல் 4 மீ. வரை உயரத்தில் உள்ளது. எனவே, மல்காபூர் அருகில் பாம்பன் ஆற்றின் குறுக்கே அணை கட்டி பாசன வசதியளிகக சாத்தியமில்லை.

**145—**

**கூடுதல் அறைகள்**

**வினா எண் 25421—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுககு விடையளிப்பாரா—*

*(அ) குற்றாலம் சர்க்கியூட் ஹவுஸில் கூடுதலாக அறை கட்டி விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் சர்க்கியூட் ஹவுஸில் கூடுதலாக அறைகள் கட்டி விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

[2000 மே 18

146—

## இழப்பைத் தவிர்த்தல்

**வினா எண் 26089—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக் காடுகளில் தீ விபத்தினால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்க அரசு சிறப்பு நடவடிக்கை ஏதாவது எடுக்கத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாட்டில் உள்ள 26 வனக்கோட்டங்களில் நவீன முறையில் தீத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.41.70 கோடி மதிப்பீட்டில் 10 ஆண்டுக்கான திட்டப் பிரேரணை மைய அரசுக்கு அனுமதி வைக்கப்பட்டுள்ளது.

147—

## வன விலங்கு சரணாலயம்

**வினா எண் 26094—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) அங்கு வரும் பார்வையாளர்கள் மூலம் 1998-1999-ல் வந்த, வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்த மத்திய அரசின் 100 சதவிகித உதவியோடு கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-



2000 மே 18]

1. வன உயிரினங்களுக்குத் தண்ணீர் தேவையான காலங்களில் கிடைப்பதற்குச் சாலை ஓரங்களில் தண்ணீர்க் குழி அமைத்தல்.

2. வன உயிரினங்களுக்குத் தேவையான உப்புக்கட்டிகள் வைத்தல்.

3. வன உயிரினப் பகுதிகளில் தீத்தடுப்பு வேலைகள் மேற்கொள்ளுதல்.

4. உட்பகுதிகளில் வன உயிரின வேட்டையாடுதலை தடுக்க மலைவாழ் மக்களைப் பயன்படுத்துதல்.

5. வன உயிரின சரணாலய உட்பகுதிகளில் வன உயிரினங்கள் வேட்டையாடுதலைத் தடுக்க முகாம்கள் நடத்துதல்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் முதுமலை வன உயிரின உய்விடத்திற்கு 528 பார்வையாளர்கள் வந்துள்ளார்கள். பார்வையாளர்கள் மூலம் ரூ. 13,798 வருமானம் அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

148—

## சந்தன மரங்கள்

**வினா எண் 26097—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனத்தில் சந்தன மரங்களைக் கடத்தியதற்காக 1998-99-ல் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக வனத்தில் சந்தன மரங்களை கடத்தியதற்காக 1998-99-ல் கைது செய்யப்பட்டவர்கள் 2395 பேர்கள் ஆவர்.

(ஆ) கைது செய்யப்பட்ட நபர்கள் மீது 2101 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

[2000 மே 18

149—

## பறவைகள் சரணாலயம்

**வினா எண் 26188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெரியகுளம் ஏரிக்கு வெளிநாட்டுப் பறவைகள் வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெரியகுளம் ஏரிக்கு பல்வேறு விதமான பறவைகள் வருவது அரசின் கவனத்திற்கு தெரியவந்து அவ்விடம் பறவைகள் சரணலாயமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஈரோடு மாவட்டம், பெரியகுளம் ஏரிக்கு பல்வேறு விதமான பறவைகள் அநேக எண்ணிக்கையில் ஆண்டுதோறும் வருவதால் அவ்விடத்தை அரசாணை எண் 237, வனம் மற்றும் சுற்றுச்சூழல் நாள்: 30-6-1997-ல் வெள்ளோடு பறவைகள் சரணாலயம் என்ற பெயரில் அறிவிக்கப்பட்டு பறவைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பறவைகள் சரணாலயமாக அரசு அறிவிக்கை செய்துள்ளது. இதன் பரப்பளவு 77.185 ஹெக்டேர் ஆகும். இதனை வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் இங்கு வரும் பறவைகள் பாதுகாக்கப்படுகின்றன.



2000 மே 18]

150—

## எண்ணெய் ஆலைகள்

**வினா எண் 26192—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சந்தனத்தில் எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி அருகே தெக்குப்பட்டு என்ற இடத்தில் அரசு தரப்பில் ஒரு சந்தன எண்ணெய் வடித்தெடுக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

151—

## வன வளர்ப்புப் பணிகள்

**வினா எண் 26367—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வன வளர்ச்சித் திட்டத்தின் மூலம் எந்தப் பகுதிகளில் வன வளர்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன?

(ஆ) அதன் திட்டம் மற்றும் மானிய விவரங்களை அரசு அறிவிக்குமா?

[2000 மே 18

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

**அறிக்கை**

*தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் குரும்பானூர், எலந்தவாடி, தாளவாய்ப்பட்டி, (ஆலத்தூர்) உப்புக்காடு, தாதனூர், அன்னபுரம், மூலைகாடு, தாளவாய்ப்பட்டி (ஓமனூர்) தாழையூத்து, பெருமாபட்டி ஆகிய 10 கிராமங்களில் 1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுகிறது. வனவிரிவாக்க மையங்கள் மூலம் திட்டத்தின் முழு விவரங்களை தெரிவிக்க அரசு ஆணையிட்டுள்ளது. கிராமத்தை ஒட்டியுள்ள தரம் குறைந்த காடுகளில் நீர்ப்பிடிமுகடு அடிப்படையில் தலா 250 ஹெக்டேர் வீதம் மேல்மண்டலம், நடுமண்டலம், கீழ்மண்டலங்களில், தோட்டம் எழுப்பும் பணிக்கும் நீர் வள மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராமத்தின் வனப்பகுதியிலும் 100 ஹெக்டேர் வீதம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளுடன் தோட்டம் எழுப்பும் பணிகளும் செய்யப்படும். கிராமம் ஒன்றுக்கு சுமார் 25 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யப்படுகிறது.*

*ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து நபர்களுக்கு தலா 5000 மரக்கன்றுகளுடன் 10 கிராமங்களில் 50 நபர்களுக்கு தலா ரூ.5000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.*

**152—**

**கூலித் தொழிலாளர்கள்**

**வினா எண் 26435—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

***தமிழ்நாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்களில் பணிபுரியும் கூலித்தொழிலாளர்கள் எத்தனை பேர்?***



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் உள்ள உயிரியல் பூங்காக்களில் மொத்தம் 47 கூலித் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.*

**153—**

**ஏரிகளை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 26810—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணா நீரை தேக்கிவைக்கும் வகையில் பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டம் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் :**

*(அ) இல்லை. எனினும் மார்ச் 1998-ல் செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் ஜூன் 1999-ல் பூண்டி ஏரி ஆகிய ஏரிகளின் கரைகள் இரண்டு அடி உயர்த்தப்பட்டு கொள்ளளவு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

154—

### மூலிகை பாத்திகள்

**வினா எண் 27460—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மூலிகை பாத்தி உள்ளதா? அதில் எத்தனை வகை மூலிகை உள்ளன?

(ஆ) ஆம் எனில், அதை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மூலிகை பாத்தி இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

155—

### தாவரங்களைப் பயிரிடுதல்

**வினா எண் 27477—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப்பகுதியில் பருவ காலங்களில் மழை பெய்தால் சில மணிநேரங்களில் முற்றிலும் தண்ணீர் வடிந்து விடுவதைத் தடுக்க ஆடாதோடா மற்றும் வெட்டிவேர் போன்ற செடி, கொடிகளை வனப்பகுதியில் பயிரிடவும், தீ பரவுவதைத் தடுக்கும் தாவரங்களை ஆங்காங்கே பயிரிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப்பகுதியில் ஆடாதோடா மற்றும் வெட்டிவேர் நடப்படுவதில்லை. இருப்பினும் அக்காப்புக் காடுகளில் பல்வகை மரங்கள் நடுவதோடு நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும், தடுப்பு அணைகளும் கட்டி மழை நீர் விரைவாக வடிவது தடுக்கப்படுகிறது. தீயினைத் தடுப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் தீ தடுப்புக்கோடு வெட்டப்படுகிறது. தீ பரவும் காலங்களில் நெருப்பை அணைக்க தினக்கூலி அடிப்படையில் காவலர்களை அமர்த்தி கிராம மக்களின் துணையுடன் தீ பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

156—

### ஏரியை தூர் வாருதல்

**வினா எண் 29666—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், வளையமாதேவியில் உள்ள அபிராமி ஏரியை தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

புவனகிரி ஒன்றியம், வளையமாதேவியில் உள்ள அபிராமி ஏரியை தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

### காடு வளர்ப்பு நிதியுதவி

**வினா எண் 31003—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

*(அ) தமிழ்நாட்டில் காடு வளர்ப்புத் திட்டங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், எந்தெந்த நாடுகளிலிருந்து உதவி பெறப்படுகிறது?*

*(இ) எத்தகைய திட்டங்களுக்கு அந்த உதவி பயன்படுத்தப்படுகிறது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஜப்பான், டென்மார்க் மற்றும் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.*

*(இ) (1) ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் 1997-98 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தரம் தாழ்ந்த காடுகள், அரசு சமுதாய நிலங்கள், தனியார் நிலங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், கூட்டு வன நிர்வாக முறையில் ஆண்டுதோறும் 200 கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.*

*(2) டென்மார்க் நாட்டு நிதியுதவியால் உள்ளூர் பாரம்பரிய மூலிகைகளுக்கு புத்துயிர் அளிக்க, மூலிகை தாவர அபிவிருத்தி மற்றும் மூலிகைத் தாவர விரிவாக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

*(3) உலக வங்கியின் உதவியுடன் வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம் (FREEP) களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக மேம்பாடு போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

**158—**

## நிலத்தடி நீரை சேமித்தல்

**வினா எண் 31881—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் மழைநீர் எவ்வாறு வீணாக்காமல் நிலத்தடி நீராக சேமிக்கப்படுகிறது?*

*(ஆ) மழை நீர் வீணாவதை முற்றிலுமாக அரசு தடுத்து விட்டதா?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) விவசாய பொறியியல் துறையால் அமைக்கப்பட்டுள்ள கசிவு நீர்க் குட்டைகள் மூலம் மழை நீர் சேமித்து வைக்கப்படுகின்றது. மேலும் ஆறுகள், ஓடைகளின் குறுக்கே சிறுசிறு அணைகள் கட்டப்பட்டு, மழைநீர் ஆற்றில் தேக்கி வைக்கப்பட்டு ஊடுருவல் நடைபெற்று நிலத்தடி நீராக சேமிக்கப்படுகின்றது.*

*(ஆ) அபரிமிதமாக மழை பெய்யும் நேரங்களிலும் இயற்கை சீற்றத்தால் மழை கூடுதலாக பெய்யும் நேரங்களிலும் மழைநீர் வீணாவதைத் தடுக்க இயலாது.*

**159—**

## குற்றாலத்தில் கூடுதல் அறைகள்

**வினா எண் 32192—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வன ஓய்வு இல்லத்தில் கூடுதலாக அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் 2000-2001-ல் கூடுதல் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2000 மே 18

**160—**

**அபூர்வ மரங்கள்**

**வினா எண் 32197—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டா நிலங்களில் தோதகத்தி (ரோஸ்வுட்) மரங்களை வளர்த்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அவற்றிற்கு தடையாக நிற்கும் விதிகளைத் தளர்த்தி அத்தகைய அபூர்வ மரங்கள் அழியாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டா நிலங்களில் தோதகத்தி (ரோஸ்வுட்) மரங்களை வளர்க்கவும், அவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் விதிகளில் எவ்விதத் தடைகளும் இல்லை. இத்தகைய அபூர்வ மரங்கள் அழியாமல் காத்திட 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோதகத்தி இன வகை மரங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு அம்மரங்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**161—**

**அணை கட்டுதல்**

**வினா எண் 32421—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநீர்மலை அருகில் அடையாறின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அடையாற்றில் தாம்பரம் தொகுதி திருநீர்மலைப் பகுதியில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**162—**

**வனப் பரப்பினைச் சீர்செய்தல்**

**வினா எண் 32498—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) National Remote Sensing Agency எடுத்துள்ள Satellite data-ன்படி தமிழகத்தில் 1991 ஆம் ஆண்டு 13.62 சதவிகிதமாக இருந்த வனப் பரப்பளவு 13.10 சதவிகிதமாக 1997 ஆம் ஆண்டு குறைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மைய அரசின் வனப் பரப்புக் கணக்கெடுப்பு அறிக்கையில் 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு செய்கையில் வனப் பகுதியில்லாத 721 ச.கி.மீ. தேயிலைத் தோட்டப் பகுதியையும் சேர்த்து தமிழ்நாட்டின் வனப்பரப்பு மொத்தம் 17,713 சதுர கிலோ மீட்டர் என்றும், இது தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 13.62 சதவிகிதம் என்றும் தெரிவித்தது. இந்த 721 சதுர கி.மீ. பரப்பளவை நீக்கிப் பார்த்தால் 1991 ஆம் ஆண்டில் வனப் பரப்பு 13.06 சதவிகிதம் மட்டும் என்பதை அறியலாம். 1997 ஆம் ஆண்டில் வனப் பகுதியில்லாத தேயிலைத் தோட்டப் பகுதியினை நீக்கிய பின் தமிழகத்தின் வனப்

[2000 மே 18

**166—**

**புறவழிச் சாலை**

**வினா எண் 8747—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பவானி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**167—**

**நான்கு வழிச் சாலை**

**வினா எண் 96050—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சத்துவாச்சாரி, தேசிய நெடுஞ்சாலையில் சத்துவாச்சாரி முதல் பெருமுகை வரை உள்ள சாலையை நான்குவழிப் பாதையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*மேற்கண்ட பணி தேசிய நெடுஞ்சாலை ஆணைக்குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது.*



2000 மே 18]

**168—**

**சேது சமுத்திரத் திட்டம்**

**வினா எண் 16341—திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேது சமுத்திரத் திட்டம் குறித்த தமிழ்நாட்டின் கோரிக்கையை மத்திய அரசு அங்கீகரித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*(இ) சேது சமுத்திரத் திட்டத்தை செயல்படுத்த மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளதா?*

*(ஈ) ஆம் எனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**169—**

**மாற்று வழிப் பாதை**

**வினா எண் 16826—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி நகரின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாற்றுவழிப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**170—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 17855—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குஜிலியம்பாறை - மணப்பாறை சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் உள்ள பழுதுகளை செப்பனிடும் பணி ரூ.29.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

**171—**

**பாதையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 18274—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, கே.கே. நகர், சித்தர்கோயில் சாலை பிரிவிலிருந்து கடையாம்பட்டி வழியாக எளம்பிள்ளை செல்லும் பாதையைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*ஆம்.*



2000 மே 18]

**172—**

**பழுதடைந்த பாதையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 18280—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி பகுதி, குஞ்சாம்பாளையம் மூலக்கடை முதல் தண்ணீர்தாசனூர் மேட்டாங்காடு, கொட்டாயூர் வழியாக கல்வடங்கம் செல்லும் பாதை மிகவும் பழுதுபட்டுள்ளதால் அதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*இச்சாலை 6.4 கி.மீ. நீளம் உடையதாகும். இதில் 2.0 கி.மீ. பகுதி சாலை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ.2/0-6/4 வரையுள்ள சாலைகளில் தார்நொடிகள் போடப்பட்டு போக்குவரத்துக்கு பாதிப்பில்லாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசின் நிதிநிலைக்கேற்ப சிறப்புப் பராமரிப்பு அல்லது காலமுறை புதுப்பித்தலில் முன்னுரிமை அளித்து வரும் ஆண்டில் செப்பனிடப்படும்.*

**173—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 22803—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை நகராட்சியில் இரயில்வே இருப்புப் பாதையைக் கடக்க மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**174—**

**வாணிபத்தைப் பெருக்குதல்**

**வினா எண் 22047—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு ஐந்து கப்பல்கள் மேலும் வாங்கி வாணிபத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின் வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய மூன்று சொந்தக் கப்பல் மற்றும் 13 வாடகைக் கப்பல்கள் மூலம் ஹால்டியா, பாரதிப், விசாகப்பட்டினத்திலிருந்து சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு. ஏற்றி வருகின்றது. மேலும் நிலக்கரியின் தேவைக்கு ஏற்ப மேலும் கப்பல்கள் வாங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**175—**

**ஒப்பந்தப் புள்ளிகள்**

**வினா எண் 23217— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் எந்த சின்ன வேலையாக இருந்தாலும் Maintenance Tender மட்டுமே செய்ய வேண்டும் என்று ஆணையிட அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

நெடுஞ்சாலைத் துறையில் எல்லாவிதப் பணிகளும் உடனடியாகச் செய்யப்படவேண்டிய பணிகள் தவிர (Except emergent Nature of works) ஒப்பந்தப் புள்ளிகள் கோரியே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**176—**

**தார் சப்ளை செய்தல்**

**வினா எண் 23218—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் தார் சப்ளையை contractors own supply ஆகச் செய்து கொள்ளுமாறு அரசு ஆணை பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஒப்பந்தக்காரர்களே தார் வாங்கி, பணிகளைச் செயல்படுத்தும் முறையினைக் கொண்டுவருவதற்கு அரசாணை பிறப்பிக்கும் வாய்ப்புகள் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**177—**

**துறைமுகம் உருவாக்குதல்**

**வினா எண் 23223—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எண்ணூரில் புதிய துறைமுகம் உருவாக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) பணிகள் முழுமையாக எப்போது முடிவுறும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எண்ணூர் துறைமுக மேம்பாட்டின் முதல் கட்டப் பணிகள் 62 விழுக்காடு முடிந்துவிட்டன.*

*கட்டுமானப் பணிகள் 2000ம் ஆண்டு ஜூலைத் திங்களில் முடிவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**178—**

**நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 24041—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்திலிருந்து வெள்ளையம்பாளையம் வழியாக காளிப்பட்டி பிரிவு சாலை வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**179—**

**சுரங்க நடைபாதை**

**வினா எண் 24066—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் நகரில் மிக நெருக்கமான ஜனநடமாட்டமுள்ளதால் சுரங்க நடைபாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**180—**

**பவானியில் புறவழிச் சாலை**

**வினா எண் 24286—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**181—**

**அகலப் பாதை அமைத்தல்**

**வினா எண் 24342—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் - மேச்சேரி செல்லும் சாலையை அகலப் பாதையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை

**182—**

**போக்குவரத்துக்கு இடையூறுகள்**

**வினா எண் 24366—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் வட்டம், கரைபுத்து உவரி பஞ்சாயத்தில் கீழ்உவரிக்கும், மேலஉவரிக்கும் இடையில் பனைமரங்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் ஓரத்தில்தான் பனை மரங்கள் உள்ளதால் போக்குவரத்திற்கு எந்த இடையூறும் இல்லை.

**183—**

**தேசிய நெடுஞ்சாலை அமைத்தல்**

**வினா எண் 25254—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் - சித்தூர் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் - சித்தூர் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு 28-9-1998 அன்று மைய அரசிற்கு அனுப்பப்பட்டு, மைய அரசிடமிருந்து ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**184—**

**புறவழிச் சாலை**

**வினா எண் 25255—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டி - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள திருவண்ணாமலையைக் கடந்து செல்ல புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**சாலை வசதி**

**185—**

**வினா எண் 25303—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென்னிலிருந்து மதுரைப்பாக்கம் வழியாக வரும் ஓடை, மேடவாக்கம், மாம்பாக்கம் சாலையில்

மதுரைபாக்கத்தைக் கடக்கும் பைப் கல்வெர்ட் போதுமானதாக இல்லாததால் ஆண்டுதோறும் சாலை துண்டிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தாம்போகி பைப்பில் அடைப்பு ஏற்படுவதால் சாலை துண்டிப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க இப்பகுதியில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட வேண்டும். நிதிநிலை நெருக்கடி காரணமாக பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**186—**

**தேசிய நெடுஞ்சாலையாக்குதல்**

**வினா எண் 25359—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுவை-கிருஷ்ணகிரி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுவை-கிருஷ்ணகிரி சாலை தேசிய நெடுஞ்சாலை எண் 66 என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.





**187—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 26065—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்தூர்-புச்சிரெட்டிப்பள்ளி இடையே உள்ள 4 கி.மீ. சாலை கிராமப்புறச் சாலை திட்டத்தின்கீழ் (Rural Roads) செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**188—**

**புதிய பாலம்**

**வினா எண் 27141—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மன்னார்குடி - புதுக்கோட்டை சாலையில் வேதபுரி ஆற்றில் புதிய பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தற்போது இயலாது.

**189—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 27290—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியம், கௌல்பசார் பகுதியில் அடையாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் பணி கிராமச்சாலைகள் (Rural Roads Scheme) திட்டத்தின்கீழ் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பணிகள் 31-12-2000-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**190—**

### கல்வெர்ட்டை உயர்த்திக் கட்டுதல்

**வினா எண் 27291—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியம் மேடவாக்கம், மாம்பாக்கம் சாலையில் மதுரைப்பாக்கம் எல்லையில் உள்ள பைப் கல்வெர்ட்டை உயர்த்திக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



2000 மே 18]

**191—**

### கோட்டப் பொறியாளர் அலுவலகம்

**வினா எண் 27665—திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலுள்ள நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து அதில் ஒன்றை பொள்ளாச்சியில் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 159, நெடுஞ்சாலைத் துறை, நாள் 31-5-1999-ன்படி பொள்ளாச்சியில் தனியே நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்பட்டு 3-6-1999 முதல் இயங்கி வருகிறது.

**192—**

### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 27685—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொமரப்பாளையம் புதுபள்ளிப்பாளையம் சாலையிலுள்ள குறுகலான பாலத்தினால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதைய வாகனப் போக்குவரத்திற்கு இப்பாலம் போதுமானதாகும்.

**193—**

**பாலத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 27688—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி முதல் சங்ககிரி வரையுள்ள சாலையில் கேட்டுகடைக்கும், வீரப்பம்பாளையத்திற்குமிடையே உள்ள குறுகலான குறும்பட்டி பாலத்தை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இச்சாலையின் அகலம் தற்போதைய போக்குவரத்திற்குப் போதுமானதாக உள்ளது. எதிர்காலத்தில் ஒரு வழிப்பாதையான இச்சாலையை இருவழிப் பாதையாக மாற்ற அவசியமேற்படும்பொழுது இத்தரைமட்டப் பாலத்தை அகலப்படுத்தவோ அல்லது உயர்மட்டப் பாலமாக அமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

**194—**

**ஒரு வழிப்பாதைகள்**

**வினா எண் 28689—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி-சங்ககிரி சாலையில் அகலக் குறைவான ஒரு வழிப்பாதை எத்தனை கி. மீட்டர் உள்ளது?



2000 மே 18]

(ஆ) அதை அகலப்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) 6.00 கி.மீ. நீளமுள்ள இச்சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்ட ஒரு வழிப்பாதை சாலையாக உள்ளது.

(ஆ) ஆம்.

**195—**

**பாதையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 27690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முக்கிய மாவட்டச்சாலையான எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையில், ஒரு வழிப் பாதையாக அகலம் குறைவாகவுள்ள பகுதி, போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அதை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெருந்தொகை தேவைப்படும் இத்திட்டத்தினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தலாம் என அரசு முயன்று வருகிறது.

**196—**

**கிழக்கு கடற்கரைச் சாலை**

**வினா எண் 27950—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

கடலூர்-நாகப்பட்டினம் வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலை திட்டப் பணிகள் எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கடலூர்-நாகப்பட்டினம் வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலை 2000-2001 முதல் மூன்றாண்டு காலத்தில் பணி செயலாக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**197—**

**சிறு பாலம் கட்டுதல்**

**வினா எண் 28103—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலத்திலிருந்து மூவேந்தர் பள்ளியிலிருந்து பேராவூரணி செல்லும் மெயின் சாலையில் சிறு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**198—**

**சாலையைப் புனரமைப்பு செய்தல்**

**வினா எண் 29691—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வளையமாதேவி-நெய்வேலி சாலையைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்ட சாலை புனரமைக்கப்பட்டு தற்போது சீரான போக்குவரத்திற்கு ஏற்ப நல்ல நிலையில் உள்ளது.

**199—**

**பாதையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 29866—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் - காட்டுக்கூடலூர் சாலையில் விருத்தாசலத்திலிருந்து தொடங்கி மூன்று கி.மீ. சாலை மிக மோசமாக இருப்பதால் அதைச் சீரமைத்து, புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விருத்தாசலம் - காட்டுக்கூடலூர் சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையிலுள்ள மிகவும் பழுதடைந்துள்ள பகுதியினைச் சீர்செய்வதற்கு ரூ. 5.80 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சாலை புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சாலையில் கி.மீ. 2/0-3/0 வரையுள்ள சாலைப் பகுதியினை நறுக்குகள் போட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சாலை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2000 மே 18

200—

### பாலம் கட்டுதல்

**வினா எண் 36814—திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், நாகநதி ஊருக்கும், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சிக்கும் இடையே ஓடும் நாகநதியின் பேரில், மேம்பாலம் அல்லது தலைப்பாலம் கட்டி, அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நாகநதியின் குறுக்கே மேம்பாலம் அல்லது தரைப்பாலம் அமைக்கப்படவேண்டிய இடமானது நெடுஞ்சாலைத் துறையால் இதர மாவட்டச் சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் மத்திய சிறைச்சாலை - அமர்த்தி சாலை (கி.மீ. 0/0-14/4)-யின் தொடர்ச்சியாக செல்லும் வனத் துறை பராமரிப்பில் உள்ள சாலையாகும். இச்சாலையின் நீளம் கி.மீ. 16/4 ஆகும். மேலும் பாலம் அமைக்கப்படவேண்டிய இடமானது கி.மீ. 16/4 வனத் துறையின் பராமரிப்பில் உள்ள சாலைப் பகுதியாக உள்ளதால் மேற்கண்ட பாலத்தை வனத் துறையின் அனுமதி பெற்ற பின்னர் அமைக்க வேண்டியுள்ளதால் இதனை இத்துறையின் வாயிலாக மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



2000 மே 18]

## இருபத்து நான்காம் பட்டியல்

1—

### நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 13943—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு ஒன்றியத்தைச் சார்ந்த சேர்ப்பாப்பட்டு ஊராட்சி, மேட்டூர், மோத்தக்கல் ஊராட்சி, குபேரப்பட்டினம், மலையனூர் ஊராட்சி, கூட்டாறு, காவேரிப்பட்டினம், மோத்தாக்கல் காலனி பகுதி, சாத்தனூர் ஊராட்சி ஐத்தாம்பாளையம், வேடங்குளம், மல்லிகாபுரம், வீரணம் ஊராட்சி ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியம், சாத்தனூர் ஊராட்சி, அயித்தம்பாளையம் குடியிருப்பு, மலையனூர் ஊராட்சி, கூட்டாறு மற்றும் காவேரிப்பட்டினம் குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், மோத்தக்கல் ஊராட்சி, குபேரப்பட்டினம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்படவுள்ளது. சேர்ப்பாப்பட்டு ஊராட்சி, மோட்டூர் மற்றும் மோத்தக்கல் ஊராட்சியில் மோத்தக்கல் காலனி குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. வரும் நிதியாண்டில் திட்டம் மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையின்படி பரிசீலிக்கப்படும்.

[2000 மே 18

2—

### குடிநீர் குழாய் இணைப்பு

**வினா எண் 14387—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1982-ல் அமைக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் நகரில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டிலே செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இது பற்றிய செயற்குறிப்பு தற்போது சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் செயலாக்கத்தில் உள்ளது.

(ஆ) கவியரசு கண்ணதாசன் நகரில் சுமார் 30000 மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள முதல் மூன்று பகுதிகளில் மாதவரம் நீர் ஏற்று நிலையத்திலிருந்து நீர் பெற்று, ஏ.சி. குழாய்களை மாற்றி இரும்பு (சி.ஐ.) பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு, சுமார் 6580 மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 6 பகுதிகளுக்கு ஏ.சி. குழாய்களை மாற்றி, வார்ப்பு இரும்பு குழாய்கள் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் குடிநீர் இணைப்பு கோரும் மக்களுக்கு வீட்டுக் குழாய் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

3—

### குடிநீர் வசதி

**வினா எண் 14579—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) ஆம்பூர் நகராட்சியில் குடிநீர் இன்றி மக்கள் அவதியுறுவதை அரசு அறியுமா?

(ஆ) குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆம்பூர் நகராட்சிக்காக மலடாற்றில் நரியம்பட்டு என்ற இடத்தில் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு, உடனடி குடிநீர்த் திட்டம் ரூ.60 லட்சத்திற்கு நிறைவேற்றப்பட்டு தற்போது பராமரிப்பதற்காக நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4—

### பாலம்

**வினா எண் 15694—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள தீவட்டிப்பட்டி ஊராட்சியில் சரபங்காநதியின் குறுக்கே பொதுமக்களின் வசதிக்காக பாலம் ஒன்று கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1997-98-ம் ஆண்டில் ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்தில் தீவட்டிப்பட்டி ஊராட்சியில் சரபங்காநதியின் குறுக்கே பொதுமக்களின் வசதிக்காக பாலம் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

[2000 மே 18

5—

## நகராட்சி வருமானம்

**வினா எண் 15818—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரக்கோணம் நகரில் பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் அமைத்து, நகராட்சிக்கு வருமானம் பெருகிட வழிவகை செய்ய அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*அரக்கோணம் நகரம், பழைய பேருந்து நிலையத்தில் 'கட்டுதல்—இயக்குதல்-திரும்பக் கொடுத்தல்' திட்டத்தில் வணிக வளாகம் அமைப்பதற்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மேல்நடவடிக்கை தொடரப்படுகிறது.*

6—

## பள்ளிக் கட்டடம்

**வினா எண் 15911—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள இராமநாதபுரம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 10 ஆண்டுகட்கு முன்பு ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை இடிக்க அரசு முன் வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூரிலுள்ள இராமநாதபுரம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து, ஆபத்தான நிலையில் இருந்த கூடுதல் பள்ளிக் கட்டடம் இடித்து அகற்றப்பட்டது.*



2000 மே 18]

7—

## சாலை மேம்பாடு

**வினா எண் 16811—திரு. செ. இராமலிங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மாங்குடி-மல்லபுரம் சாலை பேருந்து சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அல்லது கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1998-99-ம் ஆண்டு ஒன்றிய பொது நிதியில் இருந்து எடுத்துச் செய்ய ஒன்றியக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில் நுட்ப அனுமதி பெற்று, திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வேலை உத்திரவுகள் வழங்கிட நடவடிக்கையில் உள்ளது.*

8—

## வீடுகள்

**வினா எண் 17289—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டை, சுவாமிமலை, சோழபுரம், பாபநாசம் ஆகிய நான்கு பேரூராட்சிகளிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஏழை மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஊராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. பேரூராட்சிகள் 1-6-1994 முதல் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தின் கீழ் செயல்படுவதால் இத்திட்டம் பேரூராட்சிகளில் விரிவுபடுத்தப்படவில்லை.

**9—**

**தஞ்சாவூர் தட்டு விற்பனை**

**வினா எண் 17327—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் தட்டு நடப்பாண்டில் எவ்வளவு விற்பனையாகி உள்ளது?

(ஆ) இதன் விற்பனையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் பூம்புகார் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மற்றும் கண்காட்சிகள் மூலம் தஞ்சாவூர் கலைத்தட்டுகள் ரூ.55.70 இலட்சங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இதன் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் கலைத்தட்டில் பல்வேறு வகை மைய அமைப்புகளையும் (Centre Motif) புது வகையில் வடிவமைத்து விற்பனைக்கு அளித்து வருகிறது. இதன் மரபுசார்ந்த தன்மையை விளக்கி, மொத்தமாக அன்பளிப்பு கருதி விற்பனை நிலையங்களில் பொருட்கள் வாங்குவோருக்கு தஞ்சைத் கலைத்தட்டுகளையே வாங்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது. அரசு மற்றும் அரசுத் துறை சார்ந்த விழாக்களில் நினைவுப் பரிசாக அளிக்க சிறப்பு மையப் பொதிவுகளை (Exclusive Centre Motif) அமைத்தும்



தரப்படுகிறது. தஞ்சைக் கலைத்தட்டுகளின் மையப் பகுதியில் மின்னணுக் கடிகாரங்களையும் அமைத்து இக்கலைத்தட்டு விற்பனை பெரிதும் மேம்பாடு அடைந்து வருகின்றது.

இதுபோன்ற பன்னோக்கு நடவடிக்கைகளின் மூலம் கலைத்தட்டு விற்பனையை அதிகரிக்க பூம்புகார் நிறுவனத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**10—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 17758—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிப் பகுதியில் ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்ட கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி இராசிபுரம் நகராட்சிகள், ஒன்பது பேரூராட்சிகள் மற்றும் 155 வழியோர கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் ஆணை எண் 443/ந.நி.கு.வ. துறை, நாள் 26-4-1988-ல் ரூ.1986.74 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மீண்டும் திருத்திய மதிப்பீடு ரூ.3210.50 இலட்சத்திற்கு அரசு ஆணை எண் 89, நாள் 14-5-1998-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எடப்பாடி நகராட்சியின் பகிர்மானக் குழாய்கள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள் 31-12-1998 அன்று எடப்பாடி நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு, எடப்பாடி நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேற்படி திட்டம் செயலாக்கத்தில் இருக்கும்போது விரிவடைந்த பகுதிகள் என்று அறியப்பட்ட இடங்களுக்கு 20 கி.மீ. தூரத்திற்குத் திருத்திய மதிப்பீடு ஒப்புதலின்படி பகிர்மானக் குழாய் நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது விரிவாக்கப் பகுதிகளாகக் கண்டறியப்பட்ட 25 விடுபட்ட பகுதிகளுக்கு

எடப்பாடி நகராட்சியிடமிருந்து தீர்மானம் பெற்று குழாய் நீட்டிப்புக்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்து விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

### தரைப்பாலம்

**வினா எண் 18316—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை எம்.எம்.டி.ஏ. காலனி, ஆசாத் நகரை இணைக்கும் தரைப்பாலம் விரிவுபடுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். ஆசாத் நகரையும் எம்.எம்.டி.ஏ. காலனி அருகிலுள்ள மங்களா நகரையும் இணைத்துப் பாலம் அமைக்க ரூ.18.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் பெற்று ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) 1999-2000-ம் நிதியாண்டில் பணி நிறைவேற்றப்படும்.*

12—

### பாதை வசதி

**வினா எண் 18878—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி நகரிலுள்ள நரிக்குறவர் குடியிருப்புக்குப் பாதை வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*





*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*செயற்குறிப்பு அரசிடம் நிலுவையில் இல்லை.*

13—

### தொலைக்காட்சிப் பெட்டி

**வினா எண் 19022—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படாத கிராமங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படாத கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க தற்போது அரசில் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

14—

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா எண் 19034—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மிகவும் நலிவடைந்த சிறு நகராட்சிகளுக்கும் விரிவாக்க அரசு ஆலோசிக்குமா?*

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**15—**

**பணி உயர்வு**

**வினா எண் 19126—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தின் உதவிப் பொறியாளர் பணியிடங்கள் காலியாக இருந்தும் தற்போது பணியில் உள்ள பகுதிநேர பொறியியல் பட்டப்படிப்பு முடித்து தகுதியிருந்தும் அரசு ஆணை எண்.1/பொ.பது., நாள் 2-1-1990-ன்படி பணி உயர்வு வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தில் கீழ்நிலைப் பணிகளில் பணிபுரியும் பகுதிநேரப் பொறியியல் பட்டம் பெற்ற தகுதியுடைய பணியாளர்களை உதவிப் பொறியாளர்கள் பணியிடங்கள் காலியானபோது முதல்கட்டமாக 1990-91-ல் 59 நபர்களும், பின்பு 1997-ல் 39 நபர்களும், பிறகு 1998-ல் 67 நபர்களும் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



**16—**

**கொத்தடிமைகள்**

**வினா எண் 19234—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்து லட்சம் கிணறுகள் தோண்டும் திட்டத்தில் 1997-98 இல் தமிழ் நாட்டில் தோண்டப்பட்ட கிணறுகள் மற்றும் இதனால் பயனடைந்த ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பத்து லட்சம் கிணறுகள் தோண்டும் திட்டத்தில் 1997-98-இல் தமிழ்நாட்டில் தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை 3,626 ஆகும். இதில் பயனடைந்த ஆதிதிராவிட பழங்குடியினர் 53 பேர்கள் ஆகும். பயனடைந்த கொத்தடிமைகள் யாரும் இல்லை.

**17—**

**மின் விளக்குகள்**

**வினா எண் 19453—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் கொள்ளிடம் பாலத்திற்கு மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரியலூர் சட்டமன்றத் தொகுதி திருமானூர் கொள்ளிடம் பாலத்தில் 24 எண்ணிக்கை சோடியம் மின் விளக்கு பொருத்தப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 16-5-1999 அன்று மின் விளக்கு எரிய வைக்கப்பட்டுள்ளது.

[2000 மே 18

18—

### நல்ல நீராக்குதல்

**வினா எண் 19947—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சில பகுதிகளில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி வருவதால் அதை நல்ல நீராக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சட்டம் வரையறுக்கப்படுவதன் மூலம் இந்த நிலையை முடிவுக்குக் கொண்டுவர இயலும் என அரசு கருதுகிறது. இதற்கான வரைவுச் சட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

19—

### மானியத்தை அதிகரித்தல்

**வினா எண் 20144—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுவரும் மருந்துகளுக்கான மானியங்கள் அதிகரிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2000 மே 18]

20—

### ஊராட்சி அமைத்தல்

**வினா எண் 20668—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் தில்லையம்பூர் ஊராட்சியிலிருந்து மாடாகுடியைத் தனியாகப் பிரித்து தனியாக மாடாகுடி ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தில்லையம்பூர் ஊராட்சியில் இருந்து மாடாகுடியைத் தனியாகப் பிரித்து மாடாகுடி ஊராட்சி என்று அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

21—

### வகுப்பறைகள்

**வினா எண் 20745—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் இடுவாய் ஊராட்சி, இடுவாய் நடுநிலைப் பள்ளியில் ஆரம்ப வகுப்புகள் பாழடைந்த கட்டடத்தில் நடைபெற்று வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மொத்தம் மூன்று கட்டடங்களில் இரண்டு கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள ஒன்று 1998-99 ஆம் ஆண்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பணிகள் திட்டத்தில் பழுது பார்க்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**22—**

**பேருந்து நிலையத்தைச் சீர்செய்தல்**

**வினா எண் 21090—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் நகர பழைய பேருந்து நிலையத்தைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சேலம் நகர பழைய பேருந்து நிலையத்தைச் சீர் செய்ய சேலம் மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. நகரப் பேருந்து நிலையமாக இயங்கி வரும் இவ்விடத்தை ஒட்டிய விக்டோரியா காலனி இடத்தில் ரூ.5.35 கோடி செலவில் வணிக வளாகம் கட்டப்பட்டு வருகிறது. வணிக வளாகம் கட்டுவதால் பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள அசுத்தங்கள் அப்புறப்படுத்தப்பட்டு கடைகள் கட்டப்படுகின்றன.*

**23—**

**வருவாய் இழப்பு**

**வினா எண் 21510—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) கோயம்புத்தூர், உக்கடம் பேருந்து நிலையத்திற்கு "அ" நிலை அங்கீகாரம் பெறப்படாததால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், "அ" நிலை அங்கீகாரம் எப்போது பெறப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் உக்கடம் பேருந்து நிலையத்திற்கு "அ" நிலை அங்கீகாரம் தற்காலிகமாக வழங்கப்பட்ட நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெற்ற கலவரம் மற்றும் குண்டு வெடிப்பினால் பேருந்து நிலையம் மிகுந்த சேதத்திற்குள்ளானதால் பேருந்து நிலையம் செப்பனிடப்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் குறிப்பிட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு "அ" நிலை அங்கீகாரம் பெற உரிய நடவடிக்கை கோவை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகிறது.*

**24—**

**ஊராட்சியைப் பிரித்தல்**

**வினா எண் 21774—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சியை இராமநாதபுரம் ஊராட்சி, மானோஜிபட்டி ஊராட்சி என இரண்டாகப் பிரித்துக் கொடுக்க அரசு முன் வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு ஏதும் அரசுக்கு வரப்பெறவில்லை.*

[2000 மே 18

25—

### பணிகள்

**வினா எண் 21784—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளம் மற்றும் வறட்சிப் பணிகள் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம்தான் நடைபெறவேண்டும் என்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

26—

### பாலம் கட்டுதல்

**வினா எண் 21788—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பழைய நகரம் ஊராட்சி பழைய நகரம்-ஜீவன் குறிச்சி சாலையில் சிறுபாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பழைய நகரம் ஊராட்சி பழைய நகரம்-ஜீவன் குறிச்சி சாலையில் சிறுபாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



2000 மே 18]

27—

### சிறு பாலம்

**வினா எண் 21789—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பழைய நகரம் ஊராட்சி, தொந்து புளிக்காடு தென்னங்குடி சாலையில் சிறுபாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்சமயம் சிறுகுழாய்கள் மட்டும் போடப்பட்டு போக்குவரத்து நடைபெறுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் நிதி நிலைமையைப் பொறுத்து இச்செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்.

28—

### தண்ணீர் வசதி

**வினா எண் 21792—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, முதல்சேரி கிராமத்திற்கு மகாராஜசமுத்திரம் காட்டாற்றின் குறுக்கே நீரேற்று நிலையம் அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. பேராவூரணி தொகுதியில் உள்ள மகாராஜசமுத்திரம் ஆறு மழைநீரை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட காட்டாறு ஆகும். இந்த ஆற்றில் வருடம் முழுவதும் தண்ணீர் ஓடுவதில்லை. மேலும், இந்த

[2000 மே 18

ஆற்றில் போதுமான மணல் இல்லாமல் இருப்பதால் வடிமுனைக் கிணறுகள் அமைக்கும் வாய்ப்புகள் இல்லை. அதனால் தேவைப்படும் அளவு தண்ணீர் எடுக்க இயலாத நிலையில் உள்ள மகாராஜசமுத்திரம் ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் திட்டம் நிறைவேற்ற இயலாது.

**29—**

## மின் இணைப்பு

**வினா எண் 21794—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1997-98-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் குடிசைகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் எத்தனை குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1997-98-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் 1965 குடிசைகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

**30—**

## காலமுறை ஊதியம்

**வினா எண் 21828—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு ஊராட்சிகளில் பணிபுரியும் உதவியாளர்கள்/ பகுதிநேர எழுத்தர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் உதவியாளர்கள்/பகுதி நேர எழுத்தர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**31—**

## நீர் மூழ்கி மின்மோட்டார்

**வினா எண் 21356—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் தொறவனூர் டி. ஆண்டிப்பாளையம் ஆழ்குழாய் கிணற்றிற்கு 10 ஹெச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் புதிய மின்னிறைப்பான் குடிநீர்த் திட்டம் அமைக்கப்படுவதால், மேலே குறிப்பிட்டுள்ள ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் 10 ஹெச்.பி. நீர் மூழ்கி மின்மோட்டார் அமைத்துத்தர அவசியம் எழாது.*

**32—**

## சீரமைப்பு நிதி

**வினா எண் 22073—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் ஒன்றியத்திற்கு 1998-99-ல் குட்டை சீரமைப்பு நிதி எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது?

(ஆ) அவை முழுவதும் குட்டை சீரமைப்பிற்கே செலவழிக்கப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஒன்றியத்திற்கு 1998-99-ல் குட்டை சீரமைப்புக்காக ரூ.51.955 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) ஆம். அவை முழுவதும் குட்டை சீரமைப்பிற்கே செலவழிக்கப்பட்டது.

**33—**

**பழுதடைந்த விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 22088—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் சுகாதாரத் தொழிலாளர்கள் குடியிருப்பான சூசையாபுரம், தென்னம்பாளையம், அரண்மனைப்புதூர் வீடுகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது பழுதுபார்த்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வரும் நிதியாண்டில் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மிகவும் பழுதடைந்துள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் குடியிருப்பினை படிப்படியாக எடுத்து அனைத்து குடியிருப்புகளுக்கும் மராமத்துப் பணிகள் செய்ய ஆவன செய்யப்படும்.



**34—**

**வடிகால் வசதி**

**வினா எண் 22094—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியின் எல்லைப்பகுதியில் வடிகால் வசதி அமைக்கப்பட வேண்டிய சாலையின் நீளம் என்ன?

(ஆ) அவை எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் மொத்தம் 452.92 கி.மீ. நீளத்திற்கு வடிகால் வசதி அமைக்கப்பட வேண்டியுள்ளது.

(ஆ) புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடைப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், நகராட்சி நிதி நிலைமைக்கேற்ப பொது நிதியிலிருந்து அவ்வப்போது வடிகால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**35—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 22333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி 4-வது வார்டை சேர்ந்துள்ள முண்டாசியூர், முண்டாசியூர் காட்டுவளவு ஆகிய இரண்டு பகுதியும், எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதி மக்களுக்கு காவிரி நீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் எடப்பாடி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பணி முடிக்கப்பட்டு மேற்படித் திட்டம் எடப்பாடி நகராட்சி வசம் 31-12-1998 அன்று ஒப்படைக்கப்பட்டு விட்டது. விடுபட்ட கூடுதல் பகுதிகளுக்கு குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்ய எடப்பாடி நகராட்சியிடம் தீர்மானம் பெற்று (தீர்மான எண் 508, நாள் 11-9-1998) பணிகள் நடைபெற்று வருகின்றன. இனியேதும் விடுபட்ட பகுதிகள் இருப்பின் நகராட்சியின் வேண்டுகோளுக்கிணங்க குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**36—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 7484—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டத் தலைநகர் திருவாரூரிலிருந்து கோட்டூர், வேதபுரம், தேவதானம் வழியாக சித்தமல்லி, பெருகவாழ்ந்தான் வரை இரண்டு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாணலூர் முதல் ரகுநாதபுரம் வரையிலான 3 கி.மீ. தார் சாலை சேதமடைந்துள்ளது. அச்சாலை சீர்செய்யப்பட்டு, சாலை தகுதிச் சான்று பெறப்பட்டவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண்கள் 10259 மற்றும் 10277—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்திலிருந்து மடம்கூத்தப்பாடி வழியாக ஒகேனக்கல் ஊட்டமலை வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) தருமபுரி மாவட்டம்-பென்னாகரத்திலிருந்து மடம்கூத்தப்பாடி வழியாக ஒகேனக்கல் ஊட்டமலை வரை நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றிருப்பதால் இக்கிராமங்கள் வழியாகப் பேருந்து இயக்கிடும் உத்தேசம் இல்லை.

**38—**

## பேருந்து வசதி

**வினா எண் 12529—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை தொகுதி ஒவ்வொன்றையும் தலைநகர் சென்னையுடன் பேருந்து மூலம் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சுமார் 70 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளைத்தவிர மற்ற அனைத்துச சட்டமன்றத் தொகுதிகளையும் சென்னையுடன் இணைக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்ட 70 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் 44 தொகுதிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் பேருந்துகள் மூலம் சென்னையுடன்

[2000 மே 18

இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 தொகுதிகள் சிறிய ஊர்களாக உள்ளதாலும், பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதாலும் மேலும் அருகாமையில் உள்ள பெரிய ஊர்களுக்கு வந்து அங்கிருந்து சென்னைக்கு வர பகுதிவாரியாகப் போக்குவரத்து வசதி இருப்பதாலும் அத்தொகுதிகளிலிருந்து நேரடியாகவோ அல்லது அத்தொகுதி வழியாகவோ பேருந்து இயக்கப்படவில்லை.

**39—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 14391—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர் மாநகரப் பேருந்து நிலையத்தில் ஒரு பகுதியை தனியாருக்கு விற்பதற்கான செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க உடனடி நடவடிக்கையை அரசு எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**40—**

### கூடுதல் பேருந்து வசதிகள்

**வினா எண் 17211—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதியில் கிராமப் பகுதிகளில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தித் தந்திட அரசு முன்வருமா?



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*19-3-1997 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவரவர் விருப்பம்போல் இரு வழித்தடங்களில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிப்பு செய்ததன்பேரில், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட இருவழித் தடங்களில் புதிய பேருந்து ஒதுக்கீடு செய்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை நீங்கலாக 13-5-1998-க்குப் பிறகு திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பேருந்து வசதி ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற நகரப் பேருந்துகள் மூலம் இடைப்பட்ட கால நேரங்களில், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் கூடுதல் பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.*

**41—**

### நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 17854—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கரூர்-குஜிலியம்பாறை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கரூர் - குஜிலியம்பாறை வழித்தடம் 34.4 கி.மீ. நீளமாகும். இவ்வழித்தட தூரம் 30 கி. மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.*

[2000 மே 18

42—

## எரிபொருள் சேமிப்பு

**வினா எண் 18313—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடனுதவி அளிக்கும்போது எரிபொருள் சேமிப்பு குறித்து ஏதேனும் நிபந்தனை விதிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த போக்குவரத்துக் கழகங்கள் சிக்கனத்தைக் கடைபிடித்து சாதனை படைத்துள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-4) லிமிடெட் திண்டுக்கல், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சிக்கனத்தைக் கடைபிடித்து கடந்த வருடங்களில் கீழ்க்கண்ட விருதுகளைப் பெற்றுள்ளது:

1. 1995-96-ல் அகில இந்திய அளவில் மசகு எண்ணெய் சேமிப்பில் (புறநகர் பேருந்து) சிறந்த சாதனைக்கு விருது கிடைத்துள்ளது.

2. 1995-96-ல் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சேமிப்பில் சிறந்த சாதனைக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் விருது வழங்கியுள்ளது.

3. 1996-97-ல் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சேமிப்பில் சிறந்த சாதனைக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் விருது வழங்கி உள்ளது.

4. 1996-97-ல் அகில இந்திய அளவில் எரிபொருள் சேமிப்பில் சிறந்த முறையில் பணி ஆற்றியமைக்கு இரண்டாவது இடத்திற்கான விருது கிடைத்துள்ளது.



2000 மே 18]

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காரைக்குடி, எரிபொருள் மற்றும் உயவு எண்ணெய் சிக்கனத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1992-93 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தையும், 1993-94 ஆம் ஆண்டில் முதல் இடத்தையும் பெற்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி, 1996-97 ஆம் ஆண்டிற்கான டீசல் மற்றும் லூப் ஆயில் சிக்கனத்திற்கான இந்திய எண்ணெய்க் கழக விருது பெற்றுள்ளது.

43—

## ஓய்வு விடுதிகள்

**வினா எண் 19997—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டி மற்றும் கொடைக்கானலில் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

44—

## பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா எண் 20214—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு கிழக்குக் கடற்கரை சாலை வழியாக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து கிழக்குக் கடற்கரை சாலை வழியாக சென்னைக்குக் கூடுதலாக பேருந்துகளை இயக்கும் திட்டம் உள்ளது. ஆனால் இது பாண்டிச்சேரி மாநிலத்தை உள்ளடக்கிய சாலைகளின் வழியாகச் செல்வதால், இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தட ஒப்பந்தம் ஏற்படும்பொழுது இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்க பரிசீலிக்க இயலும்.

45—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 20220—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அழகப்பம்பாளையம் புதூர் தடம் எண் 30—பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடிக்கும் அழகப்பம்பாளையம் புதூருக்கும் இடையில் அகல ரயில் பாதை ஒன்றுள்ளது. இது அதிக போக்குவரத்து மிக்கது. அதனால் ரெயில்கேட் தினசரி சுமார் 45 தடவைகள் மூடப்படுகிறது. இதன் காரணமாக அவ்வழியாகச் செல்லும் பேருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களை கடைப்பிடிக்க முடிவதில்லை. மேலும் அழகப்பம்பாளையம் புதூருக்கு இயக்கப்படும் நடைகளில் பயணிகள் போக்குவரத்தும் குறைவாக உள்ளது. தவிரவும் எடப்பாடி-சித்தர்கோவில் (வழி) அழகப்பம்பாளையம் புதூர், இளம்பிள்ளை தடத்தில் இயக்கப்படும் தடம் எண் 5 மற்றும் 5 பி-யின் மூலம் அழகப்பம்பாளையம் புதூருக்கு தினசரி 18 நடைகள் பேருந்து வசதி உள்ளது. அவ்வழியாக சேலம் வர அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. மகுடஞ்சாவடியிலிருந்து 1.5 கி.மீ. தாண்டி சுமார் 4 கி.மீ. சாலை குண்டும் குழியுமாக பேருந்து இயக்கத்திற்கு ஏதுவாக இல்லை. மேற்கண்ட காரணங்களால் சேலத்திலிருந்து மகுடஞ்சாவடி வழியாக அழகப்பம்பாளையம் புதூருக்கு இயக்கப்பட்ட பேருந்து 11-2-1996 முதல் மகுடஞ்சாவடி வரை இயக்கப்படுகிறது. பேருந்து நிறுத்தப்படவில்லை. அழகப்பம்பாளையம் புதூர் வரை பேருந்தினை இயக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.





46—

## பேருந்துகள் நேரத்தை நிர்ணயித்தல்

**வினா எண் 20949—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பயணிகள் கூட்டம் அதிகம் இருக்கிற நேரங்களில் அரசு பேருந்துகளுக்கு 'டைமிங்' ஒதுக்கி நிர்ணயிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசுப் பேருந்துகள் நேரம் நிர்ணயிக்கப்பட்டுதான் இயக்கப்படுகின்றன. கூட்டம் அதிகம் உள்ள நேரங்களில் அதிகப் பேருந்துகள், நேரம் நிர்ணயம் செய்து இயக்கப்படுகின்றன. விழாக்காலங்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு பின்னர் போக்குவரத்துக் கழகங்களால் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரிக்குத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றுக்கு நேரம் நிர்ணயம் செய்ய அவசியம் எழாது. பயணிகள் கூட்டம் அதிகம் இருக்கின்ற நேரங்களில், பேருந்துகளின் இடைவெளி நேரங்களில் நேரம் நிர்ணயம் செய்து தற்காலிகமாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, நேரம் நிர்ணயம் செய்வது நடைமுறையில் இருந்து வருகிறது.

47—

## போக்குவரத்து நெரிசல்

**வினா எண் 21089—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க அதிக பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை கோட்டம்-1 மற்றும் 2) மூலம் தற்போது 2,594 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் 33 தொடர் பேருந்துகள் மற்றும் 10 மாடி பேருந்துகளும் அதிக பயணிகள் பயணம் செய்யும் வகையில் இயக்கப்படுகின்றன.

**48—**

### அரசு போக்குவரத்துக் கழகங்கள்

**வினா எண் 21091—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இந்த (1997-98) நிதி ஆண்டில் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?

(ஆ) நட்டம் ஏற்படுவதற்கான காரணங்களை அரசு ஆய்ந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1997-98 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ.228.51 கோடியாகும்.

(ஆ) ஆம்.

(இ) டீசல் விலை உயர்வு மற்றும் ஊழியர் சம்பள உயர்வினை கணக்கில் கொண்டு உரிய காலத்தில் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படாததாலும், பொதுமக்களின் நலன் கருதி வருவாய் ஈட்டாத தடங்களில், நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படுவதாலும் நட்டம் ஏற்பட்டுள்ளது.



2000 மே 18]

**49—**

### அரசுப் பேருந்துகள்

**வினா எண் 21600—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளில் நட்டம் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் நட்டத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் விவரம் வருமாறு:

(1) நிர்வாகச் செலவினங்களை கட்டுப்படுத்தி சீரிய நிர்வாக மேம்பாட்டிற்காக 21 போக்குவரத்து கழகங்களை 7 போக்குவரத்து கழகங்களாக இணைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(2) போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களை கட்டுப்படுத்த, அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட குழுவால் புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கழகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களை குறைந்த விலைக்கு வாங்குவதால் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டயர், ஸ்பிரிங் மற்றும் உதிரி பாகங்கள் செலவு 1995-96 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1998-99 ஆம் ஆண்டு சுமார் 27.65 கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் பொருள்களின் வழக்கமான விலை உயர்வுக்குப் பிறகும், இந்தச் செலவினக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

(3) மேலும், பேருந்துகள் கூடு கட்டும் செலவினங்களில் கடந்த ஆண்டுகளில் சுமார் 48 கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது.

[2000 மே 18

(4) சம்பளச் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(5) வருவாயைப் பெருக்க சென்னை நகரில் விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளன. மதுரை போன்ற மற்ற முக்கிய நகரங்களிலும் இத்தகைய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகள் மூலம் பொதுமக்களுக்கு வசதி செய்து கொடுப்பதுடன், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(6) போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையே ஏற்படும் போட்டியை தவிர்க்க, மண்டல வாரியாக வழித்தடங்களை சீரமைக்கக் குழு நியமிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் மூலம் கழகங்களின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(7) அதிகமாக நட்டம் ஏற்படும் வழித்தடங்களை பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுத்தவும் மற்றும் வருவாய் வரும் தடங்களில் இயக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(8) 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு ஆண்டுக்கு போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் ரூ.629.31 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். அவ்வகையில் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**50—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

**வினா எண் 21639—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் பகுதி நேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்படத் துவங்கியுள்ளதா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், இதனை முழு நேர அலுவலகமாக நிலை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். 29-10-1998 முதல் பெருந்துறையில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த அலுவலகத்தை முழு நேர அலுவலகமாக நிலை உயர்த்தும் அளவுக்கு இப்பகுதியில் பெருமளவு வாகனங்கள் இல்லை. எனவே இச்செயற்குறிப்பினை தற்பொழுது பரிசீலிக்க இயலாது.

**51—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 21760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து சென்னை சென்று வந்த பேருந்து ஜூன் 1998 முதல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி-சென்னை பேருந்து 2-4-1997 முதல் இயக்கப்பட்டு 31-5-1998 முதல் நிறுத்தப்பட்டது.

(ஆ) மீண்டும் எடப்பாடி சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க எடப்பாடி-சென்னை தடத்தில் பிப்ரவரி 1999 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

[2000 மே 18

52—

## பேருந்து வசதி

**வினா எண் 21764—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து ஈரோடு நகர் வரை ஜவுளி வியாபாரிகளின் போக்குவரத்து நன்மையைக் கருதி ஒரு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரிலிருந்து ஈரோடு நகர் வரை செல்ல அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 17 பேருந்துகள் மூலம் 43 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும் எடப்பாடியிலிருந்து சங்ககிரி செல்ல 95 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. அங்கிருந்து ஈரோடு செல்ல 3 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதம் பேருந்து வசதி உள்ளது. இதுவே எடப்பாடி நகரப் பயணிகளுக்கு ஈரோடு செல்வதற்கான தேவையை நிறைவு செய்வதால், கூடுதல் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

53—

## விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 21765—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து பழநி வரை சென்று வர ஒரு விரைவுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து பழநி 157 கி.மீ. தூரத்தில் உள்ளது. வழித்தடத்தின் நீளம் 250 கி.மீட்டருக்கும் குறைவாக உள்ளதால் அரசு விரைவுப்



2000 மே 18]

போக்குவரத்துக் கழகத்தால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் இத்தடத்தில் ஒரு பேருந்தின் மூலம் இரு நடைகள் இயக்கி வருகின்றது.

54—

## பெங்களூருக்குப் பேருந்து வசதி

**வினா எண் 22039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் ஜலகண்டபுரம், தொப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் வழியாக பெங்களூருக்கு அரசுப் பேருந்து விட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்ட தடம் புறமாநிலத் தடம் ஆகும். புறமாநில ஒப்பந்தங்களின்போது இதற்கான ஒப்புதல் பெற்ற பின்பே இத்தடத்தில் பேருந்து இயக்க இயலும். எனவே, தற்போது திட்டம் ஏதும் இல்லை.

55—

## புதிய பேருந்து

**வினா எண் 22041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் சுண்ணாம்புக்குட்டை, சங்ககிரி வழியாக ஈரோடு செல்ல ஒரு புதிய பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் ஒரு அரசு பேருந்து மற்றும் ஒரு தனியார் பேருந்தின் மூலம் தினசரி 14 நடைகள் பேருந்து வசதியுள்ளது. சங்ககிரி-ஈரோடு தடத்தில் ஒவ்வொரு 3 நிமிடத்திற்கு

[2000 மே 18

ஒரு பேருந்து வீதம் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் எந்த பேருந்திலும் 100% பயணிகள் விகிதாச்சாரம் இல்லாத காரணத்தால் கூடுதல் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**56—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 22525—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த அரசு போக்குவரத்துப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-கொங்கணாபுரம்-சேலம்-சென்னை தடத்தில் 2-4-1997 முதல் இயக்கப்பட்ட பேருந்து பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் 31-5-1998 அன்று நிறுத்தப்பட்டது. அப்பேருந்து 12-2-1999 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

**57—**

## போக்குவரத்துக் கழக வருவாய்

**வினா எண் 22530—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் 1996-ல் இருந்து இதுவரை ஏற்பட்டுள்ள இலாப நட்டக் கணக்கென்ன?

(ஆ) இன்னும் சிறப்பாக நடத்தி இலாபம் ஈட்ட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 1995-96 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட இலாப நட்ட விவரம் பின்வருமாறு:—

| வருடம் | ஏற்பட்ட இலாப/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1995-96 | (-) 595.47 |
| 1996-97 | (-) 759.09 |
| 1997-98 | (+) 77.01 |
| 1998-99 | (-) 929.23 (தணிக்கை செய்யப்படாதது) |

வழித்தடத்தில் உள்ள அனைத்து நிறுத்தங்களிலும் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல, ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முக்கியமான இடங்களில் நேரக்காப்பாளர்கள், தணிக்கையாளர்களை பணியமர்த்தி, பேருந்து சரியான நேரத்திற்கு செல்ல, வழி ஏற்படுத்துவதன் மூலம், வருவாய்ப் பெருக வழி செய்யப்பட்டுள்ளது. சிறந்த பராமரிப்பின் மூலம், மாறுபடும் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் வருவாய் ஈட்டி இலாபமடைய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நட்டத்தைக் குறைக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களை கட்டுப்படுத்த, அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கழகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களை குறைந்த விலைக்கு வாங்குவதால் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

[2000 மே 18

(ஆ) சம்பளச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால், கூடுதல் வருவாய் கிடைக்கும். இதனால் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**58—**

**போக்குவரத்துக் கழக வருமானம்**

**வினா எண் 22531—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஏற்பட்டுள்ள மொத்த நட்டம் எவ்வளவு?

(ஆ) நட்டத்தைச் சரிசெய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1998-99ஆம் ஆண்டு முடிய ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ. 1449.57 கோடியாகும்.

நட்டத்தைச் சரிக்கட்ட அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:



2000 மே 18]

நிதி நெருக்கடியைச் சமாளிக்க போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு 1996 முதல் இலகுவான கடன்களை அளித்தும், பங்குத் தொகையைத் அளித்தும் வந்துள்ளது. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் தொகையைச் செலுத்தித் தீர்க்க 1996-97ஆம் ஆண்டில் ரூ.68.52 கோடியைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியது. மேலும் ரூ.20.00 கோடியை போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு, போக்குவரத்து கழகங்களுக்கு கடனுதவி வழங்குவதற்காக, வழிவகை முன்பணமாக வழங்கியது. தவிரவும் பங்குத் தொகையாக ரூ. 71.50 கோடி வழங்கப்பட்டது. அதைத் தவிர ரூ.110.90 கோடி அளவிலான கடன் பங்குத் தொகையாக மாற்றப்பட்டது. 1997-98-ல் ரூ.100 கோடி வழிவகை முன்பணமாகவும் ரூ.150.53 கோடி அளவிலான கடன் பங்குத் தொகையாகவும் மாற்றப்பட்டது.

2. 1998-99ஆம் ஆண்டில் புதிய பேருந்துகள் வாங்க ரூ.100 கோடி கூடுதல் பங்குத் தொகையாக அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டது. போனஸ் வழங்க மேலும் ரூ.70 கோடி அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டது. தங்களுடைய கடன் நிலுவைத் தொகைகளை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்குச் செலுத்தித் தீர்க்கும் வகையில் சில போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.30 கோடி வழங்கப்பட்டது. 1999-2000ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசின் கூடுதல் பங்குத் தொகையாக வழங்க ரூ.111 கோடி வழங்கப்பட்டது.

3. போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்த, அரசால், நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால், புதிய கொள்முதல் கொள்கை வகுக்கப்பட்டு, பிப்ரவரி 1997 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கழகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதால், செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டயர், ஸ்பிரிங் மற்றும் உதிரி பாகங்கள் செலவு 1995-96 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 1998-99ஆம் ஆண்டில் சுமார் 27.65 கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளில் பொருள்களின் வழக்கமான விலை உயர்வுக்குப் பிறகும் இந்தச் செலவினக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

4. சம்பளச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில், புதிய நியமனங்கள் செய்வது செப்டம்பர் 1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

5. வருவாயைப் பெருக்க சென்னை நகரில் விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. மதுரை போன்ற மற்ற முக்கிய நகரங்களிலும், இத்தகைய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகள் மூலம் பொதுமக்களுக்கு வசதிசெய்து கொடுப்பதுடன், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6. போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையே ஏற்படும் போட்டியைத் தவிர்க்க, மண்டல வாரியாக வழித்தடங்களைச் சீரமைக்கச், குழு நியமிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கழகங்களின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. அதிகமான நட்டம் ஏற்படும் வழித்தடங்களை, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுத்தவும் மற்றும் வருவாய் வரும் தடங்களில் இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. மேற்கூறிய முயற்சிகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்கவும் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. 25-10-1999 முதல் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு ஆண்டுக்குப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் ரூ. 629.31 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். அவ்வகையில் இழப்பு ஏற்படுவது பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

**59—**

### பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 22799—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தானிப்பாடி, அரூர் வழியாக சேலம் சென்று கொண்டிருந்த பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால், இதில் திருவண்ணாமலை-சேலம் மற்றும் சேலம்-திருவண்ணாமலை பயணம் செய்யும் பயணிகள் பயணம் செய்வதைத் தவிர்த்து விடுகின்றனர். அதனால், இத்தடம் மிகக் குறைந்த அளவில் வருவாய் ஈட்டியதாலும், பயணிகள் அடர்வு இல்லாமையாலும் இத்தடத்தில் தொலைதூரப் பேருந்துகள் இயக்கம் நிறுத்தப்பட்டது. இயக்கச் செலவுகளைக்கூட ஈடுகட்டும் அளவிற்கு வருவாய் வருவதில்லை. மேலும், திருவண்ணாமலை-அரூர், அரூர்-சேலம் வழித்தடங்களில் போதிய பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் மீண்டும் பேருந்துகளை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**60—**

### நகரப் பேருந்து வசதி

**வினா எண் 22804—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் கீழ்சிறுபாக்கம், ராதாபுரம், தென்முடியனூர், தண்டராம்பட்டு வழியாக தென்பள்ளிபட்டுக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதியில் திருவண்ணாமலை-தென்பள்ளிப்பட்டு (வழி) கீழ்சிறுபாக்கம்; ராதாபுரம், தண்டராம்பட்டு, தென்முடியனூர் தடத்தில் 24-3-1987 முதல் தினசரி 6 நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**61—**

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 22808—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து பெரும்பாக்கம், கீழ்வணக்கம்பாடி, தரடாப்பட்டு வழியாக சாத்தனூர் அணைக்குப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**62—**

**பேருந்து வசதி**

**வினா எண் 23256—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* ஈரோடு மாவட்டத்தில் பவானி-தாராபுரம் நகரங்களை இணைக்கும் நேரடிப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* ஆந்தியூரிலிருந்து பவானி, தாராபுரம் வழியாக பழனி வரை தற்சமயம் 12 தனி நடைகள் தினசரிப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் பவானி-தாராபுரம் நேரடிப் பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே பவானி-தாராபுரம் நேரடியாகப் புதிய வழித்தடப் பேருந்து இயக்க தற்சமயம் திட்டம் எதுவும் இல்லை.

**63—**

**புகை பிடித்தல் தடை**

**வினா எண் 23735—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) பேருந்துகளில் புகை பிடிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள தடை சரிவர அமல்படுத்தப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அத்தடையை கண்டிப்புடன் அமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இவ்விதி சரிவர அமல்படுத்தப்படுகிறது. இப்பொருள் குறித்து புகார் எதுவும் பெறப்படவில்லை.*

**64—**

**நிர்வாகச் செலவுகள்**

**வினா எண் 23736—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவுகள் மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1-9-1998 முதல் ஊதிய ஒப்பந்தப்படி போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு மற்றும் இதர சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துள்ளன. நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.*

[2000 மே 18

**65—**

## பேருந்து வசதி

**வினா எண் 23743—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட கொத்தன்குளம் கிராமம் சுமார் 60 வீடுகளையும் 300 மக்கள் தொகையையும் கொண்டது. தற்பொழுது கொத்தன்குளம் கிராம பொதுமக்கள் 2.0 கி.மீ. தூரத்தில் உள்ள கங்கனாபுரத்திற்கு வந்து அங்கிருந்து அவ்வூர் வழியாக செல்லும் மதுரை கோட்டம்-3 மற்றும் மதுரை கோட்டம்-2 மூலம் இயக்கப்படும் பேருந்து வசதிகளை உபயோகித்துக் கொள்ளலாம். தற்போது பேருந்து வசதி பெற்றிருப்பதாலும் மக்கள் தொகை மிகவும் குறைவாக உள்ள சிறிய கிராமமாக உள்ளதாலும் முன்னுரிமை கொடுத்து பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**66—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 23744—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடம் எண் 470 திருப்பூரிலிருந்து சென்னை மற்றும் தடம் எண் 630 திருப்பூரிலிருந்து திருநெல்வேலி இரு அரசுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன?

(ஆ) அவற்றை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மிகக் குறைந்த பயணிகள் விகிதாச்சாரம் காரணமாக வழித்தடம் எண் 470 திருப்பூர்-சென்னை 1-11-1998-லிருந்தும் வழித்தடம் எண் 630 திருப்பூர்-திருநெல்வேலி 1-8-1998-லிருந்தும் நிறுத்தப்பட்டன.

(ஆ) பயணிகள் விகிதாச்சாரம் குறைவின் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டு, நிறுத்தப்பட்ட அரசு விரைவுப் பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்க சாத்தியமில்லை.

**67—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 23747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடம் எண் 635 திருப்பூர்-திருச்செந்தூர் அரசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வழித்தடம் 635 திருப்பூர்-திருச்செந்தூர் குறைந்த வருவாய் ஈட்டியதன் காரணமாக 11-2-1999 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வருவாய் இழப்பின் காரணமாக நிறுத்தப்பட்ட வழித்தடத்தை மீண்டும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு இதே வழித்தடத்தில் 12-2-1999 முதல் 2 பேருந்துகளை இயக்கி வருகிறது.

**68—**

## ஆராய்ச்சி நிறுவனம்

**வினா எண் 23754—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சாலை போக்குவரத்து ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை தென் மாநிலங்கள் சார்பாக தமிழகத்தில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**69—**

### செல்லுலார் போன் வசதி

**வினா எண் 23756—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கும் தொலைதூர அரசு பேருந்துகளில் செல்லுலார் போன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**70—**

### பேருந்து இழப்பு

**வினா எண் 23897—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் எத்தனை அரசு பேருந்துகள் சமூக விரோதிகளால் மற்றும் போராட்டத்தின் மூலம் தீக்கிரையாக்கப்பட்டன?



2000 மே 18]

(ஆ) அதனால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சமூக விரோதிகள் மற்றும் போராட்டத்தின் மூலம் 16 பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன.

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் ரூ.65.65 இலட்சம் ஆகும்.

**71—**

### விரைவுப் பேருந்துகள்

**வினா எண் 23908—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் இருந்து புதுவைக்கு மாமல்லபுரம் வழியாக (கிழக்குக் கடற்கரைச் சாலை) செல்லும், அரசு விரைவு பேருந்துகள் மாமல்லபுரத்தில் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தால் சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக புதுவைக்கு இயக்கப்படும் அனைத்து பேருந்துகளில் மாமல்லபுரம் கூட்டுச் சாலை கட்டண நிலையாக உள்ளது. இப்பேருந்துகள் குறைந்த நேரத்தில் இயக்கப்படுவதால் மாமல்லபுரம் ஊருக்குள் சென்று வருவதை நேரடியாகச் செல்லும் பயணிகள் விரும்ப மாட்டார்கள். மாமல்லபுரம் பேருந்து நிலையத்திற்கும் மாமல்லபுரம் கூட்டுச் சாலை பேருந்து நிறுத்தத்திற்கும் இடையே உள்ள தூரம் 1.2 கி.மீ. ஆகும். கூட்டுச்சாலை பேருந்து நிறுத்தத்திலிருந்து பேருந்து நிலையம் வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் காஞ்சிபுரம் பேருந்துகள் 65 மூலம் 352 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. சென்னையிலிருந்து புதுவைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மூலம் இயக்கப்படும் அனைத்து வழி நில்லாப் பேருந்துகளும் (Point to Point) மாமல்லபுரம் பேருந்து நிலையத்தினுள் சென்று வருகின்றன.

[2000 மே 18

72—

## புதிய வழித்தடம்

**வினா எண் 23911—திரு. குழந்தை தமிழரசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலத்தில் இருந்து திருப்பூர், பழனி, நாகர்கோவில் ஆகிய ஊர்களுக்குப் புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து விடப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) விருத்தாசலத்திலிருந்து திருப்பூர், பழனி, நாகர்கோவில் ஆகிய இடங்களுக்கு பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை. இவ்வழித்தடங்களில் தற்போது பகுதிவாரியாக பேருந்து வசதி உள்ளதால் நேரடிப் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

73—

## புதிய வழித்தடம் விடுதல்

**வினா எண் 24198—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் முதல் கீழ்க்கட்டளை வரை நங்கநல்லூர் வழியாக புதிய வழித்தடம் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது போதுமான வழித்தடங்கள் இயக்கப்படுவதால் தாம்பரம் முதல் கீழ்க்கட்டளை வரை நங்கநல்லூர் வழியாக புதிய வழித்தடம் இயக்க சாத்தியமில்லை.*



2000 மே 18]

74—

## முன் பதிவு

**வினா எண் 24540—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையிலிருந்து திருச்சி செல்லும் அரசுப் பேருந்துகளில் தொலைபேசி மூலம் இருக்கைகள் முன் பதிவு செய்ய பயணிகளுக்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சென்னையிலிருந்து புறப்படும் அனைத்து அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் (திருச்சி உட்பட) தொலைபேசி மூலமாக முன் பதிவு செய்யும் வசதி 1-5-1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென தனி இடமும் தொலைபேசியும் ஒதுக்கப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 5342737. பயணியின் பெயர், பயண நாள், புறப்படும் நேரம், தடம், வயது மற்றும் பால் ஆகியவற்றை தொலைபேசியில் தெரிவித்துப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பின் அதற்கான குறியீட்டு எண் தெரிவிக்கப்படும். பயணத் தேதிக்கு ஒரு நாளுக்கு முன்பாக முன்பதிவு செய்தவர்கள் முன் பதிவு செய்த நேரத்தில் இருந்து 24 மணி நேரத்திற்குள் பாரிமுனைப் பேருந்து நிலையத்தில் உள்ள தொலைபேசி முன் பதிவு மையத்திற்கு வந்து குறியீட்டு எண்ணைத் தெரிவித்து பயணக் கட்டணம் செலுத்தி பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தவறினால் முன்பதிவு ரத்து செய்யப்படும். பயணத் தேதியில் முன்பதிவு செய்த பயணிகள் புறப்படுவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக பயணச் சீட்டைப் பெற வேண்டும். தவறினால் முன் பதிவு ரத்து செய்யப்படும். தொலைபேசி மூலம் முன் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே உள்ள பயணக் கட்டணத்துடன் சேவைக் கட்டணமாக ரூ. 5 பயணச் சீட்டுடன் சேர்த்து பெறப்படும்.*

75—

## புறநகர் பேருந்து இயக்குதல்

**வினா எண் 24934—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலிருந்து திருப்பதிக்கு, திண்டிவனம், தெள்ளார், தேசூர், பெரணமல்லூர், ஆரணி வழியாக புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரத்திலிருந்து திருப்பதிக்கு திண்டிவனம், தெள்ளார், தேசூர், பெரணமல்லூர் மற்றும் ஆரணி வழியாகப் பேருந்து இயக்க, ஆந்திர மாநில அரசின் இசைவு கோரப்பட்டுள்ளது. இசைவினைப் பெற்ற பின்னர் புதிய பேருந்துகள் விடும்பொழுது இத்தடத்தில் பேருந்து இயக்க பரிசீலனை செய்ய இயலும். எனவே, தற்போது கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

76—

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 24939—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து நாரையூர் வரை நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை-வைப்பூர் (வழி) நாரையூர் வழித்தடத்தில் 4 நடைகளும் திருவண்ணாமலை-ஆங்குணம் (வழி) ஆவூர், நாரையூர் வழித்தடத்தில் 6 நடைகளும் ஏற்கெனவே பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை, நாரையூர் வழித்தடத்தில் பயணிகளின் அடர்வு 43% மட்டும் உள்ளதால் இத்தடத்தில் பிரத்யேகமாக நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

77—

## பெங்களூர் பேருந்து

**வினா எண் 24940—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டிலிருந்து செங்கம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி வழியாக பெங்களூர் வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டிலிருந்து பெங்களூர் வரை பேருந்து இயக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

78—

## தனியார் பேருந்துகள்

**வினா எண் 24945—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாவட்டங்களில் இயங்குவது போன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும் தனியார் பேருந்துகள் இயக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**79—**

### விரைவுப் பேருந்துகள்

**வினா எண் 24946—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில்-நெய்வேலி, நாகர்கோவில்-பாண்டிச்சேரி, நாகர்கோவில்-ஈரோடு ஆகிய விரைவுப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(இ) இல்லை எனில், தனியார் பேருந்து இயக்கும் உத்தேசம் உண்டா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) (ஆ) மற்றும் (இ) பயணிகள் விகிதாச்சாரம் குறைவு மற்றும் வருவாய் இழப்புக் காரணமாக நிறுத்தப்பட்ட கோரிக்கை வழித்தடங்களை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக மீண்டும் இயக்க சாத்தியக்கூறு இல்லை. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்குவரத்து இயக்கம் தேசியமயமாக ஆக்கப்பட்டுள்ளதால் கோரிக்கை வழித்தடங்களில் தனியார் பேருந்து இயக்க வழிவகை இல்லை.

**80—**

### பேருந்து வசதி

**வினா எண் 24948—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



குமரி மாவட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த 311-நாகர்கோவில்-கரிக்கி, பி.ஹெச்.எஸ்-7—திங்கள்சந்தை-தக்கலை, 5ஏ-தக்கலை-குளச்சல், 11 எச்—தக்கலை—பிள்ளையார்புரம் ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 311 தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண் 307பி நாகர்கோவில்—கரிக்கி பேருந்து வழிப்பாதை பழுதடைந்ததால் வழித்தடம் மாற்றி இயக்கப்பட்டு வந்தது. 16-10-1999 முதல் மார்த்தாண்டம்—கருங்கல்—கரிக்கி என்ற வழித்தடத்தில் நகரப் பேருந்து ஒன்று கரிக்கி கிராமத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.

பி.ஹெச்.எஸ். - என்ற வழித்தடம் பயணிகள் அடர்வு குறைவாக இருந்தபோதிலும் பல்நோக்கி வழித்தடமாக மாற்றி இயக்கப்பட்டு வருகிறது. சாலை சரியில்லாத காரணத்தால் சில மாதங்கள் இயக்கப்படாமல் இருந்தது.

5ஏ தக்கலை—குளச்சல் வழித்தடப் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. 1996-97ஆம் ஆண்டு முதல் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. தடம் எண் 11எச் தக்கலை—பிள்ளையார்புரம் பல்முனை வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டது. தற்போது நாகர்கோவில்—பிள்ளையார்புரம் வழித்தடத்தில் தனிப் பேருந்தும், நாகர்கோவில்—தக்கலை வழித்தடத்தில் தனிப் பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றது. எனவே, பேருந்துகள் எதுவும் நிறுத்தப்படவில்லை.

**81—**

### புதிய பேருந்துகள்

**வினா எண் 24975—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் மார்த்தாண்டம், படந்தாலுமூடு, திருவட்டார், திங்கள்சந்தை பணிமனைகளில் அதிகமாகப் பழுதடைந்துள்ள பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவிலில் 1996-97 ஆம் ஆண்டில் 49 பேருந்துகளும், 1997-98 ஆம் ஆண்டில் 175 பேருந்துகளும், 1998-99 ஆம் ஆண்டில் 57 பேருந்துகளும், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் மார்த்தாண்டம், படந்தாலுமூடு (குழித்துறை), திருவட்டார் மற்றும் திங்கள்சந்தை பணிமனைகளில் 32% பழைய பேருந்துகள் மாற்றப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 11% பழைய பேருந்துகள் மாற்றப்பட்டுள்ளன. புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது படிப்படியாக பழைய பேருந்துகள் கழிக்கப்படுகின்றன.*

**82—**

**விரைவுப் பேருந்து விடுதல்**

**வினா எண் 24983—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக திருவோணத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதுமில்லை.*

**83—**

**சென்னைக்கு விரைவுப் பேருந்து**

**வினா எண் 24985—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாவட்டம், சோழவந்தானிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சோழவந்தான்-மதுரை மற்றும் மதுரை-சென்னை வழித்தடங்களில் போதுமான பேருந்து வசதி உள்ளதால் சோழவந்தானிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து நேரடியாக இயக்க சாத்தியக்கூறு இல்லை.*

**84—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 24991—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு வரை நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**85—**

**மீட்டர்கள் பொருத்துதல்**

**வினா எண் 24996—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆட்டோக்கள் பெரும்பாலானவற்றில் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அத்தகைய ஆட்டோக்களின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**86—**

**மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்**

**வினா எண் 24997—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அத்தகைய அலுவலகம் ஒன்றை அங்கு துவக்க ஏற்பாடு செய்யப்படுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) தெரியும்.*

*(ஆ) தற்போது இல்லை.*

**87—**

**இலவச பேருந்து அனுமதிச் சீட்டு**

**வினா எண் 25010—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1997-98 ஆம் ஆண்டில் பலதரப்பட்ட பகுதியினருக்கு வழங்கப்பட்ட இலவச பேருந்து அனுமதிச் சீட்டுத் திட்டத்தால் போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1997-98 ஆம் ஆண்டில் பலதரப்பட்ட பிரிவினருக்கு வழங்கப்பட்ட இலவச பேருந்து அனுமதிச் சீட்டினால், போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 93.00 கோடியாகும்.*

**88—**

**நகரப் பேருந்து**

**வினா எண் 25027—திரு. ந. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் ஏ. 20 நகரப் பேருந்து ஆரணியிலிருந்து கோனையூருக்கு தொடர்ந்து இயக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், தொடர்ந்து இயக்க நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் ஏ. 20 நகரத் தடம் ஆரணி-கோனையூர் என தினசரி 4 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடம் தொடர்ந்து இயக்கப்படாமல் இருந்ததில்லை.*

**89—**

**சேலத்திலிருந்து பேருந்து இயக்குதல்**

**வினா எண் 25035—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு பகுதிக்கென்று தனியாக ஒரு பேருந்து சேலத்திலிருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம், வட்டக்காடு செல்வதற்கு தடம் எண் 90 மூலமாக தினசரி 8 நடைகளும், தடம் எண் 90 ஏ மூலமாக தினசரி 6 நடைகளும் பேருந்துகளை சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கி வருகிறது. இந்தப் பேருந்துகள் மூலம் இப்பகுதி மக்கள் போதிய போக்குவரத்து வசதி பெற்று வருகின்றனர். மேலும் தடம் எண் 90-ல் பயணிகள் வருகை 65 சதவீதமும், தடம் எண் 90-ஏயில் பயணிகள் வருகை 61 சதவீதமும் மட்டுமே உள்ளதால், கூடுதலாக வட்டக்காடு பகுதிக்கு ஒரு தனிப் பேருந்து இயக்க தற்சமயம் தேவை எழவில்லை.*

**90—**

## இரவு நேரப் பேருந்து

**வினா எண் 25039—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாநகர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து வெள்ளனைப்பட்டியிலுள்ள கோபிநாதபுரத்திற்கு இரவு நேரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சேலத்திலிருந்து கோபிநாதபுரத்திற்கு 90 ஏ தடப் பேருந்து தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. சேலத்திலிருந்து கோபிநாதபுரம் செல்ல இரவு நேரப் பயணிகளுக்கு வசதியாக, சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இரவு 11-50 மணிக்குப் புறப்பட்டு, சேலம் மாநகரப் புதிய பேருந்து நிலையத்தை இரவு 12-00 மணிக்கு சென்றடைந்து, அங்கிருந்து கோபிநாதபுரத்திற்கு அதிகாலை 00-40 மணிக்குச் சென்றடையும்படி இயக்கப்பட்டு அங்கேயே இரவில் தங்கல் செய்து, அதிகாலை சேலத்திலிருந்து வரும் பயணிகளுக்கு வசதியாக காலை 4-40 மணிக்கு கோபிநாதபுரத்தில் இருந்து புறப்பட்டு சேலம் செல்கிறது. இதுவே தேவையை நிறைவு செய்வதாக உள்ளதால் கோபிநாதபுரத்திற்குத் தனியாக இரவு நேரப் பேருந்து இயக்கத் தேவை நிலவவில்லை.*



2000 மே 18]

**91—**

## புதிய பேருந்து

**வினா எண் 25041—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், மூக்கனூரிலிருந்து சேலத்திற்கு, தனியாக புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சேலத்திலிருந்து மூக்கனூருக்கு எஸ் 1 தடப் பேருந்து மூலம் 2 நடைகளும், ஓ 14 தடப் பேருந்தின் மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. சேலத்திலிருந்து ஓமலூருக்கு நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகள் அடிக்கடி உள்ளதால், ஓமலூரிலிருந்து எஸ் 1, ஓ 14 மற்றும் 102 தடங்களின் மூலம் மூக்கனூருக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எஸ் 1 தினந்தோறும் 8 நடைகள் இயக்கப்பட்டு, அதன் பயணிகள் வருகை 57 விழுக்காடுதான் உள்ளது. அதேபோல, ஓ14 தினமும் 6 நடைகள் இயக்கப்பட்டு, பயணிகள் வருகை 57 விழுக்காடும், 102 தடப் பேருந்தில் தினமும் 4 நடைகளில பயணிகள் வருகை 51 விழுக்காடு தான் உள்ளது. எனவே, இப்பகுதி மக்களுக்குப் பேருந்து வசதி இதுவே போதுமானதாக உள்ளது. புதிய பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.*

**92—**

## புதிய பேருந்து வழித்தடம்

**வினா எண் 25109—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பள்ளிப்பட்டு-திருவள்ளூருக்கிடையே புதிய பேருந்து (வழித்தடம்) இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கழகப் பேருந்துகள் மூலமாகவும், தனியார் பேருந்துகள் மூலமாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றிருப்பதால் புதிய பேருந்து (வழித்தடம்) இயக்கத் தேவை எழவில்லை.

**93—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 25110—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம் அருகில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை, சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம் அருகில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலப்பரப்பு 10 அடி பள்ளமாக இருந்ததால் அவ்விடத்தில் ஒரு பகுதியை மண்கொட்டி படிப்படியாக நிலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 80 சென்ட் அளவில் பேருந்து நிலையம் அமைக்கவும், மேற்குறிப்பிட்ட இடம் ஆற்றின் கரையோரமாக இருப்பதால் முதற்கட்டமாக தடுப்புச் சுவரும், மேற்பரப்பில் தார்ச் சாலை போடவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளைச் செய்வதற்காக மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இருந்து ரூ. 35 இலட்சம் நிதி உதவி செய்ய மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள் முன்வந்துள்ளதால் அந்த நிதியைப் பெற்று அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.





**94—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26216—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதி, தொழில் பகுதி என்பதால் தற்போதுள்ள பேருந்து வசதிகளை மேலும் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகர்ப்புறத்தைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் மற்றும் கருமத்தம்பட்டி கிளைகளைச் சார்ந்த 90 நகரப் பேருந்துகள் மூலம் 859 நடைகளை திருப்பூர் நகரில் இயக்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்-2) ஈரோடு மூலம் சுமார் 58 நகரப் பேருந்துகள் மூலம் 396 நடைகளை தினசரி இயக்கி வருகிறது. திருப்பூரை மையமாகவும், திருப்பூர் வழியாகவும் 94 புறநகர்ப் பேருந்துகள் இயங்குகின்றன. இது தவிர, 29 தனியார் துறை நகரப் பேருந்துகள் தினசரி 449 நடைகள் இயங்குகின்றன. 42 சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியே தற்போதைய பயணிகளது அடர்விற்குப் போதுமானதாக உள்ளது. எனவே, பேருந்து வசதிகளை மேலும் அதிகப்படுத்திட வேண்டிய தேவை எழவில்லை.

**95—**

**திருப்பூர்-சென்னை விரைவுப் பேருந்து**

**வினா எண் 26223—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்—சென்னை அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டது ஏன்?

(ஆ) மீண்டும் எப்போது இயக்கப்படும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர்—சென்னை வழித்தடத்தில் இயக்கப்பட்ட அரசு விரைவுப் பேருந்து எண் 470, குறைந்த வருவாய் ஈட்டியதன் காரணமாக 1-11-1998 முதல் நிறுத்தப்பட்டது.*

*(ஆ) வருவாய் இழப்புக் காரணமாக நிறுத்தப்பட்ட வழித்தடத்தை மீண்டும் இயக்கத் திட்டம் ஏதும் இல்லை.*

**96—**

**புதிய வழித்தடம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 26235—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சாத்தான்குளம், நாசரேத் வழியாக பெங்களூர் செல்ல அரசு விரைவுப் பேருந்து புதிய வழித்தடம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) திட்டம ஏதும் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**97—**

**தாழ்வான படிக்கட்டுகள்**

**வினா எண் 26251—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெண்கள், வயோதிகர்கள் மற்றும் ஊனமுற்றோர் வசதியாகப் பிரயாணம் செய்ய தாழ்வான படிக்கட்டுகள் உள்ள (Low Floor Bus) பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**98—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26258—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை ஒன்றியம், கள்ளியம்புதூர் பொதுமக்களிடமிருந்து பேருந்து வசதி செய்து தருமாறு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) பெருந்துறை ஒன்றியம், கள்ளியம்புதூர் பொதுமக்களிடமிருந்து கூடுதல் பேருந்து வசதி வேண்டி மனு பெறப்பட்டுள்ளது.*

*(ஆ) பெருந்துறையிலிருந்து கள்ளியம்புதூருக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை கோட்டம்-2, ஈரோடு மூலமாக நகரப் பேருந்துகள், தடம் எண் பி1, பி12, 7பி ஆகியவை மூலம் 10 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் 40%, 30%, 39% எனக் குறைவாக உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.*

**99—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26260—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதி, பொன்முடி ஊராட்சிப் பகுதியில் உள்ள மக்களிடமிருந்து பேருந்து வசதி கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலமாக நகரப் பேருந்து தடம் எண் பி.10 பொன்முடி வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்சமயம் அப்பேருந்தில் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருப்பதால் கூடுதல் நடைகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**100—**

**சென்னைக்கு இரயில்**

**வினா எண் 26261—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவனந்தபுரம்-கன்னியாகுமரி-நெல்லை வழியாக சென்னைக்கு ரெயில் விட தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது 8 ஜதை விரைவு/மிக விரைவு இரயில் வண்டிகள், சென்னை எழும்பூர்-திருச்சி-மதுரை-திருநெல்வேலி வழியாக தென்னக அகல இரயில் பாதையில் செல்வதால், திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி, நெல்லை வழியாக சென்னைக்கு ஒரு வழிப்பாதையில் கூடுதல் இரயில்கள் விட இயலாது.



**101—**

**நவீனமயமாக்கப்பட்ட புதிய பேருந்துகள்**

**வினா எண் 26264—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திருவனந்தபுரம் வரை இயக்கப்படுகின்ற விரைவுப் பேருந்துகளில் பழையவைகளை மாற்றி நவீனமயமாக்கப்பட்ட புதிய பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் சென்னை-திருவனந்தபுரம் வழித்தடத்தில் 18 சொகுசுப் பேருந்துகள் 18 ஒருவழிப் பாதைப் பயணமாக இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்துகள் அனைத்திற்கும் ஓராண்டு காலம்தான் பூர்த்தியாகின்றது. எனவே, அப்பேருந்துகளை மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

**102—**

**வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்**

**வினா எண் 26270—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாப்புரம் தொகுதி சுவாமியார் மடத்திலுள்ள பகுதி நேர போக்குவரத்து அலுவலகத்திற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலரை நியமித்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[2000 மே 18

**103—**

**பேருந்து வசதியை அதிகரித்தல்**

**வினா எண் 26274—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆண்டிமடம் தொகுதி, சிறுகளத்தூர் கிராமத்திற்குப் பேருந்து வசதியை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*ஜெயங்கொண்டம்—செந்துரை வழித்தடத்தில் பொன்பரப்பியிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் சிறுகளத்தூர் உள்ளது. இப்பிரதான சாலையில் இயக்கப்படும் 77 நடைகளும் இம்மக்களுக்குப் பேருந்து வசதி அளிக்கின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திருச்சி, இக்கிராமத்திற்குத் தனியாக 4 நடைகள் இயக்குகின்றது. சிறுகளத்தூர் வழியாக அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து 2 நடைகளும், புறநகர்ப் பேருந்து 2 நடைகளும் தனியார் பேருந்துகள் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதியே போதுமானதாகும். எனவே, பேருந்து வசதியை அதிகப்படுத்த தேவை எழவில்லை.*

**104—**

**புதிய வழித்தடத்தில் பேருந்து**

**வினா எண் 26461—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடியிலிருந்து வடஆற்காடு, வேலூருக்கு, புதிய வழித்தடத்தில் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து சேலத்திற்கு 21 பேருந்துகளும், சேலத்திலிருந்து வட ஆற்காடு வேலூருக்கு 35 பேருந்துகளும், சுமார் 20-30 நிமிட இடைவெளியில் 24 மணி நேரமும் இயக்கப்படுவதால் எடப்பாடியிலிருந்து வட ஆற்காடு வேலூருக்கு, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய தேவையில்லை.*



**105—**

**பேருந்து வசதி**

**வினா எண் 26474—திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், சின்னக்காம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல மூலனூரில் இருந்து பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், சின்னக்காம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு, பேருந்து தடம் எண் எம்1, மூலனூரில் காலை 7-55-க்கும், சாலக்கடையில் காலை 8-45-க்கும், தடம் எண் எம்2 நகரப் பேருந்து, மூலனூரில் மாலை 4-35-க்கும் புறப்படும் தனி நடைகள் சின்னக்காம்பட்டி வழியே பள்ளி நேரத்திற்கு, காலை மற்றும் மாலை நேரங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.*

**106—**

**மீண்டும் பேருந்து வசதி**

**வினா எண் 27753—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரிலிருந்து, தாம்பரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை பிராட்வே ஆகிய இடங்களுக்குப் பேருந்து வசதியை மீண்டும் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மறைமலை நகரிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 99எம், குறைந்த பயணிகள் அடர்வு காரணமாக 21-8-1995 முதல் நிறுத்தப்பட்டது. மறைமலை நகரிலிருந்து தற்பொழுது தாம்பரத்திற்கு நகரப் பேருந்து வசதி உள்ளது. சென்னை-செங்கல்பட்டு-விழுப்புரம்-உளுந்தூர்பேட்டை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் மறைமலை நகர் அமைந்துள்ளதால், எந்த நேரமும் தேவைக்கேற்ப பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, மறைமலை நகரிலிருந்து செங்கல்பட்டு, சென்னை பிராட்வே ஆகிய இடங்களுக்கு நேரடிப் பேருந்து வசதி செய்யத் தேவை எழவில்லை.*

**107—**

**கசிவு நீர்க் குட்டைகள்**

**வினா எண் 27793—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி வனப்பகுதியில் மழைக் காலங்களில் ஓடைகளில் வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி காடுகள் வளம் பெற கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியைச் சார்ந்த வனப்பகுதியில் மழைக் காலங்களில் ஓடைகளில் பெருக்கெடுத்து வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி, காடுகள் வளம்பெறும் பொருட்டு தேவையான இடங்களில் ஏற்கெனவே காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ் தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*





**108—**

**கூடுதல் இரயில்கள்**

**வினா எண் 28374—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை-கோயம்புத்தூருக்கு மேலும் கூடுதல் ரயில்களை விட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தற்போது கோவை விரைவு இரயில் வண்டி (2675/2676), சேரன் விரைவு இரயில் வண்டி (2673/2674), நீலகிரி விரைவு இரயில் வண்டி (6605/6606), சதாப்தி விரைவு இரயில் வண்டி (2023/2024) என நான்கு ஜதை இரயில் வண்டிகளும், இவை தவிர கேரள மாநிலம் செல்லும் 6 ஜதை இரயில் வண்டிகளும், சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் சென்று வரும் பயணிகளின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. முடியுமிடம் மற்றும் பாதைகளின் தட்டுப்பாட்டின் காரணமாக* (Terminal and path constraints) *சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் இடையில் கூடுதல் இரயில்கள் விட இயலாது என தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.*

**109—**

**நவீன ஒலிப்பான்கள்**

**வினா எண் 29648—திரு. ஏ.வி.ர. நாசர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சாலையில் செல்வோர்களை நடுங்க வைக்கும் நவீன ஒலிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு அரசு தடை விதிக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சாலையில் செல்வோர்களை நடுங்க வைக்கும் நவீன ஒலிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய மோட்டார் வாகன*

விதி 119(2)-இல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதி நன்கு அமல்படுத்தப்படுகிறது.

**110—**

**பேருந்து வசதி**

**வினா எண் 29937—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கொத்தந்தவாடி கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அவ்வூருக்குப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொத்தந்தவாடி கிராமம், ஆரணி-சேத்துப்பட்டு (வழி) கரிப்பூர், நாச்சாவரம், நம்பேடு தடத்தில் நாச்சாவரம் கட்டண நிலையில் இருந்து 0.6 கி.மீ. தொலைவில் உள்ளடங்கி இருக்கிறது. ஆரணி-சேத்துப்பட்டு தடத்தில் தினசரி 6 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணிகள் அடர்வு 52% மட்டுமே உள்ளது. நிலவி வரும் பயணிகள் அடர்வுக்கேற்ப தற்போது இயக்கப்பட்டு வரும் நடைகளே போதுமானதாகும். எனவே, கொத்தந்தவாடி கிராமத்திற்குத் தனியே பேருந்து இயக்கவேண்டிய தேவை எழவில்லை.

**111—**

**கோயம்புத்தூருக்கு விரைவுப் பேருந்து**

**வினா எண் 30031—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியிலிருந்து தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து ஒன்று கோயம்புத்தூருக்கு இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**112—**

**நவீன முறையில் விளம்பரம்**

**வினா எண் 30032—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துக் கழகங்கள் புதிய வழித்தடத்தில் பேருந்து விடும்போது அதை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி வசூலை அதிகரிக்கச் செய்ய முன்வருமா?

(ஆ) அவ்விதம் செய்யப்படாமையால், பல தடங்களில் வசூல் இல்லாமல் பேருந்துகள் ரத்துச் செய்யப்படுவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் புதிய வழித்தடங்கள் இயக்கும்போதோ அல்லது வழி மாற்றம் செய்யும்போதோ தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் மற்றும் நோட்டீசுகள் மூலம் பயணிகள்/பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. மற்றும் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு முன்கூட்டி தகவல் தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்கள் மூலமாக விளம்பரப்படுத்தியே இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வழித்தடங்கள், அதில் பயணம் செய்யும் பயணிகள்/வருவாய் போன்றவற்றை அவ்வப்போது ஆய்வு செய்து உரிய மாற்றம் செய்யப்படுகிறது.

[2000 மே 18

**113—**

**கண்காணிக்கும் முறை**

**வினா எண் 30138—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரத்தில் வீடியோ கேமராக்கள் மூலம் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முறை எந்தெந்த இடங்களில் செயல்படுத்தப்படுகிறது?

(ஆ) இதற்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரத்தில் வீடியோ கேமராக்கள் மூலம் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முறை அண்ணா நகர் ரவுண்டானாவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டம் தன்னார்வ நிறுவனத்தின் மூலமாக செயல் படுத்தப்படுகிறது. எனவே, அரசு நிதியிலிருந்து செலவிடப்படவில்லை.

**114—**

**விரைவுப் பேருந்து**

**வினா எண் 30178—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரிலிருந்து திண்டிவனம் வழியாகப் பாண்டிச்சேரிக்கு ஒரு அரசு விரைவுப் பேருந்து விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.



2000 மே 18]

**115—**

**புதிய பேருந்துகள்**

**வினா எண் 30198—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, ஆயங்குடியிலிருந்து சென்னை மற்றும் கடலூர் வரை செல்லும் பேருந்துகளின் புறப்படும் இடத்தை மாற்றிய காரணத்தினால் ஆயங்குடி பயணிகள் அவதிக்குள்ளாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆயங்குடியிலிருந்து புதிதாகப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(இ) எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆயங்குடியிலிருந்து புறப்படும் பேருந்துகளை முட்டத்திலிருந்து புறப்படும்படி மாற்றி அமைத்ததால், ஆயங்குடிப் பயணிகளுக்குப் பாதிப்பு ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இல்லை.

**116—**

**தாம்பரம்—பாண்டிச்சேரி பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30210—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் பாண்டிச்சேரி வரை அரசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலிருந்து தாம்பரம் வழியாக பாண்டிச்சேரிக்கும் சென்னையிலிருந்து தாம்பரம், பாண்டிச்சேரி வழியாகப் பிற

[2000 மே 18

இடங்களுக்கும் போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்படுவதால் தாம்பரத்திலிருந்து பிரத்யேகமாகப் பாண்டிச்சேரிக்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**117—**

**சாத்தான்குளம்—கோயம்புத்தூர் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30399—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடி அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு வழித்தடம் எண் 62ஏ-இல் இரண்டு பேருந்துகள் இரண்டு ஒரு வழிப்பாதைப் பயணமாக பரீட்சார்த்தமாக 20-11-1999 முதல் இயக்கப்படுகிறது.

**118—**

**சிறப்புப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 30480—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி மாலை நேரக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் சிரமத்தைப் போக்க, பரமக்குடி—மேலாயக்குடி-எமனேஸ்வரம்-நேரு நகர் போன்ற பகுதிகளுக்கு மாணவர்களுக்கான சிறப்புப் பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் போதுமான பேருந்து வசதிகள் உள்ளதால் பரமக்குடியிலிருந்து மேலாயக்குடி-எமனேஸ்வரம்-நேரு நகர் போன்ற பகுதிகளுக்கு மாலை நேரக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கான சிறப்புப் பேருந்து விடும் சாத்தியக்கூறு இல்லை.

**119—**

**உணவகம்**

**வினா எண் 30535—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகள் வசதியை முன்னிட்டு, வழித்தடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் உணவகம் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லையெனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொலைதூரம் பயணம் செய்யும் பயணிகள் வசதியை முன்னிட்டு, கீழ்க்கண்ட இடங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தனியார் மூலம் உணவகங்களை நடத்தி வருகின்றன:

(1) பாடலூர் (திருச்சி)

(2) திண்டிவனம்

(3) மதுரை

(4) தொழுதூர்

(5) கொட்டாம்பட்டி

(6) மாமண்டூர்

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2000 மே 18

120—

## சொகுசுப் பேருந்து

**வினா எண் 30546—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நாகர்கோவில்-சென்னை போன்ற நெடுந்தூரப் பேருந்துகளை 32 இருக்கைகள் கொண்ட தனியார் பேருந்து போன்று சொகுசுப் பேருந்தாக மாற்றி இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

121—

## விரைவுப் பேருந்து விடியோ கோச்

**வினா எண் 30547—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அரசு விரைவுப் பேருந்து வீடியோ கோச்சில் போலீஸ் வாரண்டு பெற்றுப் பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் பேருந்து வீடியோ கோச்சில் சட்டமன்ற உறுப்பினர் பாதுகாப்புக்கு வரும் பாதுகாவலரின் வாரண்டைப் பெற்றுக் கொண்டு, பயண அனுமதிச் சீட்டு வழங்கி பயணம் செய்ய அனுமதிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

122—

## சுற்றுலா மையப் பேருந்து

**வினா எண் 30798—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல், சுற்றுலா மையத்திற்கு சென்னையிலிருந்து அரசு விரைவுப் பேருந்து ஒன்று இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

123—

## பதிவு உரிமம்

**வினா எண் 30811—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் மோட்டார் வண்டிகள் பதிவு உரிமம் வழங்குவதைத் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரந்துத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வண்டிகள் பதிவு மற்றும் உரிமம் வழங்குவதைக் கணினிமயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஆ) 31-8-2000-க்குள் கணினி மயமாக்கும் பணி முடிவடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

124—

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 30812—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சேலம் மாவட்டம், அரியானூரில் விநாயகா டெண்டல் கல்லூரி அருகில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு உத்தரவிட முன்வருமா?

(ஆ) அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள், பஸ் நிறுத்தம் இல்லாததால் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1ன் மூலம் இயக்கப்படுகின்ற சேலம்—கோவை மார்க்கத்தில் செல்லும் தொலைதூரப் பேருந்துகளைத் தவிர, அரியானூர் பல் மருத்துவக் கல்லூரி வழியாகச் செல்லும் அனைத்து புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளும் கல்லூரி அருகில் நின்று மாணவ, மாணவிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. போதுமான அளவில் அக்கல்லூரி வழியாக, நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்படுவதாலும், அவையனைத்தும் கல்லூரி வாசலில் நின்று மாணவ, மாணவிகளை ஏற்றி இறக்கிச் செல்வதாலும் மாணவர்கள் சிரமமின்றி கல்லூரி சென்று வர இயலுகின்றது. போதுமான பேருந்து வசதி தற்போது உள்ளது.

**125—**

**கூடுதல் பேருந்துகள்**

**வினா எண் 30814—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் முதல் தாம்பரம் வரை பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலக நேரங்களில் கூடுதல் பேருந்துகள் விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முடிச்சூர் முதல் தாம்பரம் வரை பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலக நேரங்களில் 6-7-1999 முதல் ஒரு கூடுதல் பேருந்தும், 6-2-1999 மற்றும் 24-5-1999 முதல் தாம்பரம்—முடிச்சூர் வழித்தடத்தில் 19 வெட்டுப் பயண நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், வழித்தட எண் 55 தாம்பரத்திலிருந்து மண்ணிவாக்கம், வண்டலூர் கேட்டுக்கு 15-10-1999 முதல் நாளொன்றுக்கு 119 பயண நடைகள் இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் 19 வெட்டுப் பயண நடைகளில் பயணிகள் அடர்வு 50% க்கும் குறைவாக உள்ள காரணத்தால், கூடுதல் பேருந்து அல்லது கூடுதல் நடைகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**126—**

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா எண் 30815—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் திருப்பெரும்புதூர் வரை மணிமங்கலம் வழியாகக் கூடுதல் பேருந்துகள் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம்—திருப்பெரும்புதூர், வழி—மணிமங்கலம் தடத்தின் நீளம் 27.0 கி.மீ. ஆகும். கோரிக்கைத் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம், 3 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 36 நடைகளையும், புறநகர்ப் பேருந்துகள் மூலம் 4 நடைகளையும் இயக்கி வருகிறது. இதில் பயணிகள் அடர்வு 73% மட்டுமே உள்ளது. இத்தடத்தில் தனியார் பேருந்துகள் 26 நடைகள் இயக்குகின்றன. தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து விடுவதற்கான தேவை எழவில்லை.

[2000 மே 18

127—

**மகளிர் மற்றும் மாணவர்களுக்கான பேருந்து**

**வினா எண் 30817—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கும், விருத்தாசலத்திலிருந்து நெய்வேலி நகரியத்திற்கும் பள்ளி, கல்லூரி நேரங்களில் மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு 5 நகரப் பேருந்துகள், நாளொன்றுக்கு 76 நடைகளும், விருத்தாசலம்—நெய்வேலி வழித்தடத்தில் 5 நகரப் பேருந்துகள் 44 நடைகளும், விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பேருந்து இயக்கத்தினால் பயன்பெறுகின்றனர். இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. எனவே, மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்காகத் தனியே பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

128—

**புதிய இரயில் பாதை**

**வினா எண் 30979—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பெங்களூர் செல்ல, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் வழியாக புதிய இரயில் பாதை அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?



2000 மே 18]

(இ) அதை விரைவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலிருந்து பெங்களூர் செல்ல, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் வழியாக புதிய இரயில் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் மத்திய அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

129—

**சென்னை நகரில் ஆட்டோக்கள்**

**வினா எண் 31525—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்டோக்கள் எத்தனை?

(ஆ) அனுமதி பெறாமல் ஆட்டோக்கள் ஓடுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 36,756.

(ஆ) ஆம். அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

130—

**ஆம்னி பேருந்துகள்**

**வினா எண் 31747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

தமிழ்நாட்டில் ஆம்னி பேருந்துகள் ரெகுலர் சர்வீஸ் பேருந்துகளாக இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் ஆம்னி பேருந்துகள் ரெகுலர் சர்வீஸ் பேருந்துகளாக இயக்க அனுமதிக்கப்படவில்லை.

**131—**

### கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 31756—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் கோட்டத்திற்குக் கூடுதலாகப் புதிய பேருந்துகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆமீ எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் (கோட்டம்-3) காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் 27 புதிய பேருந்துகள் கட்டி முடிக்கப்பட்டு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.

**132—**

### கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 31759—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலிருந்து பழநி வரை அரசுப் பேருந்து, தோகமலைபாளையம், அரவக்குறிச்சி வழியாக இயக்கப்படுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**133—**

### வாகனங்களில் சோதனை

**வினா எண் 31795—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாகனங்களை சோதனையிடும் அதிகாரிகள், ஓட்டுநர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதனையிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், மது அருந்திய ஓட்டுநர் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வாகனங்களை சோதனையிடும் போக்குவரத்து காவல் அதிகாரிகள், ஓட்டுநர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதனை செய்கிறார்கள்.

(ஆ) அவ்வாறு மது அருந்திய ஓட்டுநர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**134—**

### திருநெல்வேலியிலிருந்து கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 32237—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2), திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரம், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களுக்கு தினசரி இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) மூலம் திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரத்திற்கு 2 பேருந்துகளும், இராமேஸ்வரத்திற்கு 1 பேருந்தும், ஆக 3 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகளில் பயணிகள் அடர்வு குறைவின் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டதால், இத்தடத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகளை தடச்சீரமைப்பு செய்து, தற்போது தேவைக்கு ஏற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு பயணிகள் விகிதாச்சாரம் மிக அதிகமுள்ள வழித்தடங்களில் மற்ற பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 575-ல் பாபநாசம்-திருநெல்வேலி-இராமநாதபுரம் வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து 15-7-1999 முதல் நிறுத்தப்பட்டது. மேலும், திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து, அங்கிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம் செல்வதற்கு 200-க்கும் மேற்பட்ட சுற்றுகள் உள்ளதால், நிறுத்தப்பட்ட வருவாய் குறைந்த பேருந்தினை மீண்டும் இயக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

**135—**

## கட்டடங்களுக்கு அனுமதி

**வினா எண் 32429—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கழிவு நீர்க் கால்வாய்களோ, மழை நீர்க் கால்வாய்களோ இல்லாத கிராமப் பகுதிகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு அனுமதி அளிப்பதும், அதனால் சுற்றுப்புறச் சூழல் கெடுவதும் அரசுக்குத் தெரியுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அனுமதி அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**136—**

## பேருந்து விடுதல்

**வினா எண் 32544—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து கோவை செல்லும் பேருந்து தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு, சங்ககிரி வழியாக 1985ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர், மூலமாக ஒரு புறநகர்ப் பேருந்து தினசரி இரு நடைகள் பரிட்சார்த்த ரீதியில் இயக்கப்பட்டன. சுமார் ஆறு மாத காலத்திற்கு இயக்கப்பட்ட இப்பேருந்தில் பயணிகளது அடர்வின்மை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வழித்தடத்தில் பகுதிவாரியாக போதுமான அளவில் பேருந்து வசதி உள்ளதால், அதனை மீண்டும் இயக்கத் தேவை எழவில்லை.

[2000 மே 18

137—

### கூடுதலாக வழித்தடங்கள்

**வினா எண் 32690—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மிக வேகமாக வளர்ந்து வரும் முடிச்சூரிலிருந்து தாம்பரத்திற்குக் கூடுதலாக வழித்தடங்கள் விடுவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும்?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது முடிச்சூர்-தாம்பரம் வழித்தடத்தில் தேவையான அளவு பேருந்து இயக்கப்படுவதாலும், மற்றும் அவ்வழித்தடங்களில் பயணம் செய்யும் பயணிகள் அடர்வு 50 சதவீதமே உள்ளதாலும் கூடுதலாக வழித்தடங்கள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.*

138—

### திருப்பதிக்குப் பேருந்து வசதி

**வினா எண் 32711—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், ஓமலூர் நகரிலிருந்து திருப்பதிக்கு நேரடி பஸ் போக்குவரத்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.



2000 மே 18]

139—

### சேலம் மாநகரில் ஆட்டோக்கள்

**வினா எண் 32712—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாநகரில் பதிவு செய்யப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) அவைகளுக்கு மீட்டர் பொருத்தி கட்டணம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) 5,554.*

*(ஆ) அனைத்து ஆட்டோ ரிக்ஷாக்களிலும் மீட்டர் பொருத்திய பின்னர் தான் அனுமதிச் சீட்டு தரப்படுகிறது. எனவே, இவ்வினா எழ இடமில்லை.*

140—

### தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள்

**வினா எண் 32939—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் 21-ல் எத்தனை போக்குவரத்துக் கழகங்கள் லாபத்தில் இயங்குகின்றன?*

*(ஆ) நஷ்டத்தில் இயங்கும் போக்குவரத்துக் கழகம் எத்தனை என்று கண்டறியப்பட்டுள்ளது?*

*(இ) லாபத்தில் இயங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேரவைமுன் விவர அறிக்கை

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள 21 அரசு போக்குவரத்துக் கழகங்களும் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வருகின்றன.

(இ) நட்டத்தை சரிக்கட்டி, லாபத்தில் இயங்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**(அ) அரசின் நிதியுதவி:**

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு அரசு 1996 முதல் இலகுவான கடன்களையும், பங்கு மூலதன தொகைகளையும் கீழ்க்கண்டவாறு அளித்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| (1) | போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு போக்குவரத்து கழகங்கள் திருப்பி செலுத்த வேண்டிய கடனைத் தீர்க்க | 1996-97 | 68.52 |
| (2) | போக்குவரத்து கழகங்களுக்கு வழிவகை முன்பணம் | 1996-97 | 20.00 |
| (3) | போக்குவரத்து கழகங்களுக்கு பங்கு மூலதனம் | 1996 | 71.50 |
| (4) | போக்குவரத்து கழகங்கள், அரசுக்கு செலுத்த வேண்டிய கடனை பங்கு மூலதனமாக மாற்றியது | 1996 | 110.90 |
| (5) | போக்குவரத்து கழகங்களுக்கு வழிவகை முன்பணம் | 1997-98 | 100.53 |
| (6) | போக்குவரத்து கழகங்கள், அரசுக்கு அளிக்க வேண்டிய கடன் தொகையை பங்கு மூலதனமாக மாற்றியது | 1997-98 | 150.00 |



2000 மே 18]

| | | | |
|---|---|---|---|
| (7) | அனைத்து போக்குவரத்துக் கழகங்கள் புதிய பேருந்துகள் வாங்கவும், போக்குவரத்து நிதி நிறுவனத்திற்கு தர வேண்டிய கடனை தீர்க்கவும் போனஸ் வழங்கவும், பங்கு மூலதனமாக அளிக்கப்பட்டது. | 1998-99 | 200.00 |
| (8) | 1999-2000 ஆண்டில் 1402 பேருந்துகள் வாங்கும் பொருட்டு வழங்கியது | 1999 | 111.00 |

**(ஆ) பயணக் கட்டணத் திருத்தம்:**

கடந்த 25-10-1999 முதல் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால், ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 612 கோடி கூடுதல் வருவாய் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) போக்குவரத்துக் கழகங்கள் இணைப்பு:**

21 அரசுப் போக்குவரத்துக் கழகங்களை 7 அரசுப் போக்குவரத்துக் கழகங்களாக இணைக்க வேண்டும் என அரசு முடிவெடுத்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இரு கோட்டங்களையும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் இரு கோட்டங்களையும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கோவை கோட்டத்துடன் உதகை கோட்டத்தினையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் இணைப்பிற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பின்னர், மற்றைய போக்குவரத்துக் கழகக் கோட்டங்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளினால், போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவு பெருமளவு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஈ) கொள்முதல் கொள்கை:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு உதிரிப்பாகங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பொருட்டு, 'உயர்மட்டக் கொள்முதல் குழு' அமைக்கப்பட்டு, அக்குழு வகுத்த கொள்முதல் கொள்கைப்படி தரமாகவும், நியாய விலையிலும் உதிரிப்பாகங்கள் மற்றும் மற்றைய பொருட்கள் வாங்கப்படுவதால், அதிகச் செலவினம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது.

**141—**

## புதிய ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 32940—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு "புதிய ஓய்வூதியத் திட்டம்" *மூலம் எப்பொழுது முதல் ஓய்வூதியம் வழங்க அரசு எண்ணியுள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*புதிய ஓய்வூதியத் திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. பிராவிடண்ட் நிதி ஆணையாளரிடம் விதிவிலக்கு பெற்றதும் அமல்படுத்தப்படும்.*

**142—**

## புதிய பேருந்து

**வினா எண் 33019—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூரிலிருந்து சாமியார்பேட்டை வழியாக பரங்கிப் பேட்டை வரை செல்லும் பழைய பேருந்தினை மாற்றி புதிய பேருந்து விட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**143—**

## பேருந்துகள் விவரம்

**வினா எண் 33039—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகள் தற்சமயம் 1999 அக்டோபர் மாதம் வரை எத்தனை உள்ளது?*



*(ஆ) இதில் பேருந்து இயக்குவதற்கு லாயக்கற்றவை எத்தனை என்று கண்டறியப்பட்டுள்ளது?*

*(இ) 1999 ஆம் ஆண்டில் எவ்வளவு பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) 1999 அக்டோபர் மாதம் வரை தமிழகத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை 17014.*

*(ஆ) அவைகளில் 106 பேருந்துகள் இயக்குவதற்கு லாயக்கற்றவை எனக் கண்டறியப்பட்டது.*

*(இ) 1999 ஆம் ஆண்டில் 1142 பேருந்துகள் புதியதாக வாங்கப்பட்டன.*

**144—**

## இரவு நேரத்தில் பேருந்து இயக்குதல்

**வினா எண் 33040—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து இரவு நேரத்தில் சென்னை வரை ஒரு அரசு பேருந்து இயக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதுபற்றிய தகவல் அரசு தெரிவிக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) எடப்பாடியிலிருந்து சென்னை செல்ல இரவு நேரத்தில் எடப்பாடி-சேலம், சேலம்-சென்னை தடத்தில் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளதால் தனியாக ஒரு பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

145—

### கோயம்புத்தூருக்குப் பேருந்து

**வினா எண் 33041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து கோயம்புத்தூருக்கு ஒரு அரசு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியிலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடியாகப் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

146—

### கிளை அலுவலகம்

**வினா எண் 33144—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி போச்சம்பள்ளி வட்டத் தலைநகரில் போக்குவரத்துக் கிளை அலுவலகம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் கிளை அலுவலகம் விரைவில் தொடங்கி போச்சம்பள்ளியில் இருந்து பேருந்துகள் இயங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போச்சம்பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி மூலமாக பணிமனை ஒன்றை தொடங்கிட தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. அரசு ஆணையின்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையே 40 கி.மீ. தூரம் இடைவெளி இருக்க வேண்டும். ஊத்தங்கரை, தருமபுரி, திருப்பத்தூர் ஆகிய அருகில் உள்ள ஊர்களில் பணிமனைகள் ஏற்கனவே உள்ளதால் போச்சம்பள்ளியில் பணிமனை அமைக்க வேண்டிய அவசியமில்லை.



147—

### கோவிலுக்கு மின் இணைப்பு

**வினா எண் 12890—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி செண்பகாதேவி அம்மன் கோவிலுக்கு மின் இணைப்பு தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி செண்பகாதேவி அம்மன் திருக்கோயிலுக்கு 2-2-1996ஆம் தேதிய குடமுழுக்கின்போது திருக்கோயில் முழுவதும் மின்வயரிங் வேலை செய்யப்பட்டு அதற்கென தனியாக ஒரு ஜெனரேட்டர் வாங்கப்பட்டு மேற்படி திருக்கோயில் பூசாரி பொறுப்பில் உள்ளது. கோயிலினுள் இரும்பு அழி போட்ட ஒரு அறையில் வைக்கப்பட்டு, தினமும் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட கோயிலுக்கு நிரந்தர மின் இணைப்பு பெறும்பொருட்டு குற்றாலம் மின்சார வாரிய இளநிலை பொறியாளருக்கு விண்ணப்பித்ததில், 45 மின் கம்பங்கள் புதியதாக நட்டு மின் கம்பிகளைக் கொண்டு செல்லவேண்டும். மின் கம்பங்கள் கொண்டு செல்லும் வனப் பகுதியில் 4½ அடி அகலத்திற்கு மரக்கிளைகளை வெட்டுவதற்கு வனத் துறையினரிடமிருந்து தடையில்லாச் சான்று பெற வேண்டும் என மின் வாரியம் தெரிவித்ததின் அடிப்படையில் தடையின்மைச் சான்று கேட்டு

[2000 மே 18

வனத் துறைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வனத் துறையினரின் பதில் பெற்ற பின்னர்தான் இதில் இறுதி முடிவு எடுக்க முடியும்.

**148—**

**கோவிலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 16030—திரு. பி.என். வல்லரசு:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம், கோவில்பட்டி மருதப்ப கோவிலை புதுப்பித்து திருப்பணி மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**149—**

**தொல்லியல் ஆய்வு**

**வினா எண் 17010—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1998-99ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் "தொல்லியல் ஆய்வு" நடைபெற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*(ஆ) அதற்காக அரசு ஒதுக்கவுள்ள தொகை எவ்வளவு?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க் குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1998-99ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு கல்வெட்டுகள்*



2000 மே 18]

*படியெடுப்பதை தீவிரப்படுத்துவதற்கு ரூபாய் ஒரு இலட்சமும் அரிய சிற்பங்கள் மற்றும் ஓலைச் சுவடிகள் ஆய்வுக்காக ரூபாய் நான்காயிரமும் அரசால் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.*

**150—**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணியாளர்கள்**

**வினா எண் 17334—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர சலுகைகள் வழங்கக் கோரி அரசிற்கு முறையீடுகள் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெறப்பட்டு, ஏற்கப்படவில்லை.*

**151—**

**மணியார்டரில் தமிழ்**

**வினா எண் 21488—திரு. கே. சுப்பராயன்:** *தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மணியார்டரிலிருந்து தமிழ் நீக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*மணியார்டர் படிவத்திலிருந்து தமிழ் நீக்கப்படவில்லை.*

[2000 மே 18

**152—**

### தொல்பொருள் ஆய்வு

**வினா எண் 22085—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீப ஆண்டில் தொல்பொருள் ஆய்வின் மூலம் கிடைத்த சரித்திர மதிப்புமிக்க சான்றுகள் என்ன?

(ஆ) அவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சரித்திரச் செய்திகள் எவை?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

**சரித்திரச் சான்றுகள்:**

தொல்பொருள் ஆய்வுத் துறை அண்மையில். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அழகன்குளம் என்ற இடத்தில் அகழாய்வு மேற்கொண்டது. அகழாய்வில் ரோமானிய நாட்டைச் சேர்ந்த மதுக் குடுவையின் பகுதிகளும் ரௌலட்டம் மட்பாண்ட தட்டுகளின் பகுதிகளும், ரோமானிய மன்னர்களான வேலண்டைன் (கி.மு.383-92), முதலாம் ஆண்கேடியல் (கி.பி.395-400), முதலாம் கியோடிஸியஸ் (கி.பி.383-95), குளோரிபா ரோமா (கி.பி. 402-408), கன்காடியா (கி.பி.399-405) ஆகியவர்களின் காசுகளும் கிடைத்துள்ளன. கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஒன்றும் அழகன்குளம் அகழாய்வில் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இப்பானை ஓட்டின் நிழற்படத்தை நியூயார்க் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் முனைவர் லையோனல் கேசன் (Lionel Cason) என்பவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர் இக்கப்பலின் உருவத்தை ரோமானிய பல வண்ணப்பட்டடையில் இருக்கும் கப்பல் உருவங்களோடு ஒப்பிட்டு இக்கப்பல் ரோமானிய கப்பலுடன் ஒத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



2000 மே 18]

2. மேலும், கி.மு. 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழகிய பெண் உருவங்களுடன் கூடிய பானை ஓடுகளும் குழந்தையை இடுப்பில் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள ஒரு பெண்ணின் சுடுமண் பொம்மை ஒன்றும் அழகன்குளம் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சில சங்குகளின் உடைந்த பகுதிகள் கண்டு எடுக்கப்பட்டன. அவற்றில் 'தீக்' என்று அரபு மொழியில் அரபு எழுத்தால் எழுதப் பெற்றுள்ளது. 'தீக்' என்ற அரபுச் சொல்லுக்கு சேவல் என்று பெயர். இவற்றுடன் பல நடுகற்களும், கல்வெட்டுகளும், சிற்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை திண்டுக்கல் மாவட்டம், விக்கிரமங்கலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைத் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். விருதுநகர் மாவட்டம், கல்லூரணியில் முற்காலப் பாண்டியர் குடியிருப்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. குடுமியான்மலையில் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத வகையில் ஒரு ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் அயனாவரத்தில் ஒரு பல்லவர் கால முருகன் சிலையும், திருவல்லிக்கேணி எல்லையம்மன் கோயிலில் ஒரு பௌத்தச் சிற்பமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூம்புகார் அருகே சின்னமேட்டில் ஒரு புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருவல்லிக்கேணி பௌத்த சிற்பமும், பூம்புகார் புத்தர் சிலையும் கி.பி. 1 அல்லது 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

3. வாணியம்பாடி வட்டம், மாதனூரில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கல்வெட்டுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதில் ஒன்று வரலாற்றில் நிலவிய தீர்க்க முடியாத நிலையிலுள்ள ஒரு பிரச்சினையைத் தீர்த்திருக்கிறது. முதலாம் இராசாதிராஜன் என்ற சோழ மன்னன் விஜய ராஜேந்திரன் என்ற வெற்றிப் பெயர் பெற்றிருந்தான். அதே பெயரை, அண்ணனுடன் போருக்குச் சென்ற அவன் தம்பி இரண்டாம் ராஜேந்திரனும் பெற்றிருந்தான் என்பதை மாதனூர் நடுகற் கல்வெட்டு உறுதிபடுத்தியிருக்கிறது. இத்தொல்பொருட்கள் யாவும் வரலாற்றுக்கு துணை புரியும் மதிப்பும், சிறப்பும் மிக்க அரிய சான்றுகளாக அமைகின்றன.

[2000 மே 18

**சரித்திரச் செய்திகள்:**

இத்தொல்பொருள் ஆய்வில் கிடைத்த தொல்பொருள்களின் மூலம் தமிழகத்திற்கும் ரோம் நாட்டிற்கும் இருந்த வணிகத் தொடர்புகள் வெளிப்படுவதால் சங்க இலக்கியங்களில் கூறப்படும் இச்செய்திகள் உறுதியாகின்றன. மேலும், அரேபியாவுடன் பண்பாட்டு தொடர்போ, வணிகத் தொடர்போ கொண்டிருந்த மக்கள் அழகன்குளத்தில் வாழ்ந்திருக்கலாம் என அறியப்படுகிறது.

**153—**

**பதவி உயர்வு**

**வினா எண் 22370—திரு. பி.ஜி. சுகவனம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் காவலர்களாக இந்து சமய அறநிலையத் துறையில் பணியமர்த்தப்பட்டு உள்ளவர்களில் தகுதியானவர்களை ஓட்டுநர்களாக பதவி உயர்வு செய்யக் கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தகுதியானவர்களை ஓட்டுநர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் காவலர்களாக பணியமர்த்தப்பட்டு உள்ளவர்களை, ஓட்டுநர்களாக பதவி உயர்வு வழங்க அரசு வகுத்துள்ள நடைமுறை பணி விதிகளில் வழிவகைகள் இல்லை.

**154—**

**சிற்பக் கலைக் கல்லூரி**

**வினா எண் 22541—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைக் கல்லூரி அழியும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**155—**

**பொது ஏலம்**

**வினா எண் 22730—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான நிலங்களை பொது ஏலம் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை சாகுபடி செய்யும்பொருட்டு பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் ஈட்டப்படுகின்றது. பொதுவாக நன்செய் நிலங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் புன்செய் நிலங்கள் ஆண்டிற்கு ஒரு முறையும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

[2000 மே 18

156—

### கோவிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 22748—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு தேவஸ்தான திருத்தேரினை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில் மரத்தேரினைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

157—

### ஊதிய உயர்வு

**வினா எண் 22749—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பரம்பரையாக கோயில்களில் பணிபுரியும் இசைக் கலைஞர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில்களில் இசைக் கருவிகளை வாசிக்கும் இசைக் கலைஞர்களுக்கு (நாகசுவரம், தவில், மேளம் வகைகள்) 1-7-1997 முதல் புதிய ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.



2000 மே 18]

158—

### திருக்கோவிலை செப்பனிடுதல்

**வினா எண் 22753—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட இண்டூர் அருள்மிகு சிவபெருமான் திருக்கோவில் மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், இண்டூர் அருள்மிகு சிவபெருமான் திருக்கோயில் மதிற்சுவர் மற்றும் இராஜகோபுரம் பூச்சு வேலைகள் திருப்பணிக்கு மதிப்பீடு தயார் செய்து வரப்பெற்றதும் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

159—

### கோவிலை புதுப்பித்தல்

**வினா எண் 22754—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அலேபுரம் திரு. நரசிம்மசுவாமி திருக்கோவிலின் கட்டடம் மற்றும் திருத்தேரினை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 மே 18

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அலேபுரம் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு 1989-90ஆம் ஆண்டில் கிராமப்புரத் திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் ரூ.10,000-ம் நிதியுதவி வழங்கப்பட்டு திருக்கோயிலின் மதில்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. தற்போது திருக்கோயிலுக்கு மண்டபத் திருப்பணி, கோபுரத் திருப்பணி வேலைகள் மற்றும் தேர்த் திருப்பணி மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. மதிப்பீடுகள் வரப்பெற்றதும் நிதி ஆதாரம் குறித்து பரிசீலித்து திருப்பணிக் குழு அமைத்து நிதி ஆதாரத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**160—**

**கட்டடங்களை புதுப்பித்தல்**

**வினா எண் 22756—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி, சோளப்பாடி ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருக்கோயில் கட்டடங்களை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2000 மே 18]

*(ஆ) திருப்பணி செய்யப்பட வேண்டியதற்கான மதிப்பீட்டினைப் பெற்று நிதி ஆதாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**161—**

**கட்டடங்களை செப்பனிடுதல்**

**வினா எண் 22762—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, அருள்மிகு கரூர் மாரியம்மன் திருக்கோயில் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், எச்சனஹல்லி கிராமம் அருள்மிகு கரூர் மாரியம்மன் திருக்கோயில் திருப்பணி செய்ய மதிப்பீடுகள் வரப்பெற்றதும் நிதி ஆதாரம் குறித்து பரிசீலித்து நிதி ஆதாரத்தின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**162—**

**ஊக்கத் தொகை**

**வினா எண் 22813—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நடத்தப்படுகின்ற கிராமிய நாடகங்கள் அழியாமலிருக்க ஊக்கத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*கிராமிய நாடகங்கள் அழியாமலிருக்க தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் வழியாக பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.*

**163—**

**இசைக் கல்லூரி**

**வினா எண் 23364—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலையில் இசைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளதா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*இசைக் கல்லூரி தொடங்கப்படவில்லை. ஆனால், அரசு இசைப் பள்ளி தோற்றுவிக்கப்பட்டுள்ளது.*

**164—**

**கோவில் சிறப்பு தரிசனம்**

**வினா எண் 23828—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1997-1998 மற்றும் 1998 ஜூன் மாதம் வரை பழனி கோவிலில் சிறப்பு தரிசனம் (Special Entrance) மூலம் எவ்வளவு தொகை அக்கோவிலுக்கு கிடைத்தது?*

*(ஆ) எத்தனை பக்தர்கள் இதன் மூலம் தரிசனம் செய்தார்கள்?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) 1997-98 மற்றும் 1998 ஜூன் மாதம் வரை பழனி கோவிலில் சிறப்பு தரிசனம் மூலம் ரூ.1,57,03,318/- (ரூபாய் ஒரு கோடியே, ஐம்பத்து ஏழு இலட்சத்து, மூவாயிரத்து, முன்னூற்று பதினெட்டு மட்டும்) கிடைத்துள்ளது.*

*(ஆ) சிறப்பு தரிசனம் மூலம் 11,53,973 பக்தர்கள் தரிசனம் செய்துள்ளார்கள்.*

**165—**

**ஊதிய விகிதங்கள்**

**வினா எண் 23853—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில் ஊழியர்கள் மொத்தம் எவ்வளவு பேர் பணியாற்றுகிறார்கள்?*

*(ஆ) அவர்களின் ஊதிய விகிதங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 36,253 திருக்கோயில்கள் கொண்டுவரப்பட்டு அவற்றில் 47,810 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.*

*(ஆ) திருக்கோயில் பணியாளர்கள் ஊதிய விகிதத்தை ஒழுங்குமுறைப்படுத்தியும், ஒரே நிலையில் உள்ள திருக்கோயில்களில் ஒரே நிலையில் உள்ள பணியாளர்களுக்குள் சம்பள விகிதத்தில் முரண்பாடுகள் கூடாது என அரசு கருதியதால், 10-6-1998-ல் திருக்கோயில் வருமான நிலைகளைக் கொண்டு 6 வகையாக பாகுபாடு செய்து*

[2000 மே 18

ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு 1-7-1997 முதல் உயர்த்தப்பட்ட புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டது. ரூ.10,000/- வரை வருமானம் வரும் திருக்கோயில் பணியாளர்களுக்கு திருக்கோயில் வருமான அடிப்படையில் தொகுப்பு ஊதியம் நிர்ணயம் செய்து அளிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் பெரும்பாலான பணிகள் பகுதி நேரப் பணிகளாகும். அதனால் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை. மேலும், பங்குத் தொகை உள்ள உள்துறை ஊழியர்களும் ஊதிய விகிதம் பெற இயலாது.

**166—**

## சோழர் கால கல்வெட்டு

**வினா எண் 24236—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி அருகே நத்தம் கிராமத்தில் ராஜேந்திர சோழர் காலக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் நத்தம் என்னும் ஊர் ஒன்றுள்ளது. இவ்வூர் புள்ளம்பாடியிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இங்கு ஆதிமூலப் பெருமாள்கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலிலிருந்து சோழ மன்னன் இரண்டாம் ராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்று திருச்சியிலுள்ள டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தினரால் கண்டறியப்பட்டதாக 28-2-1999 ஆம் தேதி தினமணி நாளிதழ் திருச்சி பதிப்பிலும் 1-3-1999 ஆம் தேதி சென்னைப் பதிப்பிலும் செய்தி வெளிவந்துள்ளது. இச்செய்தி வெளிவந்த பின்னர், அரியலூர் அரசுக் கல்லூரி வரலாற்றுத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு. இல. தியாகராசன் அவர்கள் அக்கோயிலுள்ள முதலாம் இராஜராஜ சோழன் கல்வெட்டு, முதலாம் குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு ஆகிய கல்வெட்டுக்களைப் படியெடுத்துள்ளார். முதலாம் இராஜராஜன் கி.பி.985 முதல் 1012 வரையிலும், முதலாம் குலோத்துங்கன் கி.பி. 1070 முதல் 1120 வரையிலும், மூன்றாம் குலோத்துங்கன் கி.பி. 1178 முதல் 1218 வரையிலும் சோழ நாட்டை ஆட்சி புரிந்துள்ளனர்.



2. ஆதிமூலப் பெருமாள் கோயிலைத் தற்பொழுது நத்தத்திலுள்ள மக்களும், டால்மியா சிமெண்ட் நிறுவனமும், அறநிலையத் துறையும் சேர்ந்து புதுப்பிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். இக்கோயிலைப் புதுப்பிக்கும் பணி தொடங்குவதற்கு முன்பு சிதைவுற்ற பகுதியிலுள்ள கற்களைப் பிரித்தெடுக்கும் பணி நடைபெற்றது. அப்பணி நடக்கும்பொழுது முதலாம் இராஜராஜனின் 8 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்றும் (கி.பி.993) முதலாம் குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் (கி.பி.1072) கண்டறியப்பட்டன. இக்கல்வெட்டுகளை நுணுகிப் பார்க்கும்பொழுது முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து முதலாம் குலோத்துங்க சோழன் காலம் வரை ஆதிமூலப் பெருமாள் கோயிலில் இருந்து வந்துள்ளது. பின்னர் இக்கோயிலின் விமானம் சிதைவுற்றதாலும், கோயிலில் போதிய இடவசதி இல்லாததாலும் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 38 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1216-ல்) புதுப்பித்துக் கட்டப்பட்டதென்ற செய்தியை இக்கோயிலுள்ள மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு கூறுகிறது. புதுப்பித்துக் கட்டும்பொழுது பழைய கோயிலைச் சுற்றிலுமுள்ள கருவறை 5.9 அடி தூரம் சுற்றிலும் அகலம் விட்டு புதிய கோயிலைக் கட்டியுள்ளனர். பழைய கோயிலின் அடித்தளச் சுவற்றிலுள்ள முதலாம் இராஜராஜன் கல்வெட்டையும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டையும் கோயிலைப் புதுப்பித்துக் கட்டும்பொழுது சிதைக்காமல் அப்படியே விட்டு வைத்துள்ளனர். பழைய கோயிலின் அடித்தள சுவரில் முதலாம் இராஜராஜனின் கல்வெட்டும், அதற்குக் கீழே முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டும் எழுதப் பெற்றுள்ளன.

3. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1216-இல்) இக்கோயிலைத் திருத்திக் கட்டும்பொழுது முதலாம் இராஜராஜன் கல்வெட்டையும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டையும் படித்து, படியெடுத்து மீண்டும் புதுப்பித்துக் கட்டிய கோயிலில் எழுதுமாறு சமுதாயக் கூட்டம் என்ற குழுவினை ஏற்படுத்தியுள்ளனர். அக்குழுவினர் இக்கல்வெட்டுகளைப்

படித்தபொழுது அவர்களுக்கு சில இடர்பாடுகள் நேர்ந்தன. அதையும் அவர்கள் மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் (கி.பி.1216) தெரிவித்துள்ளனர். பழைய கல்வெட்டில் மெய்க்கீர்த்தி உட்பட சில பகுதிகள் அவர்களுக்குத் தெரியவில்லை என்றும், சில இடங்களில் 'கல்பொளிவு' என்றும் தங்களால் தெரிந்தவரை அப்படியே படியெடுத்து எழுதியுள்ளோம் என்றும் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்து கல்வெட்டில் (கி.பி.1216) குறித்துள்ளனர். மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் (கி.பி. 1216) நியமிக்கப்பட்ட சமுதாயக் கூட்டத்தினர், முதலாம் இராஜராஜன் கல்வெட்டையும், முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டையும் ஒன்றென நினைத்து அவர்கள் படித்துவிட்டனர். மேலே உள்ள கல்வெட்டிலுள்ள மன்னனின் பெயரையும் கீழே உள்ள குலோத்துங்கனின் ஆட்சியாண்டையும் ஒன்றாகச் சேர்த்து படித்துள்ளனர். மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டையும் முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர்கள் படிக்கத் தெரியாமல் விட்டுவிட்ட பகுதி முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திப் பகுதியெனத் தெரிய வருகிறது. மெய்க்கீர்த்தி என்றால் ஒரு மன்னனின் உண்மையான புகழையும், அவன் பெற்ற வெற்றிகளையும் அவன் கல்வெட்டில் குறிப்பிடப்படும் முதல் பகுதியாகும். சுருங்கக்கூறின் இக்கோயில் முதலாம் இராஜராஜனின் 8 ஆம் ஆட்சியாண்டிலிருந்து (கி.பி.993 ஆம்) வருகிறது.

4. இக்கோயிலுக்கு முதலாம் குலோத்துங்கச் சோழன் இரண்டாம் ஆட்சியாண்டில் கி.பி.1072-ல் ஒன்றே காலே அரை மாநிலம் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்திகளை மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1216) இக்கோயிலை திருத்திக் கட்டியபொழுது மூன்றாம் குலோத்துங்கச் சோழன் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளனர். மேற்கூறியவற்றிலிருந்து இக்கோயிலில் மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன என்பதும், அவைகள் முதலாம் இராஜராஜன், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தது என்றும் அறிய முடிகிறது. முதலாம் குலோத்துங்கனின் பட்டப் பெயர் ஸ்ரீ இராஜேந்திர சோழத் தேவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், இக்கல்வெட்டு இரண்டாம் இராஜேந்திரச் சோழரின் கல்வெட்டு என்று முதலில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. மற்றொரு இன்றியமையாத செய்தியாவது முதலாம் குலோத்துங்கச் சோழனது இரண்டாம் ஆண்டில் (1072) அளிக்கப்பட்ட நிலக்கொடையின் மூலக் கல்வெட்டு, நகல் எடுக்கப்பட்டு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1216) எழுதப் பெற்றுள்ளது. மூலக் கல்வெட்டும், நகல் கல்வெட்டும் இக்கோயிலில் காணப்படுவது சிறப்புடையதாகும்.





**167—**

**உதவி ஆணையர் அலுவலகம்**

**வினா எண் 24295—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து மாவட்டங்களிலும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

படிப்படியாக மேற்கொள்ளும்.

**168—**

**கட்டட வசதி**

**வினா எண் 24296—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையத் துறை, ஈரோடு உதவி ஆணையர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு உதவி ஆணையர் அலுவலகம் வீட்டு வசதி வாரியக் கட்டடத்தில் இயங்கி வருவதால் சொந்தக் கட்டடம்

[2000 மே 18

கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

ஈட்டுத் தொகை

**வினா எண் 24299—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தற்போது திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் 'தஸ்திக்' மற்றும் மோகினித் தொகை போன்ற ஈட்டுத் தொகைகள் நிர்ணயம் செய்யப்பட்டு மிக நீண்டகாலம் ஆகிறது என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், தற்கால நிலவரப்படி அவற்றை உயர்த்தித்தர கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் 'தஸ்திக்' மோகினி மற்றும் பேரிஜ் கழிவு உதவித் தொகைகளை உயர்த்தி வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

170—

யோகாசனப் பயிற்சி மையங்கள்

**வினா எண் 24311—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வருவாய் அதிகமுள்ள பெரிய திருக்கோயில்களில் "யோகாசனப் பயிற்சி மையங்கள்" ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்குமா?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*இல்லை.*

171—

பயிற்சி முறை

**வினா எண் 24318—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை செயல் அலுவலர்களுக்கான பயிற்சி முறையைத் திருத்தி அமைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் நிலை-1, நிலை-3 மற்றும் நிலை-4 செயல் அலுவலர்களுக்கான திருத்திய பயிற்சித் திட்டம் நடைமுறையில் உள்ளது.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

172—

பள்ளிக்கு நிதியுதவி

**வினா எண் 25220—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெங்களூர் தமிழ்ச் சங்கம் பள்ளிக் கட்டடத்திற்கு நிதியுதவியை தமிழக அரசிடம் கோரியுள்ளதா?*

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவென்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெங்களூர் தமிழ் சங்கத்திடமிருந்து, பெங்களூர் மாநகராட்சி மேம்பாட்டுக் குழுமத்தால் ஏற்பளிக்கப்பட்ட கட்டட வரைபடம் கேட்கப்பட்டுள்ளது. அவை வரப்பெற்றால் ஆய்வுசெய்து அரசின் நிதிநிலைக்கேற்ப நிதியுதவி வழங்க முடிவு மேற்கொள்ளப்படும்.

**173—**

### ஆலயச் சொத்துக்கள்

**வினா எண் 26022—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆலயத்திற்கு குத்தகை கொடுக்காமல் தனியார் அனுபவித்து வருகின்ற தகவல்கள் அரசிடம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீட்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தனியார் வசமுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைத் திருக்கோயிலின் சுவாதீனத்திற்குக் கொண்டுவர இந்து சமய அறநிலைய சட்டவிதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டு 386.37 ஏக்கர் விவசாய நிலங்களும், 141 கிரவுண்ட் 1423 சதுர அடி மனைகள் மற்றும் 40 சென்ட் வீட்டுமனைப் பகுதிகளும், திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 907.38 ஏக்கர் நிலங்கள் குறித்து திருக்கோயிலுக்குச் சாதகமாக நீதிமன்றங்களில் தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.



**174—**

### கான்கிரீட் கூரை

**வினா எண் 27027—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் நிலத்தில் குடியிருப்போர்கள் அங்கு சொந்த செலவில் கட்டடம் கட்டும்போது கூரை கான்கிரீட்டில் போட்டுக்கொள்ள அரசு அனுமதி அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பொறியாளர்கள் மூலம் முறையாக மதிப்பீடுகள் தயாரித்து வாடகைதாரர் செலவில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டிக்கொள்ளவும், ஏல உரிமம், காலம் முடிவுற்றதும் கட்டடத்தினை எவ்வித நிபந்தனையும் இன்றியும் நட்ட ஈட்டுத் தொகை ஏதும் கேட்காமலும் உபயமாக திருக்கோயில் வசம் ஒப்புவித்திட முன்வந்தால் விசேட இனமாகக் கருதி அனுமதி வழங்கப்படுகிறது.

**175—**

### தமிழில் அர்ச்சனை

**வினா எண் 27030—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படாத கோவில்கள் உள்ளனவா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை

**176—**

**கோவில் வருவாயை அதிகரித்தல்**

**வினா எண் 27036—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நகர மையப்பகுதியும், உந்து வண்டி நிலையத்திற்கு எதிரே உள்ள ஆலய நிலத்தில் வணிக வளாகம் கட்டி திருக்கோவிலின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**177—**

**கோவில் குளம்**

**வினா எண் 27037—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*சேலம் மாவட்டம், தாரமங்கலம், கைலாசநாதர் கோவிலுக்குச் சொந்தமான குளத்தை தூர் எடுக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம், கைலாசநாதர் கோவிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.50,000/- மதிப்பீட்டுத் தொகையில் தூர்வாரும் பணி 1994-ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது திருக்கோயில் திருக்குளத்தை தூர் எடுக்கும் பணி அவசியம் இல்லை.

**178—**

**கோயில் திருப்பணி**

**வினா எண் 28311—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பாலவாடியிலிருக்கும் புராதன அருள்மிகு சித்தேஸ்வரன் கோயிலின் திருப்பணிகளை மேற்கொள்ள அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இயலாது.

**179—**

**ஆபரணங்களின் மதிப்பு**

**வினா எண் 28642—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2000 மே 18

*(அ) தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் மூல விக்ரகங்களுக்கான ஆபரணங்களின் மதிப்பு எவ்வளவு?*

*(ஆ) அவற்றை அரசு எந்த வழிமுறைகளில் பாதுகாத்து வருகிறது?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் மூல விக்ரகங்களுக்கான ஆபரணங்களின் மதிப்பினை வெளியிடுவது அவற்றின் பாதுகாப்பிற்கு உகந்ததல்ல.*

*(ஆ) திருக்கோயில் காவலாளி, முன்னாள் படை வீரர்கள் மற்றும் காவல் துறை காவலர்கள்கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படை அமைப்பின் மூலமாக திருக்கோயில்களில் உள்ள சிலைகளும் அவற்றின் ஆபரணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இரட்டைப்பூட்டு அமைப்பு, கள்வர் எச்சரிக்கை மணி போன்ற சாதனங்கள் பாதுகாப்பைப் பலப்படுத்த உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும், இந்த நகைகளுக்குக் காப்பீடும் செய்யப்படுகிறது.*

**180—**

## கவிதைகளை நாட்டுடமையாக்குதல்

**வினா எண் 29174—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கவிஞர் புதுவைச்சிவம் அவர்கள் கவிதைகளை நாட்டுடமையாக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் இல்லை.*



2000 மே 18]

**181—**

## சுவர் கட்டுதல்

**வினா எண் 29327—திரு. குத்தலாம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குத்தலாம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், திருவேள்விக்குடி கிராமத்தில் உள்ள அருள்மிகு மணவாளேஸ்வரஸ்வாமி திருக்கோயில் வெளி மதிற்சுவர் இடிந்தும், சிதைந்தும் திருக்கோவில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பாதுகாப்புக் கருதி சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். அறியும்.*

*(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருவேள்விக்குடி, அருள்மிகு மணவாளேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின், தற்போது இடிந்தும் சிதைந்தும் உள்ள வெளி மதிற்சுவர் செப்பனிடும் பணியினை இத் திருக்கோயிலுக்கு அமைக்கப்பட்டுள்ள திருப்பணிக் குழு மூலம் தக்க நிதியாதாரம் திரட்டி, தேவையெனில் நிதியுதவி வழங்கி, முதற்கட்டப் பணியாக மேற்கொள்வது குறித்து, அடுத்த நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இத் துறை உத்தேசித்துள்ளது.*

**182—**

## தங்கும் விடுதி

**வினா எண் 29692—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரியிலுள்ள ராகவேந்திர சுவாமிகள் திருக்கோவிலுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதரும் பக்தர்களின் நலனைக் கருதி அறநிலையத் துறை மூலமாக தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**183—**

**தமிழ்ப் பண்பாடு ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 30097—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் ஒரு தமிழ்ப் பண்பாடு ஆராய்ச்சி மையம் நடப்பாண்டில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**184—**

**விருது**

**வினா எண் 32315—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்பான முறையில் பணிபுரியும் திருக்கோயில் செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வர்களைக் கண்டறிந்து விருது வழங்கி ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**185—**

**குளத்தைச் செப்பனிடுதல்**

**வினா எண் 32831—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்ன திருப்பதி திருக்கோவிலுக்குச் சொந்தமான குளத்தைச் செப்பனிட்டு புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்னத் திருப்பதி திருக்கோவிலுக்குச் சொந்தமான திருக்குளம் தமிழ்நாடு அரசு விவசாயப் பொறியியல் துறை மூலம் 1993-94 ஆம் நிதி ஆண்டில் ரூ.2,00,000 செலவில் செப்பனிட்டு, புதுப்பித்து தற்போது நல்ல நிலையில் உள்ளது. ஆகவே, திருப்பணி செய்யவேண்டிய அவசியமில்லை.

**186—**

**கோவில்களின் வருமானம்**

**வினா எண் 33393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கோயில்களில் 1998-99 ஆம் ஆண்டில் எவ்வளவு வருமானம் கிடைத்தது?

(ஆ) வருமானத்தை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் அனைத்து திருக்கோயில்களிலும் 1998-99 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள மொத்த வருவாய் ரூ. 137.31 கோடியாகும். இத்தொகை கடந்த பசலியைவிட ரூ.11.90 கோடி கூடுதல் ஆகும்.

(ஆ) திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:-

(1) சொத்துப் பதிவேடு சரியாகப் பராமரிப்பதன் மூலம் திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பொது ஏலம் மூலம் உயர்ந்தபட்ச கேள்விதாரருக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன.

(2) திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலிமனைகள், கட்டடங்கள் இவற்றுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை மிகமிகக் குறைவாக இருப்பதால் நியாய வாடகைக் குழுவினரால் நியாய வாடகை நிர்ணயிக்கப்படுகின்றன.

(3) பழைய குத்தகைதாரர்கள் சிலர் உள்குத்தகைக்கோ அல்லது வேறு ஒரு நபருக்கு விற்றுவிட்டாலோ, உண்மையில் அனுபவித்து வரும் குத்தகைதாரரின் பெயருக்கு பெயர்மாற்றம் செய்து நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், நன்கொடை பெறவும் வழிவகை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள், உபயோகமற்ற வருவாய் ஏதுமின்றி உள்ளவற்றைத் தேர்வு செய்து, அவற்றில் திருக்கோயில்களின் வருவாய் பெருகும் விதத்தில், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் போன்றவை சம்பந்தப்பட்ட ஆலயங்களின் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**187—**

## கோவில்களை இணைத்தல்

**வினா எண் 33997—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறு கோயில்களை தென்காசி காசி விசுவநாதர் கோவிலுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறுகோயில்களை தென்காசி காசிவிசுவநாதர் கோயிலுடன் இணைக்கும் நடவடிக்கை ஏதும் இல்லை.

**188—**

## கூட்டுறவு வங்கி

**வினா எண் 6717—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதி, முருகம்பாளையம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

[2000 மே 18

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதி, முருகம்பாளையம் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**189—**

### சுமை தூக்கும் தொழிலாளர்கள்

**வினா எண் 16912—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்கள் அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 4605 பேர் சுமை தூக்கும் தொழிலாளர்கள் உள்ளனர்.*

*(ஆ) பத்தாண்டு பணிமுடித்த சுமை தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**190—**

### விவசாயக் கடன்

**வினா எண் 16920—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1986-87 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயக் கடன் வழங்க, ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?*



2000 மே 18]

*(ஆ) அதில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?*

*(இ) அதில் வழங்கப்படாத தொகை எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| *(அ)* | *1986-87 ஆம் ஆண்டில் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டது* | *ரூ. 3.53 இலட்சம்* |
| *(ஆ)* | *வழங்கப்பட்ட தொகை* | *ரூ. 2.23 இலட்சம்* |
| *(இ)* | *வழங்கப்படாமல் நிலுவை உள்ளவை* | *ரூ. 1.30 இலட்சம்.* |

**191—**

### கூட்டுறவுக் கடன்

**வினா எண் 20714—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1997-98-ல் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் தொகை எவ்வளவு?*

*(ஆ) அதில் திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?*

*(இ) அதில் வசூலிக்கப்படாமல் உள்ள நிலுவைத் தொகை எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) 1997-98-ல் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.3,274.55 கோடி இக்கடன் தொகை குறுகிய கால மற்றும் நீண்டகாலத் தவணைகளில் திரும்பச் செலுத்தக்கூடிய வகையில் வழங்கப்பட்டுள்ளதால், இத்தொகையை 1998-99-ல் முழுவதுமாக வசூலிக்க இயலாது.*

[2000 மே 18

(ஆ) இதற்கு முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்தொகையில் 1997-98-ம் ஆண்டில் திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை ரூ.1900.66 கோடி.

(இ) வசூலிக்கப்படாமல் உள்ள நிலுவைத் தொகை ரூ.1028.10 கோடி.

**192—**

**கணினி மையம்**

**வினா எண் 21736—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எந்தெந்த கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் கணினி (Computer) மையம் நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு அமைச்சர் க.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் இயங்கிவரும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் நடத்திவரும் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியில் கணிப்பொறி பாடம் இல்லாததால் இந்நிலையங்களில் கணினி மையம் அமைக்கப்படவில்லை.

**193—**

**உப்பு விற்பனை**

**வினா எண் 23917—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளில் அயோடின் மற்றும் இரும்புச் சத்து சேர்க்கப்பட்ட உப்பை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 284, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 7-10-1997-இல் அயோடின் உப்பு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்க வரையறுக்கப்பட்ட பொருள்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**194—**

**அரிசி கையிருப்பு**

**வினா எண் 24497—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போதுமான அரிசி கையிருப்பு வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 18-1-2000 தேதிய நிலவரப்படி அரிசி கையிருப்பில் உள்ள விவரம் பின்வருமாறு:—

ரகம் - கிரேடு 'ஏ'

| | | |
|---|---|---|
| புழுங்கல் அரிசி | - | 2,48,830 மெட்ரிக் டன் |
| பச்சை அரிசி | - | 49,759 மெட்ரிக் டன் |
| மொத்தம் | - | 2,98,589 மெட்ரிக் டன் |

195—

### விலைகள் நிலவரம்

**வினா எண் 24499—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்தியாவசியப் பொருள்களின் விலைகளின் நிலவரத்தை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான அரசின் ஏற்பாடுகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அத்தயாவசியப் பொருட்களின் விலைவாசி நிலவரத்தைக் கண்காணிப்பதற்காக விலைவாசி கண்காணிப்புக் குழு ஒன்றை 27-11-1998 அன்று அரசு அமைத்துள்ளது. தலைமைச் செயலரை தலைவராகக் கொண்ட இக்குழு வாரம் ஒரு முறை கூடி, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுக்குள் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

196—

### நெல் கொள்முதல்

**வினா எண் 24513—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பருவ காலங்களில் தமிழக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது?

(ஆ) அவற்றின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும், சம்பா மற்றும் குறுவை பருவ காலங்களில் தமிழக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் சொய்யப்படுகிறது. குறுவை 1992 பருவத்தில், ஏகபோகக் கொள்முதல் திட்டத்தில் அதிகப்படியாக 5,85,010 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. சம்பா 1992 பருவத்தில், ஏகபோகக் கொள்முதல் திட்டத்தில் அதிகப்படியாக 12,50,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், குறுவை 1997 பருவத்தில் 7,04,767 மெட்ரிக் டன் நெல்லும், சம்பா 1998 பருவத்தில் 11,36,823 மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டன. நடப்பு சம்பா 1999 பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின்படி 10,49,805 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

197—

### டெபாசிட் தொகை உயர்வு

**வினா எண் 27600—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர கூட்டுறவு வங்கியில் டெபாசிட் தொகை பல மடங்கு உயர்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

விடை—

**மர்ண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் கூட்டுறவு நகர வங்கியில் வருடந்தோறும் பெருகிவரும் வைப்புத் தொகைகளை பல திட்டங்களுக்கு வங்கி பயன்படுத்தி வருகிறது.

[2000 மே 18

**198—**

**கூட்டுறவு நகர வங்கி**

**வினா எண் 28327—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கூட்டுறவு நகர வங்கி அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கூட்டுறவு நகர வங்கி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**199—**

**மண்ணெண்ணெயை அதிகரித்தல்**

**வினா எண் 30179—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிராமப் பகுதிகளுக்கு குடும்ப அட்டைக்கான மண்ணெண்ணெயை அதிகப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) கிராமப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கான மண்ணெண்ணெய் வழங்கல் அளவினை உயர்த்தி வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*



2000 மே 18]

**200—**

**வெங்காயக் கிடங்கு**

**வினா எண் 31878—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை பகுதியில் வெங்காயக் கிடங்கு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வெங்காயக் கிடங்கு அமைக்கக் கேட்கப்பட்டுள்ள குஜிலியம்பாறையும் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள கிட்டங்கி அமைந்துள்ள எரியோடு கிராமமும் மிக அருகிலேயே உள்ளதால் குஜிலியம்பாறையில் வெங்காயக் கிடங்கு ஏற்படுத்தினால் அதனைப் போதிய அளவில் பயன்படுத்த யாரும் முன் வரமாட்டார்கள் என்பதால் இணையத்திற்கு நிதி இழப்பீடு ஏற்படலாம். எனவே புதிய வெங்காயக் கிடங்கு குஜிலியம்பாறையில் அமைக்க சாத்தியமில்லை.*

**இருபத்து ஐந்தாம் பட்டியல்**

**1—**

**நஷ்ட ஈட்டுத் தொகை**

**வினா எண் 10465—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தண்டராம்பட்டு தொகுதி, கரும்பளூர், கொட்டையூர், பெருந்துறைப்பட்டு ஆகிய கிராமங்களில் கரும்புச்சாலை அபிவிருத்திக்கென எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ஈட்டுத்தொகை வழங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் கொட்டையூர், தென்கரும்பலூர், வாழச்சனூர் மற்றும் குங்கலியநத்தம் ஆகிய நான்கு கிராமங்களில் கரும்பு சாலை அபிவிருத்திக்காக 113 நபர்களிடம் 1997 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 105 நபர்களுக்கு பத்திரப்பதிவு செலவு உட்பட ரூபாய் 11 லட்சத்து 29 ஆயிரத்து 770 மட்டும் பணம் வழங்கப்பட்டது. மீதமுள்ள 8 நபர்கள் பணம் பெற்றுக்கொள்ள மறுத்ததுடன் நீதிமன்றம் செல்வதாக கூறியுள்ளனர்.*

**2—**

**வேளாண்மைக் கிடங்கு**

**வினா எண் 23003—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தண்டராம்பட்டு தொகுதி தாணிப்பாடியில் வேளாண்மைக் கிடங்கு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.*

**3—**

**நெடுஞ்சாலைத் துறைச் சாலையாக்குதல்**

**வினா எண் 25911—திரு. ச. அழகுவேலு:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை சாலைகளாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை சாலைகளாக மாற்றி அரசாணை நிலை எண் 156, வேளாண்மை, நாள் 30-4-1999-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

**4—**

**முந்திரித் தோட்டங்களை மேம்பாடு செய்தல்**

**வினா எண் 26144—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் நலிவடைந்த முந்திரித் தோட்ட விவசாயிகளுக்கு முந்திரித் தோட்டங்களை மீண்டும் மேம்பாடு செய்ய அரசு வழங்கும் உதவிகள் யாவை?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், நலிவடைந்த முந்திரித் தோட்டங்களைப் புதுப்பிக்க எக்டேர் ஒன்றுக்கு ரூ.2,800 மானியமாக வழங்கப்படுகிறது. இததொகையில் முந்திரி ஒட்டுக் கன்றுகள், உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் இவற்றிற்கான செலவினங்கள் மற்றும் நலிவடைந்த முந்திரி கன்றுகளை அகற்றுவதன் மூலம் ஏற்படும் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகையும் அடங்கும்.*

**5—**

**பட்ட, பட்டய வகுப்புகள்**

**வினா எண் 26154—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி நகரில் இயங்கிவரும் வேளாண் பயிற்சி நிலையத்தில் பட்ட, பட்டய வகுப்புகள் தொடங்கும் கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

6—

### மருந்து தெளித்தல்

**வினா எண் 26442—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிர்களுக்கு வரும் நோய்களிலிருந்து காப்பாற்ற 'ஹெலிகாப்டர்' மூலம் மருந்து தெளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பயிர்களுக்கு வரும் நோய்களிலிருந்து காப்பாற்ற ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

### வேளாண்மை நிலம்

**வினா எண் 27599—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விளைச்சலுக்குத் தகுதி இருந்தும் விவசாயம் செய்யப்படாமல் உள்ள நிலம் எவ்வளவு?





(ஆ) ஏன் விவசாயம் செய்ய இயலாமல் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தமிழ்நாட்டில் மொத்த தரிசு நிலபரப்பான 22,67,402 எக்டரில், 13,73,940 எக்டர் வேளாண்மைக்கு தகுதியான நிலையில் தரிசாக விடப்பட்டுள்ளது.

(ஆ) விளைச்சலுக்குத் தகுந்த நிலங்கள், தரிசாக சாகுபடி செய்ய இயலாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:-

1. பள்ளத்தாக்கு மற்றும் மலைப்பாங்கான நிலப்பரப்பு
2. மேடு, பள்ளத்துடன் கூடிய சமமற்ற நிலப்பரப்பு
3. தண்ணீர் தேங்கும் நிலப்பரப்பு
4. களர், உவர் நிலப்பாங்கு
5. தரக்குறைவாக மேய்ச்சல் மற்றும் புல்தரை மற்றும் வனப்பகுதி
6. மணற்பாங்கான நிலம்
7. தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட நிலப்பாங்கு
8. பாறைகளுடன் கூடிய பகுதி
9. அதிக சரிவான நிலப்பகுதி

8—

### பயிற்சிப் பள்ளி

**வினா எண் 27601—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் வயல் விளக்க அலுவலர் பதவிக்கான பயிற்சிப் பள்ளி மூடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1-10-1992 அன்று, சி. பேக் (Zee bag) ஆய்வுக் கூட்டத்தில் நிதிச் செயலாளர் அவர்கள், வேளாண்மைத் துறையில் இயங்கிய வேளாண்மை பள்ளிகளில் ஓராண்டு சான்றிதழ் மற்றும் இரண்டாண்டு பட்டயப்படிப்பு ஆகிய பயிற்சிப் படிப்பு போன்றவைகள் நடத்துவது அவசியமில்லாதது என்றும், இது பள்ளியில் படித்தவர்களுக்கு அரசினால் வேலை தரப்படும் என்ற தவறான பொருள் கொள்ளப்படும் என்ற கருத்தின் அடிப்படையில், பயிற்சிகள் நிறுத்தப்பட்டன.

**9—**

**பாலத்தை அகலப்படுத்துதல்**

**வினா எண் 27688—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி முதல் சங்ககிரி வரையுள்ள சாலையில் கேட்டுகடைக்கும் வீரப்பம்பாளையத்திற்குமிடையே உள்ள குறுகலான குரும்பபட்டி பாலத்தை அகலப்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையின் அகலம் தற்போதைய போக்குவரத்திற்கு போதுமானதாக உள்ளது. எதிர்காலத்தில் ஒரு வழிப்பாதையான இச்சாலையை இருவழிப் பாதையாக மாற்ற அவசியமேற்படும்பொழுது இத்தரைமட்டப் பாலத்தை அகலப்படுத்தவோ அல்லது உயர்மட்டப்பாலமாக அமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும்.



2000 மே 18]

**10—**

**நிவாரணம் வழங்குதல்**

**வினா எண் 28490—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புயல் மற்றும் வெள்ளத்தால் விளை நிலங்களில் ஏற்படும் அரிப்பை சீர் செய்ய செலவினை முழுமையாக ஏற்று நிவாரணம் வழங்க அரசு துணை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புயல் மற்றும் வெள்ளத்தால் விளைநிலங்களில் ஏற்படும் மண் அரிப்பை சீர் செய்ய சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு அரசு ஆணை (நிலை) எண் 546, வேளாண்மைத் துறை, நாள் 17-12-1998-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி நிவாரணம் வழங்கப்படுகிறது.

**11—**

**நிலத்தடி நீர்**

**வினா எண் 30127—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு பயிரிடப்படுவதால் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர் குறைவதாக அறிவியல் அறிஞர்கள் கூறுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைப் போக்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கரும்பு பயிரிடப்படுவதால் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் அபாயம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2000 மே 18

**12—**

**சிறப்பு முயற்சிகள்**

**வினா எண் 30136—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உளுந்து பயறு விளைச்சலை அதிகப்படுத்த சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவை யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த புவனகிரி தொகுதியில் உளுந்து பயறு விளைச்சலை அதிகப்படுத்த கீழ்க்கண்ட சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன:—

1. உளுந்து பயிரினை தனிப் பயிராக பயிரிட ஊக்குவித்தல்;

2. சிறுதானியம் மற்றும் மணிலா பயிர்களுடன் ஊடுபயிராகப் பயிரிடுதல்.

3. நடப்பு ஆண்டில் நஞ்சைத் தரிசில் கடலூர் மாவட்டத்திற்குச் சுமார் 2000 எக்டரில் கூடுதலாக உளுந்து பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. உளுந்து பயறு உற்பத்தித் திறனை அதிகரிக்க கடலூர் மாவட்டத்திற்கு 3000 எக்டரில் இலை வழி மூலம் டைஅமோனியம் பாஸ்பேட் கரைசல் தெளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

5. தேசிய பயறு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மானிய உதவியுடன் தரமான விதைகளைப் பயன்படுத்துதல், நுண்ணுயிர் உரமிடல், நுண்ஊட்டச்சத்து இடுதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாளுதல், பெருவிளக்கப்பண்ணை அமைத்தல் போன்ற உத்திகள் மூலம் உளுந்து உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு வருகிறது மற்றும்,



2000 மே 18]

6. கடலூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டில் உளுந்து உற்பத்தித்திறன் எக்டருக்கு 630 கிலோவாக இருந்ததை 700 கிலோவாக உயர்த்த எல்லா வழிமுறைகளும் கையாளப்படுகின்றன.

**13—**

**வேளாண் கல்வித் தரத்தை மேம்படுத்துதல்**

**வினா எண் 30292—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண் கல்வித்தரத்தை மேலும் மேம்படுத்தும் வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம், தமிழ்நாட்டில் வேளாண் கல்வித் தரத்தினை மேலும் மேம்படுத்தும் வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

பொதுவாக வேளாண் பாடத்திட்டங்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுபிக்கப்பட்டு வருகிறது. தேவைக்கேற்ப இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த பாடத்திட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. மனித வள மேம்பாட்டுத் திட்டம், சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல், தகவல் தொடர்பு, ஆகியவற்றிற்கான தனிப்பாடங்கள், சுய வேலைவாய்ப்பிற்கான வர்த்தக ரீதியான பாடங்கள் மற்றும் தோட்டக்கலைக்கான அதிகப்படியான பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் செய்முறை பயிற்சி வகுப்புகளின் முக்கியம் கருதியும் எல்லா பாடத்திலும் செய்முறை வகுப்புகள் இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளதுடன் கணிப்பொறியின் அவசியம் கருதி ஒவ்வொரு மாணவனும் தனித்தனியாக பயிற்சிகள் பெறுவதற்கு வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மாணாக்கரின் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையில் நேரடி கிராம பயிற்சித் திட்டம் வலுவாக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கு நவீன ஆசிரியர் பயிற்சிகள், உள்நாடு மற்றும்

[2000 மே 18

வெளிநாடுகளிலுள்ள தரம் வாய்ந்த நிறுவனங்களில் அளிக்கப்படுகிறது.

**14—**

### விவசாய நிலங்களில் மண்புழு

**வினா எண் 30293—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டு விவசாய நிலங்களில் மண்புழு உருவாவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேளாண் விளைச்சலை வேண்டி எங்கெல்லாம் அதிகமாக இரசாயன இடுபொருட்கள் பயன்படுத்தப்பட்டதோ அங்கெல்லாம் மண்புழுக்கள் எண்ணிக்கையில் அதிகமாக உருவாவதில் சற்று சிரமப்படுகிறது. எனவே, மண்புழுக்கள் முழுமையாக விவசாய நிலங்களில் உருவாவதில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.*

**15—**

### விளைச்சல் நிலங்கள்

**வினா எண் 30294—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் விளைச்சலுக்குத் தகுதியான நிலப்பரப்பின் அளவு என்ன?*

*(ஆ) அவை முழுவதும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு விட்டதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

*(அ) தமிழ்நாட்டில் விளைச்சலுக்குத் தகுதியான நிலப்பரப்பு 83,00,371 எக்டர் ஆகும்.*

*(ஆ) 67.24 சதவீதம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**16—**

### மண்வளப் பாதுகாப்பு

**வினா எண் 30359—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1998-99-ம் ஆண்டில் 1938 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

**17—**

### சூரியகாந்தி பயிரிடுதல்

**வினா எண் 30360—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் விவசாயிகள் சூரியகாந்தி வித்துக்களைப் பயிரிடுவதற்காக இலவச விதைப் பொருளும், மானியத்துடன் கடனும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**18—**

**மலர்கள் ஏற்றுமதி**

**வினா எண் 30664—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஏற்றுமதிக்கென எந்தெந்த மலர்கள் பயிரிடப்படுகின்றன.

(ஆ) அவை பயிரிடப்படும் இடங்கள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ரோஜா மற்றும் ஆர்கிட்ஸ்.

(ஆ) தர்மபுரி மாவட்டம், ஒசூர் பகுதியில் ரோஜா வகைகளும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் வீராபுரத்தில் ஆர்கிட்ஸ் வகைகளும் பயிரிடப்பட்டு வருகின்றன.

**19—**

**மலர்கள் ஏற்றுமதியை ஊக்குவித்தல்**

**வினா எண் 30666—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளுக்கு மலர்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் அரசு எத்தகைய உதவிகளைச் செய்து வருகிறது?

(ஆ) இதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை யாது?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், வணிக ரீதியில் பூச்செடிகள் வளர்த்து அதன்மூலம் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக, 10 குதிரைத் திறனுக்கு உட்பட்ட மலர்ச்செடிகள் உற்பத்தி பிரிவுகளுக்குக் குறைந்த மின் அழுத்தக் கட்டணப் பிரிவு IIIA-யின்கீழ் மின் கட்டணம், நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டில் 20 சதவீதம் வரை ரூ.20 இலட்சத்திற்குட்பட்டு மானியம், மூலப் பொருட்கள் இடுபொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்படும்/இறக்குமதி செய்யப்படாத பொருட்களுக்கு 3 சதவீத விற்பனை வரிச் சலுகை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் பெற ஓர் ஆண்டுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.10,000/- என்று வசூலிக்கப்படும் கட்டணத்திலிருந்து விலக்கு மற்றும் பசுமை குடில்கள் அமைக்க மானியம் போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

(ஆ) மேற்படி திட்டங்களின்மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

**20—**

**நோய் எதிர்ப்பு சக்தி**

**வினா எண் 30549—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுவாக விளை நிலங்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை ஈடுசெய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். அதிக அளவில் இரசாயனப் பூச்சி மருந்து தெளிப்பதாலும் இரசாயன உரங்களை உபயோகிப்பதாலும், நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்துவிடுகிறது.

[2000 மே 18

(ஆ) ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் தொடர்பாக ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலமாக ஒவ்வோர் ஆண்டும் 1993-94 முதல் விவசாயிகளுக்குத் தொழில்நுட்பங்கள் தொடர்பாக நெற்பயிரில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டிலிருந்து தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளி மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்குப் பயிற்சியும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கங்களை அமைத்து மணிலா, பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களின் மூலம் உயிரியல் பூச்சி நோய் கட்டுப்பாடு பற்றியும் உயிரியல் கட்டுப்பாடு காரணிகள் உபயோகத்தினை ஊக்குவித்தும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தொழில் நுட்பங்களை விவசாயிகள் கையாளுவதால், விளை நிலங்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவதை நிவர்த்தி செய்யலாம்.

**21—**

## பருத்தி உற்பத்தி

**வினா எண் 30708—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி விளைச்சலில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு எந்த இடத்தில் உள்ளது?

(ஆ) தமிழகத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பருத்தி விளைச்சலில் அகில இந்திய அளவில் ஹெக்டேருக்கு 425 கிலோ (விதை நீக்கிய பஞ்சு) உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.



2000 மே 18]

(ஆ) பருத்தி விளைச்சலைத் தமிழகத்தில் அதிகரிக்க பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவிட மாநில அரசின் மூலமாக 'பருத்தி மேம்பாட்டுத் திட்டமும்' மத்திய அரசு உதவியுடன் 'தீவிர பருத்தி பெருக்கத் திட்டமும்' செயல்பட்டு வருகின்றன. மேலும் மாநில பருத்தி குழு மற்றும் அடிப்படைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

**22—**

## சோள விளைச்சலை அதிகரித்தல்

**வினா எண் 30709—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மக்காச் சோள விளைச்சலை அதிகப்படுத்த அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வாறு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாட்டில் மக்காச்சோளத்தின் இயல்பான பரப்பளவு 47,607 எக்டர் ஆகும். மக்காச்சோள விளைச்சலை அதிகப்படுத்த மத்திய சார்பு திட்டமான "அதி விரைவு மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்" 1995-96 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மக்காச்சோள பரப்பளவு அதிகமாகக் கொண்ட கோயம்புத்தூர், திண்டுக்கல் ஆகிய இரண்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு 75 பங்கும் மாநில அரசு 25 பங்கும் ஏற்கின்றன. நடப்பாண்டில் (1999-2000) ரூ.14.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாநில அரசால் கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் தேனி ஆகிய நான்கு மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி திட்டத்தின் வாயிலாக, தமிழ்நாட்டில் மக்காச்சோள விளைச்சலை அதிகப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2000 மே 18

23—

## சிலந்தி நோய்

**வினா எண் 30711—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்ட சிலந்தி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?*

*(ஆ) நோய் ஏற்படாமல் இருக்க முன் தடுப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தென்னை மரங்களில் சிலந்திப் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளவாறு 15 லிட்டர் மோனோக் குரோட்டோபாஸ் என்ற பூச்சி மருந்தை 15 லிட்டர் தண்ணீரில் கலந்து பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் வேர் மூலம் செலுத்துவதின் மூலம் இப்பூச்சித் தாக்குதல் 60 முதல் 80 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையைக் கையாளுமாறு விளம்பர சாதனங்கள் மூலம் விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

24—

## விளைபொருள் வீழ்ச்சி

**வினா எண் 30712—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தக்காளி, வெங்காயம் போன்ற விவசாயிகளின் விளைபொருள் வீழ்ச்சி ஏற்படாமல் ஸ்திரப்படுத்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தக்காளி, வெங்காயம் போன்ற காய்கறிப்பயிர்களின் விலையில் அவ்வப்போது உற்பத்திக்கேற்ப ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. காய்கறி உற்பத்தியாளர்களுக்கு நியாய விலை கிடைக்கவும், உபயோகிப்பவர்களுக்கு காய்கறிகளை நியாயமான விலையில் விநியோகம் செய்யவும், முதல்கட்டமாக 1999-2000 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனத்தினால் (டான்ஹோப்) கொள்முதல் நிலையங்கள் மூன்றும் மற்றும் விற்பனை நிலையங்கள் ஐம்பதும் தொடங்கப்படவுள்ளது. மேலும், தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் "உழவர் சந்தை"கள் வேளாண்மை விற்பனைத் துறையினரால் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம் இடைத்தரகர்கள் தலையீடின்றி விவசாயிகள் நேரிடையாகத் தங்கள் விளைபொருட்களை நியாயமான விலையில் விற்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

25—

## நிலத்தடி நீரை உயர்த்துதல்

**வினா எண் 30721—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் நிலத்தடி நீரை உயர்த்த வேண்டிய அவசியத்தை அரசு உணருமா?*

*(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன?*

[2000 மே 18

விடை——

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மட்டும் செயல்படுத்தப்படுகிறது.*

**26—**

**மாம்பழ உற்பத்தி**

**வினா எண் 30726—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் மாம்பழ வகைக்கு வெளி மாநிலங்களில் வரவேற்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் உற்பத்தியை மேம்படுத்த அரசு முன் வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த வெப்ப, வறண்ட மற்றும் குளிர்பிரதேசப் பழங்கள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவில் உரமிடல் மற்றும் பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் அமைத்தல் போன்ற திட்டங்கள் மூலம் மா உற்பத்தி மேம்படுத்தப்படுகிறது.*

**27—**

**பாசன வசதி**

**வினா எண் 30843—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசன வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?*



2000 மே 18]

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) கடலூர் மாவட்டத்திற்கு சொட்டுநீர்ப் பாசன வசதி செய்துதரும் வகையில் கேட்பு மனுவிற்கு (Indent) ஏற்ப ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் புவனகிரி சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய சிதம்பரம் உட்கோட்ட அலுவலகத்திற்கு ரூ.3.00 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

**28—**

**வேளாண்மை விரிவாக்க மையம்**

**வினா எண் 30861—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ், ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத அல்லது சட்டமன்றப் பேரவையில் இதுவரை அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்நிதியாண்டில் ஒப்புதல் அளிக்க தடையாணை உள்ளதால், பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் பெறப்பட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட இயலாத நிலையில் உள்ளது.*

[2000 மே 18

29—

## செண்ட் தொழிற்சாலை

**வினா எண் 31205—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் மல்லிகை, சாமந்திப் பூக்கள் அதிகம் பயிரிடுவதால் செண்ட் தொழிற்சாலை ஒன்று தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

30—

## வெங்காயக் கிடங்கு

**வினா எண் 31978—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி எரியோட்டில் செயல்படாமல் இருந்துவரும் வெங்காயக் கிடங்கை சிறுதொழில் நிறுவனம் வாடகைக்கோ, குத்தகைக்கோ விட அரசு அனுமதிக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வெங்காயத்தை விவசாயிகளிடம் கொள்முதல் செய்து சேமித்து வைத்து விற்பனை செய்யும் நோக்குடன் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று கட்டப்பட்ட மூன்று கிடங்குகளில் எதிர்பார்த்ததைவிட ரூ.11.20 இலட்சம் நட்டம் ஏற்பட்டதாலும் இக்கிடங்குகளை பயன்படுத்திக்கொள்ள செய்தித்தாளில் விளம்பரம் செய்தபோது எவரும் முன்வராததாலும் மேற்படி கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய அசல் தொகை திரும்ப செலுத்தப்படாமல் வட்டி இழப்பு ஏற்பட்டு வருவதால் இக்கிடங்குகளை விற்பனை செய்யலாம் என்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் முடிவெடுத்துள்ளதால், இக்கிடங்குகளை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ அளிக்க சாத்தியமில்லை.



2000 மே 18]

31—

## குடிசைவாசிகள்

**வினா எண் 20204—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பக்கிங்காம் கால்வாயோரக் குடிசைவாசிகளுக்கு மாற்று ஏற்பாட்டை அரசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாய்க் கரைகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் 4600 குடிசைவாசிகளுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரைகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட வீடுகள் அமைத்தும், அவ்வாறு வீடுகள் அமைக்க இயலாத இடங்களில் வாழ்வோருக்கு சென்னை கொருக்குப்பேட்டை பகுதி பாரதி நகரிலும், ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதியிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தும் குடியமர்த்தப்படுகின்றனர்.

[2000 மே 18

32—

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 22346—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராம கொண்ட அள்ளியில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி கிராமத்தில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

**கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்**

**வினா எண் 22608—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) அதை இலாபகரமாக இயக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பால் வழங்கும் சங்கங்கள் எதுவும் இயங்கவில்லை.



2000 மே 18]

34—

**மாடி வீடுகள்**

**வினா எண் 23013—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் குடிசை மாற்று வாரியம் மூலம் குடிசை வீடுகளை மாற்றி மாடி வீடு கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

35—

**புதியதாக குடிசைகள்**

**வினா எண் 23665—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் கண்ட இடங்களில் புதியதாக குடிசைகள் போடுபவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

ஆம். சென்னை மாநகரிலுள்ள பொது இடங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து புதிய குடிசைகள் அமைப்பதை விழிப்புடன் கண்காணித்து அவற்றை வரவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

36—

**மகளிர் கூட்டுறவு பால்பண்ணை**

**வினா எண் 24261—திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியில் வெட்டயம்பாளையத்தில் ஒரு மகளிர் கூட்டுறவு பால்பண்ணை இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மகளிர் கூட்டுறவு பால் பண்ணை எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) பவானிசாகர் தொகுதி, வெட்டயம்பாளையத்தில் ஒரு மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**37—**

## குடியிருக்கும் வீடுகளை சொந்தமாக்குதல்

**வினா எண் 24229—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்த கோடம்பாக்கம், புதூர் பகுதி போன்ற இடங்களிலுள்ள வரிசை வீடுகள், அதில் வசிப்பவர்களுக்கே சொந்தமாக்கி கிரயப்பத்திரம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை கோடம்பாக்கம், புதூர் பாகம்-2 குடிசை மாற்று வாரியம் திட்டப் பகுதி போன்ற வரிசை வீடுகளை அதில் வசிப்பவர்களுக்கே சொந்தமாக்கி கிரயப்பத்திரம் வழங்க அரசு ஆணை (நிலை) எண் 450, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [கு.மா.1 (1)] துறை நாள் 27-11-1998-இல் உத்திரவிடப்பட்டு அதன்படி குடியிருக்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப்பத்திரம் வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.



2000 மே 18]

**38—**

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

**வினா எண் 27482—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இலாபகரமாக செயல்பட தினந்தோறும் குறைந்த அளவு 50,000 லிட்டர் பால் கொள்முதல் இருக்க வேண்டும். நாளொன்றுக்கு சுமார் 22,018 லிட்டர் பால் உற்பத்தி அளவீட்டினைக் கொண்டு கடலூர் மாவட்டத்தில் தனியே மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க சாத்தியம் இல்லை.

**39—**

## பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 27924—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**40—**

### மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 27925—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**41—**

### ஆவின் பாலகங்கள்

**வினா எண் 29453—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் ஆவின் பாலகங்கள் இருப்பது போன்று கிராமப்புறங்களிலும் ஆவின் பாலகங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புறங்களில் ஆவின் பாலகங்கள் இருப்பது போன்று கிராமப்புறங்களிலும் ஆவின் பாலகங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**42—**

### பால் உற்பத்தி

**வினா எண் 32565—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998-1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய பால் உற்பத்தி எவ்வளவு?

(ஆ) பால் உற்பத்தி அளவில் இந்தியாவில் தமிழ்நாடு எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய நாளொன்றுக்கு சராசரியாக 15.03 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பால் உற்பத்தி அளவில் இந்தியாவில் தமிழ்நாடு நான்காவது நிலையில் உள்ளது.

**43—**

### வேலையளிக்க சிறப்புத் திட்டம்

**வினா எண் 11958—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு வேலையளிக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் தீட்டியுள்ளதா?

53-131—38

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழில் படித்துப் பட்டம்பெற்று, வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 89,166 ஆகும்.*

*(ஆ) போதனா மொழி அடிப்படையில் வேலைவாய்ப்பில் முன்னுரிமையோ மற்றும் சலுகையோ அளிப்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே வழக்கு ஒன்றில் தீர்ப்பு அளித்துள்ள நிலையில், தமிழில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலையளிக்க சிறப்புத் திட்டம் ஏதுமில்லை.*

**44—**

**கட்டடத் தொழிலாளர்கள் காப்பீட்டுத் திட்டம்**

**வினா எண் 20013—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1997-98 ஆம் ஆண்டில் கட்டடத் தொழிலாளர்கள் காப்பீட்டுத் திட்டம், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை தொழிலாளர்கள் காப்பீட்டுத் திட்டத்தினால் பயனடைந்து உள்ளனர்?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை, மதுரை, கோவை மற்றும் 15-6-1997 முதல் சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று மாநகராட்சிகளையும் சேர்த்து தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.*

*(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் விபத்துக் காப்பீட்டுத் தொகை கோரி யாரும் விண்ணப்பிக்கவில்லை. 16-10-1998-ல் திருநெல்வேலி, பாளையங்கோட்டையைச் சார்ந்த பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி ஒருவர் விபத்தில் மரணமடைந்ததால், அவரது நியமனதாரருக்கு ரூ.1,00,000/- விபத்துக் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.*



2000 மே 18]

**45—**

**வீட்டுமனை வழங்குதல்**

**வினா எண் 22679—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூரில் வேலை தேடிவந்து வாடகை வீட்டில் குடியிருக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூரில் வேலை தேடிவந்து வாடகை வீட்டில் குடியிருக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்கும் சிறப்புத் திட்டம் எதுவும் இத்துறையில் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்வி எழாது.*

**46—**

**குழந்தைத் தொழிலாளர்கள்**

**வினா எண் 22682—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் மிக சமீபத்தில் கணக்கெடுப்பு நடத்தியபடி குழந்தைத் தொழிலாளர்கள் எத்தனை பேர் கண்டறியப்பட்டுள்ளனர்?*

*(ஆ) அவர்களின் நலனுக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.*

[2000 மே 18

## அறிக்கை

(அ) உச்சநீதிமன்றக் கட்டளைப்படி 1997 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட மாநிலம் தழுவிய கண்டாய்வின் மூலம் ஊறுபாடுடைய தொழில்களில் 8970 குழந்தைத் தொழிலாளர்களும், ஊறுபாடற்ற தொழில்களில் 9052 குழந்தைத் தொழிலாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர். அதன் பின்னர் நடத்தப்பட்ட துணைக் கண்டாய்வில், ஊறுபாடுடைய தொழில்களில் 1148 குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டனர்.

(ஆ) அவர்களின் நலனுக்காக மாநில குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலநிதி அமைக்கப்பட்டுள்ளது. ஊறுபாடுடைய தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் கண்டறியப்பட்ட 21 மாவட்டங்களில் மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நல நிதி அமைக்கப்பட்டுள்ளது. இந்நல நிதியை அந்தந்த மாவட்டத்தில் பதியப்படும் மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலச் சங்கம் மாவட்ட ஆட்சியரின் கீழ் நிர்வாகிக்கும். இச்சங்கம் ஊறுபாடுடைய, தொழில்களிலிருந்து குழந்தைகளை விடுவித்து, அவர்களுக்கும், ஊறுபாடற்ற தொழில்களிலிருந்து குழந்தைகளுக்கும், கல்வியளிக்கும் பணியை தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் மூலம் செய்து வருகிறது. இதேபோல், ஊறுபாடற்ற தொழில்களில் மட்டும் கண்டறியப்பட்ட, நாகை நீங்கலான, பிற ஏழு மாவட்டங்களில் மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலச் சங்கங்கள் பதியப்பட்டுள்ளன. அச்சங்கம் இக்குழந்தைத் தொழிலாளர்களுக்கும் அவர்தம் வேலையளிப்போரால் கல்வியளிக்க ஆய்வாளர்கள் மூலம் ஏற்பாடு செய்கின்றது.

2. ஊறுபாடுடைய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர் குடும்பத்தில் வயது வந்த நபர் ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படாத நிலையில் அரசு தன் பங்காக ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளிக்கும் ரூ. 5000/- வீதம் மொத்தம் ரூ. 4,74,65,000/- மாநில குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலநிதியில் வைப்பீடு செய்துள்ளது.

3. ஊறுபாடுடை தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்திய வேலையளிப்போருக்கு, குழந்தை ஒன்றுக்கு ரூ. 20,000/-



2000 மே 18]

ஈட்டுத்தொகையாக மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நல நிதியில் செலுத்துமாறு சட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 8 குழந்தைத் தொழிலாளர்களுக்கு ரூ. 1,60,000/- வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4. இதுவரை 2500 குழந்தைகள் ஊறுபாடுடைய பணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, 708 குழந்தைகள் முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வியளிக்கப்படுகின்றனர். மேலும், ஊறுபாடற்ற தொழில்களிலுள்ள குழந்தைகளில் 472 பேருக்கு கல்வியளிக்கப்படுகிறது.

5. சட்ட அறிவிப்பு வழங்கியும் ரூ.20,000/- ஈட்டுத் தொகை செலுத்தாத வேலையளிப்போரிடமிருந்து ஈட்டுத் தொகையை வசூலிப்பதற்கான நெறிமுறையை கோரி, அவர்களின் பட்டியல் உச்ச நீதிமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

6. ஊறுபாடுடைய தொழில்களில் குழந்தைகளை பணியமர்த்திய வேலையளிப்போர்மீது சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும் வழக்குகள் பதியப்பட்டு வருகின்றன.

7. உச்சநீதிமன்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதை தொழிலாளர் ஆணையர் தலைமையில் அவரது அலுவலகத்தில் ரூ.7,70,128/- செலவில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழு கண்காணித்து வருகிறது.

47—

## குறைந்தபட்ச ஊதியம்

**வினா எண் 22700—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் மறுநிர்ணயம் செய்து அறிவிக்கை செய்த சம்பளம் - பஞ்சப்படி சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பெறுகிறார்களா என்பதை அரசு எப்படி கண்காணிக்கிறது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் மறுநிர்ணயம் செய்து அறிவிக்கை செய்யப்பட்ட அரசாணையின் நகல் தொழிலாளர் துறையைச் சார்ந்த அனைத்து தொழிலாளர் துணை ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்களுக்கும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வருக்கும், அனைத்து மத்திய தொழிற் சங்கங்களின் பொதுச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. தொழிலாளர் ஆய்வர்களை அந்த அரசாணையை அவர்கள் எல்லையில் உள்ள தொழிலாளர் உதவி ஆய்வர் மற்றும் தொழிலாளர் துணை ஆய்வர்களுக்கும் நகல் அனுப்பும்படியும் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புடைய நிறுவனங்கள்/சங்கங்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். குறைந்த பட்ச ஊதியச் சட்ட அட்டவணையிலுள்ள 60 தொழில் இனங்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த 60 தொழில் இனங்களில் கீழே குறிப்பிடப்பட்ட 8 தொழில் இனங்கள் மட்டுமே தொழிலாளர் துறையைச் சார்ந்ததாகும். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமலாக்கம் வருவாய் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. வனத் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமலாக்கம் வனத் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. மற்ற தொழில் இனங்களைப் பொறுத்தவரை தொழிற்சாலை ஆய்வகத் துறை குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமலாக்கத்தை மேற்கொண்டு வருகின்றது:-

(1) கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்,

(2) ஹோட்டல்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்,



2000 மே 18]

(3) பொது போக்குவரத்து நிறுவனத் தொழில்,

(4) சினிமாத் தொழில்,

(5) மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள் தொழில்,

(6) பீடி சுற்றுதல் மற்றும் பீடி தயாரிப்புத் தொழில்,

(7) தோட்ட நிறுவனங்கள் தொழில்,

(8) சாலைகள் அமைத்தல் மற்றும் கட்டுமானப் பணிகள்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி கீழ்க்கண்ட அலுவலர்கள் ஆய்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்:-

(1) தொழிலாளர் ஆய்வர்கள்,

(2) தொழிலாளர் துணை ஆய்வர்கள்,

(3) தொழிலாளர் உதவி ஆய்வர்கள்,

(4) தொழிற்சாலை ஆய்வர்கள்.

தொழிலாளர் துறையை பொறுத்தமட்டில், அனைத்து தொழிலாளர் உதவி மற்றும் துணை ஆய்வர்கள் குறைந்தபட்ச ஊதிய சட்ட அமலாக்கம் தொடர்பாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளுவதுடன் ஒவ்வொரு மாதமும் மேலே குறிப்பிடப்பட்ட தோட்ட நிறுவனங்கள் மற்றும் பீடி சுற்றுதல் மற்றும் தயாரிப்பு தொழில் நீங்கலாக இதர 6 தொழில் இனங்களில், ஏதேனும் ஒரு தொழில் இனம் குறித்து குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் 3 நாட்களுக்கு சிறப்பாய்வு மேற்கொண்டு குறைந்தபட்ச ஊதியம் வழங்காத நிறுவனங்கள்மீது கேட்பு மனுக்களை சம்பந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆணையர் முன்பாக தாக்கல் செய்யவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

[2000 மே 18

**48—**

**அறை ஒதுக்கீடு**

**வினா எண் 22705—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நீதிமன்றங்களில் Labour Laws Practitioners Association-க்காக ஓர் அறை ஒதுக்கீடு செய்யுமாறு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**49—**

**மில்லைத் திறத்தல்**

**வினா எண் 24339—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லைத் திறக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் கடன்காரர் ஒருவர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் இந்த ஆலையினைக் கலைக்க உத்தரவிடப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற கலைத்தல் அலுவலரின் (Official Liquidator) பொறுப்பிலுள்ளதால், மேற்கண்ட ஆலையினைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2000 மே 18]

**50—**

**விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள்**

**வினா எண் 24733—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ள விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) இந்த நெசவுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலச் சட்ட விதிமுறைகள் அனுசரிக்கப்படுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ் நாட்டில் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ள விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் 537 உள்ளன.

(ஆ) இந்நெசவுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலச் சட்ட விதிமுறைகள் அனுசரிக்கப்படுகின்றன.

**51—**

**பணி நியமனங்கள்**

**வினா எண் 25551—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் பணி நியமனங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து மூப்பு அடிப்படையுடன் வயது வரம்பு முடிவடையும் தருவாயிலுள்ளோர் நலத்தையும் கருத்தில் கொண்டு அரசு பணி நியமனங்களை பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் பணி காலியிடங்களுக்கு மனுதாரர்கள் இன ஒதுக்கீடு, பதிவு மூப்பு, வேலையளிப்பவர்கள் தெரிவிக்கும் கல்வி, வயது வரம்பு மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றனர். ஆனால், வயது வரம்பு முடியும் தருவாயிலுள்ள பதிவுதாரர்களுக்கென தனியே எவ்விதமான சலுகையும் தற்போது நடைமுறையிலுள்ள விதிகளில் இல்லை.

இருப்பினும், பள்ளியிறுதி வகுப்புக்குகீழ் கல்வித் தகுதியுடையவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து நீண்ட நாள் காத்திருந்து முதல் பரிந்துரை வாய்ப்பு வரும்போது உச்ச வயது வரம்பைக் கடந்த நிலையிலிருந்தால், அவர்கள் பதிவு செய்து காத்திருக்கும் காலத்துக்குத் தகுந்தவாறு ஒவ்வொரு மூன்றாண்டுக்கும் ஒரு வருடம் என்று கணக்கிட்டு அதிகபட்சம் 5 வருடங்களுக்கு மிகாமல் (Subject to minimum of 5 years) வயது வரம்பில் சலுகை அளிக்கலாம் என்று முடிவெடுத்து 30-4-1999 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதற்கான தக்க நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

**52—**

### எடை அளவுகள்

**வினா எண் 26006—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடை அளவுகளைச் சோதனைக்குட்படுத்தாத வர்த்தக நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஈரோடு மாவட்டத்தில் இத்தகைய குற்றங்களுக்காக கடந்த ஆண்டில் எத்தனை பேர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தொழிலாளர் துறை ஆய்வர்களால் அவரவர் ஆட்சி எல்லையில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களும் எடையளவுச் சட்டத்தின்கீழ் காலம் தவறாமல் தொடர்ந்து தீவிரமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சோதனைகளின்போது ஆண்டுக்கு ஒருமுறை பரிசீலனை செய்து முத்திரையிடப்படாத எடையளவுகள் உபயோகத்தில் இருப்பது காணப்பட்டால், அவை தொழிலாளர் துறை ஆய்வர்களால் கைப்பற்றப்பட்டு உரிமையாளர்களின்மீது சட்ட விதிகட்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1998 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் எடையளவுச் சட்டத்தின்கீழ் 20,923 வணிக நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றில் 1,113 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.2,33,300 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**53—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 27363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணிக்காலத்தில் உயிர் துறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு கருணை அடிப்படையில் வழங்க அரசு சட்டப்படி ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணிக்காலத்தில் இறந்துபோகும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கு தொழிலாளர் நலச் சட்டங்களிலோ அல்லது நிலை ஆணை சட்டத்தின் மாதிரி நிலை ஆணைகளிலோ வழிவகை ஏதும் இல்லை.

[2000 மே 18

54—

### வீட்டுவேலைத் தொழிலாளர்கள்

**வினா எண் 27990—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு உடலுழைப்போர் சட்டம், 1982-ன் அட்டவணையில் சேர்க்கும்படி வீட்டுவேலைத் தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வீட்டுவேலைத் தொழிலை, 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்ட அட்டவணையில் வரிசை எண் 56 ஆக சேர்க்க வகை செய்யும் பொருட்டு 1-6-1999 அன்று முதனிலை அறிக்கை ஒன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்மீது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கருத்துக்கள் பெற அளிக்கப்பட்ட கால அவகாசம் 31-8-1999 அன்று முடிவடையும், அதன் பிறகு இறுதி அறிவிக்கை வெளியிடப்படும்.

55—

### உறுப்பினர் சந்தா

**வினா எண் 28382—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அமைப்பு சாராத தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொழிலாளர்களின் உறுப்பினர் சந்தாவை வருடம் ஒருமுறை என்று மாற்றி அமைக்க அரசு முன்வருமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலனுக்கென அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மாத சந்தா தொகை ரூ. 20-ஐ, பல மாதங்களுக்கும் சேர்த்து ஒரே தவணையில் செலுத்த அனுமதிப்பது குறித்த செயற்குறிப்பு வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

56—

### தொழிற்சாலையைத் திறத்தல்

**வினா எண் 28607—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மெட்டல் பாக்ஸ் நிறுவனம் திறப்பது தொடர்பாக டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் டெல்லி உயர்நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

### தொழிற்சாலை திறப்பு

**வினா எண் 28615—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சதர்ன் ஸ்விட்ச் கியர் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிலாளர் ஆணையர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன்கீழ் 28-6-1998 அன்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 16-8-1999 முதல் ஆலை முழு அளவில் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**58—**

**பொறியியல் தொழிற்சாலைகள்**

**வினா எண் 28620—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பொறியியல் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றால் வேலையிழந்த தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆறு.

(ஆ) சுமார் 2,265 தொழிலாளர்கள்.

**59—**

**தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்**

**வினா எண் 29122—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 60 ஆண்டு பூர்த்தியான தொழிலாளர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வருங்கால வைப்புநிதித் திட்டத்தின்கீழ் வரும் அனைத்து தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்கள் 58 வயதை அடைந்தாலே, ஓய்வூதியம் பெற தகுதியுடையவராகின்றனர்.

(ஆ) இதைத் தவிர்த்து அமைப்பு ரீதியற்ற 43 தொழில் இனங்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கும் ஓய்வூதியம் உள்பட பல சலுகைகள் அளித்தல் குறித்து தமிழ்நாடு உடல் உழைப்போர் நல வாரியம் ஒன்று அரசால் அமைக்கப்பட்டு அந்த வாரியம் இது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதேபோல் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் ஒன்றும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கி வருகிறது. இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் குறித்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**60—**

**லெவியை உயர்த்துதல்**

**வினா எண் 29129—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமான வரைபட அனுமதிக்கு முன் கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்கு பெறப்படும் லெவியை 2% ஆக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

[2000 மே 18

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

61—

**காப்புறுதி மற்றும் சேமநலத் திட்டங்கள்**

**வினா எண் 29131—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், மருத்துவ வசதி, நோய்க்கால உதவி, பிரசவ கால ஊதியம் தருகிற முறையில் தொழிலாளர் மாநில காப்புறுதி மற்றும் சேமநலத் திட்டங்களை அமலாக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டடத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், மருத்துவ வசதி, நோய்க்கால உதவி, பிரசவ கால ஊதியம் தருகிற வகையில் தொழிலாளர் மாநில காப்புறுதித் திட்டம் அமல்படுத்துவது தொடர்பாக கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் கூட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டு, சென்னை, இ.எஸ்.ஐ. இயக்குநருக்கு எழுதப்பட்டது. அதற்கு அவர் கட்டுமான இடங்களில் வேலையில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. சட்டம் பொருந்தாது எனவும், பொருத்தமானதாக இருக்காது எனவும் தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பாக புதுடில்லியில் உள்ள இ.எஸ்.ஐ. இயக்குநர், வாரியத்தினால் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளார். மற்றும் சேமநலத் திட்டம் அமல்படுத்துவது தொடர்பாகவும் வாரியத்தின் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. வாரியத்திற்கும், கட்டுமான தொழிலாளிக்கும் இடையே முதலாளி-தொழிலாளி உறவு இல்லாத சூழ்நிலையில் வருங்கால வைப்புநிதி போன்ற திட்டம் ஒன்றினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என வாரியக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து வாரியம் பரிசீலித்து முடிவு எடுத்தபின் அரசிற்கு செயற்குறிப்பு பெறப்பட்டு அரசால் இறுதி முடிவெடுக்கப்படும்.



2000 மே 18]

62—

**மழைக்கால நிவாரணம்**

**வினா எண் 29132—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டடத் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது. மீனவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மழைக் காலங்களில் வேலை இல்லாத 3 மாதங்களுக்கு அதாவது அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் ரூ. 400 வீதம் மழைக்கால நிவாரணம் கொடுக்கலாம் என்பது குறித்து பரிசீலித்த அரசு, இத்திட்டத்தை செயல்படுத்த கட்டடத் தொழிலாளர் நல வாரியம் எவ்வளவு நிதி அளிக்கும், மாநில அரசு எவ்வளவு அளிக்க வேண்டும், மத்திய அரசு நிதி ஏதும் அளிக்கப்பட வேண்டுமென்றால் எவ்வளவு அளிக்க வேண்டும் போன்ற விவரங்களை அரசுக்கு தெரியப்படுத்துமாறும், மேலும் இத்திட்டத்திற்கு நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்திருப்பின் அதன் விவரங்களையும் அரசுக்கு அனுப்பும்படியும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது. இதுகுறித்து வாரியக் கூட்டத்தில் விவாதித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்ட பிறகு, அரசு இதனை பரிசீலனை செய்யும்.

63—

**நிவாரணத் தொகை**

**வினா எண் 31132—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலையில்லாத காலங்களுக்கு நிவாரணத் தொகை வேலை கிடைக்காத பட்டதாரிகளுக்கும், பட்டயதாரிகளுக்கும் எவ்வளவு பேருக்கு 1998-99-ல் அரசு வழங்கியுள்ளது?*

*(ஆ) அதை அதிகப்படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வேலையில்லாத நபர்களுக்கு 1-7-1980 முதல் வழங்கப்பட்டு வந்த வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் 1995-1998 நிதியாண்டோடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டதால், 1998-99-இல் பட்டதாரிகளுக்கும், பட்டயதாரிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் வினா (ஆ)-விற்கு பதில் அளிக்கத் தேவை எழவில்லை.

**64—**

### உதவிகள்

**வினா எண் 31136—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கட்டடம் கட்டும் தொழிலாளர்களுக்கு, பீடித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வுகால உதவிகள், மருத்துவ உதவிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதைப் பற்றிய விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வுகால உதவியாக ஓய்வூதியத் திட்டம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்வதற்கான திட்டம் ஆகிய இரண்டும் அமல்படுத்துவது குறித்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.





**65—**

### கடன்கள் வழங்குதல்

**வினா எண் 31189—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க வழங்கப்படும் கடன்களை உடனுக்குடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில் படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்கி வேலை செய்ய கடன் உதவி வழங்கும் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயதொழில் தொடங்க பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கடன் வழங்கப்படுகிறது. பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் சிறுதொழில் துவங்க 1999-2000 ஆம் நிதியாண்டிலிருந்து நபர் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் வரையில் வங்கிகளின் மூலம் நிதி வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்தவர்கள் பயன்பெறலாம். தொழிற் கல்விச் சான்று பெற்றவர்கள் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட

[2000 மே 18

குறைந்தபட்சம் ஆறுமாத கால தொழிற் கல்வி பெற்றவர்கள் மற்றும் 35 வயதிற்குள் (பெண்கள்) தாழ்த்தப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றோர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு 45 வயதிற்குள் உள்ளவர்கள் தகுதி பெறுவர்.

ஆதிதிராவிட மனுதாரர்களின் பொருளாதார நிலையில் மேம்படுத்த தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் தாட்கோ நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 25,000/- அல்லது 30% (இவற்றில் குறைந்த தொகை) மானியத்துடன் 3 பிரிவுகளாக ரூ. 7.50 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் லாரி, டிராக்டர், விசை உழவு இயந்திரம், வாடகைக் கார், மினி வேன், ஆட்டோ, கோழிப்பண்ணை, சிறு பால் பண்ணை, துணி ஏற்றுமதி, கருங்கல் நிறுவனம், கணிப்பொறி நிலையம், நகலக இயந்திரம் ஆகிய தொழில்களை நிறுவலாம். மேலும் தாட்கோ நிறுவனம் ஆதிதிராவிடப் பெண்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 50% மானியம், 20% விளிம்புத் தொகை (Margin Money) கடனுடன் நிதியுதவி அளித்து சுய உதவிக் குழுக்கள் (Self Help Group) அமைத்து ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 5.00 இலட்சம் வரை நிதியுதவி வழங்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**66—**

### தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு

**வினா எண் 31252—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் நீண்டகாலமாக மூடிக் கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை உடனடியாகத் திறந்து, தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் ஆலை 1-7-1992 முதல் இயங்காமல் உள்ளது. இதனால் 2,615 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. உயர்நீதிமன்றம்*



2000 மே 18]

*இவ்வாலையைக் கலைக்க உத்தரவிட்டுள்ள நிலையில் இவ்வாலையை திறப்பது குறித்து இத்துறையில் நடவடிக்கை ஏதும் இல்லை.*

**67—**

### முன்னுரிமை

**வினா எண் 31256—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து நீண்டகாலமாக வேலையில்லாமலிருக்கும் வேலையற்றோருக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*நீண்ட நாள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவேடுகளில் வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கும் மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது கருத்து வடிவில் மட்டுமின்றி நடைமுறையிலும் ஏற்புடையதாக அமையாது.*

**68—**

### தொழிலாளர் நலத் திட்டங்கள்

**வினா எண் 31257—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தினை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

(ஆ) உடலுழைப்புத் தொழிலாளர் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த "தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூக பாதுகாப்பு வாரியம்" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்திற்கு ரூ. 40 லட்சம் மான்யம் (Grant) வழங்கி, 13-10-1999-ல் அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

69—

### சென்னை பின்னி ஆலை

**வினா எண் 31561—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பின்னி மில்லை திறந்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆலை திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பி & சி மில் நிர்வாகம் தாக்கல் செய்துள்ள புனரமைப்புத் திட்டம் பி.ஐ.எப்.ஆர். முன்பு நிலுவையில் உள்ளது. புனரமைப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே ஆலை மீண்டும் திறந்து இயங்க வாய்ப்புள்ளது.

70—

### எல்நெட் நிறுவனம்

**வினா எண் 31562—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் எல்நெட் நிறுவனம் மூடப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.



71—

### ஊதிய உயர்வு

**வினா எண் 31568—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்து புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் மற்றும் தொழிற் சங்கங்கள் முன்னிலையில் 29-7-1999 அன்று 1947ஆம் வருட தொழிற் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 18(1)-ன்கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

72—

### பெண் தொழிலாளர்கள்

**வினா எண் 31569—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் தொழிலாளர் எண்ணிக்கை தற்போது தமிழ்நாட்டில் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) பெண் தொழிலாளர்களுக்கென தனி நலச் சட்டமியற்ற அரசு கருதியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

[2000 மே 18

(அ) 1998 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தவிர இதர கடை/நிறுவனங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| கடைகள் | - | 21,894 |
| வர்த்தக நிறுவனங்கள் | - | 10,896 |
| திரையரங்குகள் | - | 220 |
| பொழுதுபோக்கு இடங்கள் | - | 16 |
| பீடி தொழிற் நிறுவனங்கள் | - | 144 |
| ஹோம் ஒர்க்கர்ஸ் | - | 1,71,423 |
| மலைத் தோட்டங்கள் | | |
| பதிவு பெற்றவை | - | 34,162 |
| பதிவு பெறாதவை | - | 6,967 |

(ஆ) பெண்களின் நலம் காக்க இயற்றப்பட்ட கீழ்க்காணும் இரு சட்டங்கள் தொழில் துறையில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது:

(1) சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் சம ஊதிய விதிகள் 1976.

(2) மகப்பேறு நலச் சட்டம் 1961 மற்றும் சென்னை மகப்பேறு கால விதிகள் 1967.

**73—**

### ஆலைத் தொழிலாளர்கள்

**வினா எண் 32349—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டதற்கு அரசு கமிட்டி அமைத்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள இயங்காமல் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் ஒவ்வொரு மாதமும் தலா ரூ. 250/- வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டம், அரசு ஆணை (பல்வகை) எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தகுதியுள்ள தொழில் நிறுவனங்களைத் தேர்வு செய்ய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் தொழில், கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர், நிதி ஆகிய துறைகளைச் சேர்ந்த அரசுச் செயலாளர்கள், தொழிலாளர் ஆணையர், தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர், வைப்பு நிதி மண்டல ஆணையர், மாநில ஈட்டுறுதித் திட்ட மண்டல இயக்குநர், தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) மற்றும் ஆறு மத்திய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

**74—**

### சட்ட ஏற்பாடுகள்

**வினா எண் 33310—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்களின் வேலைநீக்க சம்பவங்களில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் முடிவு காணப் பொருத்தமான சட்ட ஏற்பாடு செய்ய அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர்களின் வேலை நீக்கம் தொடர்பான வழக்குகளில் விரைந்து தீர்வு காணவேண்டி, தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 10(2ஏ)-ன்கீழ் தொழில் நீதிமன்றம் 3 மாதங்களுக்குள் வழக்குகளை முடித்து அரசுக்கு தீர்ப்பினை அனுப்ப வேண்டுமென வழிவகை செய்யப்பட்டுள்ளதால், தொழிலாளர் வேலை நீக்க சம்பவங்களில், குறிப்பிட்ட கால வரம்பிற்குள் முடிவு காண பொருத்தமான சட்ட ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை.

75—

## தனலட்சுமி மில்

**வினா எண் 34807—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் மூடப்பட்டுள்ள தனலட்சுமி மில்லைத் திறப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி நெருக்கடி காரணமாக தனலட்சுமி மில்ஸ் நிறுவனம் இயங்காமலுள்ளது. எனவே, இதனை மீண்டும் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனினும், இப்பிரச்சினை அரசு ஆணை (டி) எண் 980, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 1-11-1999-ல் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளது. இவ்வாலை குறித்த புனரமைப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இதனை மீண்டும் திறக்க வாய்ப்புள்ளது.

76—

## சட்ட உரிமைகள் அமலாக்குதல்

**வினா எண் 34861—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) நிறுவனத்தில் 1947-12(3) ஒப்பந்த மீறல், சட்ட உரிமைகள் அமலாக்க நிலை குறித்து அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நிலை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) நிறுவனத்தில் 12(3) ஒப்பந்த மீறல், சட்ட உரிமைகள் அமலாக்க நிலை குறித்து புகார் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

77—

## நிதி நிறுவனங்கள்

**வினா எண் 21694—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98 ஜுன் மாதம் வரை மோசடி செய்த எத்தனை நிதி நிறுவனங்களின் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 69 நிதி நிறுவனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) ரூ. 210.088 கோடி மோசடி செய்யப்பட்டுள்ளது.

78—

## பெண் குற்றவாளிகள்

**வினா எண் 23138—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் மத்திய சிறை, கிளைச் சிறைகளில் பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும் சிறையில் உள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எத்தனை குழந்தைகள் அப்படி சிறைப்பட்டுள்ளனர்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் மத்திய சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் பெண்களுக்கான தனிச் சிறைச் சாலைகளில் பெண் குற்றவாளிகளின் குழந்தைகள் உள்ளனர்.*

*(ஆ) 67 குழந்தைகள் அப்படி சிறைப்பட்டுள்ளனர்.*

**79—**

**குண்டர் சட்டத்தின்கீழ் கைது**

**வினா எண் 23160—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98-ல் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் 1997 ஆம் ஆண்டில் 1,780 குற்றவாளிகளும் 1998 ஆம் ஆண்டில் 2,126 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) மேற்படி தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டவர்களில், 1997-ல் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் 19 நபர்களும், 1998-ல் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் 65 நபர்களும் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

**80—**

**சிறைவாசிகள்**

**வினா எண் 23171—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

*(அ) தமிழ்நாடு சிறைகளில் 8 ஆண்டுகள் தண்டனைக் காலம் முடித்த சிறைவாசிகள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்களின் சிறை வாழ்க்கை நடத்தை விதம் எப்படி இருக்கிறது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) 290 பேர்.*

*(ஆ) 290 சிறைவாசிகளில் 15 நபர்கள் தவிர ஏனைய 275 சிறைவாசிகளின் நடத்தை விதம் தற்போது திருப்திகரமாக உள்ளது.*

**81—**

**மாணவிகளுக்கு விடுதி**

**வினா எண் 23391—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரிலுள்ள அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தற்போது பரிசீலனையில் இல்லை.

**82—**

**நீதித் துறை பயிற்சி நிலையம்**

**வினா எண் 23494—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அரசு வழக்கறிஞர்கள், நீதிபதிகள் போன்றோர்க்குப் பயிற்சி அளிக்க "நீதித் துறை பயிற்சி நிலையம்" (Judicial Academy) ஒன்று தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படுமா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசு வழக்கறிஞர்கள், நீதிபதிகள் போன்றோர்க்கு பயிற்சி அளிக்க "நீதித் துறை பயிற்சி நிலையம்" (Judicial Academy) ஒன்று கட்டுவது சம்மந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சென்னைக்கு அருகில் பள்ளிக்கரணை கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**83—**

**நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 24105—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில் தனித் தனியாக பல்வேறு இடங்களில் உள்ள நீதிமன்றங்களை ஒரே இடத்தில் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைந்து கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**84—**

**விசாரணைக் கைதிகள்**

**வினா எண் 24293—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) நமது மாநிலத்தில் ஆறு மாதங்களுக்கும் மேலாக சிறையில் உள்ள விசாரணைக் கைதிகள் எத்தனை பேர்? (30-10-1998 தேதியில்)

(ஆ) ஓராண்டிற்கும் மேலாக இருப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) நமது மாநிலத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ள விசாரணைக் கைதிகள் எண்ணிக்கை 1,348 (30-10-1998 தேதியில்).

(ஆ) ஓராண்டிற்கும் மேலாக இருப்பவர்களின் எண்ணிக்கை 587.

**85—**

**கல்வியைத் தொடர வசதி**

**வினா எண் 24290—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் கைதிகளாக இருப்பவர்களுக்கு தங்கள் கல்வியைத் தொடர வசதி செய்து தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தற்போது எவ்வளவு பேர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது 1,467 பேர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள்.

**86—**

**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 25314—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 25351—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள ஆலந்தூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**ஒருங்கிணைந்த நீதிமன்றம்**

**வினா எண் 25353—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டும் பணி 9-2-98-ல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டடப் பணியில் முக்கிய கட்டுமானப் பணிகள் யாவும் முடிவுற்றன. துணைப் பணிகள் மற்றும் இதர சிறு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

**89—**

**மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி**

**வினா எண் 26169—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**90—**

**ஓமலூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 27351—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**91—**

**கஞ்சா விற்பனை**

**வினா எண் 27386—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய கஞ்சா விற்றதாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய கஞ்சா விற்றதாக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,896 பேர்கள்.

(ஆ) அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு ரூ. 20,97,62,645/- (ரூபாய் இருபது கோடியே தொன்னூற்றேழு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து மட்டும்).

**92—**

**மத்திய சிறைச்சாலை**

**வினா எண் 27855—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் சேலத்தில் பெண்களுக்கான மத்திய சிறைச்சாலை இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், புதிதாக பெண்களுக்காக சேலத்தில் மத்திய சிறைச்சாலையை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) பெண்கள் தனிக் கிளைச் சிறை சேலத்தில் அமைக்க வேண்டிய செயற்குறிப்பு தற்போது இல்லை.

**93—**

**குற்றவியல் நீதிமன்றம்**

**வினா எண் 27858—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி வட்டத்தில் குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டத்தில் குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

**நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் வசதி**

**வினா எண் 29760—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் கூடும் அறையும் (Bar Assosication Room) நூலகக் கட்டடமும் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2000 மே 18

(ஆ) ஆம் எனில், விரைவில் இவ்விரு கட்டடங்களைக் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் சங்கக் கட்டடமும், நூலகக் கட்டடமும் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

**சார்பு நீதிமன்றம்**

**வினா எண் 30791—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர்:**

பரமக்குடியில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

**சாத்தான்குளத்தில் நீதிமன்றம்**

**வினா எண் 30932—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் 2½ ஆண்டுகளுக்கு முன்பு புதிய நீதிமன்றம் துவங்கப்படும் என்று கூறியும் இன்னும் தொடங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் 1997ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 9-1-2000 முதல் இயங்கி வருகிறது.

97—

**சிறைச்சாலைகள்**

**வினா எண் 31809—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் தேசபக்தி, தெய்வ பக்தி, ஒழுக்கம் போன்றவைககளைப் போதிக்க அரசு ஏற்பாடுகள் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பலன் எந்த அளவுக்கு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட நடைமுறைகள் சிறைவாசிகள் தேசபக்தி, தெய்வபக்தி மற்றும் ஒழுக்கத்துடன் சிறையில் இருக்கும் காலங்களில் மட்டுமல்லாது, விடுதலைக்குப் பின்னும் அத்தகைய நெறிமுறையினையே கடைப்பிடித்து புதிய வாழ்வினை ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது.

98—

**தொழிற் பயிற்சி**

**வினா எண் 329[illegible]—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறைக் கைதிகள் விடுதலையாகிச் செல்லும்போது சுய தொழில் தொடங்கும் வகையில் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த சிறைச்சாலையில் பயிற்சி நடந்து வருகிறது?

[2000 மே 18

(இ) எவ்வளவு கைதிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

அ, ஆ மற்றும் இ சிறைவாசிகள் விடுதலைக்குப் பிறகு சுயதொழில் தொடங்க சிறைச்சாலையில் உள்ள தொழிற்சாலைகளில் பல்வேறு தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**99—**

**இலவச வேட்டி சேலை**

**வினா எண் 21141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கப்பட்ட இலவச வேட்டி சேலைகளின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) எவ்வளவு பேருக்கு கொடுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1998ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கு வழங்கப்பட்ட இலவச சேலைகள் வேட்டிகளின் மதிப்பு ரூ.92.33 கோடி ஆகும்.

(ஆ) 72,54,112 பெண்கள் மற்றும் 68,28,428 ஆண்கள் ஆகியோர்களுக்கு பொங்கல் 1998-க்கு இலவச சேலைகள் வேட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**100—**

**துணிகள் ஏற்றுமதி**

**வினா எண் 21394—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலிருந்து கைத்தறி, விசைத்தறி ஜவுளிகள் கடந்த 1997-98ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு அரசு நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட மதிப்பு தொகை எவ்வளவு?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் இருந்து கைத்தறி, விசைத்தறி ஜவுளிகள் கடந்த 1997-98ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஏதும் செய்யப்படவில்லை. ஆனால் சேலம் மாவட்டத்திலிருந்து அகில இந்திய கைத்தறி மாளிகை (All India Handloom Fabric Marketing Society, Popularly known as Handloom House) மூலமா ரூ.1.25 கோடி மதிப்பிற்கு விசைத்தறி துணிகள் கொள்முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**101—**

**சட்டத்தை கடுமையாக்குதல்**

**வினா எண் 21673—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்துமாறு மாநில அரசை மத்திய அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) ஆம். மத்திய அரசு தனது 18-6-1998 நாளிட்ட கடிதத்தில், 1998-99 ஆண்டிற்கு தமிழ்நாடு அமலாக்க அலுவலகத்திற்கு 5,780 விசைத்தறிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் ஒரு குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த ஏதுவாக மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு துணை இயக்குநர் அளவில் ஒரு அமலாக்க அலுவலகமும், மாவட்ட அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி இயக்குநர் அளவில் உதவி அமலாக்க அலுவலகங்களும் துவக்கப்பட்டு அமலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**102—**

### கைத்தறி ரகங்கள்

**வினா எண் 22086—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை கைத்தறியில் தயாரிப்பதை உறுதிப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு துணை இயக்குநர் அளவில் ஒரு அமலாக்க அலுவலகமும், மாவட்ட அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி இயக்குநர் அளவில் உதவி அமலாக்க அலுவலகங்களும் துவக்கப்பட்டு அமலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில் விசைத்தறியாளர்களின் அமைப்பின் தலைவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில், கைத்தறி ரக ஒதுக்கீட்டினை மீறுபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் எடுப்பதிலிருந்து ரிட் மனு எண் 7956/98, நாள் 2-6-1998-ல் தடையுத்தரவு பெற்றனர். அமலாக்க அலுவலகம் மேற்கொண்ட தீவிர முயற்சியினால் தடை உத்தரவுகள் 9-9-1998-ல் நீக்கப்பட்டது. இதனையடுத்து அமலாக்க அலுவலகங்களின் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக விசைத்தறிகள் பெருமளவில் உள்ள பகுதிகளில் விசைத்தறியாளர்களைக் கொண்டு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**103—**

### கோ-ஆப்டெக்ஸ்

**வினா எண் 24239—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 1992ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை தமிழக அரசு நிறுவனமான கொடைக்கானல் கோ-ஆப்டெக்ஸில் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கொடைக்கானல் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 1992ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு முடிய தீர்த்த சரக்குகள், ரொக்கம், முறைகேடான கடன் விற்பனை மற்றும் இதர இனங்கள் மூலம் ரூ.37.85 இலட்சம் கையாடல் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**104—**

### கைத்தறி ரகங்களை அதிகரித்தல்

**வினா எண் 26712—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிகளில் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட ரகங்களை அதிகரிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**105—**

### விதிகளை தளர்த்துதல்

**வினா எண் 28223—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) மகாராஷ்டிரா மாநிலத்தைவிட அதிக அளவில் தமிழ்நாட்டில் விசைத்தறிகளை அதிகப்படுத்தி, முதல் நிலைக்குக் கொண்டுவர அரசு விசைத்தறி போடுவதற்கான விதிமுறைகளைத் தளர்த்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இது சம்பந்தமான விதிமுறைகள் ஏற்கெனவே தளர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) துணிநூல் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) ஆணை 1993-ன்கீழ் 2-4-1993 முதல் விதிமுறைகள் தளர்த்தப்பட்டு விசைத்தறிகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை நிறுத்தப்பட்டது. தற்போது விசைத்தறி உரிமையாளர்கள் தங்களுக்குத் தேவையான விசைத்தறிகளை நிறுவியபின் ஒரு மாத காலத்திற்குள் ரூ. 1000 செலுத்தி படிவம்-2-ல் விண்ணப்பித்து தகவல் குறிப்பு ஒப்புதல் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**106—**

## திருப்பூரில் கைத்தறி ரகங்கள்

**வினா எண் 29561—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் இயங்கும் கைத்தறி ரகங்களை விசைத்தறிகளில் செய்வதைத் தடுக்கும் பிரிவு செயல்பட்டு வருகிறதா?

(ஆ) இதுவரை எத்தனை முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட 11 ரகங்களை முனைப்புடன் செயல்படுத்த திருப்பூரில் 1998 ஏப்ரல் முதல் ஒரு உதவி அமலாக்க அலுவலகம் செயல்பட்டு வருகிறது.



2000 மே 18]

(ஆ) மேற்படி திருப்பூர் அலுவலகத்திற்கு கோவை மற்றும் உதகமண்டலம் மாவட்டங்கள் விவகார எல்லையாகும். 1998-99-ல் இந்த அலுவலகம் 6,944 விசைத்தறிகளைப் பார்வையிட்டு 4 விசைத்தறி உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் இரண்டு விசைத்தறி உரிமையாளர்கள் அவிநாசி நீதிமன்றத்தால் முறையே ரூ. 4,000 மற்றும் ரூ.5,000 ஆக அபராதம் விதித்து தண்டிக்கப்பட்டனர். மீதமுள்ள 2 வழக்குகள் கூடிய சீக்கிரம் முடிவுக்கு கொண்டு வரப்படும். மேலும் 1999-2000 ஆம் ஆண்டில் இதுவரை இவ்வலுவலகம் 4,418 விசைத்தறிகளை ஆய்வு செய்துள்ளது.

**107—**

## அடையாள அட்டை

**வினா எண் 30991—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் அடையாள அட்டை பெற்றுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1,75,279 சங்க உறுப்பினர்களுக்கு நாளது தேதி வரையிலும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**108—**

## நூல் ஏற்றுமதி

**வினா எண் 30984—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நூல் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் நூல் ஏற்றுமதி மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் கட்டப்பட்ட அன்னியச் செலாவணி தோராயமாக பின்வருமாறு—

| ஆண்டு | ரூபாய் கோடியில் |
|---|---|
| *1996* | *1,671.58* |
| *1997* | *2,122.49* |
| *1998* | *2,053.90* |

**109—**

**மானியம்**

**வினா எண் 32479—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-2000 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், கர்மவீரர் காமராசர் ஆகியோர் பிறந்த நாளை முன்னிட்டு மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து கைத்தறி துணி கோ-ஆப்டெக்ஸ் விற்பனைக்கு அரசு எவ்வளவு மானியம் வழங்கியுள்ளது?

(ஆ) இதில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி துணி வகைகளுக்கு ஓர் ஆண்டில் 100 நாட்களுக்கு தள்ளுபடி வழங்கி வந்த காலகட்டத்தில், தீபாவளி, பொங்கல், ரம்சான் போன்ற பண்டிகை காலங்கள் மற்றும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், கர்மவீரர் காமராசர் ஆகியோரின் பிறந்த தினங்களுக்கும், தள்ளுபடி மான்யம் அரசினால் வழங்கப்பட்டு வந்தது. இந்த முறை கடந்த 1996-97ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. ஆனால் 1-4-1997 முதல் கைத்தறி துணிகள் விற்பனை மீது ஆண்டு முழுவதும் தள்ளுபடி மான்யம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி,



1998-99 மற்றும் 1999-2000 நிதி ஆண்டுகளில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) கீழ்க்கண்டவாறு தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு | தள்ளுபடி மான்யம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது |
|---|---|
| *1998-99* | *ரூ.5,99,73,236.00* |
| *1999-2000* | *ரூ.13,72,48,203.00* |

(ஆ) 1998-99 மற்றும் 1999-2000 நிதியாண்டுகளுக்கு தள்ளுபடி மான்யம் மற்றும் தள்ளுபடி மான்யம் அல்லாத இனங்களுக்கும் மைய அரசினால் வழங்கப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூ.2,097.55 மற்றும் 2,098.20 இலட்சங்கள் ஆகும். இவற்றில் 1998-99 ஆம் ஆண்டிற்கு மட்டும் இதுவரை ரூ. 600.00 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**110—**

**வட்டி சதவிகிதத்தைக் குறைத்தல்**

**வினா எண் 21652—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடன் தொகைக்கு வட்டி சதவிகிதத்தை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை மேற்கொண்டு குறைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2000 மே 18

111—

## மதிப்பீட்டுத் தொகை

**வினா எண் 21668—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மங்களம் ஊராட்சி, வேட்டுபாளையத்தில் க.ச.198,200.201-இல் உள்ள நிலத்தை உள்ளூர் மதிப்பீட்டுத் தொகைக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு வழங்க முன் வந்தும் அரசு வாங்காமல் விட்டுள்ளதன் காரணம் என்ன?

(ஆ) அரசு எப்போது நிலத்தை வாங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நில உரிமையாளர் சம்பந்தப்பட்ட நிலம், தங்கள் பயன்பாட்டுக்குத் தேவைப்படுகிறது என்று எழுத்து மூலம் தெரிவித்துள்ளமையால் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் அந்நிலத்தை அரசு வாங்க இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

112—

## நிதி நிறுவனம்

**வினா எண் 21811—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக ஒரு நிதி நிறுவனம் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக ஒரு நிதி நிறுவனம் துவங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

113—

## விடுதிகள் தொடங்குதல்

**வினா எண் 21853—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99ஆம் நிதியாண்டில் நாமக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் எத்தனை புதிதாக துவங்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் 25 பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்க ஆணையிடப்பட்டது: அவற்றில் நாமக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்குவது குறித்து இடம் பெறவில்லை. மேலும் 1999-2000 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் 5 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நல கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றில் நாமக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்குவது குறித்து இடம் பெறவில்லை.

114—

## பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

**வினா எண் 23703—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரி எத்தனை சமூகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன?

(ஆ) அவற்றை மிகரும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரி 95 சமூகங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளன.

(ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் 38 சமூகங்களின் கோரிக்கைகள் மீது தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. அவற்றில் அரையர், எர்ர கொல்லர், தொரையர் (மலைப் பகுதி), தொரையர் (சமவெளி), கன்னியாகுமரி மாவட்ட இலத்தீன் கத்தோலிக்க கிறித்துவ வண்ணார் ஆகிய ஐந்து வகுப்புகள் மட்டும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இப்பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**115—**

**கடன் வழங்குதல்**

**வினா எண் 23714—திரு. ஆ. இராசேந்திரன் என்கின்ற தீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்குக் கடன் வேண்டி விண்ணப்பித்த ஒன்று அல்லது இரண்டு மாதத்தில் "டாப்செட்கோ" (பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்)-வினால் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**





தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பு விண்ணப்பதாரர்கட்கு நிதிநிலைக்குட்பட்டு இரண்டு மாதங்களுக்குள் கடனுதவி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**116—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 24107—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம் காஞ்சிக்கோவிலில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் காஞ்சிகோவிலில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

**உயர் மட்டக்குழு**

**வினா எண் 24690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு முறை முழுமையாக கடைபிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஓர் உயர்மட்டக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு முறை முழுமையாக கடைபிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஓர் உயர்நிலைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**118—**

**உதவித் தொகையை உயர்த்துதல்**

**வினா எண் 24914—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அரசு உயர்த்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**119—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 25543—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) தமிழகத்தில் இடஒதுக்கீடு முறை 5 மாநில பணிகளிலும் 3 சார்நிலைப் பணிகளிலும் கடைபிடிக்கப்பட்டு வருவது 15-11-1997-க்கு பிறகும் நீடிக்க வகைசெய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது பற்றிய தகவல்களை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே பணிமாறுதல் மூலம் செய்யப்படும் நியமனங்களில் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்ட மாநில மற்றும் சார்நிலை பணிகளில் 15-11-1997-க்குப் பிறகும் அதனைச் தொடர்ந்து கடைபிடிக்குமாறு தொடர்புடைய துறைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

**120—**

**வணிக வளாகம்**

**வினா எண் 29943—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர், பெரணமல்லூர் மற்றும் சேத்பட் பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் மூலம் வணிக வளாகம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர், பெரணமல்லூர் மற்றும் சேத்பட் பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் வழியாக வணிக வளாகம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**121—**

## உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகள்

**வினா எண் 33031—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை முறைப்படுத்த அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

16-5-1998 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் பற்றி ஆராய்ந்து, அரசுப் பணிகளில் ஏ, பி, சி மற்றும் 'டி.' பிரிவுகளில் எங்கெங்கு தக்க பிரதிநித்துவம் இல்லையோ அந்தப் பிரிவுகளில் கீழ்மட்டத்தில் நேரடி நியமனம் மூலம் பதவிகளை நிரப்ப ஆய்வு நடத்திட மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கூட்ட முடிவிற்கிணங்க அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்வதற்கான உயர்நிலைக் குழு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அரசாணை (நிலை) எண் 25, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 1-6-1998-ல் ஏற்படுத்தப்பட்டது. உயர்நிலைக் குழு அனைத்துத் துறை செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசு சார்



நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர்கள்/செயல் அலுவலர்கள்/ தலைவர்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி அனைத்து துறைகளிலும் நிலவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்த விவரங்களைத் திரட்டியது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் உரிய பிரதிநிதித்துவம் பெற மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு பல்வேறு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட்டது.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பிரதிநிதித்துவம் குறித்த உயர்நிலைக் குழுக்களின் அறிக்கையை ஆய்வு செய்த அமைச்சரவை இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு அமைச்சரவை துணைக் குழு அமைத்து அப்பரிந்துரைகளை ஆய்வு செய்யலாம் என்று முடிவு செய்தது. அமைச்சரவை துணைக் குழு அளித்த பரிந்துரைகள் 11-5-1999 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு கீழ்க்காணும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன—

(1) பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டும். இடஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என்று தற்போதுள்ள விதியை மாற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தலாம்; இவ்விட ஒதுக்கீடு முறை நடப்பிலுள்ள இனசுழற்சி அடிப்படையில் கடைபிடிக்கலாம்.

(2) பணி மாறுதல் முறை மூலம் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறையை (Carry forward) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளதுபோல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம்; நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு உள்ள முன்கொணர் முறையை (Carry forward) பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம்.

[2000 மே 18

(3) தற்பொழுது நடைமுறையிலுள்ள பணிகளுக்கு பணிமாறுதல் நியமனத்தில் இடஒதுக்கீடு கடைபிடிக்கப்பட்டு வரும் முறையை மற்ற பணிகளுக்கும் விரிவுபடுத்த மேலும் பரிசீலிக்கலாம்.

(4) இடஒதுக்கீடு முறையை பல்கலைக்கழகங்கள்/தலைமை கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள்/மாவட்ட மத்திய கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள்/ பொதுத்துறை நிறுவனகளுக்கும் விரிவுபடுத்தலாம்.

(5) ஒதுக்கீட்டுக்குரிய எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் பணி நியமனத் தேர்வு பெறுவதற்குரிய மதிப்பெண்களை பெறத் தவறினால் வேறு பிரிவினரை தேர்வு செய்வதைத் தவிர்த்து அடிப்படைத் தகுதிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அவர்கள் தேர்வு பெற ஏற்ற வகையில் தகுதிக்குரிய மதிப்பெண்கள் குறைக்கப்படவேண்டும்.

(6) 1-4-1989 முதல் ஒவ்வொரு பதவியிலும் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்களை முன்கொணர்ந்து (Carry forward) அவைகளை தற்பொழுது நிரப்புவது சிரமமாக இருப்பினும் 1-4-1989 முதல் முன்கொணரப்பட்ட பின்னடைவுப் பணியிடங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில் எத்தனை பணியிடங்கள் குறைகின்றனவோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level Post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம்.

(7) எங்கெல்லாம் இடஒதுக்கீடு முறை வகை செய்யப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் இனசுழற்சி முறையை சரியாகக் கடைபிடிக்காத நியமன அதிகாரிகள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (பி)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடுந்தண்டனை வழங்கலாம்.

(3) மேற்குறிப்பிட்ட அமைச்சரவை முடிவினைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் ஒவ்வொரு நியமன அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியிடங்களுக்கான பணிநிலைப் பிரிவின் எண்ணிக்கை (Cadre Strength of posts) ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால், நேரடி நியமன முறையில் பொது விதி 22-இன்படி இடஒதுக்கீட்டு முறை சுழற்சி பட்டியலின் அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டும் என்று அரசாணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21-9-1999-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நியமன அலுவலர்களால் மேற்குறிப்பிட்ட



2000 மே 18]

ஆணை தவறாமல் பின்பற்றப்படுகிறது என்பதை உறுதி [illegible] கொள்ளுமாறு அனைத்துச் செயலர்களும், துறைத் [illegible] அலுவலர்களும் மேற்குறிப்பிட்ட அரசா[illegible] அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் எங்கெல்லாம் நியமன அலுவலர்களால் இடஒதுக்கீட்டு விதி சுழற்சிப் பட்டியல் அடிப்படையில் கடைப்பிடிக்கப்படாமல் மீறப்படுகிறதோ, அந்த நியமன அலுவலர் பி[illegible] தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்[illegible]றையீடு) வி[illegible] 17 (பி) அல்லது தொடர்புடைய விதிகளின் அடிப்படை[illegible] கடுந்தண்டனை வழங்க ஏதுவாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும[illegible] மேற்குறிப்பிட்ட அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோல[illegible] தங்கள் நிறுவனங்களில் நியமன அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணிநிலைப் பிரிவின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டு இருக்கும் அனைத்துப் பதவிகளுக்கான நியமன விதிகளில் இ[illegible]ான்ற ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இது போன்ற ஏற்பாடுகள் ஏற்கெனவே இருக்குமானால் மேலே குறிப்பிட்ட அரசாணைக்கு ஒத்தவகையில் அந்த ஒழுங்குமுறை விதிகளில் மாற்றம் செய்யுமாறும் பொதுத் துறை நிறுவனங்களின் தலைவர்கள்/மேலாண்மை இயக்குநர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தலைமை கூட்டுறவு நிலையங்களின் தலைவர்கள்/மேலாண்மை இயக்குநர்கள், மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள்/நிலையங்க[illegible] வங்கிகளின் தலைவர்கள்/மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோர் [illegible] கடித எண் 56753/ஆர்/99-3, நாள் 28-10-1999-ல் கே[illegible]டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், இடஒதுக்கீட்டு விதிகள் [illegible]றும் இந்நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள சுழற்சிப் [illegible]டியல் ஆகியவற்றை மீறும் நியமன அலுவலர்களுக்கு எதிராக ஒழு[illegible] நடவடிக்கைகள் எடுப்பதற்காக விதிகளில் தண்டனை வழ[illegible] விதியினையும் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன[illegible]

(4) நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு உள்ள முன்கொணர் முறையினை (Carry forward) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், பணிமாறுதல் முறையிலான நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ள முன்கொணர் முறையினை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினருக்கும் விரிவுபடுத்துவது குறித்தும் 1-4-1989 முதல் பின்னடைவுப் பணியிடங்களைக் கணக்கில்கொண்டு நுழைவுப் பதவியில் படிப்படியாக ஐந்து ஆண்டு காலத்திற்குள் நியமனம் செய்வது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

**122—**

**சட்டத் திருத்தம்**

**வினா எண் 25155—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடிசை மாற்று வாரிய வீடுகளை ஒதுக்கும்போது அந்த வீடுகளை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ முடியாத அளவில் சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**123—**

**வாடகைக் குடியிருப்பு**

**வினா எண் 27454—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வட்டத் தலைநகரங்களில் அரசு ஊழியர்கள் குடியிருக்க வாடகைக் குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய் கோட்டத் தலைமையிடங்களில்மட்டும்தான் அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டித்தரப்படுகின்றன, வட்டங்களில் இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





**124—**

**பாலர் பள்ளி**

**வினா எண் 11544—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஅள்ளி ஊராட்சி, பரப்பட்டி மற்றும் பெரும்பாலை ஊராட்சி, பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**125—**

**முன்னுரிமை**

**வினா எண் 18090—திரு. ஆர்.ஆர். சேகரன் மற்றும் திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முத்திரைத்தாள் விற்பனையாளர் நியமனம் செய்யும்போது, உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களில் சிலவகைப் பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற

கோரிக்கைகளை ஆராய்ந்து, கீழ்க்கண்ட பிரிவினருக்கு முறையே முன்னுரிமை வழங்கி அரசுக் கடித (பல்வகை) எண் 160, வணிக வரித் துறை, நாள் 12-7-1999-ல் ஆணை வெளியிடப்பட்டது:

1. உடல் ஊனமுற்றோர்
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
3. விதவைகள்
4. முன்னாள் இராணுவத்தினர்
5. பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்
6. பொது

**126—**

**உரிமம் புதுப்பித்தல்**

**வினா எண் 19722—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் ஆவணங்கள், நகல்கள் மற்றும் தட்டச்சு உரிமம் பெற்றவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் உரிமம் புதுப்பிக்க வேண்டும் என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், ஆயுட்கால உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஆயுட்கால உரிமம் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*





**127—**

**தொழில் நலிவு**

**வினா எண் 21302—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் சிறு தொழில் துறையில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் நலிவடைந்துள்ளவைகள் குறித்து விவரம் சேகரிக்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், . தொழில் நலிவுக்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கண்டறியப்பட்டுள்ளது.*

**128—**

**சத்துணவு மையங்கள்**

**வினா எண் 22142—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, எரப்பநாயக்கனூர் பெரியாக்கவுண்டன்வரசு, கூத்தாடிப்பாளையம் ஆகிய ஊர்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் பவானி ஊராட்சி ஒன்றியத்தில் எரப்பநாயக்கனூர், பெரியாக்கவுண்டன்வரசு, கூத்தாடிப்பாளையம் ஆகிய ஊர்களில் புதிதாக சத்துணவு மையம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**129—**

**தொழில்களின் பங்கு**

**வினா எண் 23842—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பில் சிறு மற்றும் குறுந்தொழில்களின் பங்கு என்ன?

(ஆ) அவை குறைந்து வருவதாகச் சொல்லப்படுவது உண்மையா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பில் சிறு மற்றும் குறுந்தொழில்களின் பங்கு சுமார் 11 விழுக்காடு ஆகும்.

(ஆ) இல்லை.

**130—**

**மெழுகுவர்த்தி தயாரித்தல்**

**வினா எண் 23844—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் பணிகளுக்கான பாரஃபின் மெழுகு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பாரஃபின் மெழுகு விநியோகத்திற்கான கட்டுப்பாடு 1-4-1998 முதல் விலக்கப்பட்டுவிட்டது. எனவே மெழுகு தட்டுப்பாடின்றி கிடைக்கின்றது.

(ஆ) எழவில்லை.

**131—**

**கணினி வசதி**

**வினா எண் 24044—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பத்திரப்பதிவு அலுவலகங்களில் வில்லங்கச் சான்று வழங்க கணினி வசதி எத்தனை அலுவலகங்களில் செயல்படுத்தப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சென்னை மைலாப்பூர், பெரியமேடு, மத்திய சென்னை இணை சார்பதிவகங்களில் கணிப்பொறி மூலம் வில்லங்கச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**132—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 28886—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையம்பட்டி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*தற்போது இல்லை.*

**133—**

**தொழிற்கூடம்**

**வினா எண் 29695—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், வெள்ளையம்பாளையத்தில் புளிச்சநாரைப் பயன்படுத்தி கயிறு தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றினை அரசு அமைக்க முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம் வெள்ளையம்பாளையத்தில் புளிச்சநாரைப் பயன்படுத்தி கயிறு தயாரிக்கும் தொழிற்கூடம் நிறுவுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.*

**134—**

**சிட்கோ தொழிற்பேட்டை**

**வினா எண் 31192—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டை அமைத்து படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?*



2000 மே 18]

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.*

**135—**

**கிராமியத் தொழில்கள்**

**வினா எண் 31209—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதால் கிராமியத் தொழில்கள் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கிராமியத் தொழில்கள் தொடங்க திட்டம் ஏதும் இத்துறையில் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) மேற்கண்ட பதிலின் அடிப்படையில் இந்த வினா எழவில்லை.*

**136—**

**தொழில் தொடங்குதல்**

**வினா எண் 31222—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்கள் விவசாய வேலை இல்லாத காலங்களில் ஆங்காங்கே கிடைக்கும் மூலப்பொருட்களை வைத்துக்கொண்டு தொழில் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்கள் விவசாய வேலை இல்லாத காலங்களில் ஆங்காங்கே கிடைக்கும் மூலப்பொருட்களை வைத்துக்கொண்டு தொழில் தொடங்குவதுபற்றி பரிசீலனை செய்வதற்கான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) மேற்கண்ட பதிலின் அடிப்படையில் இந்த வினா எழவில்லை.

**137—**

**முத்திரைத்தாள்கள்**

**வினா எண் 31215—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போதிய முத்திரைத்தாள்கள் நியாயமான விலையில் கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நமது மாநிலத்தில் போதிய அளவு நீதிசாரா முத்திரைத்தாள்களும், சிறப்பு ஒட்டுவில்லைகளும் உள்ளன. இவை சுமார் இரண்டாண்டு காலத் தேவைக்குப் போதுமானதாகும். மேலும் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன்கீழ் முத்திரைக் கட்டணத் தொகையினை ரொக்கமாகச் செலுத்தவும் வழிவகை உள்ளது. முத்திரைத்தாள்கள் நியாயமான விலையில் விற்கப்படுவதைக் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**138—**

**முத்திரைத்தாள்கள் விற்பனை**

**வினா எண் 31223—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக பெண்ணாகரம் தொகுதியில் போதுமான முத்திரைத்தாள்கள் பொது மக்களுக்கு கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக பெண்ணாகரம் தொகுதியை உள்ளடக்கிய தருமபுரி மாவட்டம் உள்பட போதுமான அளவு முத்திரைத் தாள்கள் இருப்பு உள்ளன. பற்றாக்குறை ஏதுமில்லை.

(ஆ) போதுமான முத்திரைத்தாள்கள் இருப்பு உள்ள நிலையில் நடவடிக்கை ஏதும் தேவைப்படவில்லை.

**139—**

**விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

**வினா எண் 31227—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள்கள் எளிதில் கிடைக்க விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஏற்கெனவே போதிய எண்ணிக்கையில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளதாலும், அரசு 6-7-1998-ல் 1524 விற்பனையிடங்கள் வழங்கியுள்ளதாலும், தற்போது விற்பனையாளர்கள் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

(ஆ) எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை என்ற நிலையில் இவ்வினா எழவில்லை.

**140—**

**தொழில்களை ஊக்குவித்தல்**

**வினா எண் 31812—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு திரித்தல், பெட்டி, பாய் முடைதல், செங்கல், ஓடு மற்றும் மண்பாண்டம் போன்ற தொழில்களை ஊக்குவிக்க அரசிடம் திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) கயிறு திரித்தல் தொழிலை மட்டும் ஊக்கப்படுத்த திட்டம் உள்ளது.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் சிறப்பாக நடைபெறும் பொருட்டு மூலப்பொருட்கள் ஏதும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**141—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 32961—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள புதிதாகக் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் இல்லாததால் பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் சுற்றுச் சுவர் இல்லாத போதிலும், அலுவலகம் முழுநேரமும் காவலரால் கண்காணிக்கப்படுவதால், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) எழவில்லை.

**142—**

**சார்பதிவாளர் அலுவலகம்**

**வினா எண் 33205—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும்?

63-131—42a

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**143—**

**நினைவிடங்கள்**

**வினா எண் 10237—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காந்தி மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அவரவர் ஆற்றிய உரைகளை, பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் ஒலிப்பதுபோல் மேற்குறிப்பிட்ட நினைவிடங்களில் ஒலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தற்போது இப்பொருள் குறித்த நடவடிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

**144—**

**சிலை அமைத்தல்**

**வினா எண் 15912—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அவருடைய சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அவருடைய சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**145—**

**நவீன அச்சுத் தொழில்**

**வினா எண் 18321—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அச்சுத் துறையில் நவீன அச்சு இயந்திரங்களையும், நவீன அச்சுத் தொழில்நுட்பங்களையும் கையாண்டு அச்சுத் துறையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழக அச்சுத் துறையில் நவீன அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தி நவீன அச்சுத் தொழில்நுட்பங்களுடன் அச்சுத் துறையை நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**146—**

**காந்தி மண்டபம்**

**வினா எண் 2180[illegible] [illegible]ரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையள[illegible]பாரா—

கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள காந்தி மண்டபத்தைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள காந்தி மண்டபத்தில் ஏற்பட்ட பழுதுகளைச் சரிசெய்வதற்கு ரூ.2.60 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பழுதுகள் சரிபார்க்கப்பட்டு மண்டபம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**147—**

**திரையரங்கு கட்டணம்**

**வினா எண் 22288—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சினிமா திரையரங்குகளில் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலாக தியேட்டர் உரிமையாளர்கள் விருப்பம்போல் பொதுமக்களிடம் வசூலிப்பதை ஒழுங்குபடுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

திரையரங்குகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக் கட்டணத்தைவிட கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கும் திரையரங்கு உரிமைதாரர்கள்மீது தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955-ன்படி நடவடிக்கை எடுக்க சென்னையைப் பொறுத்தவரை சென்னை நகர காவல் ஆணையருக்கும், மாவட்டங்களைப் பொறுத்தவரை அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

**148—**

**சினிமா காட்சிகள்**

**வினா எண் 23146—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?



2000 மே 18]

(அ) ஒரிஜினல் கிரிமினல்களைக்காட்டிலும் சினிமாக்களில் கிரிமினல் உத்திகள் கடைப்பிடிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரிஜினல் கிரிமினல்களைக்காட்டிலும் சினிமாக்களில் கிரிமினல் உத்திகள் கடைப்பிடிப்பதைத் தடுக்க தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் விதிகளில் வழிவகை இல்லை. எனினும், மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட திரைப்பட தணிக்கைக் குழு இதுபோன்ற, மக்களைப் பாதிக்கும் வகையில் இடம்பெறும் காட்சிகளைத் தணிக்கை செய்கிறது.

**149—**

**திரைப்படங்களுக்கு வரிவிலக்கு**

**வினா எண் 24516—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1995-96, 1996-97, 1997-98, 1998-99ஆம் ஆண்டுகளில் நல்ல தரமான திரைப்படங்களை எடுத்ததற்காக தமிழக அரசு எத்தனை திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| 1995 | - | இல்லை |
| 1996 | - | இல்லை |
| 1997 | - | 6 திரைப்படங்கள் |
| 1998 | - | இல்லை |
| 1999 | - | இதுவரை 1 படம் |

[2000 மே 18

**150—**

**புத்தகம் கட்டும் பணிகள்**

**வினா எண் 24538—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டும் பணியில் பார்வையற்றவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டும் பணியில் பார்வையற்றவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**151—**

**திரைப்பட நகர் வருவாய்**

**வினா எண் 25529—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திரைப்பட நகர் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது?

(ஆ) திரைப்பட நகரை மேலும் நவீனப்படுத்த அரசு ஏதேனும் திட்டங்கள் வைத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ரூ.2.00 கோடி அளவிற்கு திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்கு வருமானம் கிடைக்கப்பெற்று வருகிறது.



2000 மே 18]

(ஆ) தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்திடம் தற்போது போதிய நிதி வசதி இல்லை. நிதி வசதி சீரான பின்னர் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை மேலும் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**152—**

**அரசுப் பொருட்காட்சி**

**வினா எண் 25533—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

பரமக்குடியில் சித்திரை திருவிழாவின்போது அரசுப் பொருட்காட்சி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**153—**

**அச்சகத்தை நவீனமயமாக்குதல்**

**வினா எண் 24694—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலத்தில் உள்ள அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனமயமாக்குவதின் முதற்கட்டமாக இரண்டு யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம் இந்த அச்சகத்தில் நிறுவப்பட்டு, இயங்கி வருகிறது.

154—

### வனவிலங்கு சரணாலயம்

**வினா எண் 29264—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பொறுப்பிலுள்ள வனவிலங்கு சரணாலயத்தில் படப்பிடிப்பு எடுக்க அனுமதிக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1998-99-இல் வசூலான தொகை எவ்வளவு?

(இ) அந்த அனுமதிக் கட்டணத்தை உயர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நாளொன்றுக்கு ரூ.1,000/- வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) வனவிலங்கு சரணாலயங்களில் படப்பிடிப்பு நடத்த அனுமதி அளித்த வகையில் 1998-99ஆம் ஆண்டில் ரூ.9,000/- வசூலானது.

(இ) தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தை உயர்த்த அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

155—

### செய்திப் படம்

**வினா எண் 30296—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்ட மாவீரன் பூலித்தேவனின் வாழ்க்கை வரலாற்றினை கிராமிய நாடகத் துறை, தொலைக்காட்சித் துறை மற்றும் திரைப்படத் துறையின் மூலமாக செய்திப்படமாக வெளியிட அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட மாவீரன் பூலித்தேவனின் வாழ்க்கை வரலாற்றினை வீடியோ படமாகவோ, திரைப்படமாகவோ தயாரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) குறிப்பு ஏதும் இல்லை.

156—

### பிறந்தநாள் விழா

**வினா எண் 30310—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்ட வீரரான திப்புசுல்தானின் 200-வது பிறந்த நாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

157—

### மணி மண்டபம்

**வினா எண் 30315—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரன் சுந்தரலிங்க தேவேந்திரனார்க்கு கவர்னகிரியில் மணி மண்டபம் மற்றும் சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

இல்லை

**158—**

**கண்காணிக்க நடவடிக்கை**

**வினா எண் 30377—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிடப்படும் ரகசிய ஆவணங்கள், தேர்வு கேள்வித்தாள்கள் போன்றவை வெளியே வராமல் கண்காணிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிடப்படும் ரகசிய ஆவணங்கள், தேர்வு கேள்வித்தாள்கள் போன்றவை வெளியே வராமல் கண்காணிக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**159—**

**திரைப்பட நகர்**

**வினா எண் 30379—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தாம்பரம் தொகுதி, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரின் மூலம் அரசுக்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் என்ன?

(ஆ) அங்கு எத்தனை பேர் பணிபுரிகின்றார்கள்?





விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ரூ.2.00 கோடி அளவிற்கு தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்கு வருமானம் கிடைக்கப்பெற்று வருகிறது.

(ஆ) எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின்கீழ் இயங்கி வருகிறது. இங்கு கீழ்க்காணும் 147 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்:

| | | |
|---|---|---|
| ஊதிய விகித அடிப்படையில் | 24 | பேர்கள் |
| அயற்பணியில் | 9 | பேர்கள் |
| தொகுப்பூதிய அடிப்படையில் | 114 | பேர்கள் |
| மொத்தம் | **147** | பேர்கள் |

**160—**

**சலுகைகளை விஸ்தரிப்பு செய்தல்**

**வினா எண் 30510—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களுக்கும் சலுகைகளை விஸ்தரிக்க அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களுக்கு சலுகைகளை விஸ்தரிப்பதுபற்றிய கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2000 மே 18

161—

## செய்திப் படங்கள்

**வினா எண் 32222—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசின் செய்தித் துறை மூலம் அறிவியல் மற்றும் பகுத்தறிவு முறைகளை மக்களிடம் கொண்டுசெல்லப் பொருத்தமான செய்திப் படங்கள் தயாரித்து வெளியிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

அறிவியல் மற்றும் பகுத்தறிவுக் கருத்துகள்கொண்ட விளக்கப் படங்களை இவ்வரசு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தயாரித்து அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன.

162—

## சிலை அமைத்தல்

**வினா எண் 32632—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவின் சுதந்திரத்திற்கு வெள்ளையர்களை எதிர்த்து தமிழகத்திலிருந்து கிளம்பிய முதல் போராட்ட மாவீரன் பூலித்தேவனுக்குச் சென்னைக் கடற்கரையில் அரசின் சார்பில் திருவுருவச் சிலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 மே 18]

163—

## திருவுருவச் சிலை

**வினா எண் 32633—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவின் சுதந்திரத்திற்கு வெள்ளையனை எதிர்த்துப் போராடிய, மானங்காத்த பூமியாம் சிவகங்கைச் சீமையின் மன்னர்கள் மருது சகோதரர்களுக்கு, சென்னை கடற்கரையில் அரசு சார்பில் திருவுருவச் சிலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருது சகோதரர்களுக்கு, சென்னையில் அரசு சார்பில் சிலை அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

164—

## திருவுருவச் சிலை அமைத்தல்

**வினா எண் 32636—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவின் சுதந்திரத்திற்கு வெள்ளையனை எதிர்த்துப் போராடிய தமிழகத்திலிருந்து கிளம்பிய முதல் போராட்ட மாவீரன் பூலித்தேவனுக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் எதிரே, அண்ணா பேருந்து நிலையம் அருகே அரசு சார்பில் திருவுருவச் சிலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**165—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 16239—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**166—**

**கால்நடைக் கிளை மருந்தகம்**

**வினா எண் 19353—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆலம்பாடி கிராமம் குவாரியில் 12 ஊர்கள் பயன்பெறும் வகையில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு அனுமதி வழங்குமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை. ஆனால், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆலம்பாடி கிராமம் குவாரியில் 12 ஊர்கள் பயன்பெறும் வகையில் தற்போது பார்வைக் கிளை நிலையம் தொடங்கப்பட்டு 23-1-98 முதல் செயல்பட்டு வருகின்றது.

**167—**

**வைக்கோல் வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லத் தடை**

**வினா எண் 22061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து முக்கியச் சாலைகள் வழியாக வைக்கோல் வெளிமாநிலத்திற்குக் கொண்டுசெல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலிருந்து முக்கிய சாலைகள் வழியாக வைக்கோல் வெளி மாநிலத்திற்கு ஒரு சில மாதங்களில் குறைந்த அளவே அனுப்பப்படுகிறது.

(ஆ) வைக்கோல் வெளி மாநிலங்களுக்கு அதிக அளவில் தமிழ்நாட்டிலிருந்து செல்லாததாலும், கால்நடை தீவனத் தட்டுப்பாடு ஏதும் எழாத நிலையினைக் கருதியும் தடை விதிக்கப்படவில்லை.

**168—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 23018—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, சதருப்பம், கன்னக்கந்தல் ஆகிய ஊர்களில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**169—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 23505—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் அரசு கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**170—**

**கிளை மருந்தகம்**

**வினா எண் 24256—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி ஒன்றியம், மேலாயக்குடியில் கால்நடைக் கிளை மருந்தகம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் திறக்கப்படுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டம், பரமக்குடி ஒன்றியத்தில் ஏற்கெனவே மேலாயக்குடியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.

**171—**

**கால்நடைக் கல்லூரி**

**வினா எண் 26172—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தொழிலில் புரட்சி ஏற்படுத்தும் வண்ணம், வட்டத்திற்கு (Taluk) ஒரு கால்நடைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடைத் தொழில் புரட்சி ஏற்படுத்தும் வண்ணம் வட்டத்திற்கு ஒரு கால்நடைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

**172—**

**கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 26177—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சி, பரசேரியில் இயங்கும் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எந்த அளவிற்கு?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**173—**

**கால்நடை ஆய்வு மையத்தை மேம்படுத்துதல்**

**வினா எண் 26182—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில், கால்நடை நோய் ஆய்வு மையத்தை மேம்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நோய் ஆய்வு மையத்தினை மேம்படுத்த 40°C குளிர்சாதனப் பெட்டியும், வைரஸ் கிருமிகளைப் பார்க்க சூம்புக் குடுவையும் ரூ.100 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படவுள்ளது.*

**174—**

**கால்நடை மருந்தகங்கள் தொடங்குதல்**

**வினா எண் 27708—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இந்த நிதியாண்டில் கால்நடை மருந்தகங்கள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**175—**

**கால்நடை மருந்துகள்**

**வினா எண் 27717—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1997-99ஆம் ஆண்டுகளில் கால்நடை மருந்துகள் வாங்குவதற்கு அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கால்நடை பராமரிப்புத் துறைக்கு மருந்துகள் வாங்குவதற்கு 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ.7.03 கோடியும், 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூ.8.10 கோடியும் அரசு நிதி ஒதுக்கியது.*

**176—**

**கால்நடை பாலிகிளினிக் தொடங்குதல்**

**வினா எண் 27745—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதியில் கால்நடைக்கான பாலிகிளினிக் தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**177—**

**கால்நடை மருந்தகம் தொடங்குதல்**

**வினா எண் 27899—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, காப்பம்பாடி பகுதிகளில் கால்நடைகள் அதிகமாக வளர்ப்பதால் இங்கு கால்நடை மருந்தகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**178—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 27902—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி பகுதிகளில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*



**179—**

**உயிர் காக்கும் மருந்துகள்**

**வினா எண் 27908—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு கால்நடை மருத்துவமனைக்கு 1998-99-ல் எவ்வளவு உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 79,985.00-க்கு மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.*

**180—**

**கால்நடை உறைவிந்து உற்பத்தி நிலையம்**

**வினா எண் 27915—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் மாவட்டந்தோறும் கால்நடை உறைவிந்து உற்பத்தி நிலையம் தொடங்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**181—**

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 27919—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம் அளவில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஏற்கெனவே உள்ளது.*

*(ஆ) எழாது.*

**182—**

**கால்நடை மருந்தாய்வகம்**

**வினா எண் 29172—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் வெள்ளமன்காட்டை மையமாகக்கொண்டு கால்நடை மருந்தாய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*





**183—**

**கால்நடை ஆய்வாளர் பயிற்சி**

**வினா எண் 29179—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் +2 படித்து, முடித்த ஏழை மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்க கால்நடை ஆய்வாளர் பயிற்சியினைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் +2 கல்வித் தகுதி உடைய 125 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிப்பதற்கு 15-2-2000 நாளிட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.*

**184—**

**ஆட்டுப் பண்ணை**

**வினா எண் 29212—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணபுரம் ஒன்றியப் பகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு ஆட்டுப் பண்ணை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

185—

## கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 29227—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி, பில்லுகுறிச்சியில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

186—

## கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 29234—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டமேட்டூரில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதை இந்த நிதியாண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**



*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

187—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 29290—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பி. அக்ரஹாரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

188—

## மாதாகோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 29306—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், மாதாகோட்டை ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

[2000 மே 18

**189—**

**சென்னையில் கால்நடை மருந்தகங்கள்**

**வினா எண் 29457—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகரில் அரசு மூலம் கால்நடை மருந்தகங்கள் தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) அரசு நடைமுறை விதிகளின்படி தகுதியிருப்பின் நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**190—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 30611—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, நல்லமனார்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட தொட்டனம்பட்டிக்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*



2000 மே 18]

**191—**

**புதிய கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 31011—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம் வேலாயுதம்பாளையத்திற்கு புதிய கால்நடை மருத்துவமனை திறக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**192—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 31579—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், சிங்காரக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட வேலாயுதம்பாளையத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**193—**

### இலவசச் சீருடை

**வினா எண் 21888—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1998-99 ஆம் ஆண்டில் எத்தனை மாணவ, மாணவியர்களுக்கு, இலவசச் சீருடை வழங்க அரசு முடிவு செய்துள்ளது?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு 32,52,365 மாணவர்களுக்கும் 30,27,460 மாணவியர்களுக்கும் ஆக மொத்தம் 62,79,825 மாணவ, மாணவியர்களுக்கு இலவசச் சீருடை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சீருடைகள் 1998-99 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு 1999 ஆம் ஆண்டு ஜுன், ஜுலை மாதங்களில் வழங்கப்படும்.*

**194—**

### இட ஒதுக்கீடு

**வினா எண் 24179—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்க கலைப் பாடங்களுக்குரிய ஆசிரியர் பதவிகளில் ஏற்படும் காலி இடங்களில் பார்வையற்ற ஆசிரியர்களுக்கு சதவிகித அடிப்படையில் இடஒதுக்கீடு செய்து பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

*பார்வையற்றவர்களுக்கு கல்வி கற்பிக்க கலைப் பாடங்களுக்குரிய ஆசிரியர் பதவிகளில் ஏற்படும் காலியிடங்களுக்கு இரண்டு சதவிகித அடிப்படையில் பார்வையற்ற ஆசிரியர்களுக்கு இடஒதுக்கீடு செய்து அரசால் பணி நியமனம் செய்யப்பட்டு வருகிறது.*

**195—**

### கட்டடம்

**வினா எண் 4694—திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டி முடிக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) விழுப்புரத்திலுள்ள தாட்கோவின் சொந்தக் கட்டடத்தை விற்று வரக்கூடிய தொகையைக் கொண்டு, சென்னை, மைலாப்பூர், செனடாப் சாலையில் தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**196—**

### மனைப்பட்டா வழங்குதல்

**வினா எண் 5383—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட சிங்காரக்குப்பம், கலைஞர் நகர், இருளர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் அந்த இடத்தையே மனைப்பட்டாவாக வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம் கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட சிங்காரக்குப்பம் கலைஞர் நகர் இருளர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டது.*

**197—**

### ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா

**வினா எண் 6962—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் ரங்கே கவுண்டன்பாளையம், இந்திரா காலனியில் குடியிருக்கும் ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**



*திருப்பூர், ரங்கே கவுண்டன்பாளையம், இந்திரா காலனியில் குடியிருந்து வந்த ஆதிதிராவிடர்களுக்கு திருப்பூர் வட்டம், முத்தனம்பாளையம் கிராமம் க.ச. 485/2 சாலையில் 4.60 ஏக்கர் நில எடுப்பு செய்யப்பட்டு 80 பேருக்கு பட்டா வழங்கி 75 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**198—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 11467—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், ஏலகிரி ஊராட்சியில் அம்பேத்கர் நகரில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் மற்றும் வட்டம், ஏலகிரி அம்பேத்கர் நகரில் வசிக்கும் 52 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா 26-1-1999 அன்று வழங்கப்பட்டுள்ளது.*

**199—**

### நலப்பள்ளி தொடங்குதல்

**வினா எண் 19115—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், சுஞ்சல்நத்தம் ஊராட்சிக்குட்பட்ட மூலப்பெல்லூரில் வாழும் பழங்குடியினரின் குழந்தைகள் படிக்க அங்கு மலைவாழ் மக்கள் நலப்பள்ளி நடப்பாண்டில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், சுஞ்சல்நத்தம் ஊராட்சிக்குட்பட்ட மூலப்பெல்லூரில் வாழும் பழங்குடியினரின் குழந்தைகள் படிக்க அங்கு மலைவாழ் மக்கள் நலப்பள்ளி நடப்பாண்டில் தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**200—**

**குத்தாலத்தில் சமத்துவபுரம்**

**வினா எண் 24189—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் சமத்துவபுரம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

## இருபத்து ஆறாம் பட்டியல்

**1—**

**திரைப்படக் கலை**

**வினா எண் 23097—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பள்ளி, கல்லூரிகளிலுள்ள பாடத்திட்டத்தில் திரைப்படக் கலையை சேர்க்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**2—**

**வளர் கல்வி மையங்கள்**

**வினா எண் 24961—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முறைசாரா மற்றும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் தொடர் கல்வி நிலையம் சேலம் மாவட்டத்தில் எத்தனை இயங்கி வந்தன?

(ஆ) 31-3-1996-ன்படி மத்திய அரசின் அறிவுரையின்படி மூடப்பட்ட வளர்கல்வி மையங்களை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் முறைசாரா மற்றும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ், 51 தொடர்கல்வி நிலையங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வந்தன.

(ஆ) தொடர்கல்வி திட்டம் முடிவுற்றுள்ளது. இதை மீண்டும் தொடங்க இயலாது. இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக வளர்கல்வி மையங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### முதல்நிலை நகராட்சிகள்

**வினா எண் 28173—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு கலைக்கல்லூரி தொடங்கப்படாத முதல்நிலை நகராட்சிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவ்விடங்களில் வட்டத் தலைநகராக உள்ள நகராட்சிப் பகுதியில் கலைக்கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 34 முதல் நிலை நகராட்சிகள் உள்ளன. இதில் 11 இடங்களில் அரசு கலைக்கல்லூரிகள் உள்ளன. மீதி 23 நகராட்சிகள் அமைந்துள்ள இடங்களில் அரசு கலைக்கல்லூரிகள் இல்லை. இந்த அடிப்படையில் கல்லூரிகள் திறக்கும் கொள்கை முடிவு எதுவும் அரசுக்கு இல்லை.

(ஆ) தற்போது அரசின் நிதி நிலை காரணமாக புதிய அரசு கலைக்கல்லூரிகள் தொடங்குவதில்லையென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

4—

### சமுதாயக் கூடம்

**வினா எண் 22336—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஜீவா நகர் தொழிலாளர் குடியிருப்புக் காலியிடத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசிடம் அனுமதி கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஜீவா நகர் தொழிலாளர் குடியிருப்புக் காலியிடத்தில் சமுதாயக் கூடம் கட்ட அனுமதி கோரும் விண்ணப்பம் நகராட்சி ஆணையரால் பெறப்பட்டுள்ளது.

(ஆ) விளையாடுமிடத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில், சமுதாயக் கூடம் கட்டிக் கொள்ள அனுமதிக்கும் வகையில், திட்டமாற்ற ஆணையை, விதிகளின்படி நகர் ஊரமைப்பு இயக்குநரால் அரசிதழில் வெளியிடப்பட்டபின், இதுகுறித்து நகராட்சி ஆணையாளரால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா எண் 22378—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், சென்னியவிடுதி ஊராட்சி, தோப்பநாயகம் கிராமத்தில் குடிநீர் பிரச்சினையைப் போக்க ஒரு லட்சம் கொள்ளளவு உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், சென்னியவிடுதி ஊராட்சி, தோப்பநாயகம் குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6—

### குடிநீர் விநியோகப் பணியாளர்கள் பணியிடம்

**வினா எண் 22397—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நல்லூர் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பணியாளர் பணியிடம் எதுவும் தோற்றுவிக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

7—

### குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 22445—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, பெரிய புலியூர் ஊராட்சி, கோட்டாம்பாளையத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி மின் மோட்டார் வைத்து அவ்வூருக்கும் அதைச் சுற்றிலும் உள்ள ஊர்களுக்கும் குடிநீர்க்குழாய் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



8—

### கணினி பயிற்சி மையம்

**வினா எண் 22451—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கணினி (கம்ப்யூட்டர்) பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9—

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா எண் 22460—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் வருடத்திற்கு இரண்டு ஊராட்சிகளை ஒரு சட்டமன்றத் தொகுதியில் எடுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

[2000 மே 18

10—

### சொத்து வரிவிதிப்பு

**வினா எண் 22671—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* சொத்து வரிவிதிப்பில் ஒரு ஒத்த கருத்து நிலையை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கட்டடத்தின் பயன்பாட்டைப்* பொறுத்து *அனைத்து* நகர்ப்புற *உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள கட்டடங்களுக்கும் ஒரே சீரான* சொத்து வரிவிதிப்பு மேற்கொள்ளுமாறு *அரசு ஆணையிட்டுள்ளது.*

11—

### வாகன வசதி

**வினா எண் 22892—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* திருநெல்வேலி *மாவட்டம், ராதாபுரம் வட்டம்,* பணகுடி *பேரூராட்சியில் துப்புரவுப் பணி* செய்ய வாகன வசதி (மினி லாரி) *ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1999-2000 ஆம் ஆண்டு அடிப்படை* வசதித் திட்டம் பொது *சுகாதாரத் தலைப்பின்கீழ் பணகுடி பேரூராட்சிக்கு டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாங்கிக் கொள்ள அரசு மானியம் ரூ. 3.00 லட்சம் ஒதுக்கீடு* செய்து பேரூராட்சிகள் இயக்குநர் *கடந்த ஜூலை 1999-ல் உத்தரவிட்டுள்ளார்.*



2000 மே 18]

12—

### கிருஷ்ணா நதி நீர்

**வினா எண் 23034—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* தாம்பரம தொகுதி, பெருங்குடி *பேரூராட்சிக்கு* கிருஷ்ணா *நதி நீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ)* பெருங்குடி *பேரூராட்சி,* கிருஷ்ணா குடிநீர் விநியோகத் *திட்டத்தில் இணைக்கப்பட்டு, பகுதி 1-ல் 1.08 எம்.எல்.டி., பகுதி 2-ல் 2.52 எம்.எல்.டி. தண்ணீர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

13—

### மனைப் பிரிவுகள்

**வினா எண் 23041—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் நகராட்சிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) அவை எப்பொழுது அங்கீகரிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நகராட்சிகளில் 1117 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் இருக்கின்றன.

(ஆ) மனைப்பிரிவுதாரர்கள் முறைப்படி அங்கீகாரம் கோரினால் விதிமுறைகளுக்குட்பட்டு மனைப்பிரிவுகளை அங்கீகரிக்க நகராட்சிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

**14—**

### தொலைக்காட்சிப் பெட்டிகள்

**வினா எண் 23118—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானி, அம்மாப்பேட்டை ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் 200-க்கும் மேற்பட்ட ஊர்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானி, அம்மாப்பேட்டை ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள்



இல்லாத ஊர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**15—**

### மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 23382—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி தெற்கு மாட வீதியில் மேல்நிலைத் தொட்டி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**16—**

### சமூகக் கூடம்

**வினா எண் 23384—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, கொன்னூர் கிராமம், மல்லிச்சேரியில் சமூகக் கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி, கொன்னூர் கிராமம், மல்லிச்சேரியில் சமூகக் கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

17—

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 23457—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், தொட்டிபாளையம் ஊராட்சி, கேத்தம்பாளையம் தொடக்கப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் இல்லாததால் பொதுக் கழிப்பறையாகப் பயன்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சுற்றுச் சுவர் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், தொட்டிபாளையம் தொடக்கப்பள்ளி பொதுக் கழிப்பிடமாகப் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும், 1999-2000ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தொட்டிப்பாளையம் தொடக்கப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

18—

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 23497—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கீழ்நமண்டி ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

19—

**குடிநீர் வசதி**

**வினா எண் 23537—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள 30 கிராமங்களுக்கு பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்ட 30 கிராமக் குடியிருப்புகளில் 15 குடியிருப்புகளுக்கு தனித்தனியாக ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது இக்குடியிருப்புகள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வசதி பெற்றவை ஆகும். மூன்று குடியிருப்புகளுக்கு 1998-99ஆம் ஆண்டில் சிறப்பு அனுமதி பெறப்பட்டு, நடப்பு நிதியாண்டில் தனித்தனி மின்விசைத் திட்டங்களாகச் செயல்படுத்தப்படவுள்ளது. 5 குடியிருப்புகளின் குடிநீர் நிலை 1992ஆம் ஆண்டு மறு ஆய்வுப்படி 40 லிட்டருக்குக்கீழ் குடிநீர் வசதி பெற்றவையாக உள்ளது. மீதமுள்ள 7 குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் தோற்றுவிக்கப்பட்டு புதிய குடிநீர்த் திட்டங்கள் வரும் நிதியாண்டில் தனி மின்விசைத் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு புதிதாக அல்லது கூடுதல்

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படும். மேற்படி குடியிருப்புகளுக்கு தென்பெண்ணையாற்றிலிருந்து குடிநீர் எடுத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த திட்டம் எதுவும் இல்லை.

**20—**

**நிதி வழங்குதல்**

**வினா எண் 23543—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்தியாவிற்கு உலக வங்கி மூலம் ஊரக வளர்ச்சி பெறுவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**21—**

**மழைநீர் வடிகால் வசதி**

**வினா எண் 23589—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வில்லிவாக்கம் தொகுதி, விருகம்பாக்கம் வெங்கடேச நகர்ப் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



சென்னை மாநகராட்சி தற்போது மழைநீர் வடிகால் துறை மூலமாக வில்லிவாக்கம் தொகுதி, விருகம்பாக்கம் பகுதியில் காளியம்மன் கோயில் தெரு முதல் சாயிபாபா காலனி, தாராசந்த் பிரதான சாலை வழியாக வெங்கடேச நகர் பிரதான சாலையில் சென்றடையும் வண்ணம் கால்வாய்ப் பணி நடைபெற்று வருகிறது.

**22—**

**பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச் சுவர்**

**வினா எண் 23691—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வில்லிவாக்கம் தொகுதி, பாடி பகுதி, இளங்கோ நகர் பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்கப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*பாடி பகுதி, இளங்கோ நகர் பேருந்து நிலைய சீரமைப்பிற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 10 லட்சத்தில் பயணிகள் தங்கும் வசதி, சாலை மேம்பாடு, மின்விளக்கு வசதி போன்றவை செய்யப்படுகின்றன. சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதுமில்லை.*

**23—**

**வடிகால் வாரியம் இணைப்பு**

**வினா எண் 23594—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வில்லிவாக்கம் தொகுதி, 76-வது வட்டம் கோயம்பேடு சாமாத்தம்மன் நகரில் வடிகால் வாரியம் இணைப்பு ஏற்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வில்லிவாக்கம் தொகுதி தற்போதைய 65-வது வட்டம் (இதன் பழைய வட்ட எண் 76) கோயம்பேடு சாமாத்தம்மன் நகர் 3,000 மக்கள்தொகை கொண்டது. இதில் பகுதி 1 மற்றும் பகுதி 3-ல் சுமார் 2,000 மக்கள் பயன்பெறும் வகையில் கழிவு நீரகற்று வசதி செய்து தரப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது சாலை வசதியில்லாத சாமாத்தம்மன் நகர் பகுதி 2 கழிவுநீர் இணைப்பு ஏற்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

(ஆ) பகுதி 2 அருகில் உள்ள பொது சாலையுடன் இணைக்கப்பட்டபின் இப்பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து கொடுக்க ஏதுவாகும்.

**24—**

## குடிநீர் வசதி

**வினா எண் 23602—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி, ஜனசக்தி நகரில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வீரபாண்டி ஊராட்சியைச் சார்ந்த ஜனசக்தி நகருக்கு தற்பொழுது மூகாம்பிகை நகரில் உள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் ஜனசக்தி நகரின் வாயிலுக்கருகில் 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மார்ச் 2000-ல் ஜனசக்தி நகருக்கு தனி மின் இறைப்பான் திட்டம் அமைத்து முழுஅளவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**25—**

## பணியிடங்கள் உருவாக்குதல்

**வினா எண் 23604—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சியில் முதல் நிலைப் பேரூராட்சிக்குரிய பணியாளர் பணி அமைப்பின்படி இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 62, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20-1-1989-ன்படி திருப்பூர், நல்லூர் பேரூராட்சிக்கு ஒரு வரிவசூலர் பணியிடம் மட்டுமே தோற்றுவிக்கத் தகுதி உள்ளது. அதன்படி திருப்பூர், நல்லூர் பேரூராட்சியில் ஒரு வரிவசூலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**26—**

## தரைப்பாலம்

**வினா எண் 23614—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரும்பாக்கம் அருகே பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் அண்ணா நகர் சாந்தி காலனியையும் இணைக்கும் தரைப்பாலத்தை உயர்த்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (இருபதாண்டு) எண் 4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29-1-1999-ல் கூவம் ஆற்றின் குறுக்கே அண்ணா நகரையும் அரும்பாக்கம் அருகேயுள்ள ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையையும் இணைத்து நடுவக்கரையில் தற்போதுள்ள தரை மட்டப் பாலத்தை இடித்து விட்டு உயர்மட்டப் பாலம் அமைக்க அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட இடத்தில் உயர்மட்டப்பாலம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு இதுவரை 50 ஆழ்துளைக் கடைக்கால்களில் 24 முடிவடைந்துள்ளது. இப்பணி ஜூன் 2001-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**27—**

## குடிதண்ணீர் வழங்குதல்

**வினா எண் 23616—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி 1-வது வார்டு பகுதிக்கு பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையான டால்மியா குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி 1-வது வார்டு பகுதிக்கு 14-1-1999 அன்று முதல் டால்மியா குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



**28—**

## பேருந்து நிலையப் பணிகள்

**வினா எண் 23748—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் புதிய பேருந்து நிலையப் பணிகள் எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது பணிகள் முற்றுப் பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகரத்தில் தற்போது பெருமாநல்லூர் சாலையில் 7.12 ஏக்கர் நிலத்தில் மூன்று தளம் கொண்ட புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக பேருந்து நிற்கும் இடமும் உணவு விடுதியும் உள்ளடங்கிய தரைத்தளம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் கட்டமாக தரைத் தளத்தில் மூன்று பாகங்களாக செய்யப்பட்டு வரும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பகுதிகளில் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் இரண்டு உணவு விடுதி வசதியுடன் பொருள் வைக்கும் அறை, தபால் நிலையம் ஆகியவை அமையும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது.

(ஆ) பேருந்து நிலையப் பணிகளில் தரைத்தளம் 60 பேருந்துகள் நிற்கும் இடம் போன்றவை 1999 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்றும், தற்போது நடைபெறும் முதல்தளப் பணிகள் 31-1-2000-ல் முடிவுறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**29—**

## பேரூராட்சிகள்

**வினா எண் 24175—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) ஈரோடு மாவட்டத்தில் எத்தனை பேரூராட்சிகள் உள்ளன?

(ஆ) இவற்றில் நகராட்சிகளாகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 60 பேரூராட்சிகள் உள்ளன.

(ஆ) ஏதுமில்லை.

**30—**

**இயற்கை உரம்**

**வினா எண் 24180—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இத்திட்டம் ஏற்கெனவே பேரூராட்சிகளிலும் நகராட்சிகளிலும் நடைமுறையில் இருந்து வருகிறது.

**31—**

**சமுதாயக் கல்லூரிகள்**

**வினா எண் 24184—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) சென்னை மாநகராட்சி மூலம் சமுதாயக் கல்லூரிகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியின் மூலம் சமுதாயக் கல்லூரிகள் அமைக்கும் திட்டம் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, 2 சமுதாயக் கல்லூரி வளாகங்கள் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றும் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி முதல் நடைபெற்று வருகின்றன. மேலும் 3 சமுதாயக் கல்லூரி வளாகங்கள் சென்னை மாநகரில் வரும் ஜூலை மாத இறுதியில் தொடங்கப்பட உள்ளன.

**32—**

**சமத்துவபுரம்**

**வினா எண் 24189—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் சமத்துவபுரம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியப்பகுதி, விளை நிலங்களாக உள்ளதாலும், சமத்துவபுரம் கிராமம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்திட போதுமான இட வசதி இல்லாமையாலும், குத்தாலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சமத்துவபுரம் அமைக்கும் செயல் திட்டம் ஏதும் இல்லை.

[2000 மே 18

**33—**

### குடிநீர் விற்பனை

**வினா எண் 24225—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நிலத்தடி நீரை எடுத்து சட்ட விரோதமாக தண்ணீர் லாரிகளில் கொண்டு சென்று விற்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*நிலத்தடி நீரை எடுத்து சட்ட விரோதமாக லாரிகளில் கொண்டு சென்று விற்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

**34—**

### லாரி மூலம் குடிநீர் வசதி

**வினா எண் 24235—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னையிலுள்ள பொதுமக்களின் அனைத்துத் தேவைகளுக்கும் கட்டணம் செலுத்தி லாரி மூலம் குடிநீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சென்னையில் உள்ள பொதுமக்களின் அனைத்துத் தேவைகளுக்கும் கட்டணம் செலுத்தி லாரி மூலம் குடிநீர் வழங்கும் ஏற்பாடுகள் தற்போது நடைமுறையிலேயே உள்ளன.*



2000 மே 18]

**35—**

### சுரங்க நடைபாதை

**வினா எண் 24240—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகில் சுரங்க நடைபாதை கட்டும் பணி எந்த நிலையிலுள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இப்பணி 25-2-1999 அன்று ஆரம்பிக்கப்பட்டு, தற்சமயம் மண் வேலை முடிந்து கான்கிரிட் சுவர்கள் எழுப்பும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி திட்டமிட்டபடி 12 மாத காலத்தில் முடிக்கப்படும்.*

**36—**

### மின் வசதி

**வினா எண் 24352—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி தாடிக்காரன் தெரு என்கிற கிராமத்திற்கு நடப்பாண்டில் மின் வசதி செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி தாடிக்காரன் தெரு என்ற பகுதிக்கு*

[2000 மே 18

1999-2000 ஆண்டில் மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவருக்கும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

37—

**குடிநீர் இணைப்பு**

**வினா எண் 24428—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதியில் வில்லுக்குறி பேரூராட்சியில் கருப்புக்கோடு குடிநீர்த் திட்டத்தில் போதுமான தண்ணீர் உள்ளதால் வீடுகளுக்கு இணைப்பு கொடுக்க முடியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கருப்புக்கோடு குடிநீர்த் திட்டத்தில் ஓரளவு நீர் ஆதாரம் உள்ளது. ஆனால், இப்பகுதியில் உள்ள வீட்டு இணைப்புகளுக்குக் கொடுத்தால் பொதுக் குழாய்களுக்கு தண்ணீர் வரத்து பாதிப்பு ஏற்படும். எனவே, பேரூராட்சிப் பகுதி முழுவதும் விநியோகம் செய்ய போதுமான தண்ணீர் இல்லை.

38—

**கிராமப் பஞ்சாயத்துகள்**

**வினா எண் 24429—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்திலுள்ள வருவாயற்ற டவுன் பஞ்சாயத்துகளை கிராமப் பஞ்சாயத்து என மாற்றி அரசு உத்தரவிட்டும், மீண்டும் ஒரு அரசாணை அதை தடுத்து விட்டதால் இந்தப் பேரூராட்சிகள் மீண்டும் கிராமப் பஞ்சாயத்து என மாற்றி அறிவிக்கப்படுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றங்களின் தீர்மானங்களின் அடிப்படையில் 11 பேரூராட்சிகள், ஊராட்சிகளாக மாற்றி அமைக்கப்பட்டு, அவை 1-4-1999 முதல் ஊராட்சிகளாக செயல்பட்டு வருகின்றன.

39—

**இராஜாஜி பூங்கா**

**வினா எண் 24517—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள இராஜாஜி பூங்கா எப்பொழுது திறக்கப்பட்டது? இராஜாஜி பூங்கா தற்சமயம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பூங்காவைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடியில் உள்ள இராஜாஜி பூங்கா சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. அதைச் செப்பனிட நகராட்சியால் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

40—

**பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்தல்**

**வினா எண் 24703—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி நகரப் பேருந்து நிலையம் நெரிசலான தற்போதைய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்படுமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழனி நகராட்சியில் தற்போது வ.உ.சி. பேருந்து நிலையம் நகரின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தை ஒட்டியுள்ள வையாபுரி குளத்தில் 5.25 ஏக்கர் நிலப்பரப்பில் தற்போதைய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வது குறித்த திட்டம் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது. தற்போதைய பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசம் ஏதும் இல்லை.

**41—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 24782—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அறியும். செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**42—**

**பேருந்து நிலையம் கட்டுதல்**

**வினா எண் 24811—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) விக்கிரவாண்டி பேரூராட்சியில் பஸ் ஸ்டாண்டு (Bus stand) கட்டுவதற்குத் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதை அரசு விரைவுபடுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10.00 லட்சம் முதல் தவணையாக விடுவிக்கப்பட்டு பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. 30-9-1999-க்குள் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**43—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 24816—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, சமூகரெங்கபுரம் கஸ்பாவில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்று நீர் உவர்ப்பாக மாறியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இக்குடியிருப்பிற்காக 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன், இரண்டு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்ட மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலிருந்து ஊராட்சி மன்றத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இரண்டு ஆழ்துளைக் கிணறுகளில்

[2000 மே 18

ஒன்றில் உள்ள நீர் உவர் நீராக மாறியுள்ளது. புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து நீராதாரத்தைப் பெருக்க வேண்டுமெனில் ரூ. 4.30 இலட்சம் ஆகுமெனக் கணக்கிடப்பட்டு, மதிப்பீடு தொகையில் 50% பணத்தை வாரியத்திற்குப் பஞ்சாயத்து செலுத்தும் நிலையில் புனரமைப்பு திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**44—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 24851—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், ஜெங்கம்பூண்டி இருளர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அடுத்த நிதியாண்டில் (2000-2001) குடிநீர்த் திட்டம் செயல்படுத்தத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 24852—திரு. ந. பாண்டுரங்கன்—**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், செட்டாங்குளம் (மதுரா), இடையர்பாளையம் புதூர் கிராமத்தை



2000 மே 18]

இணைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

**46—**

**பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 25051—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் நகரப் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஓமலூர் பேரூராட்சிப் பேருந்து நிலையத்தை ஐ.டி.எஸ்.எம்.டி. திட்டத்தின்கீழ் ரூ.15.76 லட்சம் மதிப்பீட்டில் விரிவுபடுத்த மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பேருந்து நிலைய விரிவாக்கப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

[2000 மே 18

47—

## கட்டடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 25057—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பணிகொண்டான்விடுதி ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம் பணிகொண்டான்விடுதி ஊராட்சி மன்ற அலுவலகத்தைச் செப்பனிட ரூ.20,000/- தேவைப்படுகிறது. இப்பணியைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதி மற்றும் அரசு அளிக்கும் மானியத்தைக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

48—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 25152—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற எந்தெந்த தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மத்திய அரசு, மாநில அரசு, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் மற்றும் கட்டமைப்பு மற்றும் குத்தகை நிதியாளர்கள் நிறுவனம்



2000 மே 18]

(IL & FS) ஆகியவற்றின் கூட்டு முயற்சி மற்றும் பங்கீட்டின் மூலம் புதிய திருப்பூர் வளாக மேம்பாட்டுக் கழகம் என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு திருப்பூர் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணியின் முடிவில் திட்டத்தைச் செயற்படுத்துவது மற்றும் பராமரிப்பிற்கான ஒப்பந்தங்களை மஹிந்தரா நிறுவனங்கள் மற்றும் அமெரிக்க நாட்டைச் சார்ந்த Bechtel மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த United Utilities ஆகிய நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கு வழங்க முடிவாகியுள்ளது. புதிய திருப்பூர் வளாக மேம்பாட்டுக் கழகம் உலகளவிலான போட்டி முறையில் இந்தக் கூட்டமைப்பினைத் தேர்ந்தெடுத்துள்ளது.

49—

## கிருஷ்ணா நதிநீர்

**வினா எண் 25307—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், மீனம்பாக்கம் பேரூராட்சிக்கு கிருஷ்ணா நதிநீர் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999 ஆம் ஆண்டு இறுதிக்குள் வழங்கப்படும்.

50—

## மேம்பாலம்

**வினா எண் 25354—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) பெரம்பூரில் இரயில்வே மேம்பாலம், புரசைவாக்கம் நெடுஞ்சாலை-பெரம்பூர் பேரக்ஸ் சாலை சந்திப்பில் டவுட்டன், ராயப்பேட்டை நெடுஞ்சாலை-டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பு மற்றும் டி.டி.கே. சாலை, டி.டி.கே. சாலை-டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பு ஆகிய (4) நான்கு இடங்களில் மேம்பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இம்மேம்பாலம் கட்டும் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பூர் இரயில்வே மேம்பாலம்: இதுவரை 67 ஆழ்துளைக் கடைக்கால்கள் போடப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 ஆழ்துளைக் கடைக்கால்கள் இரயில்வே துறையின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் செய்து முடிக்கப்படும். மேலும் 11 அடுக்கு மூடிகள் போடப்பட்டு 10 தூண்கள் எழுப்பும் பணியும் முடிவடைந்துள்ளது. 1030 க.மீ. அளவுக்கு நான்கு சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. பணிகள் நடைபெற்று வருகின்றன.

புரசைவாக்கம் நெடுஞ்சாலை-பெரம்பூர் பேரக்ஸ் டவுட்டன் சந்திப்பு, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை-இராயப்பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பு, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை டி.டி.கே. சாலை சந்திப்பு:

இப்பணிகள் மூன்றும் 3-5-1999 இல் தொடங்கப்பட்டு 15 மாதங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்பணியை பொறுத்தமட்டில் 105 ஆழ்துளைக் கடைக்கால்களும், 15 தூண்கள் அமைக்கும் பணியும் முடிவடைந்துள்ளன. மற்ற இரண்டு பணிகளைப் பொறுத்தமட்டில் ஆழ்துளைக் கடைக்கால்கள் அடுக்கு மூடி மற்றும் தூண்கள் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. தடுக்கு உத்திரம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் கால அவகாசத்திற்குள் முடிவடையும்.

(ஆ) பாலம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படும்.



2000 மே 18]

51—

## கால்வாய் தூர் எடுத்தல்

**வினா எண் 25363—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதி நகரில் உள்ள கேப்டன் காட்டன் கால்வாய் தூர் எடுக்கும் பணி எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) விரைவாக தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணி நடைபெற்று வருகிறது.

52—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 25612—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஹள்ளி கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

53—

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 25613—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி கெண்டையன அள்ளி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**54—**

**நிதி வசதியை மேம்படுத்துதல்**

**வினா எண் 25643—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நிர்வாகச் செலவுகளையே சமாளிக்க நிதி வசதியில்லாத சிறு ஊராட்சி மன்றங்களின் நிதி வசதியை மேம்படுத்த திட்டங்களை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அது போன்ற ஊராட்சிகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன என்பது அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தலவரி, கேளிக்கை வரி, சொத்துரிமை மாற்றம் மீதான வரி சிறுகனிமங்கள் மீதான உரிமைக் கட்டணம் போன்றவை மூலம் ஊராட்சிக்கு நிதி வசதி மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து நலிவுற்ற ஊராட்சிகளுக்கு நிதி வழங்கப்படுகிறது. 10ஆவது நிதிக் குழு பரிந்துரையின் பேரிலும் கிராம ஊராட்சிகளுக்கு நிதி வழங்கப்படுகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



**55—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 25844—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சி, ஆழிவாய்க்கால் தெற்கு, வடக்கு ஆதிதிராவிடர் தெரு, கட்டகுளம் ஆதிதிராவிடர்கட்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்குழாய்க் கிணறு மூலம் ஒரு புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆழிவாய்க்கால் தெற்கு, வடக்கு ஆதிதிராவிடர் தெரு, கட்டகுளம் ஆதிதிராவிடர் தெரு ஆகிய பகுதிகளுக்கு (1999-2000) நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**56—**

**இணைப்புச் சாலை**

**வினா எண் 25850—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நாட்டரசன் கோட்டை பாலம் - கல்லணை கால்வாய் மேல்கரை வழியாக ஈச்சங்கோட்டைக்கு இணைப்புச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நாட்டரசன் கோட்டை பாலம் - கல்லணைக் கால்வாய் மேலக்கரை வழியாக ஈச்சங்கோட்டைக்கு இணைப்புச் சாலை அமைக்க பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடமாக உள்ளதால், பொதுப் பணித் துறையில் அனுமதி பெறவேண்டும். சாலை அமைக்க ரூ.2.50 இலட்சம் செலவாகும். இப்பணியைச் செயல்படுத்த தற்போது ஊராட்சியிலோ, ஊராட்சி ஒன்றியத்திலோ போதுமான நிதிவசதி இல்லை.

**57—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 25859—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சி, கீழநத்தம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சி, கீழநத்தம் கிராமத்திற்கு 1998-99ஆம் நிதி ஆண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்புக்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

**58—**

**குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 25884—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காவாளிப்பட்டி ஊராட்சி, கீழமேட்டுப்பட்டி, மேலமேட்டுப்பட்டி ஆகிய கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காவாளிப்பட்டி ஊராட்சி, கீழமேட்டுப்பட்டி மற்றும் மேலமேட்டுப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு 1998-99ஆம் நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனிலுள்ளது.

**59—**

**வணிக வளாகம்**

**வினா எண் 25892—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் புதிதாக அமைந்துள்ள நகராட்சி புதிய வணிக வளாகத்தில் (Market) காய்கறி வியாபாரிகள் வியாபாரம் செய்ய முன்வராதது அரசு அறியுமா?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விருத்தாசலத்தில் புதியதாக அமைந்துள்ள நகராட்சி புதிய வணிக வளாகம் கட்ட ரூ.27.00 லட்சம் கடன் பெறப்பட்டது. கடனுக்கான வட்டி இழப்பு இதுவரை சுமார் ரூ.2 லட்சம் என் நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

60—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 26706—திரு. இரா. மகேந்திரன்**—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், ப. முத்தம்பட்டியிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

61—

## தார்ச் சாலை

**வினா எண் 26104—திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகராட்சியைச் சேர்ந்த கொரட்டூர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் உள்ள ரயில் நிலையம் எதிரிலுள்ள தெருக்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தெருக்கள் தார்ச்சாலையாக உடனே செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொரட்டூர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் உள்ள ரயில் நிலையம் எதிரிலுள்ள சாலைகளைச் செப்பனிட உரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆம். நடப்பு ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



62—

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 26106—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, திருவோணம் ஒன்றியம், புதுவிடுதி கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், புதுவிடுதி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

63—

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 26341—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கு நிதி ஒதுக்கும் அளவுகோல் என்ன?

(ஆ) அதை உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராமங்களுக்கு நிதிஒதுக்கீடு தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களின் மக்கள்தொகை அடிப்படையில் அரசின் நிதி ஒதுக்கீட்டில் தனி மனித ஒதுக்கீடு (Per capita) கணக்கிடப்பட்டு நிதி வழங்கப்படுகிறது.

(ஆ) அதை உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**64—**

**நமக்கு நாமே திட்டம்**

**வினா எண் 26354—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமக்கு நாமே திட்டம் வரும் நிதி ஆண்டில் நகர்ப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் முழுமையாக அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நமக்கு நாமே திட்டம் 1999-2000 ஆண்டு முதல் நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 19-4-1999 நாளிட்ட அரசாணை எண் 77-ன் படி, தமிழ்நாட்டில் பேரூராட்சிகளுக்கு ரூ.100 இலட்சமும், நகராட்சிகளுக்கு ரூ.100 இலட்சமும், மாநகராட்சிகளுக்கு ரூ.180 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**65—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 26363—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பெருந்துறை ஒன்றியம், கிருஷ்ணாபுரம் மக்களிடமிருந்து குடிநீர் வசதி செய்யக் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெருந்துறை ஒன்றியம், மூங்கில்பாளையம் ஊராட்சியை சேர்ந்த கிருஷ்ணாபுரம் குடியிருப்பிற்கு 1998-99 ஆம் நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தற்போது குடிநீர்த் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் இக்குடிநீர்த் திட்டமானது பராமரிப்புக்காக பஞ்சாயத்து வசம் 17-5-1999 அன்று ஒப்படைக்கப்பட்டு விட்டது.

**66—**

**கசிவு நீர்க்குட்டை**

**வினா எண் 26497—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், மொரட்டுப்பாளையம் ஊராட்சியிலுள்ள ஜேடர்பாளையம் கசிவுநீர்க் குட்டையை ஆழப்படுத்தும்படி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு ஏதும் வரவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2000 மே 18

67—

பல் மருத்துவமனை

**வினா எண் 26570—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியிடம் பல் மருத்துவமனை தொடங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு செய்யும் உதவி என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பல் மருத்துவமனை தொடங்கும் திட்டம் சென்னை மாநகராட்சியிடம் உள்ளது.

(ஆ) அரசிடம் நிதியுதவி கோரப்படவில்லை.

68—

வடிகால் வசதி

**வினா எண் 26719—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரின் வடகிழக்கு எல்லைப்புற வார்டுகளில் கழிவுநீர் சாலையில் தேங்கி நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வடிகால் வசதி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் நகரில் வடகிழக்கு எல்லைப்புற வார்டுகளில் உள்ள மனைப்பிரிவுகள் அங்கீகாரம் பெறாமல் இருப்பதால் இது குறித்து நிரந்தரத் தீர்வு காணப்பட முடியவில்லை. இருப்பினும் திருப்பூர் நகராட்சியின் கழிவுநீர் உறிஞ்சு வண்டிகள் மூலம் அவ்வப்போது தேங்கி நிற்கும் கழிவுநீர் அகற்றப்படுகிறது.



2000 மே 18]

69—

குடிநீர் வசதி

**வினா எண் 26859—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வள்ளிபுரம் ஊராட்சி அவரைப்பாளையத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவதை அரசு அறியுமா?

ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இக்குடியிருப்பில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) ஆழ் குழாய்க் கிணறு அமைத்து தனி மின்னிறைப்பான் திட்டம் மேற்கொள்ளப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இத்திட்டத்தினை 12/99-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

70—

குடிநீர்த் திட்டம்

**வினா எண் 26868—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடன்குடி - சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கருங்குளம் ஒன்றியம், கால்வாய் கிராமம் சேர்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடன்குடி - சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கருங்குளம் ஒன்றியம், கால்வாய் கிராமம் சேர்க்கப்படவில்லை. ஆனால் கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள 42 கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கால்வாய் கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

**71—**

**கூட்டுக்குடிநீர் திட்டம்**

**வினா எண் 26869—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடன்குடி - சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆழ்வார் திருநகரி ஒன்றியத்தைச் சேர்ந்த உடையார்குளம், குறிப்பன்குளம், வெள்ளமடம் ஆகிய பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடன்குடி - சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆழ்வார் திருநகரி ஒன்றியத்தைச் சேர்ந்த உடையார்குளம், குறிப்பன்குளம், வெள்ளமடம் ஆகிய பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்படவில்லை. ஆயினும், இம்மூன்று பஞ்சாயத்துக்களில் கீழ்க்கண்ட இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு, பின் வரும் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

| | | |
|---|---|---|
| 1. குறிப்பன்குளம் | : | புதிய குடிநீர்த் திட்டம் சுமார் 4.82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 2. வெள்ளமடம் | : | மேலவெள்ளமடம், கீழவெள்ளமடம் குடியிருப்புகளுக்கு விரிவான மதிப்பீடு ரூ.41.62 இலட்சங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| 3. உடையார்குளம் | : | வரும் ஆண்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். |



**72—**

**உபரி நீர்**

**வினா எண் 26966—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பெருந்துறை, அவினாசி ஆகிய வறட்சியான பகுதிகளுக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அத்திக்கடவு என்ற இடத்தில் மழைக்காலங்களில் வீணாய் கடலுக்கு போகும் உபரி நீரை கொண்டு நிரப்பும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி ஆற்றில் மிகுதியாகும் வெள்ள நீரைக் கொண்டு கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த காரமடை, அன்னூர், அவிநாசி, நம்பியூர், பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குளம், குட்டைகளை நிரப்பி, நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்தும் திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஒரு தனி ஆலோசகர் (கன்சல்டன்சி) நியமித்து ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

[2000 மே 18

73—

## குடிநீர் வசதி

**வினா எண் 26975—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை ஒன்றியம் - மூங்கில்பாளையம் ஊராட்சி - சங்குநகர் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும்படி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெருந்துறை ஒன்றியம்-மூங்கில்பாளையம் ஊராட்சி, சங்குநகர் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும்படி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது. குடிநீர்த் திட்டம் 2000-2001 ஆம் நிதியாண்டில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

74—

## குடிதண்ணீர் வசதி

**வினா எண் 26978—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம் - பெருந்துறை பேரூராட்சி, சென்னியவலசு, தோப்புப்பாளையம், பணிக்கம் பாளையம், சின்னமடத்துப்பாளையம் கருக்கங்காட்டூர் ஆகிய ஊர்களுக்கு குடிதண்ணீர் வசதியில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்த ஊர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சென்னிமலை மற்றும் வழியோர பேரூராட்சி மற்றும் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சென்னியவலசு, தோப்புப்பாளையம், பணிக்கம் பாளையம், சின்னமடத்துப்பாளையம் கருக்கங்காட்டூர் ஆகிய ஊர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இக் குடிநீர்த் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பின்னர் திட்டம் தொடங்கப்படும்.*

75—

## காவிரி குடிநீர்

**வினா எண் 26984—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சின்னசோரகை ஊராட்சியில் அனைத்து சிற்றூர்களுக்கும் காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னசோரகை ஊராட்சியிலுள்ள குடியிருப்புகள் 11 ஆகும். (1992-ம் ஆண்டில் மறுஆய்வின்படி) இக்குடியிருப்புகளுக்கு காவிரி நீர் பெறும் வண்ணம் நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 554 குடியிருப்புகள் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. திட்டம் அரசு ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.*

[2000 மே 18

76—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 26985—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஒன்றியம், சூரப்பள்ளி ஊராட்சியில் அனைத்து சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சூரப்பள்ளி ஊராட்சியிலுள்ள குடியிருப்புகள் 21 ஆகும். (1992 ஆம் ஆண்டின் மறு ஆய்வின்படி) புதியதாக 5 குடியிருப்புகள் இந்த ஊராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கண்ட குடியிருப்புகளில், 1 குடியிருப்பு மட்டும், காவிரி குடிநீர் பெறும் வண்ணம் ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 10 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீதமுள்ள 20 குடியிருப்புகள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 5 குடியிருப்புகள், நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. திட்டத்திற்கு அரசு ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

77—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 26987—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், ஆவடத்தூர் ஊராட்சியில் அனைத்து சிற்றூர்களுக்கும் காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நாட்களுக்குள் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆவடத்தூர் ஊராட்சியில் உள்ள குடியிருப்புகள் 15 ஆகும்.

மேற்கண்ட 15 குடியிருப்புகளில் இரு குடியிருப்புகள் காவிரி குடிநீர் பெறும் வண்ணம் ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 10 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது மீதமுள்ள 13 குடியிருப்புகள், நங்கவள்ளி, மேச்சேரி ஓமலூர், காடையாம்பட்டி, மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்டம் அரசு ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.

78—

### குடிநீர் வசதி

**வினா எண் 26988—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், வீரக்கல் ஊராட்சியில் அனைத்து சிற்றூர்களுக்கும் காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், வீரக்கல் ஊராட்சியிலுள்ள குடியிருப்புகள் 14 ஆகும்.

மேற்கண்ட 14 குடியிருப்புகளில் இரு குடியிருப்புகள் உலக வங்கி திட்டத்தின்கீழ் காவிரி குடிநீர் பெறுகின்றன. மீதமுள்ள 12 குடியிருப்புகள் நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்டம் அரசு ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.

**79—**

### காவிரி நீர்

**வினா எண் 26989—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கரிக்காபட்டி ஊராட்சியில் உள்ள சிற்றூர்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலங்களுக்குள் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கரிக்காபட்டி ஊராட்சியில் உள்ள குடியிருப்புகள் 1992 மறு ஆய்வின்படி 6 ஆகும்.

மேற்கண்ட அனைத்து குடியிருப்புகளும் காவிரி குடிநீர் பெறும் வகையில் நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் தாரமங்கலம் ஒன்றியங்களிலுள்ள 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நிறைவேற்றப்படும்.





**80—**

### காவிரி நீர்

**வினா எண் 26990—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சாணாரப்பட்டி ஊராட்சியில் அனைத்து சிற்றூர்களுக்கும் காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராடசி ஒன்றியம், சாணாரப்பட்டி ஊராட்சியில் உள்ள குடியிருபபுகள் 1992 மறு ஆய்வின்படி மொத்தம் 12 ஆகும்.

மேற்கண்ட குடியிருப்புகளில் 4 குடியிருப்புகள் காவிரி குடிநீர் பெறும் வகையில் ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 10 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 8 குடியிருப்புகள் நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் தாரமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2000 மே 18

81—

நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26991—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிளியனூர் ஊராட்சிக்குட்பட்ட நள்ளானூர் கிராமத்திற்குக் குடிநீர் வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிளியனூர் ஊராட்சிக்குட்பட்ட நள்ளானூர் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய மின் இணைப்பான் திட்டம் 2000-2001ம் நிதியாண்டில் எடுத்து நிறைவேற்ற ஆவன செய்யப்படும்.

82—

குடிநீர் வசதி

**வினா எண் 26993—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், பெரியசோரகை ஊராட்சியில் உள்ள அனைத்து சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், பெரியசோரகை ஊராட்சியில் உள்ள குடியிருப்புகள், 1992 மறு ஆய்வின்படி 16 ஆகும். மேற்கண்ட 16 குடியிருப்புகளும், காவிரிக் குடிநீர் பெறும் வகையில், நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி, தாரமங்கலம் ஆகிய ஒன்றியங்களின் 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

83—

பணியிடங்கள்

**வினா எண் 27009—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சியில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அரசின் குறித்த நிலையின் (Norms) படி இன்னும் எத்தனை பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு நகராட்சியில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள் 594.

(ஆ) அரசு நிர்ணயித்த அளவுகோலின்படி இன்னும் நிரப்பப்படவேண்டிய பணியிடங்கள் - இல்லை.

**84—**

**பழங்குடி மக்களுக்குக் குடிநீர் வசதி**

**வினா எண் 27016—திரு. டி. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், கடையாளுமூடு பேரூராட்சி, வட்டப்பாறை பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பழங்குடி மக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?*

*(ஆ) இல்லையெனில், எப்போது அமலாக்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கடையாளுமூடு பேரூராட்சி, வட்டப்பாறை குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு குடிநீர் திட்டம் செயல்படுத்த வன இலாகா அனுமதி பெறப்பட வேண்டும். வரும் நிதியாண்டில் (2000-2001) முன்னுரிமை அடிப்படையில் வன இலாகா அனுமதி பெற்று நீராதாரம் மற்றும் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**85—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 27726—திரு. டி. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை—மெதுகும்மல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது அமலாக்கப்படும்?*

*(ஆ) அவர்களுடைய ஊதிய உயர்வு, சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?*





*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை, மெதுகும்மல் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 13 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலும் நீர் ஏற்றப்பட்டு தற்போது முழுமையாக மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.*

*(ஆ) களியக்காவிளை, மெதுக்கும்மல் மற்றும் 19 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பராமரிப்பு பணிகளுக்கு பணியாட்கள் நியமிக்கப்படவில்லை. தற்போது தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணியாட்கள் நியமிக்கப்பட்டு இத்திட்டத்தின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு என்ற வினாவிற்கு இடமில்லை.*

**86—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 27750—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி பேரூராட்சி, சந்தைப்பேட்டையில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தை காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து காடையாம்பட்டி பேரூராட்சியிடம் ஒப்படைக்க அரசு முன் வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சமுதாயக்கூடம் காடையாம்பட்டி பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.*

87—

## இலவச மின்சாரம்

**வினா எண் 28069—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம குடிநீர்த் திட்டங்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

88—

## மின்வசதி

**வினா எண் 28136—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, மம்மட்டியான் கோவில் காட்டுவளவில் இதுவரை மின்வசதி இல்லாமல் இருப்பது அரசு கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெருவிளக்கு அமைத்து மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, மம்மட்டியான் கோவில் காட்டுவளவில் 2



குடும்பங்கள்தான் உள்ளன. குறைந்தது 5 குடும்பங்கள் இருந்தால் தான் அவ்விடத்தில் மின்வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என விதிமுறை உள்ளதால் மேற்படி இடத்தில் மின் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) இருப்பினும் வரும் நிதியாண்டில் இங்கு தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

## தனி மான்யம்

**வினா எண் 28183—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் ஏற்றும் மோட்டார் இணைப்பு பெற நிதி வசதியற்ற ஊராட்சிகளுக்கு அரசு தனி மான்யம் வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

90—

## கலை அரங்கம்

**வினா எண்: 28331—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் நகரில் மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் கலை அரங்கம் ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கலை அரங்கம் கட்ட பென்னாகரம் பேரூராட்சியில் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லை. எனவே கலை அரங்கம் கட்ட வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**91—**

### நவீன பேருந்து நிலையம்

**வினா எண் 28465—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**92—**

### வணிக வளாகம்

**வினா எண் 28466—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

சேலம் மாவட்டம், மேட்டூர் அணைக்கட்டு, முனியப்பன் கோவில் அருகில் வணிகவளாகம் ஒன்று அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேட்டூர் அணைக்கட்டு, முனியப்பன் கோயில் அருகில் நகராட்சிக்குச் சொந்தமாக வணிக வளாகம் கட்டும் அளவிற்கு இடம் இல்லை. எனவே, இங்கு வணிக வளாகம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

**93—**

### கொளத்தூரில் வணிக வளாகம்

**வினா எண் 28468—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் வணிகவளாகம் ஒன்று அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் வணிக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

### வணிக வளாகம் அமைத்தல்

**வினா எண் 28470—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பேரூராட்சியில் வணிக வளாகம் ஒன்று அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். ஒருங்கிணைந்த நகரப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் உதவி பெற்று ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**95—**

**வணிக வளாகம்**

**வினா எண் 28471—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விடை—

மேட்டூர் நகராட்சியில் 1996-97-ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 16.50 லட்சம் செலவில் ஏற்கெனவே வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**96—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 29186—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பேரூராட்சி வியாபார மையம் என்பதால் பேரூராட்சி சார்பாக ஒரு தங்கும் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொளத்தூர் பேரூராட்சியில் தங்கும் விடுதி கட்ட போதிய இடவசதியோ நிதி வசதியோ இல்லை. அதனால் விடுதி கட்ட வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**97—**

**வைப்புத் தொகை**

**வினா எண் 29267—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சிகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கான வைப்புத்தொகையை உயர்த்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) அதில் பழைய இணைப்புகளுக்கான வைப்புத் தொகையை உயர்த்த அதிகாரம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பழைய இணைப்புகளுக்கான வைப்புத்தொகையை உயர்த்த நகர்மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

[2000 மே 18

98—

### நவீன பேருந்து நிலையம்

**வினா எண் 29297—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பேரூராட்சியில் ஒரு நவீன பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பேருந்து நிலைய திட்டத்திற்கு முதல் தவணையாக ரூ.10.00 லட்சம் நகர் ஊரமைப்பு ஆணையரால் விடுவிக்கப்பட்டு தற்போது பேஸ்மெண்ட் வரை கட்டப்பட்டு ஆர்.சி.சி. தூண்கள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பணிகள் முழுவதும் டிசம்பர் 1999க்குள் முடிக்கப்பட்டு விடும்.

99—

### பேருந்து நிலையம்

**வினா எண் 29298—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாறுதல் செய்து நவீன பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பென்னாகரம் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய போதிய இடவசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

100—

### மருத்துவமனைக்கு நிலம்

**வினா எண் 29367—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் நகராட்சி வளாகத்தை அரசு பொது மருத்துவ மனைக்கு ஒதுக்கிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடியாத்தம் நகராட்சி வளாகத்தில் 4000 சதுர அடி இடம் குடியாத்தம் அரசு மருத்துவ மனைக்கு வழங்க குடியாத்தம் நகர்மன்றத்திற்கு அனுமதி அளித்து 3-9-1999 அன்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

101—

### பொழுது போக்கு பூங்காக்கள்

**வினா எண் 29368—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிமூலம் சென்னையில் நவீன பொழுது போக்கு பூங்காக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்கள் அமைக்கப்படவுள்ளன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சென்னை பூங்கா நகரிலுள்ள மைலேடிஸ் பூங்காவை மனமகிழ் பூங்காவாக மாற்றும் சென்னை மாநகராட்சியின் செயற்குறிப்பிற்கு அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**102—**

**வணிக வளாகம்**

**வினா எண் 29370—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி நகரில் தேசிய நெடுஞ்சாலையில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குப் பின்புறம் வணிக வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகரில் புதிதாக வணிக வளாகம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**103—**

**பாதாள சாக்கடை**

**வினா எண் 29402—திரு. எம். ரங்கநாதன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) குன்னூர் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**104—**

**கடைகள் கட்டுதல்**

**வினா எண் 29471—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளம் பேரூராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தை கூடும் இடத்தில் கடைகள் மற்றும் மதில்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சாத்தான்குளம் பேரூராட்சி வாரச்சந்தை கூடும் இடத்தில் கடைகள் போதுமான அளவு உள்ளதால் கடைகள் கட்டும் அவசியம் எழவில்லை. பேரூராட்சி பொது நிதியிலிருந்து மதில்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

105—

### பணிக்காலம்

**வினா எண் 29525—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் மட்டுமே இயங்கும் ஊராட்சி ஒன்றிய முழுநேர மருந்தகங்களில் பணியாற்றும் எம்.பி.பி.எஸ். டாக்டர்களின் பட்ட மேற்படிப்புக் காலத்தைப் பணிக்காலமாகக் கருதிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றிய முறையான மருந்தகங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு, அவர்கள் பட்ட மேற்படிப்புக்காகச் செலவிட்ட காலத்தினை பணிக்காலமாக கருதுவதைப் பொறுத்தவரை, அரசு உதவித் தொகையுடன் கூடிய பட்டமேற்படிப்புக்குப்பின், மீணடும் அதே ஊராட்சி ஒன்றியப் பணியில் சேர்ந்து பணியாற்றும் நிகழ்வுகளில் மட்டும் செயற்குறிப்புகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய தீர்மானத்தோடு முன்மொழியப்பட்டால் அரசு மட்டததில் பரிசீலிக்கப்படும் என அரசு கடிதம் எண் 5503/இ5/98-17, நாள் 30-11-1999ல் ஆணையிடப்பட்டுள்ளது.

106—

### இந்திய மருத்துவ நிலையங்கள்

**வினா எண் 29849—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் இந்திய மருத்துவ நிலையங்கள் துவக்க அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பரமக்குடி நகராட்சிக்கு அனுமதி வழங்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

107—

### சிறப்பு நிதி

**வினா எண் 30058—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பொங்குபாளையம் ஊராட்சி வருவாய் குறைவான ஊராட்சி என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பொங்குபாளையம் ஊராட்சியின் வருவாய் திருப்திகரமாய் உள்ளதால் சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்கும் நிலை எழவில்லை.

108—

### குடிநீர் வசதி

**வினா எண் 30065—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

*(அ) பெருந்துறை ஒன்றியம், சாராபுரம் என்ற ஊருக்குக் குடிநீர் வசதி செய்து தரக் கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இக்குடியிருப்புக்கு 2000-2001 ஆம் ஆண்டு ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.*

**109—**

### மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா என் 30087—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆண்டிபடம் தொகுதி, ஒலையூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தற்பொழுது அருகிலுள்ள குடிகாடு குடியிருப்புக்கும் ஒலையூருக்கும் சேர்த்துச் செயல்பாட்டில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ஒலையூரில் நபருக்கு நாளொன்றுக்கு 15 லிட்டர் நீர் வழங்கப்படுகிறது. ஒலையூருக்கு மட்டும் தனிமேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைப்பது குறித்து தமிழ்நாடு குடிநீர் வாரியம் நிதிநிலைக்குட்பட்டு ஆய்வு செய்யும்.*



2000 மே 18]

**110—**

### பேருந்து நிலையம்

**வினா என் 30183—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் பேரூராட்சி, கொங்கனாபுரத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) அதை இந்த நிதியாண்டில் துவக்க அரசு முன்வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

**111—**

### கிராம சபைக் கூட்டங்கள்

**வினா என் 30289—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டு ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், கிராமசபைகளில் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

(ஆ) கிராமசபைக் கூட்டங்களில் அடிப்படை வசதிகள் கோரி மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் மீது சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**112—**

**நகராட்சியோடு இணைப்பு**

**வினா எண் 30431—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் சந்திப்பிலிருந்து சி.எஸ்.ஐ. மருத்துவமனை இருக்கும் சாலையோர பகுதி ஒரு சர்வே பகுதியோடு இருக்கும் பஞ்சாயத்து பகுதியை நகராட்சியோடு இணைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குழித்துறை நகராட்சியுடன் அருகிலுள்ள ஊராட்சிப் பகுதியை இணைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**113—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30432—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பேரூராட்சியில் வாளோடு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை போக்க மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி குழாய்கள் மற்றும் நல்லிகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பேரூராட்சியில் வாளோடு குடியிருப்புக்கு திக்கணங்கோடு கிராம குடிநீர் திட்டத்திலிருந்து ஒரு குழாய் நீடிப்பு செய்து ஒரு பொது நல்லி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு திறந்த வெளி கிணறு அமைக்கப்பட்டு பொது மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்பொழுது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 15 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

**114—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30433—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பனங்குழியில் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பனங்குழியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**115—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 30437—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகருக்கு மோர்தாணா அணைக்கட்டில் இருந்து குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சிக்கு மோர்தானா அணைக்கட்டில் இருந்து குடிநீர் வழங்கும் சாத்தியக் கூறுகள் இல்லை. மோர்தானா அணைக்கட்டு பாசன வசதிக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. குடிநீர் வழங்குவதற்கான ஒதுக்கீடு ஏதுமில்லை. எனினும் பாலாற்று நீரை ஆதாரமாகக் கொண்டு ரூ.413 இலட்சங்களுக்கு ஒரு திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டத்திற்கான 5 நீராதார நீர் உறிஞ்சு கிணறுகளில் 3 கிணறுகள் அமைக்கப்பட்டு விட்டது. ஏனைய கிணறுகள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் யாவும் முழுமையாக வரும் டிசம்பர் 2000-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**116—**

## குடிநீர் வசதி

**வினா எண் 30442—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வள்ளலார்குளம், சுப்பிரமணியபேரி, பண்ணையார்குளம், காரியாகுளம், நெடுவாழி, மகேந்திரபுரம், பட்டார்குளம், செம்மங்குளம் ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் மற்றும் ராதாபுரம் ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட வள்ளலார் குளம், சுப்பிரமணியபேரி, பண்ணையார் குளம், காரியாகுளம், நெடுவாழி, மகேந்திரபுரம், பட்டார்குளம், செம்மங்குளம் ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு ஆழ்குழாய் பம்புகள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள குடிநீர் வசதியே போதுமானதாக உள்ளது.

**117—**

## கூட்டுக் குடிநீர் திட்டம்

**வினா எண் 30499—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம்-உடன்குடி கூட்டுக் குடிநீர் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் எவ்வளவு நாட்களில் முடிவடைந்து மக்கள் பயன்பெறுவார்கள் என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம், உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் நீராதாரப் பணிகள் முடிவடைந்துள்ளன. நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதர பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பணிகள் துவங்கப்படவுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிந்து மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

118—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30899—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசன அள்ளி ஊராட்சி, கொப்பிரிபள்ளம், முத்தானூர் ஆகிய கிராமங்களில் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த கொப்பிரிப்பள்ளம் கிராமத்தில் இந்த ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதுமில்லை. எனினும், இக்குடியிருப்பில் வரும் நிதியாண்டில் (2000-2001) மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கட் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த முத்தானூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவில்லை. மண்ணப்பன்கொட்டாய் விசைப்பம்புத் திட்டத்திலிருந்து முத்தானூர் கிராமத்திற்குக் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கும்பொருட்டு திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. 3/2000-க்குள் மின் இணைப்பு பெறப்பட்டவுடன் திட்டம் பயனுக்குக் கொண்டுவரப்படும். இந்நிலையில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதுமில்லை.

119—

### நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா எண் 30895—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, சக்கிலிக்குட்டை, தாதன்கொட்டாய் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, சக்கிலிக்குட்டை குடியிருப்பில் நடப்பு நிதியாண்டு 1999-2000-ல், 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் திட்டத்தின் அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன. மின் இணைப்பு பெறப்பட்டவுடன் இத்திட்டம் மக்கட் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

தாதன்கொட்டாய் குடியிருப்பில் மக்கட் தொகை 150-க்குக் குறைவாக உள்ளதால் இக்குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் மேற்கொள்ள இயலவில்லை. எனினும், இக்குடியிருப்பில் வரும் நிதியாண்டில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கட் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

120—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 30901—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, நல்லமனார்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட தொட்டணம்பட்டிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி நல்லமனார்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட தொட்டணம்பட்டி குடியிருப்புக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க திட்டம் ஏதுமில்லை. ஆனால், நடப்பு நிதியாண்டில் தனித்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, மதிப்பீடு ரூ. 7,615 இலட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தினை விரைவில் முடிக்கும் வகையில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.*

**121—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 30903—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**122—**

**மெர்குரி விளக்கு**

**வினா எண் 31055—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மெர்குரி விளக்கு போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**123—**

**ஒழுங்குபடுத்துதல்**

**வினா எண் 31214—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சொத்து பதிவான பிறகு, அது சம்பந்தப்பட்ட பெயர் மாற்றத்தைச் செய்ய சார்பதிவாளர் அலுவலகம் தாமதமின்றி சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு தகவல் அனுப்பி ஒழுங்குப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பட்டா மாறுதல் மனுக்கள் குறிப்பிட்ட நமூனாவில் ஆவணங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும்போது, உரிய கட்டணத்துடன் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த பட்டா மாறுதல் மனுக்கள், உரிய பதிவு விவரங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஒவ்வொரு வாரமும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் மீது வட்டாட்சியர்கள் பெயர் மாற்றம் செய்து பட்டா வழங்குகின்றனர். பட்டா மாற்றம் தொடர்பான பணிகள் வருவாய்த் துறையைச் சேர்ந்தது*

என்பதால், பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில், ஆவணப் பதிவின்போது பெறப்படும் பட்டா மாறுதல் மனுக்களை தக்க நடவடிக்கைக்கு வட்டாட்சியருக்கு அனுப்பும் பணி மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

**124—**

**இளநிலை உதவியாளர்**

**வினா எண் 31328—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஓர் இளநிலை உதவியாளரை முழுநேரப் பணியாளராக அரசு நியமிக்க வேண்டும் என ஊராட்சித் தலைவர்கள் கோரி வருவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நிலை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு இளநிலை உதவியாளரை முழுநேரப் பணியாளராக நியமிக்க வேண்டும் என ஊராட்சித் தலைவர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

**125—**

**வீடுகளுக்கு இணைப்பு**

**வினா எண் 31483—திரு. பெ.சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் ஊராட்சிகள் பராமரிப்பிலுள்ள குடிதண்ணீர் தொட்டியிலிருந்து வீடுகளுக்கு இணைப்பு வழங்க அரசு அனுமதித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை நிலை எண் 260 (குடிநீர் வழங்கல்-I) ஊரக வளர்ச்சித் துறை, நாள் 9-12-1992-ல் தமிழ்நாட்டில் ஊராட்சிகள் பராமரிப்பிலுள்ள குடிதண்ணீர் தொட்டியிலிருந்து வீடுகளுக்கு இணைப்பு வழங்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

**126—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 32107—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் காடுவெட்டு விடுதி ஊராட்சியைச் சார்ந்த நரங்கியப்பட்டு கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் தெரு மக்கட்கும், முத்தரையர் தெரு மக்கட்கும் குடிநீர் பிரச்சனையைப் போக்க ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவோணம் ஒன்றியம், காடுவெட்டு விடுதி ஊராட்சியைச் சார்ந்த நரங்கியபட்டு கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் தெரு மற்றும் முத்தரையர் தெருக்களின் தற்போதைய மக்கட்தொகை 233 ஆகும். தற்சமயம் வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்கள் ஆகும். தற்சமயம் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் 1000 மீட்டர் பகிர்மானக் குழாய் மற்றும் பொது குழாய் மேடைகள் 9 எண்ணிக்கையுடன் கூடிய ஒரு குடிநீர்த் திட்டம் 1988-89-ல் நிறைவேற்றப்பட்டு ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டு திட்டம் நடைமுறையில் உள்ளது. இதுவே தற்போதைய தேவைக்குப் போதுமானதாகும்.

[2000 மே 18

**127—**

**புதிய மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி**

**வினா எண் 32135—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், வாண்டையார் காலனி, நாயுடு காலனி ஆகிய இடங்களில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க புதிய மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சை ஒன்றியம், நீலகிரி ஊராட்சியில் உள்ள நாயுடு காலனி, வாண்டையார் காலனி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். வாண்டையார் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 2000 மீட்டர் நீளமுள்ள விநியோக குழாய் மற்றும் 13 பொதுக்குழாய் மேடைப் பணிகள் 1995-96 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு 1997-ல் ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் திட்டத்திலிருந்து நாயுடு காலனியில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கலாம். இத்திட்டம் ஊராட்சியின் பொறுப்பில் உள்ளதால் ஊராட்சியே குழாய் நீட்டிப்பு செய்து கொள்ளலாம்.*

**128—**

**புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 32142—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் உள்ள ஆதனக்கோட்டை குடியிருப்பிற்கு குடிநீர் வழங்க 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.*

**129—**

**ஊராட்சிகளில் நிதி நிலை**

**வினா எண் 32434—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊராட்சிகளின் நிதியினை மீண்டும் அரசு கருவூலத்திற்குக் கொண்டு வந்து ஊராட்சிகளில் தவறுகள் நடைபெறாமல் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**130—**

**குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 32484—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோவலங்காட்டில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதால் அங்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சப்பள்ளி ஊராட்சியில் உள்ள கோவலங்காடு என்ற தெற்கு வளவு குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) கிராம குடிநீர்த் திட்டத்தின்கீழ் சிறப்பு அனுமதியின் பேரில், ஒரு ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க ரூ. 5.70 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் விரைவில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூன் 2000-க்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**131—**

**தனி மண்டலம்**

**வினா எண் 32600—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சென்னை மாநகராட்சி 153, 154 மற்றும் 155-வது வட்டங்களை இணைத்து தனி மண்டலமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**132—**

**குடிநீர்த் தொட்டி கட்டும் பணி**

**வினா எண் 32605—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிட்லபாக்கம் மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி கட்டும் பணி துரிதப்படுத்தப்படுமா?

(ஆ) எப்போது பணி முடியும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 80.94 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 43, நாள் 9-1-1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி உட்பட அனைத்து கட்டுமானப் பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) இத்திட்டத்தினை செப்டம்பர் 2000-ல் முடித்து பயனுக்குக் கொண்டுவர கால நிர்ணயம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**133—**

**குழாய் புதைக்கும் பணி**

**வினா எண் 32606—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரைப்பாக்கம் எம்.சி.என். நகரில் கிணறு எடுத்து முடிக்கப்பட்ட நிலையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குழாய் புதைக்கும் பணியை அரசு துரிதப்படுத்துமா?

[2000 மே 18

(ஆ) அதன் இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், துரைப்பாக்கம் எம்சிஎன். நகருக்கு ஊராட்சி மூலம் அமைக்கப்பட்ட கிணற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ. 7.22 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.

**134—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 32662—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புதிய பேருந்து நிலையத்திற்கு அடிப்படை சுகாதார வசதிகள் செய்யப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் உபயோகத்திற்காக மூன்று கட்டணக் கழிப்பிடங்கள், இலவச சிறுநீர் கழிப்பிடங்கள், குளிரூட்டப்பட்ட குடிநீர் வசதி மற்றும் சாலை வசதிகள் ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன.

**135—**

**இணைப்புச் சாலை**

**வினா எண் 32762—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) தாம்பரம் தொகுதி, 153-வது வட்டம், மேற்கு வேளச்சேரி (பிருந்தாவன் நகரை) கிழக்கு வேளச்சேரியோடு இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் சென்னை மாநகராட்சியின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) தாம்பரம் தொகுதி, 153-வது வட்டம், மேற்கு வேளச்சேரி (பிருந்தாவன் நகரை) கிழக்கு வேளச்சேரியோடு இணைக்கும் இணைப்புச் சாலைக்குரிய நிலம் பொதுப்பணித் துறை (பாசனம்)-க்கு உரியது என்பதால் இதுகுறித்த வரைபடம் மற்றும் நிலத்தினைக் கோரும் முறையான விண்ணப்பம் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு சென்னை மாநகராட்சி ஆணையரால் அனுப்பப்படவுள்ளது.

**136—**

**புதிய பேருந்து நிலையம்**

**வினா எண் 33104—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்புவனம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**137—**

**பருத்தி அரவை நிலையம்**

**வினா எண் 4709—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, கிருஷ்ணன் கோவில் பகுதியில் பருத்தி அரவை நிலையம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் கிருஷ்ணன் கோவில் பகுதி பருத்தி அரவை நிலையம் நான்கு பஞ்சு அரவை இயந்திரங்களுக்கு ரூ. 57,700 செலவு செய்து பராமரிப்பு மேற்கொண்டு அதற்கான கூலி அடிப்படையில் நாளொன்றுக்கு 12 ஆட்களை நியமனம் செய்து அரவை இயந்திரங்களை இயக்குவது பொருளாதார ரீதியில் உசிதமல்ல.

**138—**

**ஈட்டுத் தொகை**

**வினா எண் 10465—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கரும்பலூர், கொட்டையூர், பெருந்துறைப்பட்டு ஆகிய கிராமங்களில் கரும்புச்சாலை அபிவிருத்திக்கென எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது ஈட்டுத் தொகை வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் கொட்டையூர், தென் கரும்பலூர், வாழவச்சனூர், குங்கிலிய நத்தம் முதலிய நான்கு கிராமங்களில் கரும்புச்சாலை அபிவிருத்திக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நில மதிப்பீடு செய்து இழப்பீட்டுத் தொகை வழங்கும்பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் 12-12-1998 அன்று நேரடி பேச்சுவார்த்தை குழுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் மேற்படி நேரடி பேச்சுவார்த்தை குழு நிர்ணயம் செய்த இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்ள சம்மத வாக்குமூலம் கொடுத்ததன்பேரில் நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்குமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவண்ணாமலை கோட்டாட்சியருக்கு ஆணையிட்டுள்ளார். அதற்கான பணி நடைபெற்று வருகிறது.

**139—**

**பணியாளர்களுக்குச் சம்பளம்**

**வினா எண் 12949—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு பணியாளர்களுக்குப் பல மாதங்களாக சம்பளம் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட, வட்டார வேளாண் பொறியியல் கூட்டுறவு சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தனித்தனி நிர்வாகக் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அச்சங்கங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுப்பது அந்தந்த சங்கங்களின் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவின் பொறுப்பாகும்.

**140—**

**பணிகள் விவரம்**

**வினா எண் 17643—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகிறது?

(ஆ) எந்த வகையில் பணிகள் தேர்ந்து எடுக்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தமிழ்நாட்டின் நில நீர்வள ஆதாரங்களைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(1) மலை மற்றும் சமவெளிப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.

(2) பழங்குடியினர் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.

(3) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுப் பணிகள்.





(4) மலைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

(5) குந்தா, கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

(6) பழங்கள், பூக்கள் மற்றும் தென்னை ஆகிய பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பணிகள்.

(7) காவிரி, கீழ்பவானி, பரம்பிக்குளம், ஆழியாறு, அமராவதி நீர்த்தேக்கம், கோதையார் சித்தார் பட்டணங்கால் பாசனப் பகுதிகளில் பாசன மேன்மைப் பணிகள்.

(8) திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் டென்மார்க் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

(ஆ) மேற்கண்ட பணிகள் கீழ்க்கண்ட வகையில் தேர்ந்து எடுக்கப்படுகின்றன:

மண்வளப் பாதுகாப்பு, மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பணிகள், மலைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள், பழங்குடியினர் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள், நீர்வடிப்பகுதி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குந்தா, கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீர்வடிப்பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் பணி, விவசாயிகளின் வேண்டுகோள் மனுவின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது. பாசன மேன்மைப் பணிகள் அடுத்தடுத்த கிளை வாய்க்காலின் பாசனப் பரப்பில் செயல்படுத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

141—

### பனை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 19396—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் பனை மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

142—

### பனை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 19397—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பனை மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.





143—

### பனை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்

**வினா எண் 19398—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டத்தில் பனை மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அத்திட்டம் நிறைவேற்றப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

144—

### நாற்றுப் பண்ணை

**வினா எண் 21201—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் உலக வங்கி மூலமாக உலக வங்கி நாற்றுப் பண்ணை திட்டத்திற்கு சென்ற மூன்று ஆண்டுகளில் பெறப்பட்ட மானியங்கள் எவ்வளவு?*

*(ஆ) இவை முழுமையாக பயன்படுத்தப்பட்டதா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டு வந்த தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வனத் துறையினால்

செயல்படுத்தப்பட்ட திட்டத்தில் சென்ற மூன்று ஆண்டுகளில் (1995-96, 1996-97 மற்றும் 1997-98) நாற்றுப் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.227.72 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டு, இதில் ரூ.196.27 இலட்சம் மட்டுமே செலவு செய்யப்பட்டது. இது ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையில், செலவிடப்பட்டத் தொகை 84 சதவீதமாகும்.

**145—**

**கரும்பு விவசாயிகளுக்குப் பணம் வழங்குதல்**

**வினா எண் 21338—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98-ல், 1998 ஜூன் மாதம் முடிய கரும்பு விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள பணம் அனைத்தும் அந்தந்த சர்க்கரை ஆலையிலிருந்து வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இன்னும் எத்தனை சர்க்கரை ஆலையில் பணம் பாக்கி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து 1997-98 ஆம் ஆண்டிற்கு உரிய நிலுவைப் பணம் முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது. ஐந்து தனியார் சர்க்கரை ஆலைகள் மட்டும் ரூ. 606.77 இலட்சம் பாக்கி வைத்திருந்தன. 31-3-1999 நிலவரப்படி 1997-98 அரவைப் பருவத்திற்கு கரும்பு விலைக்கான தொகை ஏதும் நிலுவையில்லை.

**146—**

**பல வண்ணப் பருத்தி**

**வினா எண் 21576—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பல்வேறு வண்ணங்கொண்ட பருத்தி தயாரிப்புத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நமது இந்திய நாட்டில் இத்தகைய வண்ண இழைகள் கொண்ட இரகங்களுக்குப் பெருவாரியாக வரவேற்பு கிடைப்பதில்லை. எனவே அதைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**147—**

**பணியிடங்கள்**

**வினா எண் 22071—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையில் பணிமனையில் எவ்வளவு பணியிடங்கள் காலியாக உள்ளன?

(ஆ) அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் வண்ணாரப்பேட்டை பணிமனையில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 117-ல் தற்போது 68 பணியாளர்கள் உள்ளனர். 49 பணியிடங்கள் காலியாக உள்ளன.

(ஆ) தற்போது பணிமனை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் பணிமனையில் காலியாக இருக்கும் பணியிடங்கள் ஏதும் தற்போது நிரப்பப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிமனையின் செயல்பாடு குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க அரசு நிலை ஆணை எண் 507, வேளாண்மைத் துறை, நாள் 9-10-1998-ல் வேளாண்மைத் துறைச் செயலரின் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்து காலி இடங்கள் நிரப்பப்படுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

**148—**

**கடல் நீரை பாசனத்திற்குப் பயன்படுத்துதல்**

**வினா எண் 21734—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடல் நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**149—**

**தடுப்பு அணை**

**வினா எண் 22266—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல்நத்தம் ஊராட்சி பட்டக்காரன் கொட்டாய் பாப்பான்காட்டு ஓடையில் தடுப்பு அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல்நத்தம் ஊராட்சி பட்டக்காரன் கொட்டாய் பாப்பான்காட்டு ஓடையில் தடுப்பு அணை கட்டப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**150—**

**விவசாய நிலங்கள்**

**வினா எண் 24202—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலங்களின் அளவை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விவசாய பயிர் சாகுபடி நிலங்களின் அளவை அதிகரிக்க அரசிடம் தற்போது திட்டம் எதுவும் இல்லை. ஆனால், பருவமழை அளவைப் பொறுத்து பல்வேறு பயிர்களின் சாகுபடிப் பரப்பில் மாறுதல் இருக்கும்.

(ஆ) சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலங்களின் மேம்பாட்டில் கவனம் செலுத்தி பண்ணைக்காடுகள், பழ, தீவனப் பயிர் உற்பத்தி செய்திட முனைவர் குழந்தைசாமி பரிந்துரையின் பேரில் புதுக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கோவை ஆகிய 8 மாவட்டங்களில் மத்திய அரசு நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த "பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டுத் திட்டமும்" (Integrated Wasteland Development Scheme) கன்னியாகுமரி, மதுரை, திருச்சி மற்றும் காஞ்சிபுரம்

[2000 மே 18

ஆகிய 4 மாவட்டங்களில் முதலீடு முன்னேற்றத் திட்டமும் (Investment Promotional Scheme) தொழில்நுட்ப வளர்ச்சி (Technology Development Extension and Training) திட்டம் கன்னியாகுமரியிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்திற்காக, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேருக்கு மொத்தம் ரூ. 825.442 இலட்சத்தில் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி, நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். இதர திட்டங்களின் ஆதாரங்களிலிருந்து சேமித்து செயல்படுத்தப்படுகிறது.

**151—**

## சூரியகாந்தி பயிரிடுதல்

**வினா எண் 24214—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நமது மாநிலத்தில் தற்போது எத்தனை ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்படுகிறது?*

*(ஆ) சூரியகாந்தி பயிரிடுவதை ஊக்கப்படுத்த ஏதேனும் மானிய உதவிகள் செய்யப்படுகின்றனவா?*

*(இ) அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) கன்னியாகுமரி, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் தற்போது சுமார் 90,000 ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்படுகிறது.*

*(ஆ) ஆம்.*

*(இ) (1) மாநில அரசு சலுகைகள்:*



2000 மே 18]

விதைச்சான்று துறையின் மேற்பார்வையில் விதைப் பண்ணைகள் அமைத்து தரமான சான்றுபெற்ற விதைகள் உற்பத்தி செய்தால் கிலோ ஒன்றிற்கு ஊக்கத்தொகை ரூ. 2 அளிக்கப்படுகிறது.

(2) மைய அரசு மானியத்தில் செயல்படும் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும்போது எண்ணெய்வித்து கிராமத் திட்டத்தின்கீழ் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 200 மானியம், வேறு நிறுவனங்களில் வாங்கப்பட்ட சான்றுபெற்ற விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும்போது ஒரு குவிண்டாலுக்கு ரூ. 300 மானியம், உயர்விளைச்சல் தரும் வீரிய ஒட்டு விதை சிறுதளைப் பைகள், பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்க ஆகும் மொத்தச் செலவில் 50% மானியம், விதை நேர்த்தி மருந்துகளை பயன்படுத்த ஆகும் செலவில் 50% மானியம், நுண்ணூட்டக் கலவைகள் பயன்படுத்தினால் எக்டேர் ஒன்றுக்கு ரூ. [illegible] மானியம் நுண்ணுயிர் கலவை பயன்படுத்த ஒரு எக்டேருக்கு ரூ. [illegible] மானியம் மற்றும் விவசாயிகள் தொழில்நுட்ப பயிற்சிக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 200 மானியம் அளிக்கப்படுகிறது

**152—**

## வாழைப் பயிர்கள்

**வினா எண் 24216—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வாழைப் பயிர்கள் நோய்களால் அதிகமாக பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

[2000 மே 18

(ஆ) பொதுவாக வாடல் நோய், இலைப்புள்ளி நோய், வாழை முடிக்கொத்து நோய் போன்ற நோய்கள் வாழைப் பயிரினைத் தாக்குகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் கீழ்ப்பழனி மலைப்பகுதியில் மலைவாழைச் சாகுபடி முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்பட்டது. இதனைப் புதுப்பிக்க புதியதொரு செயல்திட்டம் வகுக்கப்பட்டு திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நோயற்ற வாழைக் கன்றுகள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலைப்புள்ளி நோயினை மழைக்காலம் ஆரம்பமாகும் முன்னும், பின்னும் பூஞ்சான் கொல்லி மருந்து தெளித்தல் மூலம் கட்டுப்படுத்திடலாம்.

**153—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 24219—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் வேளாண்மைத் துறை மூலம் தமிழகத்தில் வேளாண்மை கல்லூரி ஒன்று தொடங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**154—**

**பனை எண்ணெய் உற்பத்தி**

**வினா எண் 24894—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) தமிழகத்தில் பனை எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்டில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையைப் போக்க எண்ணெய்ப்பனை மேம்பாட்டுத் திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1993-94ஆம் ஆண்டு முதல செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது. 1998-99 முடிய 8848.35 எக்டேர் நிலப்பரப்பில் எண்ணெய்ப்பனைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எண்ணெய்ப்பனை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் எண்ணெய்ப்பனை பழக்குலைகளிலிருந்து எண்ணெய்ப் பிழிந்து எடுக்கும் ஆலைகள் அமைக்கவும் நான்கு தனியார் தொழில் முனைவோர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**155—**

**பயிற்சி அளித்தல்**

**வினா எண் 24896—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் மகளிர் பயிற்சித் திட்டத்தின்கீழ் நமது மாநிலத்தில் எத்தனை பெண்களுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டது?

(ஆ) இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 1986 முதல் 1993 செப்டம்பர் வரை செயல்பட்ட தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் பகுதி 1-ன் கீழ் 14,000 மகளிருக்கும், 1993 அக்டோபர் முதல் 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையில் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் பகுதி 2-ன் கீழ் 52,020 மகளிருக்கும் நேரடிப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நேரடிப் பயிற்சி பெற்ற 66,020 பண்ணை மகளிர் மூலம் 6,20,225 சக பண்ணை மகளிருக்கு நவீன தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) ஆம். மார்ச் 2002 வரை டென்மார்க் நாட்டு உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

**156—**

### வேளாண்மை ஆராய்ச்சி மையம்

**வினா எண் 30539—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, உதயகிரி கோட்டையில் மத்திய அரசின் வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்க இடம் கேட்டிருக்கின்றதா?*

*(ஆ) ஆம் எனில், இடம் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. இருப்பினும் கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, உதயகிரி கோட்டையில் வேளாண்மை அறிவியல் மையம் (கேவிகே) அமைப்பது குறித்த கருத்துரு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.*





**157—**

### தொழிற்சாலை

**வினா எண் 31206—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் விளையும் மாம்பழங்களைக் கொண்டு ஒரு பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டத்தில் அதிகமாக விளையும் மாம்பழங்களைக் கொண்டு பழச்சாறு மற்றும் மாம்பழத்துண்டு போன்றவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கிருஷ்ணகிரியில் ரூ.140 இலட்சங்களில் தொழில் முனைவர்களுடன் இணைப்பிரிவில் தாய் நிறுவனம் தொடங்கவுள்ளது. தொழில் தொடங்க ஆயத்த வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.*

*எனவே, வேறொரு பழத் தொழிற்சாலை தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.*

**158—**

### மாம்பழ உற்பத்தி

**வினா எண் 32213—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கடந்த 1999 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மாம்பழ உற்பத்தி அதிகரித்ததா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97-ல், 4.139 இலட்சம் டன்களாக இருந்த மாம்பழ உற்பத்தி 1998-99-ல் 5.593 இலட்சம் டன்களாக உயர்ந்தது.

**159—**

**நவீன விவசாயக் கண்டுபிடிப்புகள்**

**வினா எண் 32223—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நவீன விவசாயக் கண்டுபிடிப்புகள் அடித்தட்டு விவசாயிகளைச் சென்றடைய அரசு செய்துள்ள ஏற்பாடுகள் என்ன?

(ஆ) அதனால் பலன் ஏற்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக நவீன விவசாயக் கண்டுபிடிப்புகள் - கதிர் அறுவடை இயந்திரம், துளைக் கருவிகள், மண்தள்ளும் இயந்திரங்கள், உழுவைகள் மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் சட்டி கலப்பைகள், ரோட்டவேட்டர்கள் ஆகியவை சிறு/குறு விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், மாவட்டங்களிலுள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி விவசாயக் கருவிகளை அனைத்துத் தரப்பு விவசாயிகளும் குறிப்பாக குக்கிராமங்களிலுள்ள அடித்தட்டு விவசாயிகள் கூட பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வானொலி மூலமாகவும்,





தொலைக்காட்சி மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடத்தப்படும் குறைதீர்க்கும் நாட்களிலும் கிராம வாரியான விவசாயிகள் கூட்டத்திலும், அடித்தட்டு விவசாயிகளுக்கும் நவீன இயந்திரக் கருவிகள் குறித்து விவரம் தெரிவிக்கப்படுகின்றன. படக்காட்சிகள் மூலமாகவும் விரிவான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

மேலும், வேளாண்மைத் துறையின் மூலம் மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில அரசு பங்கீட்டுடன் பயிர் மேம்பாட்டுத் திட்டங்களும் (நெல்/பயறு/பருத்தி/எண்ணெய்வித்து/கரும்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி, புதிய விவசாயக் கண்டுபிடிப்புகள் சென்றடைய மினிகிட் செயல் விளக்கங்கள், வட்டார பல்துறை செயல்விளக்கத் தளைகள், விவசாயப் பயிற்சி முகாம்கள் என கிராம அளவில், உதவி வேளாண்மை அலுவர்கள், வட்டார அளவில் வேளாண்மை அலுவலர்கள், வட்ட அளவில் வேளாண்மை உதவி இயக்குநர்கள் கொண்ட விரிவாக்க அமைப்பு மூலமாக, விவசாயிகளுக்குப் பல சிறிய மேம்பட்ட உத்திகள் தெரியப்படுத்தப்படுகின்றன. அரசின் மேற்கூறிய அனைத்து விரிவாக்க/ இடுபொருள் சலுகைகளும் அடித்தட்டு மக்களை இலக்கிட்டே செயல்படுத்தப்படுகின்றன.

மாவட்ட அளவில், கருத்துப்பரிமாற்ற பணிமனையில், உள்ளூர் பிரச்சனைகளுக்கேற்ற ஆலோசனைகள் முடிவெடுக்கப்பட்டு விரிவாக்க அலுவலர்கள் மூலமாக நேரடியாகவும், கருத்தரங்குகள், பயிற்சிகள், முனைப்பு இயக்கங்கள், செயல்விளக்கங்கள் அமைத்தல், செய்தி விளம்பரப் பணிகள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை மூலமும் கிராம அளவிலான விவசாயிகளுக்குச் சென்றடைய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இவை தவிர, விவசாயிகளுக்காக இதர மாநில விவசாயிகள் பரிமாற்றத் திட்டத்தின்கீழ், கல்விச் சுற்றுலாக்கள் மூலம் நவீன உத்திகள் சென்றடைய வழி வகுக்கப்படுகின்றது. பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தி மாவட்ட, மாநில நிலையில் பரிசுகள் வழங்கப்படுகிறது.

(ஆ) மேற்கண்ட பல சீரிய வழிமுறைகள் மூலமாக நவீன வேளாண் கண்டுபிடிப்புகள் கிராம அளவில், கழனிகளில் செயல்படுத்தப்படுவது மட்டுமின்றி, அதன் மூலமாக உயர் விளைச்சலும் எடுக்கப்படுகின்றது. பல புதிய சாகுபடி திட்டங்கள், புதிய இரகங்கள், மேம்பட்ட வேளாண் கருவிகள் போன்றவை விவசாயிகளால் பயன்படுத்தப்படுவது சென்ற ஆண்டில் அடையப் பெற்றுள்ள உச்ச

[2000 மே 18

உணவு தானிய உற்பத்தி அளவான 94.12 இலட்சம் டன் மூலம் கண்கூடாகத் தெரிகிறது. தவிர மணிலா, கரும்பு உள்ளிட்ட பயிர்களிலும், தமிழ்நாட்டு விவசாயிகள் அதிக மகசூல் அடைந்து வருகிறார்கள்.

**160—**

### உரம் தயாரித்தல்

**வினா எண் 34408—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி, செங்கோட்டை நகராட்சிகளில் கிடைக்கக்கூடிய குப்பைக் கூளங்களைக் கொண்டு அக்ரோபெட் நிறுவனத்தின் மூலம் தென்காசியில் உரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) அக்ரோபெட் நிறுவனம் மூலம் தென்காசியில் உரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**161—**

### இரசாயன உரங்கள் இறக்குமதி

**வினா எண் 35338—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இரசாயன உரங்கள் அதிக அளவில் மண்ணில் இடுவதால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன் உரச்செலவும் அதிகமாவதை தடுக்க மேல்நாடுகளில் பயன்படுத்தும் இலை வழி தெளிக்கும் (Foliar Spray) பிரத்தியேகமான இரசாயன உரங்களை இறக்குமதி செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2000 மே 18]

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இலை வழி மூலம் தெளிக்கும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது இத்துறையின் செயல்பாட்டில் இல்லை. எனினும், தனியார் இறக்குமதி செய்து விற்பனை செய்வதை மத்திய அரசு அனுமதிக்கிறது.*

*(ஆ) பிரத்தியேகமாக இலை வழி தெளிக்கும் உரங்கள் இறக்குமதி செய்திட உரக்கட்டுப்பாடு ஆணையில் அறிவிக்கப்பட்டபடி தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக மேலும் சில உரங்களைச் சேர்த்திட தற்பொழுது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

**162—**

### கலப்பு உரங்கள்

**வினா எண் 35357—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கலப்பு உரங்கள் என்ற பெயரால் தரமற்ற உரங்கள் தயார் செய்து விற்பனை செய்வது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், ஆந்திர, கேரள மாநிலங்கள் கலப்பு உரங்களை தடை செய்தது போல தமிழகத்திலும் கலப்பு உரங்களை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இது குறித்த புகார் எதுவும் 1999-2000 ஆம் ஆண்டில் பெறப்படவில்லை*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

163—

## தடுப்பு அணை

**வினா எண் 25795—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி மறறும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மஞ்சனவாடி, மணக்காரை, திருச்சுற்றிமுற்றம், அண்டூர் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் அதிவீரராமனாற்றில் அண்டூர் பாசன வாய்க்கால் பிரியும் இடமருகில் ஒரு பெட் டாம் (தடுப்பு அணை) கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) மஞ்சனவாடி, திருச்சுற்றிமுற்றம், அண்டூர், தண்ணீர்குண்ணம் ஆகிய நான்கு வாய்க்கால்களும் பயன்பெறும் வகையில் அதிவீரராமனாற்றில் மைல் 2/0 இல் ஒரு ரெகுலேட்டர் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நான்கு வாய்க்கால்களும் நன்றாக பயன்பெற்று பாசனம் சீராக நடைபெற்றுவருவதால் அதிவீரராமனாற்றில், அண்டூர் பாசன வாய்க்கால் பிரியுமிடம் அருகில் ஒரு பெட் டாம் கட்ட தேவையில்லை என கருதப்படுகிறது.

164—

## மரக்கன்றுகள் நடுதல்

**வினா எண் 26373—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியை அடுத்துள்ள சூரியன் கரடு என்ற மலையில் சந்தன மரம் மற்றும் தேக்கு மரக்கன்று நடும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்திலுள்ள சூரியன் கரடு மலையில் மண்வளம் மற்றும் மழை குறைவு என்பதால் சந்தன மரம் மற்றும் தேக்கு மரம் நடும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

165—

## ஆய்வு மாளிகை

**வினா எண் 26831—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், நாயுடுமங்கலம் (அகரம் சிப்பந்தி) கிராமத்தில் உள்ள பொதுப்பணித் துறையைச் சார்ந்த ஆய்வு மாளிகை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதை புதுப்பிக்க திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், நாயுடுமங்கலம் கிராமத்தில் (அகரம் சிப்பந்தி) பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை உள்ளது. இது திருவண்ணாமலை நீர்வள ஆதார அமைப்பு மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டத்தின் கீழ் பெண்ணாத்தூர் பிரிவின் பொறுப்பில் உள்ளது. ஆய்வு மாளிகை பழைய வடிவமைப்பின்படி கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம் மட்டும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. மற்ற மூன்று புறமும் திறந்தவெளியாக உள்ளது. ஆய்வு மாளிகை வளாகத்திலும் திறந்த வெளிக்கிணறு உள்ளது.

(இ) இல்லை.

[2000 மே 18

166—

**வாய்க்காலைச் செப்பனிடுதல்**

**வினா எண் 27153—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சிவவிடுதியில் உள்ள வாய்க்காலை தூர் எடுத்து செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சிவவிடுதியில் உள்ள ஒளவயல் வாய்க்கால் நடப்பு ஆண்டு 1999-2000-ல் தூர் வாரும் திட்டத்தின்கீழ் ரூ.2.13 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டது.*

167—

**மூலிகைப் பாத்தி**

**வினா எண் 27459—திரு.ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், சித்திரக்கோவில் மலையில் ஏராளமான மூலிகைகள் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், மூலிகைப் பாத்தி அமைக்க அரசு முன் வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**



2000 மே 18]

*(அ) ஆம்.*

*(ஆ) சித்திரக்கோவில் மலை உட்பட அனைத்து வனப்பகுதிகளிலுள்ள மூலிகைச் செடிகளைக் கண்டறிந்து நவீன நாற்றங்கால்கள் மூலம் வளர்த்து வேளாண் நிலங்களில் பயிர் செய்து விவசாயிகளின் நிதி ஆதாரம் பெருக மத்திய அரசிடம் ரூ.6.30 கோடி நிதியுதவி கோரப்பட்டுள்ளது.*

168—

**குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு**

**வினா எண் 27468—திரு. டி. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், மணலோடை பகுதியில் குடியிருக்கும் அரசு தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மணலோடை பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க மணியன்குழியிலிருந்து மணலோடை வரை சுமார் 3220 மீட்டர் தூரம் 11 கெ.வி. மின் இணைப்பு லைன் நீட்டிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

169—

**மூலிகைப் பண்ணையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 29263—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மூலிகைப்பண்ணையை விரிவுப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் தனியார் மூலிகைப் பண்ணையோ அல்லது வேறு அரசுத் துறை மூலம் மூலிகைப் பண்ணையோ அமைக்கப்படவில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**170—**

**சமூகக் காடுகள்**

**வினா எண் 29343—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக வனப் பகுதிகளிலுள்ள சமூகக் காடுகளைத் தனியாருடன் இணைந்து பராமரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**171—**

**அணை கட்டுதல்**

**வினா எண் 32421—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநீர்மலை அருகில் அடையாறின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?*



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அடையாற்றில் தாம்பரம் தொகுதி, திருநீர்மலைப் பகுதியில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**172—**

**அமிர்தி சரணாலயம்**

**வினா எண் 34512—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், அமிர்தி சரணாலயத்திலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் சரிவரப் பராமரிக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அமிர்தி சரணாலயத்திலுள்ள 59 மிருகங்களுக்கும், 37 பறவைகளுக்கும் தேவையான உணவு விகிதப்படி வழங்கப்பட்டு நல்லமுறையில் பராமரித்து வரப்படுகின்றன.*

**173—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 789—திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி-பொன்னிரை வரை திருவாரூரிலிருந்து இயங்கிக்கொண்டிருந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் (கும்பகோணம்) பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது, அரசுக்குத் தெரியுமா?*

(ஆ) ஆம் எனில், அதனைத் திரும்ப இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திருத்துறைப்பூண்டி - பொன்னிரை (வழி) ஆலத்தம்பாடி தடத்தில் தட எண் 3-ன் மூலம் தினசரி காலை இரு நடைகளும் மாலை இரு நடைகளுமாக மொத்தம் நான்கு நடைகள் 1-1-1997 முதல் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**174—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 2915—திரு. ப. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடியிலிருந்து திட்டக்குடி எல்லை, வேப்பூர் வழியாக அரியலூருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் (கோட்டம்-I)-ஆல் பேருந்துகள இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுமே பகுதி வாரியாக தேவையான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. மேலும் திட்டக்குடி-அரியலூர் வழித்தடத்தில் கூடுதலாக 24-7-1996 முதல் 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், புதிய பேருந்துகள் இயக்கவேண்டிய நிலைமை நிலவவில்லை.

**175—**

**பெரிய பேருந்துகள்**

**வினா எண் 3578—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பம்பாயில் அனுமதிக்கப்படும் கன்டெய்னர் அளவிலான பெரிய பேருந்துகளைச் சென்னையிலும் சோதனை முறையில் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பம்பாயில் அனுமதிக்கப்படும் பெரிய அளவிலான பேருந்துகளை சென்னையிலும் சோதனை முறையில் இயக்க வகை செய்யும் பொருட்டு மாநகரப் போக்குவரத்துக் கழகங்களால் தற்போது 10 இருதளப் பேருந்துகளும், 33 தொடர் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**176—**

**பேருந்து வசதி**

**வினா எண் 3643—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பெண்ணாகரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தருமபுரி கிளையில் பேருந்துகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்துகள் இயக்கமுடியாத நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தை மையமாகக் கொண்டு பெண்ணாகரத்திலிருந்து அனைத்து முக்கிய பகுதிகளுக்கும் போதுமான அளவு பேருந்து வசதி செய்யப்பட்டு உள்ளது. எனவே, அரசு பேருந்துகளை அதிகரிக்க தற்போது வாய்ப்பில்லை.

177—

## ஆவடிக்கு பேருந்து வசதி

**வினா எண் 3664—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் அமைந்திருக்கும் பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் அமைந்திருக்கும் பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்க ஏதுவான சாலை வசதி இல்லை. பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடியாக செல்லும் பயணிகள் அடர்வு போதுமானதாக இல்லை. அருகில் அமைந்திருக்கும் அம்பத்தூர் இரயில் நிலைய நிறுத்தத்தை பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

178—

## புதிய பேருந்து தடம்

**வினா எண் 3749—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணியிலிருந்து நகரி-ஏகாம்பரகுப்பம்-குமாரமங்கலம் புன்னியம் வழியாக போதட்டூர்ப்பேட்டைக்கு புதிய பேருந்து தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் 2 நடைகள் 31-3-1997 முதல் இயக்கப்படுகிறது.



179—

## பாலத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 933—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மாங்குடியில் உள்ள பாலம் உடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் குழாய் பாலமாக புதிதாகக் கட்டப்பட்டு, அப்பாலத்தின் வழியே போக்குவரத்து விடப்பட்டுள்ளது.

180—

## ஆக்கிரமிப்புகள்

**வினா எண் 9693—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இதுவரை அனுமதியற்ற ஆக்கிரமிப்பின் மூலம் எத்தனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அவ்வகையான ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) 153 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.*

*(ஆ) அவை அனைத்தும் அகற்றப்பட்டு விட்டன.*

**181—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 15132—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பரமக்குடி தொகுதி, பெருங்களூர் அருகில் அரிமாங்கோட்டை-காவலூர் சாலையில் கால்வாயில் பாலம் இல்லாமையால் போக்குவரத்து தடைபடுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

**182—**

**நாகப்பட்டினம் துறைமுகம்**

**வினா எண் 21608—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் துறைமுகத்தை மீண்டும் இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*ஆம். நாகப்பட்டினம் துறைமுகத்தை மீண்டும் இயக்க கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க நடப்பாண்டிலேயே அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இதுவரை இத்துறைமுகத்திற்கு மூன்று எண்ணெய் கப்பல்கள் வருகை புரிந்து அதன்மூலம் 2990 டன்கள் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.*

**183—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 21621—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரியிலிருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள திருச்சி-விழுப்புரம் இடையேயுள்ள இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*திருச்சி விழுப்புரம் இடையே கி.மீ. 165/4, 194/4 மற்றும் 251/2 ஆகிய இடங்களில் உள்ள இரயில்வே கடவுகளில் மேம்பாலம் அமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும்.*

**184—**

**இணைப்புச் சாலை வசதி**

**வினா எண் 23210—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் பிரதான சாலைகளோடு இணையும் இணைப்புச் சாலை வசதி செய்யப்பட்டு விட்டதா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*1991 மக்கட்தொகை கணக்கின்படி 1,000-க்கு மேல் மக்கள் தொகையுள்ள அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. அடுத்த கட்டமாக 500-1000 மக்கள் தொகையுள்ள 340 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மீதமுள்ள கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதிகள், படிப்படியாகச் செய்து தரப்படும்.*

**185—**

## நான்கு வழிப்பாதை

**வினா எண் 25309—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து மேடவாக்கம், பெரும்பாக்கம், சோழியங்கநல்லூர் வழியாக கிழக்குக் கடற்கரைச்சாலையை இணைக்கும் முக்கிய இணைப்புச் சாலையை நான்கு வழிப்பாதையாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் அனைத்தும் ஆரச்சாலைகள் தொகுப்பு 5-ல் அடங்குகின்றன. மர்மலாங் பாலம்-இரும்புலியூர் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல், மேடவாக்கம்-சோழிங்கநல்லூர் சாலை மற்றும் சோழிங்கநல்லூர் குடுமியாண்டித் தோப்பு சாலை ஆகியவற்றை இருவழிச் சாலையாக அகலப்படுத்துதல் ஆகிய மூன்று சாலைப் பணிகளும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-12-2000-க்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*



**186—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 25898—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், எறுமனூர் - நாச்சியார்பேட்டை சாலையில் உள்ள தரைப் பாலத்தை பாலமாகக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தரைப் பாலத்தை 9.00 மீட்டர் நீளத்திற்கு ஓர் உயர்மட்டப் பாலமாக அமைப்பதற்கு தோராயமாக ரூ.23.00 இலட்சம் தேவைப்படும். நெடுஞ்சாலைத் துறைக்கு அரசின் குறுகிய நிதி ஒதுக்கீடு காரணமாக இப்பாலப் பணியினை வரும் ஆண்டுகளில் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும், இப்பாலப் பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நபார்டு திட்டத்தில் முன்னுரிமை, தகுதி அடிப்படையில் செயல்படுத்த வழிவகைகள் ஆராயப்படும்.*

**187—**

## பொள்ளாச்சியில் நெடுஞ்சாலை கோட்டம்

**வினா எண் 27665—திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலுள்ள நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து அதில் ஒன்றை பொள்ளாச்சியில் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 159, நெடுஞ்சாலைத் துறை, நாள் 31-5-1999-ன்படி பொள்ளாச்சியில் தனியே நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்பட்டு 3-6-1999 முதல் இயங்கி வருகிறது.*

**188—**

## இருவழிச் சாலை

**வினா எண் 28841—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில்-புளியங்குடி நெடுஞ்சாலை ஒருவழிப் பாதையாக உள்ளதை இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**189—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 28856—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டியில் குறுகிய சாலை இருப்பதால் ஊருக்கு வெளிப்பகுதியில் புதிதாக சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*



விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**190—**

## இருவழிப் பாதை

**வினா எண் 32082—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாம்பரம் வட்டம், தாமஸ்மலை ஒன்றியம், கோவிலம்பாக்கம் முதல் நாராயணபுரம் வரை செல்லும் சாலையை இருவழிப் பாதையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

**191—**

## சாலை மேம்பாட்டுப் பணி

**வினா எண் 32413—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சித்தலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலை மேம்பாட்டுப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படுமா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு ரூ.16.20 இலட்சம் செலவில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்ததும் செயல்படுத்தி முடிக்கப்படும்.

**192—**

**சாலை பராமரிப்பு**

**வினா எண் 29585—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் இரும்புலியூர் முதல் கோயம்பேடு வரை செல்லும் புறவழிச்சாலையில், சாலைகள் இருந்தும் போக்குவரத்து துண்டிக்கப்படும் நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**193—**

**மீனவர்களுக்கு மனைப்பட்டா**

**வினா எண் 15607—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) இராமேஸ்வரம் தீவு உட்பட்ட இராமநாதபுரம் வட்டத்தில் கடற்கரைப் பகுதியை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலத்தில் வாழும் மீனவர்களுக்கு மனைப்பட்டா வழங்க தடை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இராமேஸ்வரம் தீவு உட்பட இராமநாதபுரம் வட்டத்தில் கடல் ஓரத்தில் வசிக்கின்ற மீனவக்குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இராமேஸ்வரம் வட்டம் மற்றும் இராமநாதபுரம் வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் சேது சமுத்திர திட்ட ஆணைப்படி ஒப்படை வழங்கத் தடையாணை விதிக்கப்பட்டுள்ளதால், தனி நபர்களுக்கு ஒப்படை வழங்க தடை செய்யப்பட்டுள்ளது.

**194—**

**கடல் மீன் உற்பத்தி**

**வினா எண் 26173—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் மொத்த கடல்மீன் உற்பத்தி எவ்வளவு?

(ஆ) இதனை அதிகப்படுத்த எத்தகைய முயற்சிகள் அரசு சார்பில் எடுக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98-இல் பிடிக்கப்பட்ட மொத்த கடல் மீன் அளவு 3.565 இலட்சம் டன் ஆகும்.

(ஆ) வரும் ஆண்டுகளில் மீன்பிடிப்பை அதிகப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்:

(1) மீன் உறைவிடங்கள் அமைத்தல்.

(2) இறால் வளத்தைப் பெருக்கிட இறால் குஞ்சுகளை கூண்டுகளில் வளர்த்து விடுதல்.

(3) செயற்கைக்கோள் மூலம் மீன்வளம் கண்டு மீனவர்களுக்கு அறிவித்தல்.

(4) நிலைநிறுத்தக்கூடிய மீன்வளத்திற்கு தெரிந்தெடுத்த, தகுந்த கண் அளவுள்ள வலைகளை, குறிப்பிட்ட இடங்கள், மாதங்களைத் தவிர்த்து உபயோகிக்குமாறு ஏற்பாடுகள் செய்தல்.

(5) நவீன மீன்பிடிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல்-பயிற்சி அளித்தல்.

(6) பாரம்பரிய மீன்பிடி கலங்களை இயந்திரமயமாக்குதல்.

(7) மீனவர்களுக்கு மீன்பிடி கலன், வலைகள் மற்றும் மீன்பிடிப்புக்குத் தேவைப்படும் இதர சாதனங்களுக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தல்.

**195—**

### நிவாரண நிதி

**வினா எண் 26277—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மீனவர்கள் கடலில் பருவமழை மற்றும் சூறாவளிக் காற்றினால் மீன்பிடிக்க இயலாததை கருத்தில்கொண்டு, மீனவர்களுக்கு மாதம் எவ்வளவு நிவாரண நிதி வழங்கப்படுகிறது?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு மீனவர்களுக்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள மீன்பிடித் தொழிலில் முழு நேரமும் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 60 வயது வரை உள்ள கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.45/- வீதம் எட்டு மாதங்களுக்கு சந்தா வசூல் செய்யப்பட்டு, அந்தச் சந்தா



தொகைக்கு ஈடாக மாநில மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகையும் சேர்த்து மீன்பிடிப்பு இல்லாத மற்றும் பருவ மழைக் காலங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.270/- வீதம் நான்கு மாதங்களுக்கு மொத்தம் ரூ.1080/- கடலில் பிடிக்கும் மீனவர்களுக்கு சேமிப்பு மற்றும் நிவாரண நிதியாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு நிவாரணத் தொகையாக மாநில மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.7,86,43,170/- வழங்கப்பட்டுள்ளது.

**196—**

### கடல் மீனள அபிவிருத்தி

**வினா எண் 26386—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த கடல் மீனள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் என்னென்ன திட்டங்கள் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள திட்டம் பகுதி-1 மற்றும் பகுதி-2, திட்டங்களின் கீழ்

(1) மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம், இயந்திரம், பிளைவுட் படகுகள் மீன்பிடி வலைகள், மீன் உலர்த்தும் மேடை, போக்குவரத்து வாகனம், விற்பனைக்கு மீன்களை கொண்டு செல்ல 3 சக்கர வாகனங்கள், 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்பதனப் பெட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

(2) மண்ணெண்ணெய் கிடங்குகள் மற்றும் பழுதுபார்க்கும் நிலையங்கள், சேமிப்பு கிடங்குகள், அலுவலகங்கள் ஆகியவையும் கட்டப்படுகின்றன.

(3) மீன்பிடி ஒழுங்கு முறைகள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திர பராமரிப்பில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல், மீனவர்கள் மத்தியில் தீவிர ஈடுபாட்டை உருவாக்குவதற்காக மக்கள் தொடர்பு முகாம்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

[2000 மே 18

197—

### வலம்புரி சங்கு ஏற்றுமதி

**வினா எண் 27704—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலம்புரி சங்கு தமிழக கடலில் எங்கு கிடைக்கிறது?

(ஆ) அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடல் பகுதிகளில் மிக அரிதாக வலம்புரி சங்கு கிடைக்கிறது.

(ஆ) அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

198—

### மீன்வளம் பெருக்குதல்

**வினா எண் 27707—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக ஏரி, குளம், ஆற்றுப் பகுதிகளில் மீன்வளம் பெருக்க அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டம், எடப்பாடி பெரிய ஏரியில் மீன்வளம் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக விழுப்புரம் மற்றும் சிதம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு, தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின்கீழ் ஏரி, குளம் குட்டைகளில் மீன்வளம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 12 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளிலுள்ள மீனவர்களால் குளம், குட்டைகளில் மீன்வளம் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை, அரசுடைமையாக்கப்பட்ட நீர்நிலைகளில் மீன்பாசி குத்தகை 17-11-1993 நாளிட்ட அரசாணை எண் (நிலை) 332, கால்நடை பராமரிப்பு (ம) மீன் வளத் துறையின் ஆணையின்படி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் மேலே கூறப்பட்டுள்ள நீர்நிலைகளில் மீன்பாசி குத்தகை பெற்று அதனில் விரைவில் வளரக்கூடிய பெரும் இரக விரலளவு மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மீன்வளம் பெருக்கி வருகின்றனர்.



2000 மே 18]

(ஆ) சேலம் மாவட்டம், இடைப்பாடி, பெரிய ஏரி பொதுப்பணித் துறையால் பராமரிப்பு செய்யப்படுகிறது. இடைப்பாடி வருவாய் வட்டாட்சியரால், மீன்பாசி குத்தகை வழங்கப்பட்டு வருகிறது. இடைப்பாடி பெரிய ஏரியை இடைப்பாடி மீனவர் கூட்டுறவுச் சங்கம் குத்தகைக்கு எடுத்து மீன்பாசி குத்தகையைச் சங்க அங்கத்தினர்களுக்கு பிரித்து வழங்கி வருகிறது. அச்சங்கத்தின் அங்கத்தினர்கள் அதனில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன்பிடிப்பு தொழில் புரிந்து வருகிறார்கள்.

199—

### இறால் பண்ணைகள்

**வினா எண் 27710—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னீர் இறால் பண்ணைகள் தனியாரிடம் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் இலாபகரமாக இருப்பது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) நன்னீர் இறால் பண்ணைகள் தனியாரிடம் 62 உள்ளன.

(ஆ) இவற்றில் 50 அரசு மானிய உதவிபெற்ற இறால் பண்ணைகள் இலாபகரமாக இயங்கி வருகின்றன.

200—

**மீன்பிடிக்கும் குத்தகை**

**வினா எண் 27711—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர் சங்கங்களுக்கு மீன்பிடிக்கும் குத்தகை ஏலம் விடும்போது, முன் பாத்தியதை அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெளிவுபடுத்துமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசுடைமையாக்கப்பட்ட மீன் துறையைச் சார்ந்த நீர்நிலைகள், பொதுப்பணித் துறை வருவாய்த் துறை மற்றும் வனத் துறையைச் சார்ந்த நீர்நிலைகளில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன்பிடிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஏனைய ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்கள், அறநிலையத் துறையைச் சார்ந்த குளங்கள் மற்றும் நகராட்சியைச் சார்ந்த குளங்கள் அத் துறைகளினால் பொது ஏலம் மூலம் மீன்பாசிகுத்தகை வழங்கப்பட்டு வருகின்றன. பொது ஏலத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கம் கலந்து கொண்டு மீனபாசிகுத்தகை பெறுவதற்கு எவ்வித தடையும் இல்லை.

## இருபத்து ஏழாம் பட்டியல்

1—

**தொடக்கப் பள்ளி**

**வினா எண் 23119—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத்திற்கு உட்பட்ட அம்மா பேட்டை ஒன்றியம், குறிச்சி கிராமம் செல்லங்குட்டையில் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 1999-2000 கல்வியாண்டில் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2—

**கல்லூரி**

**வினா எண் 33069—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணலி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போது புதிய கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 5277—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், தலைக்குளம் கிராம ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,00,808 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் கிருஷ்ணாபுரம், புவனகிரி மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய மூன்று இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மக்கள் தொகையின்படி அவ்வூராட்சி ஒன்றியத்திற்கு போதுமானதாகும். எனவே, வடதலைக்குளம் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி தரம் உயர்த்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

4—

### சிகிச்சைப் பிரிவுகள்

**வினா எண் 13100—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை, மது அடிமை புனர்வாழ்வு சிகிச்சை, குழந்தைகள் அறுவை சிகிச்சை மற்றும் ஒட்டு அறுவை சிகிச்சை ஆகிய பிரிவுகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

### துணை மின் நிலையம்

**வினா எண் 26940—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன்கோயில் துணை மின் நிலையத்தின் பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வைத்தீஸ்வரன்கோயில் 110/11 கே.வி. துணை மின் நிலையத்தின் பணிகள் டிசம்பர் 1999 வாக்கில் தொடங்கப்பெறும்.

6—

### புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 27216—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, தேவங்குடி கிராமத்தில் (திருவாரூர் மாவட்டம்) புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தேவங்குடி கிராமம் அமைந்துள்ள நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப தற்போதுள்ள ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் தேவங்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

7—

### இறால் பண்ணைகள்

**வினா எண் 10093—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சீர்காழி தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் இறால் பண்ணைகள் அரசின் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புறம்போக்கு இடத்திலிருந்து இறால் பண்ணைகளை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில் பட்டா நிலங்களின் நடுவில் உள்ள அரசின் புறம்போக்கு இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து தனியார்களால் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆக்கிரமணங்களை அகற்ற சீர்காழி வட்டாட்சியர் முறைப்படி நடவடிக்கை எடுக்க முற்படுகையில் இறால் பண்ணை உரிமையாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடையாணை பெற்றுள்ளார்கள். தடையாணை நீக்கிட அரசுத் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. உயர் நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

## ஆக்கிரமிப்பு

**வினா எண் 18534—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலப் பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விவசாயம் செய்யப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சாகுபடியாளர்களிடமிருந்து அதற்குரிய தீர்வை வசூலிக்க சிற்றூராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமா?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலப் பரப்புகளில் ஆக்கிரமணம் செய்யப்பட்டு விவசாயம் செய்யப்படும் இடத்தில் வருவாய்த் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்குரிய தீர்வையினை சிற்றூராட்சிகள் வசூலிக்க சட்டத்தில் வழிவகைகள் இல்லை. வருவாய்த் துறை மூலம்தான் தீர்வை வசூலிக்கப்பட வேண்டும்.

9—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 26578—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதிக்குட்பட்ட புழுதிக்கரை, சவுளூர் (புழுதிக்கரை ஊராட்சி), டி. துரிஞ்சிப்பட்டி (கொண்டம்பட்டி ஊராட்சி), சவுளுப்பட்டி (சோகத்தூர் ஊராட்சி), கிருஷ்ணாபுரம் (கிருஷ்ணாபுரம் ஊராட்சி), எம்.ஜி.ஆர். நகர், குமாரசாமிபேட்டை, நர்சய்யர்குளம் (தருமபுரி) ஆகிய இடங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போக்கும், வீடற்றவர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதிக்குட்பட்ட புழுதிக்கரை, சவுளூர், டி. துரிஞ்சிப்பட்டி, சவுளுப்பட்டி, கிருஷ்ணாபுரம், எம்.ஜி.ஆர். நகர், குமாரசாமிபேட்டை, நர்சய்யர்குளம் ஆகிய இடங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து, நிலத்தின் வகைபாடு, ஆக்கிரமிப்பு தன்மை, ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும் பொருட்டு தணிக்கையும், விசாரணையும் மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களின் தகுதியின் அடிப்படையில் விதிமுறைகளை அனுசரித்து வீட்டுமனைப் பட்டா

[2000 மே 18

வழங்குவது குறித்து மாவட்ட அளவில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10—**

**தீர்ப்பாணை**

**வினா எண் 29578—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு தகுதி பெற்றவர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் பணிக்கான தீர்ப்பாணை பெற்ற பின்னும் பணி வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு தகுதி பெற்றவர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் பணிக்கான தீர்ப்பினைப் பெற்ற பின்னரும் பணி வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியும்.

(ஆ) தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடத்திற்குத் தீர்ப்பாணை பெற்றவர்களை விட, விதிமுறைகளின்படி கிராம நிர்வாக அலுவலர் பணியிடத்திற்குத் தகுதியுடைய முன்னாள் கிராம அலுவலர்கள் பலர் காத்துக்கொண்டிருப்பதால், முதுநிலை அடிப்படையில் வரிசைக்கிரமமாக கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு அவர்களது பணி முதுநிலை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் வழங்க ஏற்கெனவே அரசால் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**11—**

**மயானம்**

**வினா எண் 37716—திரு. வி.கே. லட்சுமணன்:** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 19ஆவது வார்டில் உள்ள ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்தும் மயானத்தை அதிகாரபூர்வமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு விரைவில் ஒப்படைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 19ஆவது வார்டில் உள்ள ஆதிதிராவிட மக்கள் தற்போது சவுரிபாளையம் கிராமம், பாரதிபுரத்தில் உள்ள மயானத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மயானம் அமைந்துள்ள இடம் புறம்போக்கு ஆகும். மேலும் இது கோவை மாநகராட்சியின் அனுமதிக்கப்படாத மயானம் ஆகும். இந்தப் புறம்போக்கு நிலத்தை கோவை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் கோவை வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**12—**

**குடி தண்ணீர் வசதி**

**வினா எண் 4026—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம் கும்பரையூர் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடைக்கானல் ஒன்றியம், கும்பரையூர் கிராமத்திற்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் ரூ.16.16 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் விரைவில் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**13—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 9425—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், இராமபட்டினம் புதூர் அருகே உள்ள கோம்பையில் ஒரு சமுதாயக் கிணறு அமைத்து, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மஞ்சநாயக்கன்பட்டி மற்றும் போடுவார்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நீராதாரப் பற்றாக்குறையினைப் போக்குவதற்கு வாரியத்தின் மூலம் கோம்பையில் ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. களப்பணி சிக்கல்களால் அப் பணி தொடர இயலவில்லை. இதே ஆழ்துளைக் கிணற்று நீராதாரத்தைத் தொடர்ந்து அமைக்க மாற்று வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. தேவத்தூர் ஊராட்சி, கோடாங்கிபட்டி குடிநீர்த் திட்டத்திற்கு நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவில் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் திட்டம் நிறைவு பெறும்.



**14—**

## கிராமங்களில் குடிநீர் வசதி

**வினா எண் 9427—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரனூர் அருகே சண்முகம் நதிக்கரையில் ஒரு சமுதாயக் கிணறு அமைத்து, தொப்பம்பட்டி, வேலம்பட்டி, மேட்டுப்பட்டி, வாகரை, புங்கமுத்தூர், வடபருத்தியூர், அப்பனூத்து ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரனூர் அருகே சண்முக நதிக்கரையில் ஒரு சமுதாயக் கிணறு அமைத்து தொப்பம்பட்டி, வேலம்பட்டி, மேட்டுப்பட்டி, வாகரை, புங்கமுத்தூர், வடபருத்தியூர், அப்பனூத்து ஆகிய அனைத்து ஊராட்சிகளுக்கும் போதுமான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**15—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 13446—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தைச் சுற்றியுள்ள மரக்காணம் ரோடு, இந்திரா நகர், மைலம் ரோடு, கல்பனா நகர், பொன்னி நகர் மற்றும் புதிய குடியிருப்புப் பகுதிகளில் குடியிருப்பவர்கள் வீட்டு வரி, மின் கட்டணம் கட்டியும் அப்பகுதி அங்கீகரிக்கப்பட்ட பகுதி இல்லை (அன்அப்ரூவ்டு லே-அவுட்) என்பதால் சாலை, குடி தண்ணீர், தெரு விளக்கு வசதி மறுக்கப்படுவது அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இப்பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓரிரு சாலை வசதி, குடிநீர், தெருவிளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**16—**

**சுத்தமான குடிநீரை வழங்குதல்**

**வினா எண் 21676—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், சிறுவாணி குடிநீரில் சாக்கடை நீர் கலந்துள்ளதாகக் கூறப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் விநியோகிக்கப்படும் சிறுவாணி குடிநீரில் எந்த இடத்திலும் சாக்கடை நீர் கலக்கவில்லை. இது போன்று எந்தச் சம்பவமும் நிகழாவண்ணம் உரிய நடவடிக்கைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**17—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 23536—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 30 கிராமங்களுக்கு பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 30 கிராமங்களுக்கு பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் உத்தேசம் தற்போது இல்லை.

வானாபுரம் ஊராட்சி, நூக்கம்பாடி குடியிருப்புக்கு வரும் நிதியாண்டில் 2000-2001-ல் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**18—**

**சுத்திகரிப்பு மையங்கள்**

**வினா எண் 23566—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குடிநீரின் உவர் தன்மையை நீக்கும் சுத்திகரிப்பு மையங்கள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) மையங்கள் நிறுவ அரசு என்ன அளவுகோல் கடைபிடிக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உவர் நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு மையங்கள் 21 (இருபத்தியொன்று) உள்ளன.

(ஆ) இம்மையங்கள் நிறுவுவதற்கு குறிப்பிட்ட அளவுகோல் ஏதும் இல்லை. ஆயினும் நிலத்தடி நீர், உவர் தன்மையால் பாதிக்கப்பட்டு தகுந்த மாற்று நல்ல குடிநீர் ஆதாரம் கண்டறிவதற்கான சாத்தியக்

[2000 மே 18

கூறுகள் இல்லாமல் உள்ள பகுதிகளில் இத்தகைய கலன்கள் நிறுவப்பட பரிசீலிக்கப்படுகின்றன.

**19—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 25174—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சி, மாப்பிள்ளைநாயக்கன்பட்டியில் ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**20—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 2699—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிளியனூர் ஊராட்சிக்குட்பட்ட நள்ளானூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2000 மே 18]

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிளியனூர் ஊராட்சிக்குட்பட்ட நள்ளானூர் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய மின் இறைப்பான் திட்டம் 2000-2001-ம் நிதியாண்டில் எடுத்து நிறைவேற்ற ஆவன செய்யப்படும்.

**21—**

**வணிக வளாகம்**

**வினா எண் 31949—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், குஜிலியம்பாறைக்கு வணிக வளாகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் தான் பணியைச் செயல்படுத்த முடியும்.

**22—**

**உணவு விடுதிகள்**

**வினா எண் 34435—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தின் உணவு விடுதிகளின் வாடகை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

(ஆ) தீர்மானிக்கப்பட்டதை முறையாகக் கட்டி வருகிறார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி இவற்றில் எது அதிகமோ அந்த உச்ச கேள்வித் தொகை நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டபின் வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

**23—**

### விவசாயக் கருவிகள்

**வினா எண் 2250—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டுகளில் விவசாயத் துறையில் வழங்கப்பட்ட விவசாயக் கருவிகளான, களைவெட்டி, மண்வெட்டி, கலப்பை போன்ற சாதனங்கள் தரமானதாக இல்லாததால், தரமான விவசாயக் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

**24—**

### பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்

**வினா எண் 6241—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர அணை பாசனப் பகுதியில் பாசனப்பகுதி மேன்மைத் திட்டத்தைச் செயல்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள்.

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**25—**

### ஈட்டுத் தொகை

**வினா எண் 10465—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கரும்பலூர், கொட்டையூர், பெருந்துறைப்பட்டு ஆகிய கிராமங்களில் கரும்புச் சாலை அபிவிருத்திக்கென எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஈட்டுத் தொகை வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் கொட்டையூர், தென் கரும்பலூர், வாழவச்சனூர், குங்கிலியநத்தம் முதலிய நான்கு கிராமங்களில் கரும்புச் சாலை அபிவிருத்திக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நில மதிப்பீடு செய்து இழப்பீட்டுத் தொகை வழங்கும்பொருட்டு மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்களின் தலைமையில் 12-12-1998 அன்று நேரடி பேச்சு வார்த்தை குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் மேற்படி நேரடி பேச்சுவார்த்தை குழு நிர்ணயம் செய்த இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்ள சம்மத வாக்கு மூலம் கொடுத்ததன் பேரில் நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்குமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவண்ணாமலை கோட்டாட்சியருக்கு ஆணையிட்டுள்ளார். அதற்கான பணி நடைபெற்று வருகிறது.

**26—**

**வேளாண்மைக் கிடங்கு**

**வினா எண் 23003—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தாணிப்பாடியில் வேளாண்மைக் கிடங்கு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**27—**

**விதிகளைத் தளர்த்துதல்**

**வினா எண் 26484—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தர்பூசணிப் பழங்கள் வைத்து விற்பதற்கு விதிகள் தளர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தர்பூசணி பழங்களைப் பரிட்சார்த்த முறையில் விற்க திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கண்காணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2. விற்பனைக் கூடங்களில் விளைபொருட்களுக்குக் கட்டணம் வசூலிப்பதிலிருந்து வரும் சில பிரச்சினைகள் மற்றும் விற்பனைக் கட்டண விதிகளைச் சீரமைப்பதற்கான விதி முறைகளை ஆய்வு செய்து கண்டறிய ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

**நிலத்தடி நீர்**

**வினா எண் 30127—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு பயிரிடப்படுவதால் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர் குறைவதாக அறிவியல் அறிஞர்கள் கூறுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையைப் போக்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கரும்பு பயிரிடப்படுவதால் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் அபாயம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

29—

## மானிய விலையில் பொருட்கள்

**வினா எண் 30386—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கென மானிய விலையில் விதைகள், மரக்கன்றுகள், நாற்று மற்றும் ரசாயன உரங்கள் வழங்க அரசின் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென தோட்டக்கலைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் மாநிலத் திட்டங்களில், சிறப்பாக ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தனி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு மானிய விலையில் விதைகள், மரக்கன்றுகள், உரம் ஆகியவை வழங்க திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கென மானியம், ஆதிதிராவிட விவசாயிகளைச் சென்றடைய குறிப்பிட்ட சதம் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

30—

## நிலத்தடி நீரை உயர்த்துதல்

**வினா எண் 30721—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் நிலத்தடி நீரை உயர்த்த வேண்டிய அவசியத்தை அரசு உணருமா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மட்டும் செயல்படுத்தப்படுகிறது.

31—

## விலை நிர்ணயம்

**வினா எண்கள் 30729 மற்றும் 30368—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு நியாயமான விலையை அவர்களே நிர்ணயம் செய்ய அரசு உதவி புரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு விவசாயிகளால் விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. தற்போது உழவர் சந்தைகளில் மட்டுமே விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு விலையை அன்றாடம் நிர்ணயம் செய்கிறது.

32—

## உரம் தயாரித்தல்

**வினா எண் 34408—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி, செங்கோட்டை நகராட்சிகளில் கிடைக்கக்கூடிய குப்பைக் கூளங்களைக் கொண்டு அக்ரோபெட் நிறுவனத்தின்மூலம்

தென்காசியில் உரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அக்ரோபெட் நிறுவனம்மூலம் தென்காசியில் உரம் தயாரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

33—

## உரங்கள் இறக்குமதி

**வினா எண் 35338—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன உரங்கள் அதிக அளவில் மண்ணில் இடுவதால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன் உரச்செலவும் அதிகமாவதைத் தடுக்க மேல்நாடுகளில் பயன்படுத்தும் இலை வழி தெளிக்கும் (Foliar Spray) பிரத்தியேகமான இரசாயன உரங்களை இறக்குமதி செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இலை வழி தெளிக்கும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது இத் துறையின் செயல்பாட்டில் இல்லை. எனினும் தனியார் இறக்குமதி செய்து விற்பனை செய்வதை மத்திய அரசு அனுமதிக்கிறது.

(ஆ) பிரத்தியேகமாக இலை வழி தெளிக்கும் உரங்கள் இறக்குமதி செய்திட உரக் கட்டுப்பாடு ஆணையில் அறிவிக்கப்பட்டபடி தனியார்



மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகின்றது. இதற்காக மேலும் சில உரங்களைச் சேர்த்திட தற்பொழுது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

34—

## உரங்கள் விற்பனை

**வினா எண் 35357—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்பு உரங்கள் என்ற பெயரால் தரமற்ற உரங்கள் தயார் செய்து விற்பனை செய்வது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆந்திர, கேரள மாநிலங்கள் கலப்பு உரங்களைத் தடை செய்தது போல தமிழகத்திலும் கலப்பு உரங்களைத் தடைசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இது குறித்த புகார் எதுவும் 1999-2000 ஆம் ஆண்டில் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

35—

## ஆற்று வாய்க்காலைச் சீர்செய்தல்

**வினா எண் 3993—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, பெரியதச்சூர் ஏரிக்கு வராகநதி மூலமாக வரும் ஆற்று வாய்க்காலையும் ஏரியையும் ஆழப்படுத்தி சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். இப்பணிகள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.90,000/- மதிப்பீட்டில் 1997-98-ம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் 3/99-ல் முடிக்கப்பட்டுள்ளன.

**36—**

**புதிய படுக்கை அணை**

**வினா எண் 6543—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை, காவிரி கோட்டம், நன்னிலம் துணைக் கோட்டம், அரசலாற்றின் குறுக்கே திருப்பந் துறை வாய்க்கால் தலைப்புக்காக புதிய படுக்கை அணை கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர், காவிரி கோட்டம், நன்னிலம் துணைக் கோட்டம், அரசலாற்றின் குறுக்கே மைல் 63/2-ல் திருப்பந் துறை படுகை அணை வேலை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1998-99-ம் ஆண்டு அடைப்புக் காலத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**37—**

**என்.எம்.ஆர். தொழிலாளர்கள்**

**வினா எண் 8003—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையில் என்.எம்.ஆர். தொழிலாளர்கள் பணிபுரிகிறார்களா?



(ஆ) ஆம் எனில் அவர்களை நிரந்தரம் செய்ய அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுப் பணித் துறையில் என்.எம்.ஆர். தொழிலாளர்களைப் பயன்படுத்தக்கூடாது என 1-6-1990 முதல் தடை உள்ளது. இருப்பினும் அவசர வேலைகளைக் கருதி 90 நாட்களுக்கு மிகையாகாமல் குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்கு தினக்கூலிப் பணியாளர்களை ஈடுபடுத்துவதுண்டு. அவ்வாறு ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்கள் தொடர்ந்து ஆங்காங்குள்ள திட்டப்பணிகளுக்கு ஈடுபடுத்தும்பட்சத்தில் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணிபுரிந்து வந்திருந்தால் அவர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**38—**

**மராமத்து பணி**

**வினா எண் 9679—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம், வயலூர் ஏரியைத் தூர்வாரி குடி மராமத்து செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது நிறைவுபெறும்?

(இ) அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் வட்டம், வயலூர் ஏரியைத் தூர் வாரி புனரமைப்பு செய்யும் பணி ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில்

எடுத்துக்கொள்ளப்பட்டு இப்பணி முழுமையாக 30-9-1998-ல் முடிக்கப்பட்டது.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.14.00 இலட்சங்கள் ஆகும்.

**39—**

**பழமரங்கள் நடுதல்**

**வினா எண் 24626—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அதிக அளவில் பழ மரங்கள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வனத் துறையில் அதிக அளவில் பழமரங்கள் நடும் திட்டம் ஏதுமில்லை.

**40—.**

**தடுப்பு அணை**

**வினா எண் 25795—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மஞ்சனவாடி, மணக்காரை, திருச்சுற்றி முற்றம், அண்டூர் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் அதிவீரராமனாற்றில் அண்டூர் பாசன வாய்க்கால் பிரியும் இடமருகில் ஒரு பெட் டாம் (தடுப்பு அணை) கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மஞ்சனவாடி, திருச்சுற்றிமுற்றம், அண்டூர், தண்ணீர்குன்னம் ஆகிய நான்கு வாய்க்கால்களும் பயன்பெறும் வகையில் அதிவீரராமனாற்றில் மைல் 2/0-ல் ஒரு ரெகுலேட்டர் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நான்கு வாய்க்கால்களும் நன்றாகப் பயன்பெற்று பாசனம் சீராக நடைபெற்று வருவதால் அதிவீரராமனாற்றில் அண்டூர் பாசன வாய்க்கால் பிரியுமிடம் அருகில் ஒரு பெட் டாம் கட்டத் தேவையில்லை என கருதப்படுகிறது.

**41—**

**ஏரிகளை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 26810—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணா நீரைத் தேக்கிவைக்கும் வகையில் பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. எனினும் மார்ச் 1998-ல் செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் ஜூன் 1999-ல் பூண்டி ஏரி ஆகிய ஏரிகளின் கரைகள் இரண்டு அடி உயர்த்தப்பட்டு கொள்ளளவு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

42—

### அணை கட்டுதல்

**வினா எண் 32421—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநீர்மலை அருகில் அடையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அடையாற்றில் தாம்பரம் தொகுதி, திருநீர்மலை பகுதியில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

43—

### சென்னைக்கு இரயில்

**வினா எண் 26261—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவனந்தபுரம்-கன்னியாகுமரி-நெல்லை வழியாக சென்னைக்கு இரயில் விட தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது 8 ஜதை விரைவு/மிக விரைவு இரயில் வண்டிகள், சென்னை எழும்பூர்-திருச்சி-மதுரை-திருநெல்வேலி வழியாக தென்னக அகல இரயில் பாதையில் செல்வதால், திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி-நெல்லை வழியாக சென்னைக்கு ஒரு வழிப்பாதையில் கூடுதல் இரயில்கள் விட இயலாது.



44—

### பேருந்து இயக்குதல்

**வினா எண் 30399—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடி அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகத்தின் மூலம் சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு வழித்தடம் எண் 626ஈ-ல் இரண்டு பேருந்துகள் இரண்டு ஒரு வழிப்பாதைப் பயணமாக பரிட்சார்த்தமாக 20-11-1999 முதல் இயக்கப்படுகின்றன.

45—

### கூடு கட்டும் தொழிற்சாலை

**வினா எண் 33083—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூரில் பேருந்து கூடுகட்டும் தொழிற்சாலை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

[2000 மே 18

46—

**காலி பணியிடங்கள்**

**வினா எண் 2127—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சாலைகளைப் பராமரித்து வரும் சுமார் 10,000 "கேங்" கூலிகளின், பணியிடங்களை நிரப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விரைவில் அதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) அரசு ஆணை எண் 184, நெடுஞ்சாலைத் துறை, நாள் 29-5-1997-ல் அரசு 9,813 புதிய பணியிடங்களைத் தோற்றுவித்தது. இப்பணியிடங்களில் ஏற்கெனவே மூன்றாண்டுகளுக்கு மேல் தினக்கூலிகளாகப் பணிபுரிந்து வரும் தினக்கூலிகளை நிரந்தரமாக்க 764 பணியிடங்களை ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

*(ஆ) 9,049 பணியிடங்களுக்கு குலுக்கல் முறையில் 8,332 சாலைப் பணியாளர்களையும், ஏற்கெனவே துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் தினக்கூலிகளுக்காக ஒதுக்கப்பட்ட 764 பணியிடங்களில் இதுகாறும் பணிவரன்முறை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 683, ஆகமொத்தம் 9,015 நபர்கள் நிரப்பப்பட்டுள்ளனர். ஒரு சிலர் நீதிமன்றத் தடையாணை பெற்றுள்ளனர். இவை அனைத்தும் ஆய்வு செய்து, நீதிமன்ற ஆணை பெறப்பட்டதும் மீதமுள்ள இடங்கள் நிரப்பப்படும்.*

46அ—

**ஆறு வழிச்சாலை**

**வினா எண் 25348—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

*சென்னை, கிண்டி முதல் தாம்பரம் வரையிலான நான்கு வழிச் சாலையை ஆறு வழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*அண்ணா சாலையில் கிண்டி முதல் தாம்பரம் வரை (கி.மீ. 11/7 முதல் 27/8 வரை) உள்ள நான்கு வழிச் சாலை ஆறு வழிச் சாலையாக மாற்றப்பட உள்ளது.*

47—

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 27690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) முக்கிய மாவட்டச் சாலையான எடப்பாடி—மகுடஞ்சாவடி சாலையில், ஒருவழிப் பாதையாக அகலம் குறைவாகவுள்ள பகுதி, போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அதை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பெருந்தொகை தேவைப்படும் இத்திட்டத்தினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தலாம் என அரசு முயன்று வருகிறது.*

**48—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 28856—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப் பட்டியில் குறுகிய சாலை இருப்பதால் ஊருக்கு வெளிப்பகுதியில் புதிதாகச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**49—**

**குத்தகை**

**வினா எண் 26022—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துகளை ஆலயத்திற்கு குத்தகை கொடுக்காமல் தனியார் அனுபவித்து வருகின்ற தகவல்கள் அரசிடம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீட்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**



(அ) ஆம்.

(ஆ) தனியார் வசமுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைத் திருக்கோயிலின் சுவாதீனத்திற்குக் கொண்டுவர இந்து சமய அறநிலையச் சட்டவிதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டு 386.37 ஏக்கர் விவசாய நிலங்களும், 141 கிரவுண்ட் 1423 சதுர அடி மனைகள் மற்றும் 40 சென்ட் வீட்டுமனைப் பகுதிகளும், திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் 907.38 ஏக்கர் நிலங்கள் குறித்து திருக்கோயிலுக்குச் சாதகமாக நீதிமன்றங்களில் தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.

**50—**

**குளத்தைச் செப்பனிடுதல்**

**வினா 32831—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்ன திருப்பதி திருக்கோவிலுக்குச் சொந்தமான குளத்தைச் செப்பனிட்டு புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்ன திருப்பதி திருக்கோவிலுக்குச் சொந்தமான திருக்குளம் தமிழ்நாடு அரசு விவசாயப் பொறியியல் துறை மூலம் 1993-94 ஆம் நிதி ஆண்டில் ரூ.2,00,000/- செலவில் திருக்குளத்தைச் செப்பனிட்டு, புதுப்பித்து தற்போது நல்ல நிலையில் உள்ளது. ஆகவே, திருப்பணி செய்ய வேண்டிய அவசியமில்லை.

[2000 மே 18

51—

### கூட்டுறவு வங்கி

**வினா எண் 10424—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து எசனை கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து எசனை கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எசனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 5-6-1998-ல் பதிவு செய்யப்பட்டு, 6-6-1998 முதல் பணியைத் தொடங்கி செயல்படுகிறது.

52—

### அரிசி நிலவரம்

**வினா எண் 24515—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழக அரசு மொத்தம் எத்தனை டன் அரிசி பெற்றது?

(ஆ) அது எந்த விலைக்கு வாங்கப்பட்டது?

(இ) பொது மக்களுக்கு எந்த விலையில் விநியோகம் செய்யப்பட்டது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழக அரசு மொத்தமாக 12,70,760 டன்கள் அரிசி பெற்றுள்ளது.

(ஆ) அரிசியின் மூன்று ரகங்களை இரண்டு இரகங்களாக அதாவது 'சாதா ரகம்' மற்றும் 'ஏ' ரகமென இருவகைப்படுத்தி மைய அரசு 1-12-1997 முதல் விற்பனை விலைகளைப் பின்வருமாறு நிர்ணயித்தது:

| | சாதா ரகம் | ஏ ரகம் |
|---|---|---|
| | (ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு) | |
| வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு | 350 | 350 |
| வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு | - | 700 |

அடுத்து, 29-1-1999 முதல் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை மட்டும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.700-லிருந்து ரூ.905 ஆக உயர்த்தி மைய அரசு நிர்ணயித்தது.

(இ) பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 1-7-1997 முதல் சாதா ரக அரிசி ரூ.2/- என்ற விலையிலும், கிரேடு 'ஏ' ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்ற விலையிலும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தற்போது சாதா ரக அரிசி கையிருப்பில் இல்லாத காரணத்தினால், ரூ.3.75 விலையுள்ள கிரேடு 'ஏ' ரக அரிசியே பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படுகின்றது. அரசாணை (நிலை) எண் 273, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (பி1) துறை, நாள் 7-12-1999-ல் கிரேடு 'ஏ' ரக அரிசியின் விலையான ரூ.3.75-ஐ, 1-1-2000 முதல் ரூ.3.50 என்று விலைக் குறைத்து வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[2000 மே 18

53—

### வணிகக் கடன்

**வினா எண் 25702—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கூட்டுறவு வங்கிகள் மூலம் மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடன்கள் எத்தனை?*

*(ஆ) அதன் தொகை எவ்வளவு? பயன் பெற்ற மகளிர் எத்தனை பேர்?*

*(இ) அதை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) 27,958 மகளிருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) 16-6-1999 அன்றுள்ள நிலவரப்படி மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 27,958 நபர்களுக்கு ரூ.2,06,21,600/- அளவுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.*

*(இ) 2-5-1999 முதல் இத்திட்டம் தமிழகத்தின் எல்லா (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக) பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

54—

### மண்ணெண்ணெயை அதிகரித்தல்

**வினா எண் 30179—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிராமப் பகுதிகளுக்கு குடும்ப அட்டைக்கான மண்ணெண்ணெயை அதிகப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?*



2000 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) கிராமப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கான மண்ணெண்ணெய் வழங்கல் அளவினை உயர்த்தி வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

55—

### வெங்காயக் கிடங்கு

**வினா எண் 31878—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை பகுதியில் வெங்காயக் கிடங்கு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வெங்காயக் கிடங்கு அமைக்கக் கேட்கப்பட்டுள்ள குஜிலியம்பாறையும், தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள கிட்டங்கி அமைந்துள்ள எரியோடு கிராமமும் மிக அருகிலேயே உள்ளதால் குஜிலியம்பாறையில் வெங்காயக் கிடங்கு ஏற்படுத்தினால் அதனைப் போதிய அளவில் பயன்படுத்த யாரும் முன் வரமாட்டார்கள் என்பதால் இணையத்திற்கு நிதி இழப்பீடு ஏற்படலாம். எனவே புதிய வெங்காயக் கிடங்கு குஜிலியம்பாறையில் அமைக்க சாத்தியமில்லை.*

56—

### குடிசைவாசிகள்

**வினா எண் 20204—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சென்னை பக்கிங்காம் கால்வாயோரக் குடிசைவாசிகளுக்கு மாற்று ஏற்பாட்டை அரசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாய்க் கரைகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் 4,600 குடிசைவாசிகளுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரைகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட வீடுகள் அமைத்தும், அவ்வாறு வீடுகள் அமைக்க இயலாத இடங்களில் வாழ்வோருக்கு சென்னை கொருக்குப்பேட்டை பகுதி பாரதி நகரிலும், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தும் குடியமர்த்தப்படுகின்றனர்.

**57—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 22879—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் எத்தனை வீடுகள் கட்டித் தரப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) 180 வீடுகள்.

(ஆ) ஈரோடு நகரிலுள்ள பனந்தோப்பு பகுதியில் 180 வீடுகள் ரூ.136.42 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன.



2000 மே 18]

**58—**

**மாடி வீடுகட்டுதல்**

**வினா எண் 23013—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் குடிசை மாற்று வாரியம் மூலம் குடிசை வீடுகளை மாற்றி மாடி வீடு கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

**59—**

**கூட்டுறவுப் பால் சங்கம்**

**வினா எண் 24154—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, 3-வது வார்டில் கூட்டுறவுப் பால் சங்கம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

வல்லம் பேரூராட்சி, 3-வது வார்டில் தனியாக ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**60—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 29445—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு வீடுகள் கட்டவும், தெரு மேம்பாடு செய்யவும் அரசு முன்வருமா?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

**61—**

**குளிர்பதன இயந்திரம்**

**வினா எண் 29462—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் நிறுவனப் பொருட்களை விற்பனை செய்யும் தனியார் சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கடனுதவி அடிப்படையில் குளிர்பதன இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

ஆவின் நிறுவனப் பொருட்களை விற்பனை செய்யும் தனியார் சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கடனுதவி அடிப்படையில் குளிர்பதன இயந்திரம் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**62—**

**குற்ற நடவடிக்கை**

**வினா எண் 26006—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடை அளவுகளை சோதனைக்குட்படுத்தாத வர்த்தக நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஈரோடு மாவட்டத்தில் இத்தகைய குற்றங்களுக்காகக் கடந்த ஆண்டில் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தொழிலாளர் துறை ஆய்வர்களால் அவரவர் ஆட்சி எல்லையில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களும் எடையளவுச் சட்டத்தின்கீழ் காலம் தவறாமல் தொடர்ந்து தீவிரமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சோதனைகளின்போது ஆண்டுக்கு ஒருமுறை பரிசீலனை செய்து முத்திரையிடப்படாத எடையளவுகள் உபயோகத்தில் இருப்பது காணப்பட்டால் அவை தொழிலாளர் துறை ஆய்வர்களால் கைப்பற்றப்பட்டு உரிமையாளர்களின் மீது சட்ட விதிகட்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1998ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் எடையளவு சட்டத்தின்கீழ் 20,923 வணிக நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றில் 1,113 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.2,33,300/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**63—**

**உரிமைத்தைப் புதுப்பித்தல்**

**வினா எண் 27962—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடைக்கற்கள் மற்றும் அளவைகளுக்கான உரிமம் புதுப்பித்தலை ஓராண்டுக்கு ஒருமுறை என்பதை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றக் கோரி விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற விண்ணப்பம் ஏதும் அரசிடம் பெறப்படவில்லை.

(ஆ) எழாது.

64—

### தொழிற் பிரிவுகள்

**வினா எண் *28384*—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமைப்பு சாராத தொழிலாளர் நல வாரியத்தில் மேலும் சில தொழிற் பிரிவுகளை இணைத்திட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அவை யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். அமைப்பு சாராத தொழிலாளர் நல வாரியத்தில் மேலும் சில தொழிற் பிரிவுகளைச் சேர்க்கக் கோரிக்கை வைக்கப்பட்டால் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைகள்) சட்டம் 1982 பிரிவு 29-ன் படி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைகள்) சட்டம் 1982-ன்படி பிற் சேர்க்கையில் ஏற்கெனவே 12 தொழிற் பிரிவுகள் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த அரசு 21-8-1998 அன்று மேலும் 43 தொழில் பிரிவுகளை மேற்படி சட்டத்தின் பிற்சேர்க்கையில் சேர்த்து ஆணையிட்டது. மேலும் வீட்டு வேலை செய்யும் தொழில் மற்றும் சைக்கிள் பழுதுபார்க்கும் தொழில் ஆகிய இரு தொழில்களையும் சட்டத்தின் பிற்சேர்க்கையில் சேர்க்க முதல்நிலை அறிக்கை வெளியிட்டுள்ளது.

65—

### தொழிற்சாலையைத் திறத்தல்

**வினா எண் 28615—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சதர்ன் சுவிட்ச் கியர் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிலாளர் ஆணையர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ் 28-6-1999 அன்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 16-8-1999 முதல் ஆலையை முழு அளவில் இயக்க ஒப்புக் கொண்டிருந்தாலும், ஆலையை இயக்கத் தேவையான நிதி உதவியைப் பெறத் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, ஆலை 12-11-1999 முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

66—

### தொழிற்சாலை

**வினா எண்கள் 28617 மற்றும் 28388—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, காரமடை இராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் மீண்டும் திறக்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) கோயமுத்தூர் காரமடை இராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) கோவை, காரமடை ஸ்ரீஇராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் இயங்காதது தொடர்பாக, தொழிலாளர் ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்று, இதில் உடன்பாடு ஏற்படாததால், இத் தாவார 28-3-2000 நாளிட்ட இத் துறையின் அரசு ஆணை (டி) எண் 285-ல் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்வுக்கு விடப்பட்டுள்ளது.

67—

## மருத்துவ வசதி

**வினா எண் 31254—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவமனை மற்றும் சிற்றுண்டி விடுதி ஆகியவற்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எபபோது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசு தொழிற்சாலைகள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் அவசரகால மருத்துவக் கூடம் மற்றும் சிற்றுண்டி வசதி அமைப்பது தொடர்பாக சட்ட விதிகள் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) அவசர கால மருத்துவக்கூடம் மற்றும் சிற்றுண்டி விடுதிகள் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் ஏற்படுத்துவதற்கு முறை ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

68—

## மேம்பாட்டுக் கழகம்

**வினா எண் 15941—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக நடப்பாண்டில் பெற்ற கடனுதவி எவ்வளவு?





(ஆ) இதன் மூலம் எத்தனை பேர் பயன்பெற்றுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக நடப்பாண்டான 1998-99-ல் பெற்ற கடனுதவி ரூ.19.38 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) இதன் மூலம் 28 பேர் பயனடைந்துள்ளனர்.

69—

## கைத்தறி ரகங்கள்

**வினா எண் 22086—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை கைத்தறியில் தயாரிப்பதை உறுதிப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, துணை இயக்குநர் அளவில் ஒரு அமலாக்க அலுவலகமும், மாவட்ட அளவில் சேலம், திருசெங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி இயக்குநர் அளவில் உதவி அமலாக்க அலுவலகங்களும் தொடங்கப்பட்டு அமலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில் விசைத்தறியாளர்களின் அமைப்பின் தலைவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில், கைத்தறி ரக ஒதுக்கீட்டினை மீறுபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் எடுப்பதிலிருந்து ரிட் மனு எண் 7956/98, நாள் 2-6-1998-ல் தடையுத்தரவு பெற்றனர். அமலாக்க அலுவலகம்

மேற்கொண்ட தீவிர முயற்சியினால் தடை உத்தரவுகள் 9-9-1998-ல் நீக்கப்பட்டன. இதனையடுத்து அமலாக்க அலுவலகங்களின் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக விசைத்தறிகள் பெருமளவில் உள்ள பகுதிகளில் விசைத்தறியாளர்களைக்கொண்டு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**70—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 14606—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள மலை மஞ்சனூர்புதூர், தானிப்பாடி, தண்டராம்பட்டு, மோத்தக்கல், பழையனூர், பண்டிதப்பட்டு, பெருமனம் பவித்திரம், கீழ்சிறுபாக்கம் ஆகிய கிராமங்களில் வாழும் ஏழை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதிக்குட்பட்ட 9 கிராமங்களில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட கோரப்பட்டுள்ளது. கீழ்சிறுபாக்கம் கிராமத்தில் வசிக்கும் 52 குடும்பங்களுக்கு 2.94 ஏக்கர் நிலம் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் எடுக்கப்பட்டு 1997-98-ம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், பண்டிதப்பட்டு கிராமத்தில் வசிக்கும் 130 குடும்பங்களுக்கு 6.38 ஏக்கர் நிலம் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் எடுக்கப்பட்டு 1998-99-ம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டு உள்ளது. மேலும் மற்ற கிராமங்களில் வசிக்கும் வீட்டுமனைகள் இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைத் தேர்வு செய்து பட்டியல் தயார் செய்து, அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட தகுதியான நிலங்களைத் தேர்வு செய்து, முன்மொழிவுகளை அனுப்பிவைக்கும்படி திருவண்ணாமலை மற்றும் செங்கம் வட்டாட்சியர்களுக்கும், செங்கம்





ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்க துரிதப்படுத்தப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**71—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 23992—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா எண் 24107—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவிலில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

[2000 மே 18

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவிலில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**73—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 29975—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கல்லூரி வளாகத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அருகில் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் இருந்து 4 1/2 கி.மீட்டர் தொலைவில் சிதம்பரம் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைந்துள்ளது. கலைக் கல்லூரி வளாகத்துக்கு மிக அருகில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியினை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**74—**

**கணினி பயிற்சி**

**வினா எண் 30326—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நடத்தப்படும் கணினி பயிற்சித் திட்டம் பெரியார் பல்கலைக்கழகத்திலும் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



2000 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கணினி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது, பெரியார் பல்கலைக்கழகத்துடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டு, அப்பல்கலைக்கழகமும் இத்திட்டத்தில் பங்கு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**75—**

**விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 30329—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூரிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அனகாபுத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதி ஏதும் இயங்கவில்லை. சீர்மரபினர் மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**76—**

**மின் இணைப்பு**

**வினா எண் 14229—திரு. ச. அழகிரி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) நீலகிரி மாவட்டம், பிதர்காடு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை 1992 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டும் தொழிற்சாலை தொடங்க மின் இணைப்பு வழங்கப்படாததால் இந்தக் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 21,00,000/- (இருபத்தியொன்று இலட்சம்) அளவில் வட்டிச் சுமை ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பிதர்காடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு மின் இணைப்பு பெறப்பட்டு தொழிற்சாலை 28-6-1998 அன்று தொடங்கி வைக்கப்பட்டு தொழிற்சாலை தனது உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**77—**

**தொழிற்சாலைகள்**

**வினா எண் 21296—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறு தொழில் துறையில் எத்தனை தொழிற்சாலைகள் நலிவடைந்து, உற்பத்தியை நிறுத்தியுள்ளன?

(ஆ) இதனால் வேலையிழப்புக்கு ஆளான தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 30-9-1999 வரை 13,961 சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்து உற்பத்தியை நிறுத்தி உள்ளன.



2000 மே 18]

(ஆ) இதனால் 1,07,496 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

**78—**

**தொழில் உற்பத்தி**

**வினா எண் 23843—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டின் தொழில் உற்பத்தியில் சிறு மற்றும் குறுந்தொழில்களின் பங்கு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டின் மொத்த தொழில் உற்பத்தியில் சிறு மற்றும் குறுந்தொழில்களின் பங்கு 20 முதல் 23 விழுக்காடு என்ற நிலையில் உள்ளது.

**79—**

**பத்திர அலுவலகம்**

**வினா எண் 23988—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளியில் பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளியில் பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

[2000 மே 18

80—

## தொழிற்பேட்டை

**வினா எண் 24744—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

81—

## சத்துணவு மையம்

**வினா எண் 26405—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கல்லணை ஊராட்சி, காந்தி கிராமம் புதிய ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கல்லணை ஊராட்சி, உட்கடை, காந்தி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 25-8-1999 முதல் 103 மாணவர்களுக்கான சத்துணவு மையம் இயங்கி வருகிறது.



2000 மே 18]

82—

## கட்டட வசதி

**வினா எண் 26953—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூரில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகம் ஆங்கிலேயர் காலத்திலிருந்து வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தமாக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா? எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நம்பியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

## சிறு தொழில் கடன்

**வினா எண் 27991—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், விசயமங்கலம் பகுதியிலிருந்து சிறு தொழில் கடன் கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மூன்று விண்ணப்பங்கள் வந்துள்ளன. ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.7 இலட்சம் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டும் ஆய்வில் உள்ளன.

**84—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 28120—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூரில் தொழிற்பேட்டை அமைத்திட வள்ளியூர் வட்டார சிறு தொழிலதிபர்கள் முன்வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இராதாபுரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு சிறு தொழில் தொடங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**85—**

**தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா எண் 30930—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக உள்ள சாத்தான்குளம் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**86—**

**சிட்கோ தொழிற்பேட்டை**

**வினா எண் 31192—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டை அமைத்து, படித்த, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

**87—**

**பாப்பாரப்பட்டியில் தொழிற்பேட்டை**

**வினா எண் 31193—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மிகவும் பின்தங்கியுள்ளதால் பாப்பாரப்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய தொழில் முனைவோர்கள் முன்வர வாய்ப்பு இல்லை என்பது தெரியவந்துள்ளதால், தற்போது தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.*

**88—**

**சலுகைகள் அதிகரிப்பு**

**வினா எண் 30510—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களுக்கும் சலுகைளை விஸ்தரிக்க அரசு கருதியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ) பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களுக்குச் சலுகைகள் விஸ்தரிப்பது பற்றிய கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**89—**

**கடற்கரையில் சிலை**

**வினா எண் 32633—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2000 மே 18]

*(அ) இந்தியாவின் சுதந்திரத்திற்கு வெள்ளையனை எதிர்த்துப் போராடிய மானங்காத்த பூமியாம் சிவகங்கை சீமையின் மன்னர்கள் மருது சகோதரர்களுக்கு சென்னை கடற்கரையில் அரசு சார்பில் திருவுருவச் சிலை அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மருது சகோதரர்களுக்கு சென்னையில் அரசு சார்பில் சிலை அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.*

**90—**

**சிறப்பு நிகழ்ச்சிகள்**

**வினா எண் 33238—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*21 ஆம் நூற்றாண்டு வரவையொட்டி, வரும் 2000ஆம் ஆண்டில் அரசின் சார்பாகச் சிறப்பு நிகழ்ச்சிகள், திட்டங்கள் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*21 ஆம் நூற்றாண்டின் வரவையொட்டி 2000 ஆம் ஆண்டில் அரசின் சார்பாக உலகம் வியக்கத்தக்க சிறப்பு நிகழ்ச்சியாக வான்புகழ் வள்ளுவருக்கு கன்னியாகுமரி கடலில் உள்ள பாறையில் 133 அடி உயரத்தில் சுமார் ரூ.10 கோடி செலவில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலை திறப்பு விழா 1-1-2000 அன்று கன்னியாகுமரியில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தார்கள்.*

[2000 மே 18

91—

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 22401—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, வஞ்சிப்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கக் கோரும் முறையீடு அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

92—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 24157—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருமலைசமுத்திரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



2000 மே 18]

93—

### புதிய கால்நடை மருந்தகம்

**வினா எண் 24193—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டையில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

94—

### திரவ நைட்ரஜன் உற்பத்தி

**வினா எண் 25622—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கால்நடை உற்பத்தியைப் பெருக்குவதற்காக திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

### கால்நடை மருத்துவனை

**வினா எண் 25625—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம் பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

96—

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 25628—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பியடி, கூகுட்டப்பட்டி, பொட்டியபுரம், பன்னப்பட்டி, சிக்கனம்பட்டி, சக்கரைபெட்டிபட்டி ஆகிய கிராமங்கள் பயன்பெறும் வகையில் தும்பியபாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

97—

**கட்டடத்தைப் பழுது பார்த்தல்**

**வினா எண் 26041—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் பரசேரியில் உள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம் மிகவும் பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் பரசேரியில் கால்நடை மருத்துவமனை இல்லை. கிளை நிலையம்தான் உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

98—

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 27719—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பூலாம்பட்டி பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2000 மே 18

**99—**

**கிராமங்களில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 27728—திரு.ச. அழகுவேலு:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கண்டமங்கலம் தொகுதியில் களஞ்சிகுப்பம், அம்மணங்குப்பம், சேவிங்கனூர், திருமங்கலம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

**100—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 27903—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டயனப்பள்ளி ஊராட்சி, வெள்ளமன்காடு என்ற இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*



2000 மே 18]

**101—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 27904—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவேரிபுரம் ஊராட்சி, கோவிந்தபாடியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**102—**

**மானிய விலையில் ஆடுகள்**

**வினா எண் 29357—திரு. உ. திசைவீரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆடு வளர்ப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்க இலாபகரமான தெளசேரி இன ஆடுகளை மானிய விலையில் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

[2000 மே 18

ஆம். சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடமக்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய தௌச்சேரி இன ஆடு (வெள்ளாடு) வளர்ப்புக் கடன் வழங்கப்பட உள்ளது. அரசாணை எண் 26 (சிறப்பு மத்திய உதவித் திட்டம்) பழங்குடியினர் நலத் துறை நாள் 26-2-1999-ன்வழி வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்திற்காக மானியத் தொகை ரூ.2,11,40,000 இசைவளித்ததன் அடிப்படையில் நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**103—**

**கால்நடை கிளை மருந்தகம்**

**வினா எண் 29474—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பாண்டியூரில் கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதி, பாண்டியூரில் கால்நடை கிளை நிலையம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

**104—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 30611—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, நல்லமனார்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட தொட்டனம்பட்டிக்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2000 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**105—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 31012—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், மோர்ப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கொல்லப்பட்டிக்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**106—**

**வேலாயுதம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 31579—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், சிங்காரக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட வேலாயுதம்பாளையத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**107—**

**உதவித் தொகை**

**வினா எண் 19909—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முழுமையாக நடக்க முடியாமல் உள்ள உடல் ஊனமுற்றோருக்கு 21 வயதிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

75 சதவிகிதத்திற்குமேல் கடுமையாக ஊனமுற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வயதினைக் கணக்கில் கொள்ளாமல் மாதம் ரூ.150/- உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**108—**

**பெண் குழந்தைகள் பாதுகாப்பு**

**வினா எண் 26038—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், தர்மபுரி, நாமக்கல் மாவட்டங்களில் 1998-99-ல் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மூலம் பயன் அடைந்த குழந்தைகள் எத்தனை?



2000 மே 18]

(ஆ) அவர்களுக்கு அரசு செய்துள்ள நல உதவிகளின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99-ல் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் மூலம் 3 மாவட்டங்களில் பயனடைந்த குழந்தைகள் விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| தர்மபுரி | 393 | குழந்தைகள் |
| சேலம் | 149 | குழந்தைகள் |
| நாமக்கல் | 302 | குழந்தைகள் |
| | **844** | **குழந்தைகள்** |

இத்திட்டத்தின்கீழ் பதிவாகும் 2 பெண் குழந்தைகளுக்கு பிறகு கருத்தடை செய்து கொண்ட பெற்றோர்களுக்கு, அவர்கள் பதிவு செய்த உடனே ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ரூ.1,500-க்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிதி நிறுவனத்தின ஐந்தாண்டுக்கான காலவரை வைப்புத் தொகை ரசீதும் ஒரே பெண் குழந்தைக்குப் பின் கருத்தடை செய்துகொண்ட பெற்றோர்களுக்கு ரூ.3,000க்கான ஐந்தாண்டு காலவரை வைப்புத்தொகை ரசீதும் வழங்கப்பட்டுள்ளது.

**109—**

**இலவசமாக தொழிற்கருவிகள்**

**வினா எண் 25153—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக தொழிற்கருவிகள் வழங்குவது தொடர்பான புதிய மாற்றுத் திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம் 1998-99 முதல் கல்விக் குடும்பத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. படிக்காத, ஓரளவு படித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்த இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.

**110—**

**நடுநிலைப் பள்ளி**

**வினா எண் 25156—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், செங்கற்படை ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், செங்கற்படை ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி அரசாணை (நிலை) எண் 70, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11-6-1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**111—**

**சமத்துவபுரம்**

**வினா எண் 29828—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

புவனகிரி தொகுதியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதியில், பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்க நடவடிக்கை ஏதும் இல்லை.

**112—**

**புறம்போக்கு இடத்தில் சமத்துவபுரம்**

**வினா எண் 30121—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, ஆளூர் பேரூராட்சி, சுங்கான்கடையில் அம்பேத்கார் காலனி சமீபம் உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் சமத்துவபுரம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, ஆளூர் பேரூராட்சி, சுங்கான்கடையில் அம்பேத்கார் காலனி சமீபத்திலுள்ள அரசு புறம்போக்கு இடத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**113—**

**விடுதிகள் தொடங்குதல்**

**வினா எண் 15897—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

திருவண்ணாமலையில் சுற்றுலாத் துறை மூலம் உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையில் மத்திய அரசு நிதி உதவியுடன் உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட உள்ளது.

**114—**

**சுற்றுலா அடிப்படை வசதிகள்**

**வினா எண் 20006—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், கம்பம் தொகுதியைச் சேர்ந்த சுருளி அருவியை சுற்றுலா தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம் கம்பம் தொகுதியைச் சேர்ந்த சுருளி அருவியைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாத் துறை பிரபலமற்ற சுற்றுலா மையங்களை தேர்ந்தெடுத்து அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் தேனி மாவட்டம், கம்பம் தொகுதியைச் சேர்ந்த சுருளி அருவியை தேர்ந்தெடுத்து அரசு ஆணை எண் 260, செய்தி மற்றும் சுற்றுலாத் (சு.1) துறை, நாள் 30-11-1998-ன்படி குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்ய ரூ. 4.00 இலட்சம நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.



2000 மே 18]

**115—**

**சுற்றுலாத் துறை மூலம் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 22818—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சுற்றுலாத் துறை மூலம் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாதந்தோறும் பௌர்ணமி நாளன்று யாத்திரிகர்கள் திருவண்ணாமலைக்கு சென்றுவரும் வகையில் சுற்றுலாவை நடத்தி வருகிறது.

**116—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 26627—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் 64 அடி உயரம் உள்ள மகாமுனீஸ்வரர் சிலை நிறுவப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சுற்றுலாத் துறையை பொருத்தமட்டில் எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது கிடையாது. எனினும், சம்பந்தப்பட்ட இடங்களின் தேவைக்கேற்ப நிதி நிலைமையையும் கருத்தில்கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளான தங்கும் வசதி, குடிநீர், சாலை, கழிப்பிடம் ஆடைமாற்றும் இடம், குளியலறை ஆகிய வசதிகள் செய்து தரப்படுகின்றன. நாமக்கல் மாவட்டம் ஜேடர் பாளையத்தில் 64 அடி உயரமுள்ள மகாமுனீஸ்வரர் சிலை நிறுவப்பட்டுள்ளது தொடர்பாக கோவில் நிர்வாகத்திடமிருந்தோ, மாவட்ட நிர்வாகத்திடமிருந்தோ, சுற்றுலா மையமாக அறிவிக்க இது நாள் வரை கோரிக்கை பெறப்படவில்லை.

**117—**

**நாகாவதி அணையை சுற்றுலா மையமாக்குதல்**

**வினா எண் 30481—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகாவதி அணையை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலா மையமாக அறிவிப்பது இல்லை. ஆயினும் சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் மக்கள் அதிகமாக சென்றுவரும் இடங்களில் அடிப்படை வசதிகளையும், கட்டமைப்பு வசதிகளையும் மத்திய/மாநில அரசு நிதியில் ஏற்படுத்தி வருகிறது. எனவே தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகாவதி அணையை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**118—**

**கைமுறை தொழில்களை மேம்படுத்துதல்**

**வினா எண் 26424—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த் தொழில் வாரியம் மூலம் நடத்தப்படும் கைமுறை காகித அலகு தொழில் பிரிவும், மண்பாண்ட தொழில் பிரிவும் பின்னடைவு ஏற்பட்டு நட்டம் அடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை இலாபகரமாக இயக்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கைமுறை காகித அலகுகள் இலாபகரமாக இயங்கிட அவ்வலகுகளால் தயார் செய்யப்படும் கைமுறை காகிதங்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய அனைத்து நடவடிக்கைகளும் வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகளை தட்டச்சு செய்வதற்கு கைமுறை காகித அலகில் தயார் செய்யப்படும் கனமான தாள்கள் 200 ரீம்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் வாரியத்தால் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது விருத்தாச்சலம் பீங்கான் அலகிற்கு அரசின் ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் டிரைசம் நிதியாக ரூ.3.00 இலட்சம் மானிய தொகை பெறப்பட்டு, அவ்வலகினை நவீனமயப்படுத்தி, அலகிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்து உற்பத்தி, விற்பனையைப் பெருக்குவதற்கு வாரியம் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

**119—**

**பொம்மைத் தொழிற்கூடங்கள்**

**வினா எண் 28195—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ் கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்களை கதர்த் தொழில் வாரியத்தின் மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரத்தில் காகிதக் கூழ் கொண்டு தயாரிக்கும் பொம்மை தொழிற்கூடங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**120—**

**சேவை மையங்கள்**

**வினா எண் 31017—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மாவட்ட வாரியாக "சேவை மையங்கள்" அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மாவட்ட வாரியாக "சேவை மையங்கள்" அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.





**121—**

**பனைப் பொருட்கள்**

**வினா எண் 31208—திரு. ஜி.கே. மணி,** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகமாக இருப்பதால் பனைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களைத் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் பனைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்க திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**122—**

**துணை இயக்குநர் அலுவலகம்**

**வினா எண் 31635—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் கதர்த் கிராமத் தொழில் வாரியத்தின் மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

[2000 மே 18

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியைத் தலைமையகமாகக் கொண்ட ஒரு மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**123—**

**சங்கங்களுக்கு உதவிகள்**

**வினா எண் 21173—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு வழங்கும் உதவிகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கட்டுமரம், வள்ளம், இயந்திரம் தானியங்கி இழுவைகள், பிளைவுட் படகுகள், வெளிப்பொருத்தும் இயந்திரம், படகுகள், வலைகள், குளிர்பதனப்பெட்டிகள், மிதிவண்டிகள், குளிர்பதனப்பெட்டிகளுடன் கூடிய சாதாரண மிதிவண்டி மற்றும் டிரக்குகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

2. ஏலக்கூடங்கள் மற்றும் மீன் உலர்த்தும் மேடைகள் கட்டுதல் இலவச வீடுகள் கட்டுதல் மற்றும் வீடுகளை பழுதுபார்த்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன.

3. காப்பீட்டுத் தொகை, சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

**124—**

**கடல் முத்துக்கள் ஏற்றுமதி**

**வினா எண் 27716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 18]

(அ) தமிழக கடல் முத்துக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1998-99-ல் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**125—**

**உள்நாட்டு மீனவர்களுக்கு சலுகைகள்**

**வினா எண் 27735—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல்வாழ் மீனவர்களுக்கு அரசு தரும் சலுகைகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடல் மீன் பிடிப்போருக்கு அரசு தரும் சலுகைகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**126—**

**மானிய விலையில் பொருட்கள்**

**வினா எண் 29293—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மே 18

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தூண்டில், வலை மற்றும் பரிசல் ஆகியவற்றை மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உள்நாட்டு மீனவர்களுக்கு 25 விழுக்காடு மானியமாக ஒரு நபருக்கு ரூ.25,000/- வீதம் 500 நபர்களுக்கு நைலான் வலை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் மீன்பிடிக்கும் மீனவர்களும் சங்கத்தின் மூலம் விண்ணப்பம் செய்து பயனடையலாம். மானிய விலையில் பரிசல் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

**127—**

**மீன் பிடிப்புக் கப்பல்கள்**

**வினா எண் 29337—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான ஆழ்கடல் மீன்பிடிப்புக் கப்பல்கள் மூலம் அரசிற்கு வருவாய் வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) நான்கு இழுவைப்படகுகள் மூலம் வருவாய் வருகிறது.



2000 மே 18]

(ஆ)

| ஆண்டு | வருவாய் | செலவு | இலாபம் | நட்டம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1993-94 | 168.78 | 159.57 | 9.21 | - |
| 1994-95 | 185.08 | 170.93 | 14.15 | - |
| 1995-96 | 247.63 | 189.37 | 58.26 | - |
| 1996-97 | 242.24 | 225.18 | 17.06 | - |
| 1997-98 | 200.63 | 206.44 | - | (-)5.81 |

**128—**

**மணற்பாறைகளை அகற்றுதல்**

**வினா எண் 29472—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் கடற்கரையின் ஓரம் காணப்படும் மணற்பாறையை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இந்த மணற்பாறையால் மீனவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் கடற்பகுதியில் உள்ள பாறைகளினால் ஏற்படும் சேதாரத்தைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இந்த மணற்பாறைகளால் மீனவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 மே 18

**129—**

**மானியத்தில் பிளாஸ்டிக் படகுகள்**

**வினா எண் 32128—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டுக்கு மீனவர்களுக்கு அரசு மானியத்தில் எத்தனை பிளாஸ்டிக் படகுகள் வழங்கப்பட உள்ளன?

(ஆ) வழங்கியிருந்தால் எங்கெங்கே வழங்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் 50 சதவிகித மானிய விலையில் 44 மீனவ பயனாளிகளுக்கு கண்ணாடி இழையிலான கட்டுமரங்களை மீன் துறை இயக்குநர் மீனவர்களுக்கு வழங்குவார்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு 56 மீனவ பயனீட்டாளர்களுக்கு அரசு மானியத்தில் சென்னை, செங்கற்பட்டு, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**130—**

**மீன் விற்பனையகம்**

**வினா எண் 33372—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு மேட்டூர் மீன் விற்பனையகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகரில் ஒரு மேட்டூர் மீன் விற்பனையகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



2000 மே 18]

## 2 *கவன ஈர்ப்பு

**விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 39 வரை)**

**(I) சீர்காழி தொகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக தினசரி ஏற்படும் மின்வெட்டால் விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோர்களிடையே ஏற்பட்டுள்ள அவல நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. மு. பன்னீர்செல்வம்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை):**

**அறிக்கை**

நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து நெய்வேலி திருவாரூர் 110 கி.வோல்ட் மின்னூட்டியின் மூலமாக ஆடுதுறை வரை மின் விநியோகம் செய்யப்படுகின்றது.

மின் பளு கூடும்பொழுதும், (Over loading) மின் பளுவின் தேவைக்கேற்ப நெய்வேலி அனல் மின் நிலையத்தினால் சுமைக்குறைப்பு (load shedding) அமல்படுத்தப்படுகின்றது. இதனால் சீர்காழி தொகுதியில் மின்தடை ஏற்படுகின்றது.

இந்த நிலையினைக் கருத்தில் கொண்டு மயிலாடுதுறைக்கு அருகில் ஒரு 230/110 கி.வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. இத்துணை மின் நிலையமானது வருகின்ற அக்டோபர் மாதத்தில் இயக்கத்திற்கு கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய துணை மின் நிலையம் இயக்கத்திற்கு வந்த பிறகு சீர்காழி பகுதியில் மின்சாரம் மின் தடங்கல்கள் ஏதுமின்றி, சீராக வழங்கப்படும்.

*இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2000 மே 18

**(II) சேலம் மாநகரில் தினமும் இரண்டு முதல் நான்கு மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுவதால் பொதுமக்களும், தொழிற்சாலைகளும் குறிப்பாக மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. ஆர்.ஆர். சேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை):**

## அறிக்கை

26-11-1999 அன்று புதுடில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் தென்பிராந்திய மின்கட்டமைப்பின் அதிர்வெண்ணை 45.40-ல் இயக்குவதற்கும் 325 மெகாவாட்டுகளை மின் கட்டமைப்பிலிருந்து தானாக விடுவிக்கக்கூடிய தாழ் அதிர்வெண் உணர்த்திகளை பொருத்துவதற்கும் தென்பிராந்திய உறுப்பு மாநிலங்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டன. இந்த தாழ் அதிர்வெண் உயர்த்திகள் 48.20-ல் செயல்படுமாறு பொருத்தப்பட்டுள்ளதால் தாழ் அதிர்வெண் உணர்த்திகள் செயல்படுவதை தவிர்க்கவும், மின் கட்டமைப்பின் அதிர்வெண்ணை 48.20-க்கு மேல் இயக்கவும் மின் துண்டிப்பு செய்யவேண்டியது அவசியமாகிறது. 1-2-2000 முதல் 7-2-2000 வரை நெய்வேலி அனல் மின் கழகத்தின் தொழிலாளர் பிரச்சினை காரணமாக தமிழ் நாட்டுக்கு நெய்வேலியிலிருந்து சாதாரணமாக கிடைக்கக்கூடிய 1170 மெகாவாட், 150-800 மெகாவாட்டாக குறைந்தது.

கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் 170 மெகாவாட் திறனுள்ள முதலாவது இயந்திரம் 2-1-2000 முதல் வருடாந்திர பராமரிப்பில் உள்ளது. இரண்டாவது மின் இயந்திரம் 2-2-2000 முதல் 4-2-2000 வரை எதிர்பாராத பணிகள் காரணமாக இயங்கவில்லை. மேலும், தேசிய அனல் மின் கழகத்தின் 500 மெகாவாட் மின் திறனுள்ள இயந்திரங்கள் (5 மற்றும் 6) எதிர்பாராத பணிகள் காரணமாக 12-2-2000 முதல் 15-2-2000 வரையிலும் 24-2-2000 முதல் 26-2-2000 வரையில் உள்ள காலங்களில் இயங்கவில்லை. மேலும், ஜி.எம்.ஆர். வாசவியின் 49 மெகாவாட் இயந்திரம் ஒன்று 9-2-2000 முதல் 24-2-2000 வரையிலும் வருடாந்திர பராமரிப்புப் பணிகளுக்காக எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட மின் துண்டிப்பு தவிர்த்திருக்க இயலாததாகும்.



2000 மே 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மின்சார அளவினை குறைப்பதற்கு தமிழக அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. இதனால் வரும் மாதங்களில் மின் நிலைமை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இதுபோன்ற மின்வெட்டு சேலம் மாநகரில் இனி ஏற்படாது பார்த்துக்கொள்ளப்படும்.

**(III) சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி வட்டத்தை புதிதாக விவசாய மின் இணைப்புகள் பெறுவதற்கு தகுதியற்ற வட்டம் என கணக்கிடப்பட்டிருப்பதாகத் தெரிவதால் விவசாயிகளிடையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

*உறுப்பினர்:* **திரு. லா. சந்தானம்:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை):**

## அறிக்கை

வாடிப்பட்டி வட்டம் நிலத்தடி நீர் வறண்ட (85-100%) நிலப்பகுதியாக அரசு ஆணை எண் 2 (டி)/326 பொதுப் பணித் துறை (R2) தேதி 23-11-1993-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு ஆணை. (நிலை) எண் 117 எரிசக்தி (சி1) துறை, நாள் 13-6-1997-ல் நிலத்தடி நீர் வறண்ட (85-100%) நிலப்பகுதிகளில் புதிய விவசாய மின் இணைப்புக்கான விண்ணப்பங்கள் பெற தடைவிதித்தும், ஏற்கெனவே பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு பொதுப் பணி (நிலத்தடி நீர்) துறையினரிடமிருந்து சான்றிதழ் வாங்கிய பின்னரே மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(IV) இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து வழங்கும் இடத்திலும் அறுவை அரங்கிலும் பல வருடங்களாக மின் இணைப்புகள் வழங்கப்படாததால் வரும் நோயாளிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து**

*உறுப்பினர்கள்:* (அ) **திரு. டி. மணி:**

(ஆ) **திரு. ஜே. ஹேமசந்திரன்:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை):**

## அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகளுடன் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப்பிரிவு, குடும்ப நலப் பிரிவுகளுக்கு கட்டடங்களும் குடியிருப்பு கட்டடங்களும் உள்ளன.

பொதுப்பிரிவு கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் 1958-ல் கட்டப்பட்டதாகும். இங்கு மின் இணைப்பு வசதிகள் இல்லை. குடும்ப நலப் பிரிவு கட்டடத்தில் மின் இணைப்பு வசதி உள்ளது. இந்தக் கட்டடத்தில் இருந்து மருத்துவ அலுவலர் அறைக்கும், குளிர் சாதனப் பெட்டிக்கும் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழுது பார்க்கப்பட வேண்டிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டு செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை (கட்டடங்கள் பிரிவு) அவர்களிடம் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாகர்கோவில் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவு செயற்பொறியாளரிடம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் மின் இணைப்புப் பணிகள் உடன் மேற்கொள்ள மதிப்பீடு தயாரித்து அனுப்ப நாகர்கோவில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) கேட்டுள்ளார். தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் மின் இணைப்பு வசதிகள் மற்றும் கட்டட பழுதுபார்ப்புப் பணிகள் முடிவடைந்துவிடும்.

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கை வசதிகள் உள்ளன. ஏப்ரல் 1999 முதல் டிசம்பர் வரை, பயனடைந்த உட்புற நோயாளிகளின் எண்ணிக்கை 32, பயனடைந்த வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை 35,968.

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தின் குடும்ப நலப் பிரிவு கட்டடங்களிலிருந்து மருத்துவ அலுவலர் அறைக்கும், குளிர்சாதனப் பெட்டிக்கும் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் பதட்டம் அளிக்கும் நிலை ஏதுமில்லை.



**(v) வேலூர் மாவட்டத்தில் உள்ள பல அரசு மருத்துவமனைகளில் போதிய டாக்டர்கள், நர்சுகள், டெக்னீசியன் இல்லாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன் :**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை):**

## அறிக்கை

வேலூர் மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசு மருத்துவமனைகளில் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன.

1. ஆற்காடு
2. வாலாஜா
3. குடியாத்தம்
4. கலவை
5. சோளிங்கர்

மேற்கூறிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் மருத்துவர்களைக் கொண்டு 30-4-2000-த்திற்குள் நிரப்பப்படும். சிவில் சர்ஜன் பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை.

2. வேலூரில் உள்ள தலைமையிட மருத்துவமனையில் காலியாக உள்ள செவிலியர் தரம்-1 ஒரு பணியிடம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேலூர் அரசு தலைமை மருத்துவமனையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள 8 செவிலியர் தரம்-3 பணியிடங்களில் சோளிங்கர் அரசு மருத்துவமனையில் செவிலியர் தரம்-3 பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. காலியாக உள்ள செவிலியர் தரம்-3 பணியிடத்தை நிரப்புவதற்கு தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு விவரங்கள் சார்நிலை அலுவலர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது. அவை பெறப்பட்டபின் பட்டியல் தயாரித்து நிரப்பப்படும்.

3. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் செவிலியர் தரம்-2 பணியிடம், அப்பணியிடத்தில் இருந்தவர் 29-2-2000 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதனால் தற்சமயம் வெற்றிடமாக உள்ளது. இப்பணியிடத்தை உடன் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. வேலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவமனை வாணியம்பாடியில் காலியாக இருந்த பிஸியோதெரபிஸ்ட் தரம்-2 பணியிடம் 1-9-1999 தேதியில் நிரப்பப்பட்டு விட்டது. ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் காலியிடங்களின் விவரங்கள்.

| வரிசை எண் | பணியிடம் | ஒப்பளிப்பு | தற்சமயம் உள்ளது | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1. | மருந்தாளுநர் | 44 | 44 | — |
| 2. | தலைமை ஊடுகதிர் வீச்சாளர் | 1 | 1 | — |
| 3. | ரேடியோகிராபர் | 12 | 11 | 1 |
| 4. | ஆய்வுக்கூட நுட்பனர் தரம்-1 | 8 | 8 | — |
| 5. | ஆய்வுக்கூட நுட்பனர் தரம்-2 | 17 | 13 | 4 |

வேலூர் மாவட்டத்தில் டெக்னீசியன் பணியிடங்கள் பெரும்பாலும் நிரப்பப்பட்டு விட்டன.

வேலூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் அன்றாட பணி பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி நடைபெற போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(VI) தாம்பரம் தொகுதி துரைப்பாக்கத்தில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒக்கியம்பேட்டை கண்ணகி நகருக்கு மாற்றப்போவதாக வந்துள்ள செய்தியால் பொது மக்களிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

உறுப்பினர்: **திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**





**அறிக்கை**

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் தொகுதி பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில், ஒக்கியம் துரைபாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் 1-6-1989-ல் தோற்றுவிக்கப்பட்டு, 15-12-1989 முதல் ஊராட்சி அலுவலகம் செயல்படும் கட்டடத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகிறது.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அரசு கட்டட வசதி செய்யப்பட வேண்டுமென 1996-97 ஆம் ஆண்டு திட்டத்தில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில், ஒக்கியம் துரைப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும்.

ஒக்கியம் துரைப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட புல எண் 75/4-பி-யில் 0.38.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அந்த நிலத்தை பொது சுகாதாரத் துறைக்கு நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர் 29-12-1998-ல் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை அனுப்பியுள்ளார். சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், நிலமாற்றம் செய்திடும் ஆணை வழங்க கோரி அரசுக்கு (வருவாய்த் துறை) பரிந்துரை செய்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இது தவிர, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடிசைமாற்று வாரியம் மூலம் 6500 குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளதென்றும், அதன் முதல் கட்டமாக 1500 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படுகிறதென்றும், இத்திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யத்தயாராக உள்ளதென பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களுககு தெரிவித்துள்ளார். குடிசை மாற்று வாரியத்தின் கோரிக்கையை ஏற்று 0.50 ஏக்கர் நிலத்தினை கிரயமின்றி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட ஒதுக்கீடு செய்யுமாறு ஆணை கோரும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி ஒக்கியம் துரைப்பாக்கம் குடிசை மாற்று வாரியத் திட்டம் செயல்படும் பகுதிக்கு "கண்ணகி நகர்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக நிலம் தேர்வு செய்யும் பணி அரசின் கவனத்தில் உள்ளது. இதனை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மே 18

மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ள புல எண் 75/4-பி-யில் 0.38.5 ஹெக்டேர் நிலத்தில் அல்லது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தர முன்வந்துள்ள 0.50 ஏக்கர் நிலத்தில் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை.

**(VII) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு சட்டப் பேரவைத் தொகுதி வடசேரி கிராமத்தில் உள்ள துணை மின் நிலையம் பழுது அடைந்து உள்ளதால் சுமார் 20 கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பாதிப்பு குறித்து.**

உறுப்பினர்: **திரு. பி. இராசமாணிக்கம்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**
(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)

**அறிக்கை**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின்சார தேவை, மின் உற்பத்தியைவிட பொதுவாக மற்ற மாதங்களைக் காட்டிலும் கோடை மாதங்களில் சற்று அதிகமான அளவில் இருக்கும். மேலும் கடந்த ஒரு மாத காலமாகவே அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திக் குறைவு ஏற்பட்டதால், தமிழ்நாடு மின் கட்டமைப்பின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. மேற்கூறிய காரணங்களினால் 110 கி.வோ. மின்னூட்டிகளில் சுமை குறைப்பு (Load shedding) செய்யப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையில் ராசிபுரம் பகுதிக்கு மின்சார சப்ளை செய்கின்ற ராசிபுரம் 110 கி. வோ. மின்னூட்டியிலும் சுமை குறைப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகத் தான் ராசிபுரம் தொகுதியில் ஒரு வார காலமாக மின்சாரம் நிறுத்தப்பட்டு வந்தது. இருப்பினும் முடிந்தவரை மின் தடங்கல்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்படி கள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**(VIII) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் ஒன்றியம், செருநல்லூர், அரசு நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அரசு உபரி நிலமாக 126 ஏக்கர் 49 சென்ட் 1986-இல் கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 195 நபர்களுக்கு மனு பெற்று இவர்கள் தகுதியானவர்கள் என்று, 1997-இல் முதல் தவணையாக அரசுக்கு பணம் கட்டியும் இன்று வரை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் ஒப்படைக்காதது குறித்து.**



2000 மே 18]

உறுப்பினர்: **திரு. ஜி. பழனிசாமி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
(வருவாய்த் துறை)

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருநல்லூர் கிராமத்தில் ஏழை வெள்ளாளர் டிரஸ்ட் கைப்பற்றிலிருந்து 126.49 ஏக்கர் நிலங்கள் மிகையாக எடுக்கப்பட்டு, நிலச்சீர்த்திருத்தச் சட்டப் பிரிவு 18(1)இன் கீழான அறிவிக்கை 30-7-1986 அன்று அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1965-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்படி இந்த மிகை நிலங்கள் மயிலாடுதுறை நிலச்சீர்த்திருத்த உதவி ஆணையரின் ஆணை எண் எம்.ஆர்.4/68/3772/ஆ2, நாள் 31-10-1986-இன்படி 212 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. ஒப்படை நிலங்களுக்கான உட்பிரிவு ஆவணங்கள் தயார் செய்து, முதல் தவணை வசூலிக்க, 'இ' அறிவிப்பு வெளியிடும் தருவாயில் நிலக்கிழார் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை (எண் 4988/88) தாக்கல் செய்து தடையாணை பெற்றதால் மேல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இவ்வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த தனி மேல்முறையீட்டாயத்திற்கு மாற்றப்பட்டு டி.ஆர்.பி. எண் 84/94, நாள் 19-9-1995-ல் மிகையாக அறிவிக்கப்பட்ட 126.49 ஏக்கர் நிலங்களில் 6.00 ஏக்கர் நிலங்களுக்கு மட்டும் மாற்று நிலங்கள் நில உரிமையாளரிடமிருந்து பெற்று மேல் நடவடிக்கை தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த 6.00 ஏக்கர் நிலங்களைத் தவிர்த்து எஞ்சிய நிலங்களை ஒப்படை பெற்ற 195 நபர்களுள், 122 நபர்கள் நிலமதிப்புக்கான முதல் தவணைத்தொகை செலுத்தினர். அவர்களுக்கு 'எப்' பட்டாக்கள் அளிக்கப்பட்டுவிட்டன. ஒப்படை நிலங்களை சுவாதீனம் எடுத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபொழுது நில ஒப்படை குறித்து, திருவாளர்கள் கே. சீனிவாசன் மற்றும் சிலர் நில ஆணையர் மற்றும் சென்னை நிலத் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்ததால், நில ஒப்படை செய்வதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது சூலை 1999-இல் திரு. தனபால் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில்

நீதிப்பேராணை மனு தாக்கல் செய்துள்ளார். சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள நீதிப்பேராணை மனு நிலுவையிலிருந்து வருவதால், மேற்கொண்டு நில ஒப்படைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலவில்லை.

**(ix) *திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி, ஜனசக்திநகர் க.ச. 481/2-ல் உள்ள 4 ஏக்கர் 52 சென்ட் பகுதியில் அரசு பட்டா வழங்கியதை எதிர்த்து ஒரு தனி நபர் நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றுள்ளதால் பொதுமக்களுக்கு குடிநீர், மின்சாரம் தரமுடியாமல் தடைப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.***

*உறுப்பினர்:* **திரு. கே. சுப்பராயன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. கோ. சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

ஜனசக்தி நகர் என்பது கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், வீரபாண்டி கிராமம் புல எண் 481/3-ல் நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ளது. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டது போன்று ஜனசக்தி நகர் என்பது 481/2 என்னும் புல எண்ணில் இல்லை. இந்நிலம், திரு. முனியன் என்பவருக்கு தவறான அடிப்படையில் ஒப்படை வழங்கப்பட்டதால் இந்த ஒப்படை ரத்து செய்யப்பட்டு 4 ஏக்கர் 52 சென்ட் நிலத்தில் மொத்தம் 167 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து திரு. முருகேசன் என்பவரால் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கில் மேற்படி நபருக்கு சாதகமாக 17-7-1997-ல் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி, நபர், சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகளில் 17-8-1999 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் அடிப்படையில் இக்கோப்பில் புதிதாக ஆணைகள் பிறப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், திருப்பூர் டி.மு.கோர்ட் 17-7-1997 அன்று வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து சார் நீதிமன்றத்தில் திருமதி கிருஷ்ணவேணி, க/பெ. கந்தசாமி என்பவர் மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வழக்கு நிலுவையில் உள்ளது. தவிரவும், கீழமை நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தினால் தற்போது குடியிருக்கும்





ஏழை மக்களை வெளியேற்றும் சூழ்நிலை உருவாகும் என்பதால் இந்த நிலையினைத் தவிர்ப்பதற்காக அரசினர் சார்பிலும், திருப்பூர் சார்நீதிமன்றத்தில் வட்டாட்சியரால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவுள்ளது. ஏற்கெனவே வழங்கப்பட்ட 167 வீட்டுமனை பட்டாக்களில் 163 நபர்கள் வீடுகள், குடிசைகள், கட்டி குடியிருந்து வருகின்றனர். இதில் 6 வீடுகள் தளம் போட்ட கட்டடங்கள், 73 ஓட்டுவில்லை வீடுகள் மற்றவை கூரை வீடுகள்.

2. குடிநீர் வசதியை பொறுத்தளவில் இங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்வதற்காக 3½ ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததால், இந்த ஆழ்குழாய்க் கிணற்றிற்கு மின்மோட்டார் பொருத்துவதற்கு மின் இணைப்பு பெற இயலவில்லை. ஜனசக்தி நகரின் அருகில் 300 மீட்டர் தூரத்திலுள்ள மூகாம்பிகை நகரில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு தோண்டப்பட்டுள்ளது. இந்த ஆழ்குழாய்க் கிணற்றின் தண்ணீரை 2 சின்டெக்ஸ் டாங்குகள் (2000 லி x 2) மூலம் நிரப்பி ஜனசக்தி நகருக்கும் அதன் எதிரே அமைந்துள்ள ராஜீவ் நகருக்கும் குடிநீர் விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. எனவே, தற்போது குடிநீர் விநியோகத்தை வீரபாண்டி ஊராட்சி செய்து வருகிறது.

3. நிரந்தரமான முறையில் ஜனசக்தி நகரின் மக்களுக்கு குடிநீர் வசதி செய்யும் பொருட்டு இந்நகரின் அனைத்து குறுக்கு வீதிகளிலும், குழாய் பதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், இந்நகருக்கும் எதிரே அமைந்துள்ள ராஜீவ் நகருக்கும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலைத் தொட்டி கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்தொட்டி கட்டி முடிந்தவுடன் ஜனசக்தி நகரின் குறுக்கு வீதிகளில் பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவிடும்.

4. மின்வசதியைப் பொறுத்தவரையில் ஜனசக்தி நகரின் உட்பகுதிகளில் தெருவிளக்குகள் அமைக்கப்படவில்லை. தற்போது இந்த பகுதியை ஒட்டி 4 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய தெருவிளக்குகள் அமைக்க ஊராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. நீதிமன்ற வழக்கு உள்ளதால் ஒவ்வொரு வீட்டிற்கும் தனியாக மின் இணைப்புப் பெற இயலவில்லை.

5. இவ்வழக்குகளின் விவரம் பொதுமக்களுக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுவிட்டதால் ஜனசக்தி நகரில் குடிநீர் மற்றும் மின் வசதி குறித்து பொதுமக்களிடம் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டது போன்று பதட்டமான சூழ்நிலை எதுவும் இல்லை.

**(x) கன்னியாகுமரி மாவட்டத்தில் இடைக்கோடு பேரூராட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மீது தக்க விசாரணை மேற்கொள்ளாததை குறித்தும் விசாரணை நடத்தக் கோரியும் சென்னையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளது குறித்து.**

உறுப்பினர்: **டாக்டர் தே. குமாரதாஸ்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

இடைக்கோடு பேரூராட்சியில் ஊழல்கள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டு 29-11-1999 முதல் தொடர் சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப் போவதாக மனு கொடுக்கப்பட்டது. அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு புகார்கள் பற்றிய சுருக்கமான விவரம்:-

ஓணம்குளம் ராம்பு கட்டியது, ஒற்றப்பனங்காளை—மொட்டக்கானல் சாலையில் சிறுபாலம் கட்டியது, மூலோட்டுகோணம்—மொட்டக்கானல் பாலம் பக்கத்தில் தடுப்புச்சுவர் கட்டியது பனங்குழி செம்பங்குளம் சாலை பராமரித்தல் வேலை, செம்பறி குளத்தில் சம்பு கட்டுவதற்கான வேலை ஆகியவை பொய்யான வேலைகள் எனவும் முடுக்கர்சியின் குடிநீர் திட்ட கிணறு பழுது பார்த்தது மற்றும் மாலைக்கோடு "சி.எஸ்.ஐ.சர்ச்" கழகின்குழி சாலையில் தடுப்புச்சுவர் கட்டியது, மைலச்சிரிமுலையில் ராம்பு கட்டியது ஆகியவற்றுக்குத் தேவைக்கு மேல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது எனவும் மேல்புறம் சந்தைபக்கத்திலிருந்து அண்டுகோடு வரைக்கும் குடிநீர் குழாய்கள் புதைத்தும், திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது எனவும், 300 தெரு நாய்களை பிடித்து சென்று 1155 தெரு நாய்களை பிடித்ததாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னையில் இருந்து பொருட்கள் ஏற்றி வரும் ஓர் லாரிக்கு அநியாயமான வாடகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது எனவும் இடைக்கோடு பேரூராட்சியில் சில வார்டுகள் அரசியல் காழ்ப்புணர்ச்சி





காரணமாக புறக்கணிக்கப்படுவதாகவும், மற்றும் அண்டுகோடு அம்புலம்புறத்துவிளைவில் தடுப்புச்சுவர் கட்டியதில் ஒரே வேலைக்கு இரண்டு முறை பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது எனவும் புகார்கள் தரப்பட்டன.

மேற்கண்ட புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட பேரூராட்சிக்கு சென்று குறிப்பிட்டுள்ள வேலைகள் பார்வையிடப்பட்டன. செய்யப்பட்ட வேலைகளுக்கு பேரூராட்சி மன்றத் தீர்மானம், மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று, வேலை முடிந்த பின்னர் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட பட்டியலின் அடிப்படையிலேயே தொகை வழங்கப்பட்டுள்ளது. எனவே புகாருக்கு முக்கிய காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சி எனத் தெரிய வருகிறது.

இடைக்கோடு பேரூராட்சி குறிப்பிட்ட வார்டு உறுப்பினர்கள் முறையாக கோரிக்கை தெரிவிக்காததாலும் வார்டுகள் புறக்கணிக்கப்படுவதாக தெரிய வருகிறது. புறக்கணிக்கப்படும் வார்டு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து தங்களது கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து தீர்வு காண வேண்டும். பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உபதலைவர் ஆகியவர்களுடன் கலந்து பேசி அனைத்து வார்டுகளுக்கும் திட்டப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

**(XI) கோவை மாநகராட்சியில் 25வது வார்டு காந்தி நகரிலிருந்து போலீஸ் கந்தசாமி லேஅவுட் (22வது வார்டு) வழியாகச் செல்லும் மழை நீர்க்கால்வாய்க்கு முறையான வடிகால் வசதியின்மையால் கழிவு நீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது குறித்து.**

உறுப்பினர்: **திரு. வி.கே. லட்சுமணன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

கோவை மாநகராட்சியில் 25வது வார்டு காந்தி நகரிலிருந்து போலீஸ் கந்தசாமி லேஅவுட் (22வது வார்டு) வழியாக செல்லும் மழைநீர் வடிகால் தற்போது சுங்கம் சந்திப்பிலிருந்து போலீஸ் கந்தசாமி வீதி வழியாக புலியகுளம் மேல்நிலைத் தொட்டியின் அருகில் உள்ள கால்வாய் மூலம் எடுத்துச்சென்று முந்தி விநாயகர் கோவில் பின்புறம்

செல்லும் வாய்க்கால் வழியாக அம்மன் குளத்தில் வடிகிறது. இதில் மண் மற்றும் குப்பைகள் சேர்ந்து விடுவதால் தண்ணீர் வேகமாக ஓடுவதில்லை. அடிக்கடி தூர் எடுத்து சரிபார்க்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் தூர் எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில் மேற்படி கால்வாயை புலியகுளம் மேல்நிலைத்தொட்டி அருகிலிருந்து முறையாக சங்கனூர் பள்ளத்தில் இணைக்க மாற்று வழியில் வடிகால் கட்டி வழி ஏற்படுத்துவதற்கு அனைத்து பகுதிகளும் குடியிருப்பு பகுதியாக இருப்பதாலும், குறுகிய சாலைகளாக இருப்பதாலும் உடனடி சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில் உள்ளது.

**(XII)** தருமபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் செயல்படும் நீர்ப்பிரி முகடு திட்டத்தை வறட்சி அதிகமாகி நிலத்தடி நீர்மட்டம் குறைவு என்று காரணம் காட்டி கருப்பு பகுதி என்று அறிவிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படாமல் ஏனைய ஒன்றியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதால் கருப்பு பகுதி என்று அறிவிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், அதன் காரணமாக விவசாயிகள் படும் அவலம் குறித்தும்.

*உறுப்பினர்:* **திரு. கு. மனோகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**
*(வேளாண்மைத் துறை)*

**அறிக்கை**

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மத்திய அரசு வடிவமைத்த திட்டமாகும். அதன்படி, அத்திட்டத்தின்கீழ் மாவட்டம் மற்றும் அம்மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களை தெரிவு செய்ய மத்திய அரசு சில நிபந்தனைகளை வகுத்துள்ளது. அம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட 18 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

1. பர்கூர், (2) தருமபுரி, (3) அரூர், (4) ஓசூர் (5) காரிமங்கலம், (6) காவேரிப்பட்டனம் (7) கேளமங்கலம், (8) கிருஷ்ணகிரி, (9) மத்தூர், (10) மொரப்பூர், (11) நல்லம்பள்ளி, (12) பாலக்கோடு, (13) பாப்பிரெட்டிபட்டி, (14) பென்னகரம், (15) சூளகிரி, (16) தளி, (17) ஊத்தங்கரை, (18) வேப்பனப்பள்ளி.



அரைகுறையான வறண்ட பகுதியின் கீழ் (Semi-Arid Region) தருமபுரி மாவட்டம் வருவதால், அம்மாவட்டத்தில் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் மொத்த நிகர சாகுபடி பரப்பில், பாசன வசதி 20 விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகளைத் திருப்திபடுத்திய 14 ஒன்றியங்களை மட்டும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு 1995-96ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவையாவன. (1) பர்கூர், (2) தருமபுரி, (3) ஓசூர், (4) காரிமங்கலம் (5) கேளமங்கலம், (6) மத்தூர், (7) மொரப்பூர், (8) நல்லம்பள்ளி, (9) பாலக்கோடு, (10) பென்னகரம், (11) சூளகிரி, (12) தளி, (13) ஊத்தங்கரை, (14) வேப்பனப்பள்ளி.

தருமபுரி மாவட்டத்திலிருக்கும் மீதமுள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களில் அதாவது (1) அரூர், (2) காவேரிப்பட்டினம், (3) கிருஷ்ணகிரி மற்றும் (4) பாப்பிரெட்டிபட்டி, மேற்கண்ட நிபந்தனைகளின்படி அமையவில்லை என்பதால் அங்கு இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மேலும், தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் நீர்வடிப் பகுதியை தெரிவு செய்ய கீழ்க்கண்ட 9 விதமான அலகுகள் கடைபிடிக்கப்படுகிறது.

1. பெருமளவு குடிநீர் பற்றாக்குறை உடைய நீர்வடிப் பகுதி

2. ஆதிதிராவிடர்/பழங்குடியினரைச் சேர்ந்த பெருமளவு மக்கள் சார்ந்துள்ள நீர்வடிப்பகுதி.

3. பெருமளவு தரிசு நிலங்களையுடைய நீர்வடிப் பகுதி.

4. பெருமளவு பொது நிலங்களையுடைய நீர்வடிப் பகுதி.

5. நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியங்களைவிட, கணிசமான அளவிற்கு குறைவாக ஊதியங்கள் வழங்கப்படுகின்ற நீர்வடிப் பகுதி.

6. ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ள நீர்வடிப் பகுதிக்கு அடுத்துள்ள நீர்வடிப் பகுதி.

7. நீர்வடிப் பகுதியின் பரப்பளவு பொதுவாக 500 எக்டேர் அளவிற்கு இருக்க வேண்டும்.

8. நீர்வடிப் பகுதி ஒரு கிராம எல்லைக்குள் இருந்தாலும், அதன் சிறு பகுதி கிராமத்தின் வெளியே இருந்தால்கூட அப்பகுதியை மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளலாம்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2000 மே 18

9. ஏற்கெனவே வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் ஒரு நீர்வடிப் பகுதி மேற்கொண்டிருந்தால், அப்பகுதியில் மீண்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் 58 நீர்வடிப் பகுதிகளிலும் இதர 15 மாவட்டங்களில் 241 நீர்வடிப் பகுதிகளிலும் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

அது தவிர, மத்திய அரசின் நிலத்தடி நீர்க்கழகத்தின் அறிவிப்பின்படி தருமபுரி மாவட்டத்தில் அரூர், கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் நிலத்தடி நீர் அதிகமாக பயன்படுத்தப்பட்ட ஒன்றியங்களாகவும் பாப்பிரெட்டிப்பட்டி கருப்பு பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பினும், அப்பகுதிகளில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் இதுகாறும் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுவதில் கருப்பு வட்டாரங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதோ அல்லது முன்னுரிமை வழங்குவதோ இல்லை.

தமிழ் நாட்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தாத அதிகப்பட்டியான நீரைப் பயன்படுத்திய 51 வளர்ச்சி வட்டாரங்கள் மற்றும் 28 கருப்பு வட்டாரங்கள் உள்ளன. அந்தப் பகுதிகளுக்கும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**(XIII) (அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டங்களில் தென்னை மரங்கள் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.**

**(ஆ) கோவை மாவட்டத்தில் மீண்டும் தென்னை மரங்களில் யூரியோபைட் என்னும் பூச்சித் தாக்கி ஏராளமான தென்னை மரங்கள் அழியும் அபாய நிலை குறித்து.**

**(இ) விவசாயிகள் பயிரிட்டுள்ள தென்னை மரத்திலுள்ள குரும்பையைத் தாக்கும் நோயை தடுப்பது குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது குறித்து.**



2000 மே 18]

உறுப்பினர்கள்: **(அ) திரு. கே. ரவி அருணன்:**

**(ஆ) திரு. ப. மோகன் கந்தசாமி:**

**(இ) திரு. மு. அப்பாவு:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம். *(வேளாண்மைத் துறை)***

## அறிக்கை

தமிழகத்தில் 3.52 லட்சம் எக்டர் பரப்பில் தென்னை பயிரிடப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் தேசிய அளவில் தமிழகம் கேரளாவிற்கு அடுத்து இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

2. 1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோவை மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை பகுதிகளில் முதன்முதலாகத் தென்னையில் எரியோபைட் என்னும் சிலந்திப்பூச்சி சிறு அளவில் தோன்றி, பிறகு ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கரூர் போன்ற மாவட்டங்களுக்குப் பரவியது. இச்சிலந்திப்பூச்சி காற்று மூலம் காட்டுத் தீ போல் பரவி தற்போதைய நிலவரப்படி 24 மாவட்டங்களில் 1,68,61,980 மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த எரியோபைட் சிலந்திப்பூச்சி 10,400 மரங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டதில் 86,91,051 மரங்கள் இப்பூச்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

3. இச்சிலந்திப்பூச்சி தாக்குதல் தெரிய வந்த உடனேயே துறை அலுவலர்களும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள் போர்க்கால நடவடிக்கை மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் இரண்டு பயிர் பாதுகாப்பு முறைகளைப் பரிந்துரை செய்தது:

**1. மருந்து தெளித்தல்**

(அ) மினதல் டெமட்டான் 4 மில்லி-1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தல்

(அல்லது)

(ஆ) ட்ரை அஸோபாஸ் - 5 மில்லி - 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தல்

(அல்லது)

(இ) மானோக்ரோட்டோபாஸ் - 1.5 மில்லி - 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தல்

மேற்காணும் பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை குறிப்பிட்ட அளவுப்படி 30 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க சிபாரிசு செய்யப்பட்டது.

தென்னைக்கு மருந்து தெளிப்பதால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. தெளிக்கப்படும் மருந்து பூச்சியை நேரடியாக தாக்க முடியாத நிலை உள்ளது.

தென்னை மரத்தில் மருந்து தெளிப்பதற்கு ஏற்ற பயிர் பாதுகாப்பு சாதனங்கள் கிடைப்பதில்லை. மருந்து தெளிக்கும் பொழுது மருந்துத் துளிகள் மருந்தடிக்கும் கூலி ஆட்கள் மேல் படுவதால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் மருந்தடிப்பதற்கு விவசாயத் தொழிலாளர்கள் யாரும் முன்வருவதில்லை. இம்முறையைக் கையாள்வதால் மருந்தடிக்கும் செலவும் அதிகமாகிறது.

2. வேர் மூலம் மருந்து செலுத்துதல்

15 மில்லி மோனோக்ரோட்டோபாஸ் 15 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து 45 நாட்களுக்கு ஒரு முறை வேர் மூலம் இரண்டு தடவை மருந்து செலுத்துதல்.

இம்முறை எளிதாக இருப்பதாலும், இதற்குச் செலவு குறைவாக உள்ளதாலும், வேர் மூலம் மருந்து செலுத்துவதையே விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். இப்பயிர் பாதுகாப்பு முறையைக் கையாள்வதால் மருந்தின் நச்சுத்தன்மை 45 நாட்கள் வரை தேங்காயில் இருக்க வாய்ப்புள்ளது. எனவே, வேர் மூலம் மருந்து செலுத்திய பின் 45 நாட்கள் தேங்காய் பறிப்பதைத் தவிர்க்கும்படியும், அதன் பின்னர் மீண்டும் தேங்காய்களைப் பறித்துவிட்டு மீண்டும் வேர் மூலம் மருந்து செலுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டு, அதன்படி தற்போது விவசாயிகள் வேர் மூலம் மருந்து செலுத்தி வருகின்றனர்.





இம்முறையில் சிலந்திப்பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதால் 60 முதல் 80 சதம் வரை இப்பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்படுவதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

4. எரியோபைட் பூச்சித் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள தென்னைப் பயிரிடும் விவசாயிகளுக்கு, 1998-99-ம் ஆண்டில் மத்திய அரசு தென்னை வளர்ச்சி வாரியம் அளித்த ரூ.25/- லட்சத்தை ஆறு மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 14.90 லட்சம் கோவை மாவட்டத்திற்கும், ரூ. 3.00 லட்சம் ஈரோடு மாவட்டத்திற்கும் செலவிடப்பட்டது. எனினும், விவசாயிகளிடையே காணப்பட்ட அச்சத்தைத் தவிர்த்து, மேலும் அவர்களுக்கு நிதியுதவி வழங்க தென்னை வளர்ச்சி வாரியத்திடம் நிதியுதவி கோரப்பட்டது. தென்னை வளர்ச்சி வாரியம் 1999-2000-ம் ஆண்டில் ரூ. 82.5 லட்சம் ஒதுக்கியதில் ரூ. 79.425 லட்சம் எரியோபைட் சிலந்திபூச்சியால் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு பயிர்பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் உரம் வைப்பதற்கு மரம் ஒன்றுக்கு முறையே ரூ. 3/- மற்றும் ரூ. 5/- ஆக மொத்தம் ரூ. 8/- மானியமாக வழங்கி உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ. 32,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டது. கோவை மாவட்ட விவசாயிகளுக்கு மானியமாக ரூ. 54.16 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், இச்சிலந்திப்பூச்சியைக் கட்டுப்படுத்த மத்திய அரசிடம் ரூ. 20.336 கோடி தேசிய இயற்கைச் சீற்ற நிவாரண நிதியின்கீழ் ஒப்பளிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

6. மேலும் இப்பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:-

(i) 24-7-1999-ல் இராஜபாளையத்தில் நடைபெற்ற தென்னை கருத்தரங்கில் தமிழக அரசு வேளாண்மைத் துறைச் செயலர், வேளாண்மை இயக்குநர், தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கலந்துகொண்டு உழவர் பெருமக்களுக்கு இச்சிலந்தி தாக்குதல் குறித்தும் அதற்கான தடுப்பு முறைகள் குறித்தும் விரிவான முறையில் எடுத்துக்கூறினார்கள்.

(ii) 30-7-1999 அன்று மைய அரசு வேளாண்மைச் செயலர் திரு. பாஸ்கர் பருவா அவர்களால் தமிழக தலைமைச் செயலரிடம்

மேற்கண்ட பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2-9-1999 அன்று கொச்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தினால் நடத்தப்பட்ட 'உலக தென்னை தின' விழாவில் மைய அரசு வேளாண் செயலர் திரு. பாஸ்கர் பருவா, வேளாண்மை இயக்குநர், சென்னை, தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள் மற்றும் மத்திய பயிர் ஆராய்ச்சி நிலையம், காசர்கோடு விஞ்ஞானிகள், தமிழ்நாடு மற்றும் கேரளா வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளிடையே இப்பிரச்சினை குறித்து தேசிய அளவில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

(iii) 22-10-1999-ல் கோவையில் நடைபெற்ற கொச்சி தென்னை வளர்ச்சி வாரிய நிர்வாகக் கூட்டத்தின்போது மைய அரசு தோட்டக்கலை ஆணையர், வேளாண் செயலர், கேரள அரசு, தமிழ்நாடு மற்றும் கேரள வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், துணைவேந்தர் கொண்ட கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் 28-10-1999 மற்றும் 9-11-1999 தேதிகளிலும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பல கருத்துக்களை விவாதித்து பூச்சியைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்வது குறித்து முடிவு செய்யப்பட்டது.

(iv) எரியோபைட் மைட் சிலந்தியைக் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் தலைமையில் சிறப்புப் பணிப்பிரிவும் (Task Force). தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணைவேந்தர் தலைமையில் வழிப்படுத்தும் குழுவும் (Steering Committee) அமைக்கப்பட்டுள்ளன.

7. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த கோவை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளது. மேலும், இப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்டறிய வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

8. தென் மாநிலங்களில் இச்சிலந்திப்பூச்சி தென்னையைக் கடுமையாகத் தாக்கியுள்ளதைக் கண்டறிய மத்திய அரசு ஒரு வல்லுநர் குழுவை நியமித்தது. அவ்வல்லுநர் குழு தமிழ்நாட்டில் ஜனவரி 6—9 தேதிகளில் எரியோபைட் சிலந்திப்பூச்சி தாக்கியுள்ள மாவட்டங்களைப்





பார்வையிட்டது. அவ்வல்லுநர் குழு 17-1-2000-ல் மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வல்லுநர் குழுவின் அறிக்கை மீது எடுத்துள்ள முடிவைத் தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

9. எரியோபைட் சிலந்திப்பூச்சியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியின் முன்னேற்றம் குறித்து 18-2-2000 நாளன்று மத்திய அரசின் தோட்டக்கலை ஆணையர் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்தலைவர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் கீழ்க்காணும் பரிந்துரைகள் செய்யப்பட்டன:—

(1) பூண்டு 200 கிராம், 200 மில்லி லிட்டர் வேப்ப எண்ணெய் மற்றும் 50 கிராம் சோப்பினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து கலவையைத் தெளிக்கலாம்.

(2) டைகோஃபால் 6 மில்லி லிட்டர் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

(3) ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் நனையும் சல்பர் (Wettable Sulpher) மருந்தைக் கலந்து தெளிக்கலாம்.

10. எனினும், ஆராய்ச்சியின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட பயிர்பாதுகாப்பு முறைக்கான பரிந்துரையைத் தெரிவிக்கும்வரை வேர் மூலம் மோனோகுரோட்டோபாஸ் மருந்தினைச் செலுத்தும் தற்போதைய பயிர்பாதுகாப்பு முறையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 4 அல்லது 5 பயிர்பாதுகாப்பு முறைகள் கண்டறியப்பட்டு விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றில், விவசாயிகள் தங்களுக்குப் பொருத்தமான பயிர்பாதுகாப்பு முறையை மேற்கொள்ளலாம் என்றும் இக்கூட்டத்தில் கருதப்பட்டது.

11. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் இதில் முனைப்பாக ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகிறது. மேலும் சிலந்திப் பூச்சியை உயிரியியல் கட்டுப்பாடு முறையில் எதிரிப்பூச்சிகளின் மூலம் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளும் ஆராயப்பட்டு வருகின்றன. ஏப்ரல்-மே, 2000-ல் இப்பூச்சி தாக்குதலை முழுமையாக கட்டுப்படுத்தும் பரிந்துரைகள் அறிவிக்கப்படும் என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

[2000 மே 18

**(XIV) வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலையில் அடிக்கடி 15 யானைகள் கூட்டமாக வந்து பயிர்களை, தோட்டங்களை அழித்து விடுவதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. துரைமுருகன்**
(பொதுப் பணி மற்றும் வனத் துறை)

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கோட்டம் ஜவ்வாது மலையில் மலைரெட்டியூர் கிராமம், பீமகுளம், காவலூர் திம்மராய வலசை, சத்திரம் மற்றும் வீரராகவ வலசை ஆகிய கிராமங்களில் யானைகளால் பயிர்சேதம் ஏற்பட்டுள்ளது. யானைகள் கூட்டத்தின் நடமாட்டம் குறித்து தகவல் கிடைக்கப் பெற்றவுடன் வனப்பணியாளர்கள் தாரை, தப்பட்டைகள் அடித்தும், பட்டாசுகள் வெடித்தும், தீப்பந்தங்கள் காட்டியும் மேற்படி யானைகள் காட்டுக்குள் விரட்டப்படுகின்றன.

பொதுவாக யானைக்கூட்டம் காட்டிற்குள் தண்ணீர் இல்லாததால், நீர்நிலையைத்தேடி அருகேயுள்ள பட்டா நிலங்களுக்கு வருகிறது. எனவே, போதிய நீர்நிலை வசதிகளை மேம்படுத்த திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் காவலூர் பகுதியில் நான்கு இடங்களிலும், ஆம்பூர் பகுதியில் இரண்டு இடங்களிலும் தடுப்பு அணைகளும், வேலூர் கோட்டத்தில் காப்புக் காட்டினுள் மூன்று நீர் சேமிப்பு பள்ளங்களும் வனத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த யானைக் கூட்டத்திற்கு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள காடுகள் பெரிய பரப்பளவில் அடர்ந்து தொடர்ச்சியாக இல்லாததாலும் அவை ஏற்கெனவே, வேறு இடத்திலிருந்து இங்கு இடம் பெயர்ந்து வந்தவை என்பதாலும், அவை நிரந்தரமாக வசித்திட, உகந்த இடத்திற்கு பழக்கப்பட்ட யானைகள் மற்றும் மருத்துவர்கள் உதவியுடன் விரட்டி விடுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வரப்படுகிறது.

வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலையில் மட்டும் மலைரெட்டியூர் கிராமம், பீமகுளம், காவலூர், திம்மராய வலசை, சத்திரம் மற்றும் வீரராகவ வலசை ஆகிய கிராமங்களில் யானைகளால் ஏற்பட்ட



2000 மே 18] [திரு. துரை முருகன்]

பயிர்சேதத்திற்கு நிவாரணம் கோரி விண்ணப்பித்தவர்கள் 50 நபர்கள். இவற்றில் 39 நபர்களது நிவாரண மனு ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ. 30,910 நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 4 நபர்கள் குறித்து சரகர்கள் அறிக்கைக்காக மாவட்ட வன அலுவலர் நிலையில் விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளது. மீதம் 7 நபர்களின் விண்ணப்பம் போதிய விவரம் இல்லாத காரணத்தால் மேலறிக்கைக் கோரி மாவட்ட வன அலுவலர் திருப்பத்தூருக்கு திருப்பப்பட்டுள்ளது.

**(XV) வடசென்னை மாவட்டம் எண்ணூர், திருவொற்றியூர் ஆகிய பகுதிகள் 1978-லிருந்தே கடலரிப்பால் பாதிக்கப்பட்டு. தற்போது 2 கி.மீ. தூரம் வரை கடல் அரிப்பு ஏற்பட்டு சுமார் 500-க்கும் மேலானோர் குடிசை இழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து.**

உறுப்பினர்கள்: **(அ) திரு. டி. மணி**

**(ஆ) திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. துரைமுருகன்**
(பொதுப் பணி மற்றும் வனத் துறை)

**அறிக்கை**

இயற்கையாகவே ஏறத்தாழ கரைக்கோட்டுக்கு இணையாக நகரும் மணற் பெயற்சிக்கு, வழியில் ஏற்படுத்தப்படும் குறுக்கீடு, அதன் முன்னுள்ள பகுதியில் மணல் தேக்கத்தையும், பின்னுள்ள பகுதியில் குடைவு மற்றும் கடலரிப்பையும் விளைவிக்கும். எனவே எண்ணூர் பகுதியில் கீழ்க்கண்ட காரணங்களால் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது.

(அ) பாரதி டாக் வெளிப்புற துறைமுகத்தின் கிழக்குப்புறச் சுவர் 1 கி.மீக்கும் மேலாக கடலுக்குள் நீட்டிக்கப்பட்டது.

(ஆ) ராயபுரத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டது.

(இ) பெரிய வெளித்துறைமுகம் அமைக்கும் பணியில் துறைமுக பொறுப்புக் கழகம் ஈடுபட்டுள்ளது.

(ஈ) பின்விளைவுகளை முன்கூட்டியே எதிர்பார்த்து தடுப்புப் பணிகள் மேற்கொள்ளாமல் துறைமுக கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது.

வடசென்னையில் எண்ணூர் மற்றும் திருவொற்றியூர் கடலோரப் பகுதியில் எர்ணாவூர் குப்பம் வரை கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட கரையின் மொத்த நீளம் 8.23 கி.மீ. ஆகும். இதில் 6/99 முடிய 4.405 கி.மீ. தூரத்திற்கு கடற்கரை பகுதிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3.505 கி.மீ. தூரத்திற்கு கடலரிப்புக்கு உள்ளான பகுதியைப் பாதுகாக்க ரூ. 868.30 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

அதில் நிதிநிலையைக்கருத்தில் கொண்டு மிகவும் முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ. 312 இலட்சம் அரசாணை (நிலை) எண் 119, பொதுப்பணித் துறை, நாள் 6-3-2000-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் கடலரிப்புப் பிரச்சினைக்கு நீண்ட கால தீர்வு காண்பது குறித்த ஒரு செயற்குறிப்பையும் அரசு பரிசீலித்து வருகிறது.

**(XVI)** வேலூர் மாவட்டத்தில் சதுப்பேரி, காவேரிப்பாக்கம் ஏரி, தொரப்பாடி ஏரிகளை தூர்வாரவேண்டிய அவசியம் குறித்து.

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
(பொதுப் பணி மற்றும் வனத் துறை)

**அறிக்கை**

சதுப்பேரி வேலூர் மாநகரை ஒட்டி மேற்குப்புறம் அமைந்துள்ள வானம் பார்த்த ஏரியாகும். இது பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. இந்த ஏரியின் பாசனப் பரப்பு 1,686 ஏக்கர். இந்த ஏரியில் பாசனத்திற்கு 12 மதகுகளும் ஒரு உபரி நீர் போக்கியும் உள்ளது. ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின் கீழ் 1997-98ஆம் நிதியாண்டில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பணி மே 1998-ல் ஆரம்பிக்கப்பட்டு செப்டம்பர் 1998-ல் முடிக்கப்பட்டது. 1999-2000ஆம் நிதியாண்டில் மீதமுள்ள இடத்தில் தூர்வார சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டது. இருப்பினும் இத்திட்டம் 1999-2000ஆம் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.



வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரியை தூர் எடுத்து புனரமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. பல ஆண்டுகளாக காவேரிப்பாக்கம் ஏரியில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படாத காரணத்தால் ஏரியின் ஆரம்பகால கொள்ளளவு 1,474 மில்லியன் கன அடியிலிருந்து 1304 மில்லியன் கன அடியாக (1996ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி) குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது. அதாவது 170 மில்லியன் கன அடி (அல்லது) 4.81 மில்லியன் கன மீட்டர் மண் தூர்ந்து கொள்ளளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பினை 4.81 மில்லியன் கன மீட்டர் (அல்லது) 48,13,137 கன மீட்டர் மண்ணை தூர் எடுத்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் கொண்டு சென்று கொட்டிட 1999-2000ஆம் ஆண்டு விலைவிகிதப்படி ஒரு கன மீட்டருக்கு ரூ.119.20 வீதம் மொத்தம் ரூ. 57.38 கோடி தேவைப்படும். மேலும் தூர்வாரப்பட்ட மண்ணை எதிர்வாயில் கொட்டிட நில உரிமையாளர்கள் சம்மதம் பெறப்பட வேண்டும். இதற்கு மாறாக ஏரியில் தூர்ந்துள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சியர் மூலம் விளம்பரப்படுத்தி அனுமதித்தால் அரசுக்குச் செலவினம் ஏதுமின்றி சிறிது சிறிதாக இழந்த கொள்ளளவினை சரிசெய்ய இயலும். உலக வங்கி நிபுணர் குழு 3-12-1999ஆம் தேதி பார்வையிட்டபோது ஏரிக்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் ஏரி வண்டல் மண்ணை எடுத்துச்செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துச்செல்ல மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் விளம்பரப்படுத்தி அனுமதிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொரப்பாடி ஏரி வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், தொரப்பாடி கிராமத்தில் அமைந்துள்ள வானம் பார்த்த ஏரியாகும். இது பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. இந்த ஏரியின் பாசனப் பரப்பு 313 ஏக்கர். இந்த ஏரியில் பாசனத்திற்கு 6 மதகுகளும் இரண்டு உபரி நீர்ப்போக்கிகளும் உள்ளன. ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் 1998-99ஆம் நிதியாண்டில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பணி 10-5-1999-ல் ஆரம்பிக்கப்பட்டு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

[2000 மே 18

**(xvii) சேலம் மாவட்டம், எடப்பாடியில் பஸ் நிலையம் அருகில் சரபங்கா நதி குறுக்கே பாலம் கட்ட டெண்டர் விட்டு ஒரு ஆண்டாகியும் வேலை தொடங்கப்படாமல் உள்ளதால் அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து.**

உறுப்பினர்: **திரு. ஐ. கணேசன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
(நெடுஞ்சாலைத் துறை)

**அறிக்கை**

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள பாலமானது, சேலம் மாவட்டத்தில் எடப்பாடி மகுடஞ்சாவடி சாலை கி.மீ. 0/4-ல் சரபங்கா ஆற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள பாலமாகும். இப்பாலப்பணி நபார்டு வங்கி கடனுதவியுடன் ஆர்.ஐ.டி.எப். 4 திட்டத்தின்கீழ் 120 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அரசாலும் மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் ரூ. 120 லட்சத்திற்கும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) வடிவமைப்பு, சென்னை-25 அவர்களாலும் 26-4-1999-ல் வழங்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தபுள்ளி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு 8-7-1999-ல் முதல் அழைப்பு கோரப்பட்டது. இதில் குறைந்தபட்சம் விலைவிகிதம் கோரிய ஒப்பந்தக்காரருக்கு போதிய அனுபவம் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு இரண்டாம் அழைப்பிற்கு உத்திரவிடப்பட்டது. மீண்டும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு 14-10-1999 அன்று இரண்டாம் அழைப்பு அழைக்கப்பட்டது. இதில் குறைந்த விலை விகிதம் கோரிய ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்தப்புள்ளியின் தொகை முதல் அழைப்பைவிட அதிகமாக இருந்தபடியால் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் விலை குறைக்க மறுத்துவிட்டார். எனவே இந்த ஒப்பந்தப்புள்ளி பொறியாளர் குழுமம் சென்னை-25-க்கு ஒப்புதல் வேண்டி 2-12-1999-ல் பரிந்துரை செய்யப்பட்டது. பொறியாளர் குழுமம் 7-12-1999ல் நடந்த கூட்டத்தில் மேற்படி பணிக்கு குறைந்த விலை விகிதம் கோரிய ஒப்பந்தக்காரரின் முன் அனுபவம் மற்றும் தகுதிகளில் விவரங்களைப் பெற்று பரிந்துரை செய்யுமாறு கேட்கப்பட்டது. குறைந்த விலை விகிதம் கோரிய ஒப்பந்தக்காரர் நல்ல பணவசதி உடையவர் என்றும் பால வேலை செய்ய தேவையான கருவி, தளவாடங்கள் மற்றும் ஆட்கள் உடையவர் என்றும் அறிக்கை பெறப்பட்டது. மேலும்



2000 மே 18] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

இவர் விலைவாசி ஏற்றத்தினால் விலை குறைத்து கொடுக்க இயலாது என்று திட்டவட்டமாக தெரிவித்தபடியால் பொறியாளர் குழுமத்திற்கு 29-12-1999-ல் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டது. பொறியாளர் குழுமம் கூட்டம் 24-1-2000-ல் மேற்படி பணிக்கு முதல் அழைப்பின் ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட இரண்டாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகமாக உள்ளதால் மறு அழைப்பு அழைக்குமாறு கேட்டுக் கொண்டது. மீண்டும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து 10-2-2000-ல் மூன்றாம் அழைப்பு அழைக்கப்பட்டது. குறைந்த விலை விகிதம் கோரியவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை முதல் அழைப்பின் ஒப்பந்தப் புள்ளி தொகையைவிடக் குறைவாக பெறப்பட்டது. 28-2-2000-ல் மேற்படி (மூன்றாம் அழைப்பு) பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் வழங்கப்பட்டது. 7-3-2000-த்தில் ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கை செயலாக்கப்பட்டவுடன் விரைவில் பணி தொடங்கப்படும்.

**(XVIII) தருமபுரி நகரில் இருந்து திருப்பத்தூர், வாணியம்பாடி வழியாக சென்னை செல்லும் மிக முக்கிய பிரதானச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக நிலை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து.**

உறுப்பினர்: **திரு. கு. மனோகரன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
(நெடுஞ்சாலைத் துறை)

**அறிக்கை**

தருமபுரி-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இதன் மொத்த நீளம் 80.70 கி.மீ. ஆகும். இதில் தருமபுரி மாவட்டத்தில் 42.80 கி.மீ. நீளமும், வேலூர் மாவட்டத்தில் 37.90 கி.மீ. நீளமும் உள்ளது. மாவட்ட முக்கிய சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துவதற்கு அந்தச் சாலையில் குறைந்தபட்ச போக்குவரத்து செறிவு அலகு (Passenger Carrier Unit) நாள் ஒன்றுக்கு 15,000-க்கும் அதிகமாக இருக்க வேண்டும். தருமபுரி-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலையின் போக்குவரத்து செறிவு நாள் ஒன்றுக்கு 15,000-க்கும் குறைவாக உள்ளதால், தற்சமயம் இச்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

[2000 மே 18

**(XIX) விருதுநகர் மாவட்டம், துத்திநத்தம் கீழக்குடி நெடுஞ்சாலையில் கி.மீ. 2/0 மற்றும் 2/2-ல் தாம்போகி தரைமட்டப் பாலம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து**

உறுப்பினர்: **திரு. தங்கம் தென்னரசு**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
*(நெடுஞ்சாலைத் துறை)*

**அறிக்கை**

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாலம் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட துத்திநத்தம் கீழக்குடி சாலையாகும். இது கி.மீ.0/0-5/4 நீளம் கொண்ட அரசு இதர மாவட்டச் சாலையாகும். மேற்கண்ட சாலையில் கி.மீ. 2/0 மற்றும் கி.மீ., 2/2-ல் ஏற்கெனவே தாம்போகிகள் உள்ளன. இவ்விரு தாம்போகிகளின் நீர்வழிப்பாதையின் அகலம் முறையே 16 மீ. ஆகும். இவ்விரண்டு இடங்களிலும் இரு கண்கள் கொண்ட 8 மீட்டர் அகலம் கொண்ட உயர்மட்டப் பாலம் கட்ட ஒவ்வொன்றுக்கும் தோராயமாக ரூ.35.00 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.70.00 இலட்சம் (ரூபாய் எழுபது இலட்சம் மட்டும்) தேவைப்படும். இப்பணி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம்பெறவில்லை. மேலும் நிதிப் பற்றாக்குறை காரணமாக 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 இதர மாவட்டச் சாலைகள் திட்டத்தில் சாலை மற்றும் பாலப் பணிகளை மேற்கொள்ள இயலாது. மேற்கண்ட சாலையில் ஏற்கெனவே அமைந்துள்ள தாம்போகிகள் போக்குவரத்துக்கு ஏற்றவாறு பராமரிக்கப்படும்.

**(XX) தருமபுரி தொகுதிக்குட்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கிராமச்சாலைகள் டெண்டர் முடிந்து 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலைகள் தொடங்கி முடிக்கப்படாமல் கிராமச்சாலைகள் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும் அவலம் குறித்து**

உறுப்பினர்: **திரு. கு. மனோகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
*(நெடுஞ்சாலைத் துறை)*



2000 மே 18] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தருமபுரி தொகுதிக்குட்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமச்சாலைகள் வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டன.

முடிக்கப்பட்ட வேலைகளின் விவரம்

தருமபுரி தொகுதிக்குட்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் எடுத்து முடிக்கப்பட்ட கிராமச்சாலைகள் வேலைகளின் விவரம்

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி நாள் | வேலை முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| (1) | ஈமக்குட்டையூர்-மிட்டாரெட்டி அல்லிசாலை (வழி) உங்கராநஅல்லி, கி.மீ.0/0-1/6 வரை மேம்பாடு செய்தல் | 28-5-1997 | 24-9-1997 |
| (2) | தருமபுரி-மொரப்பூர் சாலை முதல் சின்ன குரும்பட்டி சாலை கி.மீ. 0/0-1/6 வரை மேம்பாடு செய்தல் | 16-7-1997 | 28-2-1999 |
| (3) | தசன்கோட்டை கடத்திகுட்டை சாலை கி.மீ. 0/0-3/2 வரை மேம்பாடு செய்தல் | 9-2-1994 | 7-5-1997 |
| (4) | கி.மீ. 2/2 நாகர் கடல் பண்ட அல்லி சாலை முதல் நடப்பனஅல்லி கி.மீ. 0/0-4/6 வரை மேம்பாடு செய்தல் | 28-5-1997 | 24-7-1998 |
| (5) | மணியக்காரனூர்-மலையூர்காடு சாலை கி.மீ. 0/0-2/2 வரை மேம்பாடு செய்தல் | 1-10-1997 | 23-7-1998 |
| (6) | மணியக்காரனூர்-மலையூர் காடு சாலை கி.மீ. 2/2-3/2 வரை மேம்பாடு செய்தல் | 26-3-1999 | 29-2-2000 |

முடிக்கப்பட்ட ஆறு சாலைகளிலும் வாகனப் போக்குவரத்து சீராக நடைபெறுகிறது.

**(XXI) திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றிய வானகரம் மற்றும் அடையாளம்பட்டுக் கிராமத்தை இணைக்கும் சாலைப் பணி நடைபெறுவதால் மாற்றுப்பாதை வசதி செய்யப்படாததால் இந்தப் பகுதி சுற்றுவட்டாரப் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. கே. சுப்பராயன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
(நெடுஞ்சாலைத் துறை)

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சாலை வானகரம்-அம்பத்தூர் சாலையாகும். இச்சாலை கி.மீ. 14/8-21/2 நீளம் கொண்ட தார் பரத்தப்பட்ட இதர மாவட்டச் சாலையாகும்.

இச்சாலையில் கி.மீ. 14/8 இல் 106 பாலத்திட்ட திட்டத்தின்கீழ் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பாலத்தின் இரு பக்கப் பகுதிகளிலும் கட்டுமானங்களும் தனியார் நிலங்களும் (Builtup area and Private Lands) இருப்பதால் மாற்றுப்பாதை அமைக்க சிரமமேற்பட்டது. ஆகவே தற்போது 8 அடி அகலத்திற்கு மாற்றுப்பாதை அமைத்து இரு சக்கர வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் செல்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

**(XXII) கும்பகோணம் துணைக் கோட்டம், திருநாகேஸ்வரம் நாச்சியார் கோவில், ஓ.டி.ஆர். சாலையில் இருந்த பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து**

உறுப்பினர்: **திரு. செ. இராமலிங்கம்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
(நெடுஞ்சாலைத் துறை)

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் திருநாகேஸ்வரம்-அய்யவாடி சாலை. இந்தச் சாலையில் கி.மீ.1/4-ல் நாட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் உள்ளது. இந்தப் பாலம் இரு கண்கள் கொண்ட 9 மீட்டர் அகலம் கொண்ட பழைய இரும்பு பாலமாகும். நீர்வழிப்பாதையின் அகலம் 22 மீட்டர். இந்த பாலத்தின் தூண் அசைவுற்று பாலத்தின் மேல்தளம் தூணை நோக்கி சரிந்து



உள்ளது. (Deck slab slanted towards pier) இதனைத் தொடர்ந்து மற்றொரு நலிவுற்ற பாலம் கி.மீ. 1/4-ல் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே உள்ளது. நீர்வழிப்பாதையின் அகலம் 45 மீட்டர். இரண்டு பாலங்களிலும் வாகனப் போக்குவரத்து 27-6-1999 முதல் தடை செய்யப்பட்டுள்ளன. தற்போது தற்காலிக மூங்கில் நடைபாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பாலங்களையும் திரும்பக் கட்ட முறையே ரூ. 88.00 இலட்சம் மற்றும் ரூ. 132.00 இலட்சம் தேவைப்படும். பழுதடைந்த பாலங்களை திரும்பக் கட்ட நபார்டு திட்டத்தின் (ஆர்.ஐ.டி.எப். 6) கீழ் செயல்படுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கியின் நிதி உதவி கிடைக்கப் பெற்றதும் பாலங்கள் திரும்பவும் கட்டப்படும்.

**(XXIII) திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை இருவழிப்பாதையாக மாற்ற வேண்டியது குறித்து**

உறுப்பினர்: **திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
(நெடுஞ்சாலைத் துறை)

**அறிக்கை**

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இச்சாலையானது (மாநில நெடுஞ்சாலை எண் 36) நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டுவரும் திண்டுக்கல் வத்தலக்குண்டு-பெரியகுளம்-தேனி-கம்பம்-குமுளி சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 130.19 கி.மீ. ஆகும் (கி.மீ. 0/6-133/5) இச்சாலையானது திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் செல்கிறது. இச்சாலையில் கி.மீ. 0/6-40/8 வரையுள்ள பகுதிகள் திண்டுக்கல் மாவட்டத்தில் முழுமையாக (40.20 கி.மீ.) இருவழிப்பாதையாக உள்ளது. 1999 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இச்சாலையின் வாகன போக்குவரத்துச் செறிவு 11907 பி.சி.யு. ஆக உள்ளது.

மேலும் இச்சாலையானது தேனி மாவட்டத்தில் கி.மீ. 40/8-73/34 மற்றும் 76/30-133/75 வரையில் 89.99 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளது. தேனி மாவட்டத்தில் 20.51 கி.மீ. பகுதிகள் இடைவழித் தடமாக (இண்டர்மீடியட் லேன்) உள்ளது. மீதமுள்ள பகுதியில் 66.14 கி.மீ. பகுதி இருவழித் தடச்சாலையாகவும் மற்றும் 3.34 கி.மீ. சாலைப்பகுதி பலவழித் தடச்சாலையாகவும் உள்ளது. இச்சாலையில் வாகன போக்குவரத்துச் செறிவு 1999 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 20.093 பி.சி.யு. ஆகும்.

தேனி மாவட்டத்தில் உள்ள இடைவழித் தடமாக (இண்டர்மீடியட் லேன்) உள்ள 20.51 கி.மீ. நீள சாலைப் பகுதியை இருவழித்தடச் சாலையாக மாற்றும் பணியானது அரசின் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இச்சாலைப் பகுதியை இருவழிச் சாலையாக மாற்றும் பணியை எதிர்வரும் ஆண்டுகளில் பகுதி பகுதியாக நிதி நிலைமைக்கேற்ப மேற்கொள்ள வழிவகைகள் ஆராயப்படும்.

**(XXIV) *திருப்பூர் கூட்டுறவு நகர வங்கியில் 15-க்கும் மேற்பட்ட ஊழியர் பற்றாக்குறையால் வங்கிப் பணிகள் கடுமையாகத் தேக்கமடைந்து பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தி பரவியுள்ளது குறித்து***

*உறுப்பினர்:* **திரு. கே. சுப்பராயன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**
*(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)*

**அறிக்கை**

திருப்பூர் நகர கூட்டுறவு வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் பணி நிலைத்திறன்படி பணியாளர்கள் எண்ணிக்கை 41 ஆகும். இதில் தற்போது 32 பேர் பணிபுரிந்து வருகின்றனர். காலி பணியிடங்கள் 9 மட்டுமே உள்ளன.

அரசின் ஆணைக்கேற்ப, தொடக்க, மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாளர்களை நேரடி நியமனம் செய்வதற்கு அரசின் தடையாணை தற்போது நடைமுறையிலுள்ளது.

தடையாணை விலக்கப்பட்டவுடன் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று வங்கிப் பணிகள் கடுமையாக தேக்கமடையவில்லை. பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி ஏதும் நிலவவில்லை. அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளிலும் கணிப்பொறி அமைத்து, வாடிக்கையாளர்கட்கு சிறப்பான சேவை மேற்கொள்ள உரிய அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.





**(XXV) *உடனடி வேலைவாய்ப்பு உத்தரவின்பேரில் கூட்டுறவு பட்டயப் பயிற்சி கொடுக்கப்பட்டு இன்னும் வேலையின்றித் தவிக்கும் 500-க்கு மேற்பட்ட இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து***

*உறுப்பினர்:* **டாக்டர் க. கிருஷ்ணசாமி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**
*(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)*

**அறிக்கை**

கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்கேற்பு குறித்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குழு 22-11-1997 அன்று ஆய்வு செய்தது. அப்போது கூட்டுறவு நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பங்கேற்பு 19 விழுக்காடு இல்லாமைக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கூட்டுறவுப் பயிற்சி தகுதி பெற்றில்லாமையே என அறிந்து சுமார் 200 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 175 இந்து ஆதிதிராவிடர்களுக்கும், 25 பழங்குடியினர்களுக்கும் 36 வார காலத்திற்கு உயர்நிலை கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி (HDCM) அளிப்பதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அரசாணை (2ப) எண் 6, ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை, நாள்: 21-3-1998-இல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேற்படி அரசாணையில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு மேல் தகுதியும் திறமையும் வாய்ந்த மேலும் 10 நபர்களும் சேர்ந்து 210 நபர்கள் மதுரையில் உள்ள மதுரை மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும், சென்னையில் உள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும் தலா 105 நபர்கள் வீதம் இருகட்டமாக பட்டயப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

3. இப்பயிற்சிக்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.6,000 ஆகும். இதில் பாதித் தொகையான ரூ.3,000-ஐ தாட்கோ வழங்கும் என்று ஆணையிடப்பட்டது. அரசாணையில் கண்டுள்ளபடி 200 மாணவர்களுக்கான பாதி கட்டணத் தொகை ரூ.6,00,000-ஐ தாட்கோ இவ்விரு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கும் தலா ரூ.3,00,000 வீதம் வழங்கியுள்ளது மீதமுள்ள பாதி பயிற்சிக் கட்டணத் தொகை

[திரு. கா.நா. நேரு] [2000 மே 18

ரூ.6,00,000-ஐ தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது கூட்டுறவுக் கல்வி நிதியிலிருந்து வழங்க முடிவெடுத்து ரூ.3,00,000-ஐ சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கும் ரூ.3,00,000-ஐ மதுரை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கும் வழங்கியுள்ளது.

4. அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 200 நபர்களுக்கு மேல் தகுதியும் திறமையும் வாய்ந்த 10 நபர்களுக்கும் சேர்த்து இப்பயிற்சி வழங்கப்பட்டதால், இந்த 10 நபர்களுக்கான முழுக் கட்டணத் தொகை ரூ.60,000-த்தினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது கூட்டுறவுக் கல்வி நிதியிலிருந்து வழங்கியுள்ளது. ஆகவே, இந்த அரசாணையின்படி இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 210 மாணவ-மாணவியர் இலவசக் கூட்டுறவு உயர்நிலைப் பட்டயப் பயிற்சி முடித்துள்ளனர்.

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை (2ப) எண் 6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 21-3-1998-ன் பத்தி 5-இல், இந்தப் பயிற்சி முடித்தவர்களது பட்டியல் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு, கூட்டுறவு நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவை ஈடுசெய்யுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இப்பயிற்சி பெற்றவர்கள் இதனைச் சுட்டிக்காட்டி தாங்கள் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் என்றும், தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் உடனடி வேலைவாய்ப்பளிக்க வேண்டும் என்றும் கோரி வருகின்றனர்.

6. 1988 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளின் விதி 149(2)ன்படி கூட்டுறவு நிறுவனங்களில் அனைத்துப் பணியிடங்களும் வேலைவாய்ப்பகத்தில் பட்டியல் பெற்றுத்தான் நிரப்பப்படவேண்டும் என உள்ளது. மேலும், அரசாணை (டி) எண் 216, கூட்டுறவு, உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்:1-9-1998-இல் வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி வேலைவாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியல்களில் உள்ள பெயர்களின் பதிவு மூப்பு அடிப்படையிலேயே நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், பட்டியல்களில் உள்ளவர்கள் எவரேனும் தகுதியுள்ளவர்களாக இருந்து தேர்வுக் குழு கூடும் நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் அவர்கள் பணிநியமனம் செய்யப்படுவதற்கான அதிகபட்ச வயதுவரம்பை அடைந்துவிடும் நிலையிருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



2000 மே 18] [திரு. கா.நா. நேரு]

7. கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி என்பது பயிற்சி பெறுபவர் தனது கல்வித் தகுதியை உயர்த்திக்கொண்டு தனக்குரிய வேலைவாய்ப்பினை நடைமுறையில் உள்ள சட்டவிதிமுறைகள் மற்றும் அரசாணைகளைப் பின்பற்றிப் பெறுவதற்கே அன்றி, பயிற்சி என்பது வேலைக்கு உத்தரவாதம் அல்ல. மதுரை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையமும், சென்னை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையமும் ஆண்டுதோறும் தலா 50 நபர்களுக்குக் குறையாமல் உயர்நிலைப் பட்டயப் பயிற்சி வகுப்புகளை (HDCM) நடத்திவருகின்றன. பட்டதாரிகள் இப்பயிற்சியில் சேர தகுதியுள்ளவர்கள். மேலும், தமிழகத்தில் தற்போது 16 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. அவை பயிற்சி முடித்த மாணவர்களுக்கு பட்டயம் (Diploma in Co-operation) வழங்குகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையங்களில், 11,100 மாணவர்களுக்கு பயிற்சியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இவ்வாறு 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கூட்டுறவு பட்டயப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில், 18% ஆதிதிராவிடர்களுக்கும் 1% பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கப்படுகின்றன. அவர்களில் ஏற்கெனவே பயிற்சிபெற்ற பல மாணவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து வேலைக்காகக் காத்திருக்கின்றனர்.

8. அண்மையில் 1999-இல் கூட்டுறவு பட்டயப் பயிற்சி முடித்துள்ள 210 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வேலைபெறும் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் கருதப்பட வேண்டும். இதே இனத்தைச் சேர்ந்த பலர் இவர்களுக்கு முன் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பகங்களில் பதிவுசெய்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும்போது அவர்களைவிட இவர்கள் அதிக உரிமை பெற்றவர்களாகக் கருதிட இயலாது.

9. மேலும், கூட்டுறவு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பொறுத்தவரை, 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 149(2)ல் குறிப்பிட்டுள்ளபடியும், அரசாணை (டி) எண் 216, கூட்டுறவுத் துறை, நாள்: 1-9-1998-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும்தான் பணிநியமனம் மேற்கொள்ள வேண்டும்.

10. மேற்கூறிய சூழ்நிலையில், ஏற்கெனவே கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பகங்களில் பதிவுசெய்து வேலைக்காகக் காத்திருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள்

மற்றும் 1999-இல் சிறப்புத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி முடித்துள்ள 210 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் விதிமுறைகள் மற்றும் அரசாணைகளில் உள்ள அறிவுரைகளைப் பின்பற்றி பணிநியமனம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(XXVI) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வடகாடு (எப்.எஸ்.சி.எஸ்.) கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு வழங்கப்படும் குடும்ப அட்டைக்கான அரிசியின் அளவு 80% வழங்குவதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினை குறித்து**

உறுப்பினர்: **திரு. அ. வெங்கடாசலம்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**
(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி, வடகாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 6 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றது. ஒவ்வொரு கடைக்கும் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் தேவைப்படும் அரிசியின் அளவு போன்ற விவரங்கள் பின் வருமாறு:—

| கடையின் பெயர் | | குடும்ப அட்டைகள் |
|---|---|---|
| 1. வடகாடு (தலைமை அங்காடி) | .. | 771 |
| 2. வடகாடு (தெற்கு) | .. | 592 |
| 3. மாங்காடு | .. | 808 |
| 4. புள்ளிமான் விடுதி | .. | 548 |
| 5. கீழாத்தூர் | .. | 396 |
| 6. பரமன் நகர் | .. | 282 |
| மொத்தம் | .. | **3,397** |



| | | | |
|---|---|---|---|
| 1. 6 கடைகளிலும் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவைப்படும் அரிசியின் அளவு | .. | 661.66 | குவிண்டால் |
| 2. சராசரி மாதாந்திர ஒதுக்கீடு | .. | 601.36 | குவிண்டால் |
| 3. 2000 மார்ச் திங்கள் ஒதுக்கீடு | .. | 558.09 | குவிண்டால் |
| மார்ச் மாத ஆரம்ப இருப்பு | .. | 43.25 | குவிண்டால் |
| மொத்தம் | .. | **601.34** | குவிண்டால் |
| 4. 2000 ஏப்ரல் மாத ஆரம்ப இருப்பு | .. | 20.38 | குவிண்டால் |
| 2000 ஏப்ரல் மாத அங்காடிகளுக்கும் நிகர ஒதுக்கீடு | .. | 580.98 | குவிண்டால் |
| மொத்தம் | .. | **601.36** | குவிண்டால். |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், வடகாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் 6 அங்காடிகளுக்கும், சராசரியாக 91% அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, 80% அரிசி ஒதுக்கீடுதான் செய்யப்படுகிறது என்பது சரியல்ல. அந்தந்த நியாயவிலைக் கடைகளின் அரிசித் தேவைக்கு ஏற்ப அரிசி ஒதுக்கீடு செய்யும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இது தொடர்பாக, பொதுமக்களிடமிருந்து புகார்/கோரிக்கைகள் ஏதும் வரப்பெறவில்லை.

**(XXVII) 4-வது மற்றும் 5-வது ஊதியக் கமிஷனின் ஊதிய உயர்வுப் பரிந்துரையான 5% ஊதியத்தை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சுமார் 700 மாதவரம் பால்வளத் தொழிலாளர்களுக்கு வழங்காமல் உள்ளது குறித்து ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. கே. சுப்பராயன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. க. சுந்தரம்**
*(பால் வளத் துறை)*

**அறிக்கை**

1980 ஆம் வருடம் நவம்பர் மாதம் 19/20 தேதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 1,095 பணியாளர்களில் ஆக மொத்தம் 701 பணியாளர்கள் அரசு ஆணைப்படி தொழிற் தகராறு சட்டப் பிரிவு 18(1)-ன் அடிப்படையில் புதிய பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டனர். இவர்களில் 370 பணியாளர்கள் 1989 ஆம் ஆண்டும் மீதமுள்ள 331 பணியாளர்கள் 1997 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் பணியமர்த்தப்பட்டனர்.

பின்னர் அரசு தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் வேண்டுகோளை ஏற்று கடித எண் 17035/பா.உ.1/98-5, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை கடித நாள் 20-11-1998-ன்படி ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட விருப்பமுள்ளவர்களுக்கு பணித் தொடர்ச்சியுடன் கூடிய கருத்தியலான சம்பள நிர்ணயம் செய்ய உத்தரவிட்டது.

அவ்வுத்தரவை நடைமுறைப்படுத்திக் கருத்தியலான சம்பளம் நிர்ணயம் செய்ய, 5% தனி ஊதியம்/தனி ஊதியத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

எனவே, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு 1989, 1997 அதற்கு பின்னரும் பணியில் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் தனி ஊதியத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு கருத்தியலான ஊதிய நிர்ணயம் செய்யலாமா என்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநரது கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.





**(XXVIII) திருப்பூர் தனலட்சுமி மில் திறக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால் 1,000 தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து**

*உறுப்பினர்:* **திரு. கே. சுப்பராயன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

தனலட்சுமி மில்ஸ் என்ற ஆலையில் 'ஏ' மில் (ஸ்பின்னிங்) மற்றும் 'பி' மில் (வீவிங்) என்ற 2 ஆலைகள் இயங்குகின்றன. 'ஏ' மில்லில் சுமார் 1,200 தொழிலாளர்களும் 'பி' மில்லில் சுமார் 400 தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். 'பி' ஆலை நலிவடைந்ததால், இவ்வாலையை மூடிவிட்டு அத்தொழிலாளர்களுக்கு 'ஏ' மில்லில் பணி அளிக்க வேண்டுமென தனித் தொழில் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. 'ஏ' ஆலையும் நலிவடைந்த ஆலை என்பதால், 12-10-1997 முதல் நிதி நெருக்கடி காரணமாக இயங்காமலுள்ளது. இவ்வாலை குறித்த புனரமைப்புத் திட்டம், 2 தொழில் முனைபவர்களால் அளிக்கப்பட்டு அது தொடர்பான போட்டி காரணமாக அவ்விருவராலும் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இறுதியாக ஏ.ஏ.ஐ.எப்.ஆர். தனது 3-4-1998 ஆம் தேதியிட்ட உத்தரவில் ஆபரேடிங் ஏஜென்சியான ஐ.டி.பி.ஐ-யினை புதிய புனரமைப்புத் திட்டத்தினைத் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. அதன்படி ஆலையின் சொத்துக்களான நிலம், கட்டடம், இயந்திரங்கள் போன்றவற்றை ஆபரேடிங் ஏஜென்சி, நிதி நிறுவனங்கள், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, மாநில வருவாய்த் துறை பிரதிநிதி ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பி.ஐ.எப்.ஆர். உருவாக்கும் குழு மூலம் விற்பனை செய்து அதில் கிடைக்கும் தொகையை ஆபரேடிங் ஏஜென்சியிடம் அளித்து தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தொகைகள் அளிக்கப்பட வேண்டுமெனவும், பின்னர் இதர கடன்தாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை வழங்கப்படவேண்டுமெனவும், மீதமுள்ள தொகையைக்கொண்டு ஆலையை புனரமைப்பு செய்து புதுப்பித்து விரிவாக்கம் செய்து அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலையளிக்கும் வகையில் ஆலை இயக்கப்பட வேண்டுமெனவும், அதற்கான வரைவு புனரமைப்புத் திட்டத்தினை ஆபரேடிங் ஏஜென்சி பி.ஐ.எப்.ஆர்.-இடம் அளிக்க வேண்டுமெனவும், ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாணையை ஆட்சேபித்து சேரன் குரூப் தலைவர் திரு. கே.சி. பழனிச்சாமி உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

2. மேலும், இவ்வாலை இயங்காத பிரச்சினை ஏற்கெனவே அரசு ஆணை (டி) எண் 980, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 1-11-1999-ன்படி தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளது. தவிர அரசு (நிலை) ஆணை எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999-ன்படி தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் ஒவ்வொரு மாதமும் தலா ரூ.250 வீதம் உதவித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

3. நிதி நெருக்கடி காரணமாக இயங்காமலுள்ள இவ்வாலையைத் திறந்து இயக்குவது குறித்து இத்துறையில் நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பில்லை. இவ்வாலை குறித்த புனரமைப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இவ்வாலை மீண்டும் திறந்து இயங்க வாய்ப்புள்ளது.

## (XXIX) ஓசூர் தாலுகா பிரிமியர் மில்ஸ் 36 பெண் தொழிலாளர்கள் 22-3-2000 முதல் உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து

உறுப்பினர்: **திரு. பி. வெங்கடசாமி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

### அறிக்கை

ஓசூர் பிரிமியர் மில்ஸ் ஆலையில் சுமார் 855 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். தமிழக பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தினைச் சார்ந்த 39 பெண்கள் உள்பட சுமார் 340 தொழிலாளர்கள் 22-3-2000 பிற்பகல் 2-30 மணி முதல் உண்ணாவிரதம்/தர்ணா செய்து வருவதாக தெரிகிறது. இந்த ஆலையில் தமிழக பஞ்சாலை தொழிற்சங்கம் (பி.எம்.எஸ்.) சார்ந்த சங்கம் பெரும்பான்மையான தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இவர்களை விலக வற்புறுத்தி பல்வேறு நடவடிக்கையில் நிர்வாகம் ஈடுபட்டது என்றும், 18 வருடங்களாக பணிபுரிந்துவரும் நிரந்தரப் பெண் தொழிலாளர்களை தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தில் கையெழுத்திட நிர்வாகத்தினர் கட்டாயப்புடுத்தினர் என்றும், அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளாததால், பல்வேறு வழிகளில் நிர்வாகம் அவர்களுக்கு தொல்லை அளித்து வந்தது என்றும், சில பெண் தொழிலாளிகளை பிரிவு மாற்றம் செய்தது என்றும், இதனை ஆட்சேபித்து 22-3-2000 அன்று





பிற்பகல் 4-30 முதல் 39 பெண் தொழிலாளிகள் ஆலை உள்ளே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர் என்றும் இதனைத் தொடர்ந்து 22-3-2000 அன்று 300 ஆண் தொழிலாளர்கள் உண்ணாவிரதம்/தர்ணாவில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தொழிற் சங்கத்தின் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

தொழிலில் ஏற்பட்ட மந்தநிலையைக் கருதி சில தொழிலாளர்களைப் பிரிவு மாற்றம் செய்ததைத் தொடர்ந்து, பி.எம்.எஸ். சங்கத் தொழிலாளர்கள் இந்த உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், ஓசூர் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 47/97-ல் 26-4-1999 அன்று அளித்த ஆணையில் தமிழகப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், நிர்வாகம், ஊழியர்கள், பணியாளர்கள், பொருட்கள் உள்ளே மற்றும் வெளியே செல்வதைத் தடை செய்யக் கூடாது எனத் தெரிவித்திருந்தாலும், இதற்கு முரணாக இச்சங்கத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் நிர்வாகம் கூறுகிறது.

தொழிலாளர் அலுவலர், சேலம் இப்பிரச்சினை குறித்து 24-2-2000 அன்று பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்திருந்தார். இருதரப்பினரும் வரவில்லை. இதனைத் தொடர்ந்து தொழிலாளர் துணை ஆணையர் தலையிட்டு 25-3-2000 மற்றும் 29-3-2000 அன்று பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார்.

1-4-2000 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு நடைபெற்ற கூட்டத்தில், அமைதி குழு ஏற்படுத்தவும் 35 தொழிலாளர்களின் தற்காலிக வேலை நீக்கம் பிரச்சினை குறித்து 45 நாட்களுக்குள் விசாரணை முடிக்கவும், 8 நாள் ஊதிய பிடித்தம் குறித்து தொழிலாளர் அலுவலர் முன்பு பேசி முடிக்கவும், முடிவு செய்யப்பட்டதாகவும், இதற்கு பி.எம்.எஸ். தவிர இதர தொழிற்சங்கங்கள் ஒப்புக்கொண்டதாகவும், ஆனால் இதற்கு பி.எம்.எஸ். தொழிற்சங்கம் ஒப்புக்கொள்ளவில்லை எனவும், தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ள 35 தொழிலாளர்களையும் வேலைக்கு அனுமதித்தால்தான் வேலை நிறுத்தத்தினை விலக்கிக் கொள்ள இயலும் என தெரிவித்துள்ளது. ஆலையின் இயக்கத்திற்கு எவ்வித இடையூறும் தொழிலாளர்களால் ஏற்படுத்தக்கூடாது என நிருவாகம் உயர்நீதிமன்றத்தில் உத்தரவுகள் பெற்றுள்ளதாக தெரிகிறது. இப்பிரச்சினை குறித்து மீண்டும், 7-4-2000 அன்று பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நடைபெறவுள்ளது.

[2000 மே 18

(XXX) ஈரோடு-சத்தியமங்கலம் சலோனா கார்ட் ஸ்பின் நூற்பாலையில் 68 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது குறித்து

உறுப்பினர்: **திரு. நா. பெரியசாமி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

**அறிக்கை**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்காவில் உள்ள சலோனா கார்ட் ஸ்பின் என்ற நூற்பாலையில் மொத்தம் 93 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிலாளர்கள் கோவை-பெரியார் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (இணைப்பு-எம்.எல்.எஃப்) மற்றும் பெரியார் மாவட்ட டெக்ஸ்டைல்ஸ் லேபர் யூனியன் (இணைப்பு-சி.ஐ.டி.யு) ஆகிய தொழிற்சங்கங்களைச் சார்ந்துள்ளனர்.

2. பெரியார் மாவட்ட டெக்ஸ்டைல்ஸ் லேபர் யூனியன், அதன் 2-12-1999 தேதியிட்ட வேலை நிறுத்த அறிவிப்பில், நிர்வாகம் தங்கள் சங்கத்தை அங்கீகரித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், பணி மறுக்கப்பட்ட 25 தொழிலாளர்களை எவ்வித நிபந்தனையுமின்றி பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்பட பல கோரிக்கைகளை முன்வைத்து 15-12-1999 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவிப்பு செய்திருந்தது. ஈரோடு, தொழிலாளர் அலுவலர் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு வேலைநிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென தொழிற்சங்கத்துக்கு அறிவுரை வழங்கி பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார். 27-12-1999, 5-1-2000, 11-1-2000, 19-1-2000 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நிர்வாகம் ஆஜராகாததால் 25-1-2000 அன்று பேச்சுவார்த்தைகளுக்கு ஆஜராகுமாறு கோரி 'அழைப்பாணை' அனுப்பியிருந்தார். நிர்வாகம் ஆஜராகவில்லை. மீண்டும் 21-2-2000 அன்று பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு 'அழைப்பாணை' அனுப்பப்பட்டது. இதற்கிடையில், தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், 30-12-1999 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். நிர்வாகத் தரப்பில், ஆலை இயங்கி வருவதாகவும், சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சார்ந்த சுமார் 40 தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2000 மே 18] [திரு. அ. இரகுமான்கான்]

3. ஈரோடு, தொழிலாளர் அலுவலர் முன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும்போது, அவரது அனுமதி பெறாமல் நிர்வாகத்தினர் 31 தொழிலாளர்களைப் பணி நீக்கம் செய்துவிட்டனர் எனவும், நிர்வாகத்தின் இச்செயல் தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 33-க்கு முரணானதெனவும் தெரிவித்து சி.ஐ.டி.யு. தொழிற் சங்கம், ஈரோடு, தொழிலாளர் அலுவலர் முன்பு புகார் மனு அளித்தது. இம்மனுவின்மீது ஈரோடு தொழிலாளர் அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ஆனால், தொழிற்சங்கம், நிர்வாகத்தினர்மீது உயர் நீதிமன்றத்தில் உரிமை மனு தாக்கல் செய்து அது நிலுவையிலுள்ளது எனவும், இப்பிரச்சினைகள் மீது தற்காலிகமாக நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு கோரியுள்ளதாகவும் தொழிலாளர் அலுவலர் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கம், தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 33-ன்கீழ் அளித்துள்ள மனுவினை விரைவில் தீர்மானிக்குமாறு தொழிலாளர் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(XXXI) தற்போது மக்கள் தொகை கணக்கெடுப்பு செய்ய உள்ள இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் அனைத்து சாதிச் சங்கங்கள் கேட்டுக் கொண்டுள்ளதற்கேற்பவும், சட்டநாதன் கமிசன், அம்பாசங்கர் கமிசன், கவர்னர் அலெக்சாண்டர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட வெங்கடகிருஷ்ணன் கமிசன் பரிந்துரைகளுக்கேற்பவும் சாதிவாரி கணக்கெடுப்பு செய்ய வேண்டிய அவசியம் குறித்து

உறுப்பினர்: **திரு. ஜி.கே. மணி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

**அறிக்கை**

"மக்கள் தொகை கணக்கெடுப்பு" என்பது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்ட ஒன்றாகும். மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948-ன் (1948 ஆம் ஆண்டு மைய சட்டம் 37) கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மத்திய அரசு, உள் துறை அமைச்சகத்தின்கீழ் பணியாற்றுகிற இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகை

கணக்கெடுப்பு ஆணையர், மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்கிறார். மாநில அளவில் அந்த ஆணையரின்கீழ் பணியாற்றும் மக்கள் தொகை இயக்குநர் இந்தப் பணியை மேற்கொள்கிறார். இந்தப் பணிக்குத் தேவையான ஒத்துழைப்புக் கொடுப்பதும் பணியாளர் நியமனம், மதிப்பூதியம் வழங்குவது, கணக்கெடுப்பிற்குத் தேவையான எழுதுபொருள் வழங்குதல் போன்ற செலவினங்களுக்கு ஆணை வழங்குவது போன்றவை மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பணிக்கு மேற்கொள்ளப்படும் செலவினை மாநில அரசு முதற்கண் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசிடமிருந்து திரும்பப்பெறுகிறது. இப்பணிக்கான மொத்தச் செலவினையும் மத்திய அரசு ஏற்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948-ன் பிரிவு 8 மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள் 1990-ன் விதி 6-ன் கீழ், கணக்கெடுப்பின்போது கேட்கப்படவேண்டிய வினாப்பட்டியல் முதலியவற்றை மத்திய அரசு மட்டுமே முடிவு செய்து அறிவிக்கையாக வெளியிடும். மாநில அரசு அந்த அறிவிக்கையை அரசிதழில், விதி 8-ன் கீழ் மறு வெளியீடு செய்கிறது. எனவே, இந்தப் பொருள் மாநில அரசின் வரம்பிற்குள் வரவில்லையாதலால் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எதிர்க்கலாம்.

**(XXXII) அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்தில் ரூ.20 செலுத்தி பதிவு செய்தவர்களுக்கு மாதாமாதம் செலுத்தும் ரூ.20-ஐ எந்த வங்கியும் பெற மறுப்பதால் அமைப்புசாரா தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து**

உறுப்பினர்: **திரு. மு. அப்பாவு**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

**அறிக்கை**

அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் தற்போது அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 57 தொழில்களில் 54 அமைப்பு சாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்து உடல் உழைப்புத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மேற்படி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலனுக்கென தனி நபர் குழு விபத்து நிவாரணம், பேறுகால மருத்துவ உதவி, பணிமுடிவு நலத் திட்டம் ஆகியவை உள்ளடக்கிய 1999-ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தினை அமல்படுத்த ரூ.40 இலட்சங்கள் (ரூபாய் நாற்பது இலட்சங்கள் மட்டும்) அரசு மானியம் ஒதுக்கப்பட்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான நலநிதி உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு பெற விழையும் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் மாதச் சந்தா ரூ.20-ஐ இந்த சந்தா சேகரிப்புக்காக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வங்கிகள் மூலம் செலுத்துவதற்குச் சட்டரீதியாக வகை செய்யப்பட்டுள்ளது.





2. தமிழகம் முழுவதும் உள்ள உடல் உழைப்புத் தொழிலாளர்கள் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர். வங்கிகளில் தொழிலாளர்கள் பணம் செலுத்தும்போது பொதுவாக அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றும், ஒரு சில வங்கியின் கிளைகளில் ஏற்க மறுப்பதாகத் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்திற்கு தகவல் பெறப்பட்டவுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட வங்கி தலைமையகத்தைத் தொடர்பு கொண்டு அவைகள் சரி செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் மேற்படி சந்தா தொகையினை பெற மறுப்பதாகத் தற்போது உடல் உழைப்புத் தொழிலாளர்களிடமிருந்து புகார்கள் எதுவும் பெறப்படவில்லை. மேலும், அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வங்கிகள் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் செலுத்தும் சந்தா தொகையினை பெற மறுத்தால், சம்பந்தப்பட்ட வங்கிகளின் தலைமையகத்திலிருந்து உடனடியாக அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

[2000 மே 18

**(XXXIII) தமிழகத்தில் 30 இலட்சம் கவரிங் நகை செய்யும் தொழிலாளர்கள் நலன் கருதியும், தொழிலை முறைப்படுத்தவும், 'பொற்கொல்லர் நல வாரியம்' அமைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்பது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. ச. அழகிரி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (தொழில் முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 பிரிவு 2(12)ன்கீழ் இனம் 32-ல் "தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் தயாரிப்புத் தொழில்" அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. அமைப்புச்சாரா தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் தற்போது அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 57 தொழில்களில் தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் தயாரிப்புத் தொழில் உள்ளடக்கிய 54 அமைப்புச்சாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்து உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலனுக்கென தனி நபர் குழு விபத்து நிவாரணம், பேறுகால மருத்துவ உதவி, பணிமுடிவு நலத் திட்டம் ஆகியவை உள்ளடக்கிய, 1999ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நலத் திட்டத்தின் கீழ் பொற்கொல்லர்களும் பயன்பெற வழிவகையுள்ளது. எனவே, கவரிங் நகை செய்யும் தொழிலாளர்கள் நலனுக்காக தனியாக 'பொற்கொல்லர் நல வாரியம்' அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 மே 18]

**(XXXIV) வேலூர் மாவட்டத்தில் அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி**
*(கைத்தறித் துறை)*

**அறிக்கை**

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கிய காரணத்தினாலும் பஞ்சாலைத் தொழில் தொய்வு, மூலப் பொருள் கொள்முதல் செய்ய நிதி நெருக்கடி, மின் கட்டணம் செலுத்த இயலாத நிதி நெருக்கடி ஆகிய காரணங்களினால் 29-12-1997 முதல் இயங்காமல் உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30-04-1998 அன்று சட்டமன்றத்தில் மூடப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகளை விரைவில் திறந்து நடத்தப்படும் என அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை இலாபகரமாக இயக்குவதற்கும், மூடியுள்ள கூட்டுறவு நூற்பாலைகளை திறந்து நடத்துவதற்கும் அரசு புனரமைப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தில் வேலூர் கூட்டுறவு நூற்பாலைக்கு கீழ்க்கண்ட பணப்பயன் மற்றும் சலுகைகளை அரசு அளித்துள்ளது:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புதிய காசுக் கடன் | .. | (நபார்டு வங்கி) | ரூ. 150 | இலட்சம் |
| 2. | நிலுவை காசுக் கடன் நீண்ட கால கடனாக மாற்றுதல். | .. | (நபார்டு வங்கி) | ரூ. 200 | இலட்சம் |
| 3. | வழிவகை கடனை அரசு பங்குத் தொகையாக மாற்றுதல். | .. | (தமிழக அரசு) | ரூ. 223 | இலட்சம் |
| 4. | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | .. | (தமிழக அரசு) | ரூ. 250 | இலட்சம் |
| 5. | சட்டப்பூர்வ நிலுவைத் தொகை செலுத்துதல் | .. | (தமிழக அரசு) | ரூ. 56.73 | இலட்சம் |
| 6. | காலக் கடன் செலுத்துதல் | .. | (தமிழக அரசு) | ரூ. 78.60 | இலட்சம் |

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2000 மே 18

இது தவிர்த்து 01-04-1998 முதல் மூன்றாண்டுகளுக்கு விற்பனை வரி செலுத்துவதை தள்ளி வைத்தல் மற்றும் "டான்ஸ்பின்"-க்கு கொடுக்க வேண்டிய தொகையினை பங்கு மூலதனமாக மாற்றுதல் ஆகிய சலுகைகளை அறிவித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

காசுக் கடன் தொடர்பாக தேவையான பிரேரணை தயாரிக்கப்பட்டு மாநில கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வழியாக நபார்டு வங்கிக்கு அளிக்கப்பட்டு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கியின் அனுமதி பெறப்பட்டவுடன் புதிய காசுக் கடன் நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் நிலுவை காசுக் கடன் நீண்ட கால கடனாக மாற்றப்படும்.

அரசு மேற்படி கூட்டுறவு நூற்பாலையில் அதிகமாக உள்ள 250 தொழிலாளர்களை தன் விருப்ப ஓய்வூதியத் திட்டத்தில் அனுப்புவதற்கு ரூ.250 இலட்சம் அனுமதித்தது. அதனைக் கொண்டு 268 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி கூட்டுறவு நூற்பாலை கீழ்க்கண்ட விவரப்படி நிதி நிறுவனத்துக்கு காசுக் கடன் செலுத்தப்பட்டுவிட்டது:—

| | | | |
|---|---|---|---|
| ஐசிஐசிஐ | : | 23.50 | இலட்சம் |
| ஐஎப்சிஐ | : | 23.50 | இலட்சம் |
| ஐடிபிஐ | : | 31.60 | இலட்சம் |
| மொத்தம் | .. | **78.60** | இலட்சம் |

மேலும், வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தன் விருப்ப ஓய்வு திட்டத்தின்கீழ் பணி விலக விருப்பம் தெரிவிக்க இருக்கும் தேவையான நிதி பயன்கள் மொத்தம் ரூ.450 இலட்சம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கோரியுள்ளார். வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்குத் தேவைப்படும் தொகையை மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி தொகை பெறப்பட்டவுடன் தன் விருப்ப ஓய்வில் அதிகப்படியான தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு இலாப நட்டமின்றி இயங்கும் அளிவில் கதிர்களைக் கொண்டு வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை திறந்து இயக்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



2000 மே 18]

**(XXXV) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயர் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் மத்தியில் கயர் விற்பனை தேங்கி, வேலை இழப்பு ஏற்பட்டுள்ளதால் அந்த மாவட்ட மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து**

உறுப்பினர்கள்: **(அ) திரு. டி. மணி**
**(ஆ) திரு. ஜே. ஹேமச்சந்திரன்**
**(இ) டாக்டர் தே. குமாரதாஸ்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி**
(ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை)

**அறிக்கை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கயறு விற்பனை தேங்கிய காரணத்தால், அம்மாவட்ட மக்கள் மத்தியில் பதட்டநிலை ஏதும் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 120 தென்னை நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் 1180 கயறு திரிக்கும் தொழிற்சாலைகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்தக் கயறு தொழில் பல ஆண்டுகளாக எவ்விதத் தொய்வின்றி நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. இத்தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள். வட இந்தியாவில் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வட இந்தியாவில் விற்பனை செய்யப்படும் கயறு பொருட்கள் அண்டை நாடான பாகிஸ்தானுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் 1999-2000ஆம் ஆண்டு இந்திய எல்லைப் பகுதியில் ஏற்பட்ட 'கார்கில்' யுத்தத்தினால் பாகிஸ்தானுக்கு கயறு பொருட்கள் அனுப்புவதில் சிரமம் ஏற்பட்டது. ஆகையால் 1999-2000 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கயறு பொருட்களின் விற்பனையில் மந்தம் ஏற்பட்டு தேக்கநிலை ஏற்பட்டது. எனினும் நாளடைவில் இந்நிலைமை சீரடையத் தொடங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 10 கயறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 1998-99ஆம் ஆண்டு ரூ.229.89 இலட்சத்திற்கு விற்பனை செய்தன. நடப்பு ஆண்டில் ரூ.211.00 இலட்ச மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

[திரு. இ. பெரியசாமி] [2000 மே 18

மேலும் கயறுபொருட்கள் தேக்க நிலையை நீக்கி விற்பனையைப் பெருக்குவதற்கு தமிழ்நாடு அரசு மற்றும் கயறு வாரியம் மூலம் 20% தள்ளுபடி விற்பனை நவம்பர் 1999 முதல் அளிக்கப்பட்டு அரசு தனது பங்கீடாக ரூ.50 இலட்சம் கயறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது. கயறு வாரியம் ரூ.50 இலட்சம் வழங்கியுள்ளது.

கயறு விற்பனையை மேலும் மேம்படுத்த மத்திய அரசின் "விற்பனை மேம்படுத்தும்" திட்டத்தின்கீழ் 10% தள்ளுபடியை ஆண்டு முழுவதும் அனைத்து கயறு பொருட்களுக்கும் வழங்கும் திட்டத்திற்கு இசைவு தெரிவிக்கப்பட்டு இதுகுறித்து மத்திய அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 2000-2001-ல் செயல்படுத்தப்படுமானால் வரும் நிதியாண்டில் கயறு தொழில் விற்பனை எவ்விதத் தேக்கமின்றி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கயறு கூட்டுறவு சங்க உறுப்பினர் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தொழிலாளர்களின் வேலைவாய்ப்பில் பாதிப்பு எதுவும் இல்லை. கயறு விற்பனை மேம்பாடு அடைந்துள்ளதைத் தொடர்ந்து கயறு தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் கருதப்படுகிறது.

**(XXXVI) கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் கூட்டுறவு அடிப்படையில் 306 ஏக்கரில் 'அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை' என்ற பெயரில் அமைக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திற்கு 'சிட்பி' வங்கிக் கடனுக்கு மாநில அரசு Guarantee வழங்காததால் கடந்த 1989 முதல் இயங்க முடியாமல் சிக்கியுள்ளது குறித்து**

உறுப்பினர்: **திரு. கே. சுப்பராயன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி**
(ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை)

## அறிக்கை

அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை 30-12-1989 அன்று நிறுவப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் நிலத்தை கையகப்படுத்தி, மனைகளாக்கி உறுப்பினர் தொழில் முனைவோர்களுக்கு வழங்குவதாகும். கோயம்புத்தூரில் பல்லடம் தாலுக்கா, கிட்டாம்பாளையம் கிராமத்தில் இதற்காக 328 ஏக்கர் நிலம்



2000 மே 18] [திரு. இ. பெரியசாமி]

கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை 550 மனைகளாக்கி பல்வேறு தொழில்சார்ந்த உறுப்பினர் தொழில் முனைவோர்களுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.20 கோடி. இதன் உறுப்பினர் எண்ணிக்கை 1167.

தொழிலில் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள சிறு மற்றும் ஊரகத் தொழில்களுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (IID) மத்திய அரசு மற்றும் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (சிட்பி) வழங்கக்கூடிய ரூ.5 கோடி நிதியுதவியை இத்திட்டத்திற்குப் பெறுவதற்கான ரூ.500.435 லட்சத்திற்கான செயற்குறிப்பினை (1994 ஆம் ஆண்டு) தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அரசுக்கு அனுப்பினார். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.200 லட்சம் மானியமாகவும், இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி ரூ.300 லட்சம் கடனாகவும் வழங்கும். வழங்கப்படும் கடன் தொகைக்கு மாநில அரசு பொறுப்புறுதி வழங்கவேண்டும் என்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் நிதி ஈடுபாடு எதுவும் இல்லாத நிலையில் இத்திட்டத்தினை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மாநில அரசு பொறுப்புறுதி அளிப்பது பொறுத்தவரை பிணையம் (Security) தொடர்பான சில விவரங்கள் முடிவு செய்யப்படலாம் என்று கருதப்பட்டது.

ரூ.500 லட்சம் மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்கான நிறுவனத்தின் திட்டம், மத்திய அரசுக்கு 23-3-1995 அன்று பரிந்துரைக்கப்பட்டது. இச்செயற்குறிப்பினை பரிசீலனை செய்து, 'சிட்பி' திட்டத்தின் நிலைத்தன்மை (Viability) மற்றும் நிதித் தேவைக்கான ஆதாரம் குறித்த விவரமான ஆய்வு தேவை என்று குறிப்பிட்டதுடன் மாநில அரசின் பொறுப்புறுதி குறித்த கடப்பாடு தேவை என்றும் தெரிவித்தது. பொறுப்புறுதி அளித்தால்மட்டுமே சிட்பி திட்டத்தை பரிசீலனை செய்யும் என்று நிறுவனம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்தும், இதுகுறித்து தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையிலும் இத்திட்டத்திற்கான பொறுப்புறுதி, 'சிட்பி' கடன் தொகைக்கு ஒப்பளிப்பு ஆணை வெளியிட்டவுடன் நிறைவேற்றப்படும் என்று சிட்பிக்கு தெரியப்படுத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான உயர்மட்டக்குழு (High Power Committee) இத்திட்டத்திற்கான

[திரு. இ. பெரியசாமி] [2000 மே 18

இசைவினைத் தெரிவித்ததையொட்டி 16-7-1996 நாளிட்ட கடிதத்தில் மத்திய அரசு இத்திட்டத்திற்கான ஒப்புதலை வழங்கியது. ரூ.50 லட்சம் மாநில அரசின் பங்கு மூலதனத்தை உள்ளடக்கிய ரூ.551.88 லட்சம் திருத்திய மதிப்பீடு கொண்ட இத்திட்டத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்த சிட்பி 15-5-1997 நாளிட்ட கடிதத்தில் அது வழங்கக்கூடிய ரூ.300 லட்சம் கடன் தொகைக்கு திரும்பப் பெற முடியாத நிபந்தனையற்ற பொறுப்புறுதி அளிக்கவேண்டும் என்று தெரிவித்தது. இதுகுறித்து கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

திட்டங்களுக்கு அரசு பொறுப்புறுதி அளிப்பதை ஊக்குவிக்கக் கூடாது என்ற அரசின் கொள்கை முடிவு கருதி இந்நிறுவனத்திற்கு சிட்பி வழங்கக்கூடிய கடன் தொகைக்கு அரசு பொறுப்புறுதி அளிக்க இயலாது என்று முடிவு செய்யப்பட்டது. எனினும் திட்டத்தை செயலாக்கப்படுத்தும் நோக்கில் அரசின் பொறுப்புறுதியை வலியுறுத்தாமல் திட்டத்தின் நிலைத்தன்மை கருதி திட்டத்திற்கான நிதி உதவியை வழங்கும்படி மத்திய அரசும், சிட்பியும் கேட்டுக்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கக்கூடிய ரூ.200 லட்சத்தை நிறுவனத்திற்கு வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. மாநில அரசு பொறுப்புறுதி அளிக்காதபட்சத்தில் கடன்தொகையை வழங்க சிட்பி முன்வரவில்லை.

திட்டத்திற்குத் தேவைப்படும் கடன் உதவியை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மூலம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டத்திற்கு ரூ.50 லட்சத்தை மாநில பங்கு மூலதனமாக வழங்கக்கோரும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயற்குறிப்பு மீது இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதற்கிடையில் இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை நிலைத்து செயற்படக்கூடிய திறனும், சிட்பி வழங்கக்கூடிய கடன்தொகைக்கு போதிய கடன்ஈட்டு சொத்தும் பெற்றிருந்தால் சிட்பி வழங்கக்கூடிய கடன்தொகைக்கு அரசின் பொறுப்புறுதி அவசியம் என்ற நிபந்தனையை கைவிட தற்போது சிட்பி முன்வந்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து நிறுவனம் சிட்பிக்கு புதிதாக விண்ணப்பம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து சிட்பி நிறுவனமும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.



2000 மே 18]

**(XXXVII) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், முகாசி அனுமன் பள்ளி கிராமம்-கள்ளகவுண்டன்பாளையம் பட்டியல் சாதியினர் சமூக மக்களின் குடியிருப்புக்கு எந்தவிதமான பாதை வசதியும் இல்லாமல் 150 பேர் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. நா. பெரியசாமி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு**
*(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)*

**அறிக்கை**

ஈரோடு மாவட்டம்-ஈரோடு வட்டம்-முகாசி அனுமன் பள்ளி கிராமம், கள்ளகவுண்டன்பாளையம் கிராம ஆதிதிராவிட மக்களுக்குப் பாதை வசதிக்காக முகாசி அனுமன்பள்ளி கிராம ரீ.ச.328/7, 325/1, 278/5 மற்றும் 279/8 ஆகிய புலங்களில் 0.21.5 ஹெக்டேர் நிலங்களில் எடுக்கப்பட்ட நிலமெடுப்பு நடவடிக்கையினை எதிர்த்து நில உடமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளில் வழங்கப்பட்ட பொதுத் தீர்ப்பின்படி மீண்டும் தமிழ்நாடு நிலமெடுப்புச் சட்டம் 31/78-ன்படி நிலமெடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டு 31-12-1997 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டது. மீண்டும் இந்நிலமெடுப்பு நடவடிக்கையிலும், சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.18872/97 நாள் 28-1-1998-ல் நில உடமையாளர்களால் சுவாதீனம் பெற தடை பெறப்பட்டது. (Dispossesssion Stay) எனவே, நிலமெடுப்பு செய்யப்பட்ட நிலத்தை கையகப்படுத்த இயலவில்லை.

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், முகாசி அனுமன்பள்ளி கிராமம், கள்ளகவுண்டன்பாளையம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வழித்தடம் ஏற்படுத்திக் கொடுக்க இந்நேர்வில் சம்பந்தப்பட்ட வழக்கினை முன்கூட்டியே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள ஆவன செய்ய அரசு வழக்குரைஞருக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த 22-1-1999-ல் ஈரோடு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிறப்பு வழக்குரைஞரைச் சந்தித்தபோது "தடை நீக்கம் செய்யக்கோரும் மனு" (Petition for Vacating Stay) தயார் செய்து 27-10-1998-ந் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

[2000 மே 18

இந்நேர்வில் சம்பந்தப்பட்ட வழக்கினை உடனடியாக விசாரணைக்கு எடுத்துத் தீர்ப்பினை பெறக் கோரி, சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்குரைஞருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. தடையாணையை நீக்கம் செய்ய ஆவன செய்யுமாறு அரசு வழக்குரைஞர் நேரிலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஆகையால் இந்நேர்வில் மேற்படி (ரிட் மனு எண். 18872/97) வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில்தான் பல ஆண்டுக் காலமாகப் பாதை வசதி இல்லாமல் அவதிப்பட்டு வரும் கள்ளகவுண்டன்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்குப் பாதை வசதி அளிக்க மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(XXXVIII) தஞ்சை மாவட்டம்-கும்பகோணம் வட்டம்-திருவிடைமருதூர் ஒன்றியம்-பருத்திச்சேரி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மயானப் பாதை இல்லாமையினால் அப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. செ. இராமலிங்கம்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு**
(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)

## அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், பருத்திச்சேரி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மயானப்பாதை வசதி செய்து கொடுக்க சர்வே எண். 102/1 மற்றும் 0-74-5 ஹெக்டேர்ஸ் நிலத்தைத் தேர்வு செய்து மயானப்பாதை வசதி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**(XXXIX) தமிழக மீனவர்கள் கச்சத்தீவு பகுதியில் மீன்பிடித்தபோது இலங்கை இராணுவத்தால் கைது செய்து இலங்கை சிறையில் அடைக்கப்பட்டு காவலிலிருக்கும்போது திரு. வெள்ளைசாமி ராஜா மாரடைப்பால் மரணம் அடைந்தது குறித்து**

உறுப்பினர்கள்: **(அ) திரு. வை. சிவபுண்ணியம்**
**(ஆ) திரு. ஜி. நிஜாமுதீன்**
**(இ) திரு. பி. வெங்கடசாமி**
**(ஈ) திரு. சி. ஞானசேகரன்**



2000 மே 18]

அமைச்சர்: **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்**
(மீன் வளத் துறை)

## அறிக்கை

இராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து 19.02.2000 அன்று ஆர்.எம்.எஸ். 2381 மற்றும் ஆர்.எம்.எஸ். 3009 ஆகிய இரண்டு மீன்பிடி விசை படகுகளில், ஒவ்வொரு படகிலும் 4 மீனவர்கள் வீதம் 8 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கை மீனவர்களுடம் ஏற்பட்ட மோதலின் காரணமாக இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு படகுகளுடன் கொண்டு செல்லப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களை படகுகளுடன் விடுவிக்க இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் மூலம் உடனே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கையிலுள்ள இந்திய தூதரகமும் இலங்கை அரசு அலுவலர்களைத் தொடர்ந்து தொடர்பு கொண்டு மேற்குறிப்பிட்ட 8 மீனவர்களையும் இரண்டு படகுகளையும் விடுவித்து தமிழகத்துக்கு அனுப்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வந்துள்ளது. இந்த 8 மீனவர்களும் இரண்டு படகுகளுடன் விரைவில் தமிழகம் அனுப்பப்படுவார்கள் என்று இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் 9-3-2000 அன்று தெரிவித்தது.

2. இதற்கிடையில் 28-3-2000 அன்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து பெறப்பட்ட பேக்ஸ் செய்தியின்படி ஆர்.எம்.எஸ்.3009 என்ற மீன்பிடி விசைப் படகில் சென்று இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள 4 மீனவர்களில் ஒருவரான திரு. வெள்ளைச்சாமி ராஜா என்பவர் 27-3-2000 அன்று நள்ளிரவில இலங்கையில் அரசு மருத்துவமனையில் மாரடைப்பினால் திடீரென இறந்து விட்டதாகவும் அவரது உடல் அங்கேயே வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, இறந்த மீனவரின் இறுதிச் சடங்குகளுக்கு ஏற்பாடு செய்வது குறித்துத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. உடனே இறந்த மீனவரின் மனைவி மற்றும் உறவினர்களைச் சந்தித்து இறுதிச் சடங்குகள் செய்வது குறித்து அறிந்து தகவல் தெரிவிக்குமாறு இராமேஸ்வரம் மீன் துறை மண்டல உதவி இயக்குநருக்கு 28-3-2000 அன்று அறிவுரை வழங்கப்பட்டது.

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [2000 மே 18

3. அதன்படி, இறந்த மீனவரின் மனைவி திருமதி எல்டா மேரி 29-3-2000 அன்று காலை 08-30 மணியளவில் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தார். தனது கணவரின் உடலை இராமேஸ்வரத்தில் ஒப்படைக்குமாறு கேட்டு, இராமேஸ்வரம் மண்டல மீன் துறை உதவி இயக்குநரிடம் முதலில் விண்ணப்பம் சமர்ப்பித்தார். பின்னர் தனது உறவினர்களுடன் இலங்கைக்கே சென்று, தனது கணவரின் இறுதிச் சடங்குகளை இலங்கையிலேயே நிறைவேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தார். அதனடிப்படையில் சென்னை மீன் துறை இயக்குநர் இலங்கையில் உள்ள இந்திய தூதரக அலுவலர் திரு. கே.பி. கோகுல சந்திரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பின்னர் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து பெறப்பட்ட தகவலின் படி இறந்த மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடலை விமானம் மூலமாக 31-3-2000 (வெள்ளிக்கிழமை) அன்று கொழும்பிலிருந்து திருச்சி விமான நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

4. மேற்காணும் தகவல்களை இராமேஸ்வரம் வந்துள்ள இறந்த மீனவரின் மனைவி திருமதி எல்டா மேரியிடம் தெரிவித்து இறுதிச் சடங்குகளை இராமேஸ்வரத்திலோ அல்லது அவரது சொந்த ஊரிலோ செய்வதற்கு அவரது விருப்பத்தைப் பெற்று அனுப்புமாறு இராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

5. இறந்த மீனவரின் மனைவி திருமதி எல்டா மேரி தனது கணவரின் உடலை தனது சொந்த ஊரான கோவில்பட்டிக்குக் கொண்டுச் சென்று இறுதிச் சடங்குகளை அங்கேயே செய்வதற்கு விருப்பம் தெரிவித்தார். அதன்பேரில் இறந்த மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடலை ஏற்கனவே தெரிவித்துள்ளபடி இலங்கையிலிருந்து திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து 29-3-2000 அன்று பிற்பகல் பெறப்பட்ட தகவலின்படி இறந்த மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடல் ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கொழும்பில் இருந்து 31-3-2000 அன்று பகல் 12-40 மணிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அந்த விமானம் திருச்சிராப்பள்ளிக்கு அன்று பிற்பகல் (இந்திய நேரப்படி) 01-10 மணிக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது.



2000 மே 18] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

6. எனவே, திருச்சி விமான நிலையத்திற்கு 31-3-2000 அன்று பிற்பகல் 1-10 மணிக்கு வந்து சேரும் இறந்த மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடலை பெற்றுக் கொள்வதற்கும் அதனை அவரது மனைவியின் விருப்பப்படி தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்காக அனுப்பி வைப்பதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்துத் தருமாறு கேட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பேக்ஸ் செய்தி மீன்துறை இயக்குநரால் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மண்டல மீன் துறை உதவி இயக்குநர்கள் 30-3-2000 அன்று திருச்சிக்கு வந்து திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து, 31-3-2000 அன்று திருச்சி விமான நிலையத்திற்கு கொழும்பிலிருந்து வரும் இறந்த மீனவரின் உடலை பெற்று கோவில்பட்டிக்கு அனுப்பி வைப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறும் அறிவுரை வழங்கப்பட்டது.

7. இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் 30-3-2000 அன்று பிற்பகல் சென்னை மீன் துறை இயக்குநருக்கு அனுப்பிய பேக்ஸ் செய்தியில், கொழும்பிலிருந்து ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் விமானம் மூலம் இறந்த மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடலை 31-3-2000 அன்று திருச்சிராப்பள்ளிக்கு அனுப்புவதை உறுதி செய்துள்ளது.

8. மேற்கண்ட ஏற்பாடுகளின்படி 31-3-2000 அன்று பிற்பகல் 1-15 மணிக்கு ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் விமானம் மூலம் தனிப்பெட்டகத்தில் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் வந்து இறங்கிய மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில் இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மண்டல மீன்துறை உதவி இயக்குநர்கள் பெற்றுக் கொண்டனர். பின்னர் உரிய ஆவணங்களின் பரிசீலனைக்குப் பின் மீனவர் வெள்ளைச்சாமி ராஜாவின் உடல், அவரது மனைவியின் விருப்பப்படி, அன்று பிற்பகல் 3-15 மணிக்கு அமரர் ஊர்தியில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டிக்கு அருகிலுள்ள இலுப்பையூரணி கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு, 31-3-2000 அன்று இரவு 9-45 மணியளவில் இலுப்பையூரணி கிராமத்தில் நல்லடக்கம் செய்து இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன.

9. எனவே, இராமேஸ்வரம் பகுதியில் தற்போது மீனவர்களிடையே பதட்டமான சூழ்நிலை ஏதும் நிலவவில்லை.

10. தமிழ்நாட்டின் மீன்பிடித் தளங்களிலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்று பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இலங்கை

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [2000 மே 18

கடற்படையால் கைது செய்யப்பட்டு, தற்போது இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் படகுகளின் விவரம் வருமாறு:—

**மீட்கப்பட வேண்டிய மீனவர்கள் மற்றும் படகுகள்**

| வ. எண். | மீனவர்கள்/ படகுகள் பிடித்து காவலில் வைக்கப் பட்ட நாள் | படகு எண். | காவலில் உள்ள மீனவர்களின் எண்ணிக்கை. | மீட்கப்பட வேண்டிய படகுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 3-5-1999 | ஆர்.எம்.எஸ்.1861 | 0 | 1 |
| 2. | 5-7-1999 | ஆர்.எம்.எஸ்.57 | 0 | 1 |
| 3. | 19-2-2000 | ஆர்.எம்.எஸ்.2381 | 4 | 1 |
| 4. | 19-2-2000 | ஆர்.எம்.எஸ்.3009 | 3 | 1 |
| 5. | 21-2-2000 | வி.ஓ.சி.3370 | 4 | 1 |
| 6. | 12-3-2000 | ஆர்.எம்.எஸ்.125 | 3 | 1 |
| 7. | 31-3-2000 | க்யூ.டி.எம்.2911-சி | 3 | 1 |
| | | மொத்தம் | 17 | 7 |

11. இலங்கையில் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள 17 மீனவர்களையும் படகுகளையும் விடுவித்து தமிழகம் அழைத்து வருவதற்கு இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் மூலம் இலங்கை அரசு அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டுத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்களையும் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கை அரசைத் தொடர்பு கொண்டு மீனவர்களையும் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு 30-3-2000 அன்று நேர்முகக் கடிதம் எழுதி பேக்ஸ் செய்தி மூலம் வேண்டுகோள் அனுப்பியுள்ளார்.



2000 மே 18]

## 3. அரசினர் தீர்மானம்

### (அ) விதி 33-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ளும் பொருட்டு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்த வேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழிவார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[2000 மே 18

## (ஆ) விதி 30(3)-ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிகழ்ச்சி நிரலில் இனங்கள் மாற்றம் குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30(3)-ஐத் தளர்த்தி, இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'இனம் 7, அவசரப் பொருள் குறித்த 1 மணி நேரத்திற்கு மேற்படாத குறுகியகால விவாதம்', என்ற இனத்தை இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'இனம் 1, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்' என்ற இனத்திற்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து 1 மணி நேரத்திற்கும் மேற்படாத குறுகியகால விவாதம் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாக நிறைவேறாமல் நிலுவையில் உள்ளது குறித்து... (குறுக்கீடு)



2000 மே 18]

## 4. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்த முன்னறிவிப்பு

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I raise a Point of Order, Hon. Speaker Sir. நான் பேரவை விதி 172-ன்கீழே ஒரு தீர்மானத்தை 20.4....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** It will be taken up. Please sit down. I will mention it. You should have come to my chamber. You should not do like this. You should have come to my chamber and asked me what has happened to it. Please sit down.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சேம்பரிலே வந்து ஒரு லெட்டர் கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No. You must come and see me in the Chamber. Please sit down.

## 5. நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்த ஒரு மணி நேரத்திற்கும் மேற்படாத குறுகிய கால விவாதம்— கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை குறித்து ஒரு மணி நேரத்திற்கு அதிகப்படாத ஒரு விவாதம். இந்த நீர் வந்துவிட்டது என்பதால் ஒரு முறையில் இந்த விவாதம் தேவையா என்றுகூட நினைத்தேன். இருந்தாலும், நான் ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் இதை எடுக்கத்தான் வேண்டும் என்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று டெல்லிக்குப் பயணம் ஆகின்றார்கள். காரணம், கேரளத்திலும், கர்நாடகத்திலும் நமக்கு எதிர்பார்த்த நல்ல முடிவு, நீரைப் பொறுத்தவரையில் கிடைக்கவில்லை. ஆந்திரமாவது நம்மோடு நல்ல வகையிலே ஒத்துழைப்புச் செய்கின்றார்கள். ஆகவே, அதற்குப் பங்கம் ஏற்படாத வகையில் மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேச அழைக்கின்றேன். உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுக்கப்படும். மற்ற உறுப்பினர்களுக்கு 30 நிமிடங்கள். இறுதியாக அமைச்சருக்கு 20 நிமிடங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள்.

*முற்பகல் 9-35*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்திருப்பது பற்றி எங்களுக்கு இருக்கிற ஐயப்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதற்கு முன்பாகச் சில வார்த்தைகளைப் பேசுவதற்கு உங்களுடைய மேலான அனுமதியை நான் எதிர்பார்க்கிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியாகவும், ஆளுங்கட்சியாகவும் நாம் பழகி, அதனை வெளிப்படுத்துகிற மாதிரி ஒரு திருக்குறளை நீங்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். இந்தச் சட்டமன்றப் பேரவையிலே பல துறைகளிலே சாதனைகளையும், பல துறைகளிலே தோல்விகளையும் நாம் சந்தித்திருக்கிறோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், குடிநீர் வடிகால் வாரியம், கைத்தறி போன்ற துறைகளிலே நாம் பெரிய சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று சொல்வதிலே எனக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றிலே முழுமையான வெற்றியை நாம் ஈட்டமுடியவில்லை என்றாலும்கூட, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரவர்கள் முதலிலே அந்தத் துறையைப் புரிந்துகொண்டு, அவற்றிலே வெற்றி பெற வேண்டுமென்ற வேகத்தோடு செயல்பட்டார்கள் என்பது எனக்கு மிகுந்த மன மகிழ்ச்சியை அளிக்கிறது. அதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சில துறைகளில் மாபெரும் தோல்விகளை இந்த அரசாங்கம் சந்தித்திருக்கிறது என்பதனையும் நாம் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். எந்தெந்தத் துறைகள் என்பது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும். ஆளும்கட்சியைப் பொறுத்தவரையில், நீங்கள் ஒரு சிறந்த ஆட்சியாளர்களாக இல்லாவிட்டாலும்கூட, சிறந்த நண்பர்களாகப் பழகினீர்கள் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. பல அமைச்சர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு, வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்டு, மிகவும் நட்போடு பழகி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதனையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக பேரவைத் தலைவரை பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். ஒரு சிறந்த பேரவைத் தலைவராக நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் செயல்பட்டிருக்கிறார்கள். நான் அடிக்கடி சொல்வதுண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ** நீங்கள் இருந்திருக்கிறீர்கள் என்பதனை நான் பல நேரங்களிலே சொல்லியிருக்கிறேன்.



அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்கூட எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் ஒவ்வொரு விவாதத்தின்போதும் அவரைவிட 'ஸ்கோர்' பண்ணிவிட வேண்டுமென்கிற ஆவலிலே நாங்கள் விவாதங்களைச் செய்திருக்கிறோம். ஆனால் முதலமைச்சருடைய நீண்ட அனுபவம், அவருடைய திறமை, அவருக்கு இருக்கிற பல்வேறு வசதிகளின் காரணமாக ஒவ்வொரு முறையும் அவர்தான் 'ஸ்கோர்' செய்திருக்கிறார் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அறியாமல் இல்லை. ஆனாலும்கூட, அவரோடு போட்டியிட்டு ஒரு 'வின்னர்' சான்றிதழ் வாங்கமுடியவில்லை என்றாலும்கூட, ஒரு 'ரன்னர்' சான்றிதழ் வாங்குவதேகூட ஒரு பெருமை என்பதனை நான் நன்றாக உணர்கிறேன். ஒவ்வொரு முறையும் முதலமைச்சரோடு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற கருத்துப் பரிமாற்றங்கள் என்பது ஒரு சிறந்த ஆக்கபூர்வமான, எதிர்க்கட்சிக்கு உரிய கருத்துப் பரிமாற்றங்களாகவே நாங்கள் கருதியிருக்கிறோம் என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

அரசாங்கம் பல்வேறு துறைகளிலே தோல்விகளைச் சந்தித்திருக்கிறது. அவற்றையெல்லாம் நாங்கள் பல காலங்களிலே எடுத்துச்சொல்லி இருக்கிறோம். அவற்றையெல்லாம் வருகின்ற இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாகவாவது அரசாங்கம் சீர்செய்து, சரி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஒரு முன்னுரை கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்ற ஐயம் சிலபேருக்கு எழலாம். எனக்கிருக்கிற ஐயம் எல்லாம் அடுத்த கூட்டத்தொடர் நடக்குமா அல்லது அதற்குள் தேர்தல் வந்துவிடுமா? முதலமைச்சர் மனதிலே என்ன நினைத்திருக்கிறார் என்பது தெரியவில்லை என்கிற காரணத்தினால்தான் இந்த ஒரு முன்னுரையைக் கொடுப்பதற்கு நான் ஆசைப்பட்டேன் என்பதனை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

---

**உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் நீக்கப்பெற்றது.

கிருஷ்ணா குடிநீரைப் பொறுத்தவரையில், இது ஒரு கன்னித் தீவு போல எங்களுக்கு மர்மமாகவே இருக்கிறது. நாங்களும் நீண்டகாலமாக அது எங்கிருந்து வருகிறது? எப்போது வரும் என்கின்ற கேள்வியை நான்கு ஆண்டுகாலமாக இந்தப் பேரவையிலே கேட்டு வருகிறோம். அமைச்சர் கெட்டிக்காரர். ரொம்பவும் அழுத்தமானவர். இதுவரை எங்களிடம் அவர் ** சொல்லியது கிடையாது. ஒருசமயம் முதலமைச்சரிடம் சொல்லி இருக்கலாம்; அல்லது அமைச்சரவைக் கூட்டத்தில் சொல்லி இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** சொன்னது கிடையாது என்பது சரியல்ல.

**திரு. ச. அழகிரி:** ** சொல்கிறார் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியல்ல. சரியான தகவல் சொல்லவில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள். ** சொன்னது கிடையாது என்று சொல்வது, அது அவ்வளவு நன்றாக இருக்காது.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. முதலில் ** என்று சபாநாயகரைச் சொன்னார். ** என்ற சொல்லை சபாநாயகருக்குப் பயன்படுத்தக்கூடாது. ** என்று கருத்து வருகிறது. அது சபாநாயகருடைய தனித் தகுதிக்குக் குறைபாடு. அந்தச் சொல்லை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை முன்னவர் சொன்னபிறகு நான் அதிலே விவாதம் செய்ய விரும்பவில்லை. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதில் எனக்கு ஒன்றும் இல்லை. உங்களுக்குக் கருத்துச் சுதந்திரம் கொடுக்கிறேன். நீங்கள் இந்த விவாதத்தைத் தொடங்கி வைப்பீர்கள் என்று உங்களுக்கு 10 நிமிடம் என்று சொன்னேன். இப்பொழுதே 7 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் கிருஷ்ணாவே வரவில்லை. எப்போது நீங்கள் ஆரம்பிக்கப் போகிறீர்கள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எப்போது முடிக்கப் போகிறீர்கள் என்று கொஞ்சம் சொல்லுங்கள். ஏனென்றால் நான் உங்களுக்குச் சலுகை கொடுத்துவிட்டேன் என்று அடுத்த உறுப்பினர் என்னிடம் வருத்தப்படக் கூடாது. 9-34-க்கு ஆரம்பித்தீர்கள், 9-45-க்குள்ளாகவாவது முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கடைசி நாள். இதிலே ஒன்றும் காலக்கெடு எல்லாம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலக்கெடு எல்லாம் இல்லை என்பது அல்ல. எனக்கு 21 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நான் குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பெயர்கள் அறிவிக்க வேண்டும். 3, 4 தீர்ப்புகள் கொடுக்க வேண்டும். நீங்கள் நாள் பூராவும் உட்காரத் தயாராக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் எல்லோரும் அப்போதைக்கப்போது போய்விடுகிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சர்தான் கடைசி வரையிலும் உட்கார்ந்து இருப்பார்கள். நடுவில் பாதிப் பேர் காணாமல் போய்விடுகிறீர்கள். ஆகையினால், அழகிரி, 9-45-க்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உறுதியாக நம்புகிறோம். கிருஷ்ணா நதிநீர் இதுவரை சென்னைக்கு வரவில்லை என்பதுதான் எங்களுடைய உறுதியான கருத்து. நான் இதிலே அதிகம் விவாதம் செய்ய விரும்பவில்லை. நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு பத்திரிகைகளில் எல்லாம்கூட அமைச்சருடைய சிரிக்கிற படம் வந்திருக்கிறது. கண்டலேறுவிலிருந்து வந்திருக்கிற தண்ணீர் எப்படி கிருஷ்ணா நதி தண்ணீராக இருக்க முடியும் என்பது எங்களுடைய கேள்வி. கண்டலேறே வற்றிக் கிடக்கின்றது. அதிலே 6 டிஎம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதிலே 5 டிஎம்.சி. தண்ணீர் சகதி. மீதி 1 டிஎம்.சி. தண்ணீர்தான் வந்திருக்கிறது. 15 டிஎம்.சி. தண்ணீர் தொடர்ந்து வந்தாலே அதிலே 3 டிஎம்.சி. தண்ணீர் நீராவியாகிவிடும் என்று சொல்கிறபோது 1 டிஎம்.சி. தண்ணீர் இப்போது திறந்துவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதிலே 0.2 டிஎம்.சி. தண்ணீர் ஆவியாகிவிடுகிறது 1 டிஎம்.சி. தண்ணீரிலேயே. எனவே வந்திருக்கிற தண்ணீர் எவ்வளவு? நம்முடைய ஒப்பந்தத்தின் பிரகாரம் 4 டிஎம்.சி. வாட்டராக 3 முறை வாங்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அப்படி இருக்கிறபோது இப்போது ஏன் 1 டிஎம்.சி. தண்ணீர் வாங்கினீர்கள் என்பது என்னுடைய கேள்வி. "நாங்களும் தொடர்ந்து பதில் சொல்கிறோம்; நீங்களும்

தொடர்ந்து இதுபோலவே மறுத்துக் கொண்டிருக்கிறீர்களே, இது நியாயமா" என்று நீங்கள் கேட்கலாம். விதி 55-ன்கீழ் தீர்மானம் கொண்டு வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் ஒரு கற்பழிப்பு சம்பந்தமாகவோ, ஒரு கொலை சம்பந்தமாகவோ, ஒரு போலீஸ் தகராறு சம்பந்தமாகவோ அறிக்கை படிக்கிறார்கள் என்றால் காவல் துறை அதிகாரிகள் எழுதிக் கொடுத்திருப்பதை அவர் படிக்கிறார். அப்படிப் படிக்கிறபோது முதலமைச்சர் தெளிவாகச் சொல்லுவார். நான் அதிகாரிகள் எழுதிக் கொடுத்திருப்பதைத்தான் படிக்கிறேன். எனவே, இதை 100% உண்மை என்று சொல்ல முடியாது. இதிலே குறைபாடுகளும் இருக்கலாம் என்று முதலமைச்சர் ஒரு முன்னுரை சொல்லிவிட்ட காரணத்தினாலேயே பல விஷயங்கள் தீர்ந்து போய் விடுகின்றன. விவாதம் இல்லாமல் போய்விடுகிறது. ஏனென்றால் முதலமைச்சருக்கே அதிலே நம்பிக்கை கிடையாது. இதிலே கொஞ்சம் தவறும் இருக்கலாம் என்கின்ற எண்ணம் அவர்களுக்கு உண்டு.

அதேபோல, இந்த கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினையிலே தமிழக அரசைப் பொறுத்தவரையிலே நாங்கள் மிகவும் சிரமப்படுகிறோம்; நாங்கள் பல முயற்சிகள் எடுத்திருக்கிறோம்; இருந்தாலும் கிருஷ்ணா நதிநீர் வருவதிலே இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன; இன்னின்ன இடங்களிலே கால்வாய்கள் வெட்டவில்லை என்றெல்லாம் நீங்கள் ஆரம்பத்திலேயே சொல்லியிருப்பீர்களேயானால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நீங்கள் அடித்துப் பேசி, உங்களுக்கு இருக்கிற சொல்லாற்றலின் காரணமாக கிருஷ்ணா நீர் வந்துவிட்டது, கிருஷ்ணா நீர் வந்துவிட்டது என்று சொன்ன காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை அதிகமாக ஆகியிருக்கிறது. ஆரம்பத்திலேயே நீங்கள் எங்களுக்குத் தெளிவுபடுத்தியிருப்பீர்களேயானால் அல்லது — எனக்கு என்ன வார்த்தை போடுவது என்று தெரியவில்லை — உண்மையை நீங்கள் சொல்லியிருப்பீர்கள் என்றால் — இந்த வார்த்தைதான் எனக்கு வருகிறது — இந்தப் பிரச்சினை வந்திருக்காது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு எங்களுடைய தொடர் முயற்சியின் காரணமாக அமைச்சரிடமிருந்து ஒரே ஒரு உறுதிமொழியைப் பெற்றோம். 13 கிலோமீட்டருக்குக் கால்வாய்கள் வெட்டப்படவில்லை என்கின்ற ஒரு உண்மையைச் சொன்னீர்கள். ஆனாலும் நீங்கள் சொன்னீர்கள். கால்வாயை வெட்டாமலேயே தண்ணீர் வரும் என்று சொன்னீர்கள். அது ஒரு பெரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு. 'நியூட்டனுடைய' விதிகளுக்குப் பிறகு 'துரைமுருகன் 'விதி' என்றுகூட அதனைச் சொல்லலாம். கால்வாயை வெட்டாமல் தண்ணீரைக் கொண்டுவர முடியும் என்று சொன்ன ஓர் அற்புதமான விதியை நியூட்டனுடைய அந்த விஞ்ஞான விதிக்கு இணையாக நான் ஏற்றுக்கொள்கின்றேன். அது எப்படி சாத்தியம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவே நான் இந்த விவாதத்தைத் தொடர்ந்து கொண்டு போகாமல் ஒரே ஒரு உத்தரவாதத்தை உங்களிடமிருந்து கேட்கிறேன்.



*முற்பகல் 9-45*

சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு கூட்டுக் குழுவை அழைத்துக்கொண்டுபோய் ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டிவரை இருக்கின்ற பகுதியைப் பார்வையிடுவதற்கு நீங்கள் எங்களை அனுமதிப்பீர்களேயானால், அதற்கான உத்தரவாதத்தைக் கொடுப்பீர்களேயானால், இந்த கிருஷ்ணா வாட்டர் வருகிறதா இலையா என்கின்ற மர்மமே தீர்ந்துவிடும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால், அதற்கு அரசு ஒத்துக்கொள்ளவில்லை. (மணியடிக்கப்பெற்றது). எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்குச் சில உண்மைகளைத் தெரியச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல; அது பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமையும் கூட. ஏனென்றால், அவையிலே பல உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பல்வேறு உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்திலே, கிருஷ்ணா நீர் வரவில்லை என்கின்ற ஐயப்பாடு இருக்கிறபோது, இந்தக் கிருஷ்ணா நீர் வந்திருக்கிறதா, இல்லையா என்கின்ற உண்மையைக் கண்டறிந்து எங்களுக்குச் சொல்ல வேண்டிய உரிமை உங்களுக்கு இருக்கிறது; கடமை உங்களுக்கு இருக்கிறது. எனவே, இதிலே பல்வேறு விதமான இடர்ப்பாடுகள் ஆரம்பகாலத்திலிருந்தே இருக்கிற காரணத்தினால் நீங்கள் ஒரு கூட்டுக் குழுவை நியமித்து அந்தக் கூட்டுக் குழு சென்று கிருஷ்ணா நதி நீர் வருகின்ற பகுதிகளையெல்லாம் பார்த்து, எந்தெந்தப் பகுதிகளிலே வாய்க்கால்கள் வெட்டவில்லை, எங்கெங்கே தடைகள் இருக்கின்றன என்பதை நாங்கள் பார்த்த பிறகுதான் கிருஷ்ணா நீர் வந்திருக்கிறது என்கின்ற அமைச்சருடைய உத்தரவாதத்தை, உறுதிமொழியை, வார்த்தையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியும். அமைச்சர் பலமுறை கேட்பார், வாய்க்கால் வெட்டவில்லையா...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். நான் 9-45 வரை என்று சொன்னேன். ஆனால் நீங்கள் இப்போது 9-46-க்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்திற்குள் உரையை முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** "வாய்க்கால் வெட்டவில்லையா, எந்த இடத்திலே வெட்டவில்லை என்று உங்களால் சொல்ல முடியுமா" என்று கேட்பார். எப்படி எங்களால் சொல்ல முடியும்? எங்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. அவ்வளவுதான். வாய்க்கால் வெட்டவில்லை என்பதை நாங்கள் போய்ப் பார்க்கவில்லை. நீண்டகாலமாகத் தண்ணீர் வரவில்லை என்றவுடன், அதிலே சந்தேகம் வந்துவிட்டது. எனவே, சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டியது உங்களுடைய பொறுப்பேயொழிய எந்த இடத்திலே வாய்க்கால் வெட்டப்படவில்லை என்பது உறுப்பினர்களுக்குத் தெரியாது என்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு "எந்தெந்த இடங்களிலே வெட்டவில்லை, எந்தெந்த இடங்களிலே வெட்டவில்லை உங்களால் சொல்ல முடியுமா" என்று கேட்பது ஓர் அமைச்சருக்கு அழகாக எனக்குத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சர் அவர்களோ அல்லது பேரவைத் தலைவர் அவர்களோ, உறுப்பினர்கள் அடங்கிய ஒரு கூட்டுக் குழுவை நியமித்து கிருஷ்ணா தண்ணீர் வருகின்ற அந்தப் பகுதிகளை நாங்கள் பார்வையிடுவதற்கான ஒரு வாய்ப்பை நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நீர் ஒப்பந்தப்படி எப்போது முழுமையாக வந்து சேரும் என்பதுதான் இப்போது தமிழ்நாட்டில் ஒரு பூதாகரமான கேள்வியாக எழுந்திருக்கிறது. கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருகிற முயற்சி ஒரு பகீரதத்தனமாக 120 ஆண்டுகாலமாக நடந்து வருகிறது.

1881-லே சர் ஆர்தர் காட்டன் தொடங்கி வைத்த அந்த முயற்சி இன்றைக்கு வரையிலும் பெரும் கனவாகவே நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு முழுச் செயல் வடிவம் கிடைப்பதற்கான முயற்சி எப்படிப் புராண கங்கைக்கு ஒரு பகீரதன் இருந்தானோ அதுபோலத் தெலுங்கு கங்கைக்கு பல பகீரதர்கள் இருந்து, அது முழுமை அடைவதற்குரிய பல்வேறு கட்டங்களில், மட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும், அது முழுமையடையவில்லை என்பதைத்தான் நாம் இப்போதும் பார்க்கிறோம்.

நான், கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வருவது குறித்த பிரச்சினைக்கு முன்னால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் ஓர் அபாய அறிவிப்பைத் தன்னுடைய மானியக் கோரிக்கையிலேயே



தெரிவித்திருக்கிறார்கள். கிருஷ்ணா நதியிலிருந்து கிடைக்கும் 12 டிஎம்.சி. நீரைப் பெற்றாலும் 2021 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகரத் தேவையை முழுவதும் பூர்த்தி செய்ய இயலாது. அன்றைக்கும் அது 600 மில்லியன் லிட்டர் பற்றாக்குறையாகத்தான் இருக்கும் என்ற ஓர் அபாய அறிவிப்பு கொள்கை விளக்கக் குறிப்பிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்லாமல், இப்போது சென்னைக்குக் குடிநீர் சப்ளை செய்யக்கூடிய பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகிய மூன்று நீர்த்தேக்கங்களிலேயும் அவற்றினுடைய மொத்தக் கொள்ளளவு என்பது 7,412 மில்லியன் கன அடி. ஆனால் இன்றைய லெவலில் 1,859 மில்லியன் கன அடி தண்ணீர்தான் இருக்கிறது. இவை, எதிர்காலச் சென்னை மிகக் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்திற்கு, பற்றாக்குறைக்கு ஆட்பட்டுவிடும் என்பதற்குரிய ஆய்வுபூர்வமான அபாய அறிவிப்புக்களாக இருப்பதை நான் இங்கே மாநில அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்லாமல், வடகிழக்குப் பருவ மழையும் சரி, தென்மேற்குப் பருவ மழையும் சரி குறைந்திருக்கிறது தமிழ்நாட்டில். அதையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே ஓர் அபாய அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். 1,300 மில்லி மீட்டர் மழை பெய்திருக்க வேண்டிய நிலையில் வெறும் 608 மில்லி மீட்டர் மழைதான் பெய்திருக்கிறது என்பதும், எதிர்காலத்தில் சென்னை தன்னுடைய குடிநீர்த் தேவைகளை எப்படி நிறைவேற்றிக்கொள்ளப் போகிறது என்பது ஒரு மிகக் கடுமையான நெருக்கடியைத் தோற்றுவிக்கின்ற ஒரு கேள்வியாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த நிலையில் இந்தப் பிரச்சினை எவ்வளவு முக்கியத்துவமுள்ளது என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும். பருவ மழை குறைந்துவிட்டது. நிலத்தடி நீர் அபாயகரமான அளவை எட்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்ட கிருஷ்ணா தண்ணீர்—

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று அபாய அறிவிப்புக்களை அவர் அளித்துவிட்டார். ஆனால், நான் அபாய அறிவிப்பை மீண்டும் சொல்லப் போவதில்லை. ஆனால், எதிர்காலத்தில் தேவையான அளவுக்கு என்றால், ஒவ்வொருவருக்கும் 100 லிட்டர் கொடுக்க வேண்டும் என்ற

நிலை இல்லாமல், தட்டுப்பாடில்லாமல் வழங்குவோம் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்கப் போவதில்லை. இறுதியாக நான் சொல்லியிருப்பது இந்தப் பருவ மழை தொடங்குகிற வரை — முடிந்த வரை — நிச்சயமாக இந்தச் சென்னை மாநகர் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் காப்பாற்றப்படும் என்ற வாக்குறுதியும் அதில் தந்திருக்கின்றேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் வாக்குறுதிக்கும் அவருடைய பரிபூரண நம்பிக்கைக்கும் என்னுடைய நன்றி. அந்த முயற்சி வெற்றி பெற வேண்டும் என்ற நல்லெண்ண விளைவையும் நான் வெளிப்படுத்துகின்றேன். இங்கே நம்முடைய கிருஷ்ணா நீர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகின்றேன். இந்த ஒப்பந்தம் போடப்பட்டபோது 3 முதல் 6 ஆண்டுகளில் இது முடிக்கப்படும் என்றுதான் 18-4-1983-ல் ஒப்பந்தம் போடப்பட்டபோது ஒப்புக்கொள்ளப்பட்டது. 1983-லே போடப்பட்ட ஒப்பந்தப்படி 6 ஆண்டுகளிலே முடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றால் இப்போது 2000-ஐத் தொட்டுவிட்டது. அதுவும் அந்த ஒப்பந்தப்படி 236 கோடி இந்தத் திட்டத்திற்குச் செலவாகக் கூடும் என்று மதிப்பீடு செய்யப்பட்டதே, இப்போது மாநில அரசு இதுவரையிலும் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறது? அதேமாதிரி சென்னைக்குக் கொண்டு வருவதற்குரிய முழுக் கால்வாய்களில் எந்த இடங்களில் வெட்டப்படவில்லை? ஏன் வெட்டப்படவில்லை? அது எப்போது பூர்த்தியாகும்? இன்னும் நான் தெளிவாகக் கேட்க விரும்புவது ஒப்பந்தப்படி 15 டி.எம்.சி. தண்ணீர் என்றால், வழியோரச் சேதாரங்கள் போக சென்னை பூண்டிக்கு வந்து சேருகின்ற அந்தத் தண்ணீரின் அளவு என்ன? ஒப்பந்த ரீதியான முழுத் தண்ணீரும் எப்போது எந்தத் தேதியில் வந்து சேரும்? என்ற விவரங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கண்டலேறு நீர்த்தேக்கம் ஒப்பந்தப்படி 54 டி.எம்.சி. கொள்ளளவு கொண்டதாக இருக்கிறது. ஆனால், இப்போது கண்டலேறு நீர்த்தேக்கத்தில் எவ்வளவு கொள்ளளவு இருக்கிறது? அந்த 12 டி.எம்.சி. தண்ணீர் வருவதற்குரிய உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்கின்ற விஷயத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.



கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை நான் தெரிவித்து, முடிக்க விரும்புகிறேன். இந்த ஒப்பந்தப்படியான இந்தக் காலதாமதங்களின்மூலம் Revised Estimate போட்டு மேலும் நிதி அதிகமாகவே செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரையிலும் தமிழ்நாட்டின் சார்பில் செலவழிக்கப்பட்ட நிதி பற்றியும் ஆந்திர அரசு செய்ய வேண்டும் என்று ஒப்பந்த ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைகள் ஆந்திர மாநில எல்லைக்குள் செய்யப்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் நிச்சயமாகத் தெரிவிக்க வேண்டும் என்பதோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி சொன்னதைப்போல, இது பல்வேறு சந்தேகங்களையும், பல்வேறு அவநம்பிக்கைகளையும் தோற்றுவிக்கின்ற காரணத்தால் மாநில அரசு திறந்த மனதோடு, தன்னுடைய நிலை என்பது திறந்த புத்தகம் என்பதை வெளிப்படுத்துவதற்காக, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் ஆரம்பத்திலிருந்து பூண்டி வரையிலும் முழுமையாகப் பார்வையிட்டு அதைப் பற்றி ஒரு விரிவான அறிக்கையைத் தயாரிக்க ஏற்பாடு செய்வது நல்லது என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும். 10¼ மணிக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல ஆரம்பிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் பேச ஆரம்பித்தாலே சுருக்கம், சுருக்கம் என்பீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்தால் என்பதற்காக அல்ல. விவரங்களை உங்களுக்கு முன்னால் பேசிய இரண்டு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த விவரங்களைத் திரும்பவும் நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. அதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிருஷ்ணா... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏகப்பட்ட பேப்பரைக் கையில் வைத்திருக்கிறீர்களே, அதை வைத்துத்தான் சொன்னேன்.

*முற்பகல் 9-55*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்தக் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வந்துவிட்டது, வந்துவிட்டது என்று கடந்த 3 ஆண்டு காலமாக அவையிலும் சரி, வெளியிலும் சரி, மாநகராட்சித் தேர்தலிலே, மேயர் தேர்தலிலே அதைக் கூறி வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுவிட்டீர்கள். இந்தக் கிருஷ்ணா தண்ணீரானது சென்னைக்கு வரவில்லை என்பது தான் உண்மை. இதிலே நான் கேட்க விரும்புவது இது ஆந்திர அரசு சொல்கின்றபடி தெலுங்கு கங்கைத் திட்டமா அல்லது நம்முடைய அரசு கூறுகிறபடி கிருஷ்ணா நதிநீர்த் திட்டமா? தற்போது தண்ணீர் திறந்துவிட்டிருக்கக்கூடிய கண்டலேறுத் திட்டமா என்று தெரியவில்லை. இந்த முழுமையான கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால் 4 கட்டப் பணிகள் இதிலே நடைபெற வேண்டும். அதிலே 3 கட்டப் பணிகள் நடைபெற்று, இன்னும் அந்த முதல் கட்டப் பணிகள் நடைபெறவில்லை என்பதுதான் இப்போது உள்ள குற்றச்சாட்டு. அந்த முதல் கட்டப் பணிகள் நடைபெற்றால்தான் இது முடிவுறும். ஸ்ரீசைலம் என்ற இடத்திலிருந்து வடபெண்ணாறு என்ற பகுதிக்கு உட்பட்ட 200 கிலோமீட்டர் பரப்பில் நடைபெற வேண்டிய பணிகளைத்தான் முதல் கட்டப் பணிகள் என்று கூறுகின்றார்கள். அந்த முதல் கட்டப் பணிகளுக்கு உட்பட்ட ஸ்ரீசைலம் என்ற இடத்திற்கும் வடபெண்ணாறு என்ற இடத்திற்கும் இடையிலே வனகசாலா மதகு, வெலுக்கோடு அணை, அழகனேறு தடுப்பணை, சண்முகப்பள்ளி அணை என்ற அந்த 4 அணைகள் கட்டப்பட்டதாகவும், அதில் இணைக்கப்படுகிற கால்வாய்கள் இன்னும் வெட்டப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. குறிப்பிட்ட அந்தக் கால்வாய்களை வெட்டுவதற்காக அங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தாலே அந்தக் கால்வாய்கள் வெட்டப்படுவது தடைபட்டிருக்கின்றது. அமைச்சர் அவர்கள்கூட முன்பு 35 கிலோமீட்டர் என்று இருந்ததை, நாங்கள் எல்லாம் கூறினோம், தற்போது 13 கிலோமீட்டர் வெட்டப்படவில்லை என்று கூறியிருக்கின்றீர்கள். அதிலே உண்மை நிலைமை என்ன என்றால் அங்கே இருந்த நிலங்கள் எல்லாம், தற்போது 5 இலட்சம் ரூபாய்க்கு விலை போகின்றது. ஆகவே, ஆந்திர அரசுக்கு நாம் கொடுத்த ஆயிரம் கோடி ரூபாய் அந்த முதல் கட்டப் பணிகளுக்கு அவர்களால் செலவழிக்கப்பட வேண்டும். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எல்லாம் தேவையில்லாமல் பேசுகிறீர்கள். அடுத்த அரசு பற்றியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். இதெல்லாம் முறையற்ற பேச்சு. அவர் அந்தப் பணத்தை எப்படிப் பயன்படுத்தினார் என்று நீங்கள் எப்படி இங்கே பேச முடியும்? உங்களுடைய கருத்தை மட்டும் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதனால்தான் அந்தப் பணிகள் அங்கே தடைபட்டிருக்கின்றன. இங்கே முதல்வர் அவர்கள்கூடக் கூறினார்கள். அங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்துகின்ற காரணத்தினால்தான் அந்தத் தண்ணீரை அவர்கள் தடுத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அமைச்சர் அவர்களும் கூறியிருக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற விவசாயிகள் ஸ்ரீசைலத்திலேயிருந்து தண்ணீர் வருவதை எதிர்க்கவில்லை. ஸ்ரீசைலத்திலிருந்து தண்ணீர் வந்தால் அவர்கள் அதை எதிர்க்கவே மாட்டார்கள். வடபெண்ணாறு ஆற்றிலே தண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது. அப்படிக் குறைவாக இருக்கின்ற அந்தத் தண்ணீர் நமக்குத் திறந்துவிடப்பட்டால், தங்களுடைய பிரச்சினையே தீராது என்ற காரணத்தினால்தான் அவர்கள் அங்கே போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்களேயொழிய ஸ்ரீசைலத்திலிருந்து கால்வாய் வெட்டக்கூடாது என்பதற்காகவோ, அந்தத் தண்ணீர் இங்கே வரவேண்டாம் என்பதற்காகவோ காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்தவில்லை என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நீங்கள் பல முறை கூறியிருக்கின்றீர்கள், "கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டது, வந்துவிட்டது" என்று. அந்தக் கால்வாய் வெட்டும் பணிகள் முழுமையாக முடிவ்டைந்தால்தான் அந்தக் கிருஷ்ணா தண்ணீர் இங்கே வந்ததாக அர்த்தம். எனவே, நீங்கள் உடனடியாக ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டு, அந்தக் கால்வாய் வெட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இங்கே பல முறை கூறியிருக்கின்றீர்கள். "கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டது, வந்துவிட்டது" என்று. எப்படி முதல் கட்டப் பணி அங்கே தொடங்கப்படாமல் தண்ணீர் இங்கே வந்துவிடும்? நீங்கள் முன்புகூட, நேற்றைக்குக்கூட, " செங்குன்றம் ஏரிக்கு கிருஷ்ணா நதிநீரை அமைச்சர் அவர்கள் திறந்துவிட்டார்கள்" என்று கூறியிருக்கின்றீர்கள். பல புள்ளிவிவரங்களை எடுத்துக்கூறியிருக்கின்றீர்கள். வினாடிக்கு

*50 கனஅடி தண்ணீர் வரும் என்று கூறினீர்கள். அதனுடைய வேகம் வர வர அதிகம் ஆகும் என்று கூட கூறியிருக்கின்றீர்கள். ஆனால், உங்கள் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் — யார் என்று கேட்கக்கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் சீக்கிரம் பேச்சை முடிக்கிறீர்களா? இல்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கவா?*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *50 கனஅடி தண்ணீர் கண்டிப்பாக வர வரக் குறைந்துதான் போகும். ஏனென்றால் நிலம் காய்ந்திருக்கின்றது. காய்ந்திருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் ஆவியாகக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. நிலம் தண்ணீரை உறிஞ்சிவிடும். ஆகவே, அந்தத் தண்ணீர் மிகக் குறைவாகத்தான் வரும். அதுவும், மிகக் குறைந்த அளவுதான் இங்கே தண்ணீர் திறந்து விட்டிருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கூற்றுப்படி இன்னும் ஒரு மாதத்திற்கான தண்ணீர்த் தேவை பூர்த்தியாகிவிடும் என்று கூறியிருக்கின்றீர்கள். உங்களுடைய கூற்றுப்படியே சொன்னால்கூட, கண்டிப்பாக ஒரு மாதத் தேவையை இது பூர்த்தி செய்யாது. இன்னும் 2, 3 மாத காலத்திற்கு அந்தத் தண்ணீர்த் தேவையை எப்படி நீங்கள் தீர்த்து வைக்கப்போகிறீர்கள் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.*

*இறுதியாக நான் தெரிவிப்பது, உடனடியாக ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே சரியாகத் தன்னுடைய கவனத்தைச் செலுத்தவில்லை. இதற்கெனத் தனியாக ஓர் அமைச்சரை நியமிக்க வேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தார்மீகப் பொறுப்பேற்று இராஜினாமா செய்ய வேண்டும்.*

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right. *எடப்பாடி கணேசன். (குறுக்கீடு) உங்கள் கருத்தை முடித்தாகிவிட்டது. முக்கியமான கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. முடியாது. எடப்பாடி கணேசன். (குறுக்கீடு) நீங்கள் இப்பொழுது உட்காரவில்லையென்றால் உங்கள் பேச்சையே அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பேன், உட்காருங்கள்.*

**திரு. பி.ஆர். 'சுந்தரம்:** ஒரேயொரு...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒன்றும் கிடையாது. அமைச்சர் இராஜினாமா பண்ண வேண்டுமென்று சொல்லி விட்டீர்கள். அதோடு சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *ஒரேயொரு வரியிலே முடித்து விடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இன்னும் பேசினீர்கள் என்றால் அவைக்குறிப்பிலேயிருந்து உங்கள் பேச்சை எடுப்பேன். எடப்பாடி கணேசன்.*

**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-4-1983-வது ஆண்டு தமிழக அரசு இந்த ஒப்பந்தத்தை எவ்வாறு நிறைவேற்றியது; அதனுடைய சாதக பாதகங்கள் எப்படியெல்லாம் இருக்குமென்று நான் இந்த பட்ஜெட் உரையின்போதே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தேன். அப்பொழுது பலர் இதற்காக என்னிடத்திலே வருத்தத்தையும் எதிர்ப்பையும் சொன்னார்கள். உண்மையைச் சொல்பவர்களுக்கு இந்த எதிர்ப்பு வர நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று இந்த அரசியல் வரலாற்றிலே நாங்களும் கற்றிருக்கிறோம்.*

*இருப்பினும் இவ்வளவு சிறப்பான, இவ்வளவு கடினமான இந்தத் திட்டத்தை அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆந்திராவினுடைய முதல்வர் என்.டி.ஆர். அவர்களும் ஒரு நல்ல நோக்கத்திற்காக — இந்த ஒப்பந்தத்தை — அன்னை இந்திராகாந்தி அவர்களை வரவழைத்து, — சிறப்பான இந்தத் திட்டத்தை — நிறைவேற்றுவதற்காக அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. சென்னை மாநகரிலே இருக்கக்கூடிய சென்னைவாசிகளுக்கு எப்படியாவது குடிநீர் வழங்க வேண்டுமென்று அன்றைய முப்பெருந் தலைவர்கள் முயற்சியிலே போடப்பட்ட ஒப்பந்தம்; ஆனால் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குள்ளாக அந்த முப்பெருந் தலைவர்கள் இந்த மண்ணுலகத்திலேயிருந்து மறைந்து விட்டார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. ஐ. கணேசன்:** *இது எவ்வளவு கடினமான ஒரு வேலை என்பதை 18-4-1983-லேயே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள் என்று அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன். எவ்வளவோ சிரமங்களுக்கு*

மத்தியிலே, கிட்டத்தட்ட 152 கிலோமீட்டரைத் தாண்டி இன்று கிருஷ்ணா நீர் நம்முடைய தமிழக எல்லைக்கு வந்திருக்கிறது என்ற ஓர் இனிப்பான தகவ்லை — (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழ்நாடு அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு அளித்திருக்கக்கூடிய இந்த உறுதியை — ஒருசில நண்பர்கள் நம்பவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். எது எப்படியாக இருந்தாலும் சரி, இது அந்தக் காலத்திலே 1983-லே ரூ.720 கோடி ரூபாய்க்காகத் தீட்டப்பட்ட திட்டம். தமிழ்நாட்டின் பங்கு ரூ.200 கோடியாக இருந்து, முதல் தவணை ரூ.30.15 கோடியை அன்றே வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கியிருந்தாலும் இத்தனை ஆண்டு இடைவெளிகளுக்குப் பின்னால் — 17 ஆண்டு இடைவெளிகளுக்குப் பின்னால் — அதுவும் நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான்காண்டுகளில் எத்தனை இரவுகள், எத்தனை பகல் இந்தக் கிருஷ்ணா நதிநீருக்காகத் தொல்லையுற்றார்கள், துயரம் எடுத்துக் கொண்டார்கள்; இந்த அவையிலே மாற்றுக் கட்சியும், கூட்டணிக் கட்சிகளும் கேட்கக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் எப்படியெல்லாம், யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் எவ்வளவு பக்குவமாகப் பதிலைச் சொல்லி இன்று தண்ணீரை வரவழைத்து இருக்கிறார்கள் என்ற ஒரு சிறப்பான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இன்று ஆந்திராவிலே இதற்காக எவ்வளவு பெரிய எதிர்ப்பு - விவசாயிகள் எங்களுக்கு நிலத்திற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லக்கூடிய காலகட்டத்திலேகூட — ஆந்திராவின் முதல்வர், நம்முடைய கலைஞர் அவர்களைத் தலைவராக நான் ஏற்றிருக்கிறேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய சந்திரபாபு நாயுடு அவர்கள், எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு மத்தியிலே இன்று தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள் என்றால் அந்த சுந்தரத் தெலுங்கரை நாம் பாராட்ட வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ்நாடு பாராட்ட வேண்டாமா? சென்னைக்கு மட்டும் இந்தக் குடிநீர் வரவில்லையென்றால், கிருஷ்ணா நதித் தண்ணீரை அளிக்கவில்லை என்றால்.... (குறுக்கீடு)

*முற்பகல் 10-05*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் கோடி ரூபாய் வாங்கிக்கொண்டுதான் தண்ணீர் விடுகிறார்கள். இலவசமாக விட்டுவிடவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்வதுகூட, பல பேர் பணம் வாங்கிக்கொண்டு திருப்பிக் கொடுப்பதில்லை என்று. அதனால் அவர் பேசட்டும்; விட்டுவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஆயிரம் கோடி என்ன, பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் தண்ணீர் கொடுப்பதற்கு எந்த மாநிலம் தயாராக இருக்கிறது? கர்நாடகம் தயாராக இருக்கிறதா? கேரளம் தயாராக இருக்கிறதா? இல்லை எந்த மாநிலம்? பணத்திற்குத் தண்ணீர் என்பது இல்லை. நம்முடைய மானத்திற்காக, கலைஞருடைய சொல்லுக்காக, இந்தத் தண்ணீர் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போய் நான் பார்வையிடுகிறேன் என்று மாற்றுக் கட்சி நண்பர்கள் சொல்கிறார்கள் என்றால்...

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவர் பேசும்போதும் உங்களுக்கு என்ன point of order?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய கட்சியின் தலைவர், 'தமிழகம் ஏமாந்துவிட்டது, தண்ணீர் வரவில்லை' என்று ஏற்கெனவே ஒருமுறை பேட்டியில் சொல்லியிருக்கிறார். அதற்கு, கணேசன் என்ன சொல்லப்போகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எப்போதோ அப்படிச் சொல்லியிருக்கலாம். இப்போது என்ன?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர், இந்த மாதம் கிட்டத்தட்ட 12 அல்லது 13 ஆம் தேதி நம்முடைய தமிழக எல்லையை முத்தமிட்டதற்குப் பிறகும், அந்தத் தலைவர் அவர்கள் சொன்னார்கள் என்றால், எப்போது சொன்னார்கள் என்று... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் குறுக்கீடு எல்லாம் வேண்டாம். திரு. கணேசன், பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அவருடைய தலைவர் திரு. மூப்பனாரே 'தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது' என்று சொன்னதாகக் கூட ஒரு செய்தி இருக்கிறது. அதை அவர் மறுக்கமுடியுமா? எது எப்படியிருந்தாலும், ஆந்திரக் கிருஷ்ணன், சென்னை பாஞ்சாலிக்குத் தண்ணீர்ச் சேலையை காலத்திலே கொடுத்து, தமிழ்நாட்டினுடைய

மானத்தைக் காத்த, இந்தச் சென்னை மக்களுடைய தாகத்தைத் தீர்த்த, அந்த சந்திரபாபு நாயுடுவை அங்கே பல காங்கிரஸ்காரர்கள்; தேசியவாதிகள் எதிர்த்தபோதிலும், மிகத் துணிச்சலோடு, வீரத்தோடு, தண்ணீரைத் தமிழ்நாட்டுக்கு வழங்கியதற்காக, அந்த நல்லவருக்கு நன்றியைச் சொல்லி, தடை பல வென்று, தலைநகர் வந்த அந்தத் தண்ணீர்த் தாயைக் கைகூப்பி வணங்குவோம் என்று சொல்லி, இன்றைய கனவு நம்முடைய முதல்வர் அவர்களுடைய பெரும் முயற்சியால் வெற்றி கண்டது; நாளைய கனவு; கங்கை-காவிரி கை கொடுக்கவேண்டும் என்று சொல்லி, அந்த நாளை எதிர்பார்ப்போம், நல்லதே நடக்கும் என்பதைச் சொல்லி, இந்தத் தமிழக முதல்வராக கலைஞர் இருக்கும் வரை, எந்த மூலையிலும் எந்த இடத்திலும், எந்தத் தமிழனுக்கும், எந்தத் தொல்லையும் ஏற்படாது, அதுவும் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே, நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனேயே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் குறித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்துத் தீர்ப்போம் என்று. அன்றைக்கு அவர் சொன்னதை முழுமனதோடு பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்று, இந்த நல்ல வாய்ப்பினை அளித்த சபை நாயகருக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

(திரு. பி.ஆர். சுந்தரம் எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் என்று சொல்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் இடம் பெறாது. (குறுக்கீடு) இன்னும் பேசினால், கடைசி நாள் என்று கூடப் பார்க்காமல் வெளியேற்றுவேன். உட்காருங்கள். திரு. அப்துல் லத்தீப்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 10-10

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டினுடைய உயிர்நாடியான பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எல்லா மக்களும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றே நான் கருதுகின்றேன். இதில் சட்டம் மட்டும் இடம்பெறவில்லை; ஒப்பந்தங்கள் மட்டும் அடிப்படையாக அமைந்திடவில்லை; அரசியலும் அமைந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தண்ணீர் வேண்டும் உடன்பாட்டின்படி; நாம் அதனை பெற்றாக வேண்டும் என்று வற்புறுத்துகிற தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஆந்திராவிலும் அரசியல் கட்சிகள் இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரே பிரச்சினையில் ஒரே கட்சி ஒவ்வொரு மாநிலத்தில் ஒவ்வொரு அணுகுமுறையை வகுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இங்கேகூடச் சுட்டிக்காட்டப்பட்டது, ஒரே கட்சி தமிழகத்தில் ஒருவிதமாகப் பேசுகிறது, ஆந்திராவிலே அல்லது மற்ற மாநிலங்களிலே வேறுவிதமாகப் பேசுகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். எனவே நமக்கிருக்கிற மாநில உணர்வு மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் கட்சி பேதா பேதங்களுக்கு அப்பாற்பட்டு அவர்களும் அத்தகைய உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தப் பிரச்சினையை நாம் சிந்திக்க வேண்டும். அது ஆந்திராவாக இருந்தாலும், கர்நாடகமாக இருந்தாலும் அல்லது கேரளாவாக இருந்தாலும் இந்தக் கருத்தை மையமாக வைத்துதான் நம்முடைய அணுகுமுறைகளை நாம் அமைத்துக்கொள்ளக்கூடிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எனக்கு ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. என்னவென்றால், கலைஞரைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்காகச் சிந்தித்து, தமிழர்களுக்காகவே உழைத்து இப்போது தமிழ்நாட்டினுடைய தலைமகனாக மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய மானத்தின் சின்னமாகவும் அதனுடைய மரியாதையின் சின்னமாகவும் இருந்து கொண்டிருப்பவர். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஆந்திர மாநிலம் நம்மோடு செய்து கொண்ட உடன்பாட்டிற்கு மாறாக நடந்து கொண்டால் கலைஞர் அதை விட்டுக் கொடுத்து விடுவார் அல்லது எதையும் நம்மிடத்திலேயிருந்து மறைத்து அல்லது தன்னுடைய மனசாட்சிக்கு மாறாக அவர் நடந்துகொள்வார் என்று என்னால் நம்ப முடியவில்லை. அப்படி கலைஞர்

நடந்துகொண்டால் தமிழகத்திலே வேறு யாரும் தமிழகத்தைப் பற்றியே, தமிழைப் பற்றியே தமிழர்களைப் பற்றியே சிந்திக்கக் கூடியவர்கள் இருக்கிறார்களா என்பது ஒரு கேள்வி. நான் அரசியலுக்கு அப்பாற்பட்டு பேசுகிறேன். எனவே, நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து மாநிலங்கள் தொடர்புடைய பிரச்சினையில் அதுவும் இந்த நதிநீர்ப் பிரச்சினையில் நிதானம் இருக்க வேண்டும். அது இன்று தோன்றிய பிரச்சினை அல்ல; நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. மாநிலங்களுக்கிடையே மட்டுமல்ல; நாடுகளுக்கிடையேயும் இந்த நதி நீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய நாட்டு சபையால்கூடத் தீர்க்க முடியாத அளவுக்கு இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினையாக, சர்வதேச அளவிலே, தேசிய அளவிலே இப்போது உருவகம் பெற்றிருக்கிறது.

எனக்குத் தெரிந்தது எல்லாம் இந்த அரசு உண்மையை மறைத்துப் பேசுகிறது அல்லது உண்மையை இந்த அவையிலே மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவில்லை, ஏதோ ஒன்றை மறைத்துப் பேசுகிறது என்று நாம் இங்கே பேசினால், உண்மையை நாம் மட்டும் அறிந்திருக்கவில்லை. இங்கே இருக்கிற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மட்டுமல்ல, அங்கே இருப்பவர்களும் அறிந்திருக்கிறார்கள். எனவே, இங்கே அவர்கள் மறைத்துச் சொன்னால், வராத தண்ணீரை வந்துவிட்டது என்று இங்கே இருக்கிற அமைச்சர் சொன்னால், அங்கே இருக்கிற அமைச்சர் என்ன நினைப்பார் நம்மைப் பற்றி? எனவே, இதையெல்லாம் சிந்தித்துத்தான் யாரும் செயல்பட முடியும். ஓர் அமைச்சர் சொல்கிறார் என்றால், அங்கேயிருக்கிற அமைச்சர் "வரவேயில்லை, அங்கே போகவேயில்லை, நிலைமை இப்படி இருக்கிறது, கால்வாயே வெட்டவில்லை, தண்ணீர் போவதற்கு வழியே இல்லை, ஆனால் தண்ணீர் சென்னையை அடைந்துவிட்டது என்று அந்த மாநில அமைச்சர்கள் சொல்கிறார்கள்" என்று சொன்னால் என்ன ஆகும்? அவர்கள் என்ன நினைப்பார்கள்? அதைப்பற்றி அவர் மட்டும் சொல்லவில்லை, நாமும் சிந்தித்துப் பார்க்கக்கூடியவர்களாக இருக்கிறோம். எனவே, இந்தப் பிரச்சினையில் மிகுந்த நிதானம் தேவை, பொறுப்பு தேவை.

நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? உடன்பாடு செய்து கொண்டோம், சட்டத்தின் அடிப்படையிலேதான் கான்ட்ராக்ட் செய்து கொண்டோம். அதிலே ஆயிரம் கோடி ரூபாயை நாம் கொடுத்திருக்கிறோம். ஆயிரம் கோடி ரூபாயை ஒப்பந்தப்படி அவர்கள் செலவழிக்காவிட்டால், வேறு துறையிலே அவர்கள் மாற்றியிருந்தால், அதற்குச் செய்யக் கூடாது என்று சொல்வதற்கு நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, சொல்லுங்கள். கோர்ட்டிற்குத்தான் போக வேண்டும். வேறு ஏதாவது இருக்கிறதா? மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களை ஏன் இப்படி...





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயிரம் கோடி ரூபாய் என்பது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன காரணத்தால் அப்படியே பரவுகிறது. ஆயிரம் கோடி ரூபாயா, அல்லவா என்பதை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவருடைய பதிலுரையில் விளக்க இருக்கிறார். ஆயிரம் கோடி ரூபாய் அல்ல என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்ல, ஆயிரம் கோடி ரூபாய் சந்திரபாபு நாயுடு அவர்களுக்குத் தண்ணீர் வாங்குவதற்காகக் கொடுக்கவில்லை; பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் கோடி ரூபாய் அல்ல; அது எவ்வளவு என்பதை அமைச்சர் பிறகு விளக்குவார்.

*முற்பகல் 10-15*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எவ்வளவோ நாம் கொடுத்திருக்கிறோம். அவர்களும் வாங்கியிருக்கிறார்கள்; அந்த ஒப்பந்தப்படி, ஏற்றுக்கொண்டபடி, அந்த நிபந்தனையோடு சில காரியங்களை முடிக்க வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். நாமும் அதிலே ஒத்துழைக்கக்கூடிய நிலையிலே இருக்கிறோம். அவர்கள் அந்தக் காரியத்தை ஒப்புக்கொண்டபடி செய்யாவிட்டால், நமக்கு என்ன வழி? ஆகவே நான் சொல்கிறேன். அவர்களோடு சண்டை போட முடியுமா? அவர்களோடு நாம் மோத முடியுமா? மோதுவதற்கு கோர்ட்டுக்குத்தான் போக்வேண்டுமே தவிர, தனியாக நமக்கு எதுவுமில்லை. அது ஒரு Sovereign State நாம் தனியாக ஒரு sovereign State. நமக்கு என்ன வழி? மத்திய அரசிடம் நாம் முறையிடலாம். இல்லையென்றால் கோர்ட்டுக்குப் போகலாம். மத்திய அரசுதான் இதிலே மத்தியஸ்தம் செய்ய முடியும். மத்தியஸ்தம் செய்வதற்கு மத்திய அரசு முழுமனதோடு ஈடுபட்டிருக்கிறதா என்பது கேள்வி.

இந்த நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், it is an inter-State contract, inter-State understanding. We are sovereign in our State, not in the State of Andhra or in Kerala or elsewhere. ஆகையால்

இங்கே இருக்கும் நாம் "இந்த ஆட்சி இப்படி நடந்து கொண்டது" என்று — அரசியல் கட்சிகள் — இங்கே பேசுகிறோம். கேரளாவிலே வேறுவிதமாகப் பேசுகிறார்கள். என் கட்சியிலேயே நான் இங்கே ஒருவிதமாகப் பேசுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) என் கட்சிக்காரன் கேரளாவிலே வேறுவிதமாகப் பேசுகிறான். ஒரே கட்சியிலேயே வேறு விதமாகப் பேசும்போது அது அரசியல். அந்தந்த மாநிலத்திலே அந்தந்தக் கட்சிகள் இப்படித்தான் பேசுகின்றன. நான் கேட்கிறேன், நம் அரசாங்கம் நமக்கு மாறாக, நம்முடைய நன்மைக்கு எதிராகச் செயல்படுமா என்பதை நாம் முதலிலே தீர்மானிக்க வேண்டும். எனவே, inter-State matters இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், அரசை நாம் பாரதூரமாக சந்தேகிக்கவோ அல்லது தாக்கவோ கூடாது. நம்முடைய மாநிலத்தினுடைய நன்மை இதிலே அடங்கியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பது என்னுடைய கருத்து. நான் நீங்கள் கைதட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஏனென்றால், என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் அருமையான வாதத்தை வைக்கிறீர்கள். நான் சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பேசி முடிப்பதற்கு முன்னால் திரு. சுந்தரம் திரும்பவும் எழுந்து நிற்பார். நன்றாகப் பேசுகிறவர்களுக்கு அதிக நேரம் கொடுக்கிறீர்களே என்று கேட்பார்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இங்கே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசும்போது, இது ஏதோ கடைசிக் கூட்டம் என்பது போல் ஓர் எண்ணம் ஏற்படுத்தும் வகையில் he paid some rich encomiums and tributes to the Hon'ble Chief Minister and other Members of the Treasury Benches. But, I wi!! not take a final decision in my hands. அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அது இந்த அரசும் மற்றவர்களும் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஒரு வருத்தம் என்னவென்றால், பல ஆண்டுகளாக; முன்பெல்லாம் சட்டசபை முடியும்போது மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தேநீர் அருந்தி, போட்டோ எடுத்துக்கொள்வர். எல்லோர் வீட்டிலேயும் அவர்கள் போட்டோ வைத்திருக்கிறார்கள். நாம் இதுவரையிலே இத்தனை தடவை இருந்தும் ஒரு போட்டோ இல்லையென்றால்? இது பைனல்; ஆகையால் அதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இருந்தாலும், நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முதலமைச்சரோடு கலந்து, போட்டோ எடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். இப்பொழுது இல்லையென்றாலும், எப்படியும் இன்னொரு சபை நடக்கும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதலமைச்சருக்குத் தெரியும். நமக்கு ஒரு ரெகார்டுபூர்வமாக இல்லை. இத்தனை ஆண்டுகளாக இருந்தும், இல்லை. ஏனென்றால், கலைத்து, கலைத்து, நாம் கலைந்து போனவர்கள். பலபேர் கலைத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (பலத்த சிரிப்பு) அதனால் நான் சொல்கிறேன். தயவுசெய்து நான் முதலமைச்சரை...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொல்வது, சட்டமன்றக் கலைப்பு பற்றியா அல்லது வேறு கலைப்பா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரவர்களுக்கு எந்த அர்த்தம் தெரியுமோ அதை வைத்துக்கொள்ளலாம். (பலத்த சிரிப்பு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதலமைச்சரைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அவர்களுடைய திறமை, அவர் சட்டமன்றத்திலே எப்படி நடந்துகொள்கிறார் என்பதைப் பற்றி யாருக்கும், இங்கும், எங்கும் என்றும் அந்தச் சந்தேகமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஒரு விஷயத்தில்தான் அவருக்கும் எனக்கும் — திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற என் தம்பிமார்களுக்கும், சகோதரர்களுக்கும் யாருக்கும் சண்டை கிடையாது. (சிரிப்பு) இந்தச் சண்டை — எனக்கும் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும்தான் சண்டை. ஆகையால் இந்தச் சண்டைகூட, இராமன் அனுமான் யுத்தமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த நோக்கத்தில் இதுவரை நான் சண்டை போட்டுக் கொண்டுதான் இருப்பேன். அது அனுமான் யுத்தம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் கேரளா; நாளைக்குப் பேசப் போகிறீர்கள் காவேரி பற்றி. காவேரி இல்லாத நம்முடைய இலக்கியம் உண்டா? காவேரி நாட்டினுடைய தலைவனாக இருக்கிற கலைஞர் அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி இல்லாமல் இலக்கியம் உண்டா, சிலப்பதிகாரம் உண்டா, எதுவும் உண்டா இந்த நாட்டிலே? ஆனால் காவேரி, என்ன செய்வது விரிந்து, விரிந்து போகிறது. இந்தப் பிரச்சினையை தயவுசெய்து, அதைக்கூட மிகுந்த விவேகத்தோடு

நாம் பேச வேண்டும். அவர்களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. அதையும் மதித்துத்தான் பேச வேண்டும். ஏடாகூடமாக, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேச வேண்டிய அவசியமில்லை.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவேரியில், பூதாகாரமாக எந்த வேறுபாடும் முரண்பாடும் நமக்கும் அவர்களுக்கும் இல்லை. காவேரிக்கான ஆணையம் பிரதமர் வாஜ்பாய் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டு, ஒரு சுமுக முடிவு ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிறது. அதிலே, சிறு சிறு சில்லரைப் பிரச்சினைகள். அதைப் பற்றித்தான் பேச இருக்கின்றோம். அடுத்து மொத்தமாகப் பேச இருப்பது, பெரிய அளவில் பேச இருப்பது, முல்லைப் பெரியார் அணையைப் பற்றித்தான்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முதல்வர் அவர்களிடத்திலே நம்முடைய ஒட்டுமொத்தமான நன்மையும் பாதுகாப்பாக இருக்கிறது என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஆனால், கடைசியாக நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து, இந்த அரசு, குறிப்பாக கலைஞர் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டியது, "இந்த நதி நீர்களை தேசியமயமாக்க வேண்டும்" என்று. வேறு வழியே இல்லை. அது வந்தாலொழிய இந்தப் பிரச்சினைகள் தோன்றிக்கொண்டே இருக்கும். சண்டை போடுவதற்கு நமக்குத்தான் தெரியும் என்றில்லை. கேரளாவில் இருக்கின்றவர்களுக்கும் தெரியும், ஆந்திராவில் இருக்கின்றவர்களுக்கும் தெரியும். ஆந்திராகாரர் நம்ம ஊர்க்காரர் அவர். சந்திரபாபு நாயுடு வேறு யாரும் அல்ல, நம்ம ஊர்க்காரர். என் தொகுதிக்குப் பக்கத்துத் தொகுதிதான் சந்திரபாபு நாயுடு. எனவே, அவர் நம்மிடத்திலே வளர்ந்தவர். அதனாலே, நம்மிடத்திலே கொஞ்சம் பக்குவமாக நடந்துகொள்கிறார். அதேநேரத்தில், நாயனாரோ அல்லது கர்நாடகாவிலே இருக்கக்கூடியவர்களோ நம்முடைய விரோதிகளும் அல்ல. அவர்களுக்குச் சில சிக்கல்கள் இருக்கின்றன. அந்த வகையிலே சுமுகமாகப் பேசி, இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கத்திடம் நீங்கள் சொல்ல வேண்டியது, to nationalise all the river courses. இதுதான் ஒரே ஒரு வழி என்பதை வலியுறுத்தி *(மணியடிக்கப்பெற்றது)* இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே நான் ஏதோ பாரபட்சமாகப் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். தம்பி துரைமுருகன், மாண்புமிகு துரைமுருகன் இன்றைக்கு அல்ல 40 ஆண்டுகளாக, 45 ஆண்டுகளாக, சிறியவராக



இருந்தபோதிலிருந்து எனக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், கலைஞரிடம் அவருக்குத் தொடர்பு இல்லாத காலத்திலேயே தொடர்பு உள்ளவன் நான். தம்பி துரைமுருகன் அவர்கள், மிக சாதுர்யமானவர், மிக நுணுக்கமானவர், எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கக்கூடியவர். அவருடைய கையிலே நம்முடைய நன்மைகள் பாதுகாப்பாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்து, அவருக்கு என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்து, இதிலே வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி, விடைபெற்றுக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பெயரையே கொடுக்கவில்லையே?

**திரு. லா. சந்தானம்:** கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் கொடுக்கவில்லை. *(குறுக்கீடு)* இல்லை, உங்கள் பெயர் இல்லை. மார்க்சிஸ்ட் பெயர் இல்லை. இரண்டு, இரண்டு நிமிடங்கள் பேச அனுமதி கொடுக்கின்றேன். இருந்தாலும், List பூராவும் என்னிடம் இருக்கிறது. உங்கள் பெயர் கிடையாது. நீங்களாக எழுந்து நிற்கிறீர்கள். சரி, பேசுங்கள், இரண்டு நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும். *(குறுக்கீடு)* நான் இங்கே படிக்கிற பெயரில் அடுத்து வேலாயுதன் பெயரும், கிருஷ்ணசாமி பெயரும்தான் இருக்கிறது. இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்குக் கிருஷ்ணா குடிநீர் வருகின்ற இந்தப் பிரச்சினையை ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்னாலேயே இந்த அவையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தாலும்கூட, கோடை வெப்பம் சற்றுக் குறையட்டும் என்கிற நோக்கத்தோடு, அதோடு கிருஷ்ணா நீர் இங்கே வந்துகொண்டிருக்கிறது என்ற தகவலையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இப்போது நீங்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தளவிலே இதிலே கட்சி மாச்சரியங்களுக்கெல்லாம் இடம் இல்லை என்கிற நிலையிலேதான் இப்போது இங்கே பேசப்படுகிறது. சோமசீலா அணையிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டால்தான் நமது ஒப்பந்தத்தின்படி முழுமையாகக் குடிநீரை சென்னைக்குக் கொண்டுவர முடியும் என்கிற

நிலைதான் உள்ளது. அந்த சோமசீலா அணைக்குக் கிருஷ்ணாவிலிருந்து இன்னும் கால்வாய் வெட்டப்படவில்லை என்கிற நிலையை நாம் ஏற்றுக்கொண்டு, அந்த அணை வரை கால்வாய் வெட்டுகின்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு நாம் துரிதமான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற நிலையை வலியுறுத்துவதற்காகத்தான் இப்போது எதிர்க்கட்சிகள் எல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 10-25*

இந்த அரசாங்கத்திலே இந்த வேலைகள் எல்லாம் நடைபெறவில்லை என்று குறை கூறுகின்ற நோக்கத்தோடு அல்லாது அதை வேகப்படுத்துகின்ற அளவிலே, விளக்குக்கு — எரிகின்ற விளக்காக இருந்தாலும் — தூண்டுகோல் அவசியம் என்பது போலத்தான், இன்றைக்கு இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள், இந்த உடன்பாடு சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் அடிக்கடி இதை வற்புறுத்திய காரணத்தினால்தான், இந்த அரசும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, அந்தத் துறையினுடைய அமைச்சரும் மிகுந்த ஆர்வத்தோடு அக்கறை எடுத்துக்கொண்டதன் பலனாக,

> "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்"

என்பதுபோல, அந்த முயற்சியை இப்போது எடுத்துக்கொண்டதன் பலனாகத்தான் கண்டலேறு அணையிலிருந்து — இயற்கையினுடைய சீற்றத்தால் அங்கு நீர்நிலைகள் எல்லாம் சரியில்லாத நிலையிலும்கூட— பிரத்தியேகமாகக் கால்வாய்களை வெட்டி, இப்போது அந்தத் தண்ணீரை எடுத்து வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இங்கு தூண்டுகோலாக எதிர்க்கட்சிகள் எல்லாம் இருந்த காரணத்தினால்தான் அந்த முயற்சியை எடுப்பதற்கு அவர்களும் உறுதுணையாக இருந்த காரணத்தால்தான் அந்த முயற்சியோடு இப்போது அந்தத் தண்ணீர் வருகிறது. அந்த முயற்சி மீண்டும் தொடரவேண்டும். நமது சென்னை நகருக்கு முழுமையான கிருஷ்ணா தண்ணீர் அவர்கள் ஒப்பந்தப்படிக் கிடைப்பதற்கும் இன்னும் வெட்டப்படாத கால்வாய்களை எல்லாம் வெட்டுவதற்கும் இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதோடு, இன்றைக்கு டெல்லிக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் செல்கிறார்கள். அங்கு நமது தமிழகத்தின் முக்கியப் பிரச்சினையாகிய காவிரிப் பிரச்சினையில்கூட சற்றுப் பிரச்சினை



இல்லை. ஆனால், முல்லைப் பெரியாறு அணையிலே மிகுந்த சிக்கல் இருக்கிறது. அது அந்தத் தென்பகுதி மாவட்டங்களை மிகுந்தும் பாதிக்கக்கூடிய பிரச்சினை என்கின்ற காரணத்தினால், அதையும் அவர் வெற்றிகரமாக முடித்துவர வேண்டுமென்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் ரொம்ப சுருக்கமாக முடிக்கவேண்டும். காரணம் என்னவென்று கேட்டீர்களானால், இது ஒரு மணி நேர விவாதம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி, கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்கு வந்துவிட்டது. இன்று வந்திருக்கிற செய்தி, பூண்டி reservoir-லே போதுமான அளவுக்குத் தண்ணீர் வந்திருக்கிறது என்று சொல்ல முடியாது என்று. ஆனாலும், இன்றைக்குத் தண்ணீர் வந்திருக்கிறது என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த நேரத்திலே நான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புவது, ஆட்சியிலே இருந்துகொண்டிருக்கிற அரசுகளுக்கு மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுப்பதற்கான பொறுப்பு இருந்துகொண்டிருக்கிறது. அந்த முறையிலே இன்று இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பொறுத்த அளவில், அரசும், அதேபோன்று அரசினுடைய பெயரிலே தகவல்களைக் கொடுக்கிற அதிகாரிகளும் கொடுக்கிற தகவல்களைத்தான் பத்திரிகைகள் வழியாக மக்கள் தெரிந்துகொள்ள முடிகிறதே தவிர, நேரடியாகத் தண்ணீர் வருகிறதா, இல்லையா என்பதை அனுபவபூர்வமாக மக்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு என்பது மிகக் கம்மி. ஒருவேளை, அந்தத் தண்ணீர் வருகிற பாதைக்கு அருகிலே இருக்கிற ஆட்களால் சில விவரங்கள் தெரிந்துகொள்ள முடியுமே தவிர, தமிழகத்திலே இருக்கிற ஒட்டுமொத்தமான மக்களுக்கு இந்த அரசாட்சி வழியாக வருகிற தகவல்கள், பத்திரிகைகள் வழியாக வருகிற தகவல்கள், அதிகாரிகள் வழியாக வருகிற தகவல்கள்தான் தெரிகின்றன. மக்களுக்கு உண்மையான தகவல்களை அரசும், அதேமாதிரி அரசாட்சியின் சார்பிலே தகவல்களைக் கொடுக்கிறவர்களும் கொடுப்பார்களேயானால் இப்படிப்பட்ட ஒரு confusion ஏற்படுவதற்கான சூழ்நிலையே இல்லை.

துரதிருஷ்டவசமாக, இன்று ஒன்றை நான் சுட்டிக்காட்டுவதற்கு மன்னிக்கவும். சென்ற 20 ஆண்டு காலமாகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில், தண்ணீர்ப் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாகப் பார்க்கப்பட்டதன் காரணமாக, ஆட்சியாளர்கள் அது சம்பந்தமாக எடுத்துக்கொண்ட சில தவறான நடவடிக்கைகள் காரணமாக, இன்று சென்னை நகரத்திற்கு ஏற்கெனவே கிடைக்கப்படவேண்டிய தண்ணீர் — அது பல திட்டங்களுக்காக உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டங்களை மக்களுக்கு நாம் செய்கிற ஒரு திட்டம் என்ற முறையிலே, மக்களுக்குச் செய்யவேண்டிய பொறுப்பு என்ற முறையிலே, அது பார்க்கப்படாததன் காரணமாக — கிடைக்காமல் இன்று இப்படிப்பட்ட சங்கடங்கள் சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு குடிதண்ணீரிலே ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, மற்ற அரசுகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதிலே பிரச்சினை இருக்கிறது. ஆந்திர மாநிலத்திலேகூட சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அந்த அரசு ஏற்படுத்தி இருக்கிற உடன்படிக்கையை அமல்படுத்துவதற்கான பொறுப்புணர்ச்சியோடு அவர்கள் நடந்துகொண்டதன் காரணமாகவும், நம்முடைய அரசு அது சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நீக்குப்போக்குகள் காரணமாகவும் இன்று தண்ணீர் நமக்குக் கிடைக்கப்பெற்று இருக்கின்றது. அதேமுறையிலே உண்மையான தகவல்களை, உண்மையான முறையிலே யதார்த்தமாக மக்களுக்கு கொடுக்கக்கூடிய ஒரு நிலையை அரசு எடுக்க வேண்டும். அப்படி எடுக்கப்பட்டால் தேவையற்ற இப்படிப்பட்ட விவாதங்கள், தேவையற்ற குழப்பங்கள் மக்களிடையே ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அந்த முறையிலேயும் ஆட்சியிலே இருக்கக்கூடியவர்கள் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர். இரண்டு நிமிடங்கள் மட்டும்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் இன்றைக்கு சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதை பத்திரிகைகள் எல்லாம் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன. தொலைக்காட்சிகள் எல்லாம் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அது இன்னும் வந்துகொண்டிருக்கிறதா, வருகிறதா என்ற கேள்வியை இங்கே உறுப்பினர்கள் எழுப்பிக் கொண்டிருப்பது வேடிக்கையாக இருக்கின்றது. யார் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாமா என்றெல்லாம் பார்க்காமல், சென்னை மாநகர மக்கள் தாகத்தால் தவிக்கிறார்கள்; அவர்களுடைய தாகத்தைத் தீர்க்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தின் அடிப்படையில் இந்த மாநகர மக்களுக்காக இப்போது அயராது உழைத்து கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்காக நாங்கள் தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பாக அவர்களுக்கு எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் அந்தக் கட்சியைவிட்டு வெளியே வரும்போது சொல்லுவார்கள். எம்.ஜி.ஆருடைய புகழை மறைப்பதற்காகத்தான் எங்களுடைய தலைமை முயற்சிக்கிறது; எனவே,....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** ஒரே ஒரு சம்பந்தம் இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். திரு. சி. வேலாயுதன். (குறுக்கீடு)

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசி முடித்துவிடுகிறேன்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டுவரக்கூடிய அந்த முயற்சியிலே தமிழகத்திற்கு போதிய அளவிற்கு தண்ணீர் கிடைக்காமல் இருந்தாலும்கூட, நிச்சயமாக அந்த முயற்சியில் தமிழக அரசு வெற்றி பெற்று இருக்கின்றது என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அதற்குண்டான முயற்சி எடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று காவிரி நீர்ப் பிரச்சினையிலேகூட நாம் வெற்றி பெற்று இருக்கின்றோம். பாரதப் பிரதமர் அதற்குண்டான நல்ல முயற்சி எடுத்து இருக்கின்றார்.

அதேபோல இன்று பெரியாறு பிரச்சினையில், அதன் நீர் மட்டத்தை உயர்த்தக்கூடிய வகையில் முதலமைச்சர் அவர்கள் டில்லி சென்று பேச இருக்கின்றார்கள். அந்த முயற்சியிலும் நிச்சயமாக நல்லவர்களுடைய ஆதரவு நமக்குக் கிடைக்கும்; நிச்சயமாக வெற்றி பெறுவோம். எப்படி சுவாசிக்கக்கூடிய காற்று அனைவருக்கும் பொதுவாக இருக்கின்றதோ, அந்த உயிர்மூச்சுக்கு அடுத்தபடியாக, அந்தக் காற்றுக்கு அடுத்தபடியாக நமக்கு இருப்பது, குடிப்பதற்கு உண்டான தண்ணீர். எனவே அதுவும்கூட — பெரியவர் அப்துல் லத்தீப் அவர்கள் பேசியதுபோன்று, நதிகள் நிச்சயமாக — தேசியமயமாக்கப்பட வேண்டும்; அதற்குண்டான முயற்சியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கக்கூடிய முயற்சி முடியாமல் போனாலும்கூட — தென் மாநிலங்களில் மின்சார வாரியத்திற்கு ஒரு வாரியத்தை — தென் மாநிலங்களை எல்லாம் சேர்த்து அமைத்து இருப்பதுபோன்று — தென்னக மாநிலங்களிலுள்ள நதிகளை எல்லாம் இணைத்து அந்த நதி நீர் சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களுக்கும் சேர்ந்து கிடைப்பதற்குண்டான முயற்சியை நாம் எடுக்க வேண்டும்; அதற்குண்டான முயற்சி நிச்சயமாக வெற்றிபெற வேண்டும் என்று சொல்லி, வாழ்த்தி அமைகின்றேன். பாரத் மாதா கி ஜே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, இரண்டு நிமிடங்கள் மட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; சென்னை மாநகர மக்கள் நீண்ட நெடுநாட்களாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது, கிருஷ்ணா நதி நீர். அந்தத் திட்டத்திற்காக தமிழ்நாட்டினுடைய பல கோடி ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது. இப்பொழுது கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்து இருப்பதாகச் செய்திகள் வந்தாலும்கூட, அனைத்து மக்கள் மத்தியிலும் இன்னும் முழுமையாக ஐயப்பாடு நீங்கவில்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஏறக்குறைய 15 டிஎம்.சி.-க்கு மேலாக கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வர வேண்டுமே; அதிலே 3 தவணையாக 5 டிஎம்.சி. கொடுக்கப்பட வேண்டுமே; அப்படி இருக்கின்றபொழுது; இப்போது வரக்கூடிய நீர் ஒரு டிஎம்.சி.-க்குக் குறைவாக வரவேண்டிய அவசியம் என்ன? இத்தனை



ஆண்டு காலம் காலதாமதமானதற்கு என்ன காரணம்? ஒப்பந்தங்களை ஆந்திர அரசு மீறியிருக்கிறதா? ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய நீரிலே 6 சதவீதம்தான் மனிதர்கள் குடிநீருக்காகப் பயன்படுத்துகிறார்கள். மீதியெல்லாம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவேளை குடிநீருக்காக வரக்கூடிய இந்தக் கிருஷ்ணா நதி நீரை ஆந்திர விவசாயிகள் விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்களா? எனவே, எப்படிப்பட்ட விதிமுறை மீறல்களின் காரணமாக, பல ஆண்டுகாலத்திற்கு முன்பே, சென்னைக்கு வந்திருக்க வேண்டிய நீர் வரவில்லை என்பது இந்த அவையிலே விளக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 10-35

மேலும் இதனுடைய உண்மையான தகவல்களை அறிந்துகொள்வதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவையும் நியமிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கங்கை-காவிரி இணைக்கப்பட வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலிக்கப்படுகின்றபோது, ஒரு கால்வாய் தண்ணீரே ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு வருவதற்கு இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றபோது, எப்படி அப்படிப்பட்ட பெருந்திட்டங்களை நிறைவேற்ற முடியும்? எனவே, இந்தத் திட்டத்தினை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் இருக்கக்கூடிய தடங்கல்கள் என்ன என்பதை அனைத்து விவரங்களோடும் இந்த அவையிலே வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் குறித்து ஒரு விவாதத்தை இந்த அவையிலே தொடங்கி அதற்குப் பதிலளிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காரணம், கிருஷ்ணா நீர் சம்பந்தமாக இந்த மாமன்றத்திலே இருப்பவர்கள் பல்வேறு எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். கிருஷ்ணா நீரே வரவில்லை, கால்வாயே வெட்டப்படவில்லை, ஆயிரம் கோடி ரூபாயை அநியாயமாக வாரிக் கொடுத்துவிட்டார் கலைஞர் என்று பொறுப்பு வாய்ந்த, விவரம் தெரிந்த பல உறுப்பினர்களே பேசியிருக்கிறார்கள்.

[திரு. துரைமுருகன்] [2000 மே 18

இந்த வாதம் இந்த அவையில் மட்டுமல்லாமல், இதற்கென்றே ஜனித்ததைப் போல ஒரு டி.வி., கிருஷ்ணா நீர் கானல் நீர் என்று ஒரு பேட்டியைத் தொடங்கி கிருஷ்ணா பகுதி அன்றி வேறு பகுதிகளிலே எடுத்த படத்தை எல்லாம் காட்டி, அதிலே பிரபலமானவர்களையெல்லாம் அழைத்து, என்னுடைய நண்பர்கள் பலரையும் அழைத்து, அதிலே பேட்டியும் வைத்துவிட்டு, அந்தப் பேட்டியிலே வராதவர்களையும் பேட்டி எடுத்துக்காட்டி, அதிலே 1,000 கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்துவிட்டார் கலைஞர், வந்தது கிருஷ்ணா நதி நீர் இல்லையென்று — அது ஒரு பக்கம் — அவர்கள் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிகை நண்பர்களிலேகூட, ஒரு பத்திரிகை, இது கிருஷ்ணா நீர் அல்ல, கண்டலேறு நீர்தான் என்று நிரூபித்துவிடுவதாக ஒரு சபதம் எடுத்து, அதே வேலையாக — வராத தண்ணீர் என்று — கிருஷ்ணா நீர் வரவில்லை என்று அவர்கள் நித்தம் நித்தம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பத்திரிகையில் இருப்பவர்களும் சரி, டி.வி.யில் இருப்பவர்களும் சரி, இந்த மன்றத்தில் இருப்பவர்களும் சரி, பலர் இந்த விவகாரத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசியிருக்கிறார்கள் என்பது உண்மை. சிலருக்குப் புரிந்தும் புரியாதது மாதிரி பேசியிருக்கிறார்கள் என்பதும் உண்மை. சில பேர் கிருஷ்ணா நீரே வரக்கூடாது என்ற ஆதங்கத்தின் காரணமாகப் பேசியிருக்கிறார்கள் என்பதும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

எது எப்படியிருந்தாலும் ஒன்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மதிப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கூட இங்கே உண்மையை மறைத்துப் பேசினார்களா அல்லது தெரியாமல் பேசினார்களா என்பது தெரியவில்லை. இருந்தாலும், அவர்களுக்கும் வெளி உலகத்திற்கும் சேர்த்து ஓர் உண்மையை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். "நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் உண்மையே சொல்ல மறுக்கிறார்" என்கிறார்கள், பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை என்று (சிரிப்பு) நீதிமன்றத்திலே உரைப்பதைப்போல உரைத்துவிட்டுத்தான் சொல்ல விரும்புகிறேன், நான் இப்போது நேரடியாக.



2000 மே 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, முதல் குற்றச்சாட்டுக்கு நான் நேரடியாக வருகிறேன். வந்தது கிருஷ்ணா நீரே அல்ல என்பது முதல் குற்றச்சாட்டு. இதற்கு என்னுடைய பதில்: தமிழ்நாட்டுக்கு முதன்முதலாக கிருஷ்ணா நீர் வந்தது 29-9-1996 அன்று. உறுப்பினர்கள் இதைக் குறித்துக்கொள்ளலாம், ஒன்றும் பிரச்சினையில்லை. 29-9-1996-ல் தான் நமக்குக் கிருஷ்ணா நீர் வந்தது. 1996 ஆம் ஆண்டே கிருஷ்ணா நீர் இங்கே குடிப்பதற்காக ஸ்ரீசைலத்திலிருந்து, சோமசீலாவிற்கு விட்டு, சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு வந்து, கண்டலேறுவில் இருந்து பூண்டி ஏரிக்கு வருவதற்காக 1996 ஆம் ஆண்டே அதற்காகத் தண்ணீரைத் திறக்கிறார்கள்.

முற்பகல் 10-40

நான் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர், இந்த அவையிலே பேசுகிறேன். இன்னொரு மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல நான் ஒரு பொறுப்பு வாய்ந்த உறுப்பினர். இங்கே பேசுகிறபோது "தவறான தகவலைச் சொன்னால் இதேபோல ஒரு மன்றம், ஓர் அரசு இருக்கிறது, அவர்களைப் பாதிக்காதா, அவர்கள் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களா" என்று கேட்டார்கள். நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. குப்தா அவர்கள் ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற அந்த நீர்ப்பாசனத் துறைச் செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திற்கு அவர் பதில் அனுப்புகிறார்:

``Dear Gupta,

Kindly refer our telephone talk on 4-8-1999 and 5-8-1999. I enclose four statements relating to supply of Krishna Water for meeting the drinking water requirements of Chennai City from 1996 to 1998.

With regards,

...Sd/- Chakrapani".

என்று எழுதியிருக்கிறார். அதிலே Fax மூலம் என்ன தெரிவிக்கிறார் என்று கேட்டால், 1996 ஆம் ஆண்டு தண்ணீர் நமக்கு வந்து சேர்ந்ததிலே,

1996 ஆகஸ்டில் 1.148 டி.எம்.சி., 1996 செப்டம்பரில் 2.87 டி.எம்.சி. என்று Fax மூலம் தெரிவிக்கிறார். ஆக, 29-9-1996-லிருந்து இந்தக் கிருஷ்ணா நீர் வந்தாலும் அதனை முழுமையாகப் பெறமுடியாமல் போயிற்று. ஏனென்றால் seepage ஒன்றிரண்டு இடங்களில் ஏற்பட்டது. எனவே, தண்ணீருக்காக 1996 ஆம் ஆண்டே நமக்காக ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து கிருஷ்ணா நீரை சென்னைக்கு அளித்திருக்கிறார் என்று தமிழகத்துப் பொதுப் பணித் துறை செயலாளர் திரு. குப்தாவிற்கு ஆந்திர மாநிலத்தினுடைய பொதுப் பணித் துறையினுடைய பாசனத் துறையை பார்க்கின்ற செயலாளர் திரு. சக்கரபாணி அவர்கள் Fax மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, ஒரு மாநிலத்தினுடைய செயலாளர் இன்னொரு மாநிலத்தினுடைய செயலாளருக்கு அனுப்பிய அந்த Fax, கடிதத்தைக்கூட நீங்கள் பொய் என்று எடுத்துக்கொள்வீர்களா, உண்மைக்கு மாறானது என்று எடுத்துக்கொள்ள முடியுமா என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நான் இரண்டாவதாக ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். "இது கிருஷ்ணா நீரே அல்ல" என்று சொல்கிறார்கள். ஆனால் 1996 ஆம் ஆண்டு, 1997 ஆம் ஆண்டு இந்த நீர் வந்தபோது பத்திரிகைகள் என்ன எழுதின என்பதை இந்த மன்றத்திற்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். இப்போது கண்டலேறுவிலிருந்துதான் தண்ணீர் வருகிறதே தவிர, ஸ்ரீசைலத்திலிருந்து கிருஷ்ணா நீரே வரவில்லை என்று எழுதுகின்றன. தினமலர் பத்திரிகை 7-7-1997-ல் என்ன எழுதுகிறது என்றால், சுமார் 13 ஆண்டுகள் கிருஷ்ணா நீர் வரும் என எதிர்ப்பார்த்த சென்னை நகர மக்களுக்குத் தற்போது வந்து கொண்டிருக்கும் கிருஷ்ணா நீர் பெருத்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று எழுதுகிறது. ஆக இன்றைக்கு ஒத்துக்கொள்ளாத, வேண்டுமென்றே சொல்கின்ற, பத்திரிகை அன்றைக்குச் சொல்லியிருக்கிறது. சரி, அந்தப் பத்திரிகை போகட்டும். 5-7-1999-ல் 'இந்து' பத்திரிகை என்ன எழுதுகிறது என்றால், அந்தப் பத்திரிகைக்கூட இந்தக் கிருஷ்ணா நீர் வந்திருக்கிறது என்றுதான் எழுதியிருக்கிறது. என்ன எழுதுகிறார்கள் என்றால் ``Krishna Water reaches to-day" என்றுதான் தலைப்பிட்டு 'இந்து' பத்திரிகை எழுதியிருக்கிறது. 17-7-1997-லே இன்னொரு பக்கத்திலே இந்துப் பத்திரிகை "Krishna Water reaches Chennai" என்று தலைப்பிட்டு உள்ளே செய்தியை எழுதியிருக்கிறது. இன்னும் எப்படி எழுதியிருக்கிறது என்று கேட்டால் 'இந்து' பத்திரிகை "A few minutes after 3 P.M. on Wednesday were historic for Chennai. A long awaited Krishna Water entered the City drinking water distribution system" என்று எழுதியிருக்கிறது. அதுபோல



படம் எடுத்துப்போட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 'இந்து' பத்திரிகையிலே திரு. இராமகிருஷ்ணன் என்பவர் — நுழைந்து நுழைந்து செய்திகளைச் சேகரிக்கக்கூடியவர் அவர் 6-7-1997-ல் 'இந்து' பத்திரிகையில் — என்ன எழுதியிருக்கிறார் என்று கேட்டால், "Krishna Water flow being monitored". ஆக வந்த தண்ணீர் எல்லாம் 'இந்து' பத்திரிகையானாலும், 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையானாலும், மற்றும் இருக்கிற பத்திரிகைகள் ஆனாலும் என்ன எழுதியிருக்கின்றன என்றால் வந்த தண்ணீர் எல்லாம் "Krishna Water" என்றுதான் எழுதியிருக்கின்றன, இன்றைக்கு மறுக்கின்ற பத்திரிகைகள் முதற்கொண்டு.

சரி, அதுமட்டுமல்லாமல் இன்னொன்றும் சொல்லலாம். இங்கேகூட உறுப்பினர்கள் சொன்னதைப்போல, நம்முடைய திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல ஒரு கருத்து சொல்லப்பட்டது. ஆந்திராவிலே ஒரு பெரிய தகராறு, தண்ணீர் தரக்கூடாது என்று. அப்போது ஆந்திர மாநிலத்தினுடைய முன்னாள் முதல்வராக இருந்த திரு. ஜனார்தன ரெட்டி அவர்கள் 9-7-1999 அன்று ஹைதராபாத்தில் பேட்டி தருகிறார்கள், அதில் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டால், "The former Chief Minister Janardhana Reddy has sought an Expert Committee to enquire into the manner in which the State Government is dealing with the supply of 15 T.M.C. ft. of water to Chennai, saying that the State Government is trying to send water of Pennar to Chennai, instead of Krishna Water, to the detriment of Nellore District farmers".

ஜனார்த்தன ரெட்டி என்ன சொல்லியிருக்கிறார்? அதாவது "பெண்ணை ஆற்றுத் தண்ணீரை சென்னைக்குக் கொடுக்கிற காரணத்தால், நெல்லூர் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள், கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்கு வரவில்லை" என்று சொன்னார்கள்.

முற்பகல் 10-45

உடனடியாக அதற்கு ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் என்ன சொன்னார்கள்? என்றால், 9-7-199-ல் 'இந்து' பத்திரிகையிலே ஆந்திர முதலமைச்சர் நம்முடைய புத்தூர் பக்கத்திலே 8-7-1999-ல் வந்து; இருந்தார்; அப்போது அவர் 'இந்து' பத்திரிகைக்கு பேட்டி அளிக்கின்றபோது சொன்னார்.

"Mr. Naidu rebutted Congress Leader's Charge". அதாவது அதை மறுத்தார் என்று வந்திருக்கிறது.

"Mr. Naidu rebutted Congress Leader's Charge that the water being shought to be supplied to Chennai was not Krishna water, but that drawn from Pennar basin in Nellore District".

ஆக, கொடுக்கப்படுகிற தண்ணீர் கிருஷ்ணா தண்ணீர் அல்ல நெல்லூர் பகுதியில் கொடுக்கிற தண்ணீர்தான் என்று ஜனார்த்தன ரெட்டி சொன்னதை அவர் மறுத்தார். மேலும் அவர் சொல்கிறார்;

"This is factually incorrect". அவர் சொல்லுகிறார் "இது ரொம்ப தப்பு" என்று.

"He said and pointed out that as much as 23.31 T.M.C. of Krishna Water was sent through Nipulavahu in to the Pennar system between 1996 and 1999 out of which hardly 9.05 T.M.C. was supplied to Chennai".

ஆக் 23.31 டிஎம்சி. கிருஷ்ணா தண்ணீர் ஸ்ரீசைலத்திலிருந்து விடப்பட்டு நிப்புலவாகு ஓடை வழியாக சோமசிலாவுக்கு விடப்பட்டு, பிறகு அதிலே 9.05 டி.எம்.சி. தண்ணீரை இங்கே சென்னைக்கு அனுப்பியிருக்கிறோம் என்று ஆந்திரத்தின் முதலமைச்சர், கொடுக்கப்பட்டது கிருஷ்ணா தண்ணீர் தான் என்று தெரிவித்திருக்கிறார். அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் சொல்வதைக் கூட நீங்கள் உண்மை அல்ல என்று கருதிக்கொள்கிறீர்களா? நான் சொல்வதைத் தான் நீங்கள் நம்பவில்லை. பத்திரிகைகள் சொல்வதை நீங்கள் நம்பவில்லை. சந்திரபாபு நாயுடு அவர்கள் சொன்னதையும் நீங்கள் நம்பவில்லை. நான் அவர்களுக்கு ஒன்று தெரிவிக்கிறேன். அதுபோல இன்று சென்னை மாநகரத்திற்குக் கிருஷ்ணா தண்ணீர் வந்த பிறகு Metro Water Sewage-களை எல்லாம் சரிசெய்வதற்கும், பழைய குழாய்களை எடுப்பதற்கும், உலக வங்கியினுடைய பணத்தைக் கேட்டார்கள். உங்களுக்குத் தண்ணீர் எங்கே இருந்து வருகிறது என்று உலக வங்கியில் கேட்டார்கள். கிருஷ்ணா நதியிலிருந்து வருகிறது என்றார்கள். உலக வங்கியினுடைய team கிட்டத்தட்ட 40 நாட்களுக்கு மேலாக ஸ்ரீசைலத்திலிருந்து ரெட்ஹில்ஸ் வரையிலே அவர்கள் பல பயணங்களை மேற்கொண்டார்கள். Batch, batch ஆகப் போய்ப் பார்த்தார்கள். பார்த்துவிட்டு அவர்கள் "Mission assessment and recommendations" என்று ஒரு recommendation கொடுத்தார்கள். அதிலே 10-ஆவது பக்கத்திலே என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், "T.G.P. — Telugu-Ganga Project" என்று. நம்முடைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்



சுந்தரம் அவர்கள் கூடக் கேட்டார்கள். "இது தெலுங்கு—கங்கை திட்டமா அல்லது கிருஷ்ணா திட்டமா" என்று, இதுகூட உங்களுக்குத் தெரியவில்லை. ஆந்திர எல்லை வரையிலே தான் அதை தெலுங்கு கங்கைத் திட்டம் என்பார்கள். ஆந்திர எல்லை முடிந்தவுடன் நம்முடைய எல்லையிலே கிருஷ்ணா நதித் திட்டம் என்பார்கள். இது பாலர் பாடம். "T.G.P. was able to provide 2.3 T.M.C. of Krishna Water at the Andhra Pradesh — Tamil Nadu border in 1997. It will be able to provide 5 T.M.C. in 1998. Though the T.G.P. is not complete, this achievement was made possible by diverting Krishna Water into the Kundhur river and recovering it in the Somaseela reservoir on the Pennar river. This provincial arrangement shows that Andhra Pradesh will always be able to provide Krishna Water to Tamil Nadu". உலக வங்கியினுடைய சர்ட்டிபிகேட் இது. இன்றைக்கு இவர்கள் சொன்னார்களே ஒரு கட்டத்திலே "கால்வாய் வெட்டவில்லை" என்று. அது வெட்டப்படவில்லை என்றாலும் பரவாயில்லை. உலக வங்கி சொன்னார்கள் "தண்ணீரை நிப்புலவாகு, குந்தூர் ஆறுகள் வழியாக விட்டால் அது சோமசீலா வந்து தமிழ்நாட்டிற்கு வந்து சேரும் வாய்ப்பு இருக்கிறது" என்று. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 23 டிஎம்சி. தண்ணீரை அப்படி விட்டிருக்கிறார்கள் என்றும் போய்ப் பார்த்து, அறிந்து உலக வங்கி நிபுணர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் உலக வங்கி நிபுணர்களுடைய கருத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா? நான் இன்னும் அவர்களுக்கு வேண்டிய காரணத்தோடு சொல்ல வேண்டுமானால், தண்ணீர் தருகின்ற பிரச்சினை ஏற்பட்டபோது, ஆந்திரப் பிரதேசத்திலே ஒரு பெரிய பிரச்சினை உருவாகியது, தண்ணீர் தரக்கூடாது என்று. அப்போது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் காங்கிரசினுடைய தலைவியாக இன்றைக்கு இருக்கின்ற திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு 11-7-1999 அன்று ஒரு கடிதம் எழுதினார்கள். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டது, அதன் தமிழாக்கத்தைப் படிக்கிறேன்; இன்னொரு தடவை படித்துச் சொல்லத் தேவை இல்லை என்பதற்காக.

முற்பகல் 10-50

"அன்புள்ள திருமதி சோனியாஜி, சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீர் வழங்கப்படுவதை எதிர்த்து ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் (இ) கட்சியினர் போராட்டம் நடத்துவதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். இத்திட்டம் மறைந்த பிரதமர், திருமதி இந்திரா காந்தி அவர்களால் 1976 ஆம் ஆண்டில் அறிவித்து அனுமதி வழங்கியதாகும். இத்திட்டத்திற்காக

700 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்ட பின் சென்னை நகர மக்கள் 1996 ஆம் ஆண்டு முதல் கிருஷ்ணா நீரைக் குடிநீராகப் பெற்று வருகிறார்கள்" — அழுத்திச் சொல்லியிருக்கிறார் — 'ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் (இ) கட்சியினரால் நடத்தப்படும் இந்தப் போராட்டத்தை தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். தங்களிடமிருந்து பதில் கிடைத்தால் பெருமகிழ்ச்சி அடைவேன்" என்று எழுதி, "அன்புள்ள" என்று கலைஞருடைய பெயரைப் போட்டார்.

அந்த அம்மா, ஜூலை 27, 1999 அன்று திரும்ப ஒரு லெட்டர் எழுதினார். "அன்புள்ள திரு. கருணாநிதி, 11-7-1999 ஆம் நாளிட்ட தங்கள் கடிதத்திற்கு நன்றி. ஆந்திரப் பிரதேசத்திற்குப் பொறுப்பாளராக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஆர்.கே. தவான் அவர்களை தங்கள் கடிதத்தில் கூறப்பட்டுள்ள பிரச்சினை குறித்து அனைத்து விவரங்களையும் பெற்று இது தொடர்பாகத் தங்களுக்கு விரிவான பதிலை அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளேன்" என்று அந்த அம்மா எழுதி, "அன்புள்ள சோனியா காந்தி" என்று எழுதியிருக்கிறார்.

தவான் அவர்களை விவரம் அளிக்கச் சொன்ன இந்தக் கடிதத்திற்கு, உடனே தவான் அவர்கள் 28-7-1999 அன்று கலைஞர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். "அன்புள்ள திரு. கருணாநிதிஜி, காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு 11-7-1999 அன்று தாங்கள் எழுதிய கடிதத்தை அன்புடன் நினைவுகூரவும். இப்பொருள் குறித்து, எங்களுடைய கட்சியினரிடமும், பிற வழிகளிலும் அனைத்து விவரங்களையும் பெறுமாறு திருமதி சோனியா காந்தி அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளேன். அந்த விவரங்களிலிருந்து பின்வருவனவற்றைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் என்ன சொன்னாரோ அதை எழுதினார். சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்குவது குறித்து 1976-ல் இந்திரா காந்தி அறிவித்த திட்டத்தைப் பற்றி தாங்கள் நன்கு அறிவீர்கள். தாங்களும் ஆந்திரப் பிரதேச முதலமைச்சரும் 1996-ல் மேயர் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் வடிவமைத்த திட்டம் சென்னைக்குப் பெண்ணாற்றுத் தண்ணீரை வழங்குவது சம்பந்தப்பட்டதாகும். ஆந்திரத்தில் தற்போது எழுந்துள்ள பிரச்சினை இந்திரா காந்தி அவர்கள் மிகக் கவனமாகச் சிந்தித்து உருவாக்கிய திட்டம், கைவிடப்பட்டு, அரசியல் ரீதியாக, சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில், தற்காலிக மாற்றுத் திட்டத்தை 1998-ல் முந்தைய திட்டத்திற்கு மாற்றியுள்ளதாகத் தெரிகிறது. தெலுங்கு தேச அரசு,



தெலுங்கு கங்கைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மிகவும் மெத்தனமாக இருந்து வருகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரிஜினல் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அண்மைக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், முன்னதாக வடிவமைக்கப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்படாத ராயலசீமா, நெல்லூர் பகுதிகளைச் சேர்ந்த பெரும்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்து, தற்காலிக ஏற்பாடுகள் காலவரம்பற்று நீடிக்கப்படுவதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கருதுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் மாற்று ஏற்பாடாகச் செயல்படுத்தப்பட்டுள்ள தற்காலிகத் திட்டம் நிரந்தரமானதாக மாறிவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, பாதிப்பு ஏற்படும் என்பதால் ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி தெலுங்கு தேச அரசாங்கத்தின் திறமைக் குறைவுக்கு எதிராகப் போராடுவதில் முழு நியாயம் இருப்பதாகக் கருதுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில், காங்கிரஸ் கட்சி முற்றிலும் நியாயத்தின் அடிப்படையில் நடத்திவரும் போராட்டத்திற்கு காங்கிரஸ் தலைவரிடம் விளக்கம் கேட்பதற்கு பதில், ஆந்திரப் பிரதேச முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி, இரண்டு மாநில அரசுகளுக்கு இடையில் தெலுங்கு — கங்கைத் திட்டத்தில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி திட்டத்தை எப்போது நிறைவேற்றுவீர்கள் என்று கேட்கலாம் என்பது என்னுடைய கருத்து, இதனை நீங்கள் ஏற்பீர்கள் என்று கருதுகிறேன், நன்மதிப்புடன், ஆர்.கே. தவான்" என்று. ஆக, தவான் என்ன செய்தார் என்றால், அவர் அந்த காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து, அவரும் பெண்ணாற்றுத் தண்ணீரைத்தான் உங்களுக்குக் கொடுக்கிறார்கள். ஸ்ரீசைலத்திலிருந்து தண்ணீர் வரவில்லை என்ற கருத்தை அவரும் அழுத்தந்திருத்தமாக எழுதினார்கள். அந்தக் கடிதத்திற்கு, தவான் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைசசர் கலைஞர் அவர்கள் என்னை பதில் எழுதச் சொன்னார்கள். நான் 5-8-1999-இல், மதிப்பிற்குரிய தவான் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்திலே என்ன எழுதினேன் என்று சொன்னால், "அன்புள்ள தவான், சென்னைக்குக் குடிநீர் வழங்குவது தொடர்பாக தமிழக முதலமைச்சருக்கு" — எப்படி கிருஷ்ணா நீர் வருகிறது என்பதை விவரமாக, நான் தற்போது விளக்கமாகச் சொல்வதைவிட, இந்தக் கடிதத்தில் இருப்பதைப் படித்தால் முடிந்துவிடும் — "28-7-1999 தேதியிட்டு தாங்கள் அனுப்பிய கடிதத்தை அன்புடன் நினைவு கூரவும். தமிழக முதலமைச்சரின் அறிவுரைகளுக்கு இணங்க இப்பொருள் குறித்த உண்மையான விவரங்களைப் பின்வருமாறு தெரிவிக்கிறேன்:

*முற்பகல் 10-55*

*தங்களுடைய கடிதத்தில் பத்தி 3-இல், 1996-இல் மேயர் தேர்தலுக்கு முன் சென்னைக்கு பெண்ணாற்றுத் தண்ணீரை வழங்குவதற்காக தமிழ்நாடு முதலமைச்சரும், ஆந்திரப்பிரதேச முதலமைச்சரும் ஒரு திட்டத்தை வடிவமைத்தார்கள் என்று குற்றம் சாட்டியிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது ஆகும். இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்பதுடன், இதனை நான் வன்மையாக மறுக்கிறேன். இதுவரை, தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆந்திரப்பிரதேச அரசுக்கு தமிழக அரசு 512 கோடி ரூபாய் அளித்துள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.” மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் 1000 கோடி ரூபாய் என்றார்கள். இவரும் 1000 கோடி ரூபாய் என்றார். மற்றவர்களும் 1000 கோடி ரூபாய் என்றார்கள். காரணம் என்ன என்று கேட்டால், டி.வி.யிலே... (குறுக்கீடு) நீங்கள் சொல்லவில்லை, அழகிரி. பரவாயில்லை. (குறுக்கீடு) நீங்கள் சொன்னது வேறு. இப்பொழுது இதெல்லாம் சொல்லமாட்டீர்கள். இப்பொழுது நீங்கள் சரியாகிவிட்டீர்கள். (சிரிப்பு) என்ன ஆனது என்று கேட்டால், “1000 கோடி ரூபாய், 1000 கோடி ரூபாயைக் கொட்டிவிட்டார்கள்” என்றார்கள் அதோடுமட்டுமல்ல; இங்கே பேசியவர்கள், “டி.வி.யில் சொன்னார்கள், பத்திரிகையில் சொன்னார்கள்” என்றார்கள். இதிலே வேறு, அந்த டி.வி.காரரர் பேட்டி எடுத்துக்கொண்டே போவார், ஒவ்வொருவராக. “திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களே, நீங்கள் இதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?” “1000 கோடி ரூபாய்; அது ரொம்ப மோசம்; கருணாநிதி இவ்வளவு கொட்டிக் கொடுத்திருக்கக் கூடாது”. “திராவிடக் கழகத் தலைவர் வீரமணி அவர்களே, தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?” “1000 கோடி ரூபாயை மக்கள் வரிப் பணத்திலிருந்து வாரிக் கொடுத்த கருணாநிதி, இந்த நாட்டிற்குத் துரோகம் செய்துவிட்டார்”. அவரவர்கள் மைக்கைக் கண்டால் விடவில்லை. அடித்துத் தள்ளிவிட்டார்கள். நான் ஒன்று கேட்கிறேன். இவ்வளவு நாட்களாக நாம் இந்தச் சபையிலே இருக்கிறோமே, யாராவது ஒருவர், “என்ன சார், 1000 கோடி, 1000 கோடி என்கிறார்களே, அது எவ்வளவு?” என்று எதிரில் இருக்கிறவர்கள் கேட்டிருக்க வேண்டாமா? (குறுக்கீடு) உங்களுக்கும் அதுவல்ல. இருக்கட்டும்.*

*இரண்டாவது ஒன்று கேட்கிறேன்; 1000 கோடி ரூபாயைக் கலைஞரே தூக்கிக் கொடுத்திருந்தால், அப்போது எம்.ஜி.ஆர். கொடுத்தது கணக்கிலே*



*வராதா? ஜெயலலிதா கொடுத்தது வராதா? ஆக, ஓர் உண்மையை அறிந்துகொள்ளாமலே, இந்த ஆட்சியின்மீது, எங்கள்மீது எவ்வளவு காழ்ப்போடு, சொல்கிறீர்கள்? — எவ்வளவு கொடுத்தோம் என்பதைத்தான் கலைஞர் அவர்கள் அவருக்கு எழுதிய கடிதத்தில் எழுதியிருக்கிறார்கள். நாம் இதுவரையிலே கொடுத்திருப்பதே 512 கோடி ரூபாய்தான். 1000 கோடி என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு இதை நான் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு மேலே நான் ராஜிநாமா பண்ண வேண்டுமா? (குறுக்கீடு) நீங்கள்தான் அப்பொழுது சொன்னீர்கள். சரி, இப்பொழுது நீங்கள்தான் இராஜிநாமா பண்ண வேண்டும். ஒழிந்து போகட்டும். வேண்டாம், கடைசி நாள்.*

*1992-ல் அப்போதைய ஆந்திரப்பிரதேசத்தின் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களும், அப்போதைய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களும், 1995 ஆம் ஆண்டே சென்னை நகருக்கு தெலுங்கு-கங்கை திட்டத்தின்படி, தண்ணீர் வழங்கப்படும் என்று இருவரும் இணைந்து உறுதி அளித்தார்கள். அப்போதே, விஜயபாஸ்கர ரெட்டியும், இந்த அம்மாவும் சேர்ந்து, எப்போது சொல்கிறார்கள்?” “1995-லே நாங்கள் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுக்கிறோம்” என்று* statement *விட்டார்கள்.* statement *எல்லாம் என்னிடம் இருக்கிறது.* Letters *இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விஜயபாஸ்கர ரெட்டி என்று சொன்னீர்கள். ஜனார்த்தன ரெட்டி என்று படித்துக்கொள்ளுங்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *இல்லை, முதலிலே அந்த அம்மா* statement *கொடுத்தது விஜயபாஸ்கர ரெட்டி அவர்களோடுதான். அப்போது என்ன செய்தார்கள் என்று கேட்டால், நான் ஒன்று கேட்கிறேன்; எல்லா கால்வாயையும் வெட்டி, இந்த 13 கிலோமீட்டர் நில ஆர்ஜிதத்திலே இருப்பதால் வெட்டாமல் இருப்பதற்கே எங்களை நீங்கள், “தண்ணீரே வரவில்லை, கொடுத்தது வேறு தண்ணீர்” என்று சொல்கிறீர்களே, 1995-லே கொடுக்கிறேன் என்று அந்த அம்மா சொன்னார்களே, அப்பொழுது இந்தக் கால்வாயெல்லாம் வெட்டப்பட்டிருந்ததா?*

*ஒருவன் ராஜாவைப் பார்க்கப் போனான். பார்க்கப்போகும்போது, ராஜாவிற்கு விருப்பமான பொருட்களை எடுத்துக்கொண்டு போக*

வேண்டும். ராஜா கேட்கிற கேள்விக்குச் சரியான பதில் சொல்லவில்லையென்றால், அவன் எடுத்து வந்த பொருளை, அவன் வாயிலே வைத்து திருகிவிடுவார் ராஜா. ஒருவன் அன்னாசிப்பழம் எடுத்துக்கொண்டு போனான். அவனிடம் கேள்வி கேட்டார், ராஜா. பதில் சொல்லத் தெரியவில்லை. எனவே, ராஜா அந்த அன்னாசிப்பழத்தை அவன் வாயிலே வைத்து திருகினார். எல்லோரும் அழுதார்கள், அவன் சிரித்தான். "ஏனடா சிரிக்கிறாய்" என்று கேட்டார். "இல்லை, சார், எனக்குப் பின்னாலே வந்திருக்கிற ஒருவன் பலாப்பழத்தோடு நிற்கிறான். (பலத்த சிரிப்பு) நான் அவனை நினைத்து சிரிக்கிறேனே தவிர, இந்த வலிக்கு சிரிக்கவில்லை" என்றான். இவ்வளவையும் வெட்டி, Srisailam to Poondi வரையிலே கால்வாயைச் சீர்படுத்தி, 13 கி.மீ. இல்லாததற்காக நிப்புலவாகு ஓடையிலே திருப்பி, தண்ணீரைக் கொண்டுவந்து விட்டதற்கே "It is a political fraud" என்றீர்களே, இதை என்ன சொல்லித் தொலைப்பது? இவ்வளவு பெரிய fraud ஆ?

*முற்பகல் 11-00*

இப்போது சொல்கிறேன், கேளுங்கள்; எங்களுக்குத் தெரியும் அப்போது வரதாபாளையம் வெட்டப்படவே இல்லை. அப்போது அகுடெக்யூகல் கட்டப்படவே இல்லை. பெரிய பெரிய deep cutting மிட்டல்கண்டு அருகில் செய்யப்படவே இல்லை. பல இடங்களில் வெட்டப்படாமல் இருக்கும்போது, ஜெயலலிதா "1995-லே கொடுப்போம்" என்றார்கள். அது போகட்டும். அதனாலே சொல்கிறேன்; எவ்வளவு பெரிய fraud செய்திருக்கிறார்கள் அப்போது என்பதற்காகச் சொல்கிறேன். "1995 ஆம் ஆண்டில் சென்னை நகரில் தெலுங்கு-கங்கை திட்டம் செயல்படும்" என்று அறிவித்தார். 1993 ஜனவரியில் மீண்டும் ஆந்திரப் பிரதேசத்தில், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் விஜயபாஸ்கர ரெட்டி அவர்களும், செல்வி ஜெயலலிதா அவர்களும் இணைந்து இந்த அறிக்கையைவிட்டு, அதில் "1995 ஜனவரியில், சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்கப்படும்" என்பதை மீண்டும் உறுதிப்படுத்தினார். இது சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கு, கிருஷ்ணா நீர் வழங்குவதற்கு அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை உறுதி செய்கிறது. ஸ்ரீசைலத்திலிருந்து கிருஷ்ணா நீரை அளிப்பதாகத்தான் ஆந்திரப் பிரதேச அரசு, அடிக்கடி அளித்து வந்த உறுதிமொழிகள் அமைந்திருக்கின்றன. பின்வரும் விவரங்கள், தங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கக்கூடும். 1996-இல், 11.473 டி.எம்.சி. கிருஷ்ணா நீர், நிப்புலவாகு ஓடைக்கு விடப்பட்டது. கிருஷ்ணா நீர் இல்லை



என்கிறார்களே, அவர்களுக்கு இந்தப் பதிலை அளிக்கிறேன்; இதில் 1.674 டி.எம்.சி. நீர் மட்டுமே சோமசீலாவில் பெறப்பட்டது. இதில், 0.076 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே சென்னைக்கு வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டில், 18.90 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் ஸ்ரீசைலத்தில் விடப்பட்டது. இதில், ஏறத்தாழ 4.337 டி.எம்.சி. நீர் கண்டலேறு — பூண்டிக் கால்வாயில் விடப்பட்டது. ஆனால், 2.869 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே சென்னைக்கு வந்து சேர்ந்தது. 1998-இல் மறுபடியும் 19.63 டி.எம்.சி. கிருஷ்ணா நீர், நிப்புலவாகு ஓடைக்கு விடப்பட்டது. அதில், 4.076 டி.எம்.சி. தண்ணீர், கண்டலேறு — பூண்டிக் கால்வாயில் விடப்பட்டது. இதில், 2.868 டி.எம்.சி. நீர் மட்டுமே சென்னைக்கு வந்து சேர்ந்தது. மேற்கண்ட விவரங்களிலேயிருந்து, ஆந்திரப் பிரதேசத்தின் காங்கிரஸ் கட்சியினர், சென்னைக்கு பெண்ணாற்றிலிருந்து தண்ணீர் வழங்கப்படுவதாக குற்றஞ்சாட்டிப் போராட்டம் நடத்துவதில் எந்த நியாயமும் இல்லை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

சென்னைக்கு ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென இரு மாநில அரசுகளும் ஒப்பந்தம் செய்திருந்த போதிலும், ஆண்டுக்கு 2060 டி.எம்.சி. அளவுக்கு மேல் நீரைப் பெறும் ஆற்றிலிருந்து, ஆண்டுக்கு வெறும் 3 டி.எம்.சி. அளவுக்கும் குறைவான தண்ணீரே அனுப்பப்படுகிறது என்பதைப். போராட்டத்தைத் தூண்டிவிடும் தலைவர்கள் உணர வேண்டும். தற்போது, இந்த சரியான விவரத்தைத் தாங்கள் அறிவீர்கள் என்றும், சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கான கிருஷ்ணா ஆற்றிலிருந்து விடப்படும் நீரை எதிர்க்கும் ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கட்சியினருக்கு அறிவுரைகள் கூறுவீர்கள் என்றும் நம்புகிறேன். உண்மையில், தமிழக முதலமைச்சர், அகில இந்திய காங்கிரஸ் (இந்திரா காந்தி) கட்சியின் தலைவர் சோனியா காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதிய நோக்கமும் இதுவேயாகும் என்று நான் கிருஷ்ணா நதி நீர் எந்தெந்த ஆண்டு எவ்வளவு விடப்பட்டது; ஸ்ரீசைலத்திலிருந்து எவ்வளவு கண்டலேறுவுக்கு வந்தது; எவ்வளவு அது நம் ஊருக்கு வந்தது என்பதை எல்லாம் விவரமாக திரு. தவான் அவர்களுக்கு இந்தக் கடிதத்திலே எழுதியிருக்கிறேன். எனவே, சென்னைக்கு கிருஷ்ணா நீர் வரவில்லை என்று சொல்பவர்களுக்கு, இத்தனை ஆதாரங்களை நான் உங்களுக்குத் தெரிவித்துக் காட்டிய பிறகும், இன்னும் கிருஷ்ணா நீர் வரவில்லை என்று வாதாடப் போகிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, இங்கே தரப்பட்ட குற்றச்சாட்டுகளிலே ஒன்று, கால்வாயே வெட்டவில்லை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் அதிக நேரம் எடுப்பீர்களா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. முடிந்துபோய்விட்டது. ஒன்றுதான், பெரிய பாயின்ட்.

கால்வாயே வெட்டவில்லை என்று சொன்னார்கள். நான் இதிலே உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியவில்லை என்றால், தெரிந்தவன் சொன்னதையாவது நம்பவேண்டும். நாம் என்ன செய்யமுடியும், அவர்கள் செய்யவில்லை என்றால்? இதிலே ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. நான் இப்போதும் சொல்கிறேன் உங்களுக்கு. Clean-ஆக மனதிலே போட்டுக்கொள்ளுங்கள். ஸ்ரீசைலம் அணைக்கட்டு — அது, கிருஷ்ணா நதியில் நாகார்ஜுன சாகர் அணைக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கிறது, அந்த ஸ்ரீசைலம் அணைக்கட்டிலே, போத்திரெட்டிப்பட்டு என்ற இடத்திலே தண்ணீர் எடுக்கிறார்கள். போத்திரெட்டிப்பட்டு to பனகசாலா ரெகுலேட்டர், பனகசாலா ரெகுலேட்டர் to வெலுகோடு ரிசர்வாயர், வெலுகோடு ரிசர்வாயர் to சென்னமுகப்பள்ளி மலை, சென்னமுகப்பள்ளி dividing dam to சோமசீலா, சோமசீலா to கண்டலேறு. கண்டலேறு to சத்தியவேடு, சத்தியவேடு, தமிழ்நாட்டு border; பிறகு அங்கிருந்து பூண்டி. இதுதான் வழி; இதிலே ஒன்றும் இல்லை.

*முற்பகல் 11-05*

இப்போது சொல்கிறேன் கேளுங்கள். இந்தத் திட்டத்தின்படி, ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து, சோமசீலா வரையில் — அதுதான் first stage என்று சொல்கிறார்கள், அதைப்பற்றி அக்கறை இல்லை — ஸ்ரீசைலத்திலிருந்து, சோமசீலா வரை 178 கி.மீ. தூரம்; ஸ்ரீசைலம் அணையிலிருந்து தண்ணீர் எடுக்கப்படும்; போத்திரெட்டிப்பட்டு என்ற இடத்திலிருந்து பனகசாலா ரெகுலேட்டர் வரை உள்ள தூரம் 20.25 கி.மீ. இந்தக் கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. பனகசாலா ரெகுலேட்டரிலிருந்து, வெலுகோடு ரிசர்வாயருக்கு உள்ள தூரம் 7.7 கி.மீ. இந்தக் கால்வாயும் வெட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. "இந்த வெலுகோடு ரிசர்வாயரைக் கட்டவில்லை" என்று யாரோ சொன்னார்கள். இந்த வெலுகோடு ரிசர்வாயருடைய கொள்ளளவு 16.95 டி.எம்.சி. 35,000 ஏக்கருக்கு இப்போது தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டையும்கூடக் கட்டவில்லை என்று சொன்னார்கள். அதுவும் தவறானது. வெலுகோடு ரிசர்வாயரிலிருந்து, சென்னமுகப்பள்ளிக்கு வரும் வழியில்தான் பிரம்மகாரி மடம் என்று இருக்கிறது. பிரம்மகாரி மடம் — dividing dam — என்பதற்கு உள்ள தூரம் 107.61 கி.மீ. இதுவும் வெட்டப்பட்டிருக்கிறது. இந்த பிரம்மகாரி மடத்திலிருந்து — dividing dam — பெண்ணாறுக்கு இடையே உள்ள தூரம் 45 கி.மீ. இந்த 45 கி.மீட்டரில், 32 கி.மீ. தூரத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. மீதி 13 கி.மீட்டர் தான். இந்த 13 கி.மீ. தூரமும், வழக்கு, கோர்ட், அதிக நஷ்டஈடு என்கிற பிரச்சினைகளால் நின்று கொண்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனாலும், அந்த 13 கி.மீட்டரினால், கிருஷ்ணா நீர் வருவது தடைபடவில்லை. அதுதான் நிப்புலவாகு ஓடையிலாவது வரலாம் என்று நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைத்தான் உலக வங்கியும் தெரிவித்திருக்கிறது. பிறகு உங்களுக்குத் தெரியும், சோமசீலாவிலிருந்து, கண்டலேறுக்கு 45 கி.மீ. உள்ள கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. கண்டலேறுவிலிருந்து, ஜீரோ பாயிண்ட் 158 கி.மீ. இதுவும் முடிந்துவிட்டது. ஜீரோ பாயிண்ட்டிலிருந்து பூண்டி 25.27 கி.மீ. இதுவும் வெட்டப்பட்டிருக்கிறது. ஆக, கால்வாய் வெட்டப்படவில்லை என்று இருப்பது 13 கி.மீட்டரைத் தவிர வேறு அல்ல என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த 1000 கோடி ரூபாய் கதையைத்தான் நான் சொன்னேன். ஆகையினால், 1000 கோடி ரூபாய் அல்ல, 512 கோடி ரூபாய் என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அவர்கள் "இதிலே யாருக்கு அக்கறை இருக்கிறது" என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் அதிகமாகப் பேசவில்லை. இந்தத் திட்டம் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, 1983-லே போடப்பட்டு, பிறகு கலைஞர் அவர்கள் 30 கோடி ரூபாயை அன்றைக்குத் தந்தார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தைப்பற்றிக் கேட்பாரே கிடையாது. 1989-லே கலைஞர் அவர்கள் வருகிற வரையில், இப்படிப்பட்ட ஒரு திட்டம் தமிழ்நாட்டு அரசியலிலே இருப்பதே தெரியாது. ஆனால்,

இரண்டு, மூன்று முறை — நான் இப்போது அவற்றையெல்லாம் அரசியலாக்க விரும்பவில்லை — என்.டி.ஆர். அவர்கள் இந்தத் திட்டம் குறித்துப் பேச வந்தார்கள். ஆனால், அப்போது இங்கே மாண்புமிகு முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை. பிறகு தோட்டத்திலே போய்ப் பார்த்தார். அப்போது அவர் வேறு மாதிரி இருந்தார் என்பதையெல்லாம் நான் சொல்லி இப்போது அரசியலாக்க விரும்பவில்லை. ஆனால், யாருமே திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள்தான் *1989*-லே வந்த பிறகு, இந்தத் திட்டம் குறித்து — அவரே, மாண்புமிகு முதலமைச்சரே — ஆந்திரப் பிரதேசத்திற்குச் சென்று என்.டி.ஆர்.-ஐ இருமுறை சந்தித்துவிட்டு வந்தார். என்.டி.ஆர். பாஸ்கரராவ், சென்னாரெட்டி, விஜயபாஸ்கரரெட்டி, ஜனார்த்தனரெட்டி, சந்திரபாபு நாயுடு ஆகிய *6* முதலமைச்சர்கள் இதுவரையிலே ஆந்திராவிற்கு முதலமைச்சர்களாக வந்திருக்கிறார்கள். இதில், விஜயபாஸ்கரரெட்டி, பாஸ்கரராவ் ஆகியவர்களைத் தவிர, மற்ற நான்கு முதலமைச்சர்களைச் சந்தித்து, இந்தத் திட்டத்திற்கு முயற்சி எடுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர், கலைஞர் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை நான் ஒளிவுமறைவில்லாமல் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்கிறேன். மனதிலே கை வைத்துச் சொல்லுங்கள். *1983*-லே ஆரம்பித்தது. அதற்குப் பிறகு நாங்கள் இரண்டு ஆண்டுகாலம் இருந்தோம். இந்த *2* ஆண்டுகாலத்தில் கலைஞர் அவர்கள் எங்களை — அப்போது, திரு. பொன்முடி அவர்களிடத்திலே குடிநீர் வடிகால் வாரியம் இருந்தது. இதே ஸ்ரீசைலத்திலிருந்து, பூண்டி வரையிலே எங்களை — இருமுறை சென்று பார்க்க வைத்தார். நான் ஆந்திராவிற்கு, சோமசிலா அணைக்கட்டு வரையிலே எத்தனை தரம் போய் இருப்பேன் என்று எனக்கே தெரியாது. அந்த வனாந்திரங்களில் நடந்து, காடு, மேடு வனாந்திரங்களை எல்லாம் கடந்து, சென்னமுகப்பள்ளி மலைக்கு அப்பால், கூழாங்கற்களிலே நாங்கள் மைல் கணக்கிலே நடந்து இருக்கிறோம். நான் ஒரேயொரு கேள்வியைக் கேட்கிறேன். இந்த *4* ஆண்டுகாலத்திலே பலமுறை நான் போய் வந்திருக்கிறேன். *5* ஆண்டுகாலம் இந்த அம்மையார் அவர்களுடைய ஆட்சி நடந்தது. இந்த *5* ஆண்டுகாலத்தில் ஒரு அமைச்சராவது ஆந்திராவிற்குச் சென்று, இந்த கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயைப் பார்வையிட்டார் என்று யாராவது ஒருவர் விரல் விட்டுச் சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) போய்ப் பார்த்தது உண்டா?



பேசியது உண்டா? நடந்து பார்த்ததுண்டா? இல்லையே. அவர்களுக்கு அந்தத் திட்டம் வேறு; இந்தத் திட்டம் பற்றித் தெரியாது. இல்லாவிட்டால் என்ன நடக்கிறது என்றுகூடத் தெரியாமல், *1,000* கோடி ரூபாய் என்று சொல்வார்களா? எனவே, இவ்வளவு அக்கறை உள்ளது இந்த அரசு. ஆகையினாலே, இதிலே கட்சி மன மாச்சரியங்களைப் பார்க்கவில்லை கலைஞர் அவர்கள். இல்லாவிட்டால் அவர் ஒரு முதல்வர். சோனியா காந்தி அவர்கள் இன்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர். அந்த அம்மையார் அவர்களுக்குக் கடிதம் எழுதி, "அம்மையார் அவர்களே, குடிக்கிற நீருக்கு உங்கள் கட்சிக்காரர்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் அறிவுரை வழங்கக் கூடாதா" என்று கட்சி வித்தியாசமில்லாமல் ஒரு முதலமைச்சர், சோனியாவிற்கு கடிதம் எழுதினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). பதவி, அந்தஸ்து, தகுதி, பார்த்தாரா, இல்லை, இந்த மாநிலத்தினுடைய உரிமையைப் பார்த்தார். மனிதாபிமான உணர்வைப் பார்த்தார். மக்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார். அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்ததைக்கூடக் கொச்சைப்படுத்தினார்கள். தேர்தலிலே தோற்றுப் போனவர்கள், "அவன் கள்ள ஓட்டுப் போட்டுவிட்டான்" என்பார்கள்; இல்லாவிட்டால் "ரூபாய் கொடுத்துவிட்டார்கள் என்பார்கள்". "அடியாட்களை வைத்து, பூத் கேப்சர் செய்துவிட்டான்" என்பார்கள். அப்படி மாநகராட்சித் தேர்தலிலே தோற்றுப்போனதற்கு, அதுவெல்லாம் கிருஷ்ணா நீர் என்று சொல்லி ஏமாற்றிவிட்டீர்கள் என்று இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அரசியலைக் கொச்சையாக்கலாமே தவிர, உண்மை அதுவல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

முற்பகல் *11-10*

இதிலே யாருக்கு அக்கறை என்பதை எல்லாம் தெரிவித்திருக்கிறேன். அதிக நேரத்தை எடுத்து நான் விளக்க விரும்பவில்லை பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையை நான் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். இந்த அரசு எடுத்த நடவடிக்கையைத் தெரிவித்திருக்கிறேன். இதுவரையில், கிருஷ்ணா நீரை நாம் பெற்றிருக்கிறோம்.

நம்முடைய கிருஷ்ணசாமி கேட்டார், ஏன் *1997, 1998* இலிருந்து எல்லாம் வரவில்லை என்று. அப்போது, இங்கே மழை பெய்து நமக்கு நிறையத் தண்ணீர் இருந்தது. போதாத காலம் இப்போதுதான்; நமக்கு மழை வரவில்லை. அப்போது, நம்முடைய ஏரி, குளங்கள் நிரம்பிப் போய் இருந்தன. ஆகையினாலே, நாம் தண்ணீரைப் பெற முடியவில்லை,

அவர்களும் கொடுக்கவில்லை. இப்போது ஆந்திராவிலும் வறண்டு போய் இருக்கிறது. ஆகையினாலேதான் இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் தொகுப்பாகச் சொல்கிறேன், பெற்றது எல்லாம்..

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எவ்வளவு தண்ணீர் வருகிறது, தொடர்ந்து வருமா என்பதை மட்டும் தயவுசெய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் நேற்று நான் பத்திரிகையிலே தெரிவித்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதைக் கவனிக்காமல் விட்டிருக்கலாம். இப்பொழுதும் சொல்கிறேன்.

*கண்டலேறு அணையிலிருந்து 3-5-2000 அன்று 8 மணி அளவில் வினாடிக்கு 200 கனஅடி என்ற அளவில் திறந்துவிடப்பட்டது. இந்தத் தண்ணீர் ஆந்திர மாநிலத்தில், 152 கிலோ மீட்டர் கடந்து, 11-5-2000 அன்று அதிகாலை 5 மணிக்குத் தமிழக எல்லையில், வினாடிக்கு சுமார், 7.80 கனஅடி அளவில் வந்தடைந்து, படிப்படியாக, அதிகரித்து, 12-5-2000 பிற்பகல் முதல் சராசரியாக வினாடிக்கு 50 கன அடி என்ற அளவில் தமிழக எல்லைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்தத் தண்ணீர் பூண்டி நீர் தேக்கத்திற்கு, 12-5-2000 அன்று 7 மணியளவில் வந்தடைந்து இருக்கிறது. நேற்று மதியம் வரையிலே, இதுவரையிலே, 25.3 மில்லியன் கனஅடி தண்ணீர் தமிழக எல்லைக்கு வந்திருக்கிறது. இதுவெல்லாம் 50 நாட்களுக்கு இதே வேகத்திலே வரும். 50 கனஅடி அளவு இதிலே பூண்டிக்குத் தண்ணீர் தர முடியும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால், பூண்டி நீர்தேக்கத்திலே, 225 மில்லியன் கனஅடி தண்ணீர் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.*

கடைசியாக ஒன்று. எனவே, இதுவரையிலும், நாங்கள் எதையும் ஒளிக்கவில்லை. இதுவரையில், நாம் பெற்றிருக்கிற தண்ணீர், நாம் குறைவாகப் பெற்றிருந்தாலும், பெற்ற தண்ணீர் கிருஷ்ணா தண்ணீரைத் தவிர வேறு தண்ணீர் அல்ல. ஆனால், வழி (via) வையம்பட்டி என்பதைப் போல, கிருஷ்ணா நீர், பெண்ணை ஆற்றிலே கலந்துதான் வரவேண்டும். எனவே, அங்கே, திரும்ப பெரியார் அணையில், கேட்பார்கள், "வைகை தண்ணீர் எது, பெரியார் தண்ணீர் எது" என்று. இரண்டு தண்ணீரும் ஒன்றுதான். வருகிறபோது தனித்தனியாக வரும்



எனவே, இதில் யாருக்கும் எந்த அளவும் சந்தேகம் வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாரும் கண்ணை மூடிக்கொண்டு கொடுக்கவில்லை. Liaisoning Committee நடக்கிறது. Chief Secretary லெவலிலே நடக்கிறது. எவ்வளவு செலவானது என்று புள்ளிவிவரங்களைக் கணக்குப் பார்த்துதான், பணத்தைக் கொடுத்து இருக்கிறோம். அந்தவகையிலே கறாராகத்தான், இந்த அரசு இருந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், இந்தத் திட்டத்திலே ஆர்வம் காட்டினாலும், சிலர் குறை சொன்னாலும், சிலபேர் என்னை இராஜிநாமாவே செய்ய வேண்டும் என்று சொன்னாலும், நான் இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொள்கிறேன். காரணம், அறியாமையாலே சொல்கிற கருத்து. இல்லாவிட்டால், ஒன்றைச் சொல்வாரா..

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறியாமையில் சொல்லவில்லை. (குறுக்கீடு) நீங்கள் இப்போது கூறினீர்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே Point of Order ஒன்றும் கிடையாது. உங்கள் கருத்தை நீங்கள் சொல்கிறீர்கள். அமைச்சர் அவருடைய கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் என்னை இராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னபோது, நான் பேசாமல் உட்கார்ந்து இருந்தேன். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவரை இராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னபோது அவர் கேட்டுக்கொண்டு உட்கார்ந்து இருந்தார் அல்லவா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் எதற்காகச் சொன்னேன் என்று கேட்டால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் "எவ்வளவு வரும்" என்று கேட்டார். 50 கனஅடி வந்து கொண்டேயிருக்கிறது என்று சொன்னேன். ஆனால், அவர் என்ன சொன்னார் என்றால், "50 கனஅடி தண்ணீர் இனிமேல் குறைந்துவிடும், கால்வாய் உறிஞ்சிவிடும்" என்று சொன்னார். உறிஞ்ச வேண்டியதை ஏற்கெனவே உறிஞ்சிவிட்டது கால்வாய்; இப்போது ஈரமாகி விட்டது கால்வாய். இனிமேல்

அதிகரிக்குமே தவிர குறையாது. இந்த மன்றத்தில் அதைத்தான் அறியாமை என்று சொன்னேன். எனவே, பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு என்னுடைய விளக்கத்தை நான் வைத்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, நான் இந்த அளவோடு எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** ஒரே ஒரு clarification. ஏனென்றால் அதற்கு பிறகு யாருக்கும் சந்தேகம் வராது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்றைக்குத்தான் சந்தேகம் தீரும் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே, 99 சதவிகிதப் பிரச்சினைகள், நாங்கள் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டதுதான். அதிலே எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆந்திரா, தமிழ்நாட்டிற்கு 15 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும். அதில் 3 டி.எம்.சி. இழப்பு போக ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய 8 டி.எம்.சி.யும், ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் முடிய 4 டி.எம்.சி.யும் ஆக மொத்தம் 12 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாடு எல்லையில் தர வேண்டும். கடந்த காலங்களில் நம்முடைய எல்லையிலே அதிகமான தண்ணீர் இருந்த காரணத்தினால், அந்தத் தண்ணீரைப் பெற முடியவில்லை என்று சொன்னீர்கள். இப்போது நமக்குத் தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. ஸ்ரீசைலம் ரிசர்வாயரிலே 308 டி.எம்.சி capacity அவர்களுக்கு இருக்கிறது. இப்போது அங்கே தண்ணீரும் இருக்கிறது. அவர்களுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் கிடையாது. ஸ்ரீசைலத்திலே தண்ணீர்ப் பஞ்சம் கிடையாது. அங்கே 308 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறபோது, நமக்கு இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினால் அதிலிருந்து 12 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வருவதற்கு என்ன தடை இருக்கின்றது என்பது ஒரு கேள்வி; "1996-ல் கொண்டுவந்தபோது, கசிவு ஏற்பட்டது, அதனால் கொண்டுவர முடியவில்லை" என்று சொன்னீர்கள். 1996-லிருந்து 1999 வரை அந்தக் கசிவு அடைக்கப்படவில்லையா? அடைக்கப்பட முடியாததற்குக் காரணம் என்ன என்பதையும், என்னிடம் இருக்கிற கணக்குப் பிரகாரம்——



முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எத்தனை கேள்வி கேட்கப் போகிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** என்னிடம் இருக்கிற கணக்குப் பிரகாரம் 29-9-1996 முதல் 16-10-1996 முடிய 0.76 டி.எம்.சி. என்று சொல்லி இந்த 4 ஆண்டுகளிலே 7.018 டி.எம்.சி. தண்ணீர்தான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, ஸ்ரீசைலத்தில் 308 டி.எம்.சி capacity தண்ணீர் அங்கே கைவசம் இருக்கிறபோது, இந்த ஆண்டு நம்மிடம் தண்ணீர் இல்லாத நிலையில், அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு என்ன தடை என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரேயானால், இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இது ஒன்றும் பெரிய பிரச்சினையே இல்லை. 308 டி.எம்.சி. தண்ணீர் இருந்தாலும், நமக்கு மதகு வைத்திருக்கிறார்கள் இல்லையா? போத்திரெட்டிப்பட்டிலே இருக்கிறது. (குறுக்கீடு) Sill level. அந்த Sill level-க்கு மேல் முழுக் கொள்ளளவு மட்டத்தில்தான் 308 டி.எம்.சி இருக்கிறது. ஆனால், இப்போது தண்ணீர் மட்டம், இந்த Sill level-க்கு கீழே போய்விட்டது. இப்போது தண்ணீர் என்பது Sill level-க்கு கீழே இருப்பதனாலே, ஸ்ரீசைலம் அணையிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாத நிலையிலே இருக்கிறோம். இது நம்பர் 1.

மாண்புமிகு உறுப்பினர் அழகிரி குறிப்பிட்டதைப்போல பாதிப்பு ஏற்பட்டது வரதாப்பாளையம் ஏரியாவில். அது இப்போது சீர்படுத்தப்பட்டு இருக்கிறது. இதிலே, சில இடங்களிலே silt எடுக்க வேண்டும், அதெல்லாம் இருக்கிறது, அதையெல்லாம் நாம் பண்ணவிருக்கிறோம். அடுத்து 7 டி.எம்.சி. என்பது கரெக்ட். இப்போது, நாம் இதுவரையிலே பெற்றது 7 டி.எம்.சி. ஏன் என்று கேட்டால் 1996-ல் உடனே நாம் அடைக்க வேண்டியதாகிவிட்டது. 1997-லேயிருந்து சீர் செய்ய வேண்டியது; 1998-99-ன் போதெல்லாம் மழை நமக்கு வந்தது. அதனாலே தண்ணீர் இருந்தது. அதனாலே நாம் வாங்கவில்லை. (குறுக்கீடு) 1997-98-லே நாம் வாங்க வேண்டியது. ஆகையினாலே இப்போது இருக்கிற பிரச்சினையிலே நமக்குத் தண்ணீர் இப்போது நியாயமாக வாங்கலாம். ஆனால் ஸ்ரீசைலத்திலும், சோமசீலாவிலும் Sill level-க்கு கீழே தான் தற்சமயம் தண்ணீர் இருக்கிறது. எனவே அவர்களிடம் நாம் பெற முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்கவில்லை. எல்லோரும் உட்காருங்கள்.

குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். திரு. அ.லெ. சுப்பிரமணியன் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் என்கிறேன். (குறுக்கீடு) திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. மு. அப்பாவு:** அதை முடித்துவிட்டுப் பேசலாமா? தலைவர், நான் ஒரு வாரமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் என்று சொல்கிறேன். நீங்கள் 15 நாட்களாகக் கேட்டாலும் உங்களுக்கு அனுமதி இல்லை. நீங்கள் உட்காருங்கள். திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை, திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் மாவட்ட நிர்வாகம் தொடர்பான வழக்குகள் சட்ட உதவி குறித்த முப்பத்து ஒன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு, தன் ஆய்வுக்கு



எடுத்துக் கொண்ட தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் செயல்பாடு பற்றிய நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கை, போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுக்கப்பட்ட பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1999-2000 ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஒன்பது மற்றும் அறுபதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2000 மே 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-20*

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல், 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 27/2000), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 27/2000)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@17-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 27/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2000 மே 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 8/2000), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 8/2000)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@25-4-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 8/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2000 மே 18

### (இ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்), சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 10/2000), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 10/2000@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்: :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டத்தைத் திருத்துகிற இந்த நேரத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் ஏற்கெனவே நான்காம் பிரிவின்படி இட வசதியானது குறிப்பிடப்படுமேயானால், ஏற்கெனவே இருக்கக்கூடிய கட்டணத்தில் 20 விழுக்காடு அங்கே ஆடம்பர வரியாக வசூலிக்கப்பட வேண்டுமென்று இருந்ததை இப்போது திருத்தியமைத்து, ரூ.200-லிருந்து ரூ.500-வரை இங்கே வாடகை என்று இருக்குமானால், அதற்கு 15 சதவீதம் என்றும், பிறகு ரூ. 500-லிருந்து ரூ. 1000-வரை 20 சதவீதம் என்றும், ரூபாய் 1,000-க்கும் மேல் போனால் 25 சதவீதம் என்றும் இப்போது திருத்துவதற்காக சட்டமுன்வடிவு இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-25

பொதுவாக சுற்றுலா போகக்கூடிய பயணிகள் ஆங்காங்கே லாட்ஜ்களில் போய்த் தங்குகின்றபோது—இப்போது எங்குமே வாடகைக்கு 200 ரூபாய்க்குக் கீழே அறையே கிடையாது—பொதுவாக ஊட்டி, கொடைக்கானல் என்று போனால் 800 ரூபாய்க்கு ஒரு அறை

@9-5-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 மே 18] [திரு. சி. ஞானசேகரன்]

வாடகைக்குப் போகிறது. கொடுக்கக்கூடிய அந்தக் கட்டணத்திற்கு மேலும் 20 ரூபாய், 25 ரூபாய் என்று நாம் கொடுக்கின்றபோது உண்மையிலேயே இந்தச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் பாதிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினாலே இதைக் கருத்திலே கொள்ள வேண்டும்.

மற்ற மாநிலங்களிலே சுற்றுலாத் துறை பாதிக்காத வண்ணம் இந்த வரி விதிப்பைக் குறைத்து செய்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை இருக்கக்கூடியதற்கு 5% வரி மட்டுமே போடலாம். அதேபோல 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இருப்பதற்கு 10% என்று போட்டுவிட்டு, அதற்குமேல் போவதை வேண்டுமானால் நீங்கள் 20% என்று வைத்துக்கொள்ளலாம். அந்த வகையில் இதை அமைத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்று சொன்னால் சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்திலே மிகவும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்திற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுடைய வருகை குறைந்துவிடுகிறது.

இந்த நேரத்தில் ஒரு கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே முதல்வர் அவர்களுக்கு நான் தெரிவிப்பது என்னவென்றால் நீலகிரி மாவட்டத்திலே சுற்றுலாப் பயணிகள் யாரும் அங்கு வரவேண்டாம் என்று அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் ஓர் அறிக்கை விட்டுவிட்ட காரணத்தினால் இப்போது சுற்றுலாப் பயணிகள் அங்கே போவதில்லை. இப்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருந்திருக்கிறது என்ற ஒரு குறை இருக்கிறது. ஆகவே அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது இந்த அரசோ ஓர் அறிக்கை விட்டு இப்போது எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லை, சுற்றுலாப் பயணிகள் அங்கு வரலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால் அந்தப் பயணிகளும் வருவதற்கு ஒரு நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள் நிறைவேற்றுகிறபோது ஆடம்பர வசதிகளை அடிப்படையாகக் கொண்டு அதன்மீது வரி விதிக்கக்கூடிய விகிதாச்சாரம் reasonable rates என்று சொல்லுகின்ற வீதத்திலே போடப்பட்டிருக்கிறது. அவற்றை இன்றைக்குச் சட்டபூர்வமாக்குவதற்காக இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் "சுற்றுலாப் பயணிகள் செல்லுகிற இடத்திலே அதிகமாக அறை வாடகை கொடுக்க

வேண்டியிருக்கிறது, அதைக் குறைக்க வேண்டும்" என்று சொன்னார்கள். இதிலே மிகத் தெளிவாக இருக்கிறது. 200 ரூபாய்க்குள்ளே என்றால் 15%; 500 ரூபாய்க்கு மேலே என்றால் 20%; ஆயிரம் ரூபாய்க்கு மேலே என்றால் 25% என்று இருக்கிறது. ஏழை எளிய மக்கள் சுற்றுலா போகின்றபோது அவர்களைப் பாதிக்கின்ற விதத்திலே இந்த விகிதம் இல்லை. வசதி படைத்தவர்கள், வசதியான ஹோட்டல்களிலே ஆயிரம் ரூபாய் கொடுத்துத் தங்குகின்ற அளவுக்கு வருகின்றபோது அதற்கு 25% tax கொடுப்பதற்கு அவர்கள் தயங்க மாட்டார்கள். எனவே, முதல்வர் அவர்கள் அறிவித்தது நியாயமானது, சரியானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 10/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2000), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் துலைவர் அவர்களே,*

*"2000 ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2000) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*
*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத் திருத்தத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அதிகார அமைப்பு, மாவட்ட மனித ஆற்றல் திட்டமிடுதல் மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கக் குழு, தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் இந்த மூன்றுக்கும் இப்பொழுதெல்லாம் அதிகாரிகள் தலைமை வகித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்கிற ஒரு கோணத்திற்குத்தான் இதை எடுத்துச் சென்று இந்தச் சட்டமுன்வடிவை இப்பொழுது கொண்டு வந்து இருக்கிறீர்கள். இதிலே ஏற்கெனவே அதிகாரிகளே செயல்பட்டுக் கொண்டிருக்கிறபோது நாம் ஏதாவது அதிலே குறை இருக்குமானால் கேள்விகளை நாம் தொடுத்துக்கொள்ளலாம். எம்எல்.ஏக்கள் இந்தக் குழுவிலே இடம் பெறாமல் இருப்பதே நல்லதாக இருக்கும். அதிகாரிகளிடமே நாம் ஏதாவது குறை இருந்தாலும் தட்டிக் கேட்டு அதைச் சரி செய்வதற்கு ஆவனசெய்ய முடியும் என்ற காரணத்தினால், இதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக என்னுடைய கருத்தாக எடுத்து வைத்து அமைகிறேன்.*

*முற்பகல் 11-30*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த அளவிலே, அரசிலேயிருந்து ஆதாயம் கிடைக்கப்படக்கூடிய முறையிலே உள்ள, இந்த* Office of Profit *என்ற முறையிலே கணக்காக்கப்படுகிற, அந்த நிறுவனங்களோடு சம்பந்தப்பட்டிருக்கக் கூடாது என்பதற்கு மாறுபட்ட*

---

@16-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





*முறையிலே—*District Manpower Planning and Employment Generation Council *ஆனாலும், சரி;* Farm Products Development Board *ஆனாலும் சரி; இவை அரசிலேயிருந்து* grant *அல்லது மற்ற முறையிலேயுள்ள உதவிகளைப் பெறுகிற ஸ்தாபனங்கள். ஆகவே, அந்த முறையிலேயுள்ள ஸ்தாபனங்களிலே பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள்* Office of profit *என்ற அந்த முறையிலே வருகிற . காரணத்தினாலே—அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது நியாயம் அல்ல; சரியல்ல. இந்த ஸ்தாபனங்களிலே உறுப்பினர்களாகவோ அல்லது அவற்றினுடைய தலைவர்களாகவோ இன்று சட்டமன்ற உறுப்பினர்களை ஆக்குவதற்கோ, அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களை இவற்றினுடைய தலைவர்களாக ஆக்குவது நியாயம் இல்லை, சரியில்லை, இது தேவையற்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அந்த முறையிலே உள்ளவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக வர வேண்டுமென்று இருக்கக்கூடிய நேரத்திலே இப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களாக அவர்களை நியமிப்பது என்பது அவர்களுக்கு அரசினுடைய நிதியைப் பயன்படுத்தி, இன்று மக்களை சுவாதீனப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய ஒன்றாக அமையும். ஆகவே,* Morality *என்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது சரியல்ல.*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டிலே, இந்தியாவினுடைய அரசமைப்பு சட்டத்திலே 19 (1)-வது பிரிவிலே ஒரு ஷரத்து சொல்லப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ பதவி வகிப்பவர்கள்-*Office of profit, Pecuniary benefits, *பலன் தரக்கூடிய, இலாபம் தரக்கூடிய வேறு பொறுப்புகளில் அவர்கள் இருந்தால், தாங்கள் வகிக்கக்கூடிய பதவி எம்.எல்.ஏ. பதவியாக இருந்தால், எம்.பி. பதவியாக இருந்தால், அந்தப் பதவி செல்லாது,* disqualify *ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையிலே இது சில சிக்கல்களை உருவாக்கியிருக்கின்றது. என்ன என்று சொன்னால் இப்போது கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது* Institution *ஆகவோ அல்லது அரசினுடைய வேறு* Quasi-Judiciary *ஆகாவோ வேறு பணிகளில் சில அமைப்புக்களை உருவாக்குகிறபோது,*

[திரு. அ. இரகுமான்கான்] [2000 மே 18

அதனுடைய தலைவராக, செயலாளராகப் பணியாற்றுகிறபோது அங்கே வெறும் அதிகாரிகள்தான் பணியாற்ற முடியும்; அவர்கள்தான் சரியானவர்கள். அவர்கள் மட்டுமே பணியாற்ற முடியும் என்ற நிலை இருக்க முடியாது. திறமையான தகுதி வாய்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் போன்ற பதவிகளிலே இருந்தாலும்கூட, பணியாற்றக்கூடியவர்களை அந்தப் பொறுப்புக்களிலே உட்கார வைத்து அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆனால், இந்த அரசமைப்புச் சட்ட விதி அதற்குத் தடையாக இருக்கக்கூடிய காரணத்தினாலே Office of profit என்ற நிலையிலேயிருந்து விதிவிலக்குக் கொடுத்து, இன்னின்ன பட்டியலில் இருப்பவர்களெல்லாம் இருந்தால், அது அவர்களுடைய பதவியை செல்லாது என்று ஆக்காது, disqualify ஆகாது என்று கருதித்தான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அதிகார அமைப்பு, மாவட்ட மனித ஆற்றல் திட்டமிடுதல் மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கக் குழு, தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் இவையெல்லாம் No Office of Profit, இதிலே அவர்கள் பதவி வகித்தாலும், சட்டமன்ற உறுப்பினர் பதவி நீடிக்கும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான், நிலைநிறுத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் இங்கே ஒரு கருத்தைச் சொன்னதற்கு நான் ஏற்கெனவே பதிலைச் சொன்னேன். ஆனால், இதுவரைக்கும் 98 பதவிகளில் Board, Corporation, Institution-லே இப்போது இதுபோல சட்டமன்ற பொறுப்புக்களில் இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஜெயலலிதா அம்மையார் ஆட்சிக் காலத்திலே இன்னும் 50 பேருக்கு அந்த வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டது. அது திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது முன்னாள் முதலமைச்சரின் பெயரைச் சொல்லி, அந்தக் காலத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அப்படிப்பட்ட நிலைமை மீண்டும் repeat ஆகக்கூடாது. ஆளும் கட்சிக்கு உரியவர்கள் இதிலே அமர்த்தப்பட்டு நம் அரசுக்கு அதிகார துஷ்பிரயோகம் வந்துவிடக்கூடாது என்கிற காரணத்தினால்தான் மிக எச்சரிக்கையோடு இதில் இருக்க வேண்டும். இது தேவையில்லை என்று நான் என்னுடைய கருத்தை வலியுறுத்தினேன்.



2000 மே 18]

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதியற்றவர்கள் என்று இங்கு இருக்கக்கூடியவர்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா? எனவே தகுதியானவர்கள் நியமிக்கப்படுவதிலே தப்பில்லை. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அவர் ஒரு சட்டம் கொண்டுவந்தார். அதை நீங்கள் எதிர்த்து உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், அதோடு உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் கிடையாது. விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு



(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2000)., மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2000) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@16-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 மே 18

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2000), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**@மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2000) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 6 ஆம் திருத்தச் சட்டத்திலே செராமிக் போன்ற goods-க்கு எல்லாம் 8 சதவிகித விற்பனை வரி என்று போடப்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்று செராமிக், சிமெண்ட் தொழில்கள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் பெரிய முதலாளிகள் இலாபம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற சிமெண்ட் ஆலையில், சிமெண்ட் உற்பத்தியாளர்கள் இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக பல சிமெண்ட் உற்பத்தி செய்கின்ற ஆலைகள் இப்போது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அரசுக்கு வருகின்ற வருவாய் 12 கோடி ரூபாய் இப்போது இழப்பு ஏற்படுகிறது. ஆகவே இந்த செராமிக், சிமெண்ட் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய, சிறு உற்பத்தியாளர்களுக்கு வரிச் சலுகை செய்யக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்திருத்தத்திலே 8 சதவிகிதம் என்று போடப்பட்டிருப்பதை 4 சதவிகிதமாகவோ அல்லது 2 சதவிகிதமாகவோ குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்ய வேண்டும். 8 சதவிகித வரி இப்படிப்பட்ட தொழில்களுக்கு, சிறு உற்பத்தியாளர்களுக்குப் போடப்படுவது என்பது இந்தத் தொழிலை அழிப்பதற்கும், அதன் வழியாக அரசுக்கு வருகிற வருவாயில் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுத்துவதற்கும் காரணமாகிறது என்பதைப் பரிசீலித்து அதை அனுதாபபூர்வமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@16-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2000 மே 18

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கவனத்தில் கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.**



2000 மே 18]

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழநாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2000), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**@மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@ 16-5-2000-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2000 மே 18

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2000). மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2000) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"*
எனக் கோருகிறேன்.

---

@16-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இஎஸ்எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரைப்படங்கள் மீதான கேளிக்கை வரியினைக் குறைந்திருப்பதை முதலிலே வரவேற்கின்றேன். இப்போது மிகப்பெரிய industry யாக இருக்கின்ற சினிமா தொழில் நசிந்து வருகிறது. சென்னையில் இருக்கக்கூடிய திரையரங்குகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. ஆகவே, சினிமா தொழிலைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு வந்த முதலமைச்சர்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையிலே சினிமா தொழிலோடு, திரைப்படத்தோடு தொடர்புடையவர்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே, இப்படிப்பட்ட, மிகப் பெரிய சமூகத்திலே மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வலுவான இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கின்றது. இப்போது சென்னைத் தொலைக்காட்சி போன்ற பல்வேறு விண்கோள் காட்சிகளுக்கு எல்லாம் 1½ மணிநேர சின்ன திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. இந்த சின்ன திரைப்படங்கள் எல்லாம் இப்போது கேளிக்கை வரியிலேயிருந்து சுலபமாகத் தப்பிவிடுகின்றன. ஆகவே, அரசு இப்படி குறுகியகால திரைப்படங்கள், மினி சினிமா என்று சொல்லப்படுகின்ற இந்தத் திரைப்படங்களுக்கு ஏதேனும் ஒருவகையிலே - ஏனென்றால் அதன் மூலமாக கமர்ஷியலாக ஏராளமாக அவர்கள் பணம் சம்பாதிக்கின்றார்கள். ஆகவே, அதற்கு - வரியை விதித்து நம்முடைய வருவாயைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிச் சட்டத்தினைத் திருத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டமுன்வடிவின் நோக்கத்தை நான் மறுக்கவில்லை; ஆதரிக்கிறேன். ஆனால், திரையரங்குகளில் பல்வேறு இடங்களிலே நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைக் காட்டிலும் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்படுவதும், தவறான முறையிலே கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, அதிகமான பொதுமக்களை தவறான வழிகளிலே ஏமாற்றுவதும் நடைபெறுகிறது. அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் இந்தச் சட்டத் திருத்தத்திலே இல்லை. வரிச் சலுகை அளிக்கக்கூடிய நேரத்தில் அந்த



வரிச் சலுகையை அளிப்பதன் மூலம் அரசுக்கு வரக்கூடிய வருவாயை உறுதிப்படுத்துவதற்கான நோக்கமும் சட்டத்தில் இருக்க வேண்டும். அப்படி உறுதிப்படுத்துவதோடு திரையரங்குகளிலே நிர்வாகமும் சரியாக நடைபெறுவதை உறுதிப்படுத்துகிறபோதுதான் அப்படிப்பட்ட எதிர்பார்ப்பை அரசு சொல்ல முடியும். எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுகிறபொழுது எந்தவகையிலும் பொதுமக்களை கட்டண விகிதத்திலே பாதிக்க வைக்கிற-புதுப்படம் என்றால் ஒருவகையான கட்டணம், பழைய படம் என்றால் ஒருவகையான கட்டணம், அந்தக் கட்டணத்தினை காட்டிலும் கூடுதலாக வசூலிப்பது ஒரு முறை; ஒரு தியேட்டருடைய கொள்ளளவைக் காட்டிலும் அதிகமான பொதுமக்களை உள்ளே அனுப்புவது மறு பக்கத்திலே நடைபெறுகிற முறைகேடு. இந்த இரண்டு-முறைகேடுகளைத் தடுக்கிற வழிவகைகளுக்காக சட்டத்திலே திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுவதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்திலே நமக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய பெரும் பகுதி வருமானம் நமது தவறான கொள்கையின் காரணமாக யார் யாருக்கோ சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக, திரைப்படத்தை எடுக்கும் திரைப்பட உரிமையாளர்களோ அல்லது திரையரங்கு உரிமையாளர்களோ அதன் கட்டணத்தை—திரைப்படக் கட்டணத்தை — நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய உரிமை வழங்குவோம் என்று சொன்னால், இந்தத் தொகையின் மூலமாகக் கூடுதலாக நமக்கு வரி வருவாய் கிடைக்கும். அப்படியில்லாமல் அங்கே பிளாக்கிலே டிக்கெட் விற்கப்படுவதனால், 10 ரூபாய் டிக்கெட் 300 ரூபாய்க்கு விற்கப்படும்பொழுது அந்த அதிகபட்சத் தொகை அந்தத் தியேட்டர் உரிமையாளர்களுக்கும் செல்லாமல், புரொட்யூசருக்கும் செல்லாமல் அதனால் கிடைக்கக்கூடிய வரி அரசுக்கும் செல்லாமல் அங்கேயிருக்கக்கூடிய ரௌடிகளுக்கும், அங்கேயிருக்கக்கூடிய சில இலஞ்சம் வாங்கக்கூடிய காவல்துறை அதிகாரிகளுக்கும் சென்று

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மே 18

கொண்டு இருக்கிறது. ஆகவே, இதுகுறித்து அரசு முழுமையாக ஆய்வு செய்து, திரைப்பட தியேட்டருக்கான கட்டணத்தை உரிமையாளர்களே, திரைப்பட உரிமையாளர்களே நிர்ணயம் செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் அதன் மூலம் அரசுக்கு வரி வருவாய் பெருகும். ஆகவே, இதுகுறித்து அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்; அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் சொன்னார்கள், வருமானத்தைப் பெருக்குவது என்று. இதிலே வருமானத்தைப் பெருக்குவது அல்ல; பல சலுகைகளை அளித்திருக்கிறார்கள்.

புதிய திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியினை நூற்றுக்கு 30 விழுக்காட்டிலேயிருந்து நூற்றுக்கு 25 விழுக்காடு என அதைக் குறைத்திருக்கிறோம்; சலுகை காட்டியிருக்கிறோம்.

அதேமாதிரி, Compounding Tax—மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு உள்ளடங்கிய திரை அரங்குகளுக்கு இணக்க வரி—Compounding Tax—இல்லாமல் இருந்தது. இப்பொழுது முதன்முறையாக இந்த முறை புகுத்தப்படுகிறது.

அதேபோல Compounding Tax, Tax Collection-இலே 22% என எடுத்துக்கொண்டு அதை 25 காட்சிகளுக்கு என்று கணக்கிடுவது, அதாவது 22% x 25; சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு 21% x 25 என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை 30 விழுக்காட்டிலிருந்து 25% என்று குறைத்திருக்கிறார்கள்.

எனவே, இந்த வகையிலே பார்த்தால் இது ஒரு சலுகை; அரசுக்கு இழப்புத்தான் வந்திருக்கிறது.

அதேநேரத்திலே மாண்புமிகு திரு. பெரியசாமி அவர்கள் சொன்னதைப்போல, இந்த டிக்கெட் விற்பதிலே ஒரு பெரிய பிரச்சினை



2000 மே 18] [திரு. துரைமுருகன்]

இருந்துகொண்டுதான் இருக்கிறது. அது ஒரு நல்ல யோசனைதான். அரசு கவனத்திலே கொள்ளும்.

எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்டமுடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மே 18

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2000) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2000) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@ 16-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



2000 மே 18]

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேபிள் டிவி. என்ற கம்பி வடத் தொலைக்காட்சி மீதான வரியினை உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிப்பது என்ற சட்டமுன்வடிவு வரவேற்கத் தகுந்த விஷயம் என்பதை நான் முதலில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, இந்த கேபிள் டிவி. மூலம் வருகின்ற, விண்கோள் வழியாக வருகின்ற தனியார் தொலைக்காட்சிகள் மூலம் வருகின்ற காட்சிகள் இப்போது மிகப்பெரிய பண்பாட்டு அபாயத்தை, குறிப்பாக நம்முடைய தென்னகத்திலே தோற்றுவித்திருக்கின்றன என்பதை நான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். தணிக்கை முறையின்றி அவை ஒளிபரப்பப்படுவதால், மிகப் பெரிய கலாச்சாரச் சீரழிவை நம்முடைய இளைஞர்களிடையே, வளருகின்ற இளைஞர் சமுதாயத்தினரிடம் ஏற்படுத்துகிறது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, பாலுணர்ச்சி பற்றிய ஒரு நிகழ்ச்சியிலே, கர்ப்பமாக இருக்கின்ற பெண் குடும்ப வாழ்க்கையை நடத்தலாமா என்று ஒரு கேள்வியைப் போட்டு அவர்கள் ஒளிபரப்புகிறார்கள். நான் அதை மிக பாலீஷாகச் சொல்கிறேன். மிகவும் கொச்சையாக அதை விளம்பரப்படுத்துகிறார்கள். அந்த நிகழ்ச்சி இரவு பத்தரை மணிக்கு மேல் இருந்தாலும்கூட அதனுடைய முன்னோட்டமாக விளம்பரங்கள் செய்கின்றபோது, இந்தக் கேள்வியை அவர்கள் அப்படியே போடுகிறார்கள். மிகப்பெரிய கலாச்சார பாதிப்பை வளருகின்ற இளைஞர்களிடையே இது ஏற்படுத்துகின்றது. தணிக்கை முறையைப் பொறுத்தவரையில், மத்திய அரசு சம்பந்தப்பட்ட பொருள் அது என்றாலும் கூட, நம்முடைய மாநில அரசும் ஒரு sub limitation என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு சுய கட்டுப்பாட்டை அத்தகைய கேபிள் டிவி. நிறுவனங்களுக்கு விதிக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிச் சட்டத்தின்படி வகுத்தளிக்கப்படுகின்ற வரி விகிதத்தை உள்ளாட்சி அமைப்புகள் வசூலிப்பதற்கான வாய்ப்பை இந்தத்

[திரு. நா. பெரியசாமி] [2000 மே 18

திருத்தச் சட்டமுன்வடிவு வழங்குகின்றது. இதில் ஒன்றை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிராமப்புறங்களிலும் பெரு நகரங்களிலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், சுய வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில்தான் இந்த கேபிள் டிவி. ஆப்பரேட்டர்களாக இப்போது மாறி இருக்கின்றார்கள். அந்தத் தொழிலைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே இந்த வரி விகிதங்கள் அமைய வேண்டும் என்ற கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கக்கூடிய நடைமுறையை மாற்றி, கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களிடமிருந்து நகராட்சி மன்றங்கள் வரி வசூல் செய்வதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஏற்கெனவே நகராட்சிகளுடைய நடைமுறைகள், முறையாக இல்லாமல் இருக்கின்றபோது, இது பல முறைகேடுகளுக்கு வழி வகுத்துவிடும் என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடாது. அரசே நேரடியாக இந்த வரியை வசூலிக்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேபிள் டி.வி. வரியை வணிக வரித் துறையே வசூல் செய்து கொண்டிருந்தது. திரும்பவும் அதைக் கொண்டுபோய் நகராட்சியிடம் கொடுக்கிறீர்கள். இது தவறு நடைபெறுவதற்கு வாய்ப்பாகிவிடும். ஆகவே, வணிக வரித் துறையே மீண்டும் இதை நிர்ணயம் செய்து வசூல் செய்து அதை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் தருகிற அளவுக்கு ஏற்பாடு செய்யலாம். அதுபோல, நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் விதிக்கப்படுகின்ற கட்டணத்தில் வித்தியாசம் இருக்கவேண்டும். இப்போது அப்படியில்லாமல் இருக்கிறது. அதைக் குறைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு சின்ன மசோதா. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், "இதுவரையில், வணிக வரித் துறை செய்த



2000 மே 18] [திரு. துரைமுருகன்]

வேலையை, உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுப்பதா" என்று கேட்டார்கள். இங்கே பல நேரங்களில் பல உறுப்பினர்கள் பேசும்போதெல்லாம், "உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி நிலை போதவில்லை, நிதி ஆதாரத்தைப் பெருக்குங்கள், அவர்களுக்கு ஆறாகப் பணம் போகட்டும்" என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், ஆதாரத்தைக் கொண்டுவரும்போது என்ன சொல்கிறார்கள் என்றால், "ஆபத்து, அவர்களிடம் கொடுக்காதீர்கள்" என்று சொல்கிறார்கள். ஆனால், ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். நகராட்சிக்கு என்று இவ்வளவு வரி இருக்கவேண்டும், கிராமப் பஞ்சாயத்துக்கு இவ்வளவு இருக்கவேண்டும், மேஜர் பஞ்சாயத்துக்கு இவ்வளவு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரேயடியாகப் போட்டு வளர்த்துவிடக் கூடாது. ஆனால், டாக்டர் இராமன் பேசும்போது மட்டும் ஒரு கருத்தைக் கூறினார். இந்தமாதிரி எங்கே அவருக்கு என்று சப்ஜெக்ட் கிடைக்குமோ தெரியவில்லை. அன்றைக்குக் கூடச் சொன்னார். இந்தமாதிரி படங்களே அவருக்குக் கிடைக்கிறது. எல்லா உறுப்பினர்களும் இதையேதான் பார்க்கிறீர்களா? எல்லா ஊரிலும் இந்தப் படம்தானா கிடைக்கிறது? இல்லை. அது அவருக்கு மட்டும் தனியாக ஒரு கேபிள் டி.வி. போட்டு அவருக்கு மட்டும் அனுப்புகிறார்கள் போல இருக்கிறது. ஆகவே முன்பு ஒருநாள் கூட இதுமாதிரி பேசினார். இரண்டாவது, அவர் ஒரு டாக்டர் என்பதால் சொல்கிறேன். அப்படி அருவருக்கத்தக்க அல்லது ஒழுங்கீனமான படமாகப் போடக் கூடாது என்பதிலே இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

உள்ளாட்சித் துறையினருக்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தாக்கீது அனுப்புகிறபோது எப்படி எப்படியெல்லாம் அவர்கள் இந்த வரியை வசூலிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு திரு. பெரியசாமி அவர்கள் "வேலையில்லாப் பட்டதாரிகள், வேலையில்லா இளைஞர்கள்தான் இதுபோல் செய்யப் போகிறார்கள்; அதனால் அதிகமான வரியைப் போட்டு, அவர்கள் மேல் அதிகமான வரிச் சுமையை ஏற்றி, அவர்களிடம் வசூல் செய்யாதீர்கள்" என்று சொன்னார்கள். அதையும் அரசு கவனத்தில்கொள்ளும் என்று சொல்லி, உங்கள் கருத்துக்கு மதிப்பளித்து இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



*"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்."*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஒ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2000), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2000) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 5-5-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2000), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் வருமான வரி சட்டத் திருத்தத்திலே 28,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 20 சதவிகிதம்; ரூ.30,000-க்கு மேலே 50,000 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு 400 ரூபாயும் அதற்கு மேலே உள்ளவர்களுக்கு 30 சதவிகிதம் என்றும் இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு வருடத்திற்கு 30,000 ரூபாய் வருமானம் என்று சொன்னால், மாதத்திற்கு ரூ.2,500

@9-5-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

என்று ஆகிறது. இந்த 2,500 ரூபாயை வைத்துக்கொண்டு, இப்போது ஒரு குடும்பத்தை நடத்திக்கொண்டு போவது என்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல. அந்த நேரத்திலே 30,000 ரூபாய் வரை அல்லது 29,000 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்கள் 20 சதவிகிதம் வருமான வரியைக் கட்ட வேண்டும் என்று சொல்வது சிறு, குறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் அது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

நண்பகல் 12-00

50 ஆயிரம் ரூபாய் வரை, 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபாய் என்று வந்தால்கூட, மாதம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வருகிறது. ஆகவே, 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு இந்த வருமான வரிச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள்தான். 5 ஏக்கருக்கு மேலே விவசாயம் செய்யக்கூடியவர்கள்தான்; 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு உண்டாக்க முடியும். இப்போது விவசாய விளைபொருட்களுடைய விலை கீழே போயிருக்கிற இந்தக் காலகட்டத்தில் இது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே இந்த 28 ஆயிரம் ரூபாய் என்பதை, 30 ஆயிரம் ரூபாய் என்பதை 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு என உயர்த்தி சலுகை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் வருமானத்திற்கு வரி விதிக்க வகை செய்கிற இந்த இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவின்மீது ஒருசில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே வேளாண் வருமானம் ஆண்டுக்கு 28 ஆயிரம் ரூபாய் அளவிற்கு இருப்பவர்களுக்கு மட்டும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே வருமானம் ஈட்டுபவர்களுக்கு 20 விழுக்காடு, 30 விழுக்காடு, 40 விழுக்காடு என்று படிப்படியாக வரி விதிக்க வகை செய்கிறது இந்தச் சட்டமுன்வடிவு. இதில் ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதனை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக நானும் வலியுறுத்துகிறேன். வருமான வரி என்ற அடிப்படையில் தனி நபர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அது





ஆண்டுதோறும் வருமானம் 60 ஆயிரம் என்ற அளவிற்கு Income-tax வருமான வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தொழில் துறையினருக்கும் மற்றவர்களுக்கும் அப்படி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிற இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளுக்கு மட்டும் ஆண்டுதோறும் 28 ஆயிரம் ரூபாய் என்று அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே வரக்கூடியவர்களுக்கு 20 விழுக்காடு என்று தொடங்கி படிப்படியாக அந்த வேளாண் வருமான வரி விதிக்கப்படுவது என்பது சமூகநீதி வழங்குவதாக இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். அதுமட்டுமல்லாமல், இப்போது பணப் பயிர் என்று எடுத்துக்கொண்டாலும்கூட—உணவுப் பயிருக்கு அந்த அளவுக்கு இல்லை. அதிகபட்சம் இதில் பணப் பயிர்கள்தான் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும்—மாறி வருகிற சூழ்நிலையில், உலகமயமாக்கப்பட்ட நடவடிக்கை அதிகப்படுகிற சூழ்நிலையில் தேயிலை போன்ற பணப் பயிர்களிலேகூட இப்போது அந்த அளவுக்கு ஆளாகி இருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்கிறபோது, இந்த வருமான வரம்பு என்பது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. இதை மறுபரிசீலனை செய்யவேண்டும். அவசியம் ஏற்படுமானால், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதைத் தவிர்த்து, ஒத்திவைத்து விட்டு, பிறகு ஒருமுறை இன்னும் நீண்ட விவாதம் நடத்தி நிறைவேற்றவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன். அப்படி இல்லையென்றால், குறைந்தபட்சம் 75 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு வருமான வரி விலக்கு அளிக்கத்தக்க வகையில் சட்டத்தைத் திருத்த அரசு ஆலோசிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் வருமான வரிச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல நினைக்கிறேன். 28 ஆயிரம் ரூபாய் வரைக்கும் நாம் வரி விதிக்கவில்லை. அதற்கு மேலே, 30 ஆயிரத்திற்கு மேலே, 20 விழுக்காடு, 30 விழுக்காடு என்று உயர்த்திக் கொண்டே போவோம் என்று சொன்னால்—'உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது'—இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில், உண்மையிலேயே கரும்பு, தென்னை, நெல், இந்தமாதிரி பயிர்களின் மூலம் வரக்கூடிய வருமானம், இந்தக் கூலி வேலை செய்கிறவனுக்கு அளந்து கொடுப்பது மாதிரி இருக்கிறதே தவிர,

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [2000 மே 18

வேறுமாதிரி ஒன்றுமில்லை. ஆகையால், இந்த வருமான வரி விதிப்பதிலே—திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள் அல்லவா, 75 ஆயிரம் ரூபாய் வரைக்கும் என்று—நான் சொல்கிறேன், இந்த வேளாண் வருமான வரிக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரைக்கும் நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டு, அதன் பிறகு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் துறைக்கு 28 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரி விதிக்கின்ற சட்டத்தை முற்றிலும் நிறைவேற்றக்கூடாது. அதை ஆய்வுக் குழுவுக்கு விடவேண்டும். ஏனென்றால், விவசாயத் தொழில் நிரந்தரத் தொழில் அல்ல. இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய தொழில். அப்படிச் சட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னால், எந்த ஆண்டு விவசாயத் தொழில் பாதிப்படைகிறது, எந்த ஆண்டு பாதிப்பு இல்லை என்ற பரிசீலனைக்கு வாய்ப்பே இல்லை. ஓராண்டில் வரி விதித்துவிட்டால், அந்த வரியை ஆண்டுதோறும் கட்டவேண்டுமென்று சொல்லி, பிறகு அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இதை ஆய்வுக் குழுவுக்கு விட்டு பரிசீலனை செய்து நிறைவேற்றவேண்டும்.

3 இலட்சம் ரூபாய்க்கு ஹோட்டல் வியாபாரிகளுக்கு வரிச் சலுகை அளிக்கிறபோது—சாதாரண விவசாயம்—தன்னுடைய முதலைப் போட்டு தொழில் செய்யக்கூடிய விவசாயத்திற்கு இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது, விவசாயத்திற்கு விரோதமான சட்டம். இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இதை ஆய்வுக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பல உறுப்பினர்கள் வற்புறுத்தியதுபோல, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நாங்கள் வலியுறுத்துவதும் கூட, விவசாயிகள் மீது நீங்கள் சுமத்தக்கூடிய இந்தப் பளுவை இந்த அரசு உடனடியாகத் தவிர்க்க வேண்டும் என்பதுதான். கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன் ஒன்றுக்கு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு அது இன்னும் கிடைக்கவில்லை. நெல்லுக்குக்



2000 மே 18] [திரு. சி. ஞானசேகரன்]

கொள்முதல் விலை கிடைக்கவில்லை. தேயிலைக்கு உற்பத்தி விலை கிடைக்கவில்லை. தேங்காய் 1½ ரூபாய் என்ற அளவிற்கு மிகக் குறைந்திருக்கிறது. விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருக்கிற இந்த வேளையில் நீங்கள் ஏதோ விவசாயிகளுக்கு நிறைய வருமானம் இருப்பதுபோல எண்ணிக்கொண்டு, இப்படியெல்லாம் நீங்கள் வரி போடுவது என்பது மிகவும் கொடுமையான ஒரு செயல் என்பதை நிச்சயமாக நான் இங்கே வலியுறுத்தி, நீங்கள் இதை நிறைவேற்ற வேண்டாம், தயவுசெய்து, இந்தச் சட்டமுன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, இப்போதைக்கு நிறுத்தி வையுங்கள், இல்லையென்று சொன்னால், விவசாயிகள் நிச்சயமாக வயிறெரிந்து போவார்கள் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு கட்சியில் எத்தனை பேர் பேசுவீர்கள்? திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது ஆண்டுக்காண்டு மாறுபடக்கூடியது. ஒரு வருடம் உற்பத்தி அதிகமாகி அதனால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு, அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்; ஒரு வருடம் உற்பத்தியே இல்லாமல் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இந்த நாட்டின் உற்பத்தியையும், வருமானத்தையும் பெருமளவுக்குக் காக்கக்கூடியவர்கள் விவசாயிகள். ஆகவே, இன்றைய வளர்ந்துவிட்ட காலச் சூழ்நிலையிலே ஒரு மனிதனுக்கு வருடம் 28 ஆயிரம் ரூபாய் என்பது மிகக் குறைவான தொகை. மத்திய அரசுகூட, விவசாயத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திற்கு வருமான வரி இல்லையென்று அறிவித்திருக்கக்கூடிய சூழ்நிலையிலே, இப்படி வேளாண்மை வரி விதிக்கப்படுவது தவறான ஒரு வழிமுறையாகும். ஆகவே, இந்த நாட்டின் அடித்தட்டு மக்களுக்கு, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கு இதுபோன்ற வரியை விதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை இன்று அமல்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் கூறிய கருத்துரைகளோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொண்டு, இப்போது விவசாயிகள் எல்லாம் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கே வழியில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே இந்த வரி விதிப்பு தேவையற்றது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து அனைத்து உறுப்பினர்களும் கூறியபடி செலக்ட் கமிட்டிக்கு விட்டு, இப்போது நிறைவேற்றாமல் இதை ஒத்திவைக்க வேண்டுமென்று எங்களுடைய கட்சியின் சார்பாகக் கேட்டு அமைகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் புதியதாக விவசாயிகளுக்கு வருமான வரி போடுகின்ற சட்டமல்ல. அதுவும் விவசாயிகள் என்றால்—விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற, அவர்கள் ஈடுபடுகின்ற தொழிலில் வருகிற அந்த வருமானம் அனைத்திற்கும் இந்த வரி அல்ல. மலைத் தோட்டப் பயிர்களான ரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், கிராம்பு மற்றும் மிளகு ஆகிய பயிர்கள், பொருளாதார ரீதியாக பணப் பயிர்களாகக் கருதப்படுவதால், இப்பயிர்களுக்கு வேளாண்மை வருமான வரி விதிக்க வேண்டி, 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1955-லேயே அது நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தச் சட்டத்தின்படி, 1-4-1993-க்கு முன்பு 22 ஆயிரம் ரூபாய் வரை உள்ள வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. பிறகு, 1-4-1993 முதல் 28 ஆயிரம் வரை உள்ள வேளாண்மை வருமானத்திற்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டது. 22 ஆயிரத்திலிருந்து 28 ஆயிரம் வரை வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டது. 28 ஆயிரத்திற்கு மேல் உள்ள தனி நபர் வேளாண்மை வருமானத்திற்கு 1-4-1993 முதல் கீழ்க்கண்டவாறு வரி விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன:*

*அதாவது, 28 ஆயிரத்திலிருந்து இது முறைப்படுத்தப்படாமல் இருந்தது. அதற்காக முறைப்படுத்துகிறோம். 28 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை*



*20 சதவீதம். 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை 30 சதவீதம். 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை 40 சதவீதம்.*

*பிற்பகல் 12-10*

*ஒரு இலட்சத்திற்கு மேல் அந்த விகிதாச்சாரப்படி. இது முறைப்படுத்தப்படவில்லை; ஆகவேதான் இந்தச் சட்டத்திலே 28 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்களிடமிருந்து எத்தனை சதவீதம் வருமான வரி வசூலிப்பது என்று சட்டத் திருத்தம் இல்லாமலேயே இப்போது வசூல் செய்துகொண்டிருக்கிறோம். 1993-லிருந்து நாம் வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறோம். அதனால், இந்த விகிதாச்சாரம், விழுக்காடு போட்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோமே தவிர, இது ஒன்றும் புதிய சட்டமல்ல. ஆகவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் இங்கு கோருகிறேன். (குறுக்கீடு)*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** *மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பணப் பயிர்களுக்கு என்று மட்டும் சொன்னார். அதற்குக் கீழேயுள்ள, அதாவது திராட்சை, கரும்பு, தென்னை, வாழை இவைகளுக்கு எல்லாம் வரி உண்டா, இல்லையா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் இங்கு பதிலளிக்கும்போது சொன்னேன். மலைத் தோட்டப் பயிர் என்றால், இரப்பர், காப்பி, தேயிலை, ஏலக்காய், கிராம்பு மற்றும் மிளகு ஆகியவற்றிற்கு இந்த வருமான வரி.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ஜே. ஹேமச்சந்திரன்.*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தோட்டத்தில் விளையக்கூடிய காப்பி, தேயிலை ஆகியவை கடுமையான பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கை காரணமாக, இந்தத் தொழில்கள் இப்போது அறவே பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், சிறு விவசாயிகளைப் பொறுத்த அளவிலே, மாதம் 2,500 ரூபாய், 3,000 ரூபாய் வருமானம் இருக்கிறவர்களுக்கு இந்த வரி விதிப்பது என்பது அவர்கள் குடும்பம் நடத்துவதற்கு மிகவும் சிரமத்திற்கு*

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மே 18

ஆளாக்கப்படுவது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை மனதிலே வைத்துக்கொண்டு அவர்களுக்கும் சில சலுகைகள் அளிப்பதற்கு வழி செய்வார்களா? (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது பேசிய உறுப்பினர் மட்டும். திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில்தான் தெரிவித்தேன். ஒரு தனி நபருக்கு வருமான வரி என்று நிர்ணயிக்கப்படுவது, வரம்பாக உயர்த்தப்பட்டிருப்பது, 60,000 ரூபாய் என்ற அளவுக்கு I.T. 60,000 ரூபாய் என்று ஒரு வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு, அதுவும் மலைத் தோட்டப் பயிர் விற்பனைக்கு, தனி நபருக்கோ, ஒரு நிறுவனத்திற்கோ 28,000 ரூபாய் என்பது மிகக் குறைந்த அளவிலே இருக்கிறது. எனவே, குறைந்தபட்சம் இந்த வரி விதிக்கப்படுகிற வரம்பை ரூபாய் 28,000 என்பதில் இருந்து ரூபாய் 75,000 ஆக உயர்த்தி, 75,000-க்குமேல் வரி விதிக்கத்தக்க வகையிலே அரசே ஒரு திருத்தத்தை முன்மொழிய வேண்டுமென்ற என் கருத்தை மீண்டும் வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருமான வரி மொத்த நிகர இலாபத்தில்தான் இந்த விழுக்காடு. என்ன நிகர இலாபம் வருகிறதோ, அந்த நிகர இலாபத்துக்குத்தான் இந்த 20 சதவீதம், 30 சதவீதம், 40 சதவீதம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஏற்கெனவே, 1-4-1993-லே இருந்து நாம் இந்த வருமான வரியை வசூல் செய்துகொண்டிருக்கிறோம். இது ஒன்றும் புதியது அல்ல. மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கு சொன்னதைப்போல, விவசாயிகளுடைய நிலை மற்றும் விவசாயிகளுக்கு வரக்கூடிய வருமானத்தைப் பொறுத்தவரையில் சில ஆண்டுகளில் அதிகமாக நல்ல வருமானம் வரும்; சில நேரங்களிலே விலை வீழ்ச்சியின் காரணத்தினாலே பெரும் நட்டத்துக்கு ஆளாவார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் கணக்கிட்டுக்கொண்டு, ஒரு கொள்கை முடிவை எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2000 மே 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2000 மே 18

"2000ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000(ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்20/2000) ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2000 மே 18]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2000) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தடுத்து வருகின்ற மசோதாக்கள் ஐந்தும் உள்ளாட்சி, அமைப்புகள் சம்பந்தப்பட்டவை. எனவே, பேச விருப்பம் தெரிவிக்கின்ற உறுப்பினர்கள் அவற்றையும் சேர்த்துப் பேசலாம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்...(குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த சட்டமுன்வடிவில் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது பேச விரும்பினால் பேசுங்கள். நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அடுத்தடுத்து வருகின்ற 5 மசோதாக்கள் உள்ளாட்சி, அமைப்புகள் சம்பந்தப்பட்டவை; அவற்றை சேர்த்துப் பேசலாம் என்று சொன்னேன்; 5 மசோதாக்களையும் சேர்த்து பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 5 மசோதாக்களையும் சேர்த்துப் பேச வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 5 மசோதாக்களையும் சேர்த்துப் பேசுங்கள்; தனித் தனியாக இல்லை. (குறுக்கீடு) 5 மசோதாக்களும் உள்ளாட்சி, சம்பந்தப்பட்டவை; தனித் தனியாகப் பேசினால் நேரம் அதிகமாகும். (குறுக்கீடுகள்) பேச விரும்பும் உறுப்பினர்கள் எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்துப் பேசுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்து இருக்கக்கூடிய 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவு குறித்தும், அதேபோல் `A Bill for that to amend the Laws relating to Municipal Corporations and Municipalities in the State

@ 17-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

of Tamil Nadu" என்று இருக்கக்கூடிய இந்த சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2000), (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2000) ஆகியவை பற்றி நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இதிலே தமிழகத்தில் பல இடங்களிலே வரைமுறை இல்லாமல் பல விளம்பர போர்டுகளை வைத்து ஓர் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; இயற்கை அழகை எல்லாம் மறைத்துக் கொண்டிருக்கிறார்கள்; இவற்றையெல்லாம் வரைமுறைப்படுத்த வேண்டும். சில நேரங்களிலே மழைக்காலம் என்று வந்துவிட்டால் அல்லது புயல் அடித்தது என்று சொன்னால்—பெரிய அளவில் ராட்சத போர்டுகளை வைத்துவிடுகிறார்கள்—அவை பறந்து போய் யார் தலையிலாவது விழும் அல்லது போகக்கூடிய வாகனங்கள் மீது விழும்; இப்படியெல்லாம் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதிலே நிறைய கட்டணத்தையும் வசூலிக்கிறார்கள்; அதற்கென்று சில ஏஜென்சீஸ் எல்லாம் புறப்பட்டு எக்கச்சக்கமான கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். விளம்பரம் என்பது இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் தேவைப்படுகிற ஒன்றாக மாறிவிட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இது ஒரு பெரிய வியாபாரமாக வலுத்துப் போய்க்கொண்டே இருக்கிறது. இதை நிச்சயமாக வரைமுறைப்படுத்தி செம்மைப்படுத்த வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

சென்னையிலே பார்த்தீர்கள் என்று சொன்னால் எங்கு பார்த்தாலும் போர்டுகள் இருக்கின்றன; அந்த போர்டுகள் தெருக்களையும் மறைக்கின்றன; இருக்கக்கூடிய கட்டடங்களையும் மறைக்கின்றன; இவற்றையெல்லாம்கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல், குறிப்பிட்ட அகலத்திற்குமேல், நீளத்திற்குமேல் வைக்கக்கூடாது என்ற ஒரு வரைமுறை வைத்தால்கூட நன்றாக இருக்கும். நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின் சட்டமுன் வடிவு எண் 21/2000 அதே போல சட்டமுன்வடிவு எண் 24/2000 இந்த இரண்டையுமே, அதாவது சட்டமுன்வடிவு எண் 21-2000-ல், இரண்டாவது பிரிவில் நீங்கள்—sub-section(2)-on or after the date of the commencement of the Tamil Nadu Panchayat (Third Amendment) Act, 2000, (hereafter in the section referred to as the amendment Act), ``no person shall erect any hoarding (other than traffic sign and road sign) visible to the traffic on the road and which is hazardous and disturbance to safe traffic movement so as to adversely affect free and safe flow of traffic; என்று இருக்கிறது. இதிலே "visible", என்ற வார்த்தை, 'visible to the traffic on the road' என்று இருக்கக்கூடிய





ஒன்றை—காரணம் விளம்பர போர்டு என்பது `visible' ஆக இருக்க வேண்டும் என்றுதான் தமிழகம் முழுவதும் வைப்பார்கள். நீங்கள் visible என்கிற வார்த்தையைப் போட்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், சாதாரணமாக யாராவது ஒருவனைப் பிடிக்கவில்லை என்று சொன்னால், உடனடியாக அவனைப் பிடித்து உள்ளே போடுவதற்கு இந்தச் சட்டம் மிக் எளிதிலே பயன்படுத்தக்கூடிய ஒன்றாக வந்துவிடும்; எனவே, visible என்ற வார்த்தைக்குப் பதிலாக hindrance என்று நீங்கள் போட்டுவிடலாம்; "Hindrance to the traffic on the road which is hazardous" (குறுக்கீடு) இதைத் தமிழிலே சொல்ல வேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதிலே visible என்பதற்கு 'காணக்கூடிய வகையில்' டிராஃபிக் போர்டு இருந்தால் என்று இருப்பதை, visible என்பதற்குப் பதிலாக நீங்கள் 'இடைஞ்சலாக இருக்கக்கூடிய' hindrance அதாவது...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் இருந்தாலும் என்று ஒரு வரி இதில் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** Visible to the Traffic என்று இருப்பதை...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து கொண்டு வருபவன் படித்துக் கொண்டு வந்தாலே மோதுகிற வாய்ப்பு இருக்கிறது. வண்டி ஓட்டிக் கொண்டு வருபவன், அதைப் பார்த்தாலே ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. ஆகையால், அப்படி ஆபத்தினை விளைவிக்கக்கூடியது, பார்வையில் படக்கூடியதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர வேறு அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வார்த்தையைக் கொண்டு சில பேர் பின்னால் விளையாடி விடக்கூடாது என்பதற்காகத்தான் மிக எச்சரிக்கையாக நான் சொல்கிறேன். ஆகவே Hindrance என்று போட்டுவிட்டாலே அந்த அர்த்தம் வந்துவிடும். நீங்கள் Visible என்ற வார்த்தையைப் போட்டுவிட்டால், பிறகு ஏதோ விளம்பரப் போர்டுகள் கண்ணில் படக்கூடிய வகையிலே இருக்கக் கூடாது என்று சொன்ன மாதிரி, இந்த வார்த்தை இருக்கிற காரணத்தினாலே வழக்கு மன்றத்திற்குச் சென்று, வழக்குப் போட்டுவிடுவார்கள், இதிலே....

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** நீங்கள் பார்க்காமல் எப்படி hindrance தெரியும். How can it be possible? Only if it is visible you can know that it is hindrance.

**திரு. சி. ஞானசேகரன்:** Visible என்று இருக்கக்கூடிய இந்த வார்த்தையை நீங்கள் அப்படியே வைத்துக்கொண்டிருந்தால், பிறகு எல்லோருமே மிக எளிதாக இதை misuse செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, Hindrance என்ற வார்த்தையைப் போட்டால் மிகவும் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஏனென்றால் விளம்பரம் என்று சொல்லும்போது எல்லாமே Visible ஆகத்தான் இருக்கும். அப்படி Visible ஆக இருக்க வேண்டுமென்பதற்காக வைக்கப்படுபவைதான் விளம்பர போர்டு.

இப்படி போடக்கூடிய இந்த விளம்பர போர்டுகள் Hindrance to the traffic என்ற வகையிலே, இடையூறாக இருக்கும் என்ற வகையிலே வார்த்தையைப் போட்டு அமைத்தால்தான், அது மற்றவர்களைப் பாதிக்காத முறையிலே, சட்டம் பயன்தரக்கூடிய வகையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்து நீங்கள் அந்த வார்த்தையை...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக 2, 3 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில், டெல்லியில் இப்படி விளக்கமாகப் பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு, ஒரு முடிவே அறிவிக்கப்பட்டு, ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இங்கே இருக்கின்ற உயர்நீதிமன்றமும் ஒரு வழக்கை எடுத்துக்கொண்டு விவாதித்துக் கொண்டிருக்கிறது. அதை ஒட்டித்தான் அந்த வார்த்தைகள் அத்தனையும் போடப்பட்டிருக்கின்றன. இதிலே எந்தவிதமான வார்த்தையையும் புதிதாகச் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள், மாண்புமிகு அமைச்சர் அவருடைய கருத்தைச் சொன்னார். மற்றவர்களெல்லாம் பேச வேண்டும். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விளம்பர போர்டுகள் சம்பந்தப்பட்ட இந்த சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்த விளம்பர போர்டுகள் குறிப்பாக மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு பெரிய அளவிலே இடையூறாக இருக்கிறது; போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது; இந்தத் திருத்தச் சட்டம் மிகத் தேவையானது. இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்த விளம்பர போர்டுகளுக்கு மின் இணைப்பே கொடுக்கிறோம். மாநகராட்சிகளில் பார்த்தால் மின் இணைப்பு கொடுத்து, மிகப் பெரிய அளவில், பிரமாண்டமான போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது; பொருட்சேதம் ஏற்படுகிறது; இதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. இன்னொரு முறையில் பார்க்கின்றபோது, இதனை ஊராட்சிகளுக்குக் கொண்டு வருவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதையும் வரவேற்கிறேன். ஆனால், ஊராட்சிகளில் இதற்கான வாய்ப்புகள் பெரிய அளவில் இருக்கிறதா என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால், ஏதோ ஒரு வகையிலே ஊராட்சி, நகராட்சிக்கு வருமானம் இல்லாமல் போகிற நிலையிருக்கிறது. இருந்தாலும் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக எடுத்திருக்கிற முயற்சியை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பர போர்டுகள் விஷயத்தினை நீங்கள் மாநகராட்சிகளுக்குக் கொண்டு வருவதையெல்லாம் வரவேற்கிறேன். அதிலே சில பேர் கோர்ட்டுக்குப் போய், ஸ்டே வாங்கி விடுவார்கள் என்று கூறியிருக்கிறீர்கள். இதிலே அமைச்சருக்கு ஒன்றை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் குறைந்த அடி விளம்பரத்திற்கு அனுமதி வாங்கிவிட்டு அதிக அளவிலே விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். அடுத்தபடியாக பெரியார் சிலைக்கு அருகிலே குறைந்த அளவுக்கு அனுமதி வாங்கி அதிக அளவுக்கு விளம்பர போர்டு வைத்திருக்கிறார்கள். மற்றொன்று ஜெமினி பாலத்தின் அருகில், இந்த மூன்றையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த மூன்றுக்கும் குறைந்த அடிக்கு விளம்பரம் வைக்க அனுமதி வாங்கிக் கொண்டு அதிக அடிக்கு விளம்பர போர்டு வைத்துள்ளார்கள். இதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதைப்போல திரு. சிவபுண்ணியம் அவர்கள் கூறியபடி பஞ்சாயத்துக்கு வரி விதிப்பு மூலம் வருகிற வருவாய் கொஞ்சம்தான். நீங்கள் கண்ணில் தெரியும்படி என்று சொல்லியிருக்கிறீர்கள். கண்ணில் தெரியும்படி இருப்பதற்குத்தான் விளம்பரம். ஆகவே கிராமப் பகுதிகளில் இருக்கிறதை நீங்கள் யோசித்து . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கண்ணுக்குத் தெரியும்' என்பதிலே இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. அதாவது கார் ஓட்டிக்கொண்டு போகிறவன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான் என்றால், எதிரே வருகிறவனைத் தெரியாது; காரை விட்டு அடித்துவிடுகிறான். ஒரு ரோட்டில் நடந்து போய்க் கொண்டிருப்பவன், அதைப் படித்துக் கொண்டிருந்தால், கார் வருவது தெரியாமல் நின்று கொண்டிருக்கிறான். ஆபத்து விளைவிக்கப்படுகிறது. அதனால்தான் அபாயகரமானது என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகையினால், எந்தவிதமான வார்த்தைகளையும் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் அப்படி கார் ஓட்டிக்கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டு செல்லும்போது ஆபத்து ஏற்படுவதற்கான எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, ஆபத்து சைக்கிள் ஓட்டிக்கொண்டு போகிறவன்மீதும் ஏற்படும்; இரு சக்கர வாகனங்கள் ஓட்டிக்கொண்டு போகிறவன்மீதும் ஏற்படும். ஆபத்து என்பது எதிர்பார்க்காமல் ஏற்படுவது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** வரி வருவாய்க்கு ஒரு விதிவிலக்கு கொடுத்து..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். அடுத்து, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பர போர்டுகள் சம்பந்தமான சட்டமுன்வடிவில் — மாநகராட்சிகளானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி





பிரம்மாண்டமான போர்டுகளை வைப்பது என்பது ஆட்சேபணைக்குரியது அல்லது ஆபத்திற்குரியது. அந்த வகையிலே அதைக் குறைத்துக்கொண்டு ஒரு சிறிய விளம்பரத்தைத் தருகிற வகையில் யாருக்கும் எந்தவித துன்பங்களும் ஏற்படாத வகையில் அந்த அடிப்படையிலே ஒரு சின்ன மாற்றத்தை ஏற்படுத்துவது நல்லது. ஊராட்சிகள் என்று வருகின்றபோது, ஊராட்சிகளில் ஒன்றும் பெரிய அளவில் பிரச்சினைகள் இருப்பதாகத் தோன்றவில்லை. அது முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளிலேதான் இருக்கின்றது. சில பகுதிகள் மட்டும்தான் பெரிய தேசிய நெடுஞ்சாலைகளைச் சென்று அடைகின்றன. இருந்தாலும்கூட அதனுடைய அளவைக் குறைப்பது என்பது தேவை என்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இந்தக் காலக்கெடு, இப்போது நாம் ஒரு முடிவு எடுத்தால் இன்றிலிருந்து எத்தனை மாதத்திற்குள் 6 மாதத்திற்குள் இருக்கின்ற போர்டுகளை மாற்றுவதா அல்லது 3 மாதத்திற்குள் மாற்றுவதா என்ற வரைமுறை வேண்டும். ஊராட்சிகள், நகராட்சிகளில் வருகின்றபோது அரசியல் காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டு, அதிலே 4 பேர் போர்டுகளை எடுக்கச் சொல்லி, 3 பேர் போர்டுகளை எடுக்கவிடாமல் இருக்கக்கூடிய நிலை உருவாகக் கூடாது அந்த வகையிலே அதற்குரிய நடவடிக்கைகள் வேண்டும். பெரிய விளம்பர போர்டுகள் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும்கூட. அந்த வகையில், இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பர போர்டு என்பது தேசிய நெடுஞ்சாலையில் எதிரே வரக்கூடிய வாகனங்கள், 'டிம்' அடித்து ஓட்டி வரக்கூடிய டிரைவர்கள் கண்கூசாமல் இருக்க ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்த விளம்பர போர்டுகளுடைய மெர்குரி பெயின்ட் எதிரே வாகனங்கள் வருகின்றனவா இல்லையா என்று தெரியாமல், நம்முடைய வாகனங்களுடைய விளக்குகூட பயன்பட முடியாத அளவுக்குப் பெரிய ஆபத்தாக இருக்கிறது. நான் வாகனம் ஓட்டக் கூடியவன். அந்த அனுபவத்தை வைத்துச்சொல்கிறேன். இந்த மெர்குரி எழுத்தால் எழுதக்கூடிய போர்டுகள் எக்காரணம் கொண்டும் நெடுஞ்சாலைகளில் கட்டாயமாக வரக்கூடாது என்பதை அழுத்தந்திருத்தமாக சட்டத்தில் கொண்டு வர வேண்டும். போர்டுகள் எந்த அளவுக்கு இருந்தாலும் சரி, இந்த மெர்குரி எழுத்து போர்டு எக்காரணம் கொண்டும்

நெடுஞ்சாலைகளில் கட்டாயம் வரக்கூடாது என்பதை மிக அழுத்தந்திருத்தமாக வைக்க வேண்டும். பெரிய ஆபத்து இதிலேதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் பாராட்டுகிறோம். காரணம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இந்த சென்னை மாநகரத்தை மிக அழகாக, அழகிய சென்னையாக ஆக்க வேண்டுமென்று, சிங்காரச் சென்னையாக ஆக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இவை எல்லாம் நம்முடைய போக்குவரத்திற்கு மற்றவற்றிற்கு இடைஞ்சல்களாக இருக்கின்றன என்பதைக் கருதி, அருமையான ஒரு சட்டத்தை நம்முடைய மன்றத்திலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற இருக்கிறார்கள். அதை வரவேற்பதோடு, இந்தச் சட்டமுன்வடிவில் அருமையான வார்த்தை visible என்பது முக்கியமான வார்த்தை. நம்முடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், வழக்கறிஞர் அவர்கள், சொன்னதுபோல அந்த வார்த்தை இல்லாமல், visible என்பதே மிக நல்ல வார்த்தை, முறையான வார்த்தை apt word. எனவே, அந்த வார்த்தையைப் போட்டுதான் இந்தச் சட்டமுன்வடிவை ஆக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பின் அடிப்படையில்தான் அப்படியே பார்த்து அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்—இந்த வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே, உச்சநீதிமன்றமே ஏற்றுக்கொண்ட வார்த்தையைத்தான் இப்போது நாம் அறிவிக்கிறோம். தயவுசெய்து அவர்கள் சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் visible என்பது ஒரு apt word என்று சொன்னார்கள். 'கண்ணுக்குத் தெரிந்த' என்பதே இதன் பொருள். கண்ணுக்கு தெரிவதற்குத்தான் விளம்பர போர்டு வைத்திருக்கிறோம். கண்ணுக்குத் தெரியாமல் எங்கேயாவது போர்டு வைத்துக்கொண்டிருப்பார்களா என்று எனக்குப் புரியவில்லை. நான் சொன்ன hindrance என்ற வார்த்தையைப்



போட்டால்தான் பொருத்தமாக இருக்கும் என்று சொல்கிறேன். எந்தவகையில் அது உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் வந்த அந்த வார்த்தைகளைத்தான் பயன்படுத்துகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே, நீங்கள் உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாவட்டப் பஞ்சாயத்துகளில் இதுவரை திட்டக் குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருந்தார். அதை இப்போது மாற்றி ஜனநாயக முறைப்படி மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் திட்டக் குழுவின் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராகவும் இருக்கும்படி இப்போது சட்டம் வருகிறது. இது ஓரளவு வரவேற்கக்கூடிய நல்ல ஜனநாயக முறை என்றாலும் கூட, மாவட்ட ஆட்சித் தலைவர், துணைத் தலைவர் என்று இருப்பதை விட செயலாளர் என்று மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இந்தப் புதிய சட்டம் சிறப்பான முறையில் அமல்படுத்தப்படுகின்ற மேற்கு வங்காளம், ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் எல்லாம் அவர்கள் செயலாளர்களாகத்தான் வேலை செய்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை வரவேற்பதோடு மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவருக்குத் துணையாக மாவட்டப் பஞ்சாயத்துத் துணைத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார் என்பதற்குப் பதிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டப் பஞ்சாயத்தினுடைய செயலாளராகப் பணியாற்ற வேண்டுமென்று திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் காலப்போக்கிலே வேண்டுமானால், பரிசீலித்துப் பார்த்துக்கொள்ளலாம். அதிலே ஒன்றும் - ஒரு வார்த்தையை மாற்றுவதிலே ஒன்றும்—தவறில்லை. இருந்தாலும் தற்போது இது ஒரு நல்ல முடிவுக்காகக் கொண்டு வருவது. நீங்கள் ஏற்கெனவே டி.டி.சி. இல்லை என்றெல்லாம் சொன்னீர்கள். எந்தத்

[திரு. கோ.சி. மணி] [2000 மே 18

திட்டக் குழுவையும் வைத்து, கூடுமானவரை சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இவர்களையெல்லாம் உள்ளடக்கி மீண்டும் அதைப்போல இன்னும் கொஞ்சம் விரிவாகவும், எல்லா உறுப்பினர்களையும் உள்ளடக்கியபடியும், ஊராட்சிச் சட்டத்தின் படி 5-ல் ஒரு பங்கு, 4-ல் ஒரு பங்கு உறுப்பினர் தேர்வு செய்து கொண்டு வரவேண்டும் என்றும், அந்த வகையில் இந்த மன்றத்தில் அமைத்து, இதைச் சிறப்பாக நடத்தலாம் என்ற நோக்கத்தில்தான், சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிவித்து இதை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(அ.அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2000) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [2000 மே 18

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

@ 17-05-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 மே 18]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2000). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 17-05-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 மே 18

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2000 மே 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (இஇ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2000). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 17-05-2000-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-35

### (ஈஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 24/2000). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2000)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

---

@17-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2000) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1999) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உஉ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1999). மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

---

@ 18-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். ஆய்வு செய்வதற்கும் இந்த அவைக்கு வெளியே இருக்கிற பல விவசாயப் பெருமக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் தேவையான கால அவகாசமும் இதிலே இருந்திருக்கிறது. அந்தக் கருத்துகளின் அடிப்படையிலே சில திருத்தங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் வரவேற்று, அரசு தொடர்ந்து முயற்சி எடுத்தும்கூட, பாசன அமைப்புகளில் கடைகோடிப் பகுதிகளில் இருக்கிற வேளாண் பெருமக்களுக்கு முறையான அளவிலே தண்ணீர் வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, நீர் ஆதார அமைச்சகம் மற்றும் பல்வேறு உலக நாடுகளின் அனுபவத்தைக் கொண்டு இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முதன் முதலாக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தை வரவேற்று, எதிர்காலத்திலே கிடைக்கக்கூடிய அனுபவத்தைக் கொண்டு மேலும் திருத்துவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டு காலமாக இருந்த விவசாயச் சங்கங்களுடைய கோரிக்கையை ஏற்று, ஆந்திர அரசினுடைய முறையைப் பின்பற்றி, இங்கேயும் பாசன அமைப்புகளுக்கு முழுமையான அதிகாரத்தைக் கொடுத்து, எதிர்காலத்திலே அவை செயல்பட வேண்டுமென்ற நிலையைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதை வரவேற்கின்ற அதே நேரத்தில், முழுமையான அதிகாரத்தைப் பாசன அமைப்புகளுக்குக் கொடுப்பதோடு முழுமையான நிதி ஆதாரத்தையும் அரசின் மூலமாக அவர்களே ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, எதிர்காலத்திலே அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பாசன அமைப்புகளே முழு அதிகாரத்தையும் பெற்று அங்கே செயல்படுத்தக்கூடிய சூழ்நிலையை அரசு இந்தச் சட்டத்திருத்தத்திலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். என் பாலசுப்பிரமணியன் அவர்களும் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் விவசாயிகள் மத்தியில் ஒரு பெரிய, மகத்தான, புரட்சிகரமான ஒரு மசோதாவாக இது இருக்கும். இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் கொண்டுவருவதற்கு முக்கிய நோக்கமே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, விவசாயிகளுக்கு, அவர்களுடைய கால்வாய்களை நிர்வகித்துக்கொள்கிற பொறுப்பு தரப்படவேண்டும் என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல, கடைமடையில் இருக்கிற விவசாயிகளும் நீரைப் பெறுகிற வகையிலும், ஒரு பொறுப்பு விவசாயிகள் மத்தியிலே வரவேணடும் என்பதற்காக இந்த அமைப்பு முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தியாவில் ஆந்திர மாநிலத்திலே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்திருந்தாலும், அதிலேயும் இன்னும் கொஞ்சம் வேகம் காட்டி, இன்னும் பல சலுகைகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருப்பது, நம்முடைய தமிழக அரசினுடைய இந்தச் சட்டமுன்வடிவாகும்.

*பிற்பகல் 12-40*

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், விவசாயிகளைப் பொறுத்த வரையிலே எத்தனையோ வரலாற்றுச் சாதனைகளைப் படைத்தவர்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுத்தவர். எங்கும் வரலாறு காணாத அளவிற்கு ஆறுகளையும், ஏரிகளையும், கால்வாய்களையும் தூர் வாரியவர். இனி தமிழ்நாட்டிலே அணை கட்டுவதற்கு இடம் இல்லை என்கிற அளவிற்கு அணைகளைக் கட்டிக் கொண்டிருப்பவர். ஒவ்வொரு ஆற்றுப் படுகைகளிலும் உள்ள விவசாயிகளுக்கு ஏற்ற அறிவுரைகளை வழங்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் முதல்வரிடத்திலே கொடுத்த அந்தக் கோரிக்கையை ஏற்று, கீழ்பவானியிலே, பவானியிலே ஆக்கபூர்வமான

[திரு. துரைமுருகன்] [2000 மே 18

பணிகளுக்கு விவசாயிகள் மத்தியிலே அறிவுரை பெறுவதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மற்றப் பகுதிகளையும் இணைத்துச் செய்ய வேண்டுமென்ற அளவில் விவசாயிகள் சங்கங்களை, உரிய நீர்ப்பாசன அமைப்பு முறைகளை உருவாக்குவதற்கு இந்தச் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தையே அவர்கள் நம்பியிருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் சில கால்வாய்களைத் தூர் வாரும். ஆனால், தண்ணீரைப் பகிர்ந்துகொள்வது, விவசாயிகள் மத்தியிலே இருக்கிற ஒன்றாகும். மேல்மடையிலே இருப்பவர்களே, தண்ணீரைப் பாய்த்துக் கொண்டிருந்தால், இந்தக் கீழ்மடைக்காரர்கள் அரசாங்கத்தைத்தான கேட்க வேண்டும். பொறுப்பை அவர்களிடத்திலே கொடுத்துவிட்டால், அந்தக் குழு மேல்மடைக்காரருக்கு எவ்வளவு தண்ணீர் பாய வேண்டும்; அடுத்து எந்த நிமிடத்தில் அடைக்க வேண்டும்; பிறகு தண்ணீரைக் கடைமடைக்குக் கொண்டுபோக வேண்டும் என்கிற பொறுப்பு அவர்களுக்கு வந்துவிடுகிறது. இது மற்ற நாடுகளிலே வளர்ந்திருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டிலே அந்தப் பொறுப்புணர்ச்சி மிகக் குறைவு. அது விவசாயிகளுக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமே கொண்டு வரப்பட்டிருக்கிறது. நம்முடைய விவசாயிகள் மத்தியிலே அந்தப் பொறுப்புணர்ச்சி குறைந்திருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். கால்வாய்களில் சில நேரங்களில் நாங்கள் லைனிங் செய்கிறோம். ஆனால், லைனிங் செய்த கால்வாயில், நான் ஒருநாள் மாலையிலே ஓர் இடத்திலே, தங்கி — திருவண்ணாமலை மாவட்டத்திலே— காலையிலே வாக்கிங் போனேன். அங்கே இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டு—நான் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை— கடப்பாறையைப் போட்டு அந்த ஸ்லாப்களைப் பெயர்த்துக் கொண்டிருந்தார்கள். "ஏன் எடுக்கிறீர்கள்" என்று நான் கேட்டேன். "வீட்டிலே பசுமாடு சேற்றிலே இருக்கிறது. இதைக் கொண்டுபோய் போட்டால், கன்றுக்குட்டி போட்டால் நன்றாக இருக்கும்" என்று சொன்னார்கள். "உங்களுக்கு இரண்டு வேண்டுமா" என்று கேட்டார்கள். நான் திரும்பி வந்து உடனே அங்கேயிருக்கிற அதிகாரிகளைக் கூப்பிட்டு, "எனக்கு இரண்டு வேண்டுமா என்று கேட்கிறார்கள்; அவர்களுக்கு இரண்டு கொடுத்துவிட்டு வா" என்று சொல்லி அனுப்பிய பிறகு, கிராமத்திலே என்ன பண்ண முடியும்? அவன், "அய்யா, தெரியாமல் எடுத்துவிட்டோம்" என்று சொன்னதால் விட்டுவிட்டு, மறுபடியும் பதித்தோம். ஆகையால், இப்போது என்ன செய்கிறோம் என்றால்,



2000 மே 18] [திரு. துரைமுருகன்]

ஸ்லாப்பை எடுத்துவிட்டு, Concrete slope போட வேண்டிய நிலைக்கு இப்போது வந்திருக்கிறோம்.

மெக்சிகோ நாட்டிலே நாங்கள் சென்று பார்த்தோம். டேமிலே தண்ணீர் இருக்கும். பிரதான கால்வாய் மட்டும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும் Branch Canals முழுவதும், விவசாய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கும். அவர்கள்தான் maintenance-ம் செய்வார்கள். அரசாங்கம் கிளீன் பண்ணிக் கொடுத்துவிடும், ஆனால், அதற்குப் பிறகு maintenance அவர்கள்தான் செய்வார்கள். ஆனால், ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய் என்று வசூல் செய்வார்கள் ஒரு ரூபாய் வசூல் பண்ணினால், 8 அணாவை அவர்கள் செலவிற்கு வைத்துக் கொள்வார்கள். 4 அணாவை அந்தச் சங்கத்திற்கு வைத்துக் கொள்வார்கள். 4 அணாவை மேலே இருக்கிற அரசாங்கத்திற்கு கட்டுவார்கள். எனவே, விவசாயிகள் மத்தியிலே கட்டணத்தை வசூலிக்கின்ற பொறுப்புகூட அந்த விவசாயச் சங்கத்திற்கு இருக்கிறது. அது காலப்போக்கிலே வரவேண்டும். ஆனால், இப்போது நாங்கள் சில இடங்களிலே விவசாயிகள் சங்கங்களை ஆரம்பித்து "ஏரிகளை நீங்களே தூர் வாருங்கள்" என்று கொடுத்தோம். ஆனால் . ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழு அந்தத் திட்டத்தைக் கண்டபோது 7 ஆண்டு காலமாகக் கூட சில விவசாயச் சங்கங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களுடைய ஏரியாவிலே கெடார் போன்ற பகுதிகளில் அவர்கள் நல்ல திட்டங்களை அமல்படுத்தியிருக்கிறார்கள். நானே சென்று பார்த்தேன். எனவே, விவசாயிகளும் அந்தந்த ஏரியாவிலே இருக்கிற ஒவ்வொருவரும் தங்களுக்குள் ஒரு சங்கம், அதற்கு மேல் ஒரு பகிர்மாணச் சங்கம் Distribution Council அதற்கு மேலே அவர்களுக்கு அனுப்புவதற்கு ஒரு Apex Committee என்று பல்வகைகளிலே அமைத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சொன்னதைப் போல, இது ஓர் அறிமுகத் திட்டம்.

பிற்பகல் 12-45

நம்முடைய ஊரிலே எதையுமே தொட்டுப் பார்க்கிற எண்ணம் உண்டு. இதிலேகூட குற்றம் குறைகள் காணலாம்; இருக்கலாம்; வரலாம். ஆனால், காலப்போக்கிலே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல நாங்கள் அதை நிவர்த்தி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, இந்தத் திட்டம் விவசாயிகளுக்கான திட்டம், அவர்களுக்காகவே போடப்பட்டிருக்கிற திட்டம்;

விவசாயிகளும் தங்களை உணர்ந்து கொள்ளவேண்டும் என்கிற திட்டம். எனவே, இந்தத் திட்டத்தைப் பெரும்பகுதியாக ஆதரித்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

### பிரிவு-2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *பிரிவு-2, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"(a) in Sub-clause (f), omit 'or capable of being irrigated';

(b) in sub-clause (u), omit 'allocation'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*



*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.*

*பிரிவு 2, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

### பிரிவு-4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *பிரிவு-4, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"In clause 4, in sub-clause (2),

(a) omit first proviso;

[Thiru Durai Murugan] [2000 மே 18

(b) in the second proviso, omit 'further';

(c) in the third proviso, for 'also' substitute 'further'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு-5, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 5, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு-6**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு-6, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.



2000 மே 18]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"In clause 6, *for* 'every command area of each major irrigation system', *substitute*, 'Command area of each major and medium irrigation system'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 6, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 7 மற்றும் 8, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 7 மற்றும் 8 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2000 மே 18

**பிரிவு-9**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு-9, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

``In clause 9, for `an irrigation system', substitute ` a major irrigation system'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 9, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 10 முதல் 23 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 10 முதல் 23 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு-24**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 24, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர், தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

" In Clause 24, in sub-clause (a), for `to prepare an operational plan, based on its entitlement, area, soil cropping pattern, as approved by the competent authority', substitute' 'to approve an operational plan, based on its entitlement, area, soil cropping pattern, as prepared by the Competent Authority'.``

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 24, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 25, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 25, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு 26**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 26, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**HON. THIRU DURAIMURUGAN:** Hon. Deputy Speaker sir,

"(a) in sub-clause (2) for 'shall be responsible to' substitute 'shall assist';

(b) in sub-clause (3), omit 'and follow such directions or instructions as may be issued by the Competent Authority, from time to time'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.



பிரிவு 26, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 27 முதல் 41 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 27 முதல் 41 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு-42**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 42, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**HON. THIRU DURAIMURUGAN:** Hon. Deputy Speaker, Sir,

"For clause, 42, substitute,

'42. (1) any farmers association already formed and registered under the Tamil Nadu Societies Registration Act, 1975 for the purpose of carrying out the functions of participatory Irrigation Management prior to the coming into force of this Act and functioning in any area declared to be a Water Users Association Area under section 3 shall, as soon as the Managing Committee of the Water Users Association is constituted in accordance with section 5 in such area, cease to exist:

[Thiru Duraimurugan] [2000 மே 18

Provided that where any such farmers association which has entered into a Memorandum of Understanding with any authority of the Water Resources Organisation before coming into force of this Act shall continue to exercise the powers and functions of a Water Users Association in the respective area from the date of coming into force of this Act and till the constitution of the Managing Committee of the Water Users Association in accordance with this Act.

(2) The Government may, by notification, appoint officers from the Water Resources Organisation to exercise the powers and perform the functions of a farmers organisation and the Managing Committee thereof, till such time such farmers organisation is duly constituted or reconstituted and such managing committee assumes office under the provisions of this Act'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 42, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 43 முதல் 50 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 43 முதல் 50 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு - 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 1, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**HON. THIRU DURAIMURUGAN:** Hon. Deputy Speaker Sir,

"In Clause 1, in sub-clause (1), for '1999', substitute '2000'

Enacting Formula

In the enacting formula, for 'fiftieth year', substitute, 'Fifty-first Year'

Heading of the Bill

In the short title occurring above the heading 'Arrangement of Clauses', for '1999' substitute '2000'.

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் மற்றும் வனத் துறை அமைச்சரின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 மே 18

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1999), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

**(ஊஊ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2000), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 மே 18]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே ஒரு ஓட்டை இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. (சிரிப்பு) அதாவது, இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்;

"any Officer of the transport Department and below the rank of the Motor-Vehicle Inspector Grade-II or any Police Officer in Uniform"

அதாவது, வண்டிக்கு அவர்கள் கொடுக்க வேண்டிய வரியைக் கட்டாமல் ஓட்டப்படுகிறது என்ற சந்தேகம் அவர்களுக்கு வந்தால் அதைப் பிடித்து, safe custody-யிலே வைக்கலாம். அப்படி வைத்தற்குப் பிறகு 90 நாட்களுக்குள்ளாக அந்த வரி கட்டப்பட்டு அந்த வண்டியை எடுத்துக்கொண்டு போகவில்லை என்றால், அதனை ஏலம் விடலாம் என்றிருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால், சரி இப்போது பல இடங்களிலே பல பிரச்சினைகள் வருகின்றன. எங்கள் ஊரிலே எல்லாம், திருட்டுத்தனமாகத் தடியைக் கடத்திக்கொண்டு போகிற வண்டிகளை யாராவது பார்க்கின்ற நேரத்திலே வழியிலே அதனைப் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மரம் என்று சொல்லுங்கள். அப்போதுதான் எல்லோருக்கும் புரியும். உங்கள் ஊரில் பேசுகின்ற பாஷை இங்குள்ளவர்களுக்குப் புரியாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நான் என்ன சொல்கின்றேன் என்றால், அப்படிப்பட்ட வாகனங்களை அதிகாரிகள் பிடித்துக்கொண்டு

(@) 19-04-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 மே 18

போகிறார்கள். இவர்கள் எடுத்துக்கொண்டு போனார்களா; இல்லையா என்ற விஷயத்திற்கு அல்ல நான் வருவது. என்னுடைய கேள்வி என்னவென்றால், ஏலம் செய்வதற்கு முன்னாலே அந்த வாகனத்தினுடைய சொந்தக்காரர்களுக்கு உங்களுடைய வாகனம் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் அதற்குக் கட்டவேண்டிய வரியைக் கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமா; இல்லையா? அப்படி ஒரு நோட்டீஸ் கொடுப்பதற்கு எந்த வகையும் சட்டத்திலே காணவில்லை. நாங்கள் மூன்று மாதம், அந்த வாகனத்தை வைத்திருந்ததற்குப் பிறகும், அந்த வாகனத்தினுடைய சொந்தக்காரர் வரி கட்டவில்லை என்றால், அந்த வாகனத்தை ஏலம் விடுவதைத் தவிர வேறு என்ன வழி என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்று இந்த நாட்டிலே இருக்கிற சட்ட திட்டங்கள்படி, அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுப்பதற்கு சட்டத்தில் வகை செய்யப்பட வேண்டும். அது செய்யப்படவில்லையென்றால், நீதிமன்றத்திற்கு அவர்கள் போனால் அந்த ஏலம் பின்னாலே செல்லாது என்று வருகிற ஒரு ஆபத்து இருக்கின்றது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்திலே அவர்களுக்கு, எழுத்து மூலமான ஒரு தகவல் கொடுப்பதற்கான ஒரு வழியும் இதிலே செய்யப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே, சட்ட நடவடிக்கைகள் எப்படி எடுக்கப்படுமோ, அதுபோன்ற நடவடிக்கைகள்தான் எடுக்கப்படும். நோட்டீஸ் எல்லாம் கொடுத்துத்தான் செய்வார்கள்.

முதலிலே என்ன இருந்தது என்று சொன்னால், மூன்று மாதம் ஆனால்கூட, சீஸ் பண்ணி வைக்கலாமே தவிர, அதை ஏலத்திலே விட முடியாது. ஆனால், 10 வருஷமாக, 15 வருஷமாக வண்டி இருக்கும். இப்பொழுது அதிகாரிகள் இதிலே கேட்டிருப்பது, அதை ஏலம் விடலாம் என்பதற்காகத்தான். அதுகூட வரி கட்டாத வாகனங்களுக்குத்தான். நீங்கள் சொல்கிற மாதிரி, கள்ளக்கடத்தலிலே உபயோகப்படுத்திய அந்த வாகனங்களைப் பற்றி இதிலே சொல்லவில்லை. வரி கட்டாத வாகனங்கள் இருக்கும் என்று சொன்னால், அந்த வரி கட்டாத வாகனங்களுக்கு மூன்று மாதம் மேலேயானாலும்கூட, சீஸ் பண்ணி வைத்திருக்கலாம். அதுமாதிரி 6 வருஷம், 10 வருஷம் வண்டிகள் எல்லாம் இருக்கின்றன. அதைத் தடுப்பதற்காகத்தான் மூன்று மாதங்களுக்குள்ளே யாரும் வந்து



2000 மே 18] [டாக்டர் க. பொன்முடி]

கேட்கவில்லையென்றால், அதை ஏலம் விடுவதற்குள்ள அதிகாரம்தான் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, மற்றபடியான முறைகள் எல்லாம், முன்பு போலவே பின்பற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (எள) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2000). மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

@ 17-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தில் 15 ஆம் பிரிவிலுள்ள 6 ஆம் உட்பிரிவை விட்டுவிட வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி, நான் ஏற்கெனவே ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். அந்தக் கவன ஈர்ப்பிலே நான் எதை வலியுறுத்திச் சொல்லியிருந்தேனோ, அதே கருத்து இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்து, நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவு வரவில்லையென்று சொன்னால், இப்போதெல்லாம் சேவை நிறுவனங்களுக்கு தலைவர்கள் வருவதே கஷ்டம். அப்படி இருக்கிற நேரத்திலே சேவை நிறுவனங்களிலே பணியாற்ற வருகின்றவர்களுடைய சேவை தொடர்ந்து கிடைக்க வேண்டும். ஆக, இந்தச் சட்டமுன்வடிவு இருந்தால்தான் அவர்கள் அந்த நிறுவனங்களிலே தொடர்ந்து பணியாற்ற முடியும். அதற்கு வகை செய்கிற இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆதரிக்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப் (குறுக்கீடு) இவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக சட்டமன்றம் என்றால் அதனுடைய பிரதான பணி சட்டங்களை இயற்றுவது. மானியக் கோரிக்கைகள் மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் போன்றவையெல்லாம் அவ்வப்போது ஏற்படுகிற, ஆண்டுதோறும் ஏற்படுகிற தேவைகளுக்கு ஏற்பவும், தினந்தோறும் ஏற்படுகிற தேவைகளுக்கு ஏற்பவும், விவாதிக்கப்படக்கூடிய ஒன்று. Legislature என்று சொன்னால், சட்டம் இயற்றுகின்ற அமைப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால், அவசர கோலத்திலே நாம் சட்டங்களை இயற்றுவது பாரதூரமான தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேலாவது சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்கு உறுப்பினர்களுக்கு சரியான, முறையான, நிறைவான வாய்ப்பு அளித்து, அவசர கோலத்திலே சட்டங்களை இயற்றாமல், முறையாக சட்டங்களை இயற்றுவதற்கு முயல வேண்டும். உதாரணமாக இதே சட்டம், இந்தச்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 மே 18

சட்டம் — இந்த அவையிலே நான் இருக்கிறேன், ஆனால், அவையிலே நான் இருக்கும்போதே, இந்தச் சட்டம் — நிறைவேற்றப்பட்டது எனக்கேகூடத் தெரியாது. பலர் என்னைக் கேட்டார்கள். இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்களே, இதனால் ஏற்படுகிற விளைவுகளைப்பற்றி நீங்கள் அங்கே இருந்தீர்களே, ஏன் அதைப்பற்றிப் பேசவில்லை என்று கேட்டபோது, அப்படியொரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறார்களா என்று நானே கேட்கக்கூடிய அளவிற்கு நான் இப்போது படிக்க வேண்டும் என்கிற அளவிற்கு வருகிறது. அவசர கோலத்திலே கொடுக்கிறீர்கள். ஆனால், அவசரமாக இப்படிச் சட்டங்களை இயற்றுவதனால், இப்பேர்ப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. இந்தச் சட்டத்தை திரும்பப்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் ஏற்படுகின்றன. சட்டம் இயற்றி சிறிது நாட்களுக்குள்ளேயே இன்னொரு திருத்தச் சட்டம் கொண்டுவரக்கூடிய அவல நிலையெல்லாம் ஏற்படுகிறது. எனவே, இனிமேலாவது சரியான முறையிலே சட்டங்களை இயற்றும்போது உறுப்பினர்களுக்கு முறையான, நிறைவான வாய்ப்புக் கொடுத்து, சட்ட்ங்களை நிறைவேற்ற வேண்டுமே தவிர அவசர கோலத்திலே சட்டங்களை எந்தக் காரணத்தினாலேயும் நிறைவேற்றக் கூடாது. அதற்கு இந்தத் திருத்தச் சட்டமே ஒரு சிறந்த உதாரணம் என்பதைச் சொல்லி இருந்தாலும், இது பல தீய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தினால், பலர் இதைத் திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலே, மாண்புமிகு திரு. லட்சுமணன் அவர்கள்கூடக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அரசு முன்பு செய்தது சரியில்லை என்பதை ஏற்றுக்கொண்டு, திருத்தச் சட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்ததை நான் வரவேற்று, இந்தச் சட்டத்தை ஆதரித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள், அவர் இந்தச் சட்டத்தைப் படிக்கவில்லை என்று சொன்னார். நான் படித்தேன். ஆளும் கட்சியாக இருந்த காரணத்தால், அப்போது எதிர்க்க முடியவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே அமைச்சரிடத்திலே கூட கேட்டேன். இது அமைச்சரவையினுடைய முடிவு என்று சொன்னார்கள். இப்போது, இந்தச் சட்டத்தைத் திரும்பப்பெற்று இருக்கிறார்கள். பொதுவாக,



2000 மே 18] [திரு. அ.லெ. சுப்பிரமணியன்]

பல்கலைக்கழகத்திலே 6 ஆண்டுகாலம் தொடர்ந்திருக்கலாம் என்று சொன்னால், அந்தச் சட்டம் இப்போது இருக்கிறது. அது தேவையான சட்டம். ஆனால், இப்படிப்பட்ட இந்தச் சங்கங்களில், பதிவு பெறுகின்ற சங்கங்களில், சொசைட்டிகளில் 6 ஆண்டுகாலம்தான் இருக்கலாம் என்று சொன்னால், பின்னாலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சேவை சங்கங்களிலே ஆளே கிடைக்கமாட்டார்கள்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், திருவையாறு, மியூசிக் அகாடமி இருக்கிறது. மாண்புமிகு மூப்பனார் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். அவரை விட்டால் பணம் செலவு பண்ணுவதற்கு ஆளே இருக்காது. அதைப்போல, இங்கே மியூசிக் அகாடமி இருக்கிறது, டிடிகே. வாசு இருக்கிறார். அவரை விட்டால் அதை நடத்துவதற்கு ஆள் கிடையாது. கல்லூரிகள் இருக்கின்றன. வி.கே. லட்சுமணன் ஒரு கல்லூரியினுடைய தாளாளராக இருக்கிறார். நான் ஒரு கல்லூரிக்குத் தாளாளராக 10 ஆண்டு காலமாக இருக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சட்டம் வருகின்றபோது, அதில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்போது, இந்தச் சட்டத்தை திரும்பப் பெற்றிருக்கிறார்கள். இது ஏற்கெனவே இருந்த சட்டத்தை எதிர்த்து பல்வேறு ரிட் மனுக்கள் உயர்நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பழைய சட்டத்தினுடைய கேடுபாடுகளை அறிந்து அதைத் திரும்பப் பெற்றதற்காக, அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை முழு மனதோடு ஆதரித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே சட்டத் திருத்தத்தை ஏற்கெனவே கடந்த ஆண்டு டிசம்பரில் கொண்டு வந்ததே சரியில்லை என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் நான் ஒரு விளக்கத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

[திரு. இ. பெரியசாமி] [2000 மே 18

எந்த ஒரு சட்டம் கொண்டுவந்தாலும், அதிலே merits, demerits இருக்கிறது. நன்மைகளும் இருக்கின்றன. தீமைகளும் இருக்கின்றன. எந்தச் சட்டத்திலேயும், குறிப்பாக பெருமளவு நன்மை எதில் இருக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். கடந்த முறை சட்டம் கொண்டுவந்தபோது கூட்டுறவுத் துறையிலே ஏற்கெனவே சுழற்சி முறை இருந்து வந்திருக்கின்றது. சுழற்சி முறை என்பது இரண்டு தடவை 'டைரக்டராக' இருந்தவர்கள் திரும்பவும் வரக்கூடாது என்பது. அது முன்பே இருந்திருக்கிறது. ஆக பல்வேறு நிலைகளிலேயிருந்து நிறைய தாக்கீதுகள் இந்த அரசுக்கு வந்தன. எப்படியென்றால், குறிப்பிட்டவர்களே, ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஒரு சொசைட்டியில் தொடர்ந்து இருக்கிறார்கள். அப்படித் தொடர்ந்து தலைவராக, இயக்குநராக இருந்து நடத்துவதால் அவர்கள் சரிவர அரசாங்கத்திற்கு உரிய கணக்குகளைச் செலுத்துவது இல்லை. தொடர்ந்து ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பல தவறுகள் ஏற்படுகின்றன என்று தாக்கீதுகள் வந்த காரணத்தினால்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம். ஆனால் அதற்குப் பின்னால், இப்போது இதை வாபஸ் பெற வேண்டும் என்று அரசு முடிவு செய்ததற்குக் காரணம், இப்போது இருக்கக்கூடிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிறைய முறையீடுகளைக் கொடுத்திருக்கின்றன. காரணம் என்னவென்றால், சங்கங்களுக்கு தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, சேவை மனப்பான்மையுடன் செய்யக்கூடிய சங்கங்கள் என்ற காரணத்தினால்தான் இன்றைக்கு அதை வாபஸ் பெற வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கின்றது. ஆக நல்ல நோக்கத்தோடுதான் அரசு இந்த முடிவு எடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 25/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (ஏஏ) பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து 2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 26/2000), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*"2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 26/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நிறைய அரசியல்வாதிகள் தாங்கள் சம்பாதிக்கக் கூடிய ஊழல் பணத்தையெல்லாம் வைத்துக்கொண்டு, பினாமி பெயரில் நிறைய சொத்துகளை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையைத் தவிர்க்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். அந்த*

@) 17-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



*வகையிலே இப்போது இந்தச் சட்டம் வந்திருந்தாலும்கூட, இதிலே இருவருடைய போட்டோவையும் ஒட்டக்கூடிய நிலைமையை நீங்கள் கொண்டுவர வேண்டும். விற்பவரும் வாங்குபவரும் கையெழுத்து இட வேண்டுமென்று மட்டுமே நீங்கள் வைத்திருக்கிறீர்களே ஒழிய, இப்போது கையெழுத்திலே* forgery *செய்து பல பேர் போட்டுவிடுகிறார்கள், அதையும் கண்டுப்பிடிப்பதற்கு கண்டிப்பாக விற்பவருடைய போட்டோவும் வாங்குபவருடைய போட்டோவும் இதிலே இணைக்கப்பட வேண்டும்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *துணைத் தலைவர் அவர்களே, கையெழுத்தைவிட போட்டோக்களை இப்போது எப்படி வேண்டுமானாலும் எடுத்து, பத்திரிகைகளிலே வருவதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பார்த்திருப்பார்கள். எனவே அதை மட்டும் வைப்பதால் இதைத் தடுத்து நிறுத்திவிடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *கைநாட்டுப் போட்டால், பிரச்சினையே இல்லை. (சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** *கைரேகையும் வாங்க வேண்டும், பிறகு போட்டோ ஒட்ட வேண்டும். இதுபோன்று கண்டிப்பான சூழ்நிலைகளை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.*

*அதோடு மட்டுமல்லாமல், பொதுவாக இதுபோன்று நீங்கள் என்னதான் பண்ணினாலும்கூட, அவர்கள் வாங்கி பினாமியின் பெயரில் பதிவு செய்து விடுகிறார்கள். பிறகு கொஞ்ச நாட்கள் பொறுத்து, யார் உண்மையான உரிமையாளரோ, அவர் பெயருக்கு அவர் திரும்ப ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணி, கிரயம் பண்ணுகிறார்கள். அதையும் தவிர்ப்பதற்கு எது எதெல்லாம் பினாமி என்று நீங்கள் கண்டுபிடித்து, அதை பினாமி என்று நிரூபித்து, அந்தச் சொத்துகளை எல்லாம் பறிமுதல் செய்வதற்கும் நீங்கள் உடனடியாக ஒரு மாற்று ஏற்பாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்பொழுதான் ஊழல் செய்யக்கூடியவர்கள் அல்லது இதுபோன்ற சொத்துகளைச் சேர்ப்பவர்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பதைக் கூறி அமைகிறேன்.*

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ஜி. நிஜாமுதீன்.*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கூறியதைப்போல புகைப்படமும், கைரேகையும் அவசியம் என்பதை உறுதி செய்ய வேண்டும். அதுபோல ஒவ்வொரு பத்திரப்பதிவிற்கும் பக்கம் பக்கமாகப் பத்திரங்களைத் தவிர்த்து ஒரு படிவம் - Form - அமைத்து அதை நிரப்பி அப்படியே கொடுத்தால் அதைப் பதிவு பண்ணுகிற மாதிரியான நிலையை ஏற்படுத்த வேண்டும். அதைப்போலவே அந்த நில உரிமையாளர்களுக்கும் lamination செய்யப்பட்ட அடையாள அட்டை — இவர்கள்தான் உரிமையாளர்கள் என்ற அடையாளத்தை — வழங்க வேண்டும். இல்லையென்றால் பத்திரத்தை யாராவது நகல் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதனால் பல வில்லங்கங்கள் ஏற்படுகின்றன. இதனால் அரசுக்கு பெரும் தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. L.I.C. Building-ஐ வேண்டுமானால்கூட நானே விற்றுவிடுகிற மாதிரி ஒரு forgery document எடுத்து ரிஜிஸ்டர் பண்ணிவிடலாம். அந்த மாதிரியான நிலை இருந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு படிவம் அமைக்கும் முறையையும், சொத்து உரிமையாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான முறையையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஒரு நல்ல சட்டம். இதை வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால் பொது வாழ்விலே ஒளிவுமறைவு இன்றி எந்த ஓர் அரசியல்வாதியும் ஊழல் செய்து தன்னுடைய வாரிசுதன் பெயரிலோ அல்லது குடும்பத்தாரின் பெயரிலோ அல்லது அவருடைய ஏஜெண்ட் பெயரிலோ சொத்துகளை வாங்கிக் குவிப்பதைத் தடுக்கின்ற சட்டம். இது வரவேற்க வேண்டிய சட்டம். இந்தச் சட்டத்தின் மூலமாகச் சொத்து விற்பவரும், வாங்குபவரும் கையெழுத்துப் போட்டால்தான் செல்லும் என்று இருக்கிறது. ஆகவே, சொத்து வாங்குபவரும், விற்பவரும் கையெழுத்துப் போடுகின்ற சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. ஆனால் அவர்கள் என்ன செய்வார்கள் என்று சொன்னால் பத்திரம் வாங்குகின்றபோது தன் பெயரிலே பத்திரத்தை வாங்கி இன்னொருவர் மூலமாக அதைப் பதிவு செய்வது வழக்கமாக இருந்தது. இன்னும் சொன்னால் தமிழ்நாட்டிலே சொத்தை வாங்கி, கேரளாவிலே பதிவு செய்துகொள்ளலாம். ஆந்திராவிலே



பதிவு செய்துகொள்ளலாம். இந்தியாவிலே எந்த இடத்திலே வாங்கினாலும் சொத்துகளைப் பதிவு செய்துகொள்ளலாம் என்ற ஒரு முறை இருந்தது. ஆக வாங்கக்கூடிய சொத்துகளை அந்தந்த Sub-Registrar அலுவலகத்திலேயே ரிஜிஸ்டர் பண்ண வேண்டும் என்கிற சட்டத் திருத்தங்களைக் கண்டிப்பாக அதிலே கொண்டுவர வேண்டும். அப்படி இருந்தால்தான் இந்தச் சொத்துகளை யார் பெயரிலே வாங்குகிறார்கள் யார் பெயரிலே விற்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். இல்லையென்று சொன்னால் நான்கூட சொத்துகளை வாங்கவேண்டும் என்று சொன்னால் என்னுடைய ஏஜெண்ட் பெயரிலோ அல்லது உறவினர்கள் பெயரிலோ தமிழ்நாட்டிலே ஓர் இடத்திலே சொத்தை வாங்கிக் கொண்டுபோய் கேரளாவிலே பதிவு பண்ணிவிட்டு வரலாம். ஆந்திராவிலே பதிவு பண்ணிவிட்டு வரலாம். ஏற்கெனவே அப்படித்தான் இருக்கிறது. இப்பொழுது ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். அதைக் கட்டாயமாக அந்தந்த Sub-Registrar அலுவலகத்திலேயே திரும்பவும் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். இப்போது தமிழகத்தில் இருக்கிற சொத்து மதிப்பு இருக்கிறது பாருங்கள்; அதனுடைய சிட்டா அடங்கல் பல்வேறு பேர் மாற்றத்திலே இருக்கிறது. சொத்து என் பெயரிலே இருக்கிறது. ஆனால் என் பெயரிலே இருக்கிற சொத்தை — உதாரணத்திற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் பெயரிலே சொத்து இருக்கிறது என்று சொன்னால் அதை அவருக்குச் சொந்தம் இல்லாமல் அதனுடைய நகலை வாங்கி யாரோ ஒருவர் — இன்னொருவருக்கு Agreement போடக்கூடிய அளவுக்கு ஒரு பாதகம் இருக்கிறது. அவற்றையெல்லாம் சீர்திருத்தம் செய்து அந்தச் சொத்தினுடைய வாரிசுதாரர் யார் என்று கண்டறிந்த பின்னால் இந்தச் சட்டம் கொண்டுவருவது சரியாக நடைமுறைக்கு வரும் என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் "போட்டோ ஒட்டப்பட வேண்டும்" என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள், நம்முடைய நீதியரசர் இராமானுஜம் கமிட்டியினுடைய பரிந்துரையின் பேரிலே நம்முடைய அமைச்சரவைக்

கூட்டத்திலே இதுசம்பந்தமாக பினாமி பெயரில் பதிவு செய்கின்ற முறையை ஒழிக்கவும், சொத்து வாங்குகின்றவரும் வந்து பதிவுத் துறையிலே கையெழுத்திட வேண்டும் என்ற முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதிலும் குறிப்பாக போட்டோ ஒட்டுகின்ற முறை இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. அந்த முறை காஷ்மீரிலேதான் இருக்கிறது. அதிகமாகத் தீவிரவாதிகள் இருக்கின்ற இடங்களிலேதான் போட்டோ ஒட்டுகின்ற முறை கடைபிடிக்கப்படுகின்றதே தவிர வேறு எந்த மாநிலத்திலும் இந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. குறிப்பாக ஒருவருடைய கையெழுத்தை வைத்து இவருடைய கையெழுத்து என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியும். போட்டோ யார் வேண்டுமானாலும் கொடுத்து ஒட்டிவிடலாம். அதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் கையெழுத்தை யாரும் மாற்ற முடியாது. ஆகவேதான் கையெழுத்திட்டால் மட்டும் போதும் என்கின்ற முறையை நாம் கொண்டுவந்து இருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள்; 'இந்த முறையிலே வெளிமாநிலங்களிலே பதிவு செய்யலாம்' என்று. இந்த ஆட்சி வந்தவுடனே நம்முடைய முதல்வர் அவர்கள் வெளி மாநிலங்களிலே பதிவு செய்வதைத் தடை செய்வதற்கு சட்டம் கொண்டு வந்த காரணத்தால் இந்த ஆண்டு பத்திர பதிவுத் துறை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 1019.71 கோடி ரூபாயை இந்தத் துறை ஈட்டித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

இப்போது 165 கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக வந்ததற்குக் காரணம், மற்ற மாநிலங்களிலே பதிவு செய்யப்படுவது கடந்த 3 ஆண்டுகாலமாகப் படிப்படியாகத் தடுக்கப்பட்டு இப்போது முழுமையாகத் தடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** இப்போது நாம் எந்தவொரு சொத்தை வேண்டுமானாலும் தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால், கேரளாவிலே முடியாது; பிற மாநிலங்களிலே முடியாது; தமிழ்நாட்டிலே மட்டும் பண்ணிக்கொள்ளலாம் என்றுதான் இருக்கிறது. இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தம் என்பது தமிழ்நாட்டிலே இருக்கிற சொத்துகளை எங்கே வேண்டுமானாலும், தமிழ்நாட்டிற்குள்ளே





எங்கே வேண்டுமானாலும் பதிவு செய்துகொள்ளலாம் என்றுதான் இருக்கிறது. நான் சொல்வது, அந்தந்த வட்டத்திலே இருக்கிற Sub-Registrar அலுவலகத்திலேதான் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்கிற ஒரு சட்டத் திருத்தத்தையும் இதிலே கொண்டுவந்து இதிலேயே சேர்த்துவிட வேண்டும் என்பதுதான் — அப்போதுதான் இது சரியாகும் — இந்தத் தவறுகளைக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலேயும் பதிவு செய்துகொள்ள முடியாது. சென்னையிலேதான் குறிப்பிட்ட 3 இடங்களிலே மட்டும்தான் பதிவு பண்ணிக்கொள்ள முடியும். வடக்கு, தெற்கு, மத்தியப் பதிவு அலுவலகங்களிலேதான் தமிழ்நாட்டிலே இருக்கிற எந்த சொத்தையும் இங்கே இந்த மூன்று அலுவலகங்களில் வேண்டுமானால் பதிவு செய்துகொள்ள முடியும். ஆக, மற்ற மாவட்டங்களிலே, ஒரு மாவட்டத்திலே இருக்கிற சொத்தை இன்னொரு மாவட்டத்திலே பதிவு செய்ய முடியாது. அதற்கு வழிவகை இல்லை. ஏற்கெனவே உள்ள சட்டத்திலேயே அந்த முறைதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பதிவு செய்ய முடியாது. இதைப் பொறுத்த அளவிலே, வாங்குவோர் கையெழுத்திட வேண்டுமென்பதற்கான சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணமே, வெளியிலே இருக்கக்கூடியவர்கள், வெளிநாட்டிலே இருக்கக்கூடியவர்கள் அல்லது வெளி மாநிலத்திலே இருக்கக்கூடியவர்கள், அவர்களுடைய பெயரிலே பதிவு செய்வதில் பினாமி முறை திணிக்கப்படுகின்றது. அதைத் தடுப்பதற்காகத்தான், வாங்குவோரும் பத்திரப் பதிவு அலுவலகத்திலே வந்து கையெழுத்திட வேண்டுமென்ற முறை தற்சமயம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். இன்னும் நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐஐ) தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2000) மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் கொண்டு வந்திருக்கிற நேரத்தில் ஓர் உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. மீனவர்கள் ஏற்கெனவே கட்டுமரத்திலேகூட, இதுபோன்ற இயந்திரக் கருவிகளை வைத்துக்கொண்டு மீன்பிடிக்கச் செல்கிறார்கள். கட்டுமரத்திலேகூட சிறுசிறு அளவிலே தொழில் செய்யக்கூடியவர்கள், அவர்கள் டீசல் எஞ்சினைப் பொருத்திவிட்டாலே அது இயந்திரப் படகு என்றாகிவிடுகிறது. "Mechanised vessel-லே போகக்கூடியவர்கள் எல்லாம், மீன்பிடிக்கச் செல்லக்கூடியவர்கள் எல்லாம் முதலுதவிப் பெட்டி வைத்திருக்க வேண்டும், தகவல் தெரிவிப்புக் கருவிகள் வைத்திருக்க வேண்டும், அதேபோல உயிர்காப்பு மற்றும் தீயணைப்புத் துணைக் கருவிகள் ஆகியவற்றை அவர்கள் கண்டிப்பாக வைத்திருக்க

(@) 10-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மே 18

வேண்டும்” என்று நீங்கள் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏழை எளிய மீனவர்கள், சாதாரணமாகக் கட்டுமரத்திலே போகக்கூடியவர்களுக்கெல்லாம் இவ்வளவு பணத்தைச் செலவழித்து முதலுதவிப் பெட்டி, தகவல் தெரிவிப்புக் கருவிகள், தீயணைப்புக் கருவிகளெல்லாம் வாங்கக்கூடிய வசதிகள் இருக்காது. கண்டிப்பாக இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி அவற்றையெல்லாம் வைத்திருக்க வேண்டுமென்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கினீர்கள் என்றால் மீனவர்கள் நிறைய பேர் இதனாலே பாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய பாதுகாப்பிற்காகத்தான் நீங்கள் இதைச் சொல்கிறீர்கள். ஆனால் அந்தப் பொருட்களை வாங்கக்கூடிய சக்தி அவர்களிடமில்லை. ஆகவே, துறையே அவர்களுக்கு இந்த முதலுதவிப் பெட்டி, தகவல் தெரிவிப்புக் கருவிகள், தீயணைப்புக் கருவிகள், உயிர்காப்புக் கருவிகள் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்துவிட்டு பிறகு அவர்கள் அவற்றையெல்லாம் வைத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி நீங்கள் வழக்குப் போட்டால்கூட அதைச் சமாளிக்க முடியும். ஆகவே, அரசு இவற்றையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். இல்லையென்று சொன்னால் இந்தச் சட்டத் திருத்தத்தை நிறுத்தி வையுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுமாதிரி சாதாரண படகுகளில்கூட இயந்திரங்களை எல்லாம் பொருத்துகின்றார்கள். எனவே இந்தச் சட்டம் அவர்கள் பாதுகாப்பிற்காக பல்வேறு கருவிகளை எல்லாம் அறிமுகப்படுத்த வேண்டும், வைத்திருக்க வேண்டும் என்று சொல்லுவது நியாயம். அதில் தவறில்லை. ஆனால் அதை அவர்கள் வாங்குவதற்கான அவர்களுடைய பொருளாதார சௌகரியங்கள் எந்த அளவிற்கு இருக்கிறது என்பது ஒரு சந்தேகத்திற்குரிய விஷயம். அதை அரசு வழங்குவது என்பது ஒரு நல்ல காரியமாக இருக்கும். எனவேதான், இதில் வரக்கூடிய 'காலக்கெடு, ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சொல்லி, இந்தக் காலத்திலிருந்து ஒரு 3 மாத காலம் அல்லது 6 மாத காலத்திற்குள்ளாக இதை நீங்கள் அமல்படுத்த வேண்டும் என்ற ஒரு



2000 மே 18] [திரு. டி. மணி]

விழிப்புணர்வை இந்த இயந்திரங்களை எல்லாம் வைத்துக்கொள்வதன் மூலமாகப் பாதுகாப்பு இருக்கிறது என்ற உணர்வை நாம் ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் இதை அமல்படுத்த முடியும். இல்லை என்று சொன்னால் நம்முடைய தண்டனைக்குத்தான் அவர்கள் ஆளாக்கப்படுவார்களே தவிர பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. அந்த வகையிலே இந்த மாற்றங்களை, உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது நம்முடைய மீனவ மக்களின் உயிரைப் பாதுகாக்கக்கூடிய விஷயம். இதை உண்மையிலேயே வரவேற்க வேண்டியதுதான். நம்முடைய எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கைக் கடற்படையாலோ, மற்றவர்களாலோ ஓர் ஆபத்து வந்தால் அவர்களைப் பாதுகாப்பதற்காக இந்த யோசனை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக, தீயணைப்பு நிலையத்திலே இருக்கக்கூடிய கருவிகள் எல்லாம் அவர்களுக்கு அவசியம் வழங்க வேண்டும். Wireless மூலமாகத் தகவல் சொல்ல வேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இது விசைப்படகுகளுக்கு மட்டும்தானா; இல்லை கட்டுமரத்திற்கும் உண்டா? என்பதை விளக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று கட்டுமரத்திலேகூட விசைப் படகுகளைப் போல கருவிகளை வைத்துக்கொண்டு இப்போது பல மைல் தூரம் போய் மீன்பிடிக்கின்ற ஒரு பழக்கத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். ஆகவே இந்தக் கருவிகளை அவர்கள் எல்லாம் எப்படிப் பொருத்தப் போகிறார்கள். எப்படித் தகவல் கொடுக்கப் போகிறார்கள்? இந்தத் தொடர்புகளுக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பவை எல்லாம் சரியாக இதில் விளக்கப்படவில்லை. அரசு மூலம் இதுபோன்ற விசைப் படகுகளுக்கு எல்லாம் கருவிகளைக் கொடுத்து அதன்மூலம் அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்ய போகிறோமா? அப்படி என்று சொன்னால் 1000 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற நம்முடைய கடற்கரையில் பல இலட்சக்கணக்கான மீனவர்கள் விசைப் படகுகளில் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான யோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** ஒரே ஒரு கேள்வி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமானது விசைப் படகு மீனவர்களுக்கு மட்டுமே பொருந்தும். 1983 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதற்கான வழிமுறைகள் அப்போது வகுக்கப்படவில்லை. இந்தக் கருவிகள் எல்லாம் பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரம் அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் இதை இப்போது கொண்டு வருகின்றோம். காரணம் என்னவென்றால், இன்றைய சூழ்நிலையில் விசைப் படகு மீனவர்களைப் பொறுத்தவரை, இடர்பாடுகள் அல்லது புயல் காலங்கள் என்று அறிவித்தால்கூட அவர்கள் அதையும் மீறிக் கடலுக்குச் சென்றுவிடுகிறார்கள். கடலுக்குச் செல்கின்ற நேரத்தில் தங்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்துவிடுகிறார்கள். அவர்கள் குடும்பம் நடுத்தெருவில் நிற்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் இந்த அரசு கவனத்தில் கொண்டுதான் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்திலேயே பலமுறை நாங்கள் எடுத்துரைத்தால்கூட அதை மீனவர்கள் கண்டுகொள்ளாத சூழ்நிலை. இதை வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு மானியம் வழங்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். கட்டுமர மீனவர்கள் என்பவர்கள் பாரம்பரிய மீனவர்கள். அதாவது அதிக தூரம் செல்வதற்குத்தான் உட்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன. எனவே கட்டுமர மீனவர்கள் இதுபோன்ற கருவிகள் வைக்கவேண்டிய அவசியம் இல்லை. ஓரளவிற்குத்தான், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குத்தான் அவர்கள் சென்று வருகிறார்கள். ஆனால் விசைப் படகு மீனவர்களைப் பொறுத்தவரை தங்கு கடலுக்குச் சென்று வருவார்கள். அதிக தூரம் சென்று வருவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், முதலுதவிப் பெட்டி என்பது தேவையான ஒன்று. இப்போது எல்லோர் வீட்டிலும்கூட முதலுதவிப் பெட்டி இருக்கிற சூழ்நிலை; அப்படி இருக்கும்போது இப்படி கடினமான தொழிலைச் செய்கிற அந்த விசைப் படகு மீனவர்கள் அந்த விசைப் படகில் இந்த முதலுதவிப் பெட்டியிலிருந்து, தீயணைப்புக் கருவியிலிருந்து எல்லா உபகரணங்களும் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். விசைப் படகை





சற்றேறக்குறைய 10 இலட்சம், 15 இலட்சம் ரூபாய்க்கு ஓர் உரிமையாளர் வாங்குகிறார். அந்த உரிமையாளர் வாங்கினாலும் அதில் செல்லக்கூடியவர்கள் கூலிக்காரர்கள்தான். அந்த மீனவர்களைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற கருவிகளை நிச்சயமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் இந்தச் சட்டமுன்வடிவை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். கருவிகளை வைத்துக் கொண்டால் நிச்சயமாக கூலிக்குச் செல்கிற மீனவர்களின் உயிர் காக்கப்படும் என்பதை மனதில் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

*பிற்பகல் 1-25*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரே கடலிலே, எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் போய் இருக்கிறார்கள். போன இடத்திலே கருவிகள் வேலை செய்யவில்லை. கடலிலே திசையே தெரியாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலிலேயே நின்றிருக்கிறார். திருவாரூர் (குறுக்கீடு) Sorry, நாகப்பட்டினம். திசை தெரியாமல் போய் நின்றிருக்கிறார். அப்போது ஒயர்லெஸ் கருவிகள் வைத்துக்கொண்டிருந்தும் திசை எதுவுமே தெரியாமல், எப்படியோ திசையைக் கண்டுபிடித்து வந்திருக்கிறார். அப்படி இருக்கும்போது அதற்கான முறையிலே எப்படி இதை நீங்கள் செய்யப்போகிறீர்கள் என்பதை விளக்க வேண்டும். ஏனென்றால், ஆழமான கடலுக்குள்ளே போகிறபோது, இந்தமாதிரி பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. இதிலே அவர்களே சில கருவிகளை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அது ஒரு வியாபாரமாக வந்து விடும், மலேசியாவிலோ, சிங்கப்பூரிலோ இருந்து இதுபோன்ற கருவிகளை வாங்கிக்கொண்டு வந்து வைத்தால் அது இடையிலேயே செயலிழந்து போய்விட்டது என்றால், அதை எப்படி பாதுகாப்பது? ஆகவே, அதை அரசாங்கமே வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[2000 மே 18

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மல்லிப்பட்டினத்தில் ஒரு ரோந்து படகு வைத்திருந்தோம். அந்த ரோந்துப் படகில் சென்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரு விளக்கு இல்லாத காரணத்தினால் அங்கே திசை அறிய முடியவில்லை என்ற காரணத்தினால், அவர்களுடைய வாகனத்தின் மூலமாக அந்தத் திசையை அறிந்து வந்தார்கள் என்றுதான் எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறான கருத்து என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். விசைப் படகு என்றவுடனே நிச்சயமாக இந்தக் கருவிகள் எல்லாம் இருக்க வேண்டும். ஆனால், இதை மீனவர்கள் சட்டைசெய்யாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால், நிச்சயமாக அவர்களுடைய உயிர் காக்கப்படும் என்ற காரணத்தால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இருந்தாலும், தொலைதொடர்புச் சாதனங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசால் மானிய விலையில் 1,500 கருவிகள் வழங்குவதற்கு 25 சதவீதம் மானிய விலையில் 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2000 மே 18

## 3. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (இ) விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.



2000 மே 18]

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி நாள், கடைசி பேச்சாளராக இருக்க வேண்டுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படியில்லை. இந்தச் சட்டத்தை நீங்கள் இன்றே அறிமுகம் செய்து, இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது என்பது ஒரு தவறான அணுகுமுறை. நீங்கள் ஏற்கெனவே, ஒரு நாள, இரண்டு நாட்களுக்கு முன்னாலே கொடுத்திருந்தால், அதை நாங்கள் கொஞ்சம் கவனமாக, ஆழ்ந்து படித்து, அதிலே எங்களுடைய கருத்துக்களைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், இந்தப் பூதான் இயக்கத்தில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் உண்மைதான். நான் ஒன்றும் மறுக்கவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் தனிப்பட்ட நபருக்கு இந்தப் பூதான் இயக்கத்தின் மூலமாகக் கிடைக்கக்கூடிய நிலத்தைக் கொடுக்கலாம் என்று ஒரு பிரிவை இதிலே சேர்த்திருக்கிறீர்கள். அது ஏதாவது Institution போன்றவற்றிற்கு, நல்ல காரியம் செய்பவர்களுக்குக் கொடுக்கலாம் என்று இருக்கலாம். அதைத் தனி நபர்களுக்கும் கொடுப்பது என்பது சரியாக வராது. அது தவறான ஒரு அணுகுமுறைக்கு, தவறாக அதைக் கையாடல் செய்வதற்குண்டான ஒரு சூழ்நிலையை உருவாக்கும். அதைத் தனி நபருக்குக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை இதிலே தவிர்க்க வேண்டும். ஏதாவது Institution, அல்லது ஒரு Organisation போன்றவற்றிற்கு, மட்டுமே கொடுக்கலாம் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமைகிறேன்.

---

@18-5-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அலுவல் நேரம் நீடிக்கப்படுகின்றது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து ஆய்வு செய்வதற்குப் போதிய கால அவகாசம் கொடுக்கப்படாதது துரதிருஷ்டவசமானதாகும். இருந்தாலும் பூமிதான இயக்கத்தின் மூலமாக நிலக்கொடை பெறப்பட்டு அதை நிர்வாகம் செய்வதற்கான வாரியத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை வகைப்படுத்தி முறைப்படுத்துவதற்கான ஒரு திருத்த சட்டமுன்வடிவாக இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

உழைப்பவருக்கே நிலம் சொந்தம் என்ற கோரிக்கை முழக்கத்தை முன் வைத்து பொதுவுடமை இயக்கமும், திராவிட இயக்கமும் தீவிரமாகப் பிரச்சாரத்திலே ஈடுபட்ட காலத்திலே தான் தேசிய இயக்கத் தலைவர் நில தானம், பூமி தானம் இயக்கத்திற்காக முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த அடிப்படையிலே பெறப்பட்ட நிலத்தை இன்றைய காலப் பொருத்தத்திற்குத் தக்கபடி சில கிராமங்கள் நகரமாக மாறியிருக்கின்றன. அந்த இடத்திலே இருக்கின்ற நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கான ஒரு வாய்ப்பு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அதிலே ஒன்று குறைந்தபட்சம் 25 ஆயிரம் என்று பண வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் குறைந்தபட்ச ஊதிய அடிப்படையிலே பார்த்தால்கூட ஏறத்தாழ 40 ஆயிரம் ரூபாய் வரும். அந்த அடிப்படையிலே இந்த வரம்பை 40 ஆயிரம் என்று உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வலியுறுத்துகிறேன்.

அதற்கடுத்து, யார் நிலம் தானம் கொடுத்தார்களோ அவரோ அல்லது அவருடைய சட்ட வாரிசோ இப்போது கொடுத்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குத் தக்கபடி வேறொரு பொருளைத் தானமாகக் கொடுப்பதற்கு முன்வருவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் அனுமதி வழங்குகிறது. அது பொருத்தமுடையது அல்ல. ஏற்கெனவே கொடுத்த தானத்தை உறுதி செய்யக்கூடிய வகையிலே அந்தப் பிரிவை நீக்கிவிட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு மனை வழங்குவதை நான் வரவேற்கின்றேன்.



அதற்கடுத்தபடியாக 4-வது பிரிவாகச் சொல்லப்பட்டிருப்பது, சந்தை விலை மதிப்பில் இரண்டு பங்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; நபர் எவருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சந்தை விலையில் 2 மடங்கு என்றால் யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

இதிலே, நிறுவனம் என்று வருகிறபொழுது, அரசுத் துறைகளுக்கு மட்டுமேதான் இந்த நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தனியார் நிறுவனங்கள் எவற்றுக்கும் இந்த நிலத்தைக் கொடுப்பதற்கு அரசு முன்வரக் கூடாது.

தனி நபர்களுக்கு என்று வருகிறபொழுது வீட்டு மனை இடம் என்ற அளவிலே மட்டும்தான் நகரப் பகுதிகளில் வழங்கப்பட வேண்டும். அதுவும் இலவசப் பட்டாவாக வழங்குவதற்கு அரசு முன் வரவேண்டும். ஏனென்றால் ஏழைகளுக்கு இலவசமாக நிலம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் பூமிதான இயக்கம் நடத்தப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே இந்தச் சட்டத் திருத்தத்தை வகைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதேபோல பல்வேறு பகுதிகளில் நில ஆக்கிரமிப்பு — இந்தப் பூமிதான நிலத்திலேகூட ஆக்கிரமிப்பு — செய்யப்பட்டிருக்கிறது. அதையும் அகற்றுவதற்கு உறுதியான ஒரு சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வர வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி இந்தக் கருத்தையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவசரம் அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது சில சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஏனென்றால் அந்தச் சட்டத்திலே பூமிதான இயக்கத்திற்குச் சொந்தமான இடத்தை இன்னொரு தனியாருக்கு மாற்றுவதற்கு, கை மாற்று செய்வதற்குச் சந்தர்ப்ப சூழ்நிலை கொடுக்கக்கூடிய முறையிலே ஷரத்துகள் இருக்கின்றன. ஆனால் அதிலே சில conditions போடப்பட்டிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்த conditions-ஐப் போட்டிருந்தாலும், இப்படியொரு இயக்கம் இதற்கென்று சொல்லி நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட இடத்தைச் சில தனி நபர்களுக்கு சந்தர்ப்ப சூழ்நிலையில் கொடுப்பது என்பது

சரியாக இருக்காது. ஏனென்றால் Land Value-ஐப் பொறுத்த அளவிலே பல்வேறு முறையிலே தில்லுமுல்லுகள் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே இப்படி அரசினுடைய தேவைகளுக்காக உபரி நிலம் என்ற முறையில் நாம் பெற்றிருக்கிற நிலத்தைத் தனியாருக்குக் கை மாற்று செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடிய முறையிலே உள்ள அந்த ஷரத்து அதிலேயிருந்து மாற்றப்பட வேண்டும். அரசினுடைய அல்லது பொதுமக்களுடைய நலனுக்காக வேண்டி கொடுக்கப்பட்டிருக்கிற அந்த நிலத்தை அந்த முறையிலேதான் பயன்படுத்த வேண்டுமே தவிர, தனி நபர்கள் பயன்படுத்துவதற்கு கை மாற்றம் செய்து கொடுக்கப்படுவதற்கான அந்த ஷரத்து மாற்றப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியடிகள், தனி நபர் சத்தியாகிரகம் தொடங்கியபோது, முதல் சத்தியாகிரகி என்று அறிவிக்கப்பட்டவர் வினோபாஜி அவர்கள். அந்த உயர்ந்த மனிதர், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில், காந்தியடிகளுடைய உண்மையான பக்தர்கள் இந்த நாட்டினுடைய நலனைக் கருதி, ஏழை எளிய மக்களுடைய நலன்களைக் கருதி, ஏராளமான நிலங்களைத் தானமாகக் கொடுத்த வரலாறு நமக்கெல்லாம் தெரியும். இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருந்த சிலர் கூட அந்த இரண்டு ஏக்கர் நிலத்தையும் கூட கொடுத்திருக்கிறார்கள். இன்று அவர்கள் ஏழைகளாகக் கூட இருக்கலாம். ஆகவே உயர்ந்த நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட நிலங்களை, மிகத் தீவிரமாகச் சிந்தனை செய்து அதை யாருக்காவது கொடுக்கவேண்டுமென்று சிந்தனை வந்திருக்கவேண்டும். அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து இதை உடனடியாக நிறைவேற்றாமல், பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி முடிவு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர்கள் திரு. பெருந்துறை பெரியசாமி அவர்கள், திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் விருப்பப்படி - இது சற்று விரைந்து கொண்டுவந்த மசோதாவாக இருக்கின்ற காரணத்தால் - அவர்களுடைய கருத்தின்படி, அந்தக் கருத்துகளை ஏற்று, இது பொறுக்குக் குழுவிற்கு (Select Committee) விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 10. அரசினர் தனித் தீர்மானம்

### மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ரூ.7500 கோடி இருக்கலாமென முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் உயர்ந்தபட்சக் கடனாக, ஏழாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவினைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்"*

எனும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளி காணாமல் போனது பற்றி விசாரணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து . . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளி பாலகிருஷ்ணன் சில நாட்களாகக் காணாமல் போனது தொடர்பாக, புதிய தமிழகம் கட்சியினுடைய தொண்டர்கள் மீது ஒருதலைபட்சமாக விசாரணை நடத்தி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்த விவரம் எல்லாம் சொல்லக் கூடாது. வழக்கை சி.பி. சி.ஐ.டி.-க்கு மாற்றவேண்டுமென்று காலையில் கேட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். உங்களுடைய கருத்துக்கு மாற்றுக் கருத்தைச் சொல்வதாக இருந்தால் அதை அனுமதிப்பதா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நன்றி.



## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) திரு. சி. வேலாயுதன் 10-5-2000 அன்று ஆதாரமில்லாமல் கூறியவை நீக்கம்—தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் சற்றுப் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். காரணம், பேரவைத் தலைவர் என்ற முறையிலே சில சலுகைகள் எனக்கு உண்டு. சில கடமைகளும் எனக்கு உண்டு. முதலிலே 10-5-2000 அன்றைய பேரவை விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ** என்று பேசியிருக்கின்றார்கள். அப்படி ஒரு நிகழ்வு நடந்ததா.. (குறுக்கீடு) .. அவர் பேசும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்போது அவையில் இருந்தார்கள்.

*பிற்பகல் 1-40*

இருந்தாலும் பின்னாலே என்னைப் பார்த்து,—அவையிலே நான் இல்லை, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருந்தார்கள்—இப்படி பெருந்தலைவர் காமராஜருக்கு ஒரு நிலை ஏற்பட்டதற்கு எந்த ஆதாரமும் கிடையாது என்று என்னிடம் ஒரு முறையீடு செய்து, பத்திரிகைகளில் வந்தாலும் பரவாயில்லை, இதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்களை அழைத்துக் கேட்டேன். பத்திரிகைச் செய்திதான் அவருக்கு ஆதாரம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அதை நம்பித்தான் பேசினாரே ஒழிய பெருந்தலைவரைக் குறைத்துப் பேச வேண்டும் என்ற எண்ணத்திலே பேசவில்லை என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்கள். இருந்தாலும் ஆதாரம் இல்லாத அந்தப் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கின்றேன்.

### (ஈ) பொதுப் பணித் துறை அமைச்சர்மீது எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டுகள் குறித்து தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூன்று பிரச்சினைகளைப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது காலையிலே என்னிடம் வந்து அந்தப் பிரச்சினைகளை எழுப்பி, நானும் அதை மாண்புமிகு அமைச்சரிடம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

காட்டி அமைச்சர் அவர்கள் அன்றே பதில் சொல்லத் தயாராக இருப்பதாகச் சொன்னதன் காரணமாக அந்தப் பிரச்சினைகளை அவையிலே எழுப்புவதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அனுமதி அளித்தேன்; அவர்கள் எழுப்பினார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்துக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கும் வேறுபாடு இருந்த காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு பேர் கூற்றையும் உங்கள் அறையிலே வைத்துப் பார்த்து முடிவு எடுக்கலாம் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள்; இருவரும் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொன்னதன்பேரில் நான் தீர்ப்பு சொன்னேன். அந்தத் தீர்ப்பிலே நியாயம் இல்லை என்றுகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பலபேர் அதை விமர்சனம் செய்தார்கள். பேரவைத் தலைவர் தீர்ப்பை விமர்சனம் செய்வதே நம்முடைய சட்டமன்ற விதிகளின்படி ஒரு குற்றமாகும். இருந்தாலும் நான் அப்போது அதைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் தீர்ப்பை நானே சொல்லக்கூடாது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று அவரை என்னுடைய அறைக்கு அழைத்து அவர் சொன்ன கருத்துக்களையும், அரசுக் கோப்புகளோடு தலைமைப் பொறியாளர் அவர்களை நேரடியாக வரச் சொல்லி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், தலைமைப் பொறியாளர் அவர்களையும் தனியாக விட்டுவிட்டு நான்கூட அந்த இடத்திலே இல்லை—இந்தக் கோப்புகளிலே நீங்கள் எதை வேண்டுமானாலும் பார்க்கலாம், எந்தச் சந்தேகம் இருந்தாலும் கேட்டுக்கொள்ளலாம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னேன். அதன்படியே ஏறத்தாழ 45 நிமிடங்கள் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தவகையிலே பேசி முடித்த பிறகு, மிகப் பெருந்தன்மையோடு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கோப்புகளைப் பார்த்ததாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போலவேதான் இருந்தது என்றும், தனக்குக் கொடுத்த தகவல் சரியில்லை என்றும் ஏற்றுக்கொண்டு, ஆனால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படக்கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான் நான் இதைச் சொன்னேன் என்றும் சொன்னார்கள். அதிலே மூன்று பிரச்சினைகள். ஒன்று, மோர்தானா நீர்த்தேக்கத்தில் வலது பிரதானக் கால்வாய், இரண்டாவது பிரச்சினை, அதே நீர்த்தேக்கத்தில் இடது பிரதான கால்வாய். இந்த இரண்டிலுமே Lowest Bidder — L-1—க்குத்தான் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்த வலது புறக் கால்வாயிலே Lowest Bidder-க்குக் கொடுத்திருந்தாலும் உலக வங்கி அந்த வேலையை நிறுத்தி இருக்கிறது என்பதும் அவருக்குச் சொல்லப்பட்டது.



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

*பிற்பகல் 1-45*

மூன்றாவது, ஏதோ ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைப் பொறுத்து, அவர்களுக்கு ஐந்து ஒப்பந்தங்களுக்கு மேல் வேலை கொடுக்கப்பட்டது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகம். பல்வேறு மாவட்டங்களிலே, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், நாகப்பட்டினம், நாமக்கல், கரூர் மற்றும் தேனி ஆகிய ஏழு மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டதில், இந்தக் குறிப்பிட்ட கம்பெனி ஏழு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கும் அவர்களுடைய டெண்டரைக் கொடுத்து இருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது இரண்டு வேலைகள். மாவட்ட ஆட்சியர் வளாகம், நாமக்கல், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருவண்ணாமலை. இரண்டுதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஐந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பணிகள் வெவ்வேறு ஒப்பந்தக்காரர்கள், குறைந்த புள்ளிதாரர்கள் அமைய, அரசினால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆகவே அந்த வகையில் நான் ஏற்கெனவே சொன்ன தீர்ப்பிலேகூட - மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை நான் குறைத்துப் பேசவில்லை. நல்ல எண்ணத்தோடு, ஏதோ, யாரோ ஒன்று கொடுத்ததைக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னேன்—அதையேதான் இந்த முறையும் சொல்கிறேன். ஆகவே அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனென்றால், பெரிய பொறுப்பிலே இருக்கின்றார்கள். அவர்கள் வார்த்தைக்குத் தனி மரியாதை உண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இப்படிக் கொடுப்பவர்கள் சரியான விவரத்தைக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்து, கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இதற்கு மேல் இந்தப் பிரச்சினையில் வேறு எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்ற தீர்ப்பைக் கூறுகின்றேன்.

## 11. உரிமைப் பிரச்சினை

### சேலம் பேருந்து நிலையம் அருகே நிலம் கையகப்படுத்துதல் பிரச்சினை பற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் மீது திரு. பி.ஆர். சுந்தரம் குற்றச்சாட்டு—தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் 9-5-2000 அன்று சட்டமன்றத்திலே விவாதம் நடந்த நேரத்தில், நேரடியாக மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் மீது குற்றம் சாட்டினார். நான் ஏற்கெனவே அவையிலே அறிவித்ததைப் போல, நான் அன்று இருக்கையில் இல்லை. ஆனால் கண்டிப்பாக நான் அனுமதி கொடுத்திருக்கமாட்டேன். காரணம், இந்த இரண்டு மாத காலத்திலே பல்வேறு நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். குற்றம்சாட்டுவதாக இருந்தால் ஆதாரத்தை முதலிலே என்னிடம் காண்பித்துவிட்டுத்தான் பேசவேண்டும், என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேசவேண்டுமென்று சொல்லியிருந்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கூட, நான் சொன்னதைப் போல, என்னிடம் கொண்டுவந்து ஆதாரத்தை என்னிடம் காலையில் காண்பித்துவிட்டு, நான் அதை அமைச்சரிடம் காண்பித்து, அவரும் தான் பதில் தருவதாக ஒப்புக்கொண்ட பிறகுதான் நான் எடுத்துக்கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் என்னிடம் அனுமதி பெறாமல் குற்றச்சாட்டை எழுப்பி, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் பதில் சொல்ல, அது பெரிய விவாதமாக மாறி, ஒரு கட்டத்திலே இரண்டு பேருமே (குறுக்கீடு) திரு. சுந்தரம், நான் தீர்ப்பு சொல்லும்போது யாரும் எழுந்திருக்கக் கூடாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவரிடம் காண்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். இப்பொழுதும், திரும்பவும் சொல்கின்றேன். இதுதான் முறையில்லை. இந்த இருக்கையில் உட்கார்ந்திருக்கும்போது கொண்டு வந்து காண்பித்தால், நான் அதைப் பார்த்து என்ன சொல்ல முடியும்? நீங்கள் முறை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் இப்போது குறுக்கிடுவது பற்றி எனக்குக் கவலையில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்படிச் செய்தார்கள் என்றால், காலையில் 8-00 மணிக்கு என்னை தொலைபேசியிலே அழைத்து, 'உங்கள் வீட்டுக்கு வருகிறேன்' என்று சொல்லி, அதைக் கொண்டுவந்து காண்பித்தார். நீங்கள் அந்தமாதிரி என்னுடைய அறையிலே காண்பித்தால்தான் பேசவேண்டும்.





பேசி, அது பெரிய விவாதமாக, இரண்டு பேருமே ஒரே நேரத்திலே எழுந்து நின்று, ஒருமையிலேகூட பேசியதாக அவைக் குறிப்பிலே பார்த்தேன். அவையெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. அமைச்சர் அவரைத் தாக்க வந்தார் என்று ஓர் உரிமைப் பிரச்சனையைக் கொடுத்தார். இரண்டு பேருமே வேகமாகப் பேசிக்கொண்டார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால் என்னை அறையிலே பார்த்து, ஆதாரத்தைக் காண்பித்துவிட்டு, என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேசியிருக்க வேண்டும். ஆகவே இந்தச் சூழ்நிலையில் இந்த உரிமைப் பிரச்சினை மீது ஒன்றும் நடவடிக்கை எடுப்பதற்கு இல்லை—வேளாண்மைத் துறை அமைச்சர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு—ஒன்றுமில்லை என்ற தீர்ப்பைச் சொல்கிறேன்.

அதைப்போலவே, திடீரென்று 9-5-2000 அன்று நடந்த நிகழ்ச்சிக்கு அன்று பதில் சொல்லிய பிறகு, 15 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அதிலே நான்கு வரிகளை மட்டும் படிக்கின்றேன்.

*பிற்பகல் 1-50*

"அந்த நிலம் தனியாருக்குச் சொந்தம் என கோர்ட் தீர்ப்பு கூறியுள்ளது என்றும், அதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் சம்பந்தம் உண்டு என்றும் கூறினேன். அப்போது எனக்கும் வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது" நான் அவருடைய கடிதத்தைப் படிக்கின்றேன். "இறுதியில் பதில் அளித்த வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், 27-4-2000 அன்று தீர்ப்பு இவ்வாறு கொடுக்கப்பட்ட உடனே, மாவட்ட முன்சீப் கோர்ட்டில் அரசு வழக்கறிஞர் அப்பீல் செய்து முதலில் அளித்த தீர்ப்பின் பேரில் தடையாணை வாங்கி, உடனே மாவட்ட நிருவாகம், பச்சையப்பன் வேலி போட்டதை அகற்றியெடுத்து இன்றைக்கு அரசாங்கத்திடம் அந்த நிலம் இருக்கிறது" என்று கூறியுள்ளார். அதிலே, குறிப்பாக, இதுதான் கடைசியான வார்த்தை, " அமைச்சர் கூறியவாறு அரசால் எந்தக் கோர்ட்டிலும் தடையாணை வாங்கப்படவில்லை. அமைச்சர் கூறிய அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம்" என்று கொடுத்தார்கள். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொன்னார்கள். உத்தரவைக் காட்டினார்கள். "ஜூன் 1 ஆம் தேதி வரை—இடைக்கால தடையாணை interim stay granted till 1st June என்று முன்சீப் அவர்களே அதிலே stay கொடுத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், வட்டாட்சியர்—Tahsildar

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

—அவர்கள் பிரமாண வாக்குமூலம் கொடுத்ததன் பேரில்தான் இந்த stay-யே கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் எந்தக் கோர்ட்டிலும் தடையாணை வாங்கப்படவில்லை என்று சொன்னது உண்மைக்குப் புறம்பானது. இது அமைச்சர் மீது தேவையில்லாத ஒரு குற்றச்சாட்டு. ஆகவே, இதை விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கின்றேன்.

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) முன்பிருந்த கணக்காய்வுத் தலைவர் ஆய்வறிக்கை அடிப்படையில் அரசு மீது டாக்டர் அ. செல்லக்குமார் குற்றச்சாட்டு — தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்போலவே, டாக்டர் செல்லக்குமார் அவர்கள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையின் போது பேசும்போது - அவர் அவையிலே இல்லை - "Single Tender System எல்லாம் ஒழித்துக்கட்டியாகிவிட்டது என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், Audit Report-ல் Single Tender System நடைமுறையிலே இருப்பதை எடுத்துகாட்டியிருக்கின்றார்கள்'' என்று பேசினார்கள். இதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் திரு. இரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் படித்த Audit Report *1994-95* ஆம் ஆண்டிற்கான Audit Report-டேயொழிய இந்த ஆட்சியைப் பொறுத்ததல்ல என்று ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்தார்கள். அது விஷயமாக, மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமாரிடம் விளக்கம் கேட்டேன். பலமுறை நினைவுபடுத்தி இன்று காலையிலே எனக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. பரவாயில்லை. இருந்தாலும், அதிலே முக்கியமான வார்த்தை, "Audit Report-ல் முதலில் *7* ஆம் பக்கத்தில் *1998-99* ஆம் ஆண்டு என்று உள்ளது. கடைசிப் பகுதியில், அது *1994-95* ஆம் ஆண்டுக்குரிய Audit Report- என்பதைப் பின்புதான் பார்த்தேன். Audit Report—லே printing தவறு இருந்ததினால் இதை நான் பேசினேன்'' என்று எழுதிக் கொடுத்திருக்கின்றார்கள். சாதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் எதைப் பேசினாலும் 'தெளிவாகச் சொல்வேன்' என்று சொல்வார்கள். இந்த விஷயத்திலே நிச்சயமாக, தெளிவு இல்லாமல் பேசி இருக்கின்றார்கள். இருந்தாலும் அவரை எச்சரிக்கை செய்து, இதோடு விட்டுவிடுகிறேன்.



2000 மே 18]

### (ஊ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு மற்றும் நியமனம்

#### 1. மதிப்பீட்டுக் குழு - உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு. *2000-2001* ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. டி. குண்டன்
2. திரு. செ. ராமச்சந்திரன்
3. திரு. அ. சுடலைமுத்து
4. டாக்டர் அ. மணி
5. திரு. வி. பெருமாள்
6. திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்
7. திரு. இரா. மதிவாணன்
8. திரு. பொ. முருகேசன்
9. திரு. ரெ. செல்வம்
10. திரு. கே.சி. கணேசன்
11. திரு. ச. அழகுவேலு
12. திரு. வெ. சின்னய்யா
13. திரு. ந. கருப்பண்ண உடையார்
14. திரு. ப. மோகன் கந்தசாமி
15. திரு. வை. சிவபுண்ணியம்
16. திரு. ஜி.கே. மணி.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், *2000-2001* ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196-ன் கீழ் திரு. டி. குண்டன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கின்றேன்.

*பிற்பகல் 1-55*

## 2. பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. அ. இராசேந்திரன்
2. திரு. ஏ. கோதாண்டம்
3. திரு. சி. சந்திரசேகரன்
4. திரு. க. துரை
5. திரு. ஜி.எல். வெங்கடாசலம்
6. திரு. என். பெரியசாமி
7. திரு. மீ.அ. வைதியலிங்கம்
8. திரு. சி.இரா. இராமச்சந்திரன்
9. திரு. கோ. சண்முகம்
10. திரு. எஸ்.கே. ராஜேந்திரன்
11. டாக்டர் தே. குமாரதாஸ்
12. திரு. சு. சிவராஜ்



13. திரு. ஆ.மு. முனிரத்தினம்
14. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்
15. திரு. நா. பெரியசாமி
16. திரு. பி.ஆர். சுந்தரம்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204-ன்கீழ் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 3. பொது நிறுவனங்கள் குழு - உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு
2. திரு. வி.சி. சண்முகம்
3. திரு. பா. அருண்குமார்
4. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
5. திரு. அன்பில் பெரியசாமி
6. திரு. செ. மதிவாணன்

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

7. திரு. பா. துரைசாமி

8. திரு. ஆர். சிவானந்தம்

9. திரு. டி.சி. விஜயன்

10. திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்

11. செல்வி க. ராணி

12. டாக்டர் பத்மா

13. திரு. கே. சுப்பராயன்

14. திரு. ஜே. ஹேமச்சந்திரன்

15. திரு. சி. வேலாயுதன்

16. திரு. சி. அன்பரசன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 214-ன்கீழ் திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 4. உரிமைக் குழு - உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்

2. திரு. கே.எம். விஜயகுமார்

3. திரு. எம். ரங்கநாதன்

4. திரு. குழந்தை தமிழரசன்

5. திரு. ரா. சேதுநாதன்

6. திரு. பால. ஆனந்தன்

7. திரு. சைதை கா. கிட்டு

8. திரு. இ.ஏ.பி. சிவாஜி

9. திரு. த. பூவேந்தன்

10. திரு. தி.ப. மாயவன்

11. திரு. டி. அமாமூர்த்தி

12. திரு. மு. அப்பாவு

13. திரு. லி. அய்யலுசாமி

14. திரு. இரா. விசுவநாதன்

மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்.

பேரவை விதி 227(3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

## 5. பேரவை அலுவல் ஆய்வுக் குழு - உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விதிகள்படி 16 பேர்தான் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின் பேரில், இந்த முன்வரிசையிலே இருப்பவர்கள் அனைவரையுமே இந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே உறுப்பினர்களாக நியமனம் செய்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

2000-2001 ஆம் ஆண்டுக்கான பேரவை அலுவல் ஆய்வுக் குழுவிற்கு (Business Advisory Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
7. அரசு தலைமைக் கொறடா
8. திரு. சி. ஞானசேகரன்
9. திரு. ஜி. பழனிசாமி
10. திரு. பி.ஆர். சுந்தரம்
11. திரு. ம. அப்துல் லத்தீப்
12. திரு. ஐ. கணேசன்
13. திரு. லா. சந்தானம்
14. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
15. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்
16. திரு. சி. வேலாயுதன்
17. திரு. சி. அன்பரசன்
18. டாக்டர் க. கிருஷ்ணசாமி
19. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

பேரவை விதி 231(1)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவர் ஆவார்.



2000 மே 18]

### 6. சட்ட விதிகள் ஆய்வுக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001ஆம் ஆண்டுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. டாக்டர் ஆ. ஞானசேகரன்
2. திரு. பெ. ஆசையன்
3. திரு. வி.பி. சிங்காரவேலு
4. திரு. இரா. மகேந்திரன்
5. திரு. பே. மாரி அய்யா
6. திரு. ஜி.பி. வெங்கிடு
7. திரு. எஸ். ராஜு
8. திரு. அ. அசோகன்
9. டாக்டர் வை. இராமசாமி
10. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்
11. திரு. கே. ரவி அருணன்
12. திரு. ம. அப்துல் லத்தீப்

பேரவை விதி 240-ன்கீழ் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### 7. அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு (Committee on Government Assurances) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. செ. இராமலிங்கம்
2. திரு. கு. மனோகரன்
3. திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்

4. திரு. இரா.. மணிமாறன்

5. திரு. ஏ.எம். ராமசாமி

6. திரு. பி.என். சுப்பிரமணி

7. திரு. ஏ. இராமலிங்கம்

8. திரு. கே.கே. வீரப்பன்

9. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்

10. திரு. க. மணிவர்மா

11. திரு. கே. தங்கமணி

12. திரு. ஏ.வி.ஏ. நாசர்

பேரவை விதி 249(1)-ன்கீழ் திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 8. பேரவை விதிகள் குழு-உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001 ஆம் ஆண்டுக்கான பேரவை விதிகள் குழுவிற்கு (Committee on Rules) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:*

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

3. மாண்புமிகு பேரவை முன்னவர்

4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

5. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

6. திரு. வீ. தமிழ்மணி

7. டாக்டர் மு. தேவராஜன்

8. திரு. வி. முத்து

9. திரு. இ.ஜி. சுகவனம்

10. திரு. ஆர். சிவராமன்



11. திரு. சி. சண்முகம்

12. திரு. எ. தெய்வநாயகம்

13. திரு. ந. சுந்தரம்

14. திரு. ச. புரட்சிமணி

15. திரு. சொ. கருப்பசாமி

16. திரு. லா. சந்தானம்

17. டாக்டர் க. கிருஷ்ணசாமி

பேரவை விதி 256-(1)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

## 9. அவைக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001ஆம் ஆண்டுக்கான அவைக் குழுவிற்கு (House Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:*

1. திரு. சி.வெ. கிருஷ்ணன்

2. திரு. குத்தாலம் பி. கல்யாணம்

3. திரு. தி.ப. ஆறுமுகம்

4. திரு. பி. இராசமாணிக்கம்

5. திரு. கு. ரவிசங்கர்

6. திரு. அ. மாரிமுத்து

7. திரு. க. வேல்சாமி

8. திரு. ஆ. நடராசன்

9. திரு. பா. பரணிகுமார்

10. திரு. ஆ.செ. மணிக்கண்ணன்

11. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்

12. திரு. இரா. மூக்கப்பன்

13. திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி

14. திரு. வி.கே. லட்சுமணன்

15. திரு. ரா. ஈஸ்வரன்

16. திரு. ப. ரங்கநாதன்

17. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்

18. திரு. ஜி. நிஜாமுதீன்.

பேரவை விதி 253(1)-ன்கீழ் திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### 10. மனுக்கள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவிற்கு* (Committee on Petitions) *கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:*

1. திரு. பா.மு. முபாரக்

2. திரு. மா. இராமச்சந்திரன்

3. திரு. துரை. சந்திரசேகரன்

4. திரு. ந. பாண்டுரங்கன்

5. திரு. கே. சுந்தர்

6. திரு. டி. கருப்புசாமி

7. திரு. அ.ல. தங்கவேல்

8. திரு. ச. நாகரத்தினம்

9. திரு. சி. ஞானசேகரன்

10. திரு. ஆர்.ஆர். சேகரன்

11. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்



பேரவை விதி 261(3)-ன்கீழ் திரு. பா.மு. முபாரக் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### 11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு* (Committee on Papers Laid on the Table of the House) *கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமிக்கிறேன்:*

1. திருமதி வாசுகி முருகேசன்

2. திரு. இரா. ஆவுடையப்பன்

3. திரு. எஸ். டேவிட் செல்வின்

4. திருமதி ஏ.ஆர். வேடம்மாள்

5. திருமதி ஆர். சரஸ்வதி

6. திரு. ந.பூ. இராமஜெயம்

7. திரு. கோ. மோகனதாசன்

8. திரு. தங்கம் தென்னரசு

9. திரு. ச. அழகிரி

10. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

11. திரு. ஐ. கணேசன்.

பேரவை விதி 268(2)-ன்கீழ் திரு. ஐ. கணேசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

[2000 மே 18

## 12. பேரவை நூலகக் குழு—உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001 ஆம் ஆண்டிற்கான* பேரவை நூலகக் குழுவிற்கு (Library Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. திரு. வெ. கோவிந்தன்
3. திரு. மு.ந. ஜோதிகண்ணன்
4. திரு. பா. கோபால்
5. திரு. சி. கோபு
6. திரு. என்.ஆர். அழகராஜா
7. திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்
8. திரு. ச. இராஜ ரெட்டி
9. திரு. பி.என். வல்லரசு
10. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்

பேரவை விதி *264(3)*-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.

*பிற்பகல் 2-00*

## 12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதினோராவது சட்டமன்றப் பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் *1-3-2000* அன்று தொடங்கி *9-3-2000* வரை நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் *24-3-2000* அன்று தொடங்கி இன்று *(18-5-2000)* வரையில் நடைபெற்றுள்ளது.



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) | .. | 43 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | .. | 2 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் | .. | 174 மணி 42 நிமிடம் (2-00 மணி வரை) |

ஆளுநர் அவர்கள் *1-3-2000* அன்று பேரவையில் உரையாற்றினார்கள்.

| | | |
|---|---|---|
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 5 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | .. | 38 |
| உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் | .. | 10 மணி 07 நிமிடம் |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் | .. | 1 மணி 17 நிமிடம் |

**நிதி அலுவல்கள்:**

*2000-2001* ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை *24-3-2000* அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

| | | |
|---|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 7 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | .. | 60 |
| உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் | .. | 15 மணி 43 நிமிடம் |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் | .. | 1 மணி 29 நிமிடம் |

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

**மானியக் கோரிக்கைகள்**

| | | |
|---|---|---|
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் | | 25 |
| உரையாற்றிய உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை (ஒரே உறுப்பினர் பல முறை உரையாற்றிய நேர்வுகளும் சேர்த்து) | | 288 |

இவற்றில் 7 முறைகளுக்கு மேல் உரையாற்றிய உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. திரு. ம. அப்துல் லத்தீப், இந்திய தேசிய லீக் | 8 முறை | 2 மணி 06 நிமிடம் |
| 2. டாக்டர் க. கிருஷ்ணசாமி, புதிய தமிழகம் | 8 முறை | 1 மணி 35 நிமிடம் |
| 3. திரு. ஜி. நிஜாமுதீன், இந்திய தேசிய லீக் | 8 முறை | 1 மணி 09 நிமிடம் |
| 4. திரு. கே. சுப்பராயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 7 முறை | 1 மணி 48 நிமிடம் |
| 5. திரு. டி. மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.) | 7 முறை | 0-59 நிமிடம் |
| 6. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் தமிழ் மாநில தேசிய லீக் | 7 முறை | 0-55 நிமிடம் |
| 7. திரு. சி. வேலாயுதன், பாரதிய ஜனதா கட்சி | 7 முறை | 0.51 நிமிடம் |

| | |
|---|---|
| உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் | 51 மணி 11 நிமிடம் |
| விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு அமைச்சர்கள் பேசிய மொத்த நேரம் | 18 மணி 11 நிமிடம். |

அதில் மாண்புமிகு முதலமைச்சர் மட்டும் 2 மணி 12 நிமிடம் பதிலுரை அளித்து இருக்கின்றார்கள்.



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

**வெட்டுத் தீர்மானங்கள்**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 5099 |
| அனுமதிக்கப்பெற்றவை | 4710 |
| அவையில் முன்மொழியப்பெற்றவை | 863 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள் | 61 |

**வினாக்கள்-விடைகள்**

| | |
|---|---|
| சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடர் முடிவுற்ற 18-5-1999 முதல் 17-5-2000 வரை ஓராண்டில் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இருந்து பெறப் பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | 13033 |
| அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | 89 |
| அனுமதிக்கப்பெற்றவை - மொத்தம் | 7813 |
| உடுக்குறியிட்டவை | 2747 |
| உடுக்குறியிடாதவை | 4283 |

வரப்பெற்ற வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

| | |
|---|---|
| 1. முதலிலே எடப்பாடி திரு. ஐ. கணேசன், பா.ம.க. | 2662 |
| 2. திரு. ஜி.கே. மணி, பா.ம.க. | 1275 |
| 3. திரு. கே. சுப்பராயன், இ.க.க. | 1240 |
| 4. திரு. மா. இராமச்சந்திரன், தி.மு.க. | 1233 |
| 5. திரு. கே. ரவி அருணன், த.மா.கா. | 1189 |

தொடர்ந்து நான்காவது முறையாக முதலிடத்தில் வந்துள்ள திரு. ஐ. கணேசன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி).

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

**உடுக்குறியிட்டவை**

| | |
|---|---|
| அவையில் விடையளிக்கப்பட்டவை | 667 |
| அவற்றில் அதிக அளவில் மூல வினாக்கள் கேட்டவர்கள்: | |
| 1. திரு. மீ.அ. வைதியலிங்கம், தி.மு.க. | 20 |
| 2. திரு. கே. சுப்பராயன், இ.க.க. | 20 |
| 3. திரு. செங்கை சிவம், தி.மு.க. | 19 |
| 4. திரு. ஐ. கணேசன், பா.ம.க. | 19 |
| 5. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், த.மா.கா. | 17 |
| 6. திரு. க. மணிவர்மா, த.மா.க. | 16 |
| 7. திரு. மா. இராமச்சந்திரன், தி.மு.க. | 15 |

பிற்பகல் 2-05

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் 5 நிலைகளில் இருப்பவர்கள்:

| | |
|---|---|
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் | 57 |
| மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | 55 |
| மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | 50 |
| மாண்புமிகு கல்வி அமைச்சர் | 49 |
| மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | 48 |
| மாண்புமிகு முதலமைச்சர் தன் கீழுள்ள துறைகள் சார்பாக விடையளித்தவை | 21 |
| மற்ற அமைச்சர்களின் வினாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கூடுதல் விளக்கம் அளித்த நிகழ்வுகள் | 13 |
| மொத்த துணை வினாக்கள் | 1090 |



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

அதிக துணை வினாக்கள் கேட்டவர்களில், முதல் 5 எண்ணிக்கையில் இருப்பவர்கள், வழக்கம் போல.

| | |
|---|---|
| திரு. கே. சுப்பராயன், இ.க.க. | 43 |
| திரு. இரா. தாமரைக்கனி, அ.இ.அ.தி.மு.க. | 43 |
| திரு. வை. சிவபுண்ணியம், இ.க.க. | 29 |
| திரு. ஏ.வி.ஏ. நாசர், இ.தே.லீ. | 25 |
| திரு. டி. மணி, இ.க.க.(மா) | 24 |
| திரு. மு. அப்பாவு, த.மா.கா. | 23 |
| வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் | 34 |
| வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் | 18 |
| நீட்டிக்கப்பட்ட நேரம் | 1 மணி 42 நிமிடங்கள் |
| உடுக்குறியிடாதவை | 1405 |
| உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் | 1335 |

**சிறப்புக் கவன ஈர்ப்புகள்**

| | |
|---|---|
| அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டவை | 37 |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தவை | 20 |
| எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் | 14 மணி 16 நிமிடங்கள் |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 131 |

**கவன ஈர்ப்புகள்**

| | |
|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | 342 |
| கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை | 91 |

| | |
|---|---|
| அவற்றில் அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை | 25 |
| இறுதி நாளன்று அவைமுன்வைக்கப்பெற்றவை | 39 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்**

| | |
|---|---|
| அவையில் எழுப்பப்பெற்றவை | 4 |
| தீர்ப்பளிக்கப்பெற்றவை | 4 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது | 1 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள்**

| | |
|---|---|
| சென்ற ஆண்டு அறிமுகம் செய்யப்பெற்றது | 1 |
| வரப்பெற்றவை | 28 |
| நிறைவேற்றப்பெற்றவை | 28 |

இன்று ஒரு சட்டமுன்வடிவு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்**

| | |
|---|---|
| மொத்தம் அளிக்கப்பெற்றவை | 6 |
| மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் அளித்தவை மட்டும் | 3 |

**அரசினர் தனித் தீர்மானம்**

| | |
|---|---|
| வரப்பெற்றது | 1 |
| நிறைவேற்றப்பெற்றவை | 2 |

(சேலம் உருக்காலைப் பிரச்சினை 8-3-2000 அன்று சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்பப்பட்டு, விவாதிக்கப்பட்டு, உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, அரசினர் தனித் தீர்மானமாக ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.)

**வெள்ளை அறிக்கை**

அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்



ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை 11-5-2000 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்று, அதன் மீது 16-5-2000 அன்று மாலை விவாதம் நடைபெற்றது.

| | |
|---|---|
| விவாதம் நடைபெற்ற மொத்த நேரம் | 3 மணி 9 நிமிடங்கள் |
| உரையாற்றிய உறுப்பினர்கள் | 15 |
| மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்த நேரம் | 23 நிமிடங்கள் |

**ஒரு மணி நேர விவாதம்**

இன்று ஏறத்தாழ 2 மணி நேரம் நடந்தது. கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வழங்குவது குறித்து இன்று (18-5-2000) ஒரு மணி நேர விவாதம் நடைபெற்றது. விவாதத்திலே 10 உறுப்பினர்கள் பங்கு கொண்டார்கள். மாண்புமிகு பொதுப் பணித் மற்றும் வனத் துறை அமைச்சர் பதில் அளித்தார்.

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்**

| | |
|---|---|
| பொதுக் கணக்குக் குழு | - 63 |
| அரசு உறுதிமொழிக் குழு | - 44 |
| பொது நிறுவனங்கள் குழு | - 35 |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | - 18 |
| மதிப்பீட்டுக்குழு | - 7 |
| மனுக்கள் குழு | - 3 |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | - 3 |

இவ்வாண்டு அமைக்கப்பட்ட சட்டமன்றக் குழுக்களில் விகிதாச்சாரப்படி மொத்தம் இடம் பெற வேண்டிய 109 ஆளுங்கட்சி உறுப்பினர்களில், ஏழு பேர்களது இடங்களை விட்டுக்கொடுத்து, அவ்விடங்களை ஓர் உறுப்பினர், இரண்டு உறுப்பினர்கள் கொண்டுள்ள எதிர்க்கட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகமாகச் செயல்படும் இவ்வரசின் ஆட்சிக் காலத்தில் எதிர்க் கட்சிகளுக்கு அதிக வாய்ப்புகள் தரப்பட்டுள்ளதற்கு ஏராளமான புள்ளிவிவரங்களை நான் இதுவரையில் சொல்லி வந்திருக்கிறேன்.

*பிற்பகல் 2-10*

அதேபோல, பேரவைத் தலைவரையும், பேரவை முன்னவரையும் சேர்த்து அலுவல் ஆய்வுக் குழுவில் 17 உறுப்பினர்கள் மட்டுமே இடம் பெற விதிகள் இருந்தாலும், வழக்கமாக இடம் பெறும் சட்ட அமைச்சரது இடத்தைக்கூட விட்டுக்கொடுத்து, அனைத்துக் கட்சியினருக்கும் அக்குழுவில் பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வாண்டும் இக்குழுவில் 19 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**

| | |
|---|---|
| (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும். | 194 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | 357 |
| அவற்றில் விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் | 5 |
| எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தனியார் ஆசிரியர் பள்ளிகளில் பயின்றோர் பிரச்சினை குறித்த குழுவின் இடைக்கால அறிக்கை | 1 |

**உறுப்பினர்கள் வருகை**

இக்கூட்டத் தொடரின்போது அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:

1. திரு. அ. அசோகன்
2. திரு. லி. அய்யலுசாமி
3. திரு. ச. அழகுவேலு
4. திரு. வ. அன்பழகன்
5. திரு. பால. ஆனந்தன்
6. திரு. ஏ. இராமலிங்கம்
7. திரு. செ. இராமலிங்கம்
8. திரு. நபூ. இராமஜெயம்



9. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
10. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
11. திரு. சி.வெ. கிருஷ்ணன்
12. திரு. ஏ. கோதண்டம்
13. திருமதி கோமதி சீனிவாசன்
14. திரு. வெ. கோவிந்தன்
15. திரு. கோ. சண்முகம்
16. திரு. ம. சண்முகம்
17. திரு. துரை சந்திரசேகரன்
18. திருமதி ஆர். சரஸ்வதி
19. திரு. வை. சிவபுண்ணியம்
20. திரு. இ.ஏ.பி. சிவாஜி
21. திரு. கே. சுந்தர்
22. திரு. கே. சுப்பராயன்
23. திரு. ரா. சேதுநாதன்
24. திரு. குழந்தை தமிழரசன்
25. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்
26. திரு. வீ. தமிழ்மணி
27. திரு. வி.ஜி. தனபால்
28. திரு. இரா. தாமரைக்கனி
29. திரு. கே. துரை
30. திரு. கொ.வீ. நன்னன்
31. திரு. ஜி. நிஜாமுதீன்

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

32. திரு. இ. புகழேந்தி

33. திரு. த. பூவேந்தன்

34. திரு. நா. பெரியசாமி

35. திரு. ஆ.செ. மணிக்கண்ணன்

36. திரு. செ. மதிவாணன்

37. திரு. ப. மோகன் கந்தசாமி

38. திரு. ச.க. வெங்கடேசன்

39. திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்

40. திரு. கோ. நயினா முகம்மது

41. திரு. பா. வேல்துரை

42. திரு. மீ.அ. வைதியலிங்கம்

இந்தப் பட்டியல், உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். மாண்புமிகு அமைச்சர்கள் இப்பதிவேட்டில் கையொப்பம் இடுவதில்லை என்பதால் அவர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வருகை புரிந்திருந்தாலும் அவர்களது பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புது தில்லியில் இருந்த 5-5-2000 அன்று ஒரு நாள் தவிர அனைத்து நாட்களும் அவைக்கு வந்து விவாதங்களில் பங்கு கொண்டு பல விளக்கங்களை அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவை தொடங்குவதற்கு முன்னரேயே என்னுடைய அறைக்கு வந்து அன்றையதினம் பேரவைமுன் வரவுள்ள விவாதங்கள் குறித்து என் அறையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் விவாதிப்பார்கள். ஜனநாயகத்தின் ஆணிவேரான சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அனைத்து உறுப்பினர்களும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேரவைத் தலைவர் என்ற முறையில் இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்: | 9,762 |
| ஆண்கள் | 9,008 |
| பெண்கள் | 754 |
| பேரவைத் தலைவர் மாடம் மற்றும் பேரவைத் தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரிசைகளில் அனுமதிக்கப்பெற்றவர்கள் | 6333 |
| **நூலகம்** | |
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | 784 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | 597 |
| ஜனவரி 2000 முதல் புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் | 228 |
| **நடவடிக்கைக் குறிப்புகள்** | |
| இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் இன்றி) | 875 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் | 10,165 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 2,838 |
| தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | 984 |

இப்பேரவைக் கூட்டத் தொடரில் மற்றொரு சிறப்பு இந்த 43 நாட்களில் எந்த உறுப்பினரும் அவையிலிருந்து வெளியேற்றப்படவில்லை. பேரவைத் தலைவர் என்ற முறையில் இதில் எனக்கு மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தனது துறையின் மூலம் செய்யப்பட்ட திட்டப் பணிகளை ஒரு புத்தகமாகவே அச்சிட்டு வழங்கியமைக்காகவும், எல்லா அமைச்சர்களையும்விட அதிகமாக சுமார் 1 மணி நேரம் 52 நிமிடம் ஒவ்வொரு உறுப்பினரது கோரிக்கைக்கும் விவரமாகப் பதிலளித்து

[பேரவைத் தலைவர்] [2000 மே 18

இவ்வாண்டு நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள் குறித்து 282 அறிவிப்புகளைச் செய்தமைக்காகவும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அவரது துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பேரவையின் சார்பில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 2-15*

புது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையத்தைப் போன்று சிறப்பான மருத்துவமனை ஒன்று மதுரையில் 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும் என அறிவித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மக்களின் சார்பாக இத்தருணத்தைப் பயன்படுத்தி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்ததற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக சுமார் 2000 ஏக்கர் நிலத்தில் நாங்குநேரியில் உயர் தொழில் நுட்ப தொழிற் பூங்கா அமைக்கவிருப்பதற்கும், தென் மாவட்ட உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாதம் ரூ. 2,000 தொகுப்பு ஊதியத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், உதவியாளர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று ஆணையிட்டதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பதவிக் காலத்தில் இறக்கும் சட்டமன்ற உறுப்பினர் குடும்பத்திற்கு ரூ.2,500 குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று அறிவித்தமைக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ. 77 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தமைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர்களுக்கும் உறுப்பினர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கூட்டத் தொடர் முடிந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2000 மே 18] [பேரவைத் தலைவர்]

இப்பேரவைக் கூட்டத்தொடர் சிறப்பாக நடந்து முடிய உதவி செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் முதன்மையாக அவையை நடத்துவதில் எனக்கு அனைத்து வகைகளிலும் வழிகாட்டியாக இருந்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்து, பல நேரத்திலே நான் சோர்வடைந்தபோது எனக்கு உற்சாகம் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் என்னுடைய நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மற்ற கட்சித் தலைவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்த பேரவை மாற்றுத் தலைவர்கள் திரு. அ.லெ. சுப்பிரமணியன், திரு. சி.டி. தண்டபாணி, திரு. குத்தாலம் பி. கல்யாணம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. பெருந்துறை பெரியசாமி ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகுக. அரசு தலைமைக் கொறடா மற்றும் மற்ற கட்சிக் கொறடாக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தொடர் நன்முறையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. வெ. இராசாராமன் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் இதர அலுவலர்கள், நிருபர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இந்தத் தருணத்தில் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் எடுத்துச்சென்றதில் பத்திரிக்கைகளுக்கும், வானொலி, தொலைக்காட்சிகள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு. சட்டமன்ற நிகழ்ச்சிகளை, உறுப்பினர்களின் உணர்வுகளை செய்திகளாக மக்களுக்கு அளிக்கும் மிக உயர்ந்த பணியினைச் செய்த அனைத்து செய்தி அமைப்புகளுக்கும், செய்தியாளர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஒலி பெருக்கி மற்றும் இதர வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும், பேரவைக் காவலர்களுக்கும், மின்னணு கடிகாரத்தைப் பராமரித்த திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஒஒ) தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குண்டான தீர்மானத்தை கதர்த் துறை அமைச்சர் அவர்கள் வாசிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான்யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப் பெறவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்படுகின்றது.

உறுப்பினர்கள் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

## 13. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு வார காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய 77-வது பிறந்த நாள் வருகிறது. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் அவர்கள் நீடூழி வாழ்ந்து! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டிற்கும்,





தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்ற என் விருப்பத்தினைத் தெரிவித்து, நான் வணங்கும் தெய்வத்திற்கு வழிபாடு செய்து என்னுடைய வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-20*

இறுதியாக (குறுக்கீடு) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

## 4. தகவல் கோரல்

### (இ) விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம்

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கை. ஏற்கெனவே தங்களிடம் நான் அனுமதி பெற்றிருக்கிறேன். முதலமைச்சர் அவர்களிடமும் நான் தகவலைச் சொன்னேன். அவர்கள் அவையில் இல்லாததால் அந்த நேரத்தில் கேட்க முடியவில்லை. விவசாயிகளுக்காக நாங்கள் எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம். அதை இப்போது சொல்ல முடியாவிட்டாலும்கூட, வெகு விரைவில் விவசாயிகளுடைய அந்தக் கடன் நிவாரணத்திற்கு ஒரு விடிவு காலத்தை ஏற்படுத்தி, ஒரு நல்ல செய்தியை அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்

### (ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2000 மே 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல், ஒத்திவைக்கப்பெற்றது.

## 14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*177. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் தெர்மோகோல் (என்று அழைக்கப்படும் பாலியஸ்டர் பொருட்களின்) விற்பனையைப் பொறுத்தமட்டில், 1-4-1992 முதல் 28-9-1992 வரையிலான கால அளவிற்கு திருவாளர்கள் பவானி தொழிற்சாலை, சிவகாசி இன்சூல் தெர்ம தொழிற்சாலை, சென்னை-102 மற்றும் இன்சூல் பேக் தொழிற்சாலை, சென்னை-17 ஆகிய நிறுவனங்கள் செலுத்தத்தக்க விற்பனை வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவை தொடர்பான வேறுபாட்டுத் தொகையைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் துறையின் 7-1-2000 ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*178. செயற்கைப்பட்டு நூலிழை, பருத்தி நூலிழை ஆகியவற்றின் விற்பனை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ், மதுரை திருவாளர்கள் மதுரை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம், 1992-93 ஆம் ஆண்டில் வரி, மேல்வரி, கூடுதல் வரி அபராதத் தொகை வகையில் செலுத்த வேண்டிய மதுரை, திருவாளர்கள் மதுரை கோடம்பாக்கம் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம், வரி, மேல்வரி, அபராதத் தொகை வகையில் 1992-93 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை மற்றும் 1993-94 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகைகளைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் துறையின் 22-2-2000 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 16-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5), 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*



2000 மே 18]

*179. ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத மருந்துகளை விற்பனை செய்யும் வணிகர் எவரும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில், வரி வீதத்தை எட்டு (8) சதவிகிதத்திலிருந்து நான்கு சதவிகிதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 4-4-2000 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*180. 16 அங்காடிக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 3-12-1999 ஆம் நாளிட்ட 516 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*181. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்).*

[2000 மே 18

182. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

183. 1993-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

184. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

185. 1998-99 ஆம் ஆண்டிற்கான் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு விவரக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

186. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. (1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

187. 1996-97 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

188. 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண்.1) (வருவாய் வரவினங்கள்). (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)



2000 மே 18]

189. 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 3) (சிவில்/2000). (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

190. 1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 2) (வணிகம்). (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

191. கோயம்புத்தூர் மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் 14-2-1998 அன்று ஏற்பட்ட வெடிகுண்டு வெடிப்புகள், அதனால் ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், பொது மற்றும் தனியார் சொத்துக்கள் முதலியவற்றிற்கு ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றிற்கான காரணங்கள் பற்றியும் அவற்றிற்கு வழிகோலிய சூழ்நிலைகள் பற்றியும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. பி.ஆர் கோகுலகிருஷ்ணன் அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

192. கோயம்புத்தூர் மாநகரில், (29-11-1997, 30-11-1997) ஆகிய நாட்களில் நடந்த வன்முறைச் சம்பவங்களின்போது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக இழப்பீட்டுத் தொகை வழங்குதல் தொடர்பாக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

193. கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணத்தில் 9-9-1998 மற்றும் 18-3-1999 அன்று குண்டுகள் வெடித்ததைப் பற்றி அமைக்கப்பட்ட நீதிபதி திரு. ம.அ. முருகேசன் அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ்).

194. அம்பத்தூர் வட்டம், நெற்குன்றம், மீனாட்சி நகரில் வசிக்கின்ற திரு. ரவியின் மனைவி திருமதி சித்ரா 13-10-1998 ஆம் நாளன்று மரணம் அடைந்தது குறித்து அமைக்கப்பட்ட நீதிபதி

[2000 மே 18

திரு. எம். மருதமுத்து அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை, (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

341. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1995 முதல் 31-3-1996 வரையிலான கால அளவுக்குரிய முப்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

342. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1996 முதல் 31-3-1997 வரையிலான கால அளவுக்குரிய முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

343. தமிழ்நாடு அரசின் கணக்குகள் குறித்து ஒரு கண்ணோட்டம். (ஆங்கிலம்)

344. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (1999-2000)

345. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (1999-2000)

346. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை. (1999-2000)

347. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (1999-2000)

348. சென்னை, அமைந்தகரை காவல் நிலையத்தில், காவல் துறை அலுவலர்கள் கற்பழித்ததாகக் கூறப்படுவதையடுத்து, திரு. ரவியின் மனைவி திருமதி சித்ரா, 12/13 அக்டோபர் திங்கள் 1998 ஆம் நாளன்று இரவு தற்கொலை செய்து கொண்டது குறித்து தேசிய மகளிர் நல ஆணையத்தின் அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

349. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (21-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).



2000 மே 18]

350. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (22-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

351. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (23-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

352. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (24-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

353. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (25-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

354. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (26-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

355. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (27-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 130) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

356. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (28-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 55 வரை)

357. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவனஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின் மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 39 வரை)

ஃஃ

222455